161406



008

க்ரஹிக்கயிருக்கும் [illegible] றபடி செவிக்கு இனிமையாயும் அர்த்த புஷ்டியுடையதாயுமுள்ள மணிப்ரவாள சைலியை ஒருவாறு ப்ரசாரம் செய்ய வேண்டுமென்பதும் நமது உத்தேசம். அந்த சைலியில் மிகுந்த பெருமை யிருப்பதாக நமக்கு ஒரு தோற்றமுண்டு. தமிழ் பாஷையைப் பேசி வரும் நமது ஜனங்களெல்லாரும் அந்த சைலியைப் பரிசயம் செய்து கொண்டு, அந்த நடையில் நமது ஆசார்யர்களால் அநுக்ரஹிக்கப் பட்டுள்ள ரஹஸ்யார்த்தமடங்கிய க்ரந்தங்களை ஸாக்ஷாத்தாக ஸேவித்து, அதனால் உண்டாகும் ஆநந்தத்தை அநுபவிக்கவேண்டுமென்றே, நாம் அதன் சாயையை அவலம்பித்து வருகிறோம். ஆகையால், நமது ஸஹ்ருத[illegible]ராயுள்ள தீபிகாபிமானிகளெல்லாரும் தங்களுடைய வேண்டுகோளுக்கு நாம் இணங்கவில்லையென்று நமது மீது மனவருத்த மடையாமல் நமது உத்தேச்யத்தை ஸாதித்துக் கொடுப்பதில் நமக்கு உதவிபுரிய க்ருபை செய்ய வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

இப்பொழுது மஹா கவியென்றும், விசேஷித்த ஜ்ஞாநம் தேசாபிமாநம் முதலிய நற்குணங்களுள்ளவரென்றும் நம் எல்லாராலும் கொண்டாடப்பட்டுவரும் டாக்டர் ரவீந்த்ர நாத டாகூர் என்பவர், இது ஸம்பந்தமாக வெளியிட்டிருக்கும் அபிப்ராயத்தை நாம் இங்கு எழுதத் துணிகின்றோம்.

"Without a re-inforcement of the Sanskrit element, the vernaculars can never fulfil the higher functions of education. Like the classical languages of Europe, and probably even to a greater extent, Sanskrit has developed subtlety and range of expression, and its vocabulary must freely enter the vernaculars if they are to rise to the responsibilities of this century. Sanskrit is not really a dead language, its culture containing, as it does, thoughts of matchless value for all time and for men of all climes and thus capable of vitalising all the vernaculars.

RGS m2 H,N10 V D
N15-10



Another advantage which will accrue by developing the Sanskrit element in the vernaculars is the increased facility there will be in the work of translating from one vernacular to another."

[தமிழ் முதலிய ஸ்வதேச பாஷைகளெல்லாம், ஜநங்களுக்கு உத்தமமான ச்ரேயஸ்ஸாதநத்தில் உபகாரகங்களாக ஆகவேண்டுமானால், அவைகள் ஸம்ஸ்க்ருத பாஷையை உபஜீவித்தே இருக்க வேண்டும். ஐரோப்பா தேசத்திய லாடின் முதலிய பாஷைகளிற்போல, ஸம்ஸ்க்ருதத்திலும், அர்த்த புஷ்டி அடங்கிய வசந சாதுர்யமும் ஸூக்ஷ்மமான சொற்பங்கியும் ஏராளமாகக் காணப்படுகின்றன. சில அம்சங்களில் லாடின் முதலிய பாஷைகளிற் காட்டிலும் இதில் இந்தக்குணம் அதிகமாக இருக்கின்றதென்றும் சொல்லலாம். இதன் ஸம்பந்தத்தாலேயே நமது ஸ்வதேச பாஷைகளுக்கு இக்காலத்துக்குரிய ஸ்வரூப யோக்யதை ஏற்பட வேண்டும். ஸம்ஸ்க்ருதம் இப்பொழுது பேசப்படும் பாஷையாக நடமாட்டத்தில் இல்லை யென்று சொல்வது பிசகு. எக்காலத்திலும் எத்தேசத்திலும் ஸர்வ ஜநங்களுக்கும் அத்யந்தம் உபகாரகங்களாயுள்ள விஷயங்கள் அதில் இருக்கின்றன; ஆகையால் தான் ஸ்வதேச பாஷைகளுக்கு அது உபஜீவகமென்று நாம் சொல்லத் துணிகின்றோம். தவிரவும் ஸ்வதேச பாஷைகளுள் ஸம்ஸ்க்ருத பாஹுள்யம் இருந்தால், அவைகளுள் ஒரு பாஷையிலிருந்து மற்றொரு பாஷையில மொழிபெயர்ப்பது ஸுலபமாகும். அதுவும் இப்பொழுது நமக்கு அபேக்ஷிதமே].

ஸ்ரீ. வாஸுதேவன்.

# பத்ராதிபரின் குறிப்புக்கள்.

**அந்தர்யாமி பஜநம்.**

இந்த லோகத்தில் ஒவ்வொரு ஜீவனுக்கும் பதி, பார்யை, புத்ரமித்ராதிகள், வித்யை, வித்தம், லோகாந்தரங்கள், தேவதைகள் முதலான ஸர்வ வஸ்துக்களும் ப்ரியமாவது பரமாத்மாதீநமென்று மைத்ரேயி ப்ராஹ்மணத்தில் வெளியிடப்பட்டது. அக்காரணத்தினால், ஸர்வவிதமான ப்ரியத்வத்துக்கும் ஆஸ்ரயபூதனான பரமாத்மாவே முமுக்ஷுக்களால் கேட்கவும், அறியவும், உபாஸிக்கவும், ஸாக்ஷாத்கரிக்கவும் தக்கவனென்று உபதேசம் பிறந்தது. ஸர்வாத்மாவான நாராயணனைத் தவிர்த்து யாதொரு பதார்த்தமும் முமுக்ஷுக்களால் க்ரஹிக்கத்தகாதவை யென்று சொல்லி, அப்படிப்பட்ட க்ரஹண பலமாக க்ரஹிக்கப்பட்ட வஸ்துக்களாலேயே க்ரஹித்தவனுக்கு அவமதி சொல்லப்பட்டது. ஸர்வத்ர பரமாத்ம ஸாக்ஷாத்காரமானது அஜ்ஞாந நிவர்த்தகமென்றும், மோக்ஷஸாதநமென்றும் ஶ்ருதி பலவிடங்களில் அறுதியிட்டது. ஸர்வபூதங்களையும் பரமாத்மாவினிடத்திலும், ஸர்வபூதங்களிலும் பரமாத்மாவையும் பார்ப்பவனுக்கு ஸர்வபூத ஸமத்வம் ஸித்தம். ஸர்வபூதங்களிடமும் பகவான் ஸமமாக நிற்கின்ற உண்மையை ஶாஸ்த்ரத்தால் அறிந்துகொண்டவனுக்கு, ஜகத்கர்த்தன் ஸர்வபூதங்களிடமும் அந்தராத்மாவாயும் ஸர்வபூதங்களும் அவனுடைய சரீரங்களாயும் இருக்கின்ற விஷயம் புத்தியில் ஸ்திரப்பட்டு, ஸமதர்ஶநம் நிலைத்து, மித்ராமித்ர பேதமின்றி ஸர்வத்ர மித்ரபாவமே ஸித்திக்கும். '[illegible]' என்கிறபடியே, ஜ்ஞாநிகள் ஸர்வபூதங்களிடமும் வஸிக்கும் பரமாத்மாவை விசேஷமாகச் சிந்தித்து, முடிவில் ஸாக்ஷாத்கரித்து ஶரீரவஸாநத்தில் முக்தர்களாய்ப் பரமாத்மாவை அடைகின்றார்கள்.



இந்தப்படி ஶ்ருதி வெளியிட்ட விஷயத்தைக் கேட்டறிவது பலர்க்கு ஸுகரம். அவ்விஷயம் மநஸ்ஸில் அழுந்தி, அதற்கேற்றபடியே உபாஸநமும், ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரமும், அநுஷ்டாநமும் கைகூடுவது அத்யந்த துர்லபம். சிலர் நமது ஶரீரங்களில் அந்தராத்மாவாய்ப் பகவான் இருக்கையில், அவ்விடமே அவனை உபாஸிப்பதைவிட்டு, அர்ச்சைகளில் உபாஸிப்பது கூடாதென்றும் நிஶ்சயித்து விட்டார்கள். '[illegible]' எனும் ப்ரமாணத்தை அவர்கள் கேட்டவர்களல்லர். ஶ்ருதியும், 'ஆத்மாவில் நிற்பவனும், ஆத்மாவுக்குள் இருப்பவனும், யாதொருவனை ஆத்மா அறியமாட்டாதோ, எவனுக்கு ஆத்மா ஶரீரமோ, எவன் ஆத்மாவுக்குள் நின்று அதை நியமிக்கின்றானோ, அவனே ஸர்வாத்மா, ஸர்வாந்தர்யாமி, அம்ருதஸ்வரூபீ' என்று காட்டியது. ஜீவன் தனது அந்தர்யாமியைக் காண வல்லவனல்லன். '[illegible]' என்று ஶிஷ்யனைக் குறித்த ஆசார்ய வசநமாக ஶ்ருதி சொல்லிற்று. ஶ்ருதி வெளியிட்ட ப்ரகாரம் ஆசார்யோபதேசத்தைக் கேட்டமாத்ரத்தால் ப்ரஹ்ம ஸ்வரூபம் நன்கு அறியப்பட்டதாக நினைத்தல் மூடத்தனம். யோகரூபமான ஸாதநமின்றி அந்தர்யாமியை அறிய எவனும் ஶக்தனல்லன். '[illegible]'. இவ்வுண்மையை ஶ்ருதி நன்றாக உணர்த்தது. ஈஶ்வரன் இந்த்ரியங்களை பாஹ்யார்த்த ப்ரகாஶகங்களாக ஸ்ருஷ்டித்தனர். அவற்றை ஜ்ஞாந ஸாதநங்களாயுடைய சேதநன் பாஹ்யார்த்த ஸாக்ஷாத்காரம் செய்கின்றான்; அந்தராத்ம தர்சநம் செய்வதில்லை. ஆயினும் முமுக்ஷுவாயிருக்கின்ற விவேகியொருவன் தன்னுடைய இந்த்ரியங்களையடக்கி தனக்குள் இருக்கின்ற பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்கின்றான். இந்த்ரிய [illegible]தம் யோகமற்றவனுக்குத் துஸ்ஸாத்யம். '[illegible]

ஜ்ஞாநாநி மநஸா ஸஹ । புத்திஶ்ச ந விசேஷ்டதி தாமாஹு: பரமாம் கதிம்' என்று யோகத்தை உபநிஷத் விவரித்தது. பஞ்சேந்த்ரியங்களும், மநஸ்ஸும், புத்தியும், பாஹ்யவிஷய க்ரஹண ரூப ஸ்வவ்யாபாரங்களினின்று நிவ்ருத்தங்களாய், நிஶ்சலங்களாக நின்றால், அப்போது மோக்ஷஸாதக ரூபயோகம் நிஷ்பந்நமாகும் என்று தாத்பர்யம். 'ஸ்திரமான இந்த்ரியதாரணைக்கு யோகமென்று பெயர்' என்று உபநிஷத்தே சொல்கின்றது. தத்காலத்தில் ஜநங்களுக்கும், ஸாதாரண, பாஶ்சாத்ய வித்யாபரிசய முள்ளவர்களுக்கும் யோகத்துக்குமுள்ள தூரமானது அளவிடக்கூடாததே அப்படிப்பட்டவர்களுக்கு, ஈஶ்வரன் ஸர்வாதாரன் என்றும், ஸர்வாந்தராத்மா வென்றும், ஶாஸ்த்ரஜந்ய ஜ்ஞாநம் பிறந்தபோதிலும், ஹ்ருதய நிகேதநன் அவர்கள் புத்திகளுக்கு எட்டமாட்டான். பகவதாராதநம் அவர்களுக்கு த்ருஷ்டி சித்தாபஹாரியா யிருக்கின்ற ஒரு திவ்யமங்கள விக்ரஹ த்வாரா கைகூடலாம். பகவத் சரீரங்களா யிருக்கின்ற இதர வஸ்துக்கள் மூலமாகவும் பகவான் ஆராதிக்கப்படலாம். ஸூர்யமண்டலம், அக்நி, ஜலம் முதலான ஸ்தூல பதார்த்தங்கள் மூலமாக ஸூர்யன், அக்நி, வருணன் முதலான தேவதைகள் பூஜிக்கப்படுகின்றார்கள். அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் வெளியிடப்பட்டபடியே, பரமாத்மா மேற்சொன்ன வஸ்துக்களுக்குள்ளும், அவற்றினுடைய அபிமாநி தேவதைகளுக்குள்ளும் அந்தராத்மாவாக இருக்கின்றார்; அத்தேவதைகள் பரமாத்மாவை அறிகின்றார்களில்லை; அவர்கள் பரமாத்மாவுக்குச் சரீரங்களாய், அவரால் நியமிக்கப்படுகின்றனர். ஆதலால், அக்நியினுடைய ஆராதநயாகும் ஔபாஸநங்கள் பரமாத்ம பர்யந்தமாக விவேகிகளால் செய்யப்படுகின்றன. அவ்வண்ணமே காயத்ரிமந்த்ரத்தால் ஸவித்ரு மண்டலாந்தர்வர்த்தியான பகவான் த்யாநிக்கப்படுகின்றான். தீர்த்தத்தில் ஆவாஹித்துப் பூஜிக்கப்பட்ட வருணதேவதையும் வருணனைச் சரீரமாகவுடைய புருஷோத்தமனே யென்று விவேகிகள் எண்ணுகின்றார்கள். யோகாந்தர்க்கதமாகாத ஸாதாரண த்யாநம், பகவந் மந்த்ரஜபம், பகவானைத் துளஸீ புஷ்பாதிகளால் அர்ச்சித்தல், பகவத்ஸ்தோத்ரம், பகவத்கதா



ஶ்ரவணம் திவ்யமங்கள ரூபமாக எழுந்தருளியிருக்கும் பகவானை ஷோடஶ உபசாராதி ஸமர்ப்பணங்களால் பூஜித்தல்; அவனுக்குத் தாஸனாகப் பணிவிடைசெய்யல், நித்யகர்மங்களைப் பகவத் ப்ரீணநமாகச் செய்தல், பகவானை நமஸ்கரித்தல், ஸ்வாத்மாவைப் பகவானிடம் ஸமர்ப்பித்தல், இந்த ரூபமாக மநஸ்ஸால் கல்பிக்கப்பட்ட பகவத் விக்ரஹத்தை முன்னிட்டும், பகவானுடைய அர்ச்சைகளை முன்னிட்டும் பகவதாராதநம் நடக்கவொண்ணும். அவ்வவர் அதிகாரப்படியிலும், அவ்வவருடைய ருசியை அநுஸரித்தும், பூஜாக்ரமங்கள் பேதிக்கலாம். இந்த க்ரமங்கள் எப்படியிருந்த போதிலும் இவற்றுடன் அந்வயிக்கப்பட்ட பக்தியொன்றால் தான் பகவான் த்ருப்தனாகின்றான். அவனிடம் ரூடமான பாவத்தை ஸம்பாதித்த பக்தர்கள் யதாருசி அவனைப் பூஜிக்கக் குறைவில்லை. யோகாந்தர்க்கதமான த்யாநமானது, 'தத்ரூபப்ரத்யயா சைகா ஸந்ததிஶ்சாந்ய நிஸ்ப்ருஹா । தத்த்யாநம் ப்ரதமைரங்கைஷ்ஷட்பிர்நிஷ்பாத்யதே ந்ருப' என்கிறபடியே, தாரணை ஸமயத்தில் மநஸ்ஸில் த்ருடமாக நிலைத்த பகவத் ரூபத்தினுடைய ப்ரத்யயமானது, விஜாதீய ப்ரத்யயமொன்று இடையில் வராமல், அவிச்சிந்ந ப்ரவாஹமாக நிலைத்ததாகில் நிஷ்பந்நமாகும்; அது யமம் முதல் தாரணை பர்யந்தமான ஆறு அங்கங்களால் ஸாதிக்கத் தக்கது. இக்காலம், இந்த ரூபமான த்யாநம், மநுஷ்யர்க்கு ஸாத்யமென்று உந்மத்தனும் சொல்லமாட்டான். இன்னும் த்யாந ஸாத்யமான ஸமாதியெனப்பட்ட மற்றொரு முடிவான யோகாங்கம் உண்டு. அது, 'தஸ்யைவ கல்பநாஹீநம் ஸ்வரூபக்ரஹணம்' என்று சொல்லப்பட்டது. அதாவது: அவிச்சிந்ந ப்ரவாஹமாய் யாதொரு பகவத்ரூபம் த்யாநவிஷயமாகின்றதோ, அதனுடைய ஸ்வரூப க்ரஹணம். கல்பநா ஹீநமென்றால், நாம ரூபாதி விசேஷங்களின் க்ரஹணமின்றிக் கேவல ஸ்வரூபக்ரஹணமென்று கருத்து. த்யாநிக்கப்பட்ட வஸ்து, த்யாநிப்பவன், த்யாநமெனும் க்ரியை, இவற்றின் பேதங்கள் புத்தியில் தட்டாதபடி, த்யேய ஸ்வரூபத்தின் ப்ரகாஶ மென்று சொல்வாருமுளர். 'சித்த

த்தை ஶுபாஶ்ரயமான பகவத் ரூபத்தினிடம் கட்டுதல் தாரணை. அந்த ரூப ப்ரத்யத்தினுடைய அவிச்சிந்ந ப்ரவாஹம் த்யாநம்; அது ஒரே ஆகாரத்துடன் சித்தத்தில் நிலைத்தல் ஸமாதி’ என்பது யோகஸூத்ரகாரரான பதஞ்ஜலி வசநம். இதற்கு அநதிகாரிகளான ஜநங்கள் அந்தர்யாமி பூஜைசெய்வோமென்று சொல்லல் பரிஹஸிக்கத்தக்கது. அர்ச்சைகளை வேண்டாதவர் அவ்வண்ணமே இருக்கலாம். யதாருசி அவர்கள் பகவானைப் பஜிக்கட்டும். அர்ச்சாரூபியான பகவானை ஆராதிப்பவர்களை அவர்கள் த்வேஷிப்பதும், நிந்திப்பதும், அர்ச்சைகளைத் தூஷிப்பதும் அந்யாயம். இன்னும் அவை பகவதபசாரத்தில் முடியும். தங்களுடைய அதிகாரம் சிறந்ததென்று அவர்கள் நினைப்பதும் மூடத்தனம்; அது அவர்களுடைய அஹங்காரத்தை ப்ரகாசிப்பிக்கின்றது. ‘ஆசிராஸு ஸுலபோஸ்தநாம’ என்கிற விஷயமும், மந்தசீலர்களும், ஶாஸ்த்ர த்ருஷ்டியால் ஸமதர்சநம் செய்ய ஸமர்த்தர்களும் அல்லாதவர்கள் அப்ரபுத்தர்கள் என்று யோசித்தால் பாதகமில்லை, அங்ஙனமின்றி, அர்ச்சாரூபியான பகவானை ஆராதிக்கின்ற பாகவதர்களுடைய நிந்தையென்று அவ்வசநம் யோசிக்கப்பட்டதாகில், அது ஸத்துக்களால் அங்கீகரிக்கத்தக்கதன்று. ஆழ்வார்கள், பூர்வாசார்யர்கள் முதலானவர்களைக் காட்டிலும் பாகவதஶ்ரேஷ்டர்களை இவ்வுலகம் கண்டதில்லை. திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுடைய திவ்ய ரூபங்களில் அவர்கள் ஈடுபட்டது நிஸ்ஸம்ஶயம். லோகஸங்க்ரஹத்துக்காக அவர்கள் அவ்வண்ணம் செய்தார்களென்று சொன்னால் அது பொய். அவர்களுடைய பக்திப்ரவாஹமானது பல க்ரந்தரூபங்களாக நமக்கு உதவுகின்றது. திவ்யதேசங்களுக்கு ஏற்பட்ட ஏற்றமானது அவர்களுடைய மங்களாஶாஸநத்தில் நிலைக்கின்றது. மந்த்ரஶக்தியுள்ள மஹான்களால் திவ்ய மங்கள விக்ரஹங்களில் பகவான் ப்ரதிஷ்டிதராகின்றார்; ஆழ்வார் ஆசார்யர்களுடைய மங்களாஶாஸநத்தால் அங்கெல்லாம் ஸாந்நித்யம் செய்யத் திருவுள்ளம் பற்றுகின்றார். பாகவத ஸம்ருத்தி என்கிற ஔசித்யம் இருக்கும் பர்யந்தம் பகவத் ஸாந்நித்யம் திவ்யதேசங்களைவிட்டு விலகமாட்டாது. அந்த



அம்ஶமானது இப்போது ப்ராயிகமாக பல திவ்யதேசங்களில் அற்றுப்போய்விட்டது. இன்னும் ஸந்நிதி வேலைக்காரர்களால் பகவதபசார பரம்பரையானது நீண்டு வளர்கின்றது. தர்மகர்த்தரெனப்பட்டவர்களுடைய அதர்மங்கள் ஸேவார்த்திகளுடைய சித்தங்களை அளவின்றி பாதிக்கின்றன. தத்கால ஸ்திதியைக்கொண்டு நாம் விஷயவிமர்ஶநம் செய்கின்றோமில்லை. ஆகவே, லோகஸங்க்ரஹமென்னும் வார்த்தை பெரியோர்கள் விஷயத்தில் பொருந்தமாட்டாது. லோகஸங்க்ரஹத்துக்காகவே கர்மங்களைச் செய்யவேண்டுமென்று பகவான் அர்ஜுநனுக்கு உபதேசிக்கவில்லை. ‘லோகஸங்க்ரஹமேவாபி’ என்று, ‘அபி’ ஶப்தத்தால், லோகஸங்க்ரஹத்துக்காகவாகிலும் கர்மம் செய்யவேண்டுமெனும் பகவத்வசநம், அர்ஜுநனுக்குக் கர்மத்திலேயே அதிகாரமெனக் காட்டுகின்றது. ஜநகாதிகள் ஜ்ஞாந பக்திகளில் அதிகாரம் வஹிக்கத்தக்கவர்களாயிருக்கையிலும், கர்மத்தாலேயே ஸித்திபெற்றனர் எனும் பகவத் வசநம், அவர்கள் ப்ரீதியோடு கர்மங்களைச் செய்தாரென்றும், லோகஸங்க்ரஹ நிமித்த மாத்ரமாகச் செய்தவரல்லர் என்றும் வெளியிடுகின்றது. லோகஸங்க்ரஹம் ஶ்ரத்தையுடன் கர்மங்களைச் செய்யவொட்டாது. அந்யதாகரணம் அகரணத்தைப் போன்றது. ஆதலால், மஹநீயர்கள் திவ்யதேசத் தெம்பெருமான்களிடம் நிஜமாகப் பக்திபண்ணார்களென்பது ஸத்யம். அவர்கள் அப்ரபுத்தர்களல்லர். ஆதலால் அர்ச்சாவிஷயமான நிந்தையெல்லாம் அஜ்ஞாநத்தில் பிறந்து, அஹங்காரத்தில் நிலைத்து, பகவத்பாகவதாபசாரத்தில் பர்யவஸிக்குமென்பதில் ஸந்தேஹம் காணோம்.

பக்தனுடைய சித்தவ்ருத்தி பகவானுக்குத் தெரியும். அந்த வ்ருத்தியானது ப்ரகாசிக்கும் மார்க்கத்தைப்பற்றி ஶாண்யன் குற்றம் காணமாட்டான்; மூடன் அதைப் பழிப்பான். தத்காலங்களில் நூதந ஸமாஜ கல்பநை செய்யும் அதிகாரிகள் ஜ்ஞாநத்தாலும், பகவத் பக்தியாலும், அந்ய நிஸ்ப்ருஹையாலும் நம் பூர்வாசார்யர்களுக்கு அத்யந்தம் நிஹீநர்கள். இவர்களுடைய உக்திகள் ந்யாய

ஸஞ்சாரத்தைக் காட்டவில்லை; நிந்தையிலும், த்வேஷத்திலும் முழுகி நிற்கின்றன; 'One living God' 'ஒரு ஜீவிக்கும் தேவன்' என்று கூவும் இவர், பலசாகும் தேவர்களை எங்குக் கண்டார்களோ? பல தேவதைகள் இருப்பதும், அவர்கள் இருப்பு விஶ்வஸிக்கப்படுவதும் குற்றமா? ஜகத்காரணனை ஏகம் என்றும், அத்விதீயம் என்றும் ஶ்ருதி சொல்லிற்று. தேவதாந்தரங்கள், நம்மைப்போல் ஜீவாத்மாக்களேயானாலும் பூர்வ புண்யாநுகுணமாக விசேஷாதிகாரங்களில் பகவானால் நியமிக்கப்பட்டவர்கள். இதற்கு முன் நம்மைப்போல் ஶரீரங்களடைந்து ம்ருதர்களாய்ப் போன ஜீவாத்மாக்களுடைய கதியைக் கிஞ்சித்தும் சிந்திக்காமல், அவ்வண்ணம் சிந்திக்க அஸமர்த்தர்களான பாஹ்ய மதஸ்தர்களுடைய ஸஹவாஸத்தால், இந்த ஸமாஜஸ்தர்கள் நிலைதடுமாறி, அஜ்ஞானத்தில் ஆழ்ந்து, அஸத்வசநங்களைப் பரவச்செய்கின்றார்கள். அர்ச்சையானது ஶிலாகாஷ்டலோஹாதிகளால் செய்யப்பட்டதென்று அவர்கள் தூஷணம். பரம புருஷனுடைய பரம்பாவத்தைத் தேவர்களும் அறிய வல்லவர்களல்லர்; ஆதலால், அவர்களும் புருஷோத்தமனுடைய அவதார ரூபங்களை அர்ச்சிக்கின்றனர்கள், என்று விஷ்ணுபுராணம் சொல்கின்றது. 'നവൈരൂപം നചാകാരഃ നായുധാനി നചാസ്പദം । തഥാപി പുരുഷാകാരോ ഭക്താനാം ത്വം പ്രകാശസേ ॥' என்கிறபடியே, பகவானுக்கு ரூபமில்லை, ஆகாரமுமில்லை, ஆயுதங்களில்லை, இருப்பிடமுமில்லை; ஆகிலும் பக்தர்கள் தன்னை உபாஸிக்க வேண்டுமென்று பகவான் புருஷரூபமாக ப்ரகாசிக்கின்றான். தமருகந்த ரூபத்தை ஸ்வீகரிக்க அவனும் உகக்கின்றான். இவ்வண்ணம் பகவானுடைய க்ருபையையும் ஸங்கல்பத்தையும் அறியாமல், அர்ச்சையைத் தூஷிக்கின்றார்கள். பகவான் ஸாந்நித்யம் செய்ய, ஒரு ஶரீரம் விஶேஷித்ததென்றும் மற்றொன்று தாழ்ந்ததென்றும் வாசியில்லை. லோகத்தில் நாம் பார்க்கக்கூடிய எல்லாவிடங்களிலும் அவன் நீக்கமற நிறைகின்றானாதலால், நாம் உகந்ததோர் விக்ரஹத்தில் அவன் விஶேஷஸாந்நித்யம் செய்யக் குறையில்லை. மநுஷ்ய த்ருஷ்டியில் ஶுத்தாஶுத்த விபாகப்படி, மநுஷ்ய ஶரீரங்களைக் காட்டிலும் அர்ச்சைகள் ஶுத்



தமான தநுக்கள். இவ்வண்ணம் சொல்வதால் பகவான் ஸாந்நித்யம் செய்யும் மஹாத்மாக்களுடைய திருமேனிகளை நிந்திக்கின்றோமில்லை. பகவானுக்குச் சரீரமாயிருக்கும் ப்ரபஞ்சத்திலே, அவனுடைய பார்வையில் ஶுத்தாஶுத்த விபாகமேயில்லை. அஜ்ஞானத்தால் அர்ச்சையைத் தூஷிப்பவரைக் குறித்து நாம் மேலெழுதியபடி யோசித்தோம்.

ஆதலால், 'அநதிகாரிகள் அந்தர்யாமி பஜநம் செய்வதென்பது உந்மத்த ப்ரலாபம். பகவத்பஜந ப்ரகாரங்கள் நம்முடைய பூர்வாசார்யர்களால் ஸரியாக ஏற்படுத்தப்பட்டன. ஸந்த்யா வந்தந காலத்தில் பகவான் ஆதித்ய மண்டலாந்தர்வர்த்தியாக த்யானிக்கவும் ஆராதிக்கவும் படுகின்றான். ஔபாஸந காலத்தில் அக்நி ஶரீரகனாக உபாஸிக்கப்படுகின்றான். இஜ்யாகாலத்தில் அர்ச்சா ரூபியாக ஆராதிக்கப்படுகின்றான். ஶ்ராத்தகாலத்தில் விஶ்வே தேவ ரூபியாகவும் பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹ ரூபியாகவும் ஆராதிக்கப்படுகின்றான். அநபாஸக்த ஹ்ருதயர்களாய் லோகஹிதம் செய்கின்றோமென்று சொல்லிக்கொண்டு, இந்த க்ரமங்களை ஜநங்கள் விட்டுவிடலாம். அதனால் பகவத்பஜநம் கைகூட மாட்டாது. லோகஹிதம் புண்யகர்மம். லோகஹிதம் பகவதாராதநமாகவும் பகவத் ப்ரீணநமாகவும் செய்யப்படலாம். அப்போது அக்கர்மத்துக்கு உத்தேஶ்யன் பரமாத்மா. தத்காலம் தாத்ருஶ கர்மங்களுக்குச் சில ஜநங்கள் உத்தேஶ்யர்களாகின்றனர். அதற்குப் பலத்தைப்பற்றி 'പുണ്യഃ പുണ്യേന കർമ്മണാ ഭവതി, പാപഃ പാപേന' என்று ஶ்ருதி சொல்லிற்று. 'കലൗ ജഗത്പതിം വിഷ്ണും സർവസ്രഷ്ടാരമീശ്വരം । നാർചയിഷ്യന്തി മൈത്രേയ പാഷണ്ഡോപഹതാ ജനാഃ ॥' என்கிற வசநம பொய்யாகுமா? பாஷண்டன் நாஸ்திகன். 'നാന്യദസ്തീതിവാദിനഃ' என்கிற கணக்கில் பாஷண்டர் பெருகும் காலம இது. 'அஸ்தி' யென்று சொல்லிக்கொண்டு கார்யத்தால் நாஸ்திகதையைப் பலர் ஆவிஷ்கரிக்கின்றனர். அமெரிக்கா வாஸியான வில்ஸன்ப்ரபு தர்மத்தை நினைத்தார். ப்ரிடிஷ் ராஜாங்க ப்ரதாநிகள் அதை வாயால் சொன்னார்கள்.

ப்ரான்சு, இடலி, ஜபான் முதலான தேசத்தவர்கள் அதை வாயாலும் சொன்னார்களில்லை. ஜர்மானியர் அதர்மத்தால் லோகாக்ரமணத்தை உத்தேசித்தார்கள். அவர்கள் யுத்தத்தில் தோற்று, ஸர்வப்ரகாரத்தாலும் அஶக்தர்களாய்ப் போனார்கள். அவர்களுடையவும் அவர்கள் ஸஹகாரிகளுடையவுமான தேசங்கள், அவர்களை ஜயித்த ஶக்தர்களால் தமக்குள் பங்கிடப்படுகின்றன. இந்த விபாகத்தில் சிலர், கிடைத்தது போதாதென்று முறையிடுகின்றார்கள். ஐரோப்பா கண்டத்தில் அதிக பாகம் அராஜகத்தில் முழுகி நிற்கின்றது. நிரபராதிகளான ஜநங்கள் ஸங்க்யையின்றிக் கொல்லப்படுகின்றார்கள். ப்ரிடிஷ் ராஜ்யத்திலும் அராஜகத்தில் ரமித்த ஜநங்கள் ஸங்க்யையில் வ்ருத்தியடைகின்றார்கள். அஶக்தர்களை ஶக்தர்கள் அடக்குவதும், ஹிம்ஸிப்பதும், கொல்லுவதும் லோக முறையாக முடிந்தது. இப்போது ஈஶ்வரனையும் தர்மத்தையும் யார் மதிக்கின்றார்கள்? சிலர்க்கு வ்யவஹார நிமித்தம் இந்த ஶப்தங்கள் வேண்டும். பூமியின் தத்கால ஸ்திதியானது ஐரோப்பா ஜநங்களால் உண்டாக்கப்பட்டது. மற்ற ஜநங்கள் ப்ராயிகமாகப் பரதந்த்ரர்கள். இந்த ஸமயத்தில், அதாவது லோகமெங்கும் பூர்வ மர்யாதைகள் அழிபட்டு ஜநங்கள் கலங்கி நிற்கையில், நமது ஸநாதந தர்மத்தை அழிக்க நம்மவர்க்குள் பலர் கிளம்பிவிட்டார்கள். அவர்கள் யுக்தாயுக்த விசார ஸமர்த்தர்களல்லர். மர்யாதைகள் கெட்டு ஐரோப்ய தேசங்கள் படுவதைக் கண்ணுற்றும், பாரவஶ்யத்தால் பூர்வ மர்யாதைகளை ரக்ஷிக்க நம்மவர் அஸமர்த்தர்கள் என்பதை அறிந்தும், அஜ்ஞர்களுக்கும் தாமஸ ப்ரக்ருதிகளுக்கும் புத்திபேதங்களை ஜநிப்பித்துக்கொண்டு, புது ஸமாஜ கல்பனைகள் பண்ணும் நமது தேசஜநங்களைப்பற்றி என் மொழிவோம்? பரர்களுடைய ஆக்ரமத்தைத் தடுக்க நம் தேசத்தவர்க்கு யோக்யதையில்லை. அவர்க்குள் ஐகமத்யம் கெட்டுப் பரஸ்பர த்வேஷம் முற்றுகின்றது. பகவானுடைய கலிகோலாஹல க்ரீடை ஐரோப்பாவில் ஒரு ப்ரகாரமாகப் பரிணமிக்கின்றது. மஹம்மதிய நாடுகளில் மற்றொரு விதமாக ப்ரகாசிக்கின்றது. நமது தேசத்திலும், பல விடங்களில் வெவ்வேறு படிகளில் ஆவிர்ப்பவிக்கின்றது. நம



மையும், நமது மதங்களையும் தூஷிக்க வென்று அதிகாரிகள் ஏற்பட்டுவிட்டார்கள். அவற்றின் ரக்ஷகரெனப் பெயர் வஹித்தவர்கள் அத்யந்தம் ஆத்மகுண லேஶமற்றவர்களாய், அதர்ம பரர்களாய் ப்ரகாசிக்கின்றார்கள். இவ்வண்ணம் துர்த்தசையை அடைந்த ஆர்ய தேசத்தைப் பகவான் உபேக்ஷிக்கின்றானே? 'அநாதாம் கிமுபேக்ஷஸே' என்று த்ரௌபதியைப்போல் முறையிடலாமோ? ஸ்ரீக்ருஷ்ணன் ஆர்யதேசத்தைத் துறந்துவிட்டானோ? 'ஹா நாத ரமாநாத வ்ரஜநாதார்திநாஶந । மக்நமுத்தர கோவிந்த கோகுலம் வ்ருஜிநார்ணவாத் ॥' என்று வ்ரஜாங்கனைகளைப்போல் நாமும் ப்ரார்த்திக்கலாமோ? அவர்கள் பகவத்பத ஸமாஶ்ரிதர்களாய்ப் பவமுக்தியை அடைந்தார்கள். பகவத்பத ஸமாஶ்ரயணம் என்றால் இப்போது பரிஹஸிக்க மாட்டார்களோ? '[illegible]' என்று ஸ்ரீ ராகவன் பரதனைப் பார்த்து உரைத்தார். ஸ்வகர்மபலங்களை அநுபவிக்கும் ஜநங்களைக் குறித்து ஸ்வரக்ஷண விஷயத்திலும் அஶக்தர்களான நாம் எவ்வண்ணம் ஶோகிக்கப் பொருந்தும்? '[illegible], * * * [illegible] ॥' என்று மஹா பாகவதனைப்போல் நாம் பகவானை ப்ரார்த்திக்கலாமென்றாலோ நமக்கும் ப்ரஹ்லாதனுக்கும் இருக்கின்ற தூரத்தைக் கணிசிக்க வேண்டியிருக்கின்றது. 'ஜகத்திதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம:' என்கிறபடியே, ஜகத்துக்கு ஸர்வத்ர ஹிதத்தைப் பண்ணும்படியாய் பகவானை வணங்கி நின்று பர்யவஸாநத்தில் பகவான் நமது நாட்டைத் துறக்கமாட்டான் என்று விஶ்வஸிக்கப் பொருந்துமோ?

'[illegible] ॥' என்று பிராட்டி பாரவஶ்யதையை வெறுத்தனள். பாரவஶ்யத்தை பஹுக்லேஶகாரணமாகின்றது. அதனால் உண்டாகும் கேடுகள் பலர்க்கு நன்மையாகத்

தோற்றுகின்றன. நம்மவர் ஸ்வரூபத்தையும் ஸ்வதர்மத்தையும் துறந்து ஸாதிக்கும் விஷயம் தெரியவில்லை. நம்முடைய தர்மங்களும் மர்யாதைகளும் நம்முடைய பாரவஸ்யதைக்குக் காரணமாக மாட்டா. இவையில்லாத தேசங்கள் பல பரவஸமாய் நிற்கவில்லையா? துருஷ்கராஜ்யங்களும் ரஷியாவும் வர்ணாஸ்ரமதர்ம வாஸனையின்றியே கெட்டலையவில்லையா! ஒரு தேசத்தார் மற்ற தேசத்தார்களை ஆக்ரமிப்பதும், ஆக்ரமித்த தேசங்களில் குடிகொண்டு மற்றோரை அங்கு வரவொட்டாமல் தடுப்பதும் லோகரீதியாயிருக்கின்றபடியால், சில ஜாதியார்கள் எப்போதும் கஷ்டம் அநுபவிக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். இன்னும், ஈஜிப்ட், பாபிலன், க்ரீஸ், ரோம், பெர்ஷியா முதலான பூர்வ தேசங்களில் மிகுந்த பெருமையை வஹித்த ஜநங்கள் முன் வஸித்தார்கள். அவர்களுடைய ஸந்ததியார்கள் எங்கிருக்கின்றார்களோ என்று அறியக்கூடவில்லை. அவர்களுடைய நாகரிகம் அனைத்தும் அழிவுற்றது. யூதர், யூதரெனத் தனிமையில் நிற்கவே, ஒரு ஜாதி ஜநங்களெனக் கொண்டாடப்படுகின்றனர். நம்முடைய நாட்டில் ஆர்ய ஜநங்கள் தங்களுடைய ஆர்யத்வத்தை எவ்வண்ணம் காப்பாற்றப் போகின்றனர்? வித்யை கெட்டு, வித்யைக்குரிய தர்மமும் கெட்டு, தங்களை இன்னாரென்று பிரித்துக்காட்டும் லக்ஷணங்கள் கெட்டு, பூர்வ ருஷிகளுடைய ஸந்ததியார் எவர்களோ என்று குறிப்பிடவழியின்றிக் கேடுறும் நிலைமையில் புகுந்தால், ஆர்யாவர்த்தம் புண்ய கர்மங்களைச் செய்தவர்கள் பெருகிப் புண்யபூமியென்று முன் பெயர்பெற்று, இனிக் கேவல புண்யஜநப் பெருக்கால் புண்யபூமி எனச் சொல்லும் ஸ்திதியை அடைந்துவிடும்.

---


ஸ்ரீ:.

## வேதாந்த திபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | | ரு. அ. ப. |
|---|---|---|
| 1. | ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 2 0 |
| 2. | ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஸிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட வ்யாஸம்) ... ... ... ... ... | 0 2 0 |


ஸ்ரீ:.

[illegible]

பகவத் விஷயமான

# ஒரு நிந்தா ஸ்துதி.

லோகத்தில் நிந்தா ஸ்துதி என்று ஒரு உக்திவிஸேஷமுண்டு. நிந்தை செய்வதுபோல ஒரு வஸ்துவை நிந்தித்து, அதனால் அதன் குணாதிஸயத்தை வெளியிடுவது அதன் ஸ்வரூபம்.

“[illegible]”

[ஹே கங்கையே! உன்னில் ஸ்நாநம் செய்யும் ஸகலரையும், நீ புண்யவான்களோடு பாபிகளோடு வாசியற ஸ்வர்க்கமேற்றுகிறாய்; உனக்கு விவேகமே இல்லையோ?] என்று கங்காதேவியின் மாஹாத்ம்யத்தை வர்ணிக்க இழிந்த ஒருவன் அவளை நிந்தாஸ்துதி செய்தான். இம்மாதிரி ஒரு ஸ்துதி செய்வதில் ஒரு ரஸவிஸேஷத்தை ரஸிகர்கள் அறிவார்கள்.

பகவத் கல்யாணகுணங்களை ஆத்ருப்தி அநுபவித்த ஆசார்யர்களுள் அக்ரதமரான ஸ்ரீ பராஸர பட்டர் என்பவர், ஸ்ரீ பகவான் விஷயமாக பின்வருமாறு ஒரு நிந்தா ஸ்துதி செய்திருக்கிறார். அது அதிமாத்ரம் ஹ்ருதயங்கமமாக இருக்கிறபடியால் அதை இவ்விடத்தில் விவரிக்கத் துணிகின்றேன்.

“[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥”

[[illegible]—தயையென்பது தன்னையொழிந்தவர்களுடைய துக்கத்தைப் பொறுக்கமாட்டாமை; தே

வரீர் ஸகல பதார்த்தங்களோடும் பேதமில்லாதவராக இருக்கிற படியால், தேவரீரைத் தயை யுடையவரென்று சொல்ல இட மில்லை. தன்னை ஒழிந்த பொருளிருந்தாலன்றோ தயாளு என்று சொல்லக்கூடும்? "ஹே ஶம்ஹோ! ஶ்ருண்வீஷ வராயா நவ தோஷஶ்ஷ க்ஷமா நதராம் ஸவதி" - க்ஷமையென்பது 'பிறருடைய குற்றங்களை அறிந்திருக்கையிலும் அவைகளைப் பொறுப்பது; தேவரீரையே உபாயமாகவும் உபேயமாகவும் பற்றினவர்களுடைய குற்றங்களைத் தேவரீர் அறியாதவரானபடியால், தேவரீரைப் பொறுமையுடையவரென்று சொல்ல ஸாகாரம் இடமில்லை. அறிந்தன்றோ பொறுத்தோமென்று சொல்லக்கூடும்? 'ஹே நாத! யஸ்யாத்ரும் தவ விஸவம் ஶுஶ்ரூஷம் ஶயோ:, (தஸ்யாஶ) ஔதார்யம் தவ நதரோம் ஸவதி"- ஔதார்யம் என்பது தனது சொத்தைப் பிறருக்குக் கொடுக்கும் குணம். தேவரீருடைய விபூதி முழுவதையும் இரந்தவரின் சொத்தாகத் தேவரீர் எண்ணிவிட்டபடியால், தேவரீருக்கு தாத்ருத்வமென்பது ஸம்பவிக்கக் கொஞ்சமேனும் ஹேதுவில்லை. கொடுக்கச் சொத்து இருந்தாலன்றோ ஔதார்யம் ஸம்பவிக்கும்? ஆகையினால், தேவரீரைக் கல்யாண குணாகரனென்று சொல்வது எப்படி?

அதாவது - அநந்யாகையாலே தயையில்லை; தோஷத்தைப் பாராததாலே க்ஷமையில்லை; ஆஸ்ரித ஸ்வத்தாலே ஔதார்யமில்லை என்று நிந்தை சொன்னதாயிற்று. இப்படிச் சொல்வதன் கருத்தென்னவென்றால் - பகவானுடைய தயா க்ஷாந்தி ஔதார்யம் என்னும் குணங்கள் அதி ஸ்வாஸவாஹிகளாகையாலே லௌகிகருக்கு உண்டாகும் தயை முதலியவை போலன்றிக்கே அவை அதி விலக்ஷணங்கள் என்பதுதான்.

உண்மையாகவே, பகவானுக்கும் ப்ரபஞ்சத்திற்கும் ஒருவித அபேதத்தை நமது ஸித்தாந்தம் ஒத்துக்கொள்ளுகிறது. 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்', 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம', 'ஐததாத்ம்யமிதம் ஸர்வம்', 'யஸ்யாத்மா ஶரீரம்' இத்யாதி ப்ரமாணங்களால் பகவானுக்கும் ப்ரபஞ்சத்திற்கும் ஶரீர ஶரீர பாவம் ஏற்படுவதுதான் இப்படி ஒத்துக்கொள்வதற்கு ஹேதுவாகின்றது. 'ப்ருயமாத்ரநம்' இத்யாதி ப்ரமாணங்களால் ஸ்வரூப பேதமுண்டு என்பதே நிகூடாபிப்ராயம். ஸாதநாந்தரங்களனைத்தையும் பரித்யஜித்து பகவானையே உபாயோபேயமாகப் பற்றின பக்தர்களின் விஷயத்தில், 'அவிஜ்ஞாதா' என்கிறபடி பகவான் தோஷத்தைப் பாராதவனாக இருக்கிறான் என்பது உண்மையே. இக்குற்றங்காணாமைக்கு க்ஷமையே உத்தம்பகமென்பது தாத்பர்யம். ஔதார்ய விஷயத்திலும், 'நமது விபவம் முழுவதும் இரந்தவனுடையதே' என்று ஸங்கல்பிப்பதே அவனுடைய ஔதார்யத்திற்கு விஶேஷித்த ஒரு ஏற்றத்தை ஸூசிப்பிக்கிறபடியால், எவ்வித விரோதமுமில்லை.



இதனால், தயாதிகுண பூர்த்திக்கு பகவானுக்கு மேலெல்லை இல்லையென்று சொன்னதாயிற்று.

ஸ்ரீ. வாஸுதேவன்.

---

ஸ்ரீ:

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்

தமிழ் வ்யாக்யாநத்துடன்

ஸ்ரீ. எஸ். வாஸுதேவாசார்யரால்

இயற்றப்பட்டது.

விலை. ரூபா. 1—0—0.

எஸ். வாஸுதேவாசார்யர்,

மாம்பலம், சைதாபேட்டை.

மதிராஸ்.

ஸ்ரீமதே ஹயவதந பரப்ரஹ்மணே நம:

திருக்கச்சிநகர்

# பேருளாளன் பஞ்சரத்தினம்.

1. வரதவென் றுருகாஞ் சொன்னபேர் புவியையாள்
வாருனது கோயிலைவலம்
வந்தபே ரிந்த்ரனா ரடைவருன் பொன்மயவி
மானத்தி னைத்தொழுதபேர்
பிரமனுல கில்வாழ்வர் கரிகிரியி லேறியெம்
பெருமானின் னடிபணிந்தோர்
பெருவிரசை யக்கரையி லேறியழி வறுமுத்தி
பெறுகுவ ரிவைக்கையமோ
பரமபுரு டாபரம பக்தப்ரி யாபரம
பாவனு பரமகருணு
பாங்காவி கங்கவிர தாங்காம காசார்ங்க
பாணிம்ரு காங்கானனு
சரணமணி நூபுரா ருசிரதர கோபுரவி
சாலகாஞ் சீபுரேசா
சயதேவ ராசனே லோசனும் போசனே
சதகோடி ரவிதேசனே.

2. அந்தமணி மெள்ளிபுனை வசுகுல விமானங்க
ளச்சுவினி தேவதைகளுர்
அற்புதவி மானமள வைத்துரைவி மானம்வந்
தனுதினஞ் சூழவவைமேல்
குந்தனப் பொற்சுடரை விசல்புரி யுன்புண்ய
கோடிவி மானமொருகாற்
கும்பிடப் பெற்றபேர் முன்செய்வினை கோடானு
கோடியோ டப்பெறுவர்கான்
நந்தன வனத்திலுங் கயல்பொரு வனத்திலும்
நாறுபல மலரிலூறும்
நனையுண்டு களிகொண்டு திரிவண்டு புடைசென்று
நங்கையர் பதங்கைவதனம்



சந்தனகு சங்களர விந்தமென் றலமருந்
தண்டமிழ்க் கச்சியோனே
சயதேவ ராசனே லோசனும் போசனே
சதகோடி ரவிதேசனே.

3. சதுமறையு மறியொணு வொருவன்வந் தான்முத்தி
தரவல்ல தலைவன்வந்தான்
சகலாண்ட நாதன்வந் தானடியர் செய்தபிழை
சற்றுமித யத்திலெண்ணு
முதல்வன்வந் தானித்ய விபவன்வந் தானென்றுன்
முன்னூது விருதுசின்னம்
முச்சகமு மெச்சுமிதை மற்றுமுள தெய்வங்கள்
முன்னூதில் வெட்குவார்காண்
மதுரகவி பணிமாறன் வண்பொய்கை பேய்பூதன்
மழிசைமன் குலசேகரன்
மங்கைநா தன்கோதை புதுவைவரு முனிபாணன்
மண்டங்கு டிக்கதிபனும்
தகியர்துதி செயவோது கவிமாலை புனையெங்கள்
சாமியே கச்சியோனே
சயதேவ ராசனே லோசனும் போசனே
சதகோடி ரவிதேசனே.

4. பாமேவ ராமேவ ரருமையுன் போலவறி
பவரார ரங்கமென்னும்
பதியரையர் வந்துநின் றிருவடி வணங்கியிசை
பாடியா டித்துதித்து
வீடருள்க வென்னும லெதிபதியை யருள்கெனவும்
வினவிநன் றென்றருளினுய்
விறமனு சனையுதவு நீகவுத் துவமணியை
விசெனிவு மீவைகண்டாய்
நீடியசெ ழுந்தாழை நெற்றுமா வினின்மாவி
னிறைகனிப லாவிற்பலா
நேர்பழங் கமுகினிற் கமுகின்முதிர் காய்கதலி
நிரையினிற் கதலிபலமும்
தாடிமப் பலமுமுரு கினில்வீழ மந்திபாய்
தண்பொழிற் கச்சியோனே

சயதேவ ராசனே லோசனும் போசனே
சதகோடி ரவிதேசனே.

5. எத்திசையு மிகமெய்ச்சு குருகாபு ரிப்புளியி
டத்திலகு மகிழ்மாறனும்
எங்கள்கற் பகால்கு பலகனியெ னத்தக்க
விரைந்து நூறுகவியும்
சித்தமகிழ் வைத்தருதல் போலுனைக் கலகைகிகர்
சிறியனே னுதுபுன்சொற்
செய்யுளு மகிழ்ச்சிதரு மெவ்வித மெனிற்றினஞ்
செவியுணர்வு பெற்றபெரியோர்க்
குத்தம கலைத்திர ளுணர்ந்தகல் லுணர்வுளோ
ரோதுமொழி யுவகையுதவும்
உன்மத்தர் சொல்லுமகை யுண்டாக வேயுவகை
யுதவல்செயு மந்தவிதமே
சத்தமறை தவழ்காவில் வளர்கிளியு மாழ்வார்
தமிழ்ப்பகர் திருக்கச்சியாய்
சயதேவ ராசனே லோசனும் போசனே
சதகோடி ரவிதேசனே.

---

## வேற்றுமகுடம்.

1. காலனார் தமர்வந்து கைப்பாசம் வீசவும்
கண்கள்புஞ் சடையவிருகால்
கைகளும் செயலின்மை பெறமொழிகள் குழறிடக்
கண்டத்து ளையடைப்பப்
பாலொடு மனைவிதம ரழவுயிர்ப் பொழுகலுழி
பருவத்தி லுள்ளலமரும்
பாவியேன் முன்னில மலைபோல நின்றருட்
பார்வைவைத் தெனையாளுவாய்
சாலவிரு கூலத்து முத்தெறிந் தலைதிளந்
தத்திவரு மலைமலிநறுந்
தண்புனற் பொன்னிசூழ் திருவரங் கத்திலுந்
தடநெடுங் கடலிடத்தும்



ஆலிலையி லுந்துயிலு மாயனே கொடியாடு
மணிமதிட் கச்சிமூதூர்
அருளாள னேபெருந் தேவிமண வாளனே
ஆடரவி னடிதாளனே.

2. சூத்திரி யசைத்தபடி பாவையின் றுடுநீ
சூழ்ந்தபடி யுயிரனைத்துந்
தொழில்புரியு நன்மைபுரி சனர்தீமை செய்தபேர்
சொர்க்கநர கடைவரென்றே
சாத்திரம்வி தித்தனையு னக்குத்த ரஞ்சொலுஞ்
சதுரரா ருன்னுடைமையாம்
சனனவே லையில்விழி லார்சொந்த நின்சார்பு
சாருப்ப டிக்குவைப்பாய்
மாத்திருவ யோத்தியெனு முனதுமூ தூரிலே
மருவியச ராசரமெலாம்
வானவரு மிச்சித்து மெச்சுபத வியில்வாழ
வைத்தவருள் விழிமேகமே
ஆத்திரள் களிக்கவுலர் காத்திரள் தளிர்க்கவே
யன்றாது கச்சிமாலே
அருளாள னேபெருந் தேவிமண வாளனே
ஆடரவி னடிதாளனே.

3. உலகறிய வருமலரி பூவலரி சோமனு
முடுத்திவிடு சோமனச்சேய்
ஒளிஞ்சேய்புலவ னிரவுமன் றலைபுலவ
னெண்பொன்மிக வொளியற்றபொன்
இலகுசுடர் வெள்ளிவெண் கலவிலை யுருமந்த
னென்பவன் புத்திமந்தன்
இருநாக முந்துத்த நாகமென வுன்னடிய
ரெண்ணுவர் பயப்படுவரோ
திலகமெழு தியசிறிய பிறைநுதலி னுருவனிதை
சித்தங்க ளிக்கவிண்ணிற்
சென்றுபல தேவர்செவி செவிடுபட வெண்சங்கு
செவ்வாயின் வைத்தூதிமுன்
அலர்மலி தருங்கற்ப தருவைக் கொணர்ந்திந்த
வவனிநடு கச்சிமாலே

அருளாள னேபெருந் தேவிமண வாளனே
ஆடரவி னடிதாளனே.

4\. நீயுலக முதல்வனென முறைமைகரி ராசனால்
நிகிலவத் தவினிற்கும்
நிலைமைப்ர ஹ்லாதனால் முத்திதர வல்லனென
நீர்மைகண் டாகர்ணனால்
மாயைபுரி யினுமடிய வர்க்கெளிய னென்னும்விதம்
மழிசைமுனி வரனுநீ
மண்ணுலகு தன்னில்வெளி பண்ணினை யுனைத்தொழா
மன்பதைகள் பேய்களலவோ
சேயரி படைத்துக் குட்டைகையின கன்றினைச்
சேலென மிளிர்க்குழைநேர்
சென்றடிக் கடிமீள வந்துசெங் குமிழின்மறி
சினவேலை வென்றமைக்கண்
ஆயிழை சுமந்தமுலை மாதர்நட மிடுகோபி
லாயிரந் திகழ்கச்சிவாழ்
அருளாள னேபெருந் தேவிமண வாளனே
ஆடரவி னடிதாளனே.

5\. ஒருகாசு மற்றவன் பலதான மும்புரிய
வுன்னும்வித மென்னமுன்னம்
ஒருநன்மை புரிகிலே னனாரி லேயிருந்
தன்னடிய ரொடுபழகவும்
வருகாரி மாறனுரை தமிழ்மறை படிக்கவும்
மாசற்ற பொருளறியவும்
வருதின முனைத்தொழவு மெண்ணினே னடியேன்
மனத்தெண்ண நிறைவேற்றுவாய்
இருகாதி லிடுமணிக் குழைசிரத் திருமகுட
மிருகரத் திகிரிசங்கம்
ஈரிருபு யக்கனக கேயூர மார்பின்மணி
யிடைசாத்து பொன்னுடையும்
அருகாத சுடர்பரப் பவுமிருண் டிலகுருவி
னத்தனே கச்சியோனே
அருளாள னேபெருந் தேவிமண வாளனே
ஆடரவி னடிதாளனே.

கொ. ஸுந்தர்ஶநாசார்யன.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஹயவதந பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீ[illegible] நம:.

ஶ்ரீ[illegible] ।

ஸ்ரீவைஷ்ணவ [illegible] ஸ்ரீரங்க[illegible] வாயக: ॥

# ஸநாதந தர்ம ஸம்ரக்ஷணம்.

ஶ்ரிய:பதியும் நிகிலலோக ஶரண்யனும் கல்யாண குணகண மஹாநிதியுமான ஸர்வேஶ்வரன், லோக ஸம்ரக்ஷணார்த்தமாய் முதலில் வேதங்களை ப்ருஹ்மாவுக்கு உபதேசித்து, அவர் முகமாய் ஶாஸ்த்ரங்களையும், நாரத பராஶர ஶுக ஶௌநகாதி மஹர்ஷிகளால் அத்யாத்ம வித்யைகளையும் வெளியிட்டு, வ்யாஸாதிகளை அநுப்ரவேஶித்துப் பாரத ஶாரீரகாதிகளை ப்ரவ்ருத்திப்பித்து, கீதாசார்யாத்யவதாரங்களால் தானே தத்வஹிதங்களைத் தினவற உரைத்து, 'யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத । அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥ பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் । தர்மஸம்ஸ்தாபநார்த்தாய!' என்று அருளிச்செய்தபடி, ஸ்ரீமந்நாதமுநி ஸ்ரீமத்யாமுந முநி, ஸ்ரீமத் ராமாநுஜ முநிகள் ரூபேண அவதரித்து, ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை நிலைநிறுத்தினன். சில காலஞ் சென்றதும், பாஷண்ட பூயிஷ்டதையினால் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குச் சிறிது ஹாநி ஏற்படும்போல் தோன்றினவுடன், ஸ்வ கண்டாவதாரமான ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிக ரூபேண அவதரித்து, க்ரந்தஜாதங்களை வெளியிட்டு ஸத்ஸம்ப்ரதாய ஸ்தாபநம் செய்து குளிரக் கடாக்ஷித்தான். இப்படியே ஸ்ரீகீதாசார்யனும்,

'யத்யத் விபூதிமத் ஸத்த்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா | தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்சஸம்பவம் ||' என்று அருளிச்செய்திருக்கிறான்.

'நாதயாமுந பூர்வார்ய முநீந்த்ராதி ஸம்ப்ரதாய ஸித்தயே |' என்னும் ஸ்ரீஸூக்திப்படி, ஸ்ரீமந்நாதமுநிகள் முதல் ஓராண்வழியாய் வருகிற இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கும், 'ப்ராஹ்மண க்ஷத்ரியவிசாம் சூத்ராணாம் ச பரந்தப | கர்மாணி ப்ரவிபக்தாநி ஸ்வபாவப்ரபவைர்குணை: ||' என்கிற கீதாஸூக்திப்படி, வெகு காலமாய் விளங்கிவருகிற நான்கு வர்ணாச்ரம தர்மங்களுக்கும், கலிதோஷத்தினால் இப்பொழுது கலஹம் அதிகரித்து மாலிந்ய மேற்பட்டு வருகிறது. இந்த ஸந்தர்ப்பத்தில் 'ஸ்ரீவைஷ்ணவ ஸபை', 'வர்ணாச்ரம தர்மரக்ஷண ஸபை' முதலிய அநேக ஸபைகள் தோன்றி தத்வவிசாரங்களைச் செய்து ஸநாதந தர்மங்களை நிலைநிறுத்துவதைக் கண்டு நாம் ஆனந்திப்பதுடன், 'அந்த பகவானே இந்த ஸபாப்ரவர்த்தகர்கள் ரூபமாகவும் அவதரித்திருக்கின்றானோ' வென்றும் நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. 'ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் | மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணிநா ||' என்னும்படி பகவான் பக்தர்களுக்காக வேண்டி சாஸ்த்ரங்களையும் அவற்றை உபதேசிக்க ஆசார்யர்களையும் தந்து உகந்தருளுகின்றான். இப்படியிருக்க, '[illegible] ||' என்கிறபடி, சிலர் கொஞ்சமேனும் ஹிதாஹித விசாரஞ் செய்யாமல் மூர்க்க ஜநோபதேசங்களால் சாஸ்த்ரஸித்த ஸம்ப்ரதாயங்களையும் ப்ராஹ்மண்யத்தையும் இழந்து, வர்ணஸாங்கர்யம் செய்யவேண்டுமென்று முயற்சித்து, ஆண்களுக்கு கட்டங்களைக் கட்டி, ம்லேச்சாதிகளுடன் ஸஹபோஜநம் முதலியன செய்து, தமது இஷ்டர்களையும் செய்விக்க முயலுகிறார்கள். 'யத்யதாசரதி ச்ரேஷ்டஸ் தத்ததேவேதரோ ஜந: | ஸ யத் ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே ||' என்கிறபடி ஒருவன் போன வழி மற்றொருவன் பின்செல்லுவானன்றோ?



இக்காலத்தில் பணம், உத்யோகம், நாஸ்திக்யம், அநாசாரம் முதலியவற்றில் எவன் பெரியவனோ, அவனே ச்ரேஷ்டசப்தவாச்யன்.

'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுர் த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச |' என்னும் ஸ்ரீஸூக்திப்படி, பிறந்தவனுக்கு இறப்பும் இறந்தவனுக்குப் பிறப்பும் ஸூர்யோதயாஸ்தமயம்போல் ஏற்படுகின்றன. முதலில் புழு, எறும்பு, ச்வா முதலான அநேக ஜந்மங்களெடுத்துக் கொஞ்சங்கொஞ்சமாய் ஏற்படும் ஸுக்ருத பரிபாகத்தினால் நர ஜந்மமும், அதிலும் பெரிய புண்ய பலமாக ப்ராஹ்மண ஜந்மாவும் ஒருவனுக்கு ஏற்படுகிறது. இதையே ச்ருதியிலும், 'யதாகாரீ யதாசாரீ ததா பவதி | ஸாதுகாரீ ஸாதுர்பவதி | பாபகாரீ பாபோ பவதி | புண்ய: புண்யேந கர்மணா பவதி பாப: பாபேந | க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிக் கஷ்டப்பட்டு ஸம்பாதித்த இந்த ஜந்மத்தில் நமது சாஸ்த்ரவிஹிதமான கர்மங்களைச் செய்து, தர்மத்தை ஸம்பாதித்து, பிறகு நான்காவது புருஷார்த்தமான மோக்ஷத்தை யடையவேண்டும்.

ப்ராஹ்மணன் பிறந்தவுடன் மூன்று விதத்தால் கடன்காரனாகின்றான். அவன் அதைத் தீர்த்தபிறகே மோக்ஷத்தை விரும்பவேண்டும். இல்லாவிடில் அவனுக்கு மோக்ஷம் கிட்டாது. முதல் கடன் தீர்ப்பதாவது:— 'அஷ்டவர்ஷம் ப்ராஹ்மணமுபநயீத, தமத்யாபயீத' இத்யாதி வேதவாக்யப்படி கர்ப்பாஷ்டமத்தில் உபநயநத்தைச் செய்வித்து ஆசார்யாதீநனாய்ச் செய்துகொண்டு,

'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:' என்கிற விதிப்படி, ஸ்வாத்யயநம் முன்னதாகச் செய்து, மஹர்ஷிகளை த்ருப்தி செய்து வைப்பது. இரண்டாவது:—வேதத்தில் சொல்லிய யாகாதிகளைச் செய்து, ஹவிர்ப்பாகங்களைத் தேவதைகளுக்குக் கொடுத்து த்ருப்தி செய்து வைப்பது. மூன்றாவது:—ஸந்தானங்களை உண்டுபண்ணி பித்ருக்களை த்ருப்தி செய்துவைப்பது. [அதாவது, புத்ரர்களால் செய்யப்பட்ட திலதர்ப்பணாதிகளால் பித்ருக்கள் ப்ரீதியடைகிறார்களென்பதே] இதையே மநுஸ்ம்ருதியில் 'ருணாநி த்ரீண்யபாக்ருத்ய மநோ மோக்ஷே நிவேசயேத் । அநபாக்ருத்ய மோக்ஷம் து ஸேவமாநோ வ்ரஜத்யத: ॥' என்றும், ஸ்ருதியில் 'ஜாயமாநோ வை ப்ராஹ்மணஸ்த்ரிபிர்ருணவாந் ஜாயதே ப்ரஹ்மசர்யேண ருஷிப்ய: யஜ்ஞேந தேவேப்ய: ப்ரஜயா பித்ருப்ய: ஏஷ வா அந்ருணோ ய: புத்ரீ யஜ்வா ப்ரஹ்மசாரிவாஸீ' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதம் தர்மஸம்பாதநம் செய்ய வேதாத்யயநம் அவஸ்யம். 'யோऽநதீத்ய த்விஜோ வேதாந் அந்யத்ர குருதே ச்ரமம் । ஸ ஜீவந்நேவ சூத்ரத்வம் ஆசு கச்சதி ஸாந்வய: । அநதீயாநா வ்ராத்யா பவந்தி' இத்யாதி வாக்யங்களால் வேதாத்யயநம் செய்யாதவனுக்கு வ்ராத்யதை சூத்ரத்வம் முதலியன ஸம்பவிக்கின்றன என்று தெரிகிறது. அதற்காக இப்பொழுது பொட்டையாய்ப் பாடம்செய்வதுபோல் உருப்பாடம் செய்வது உசிதமாகாது. ஏனென்றால், எந்த வாக்யம் வேதாப்யாஸத்தை விதிக்கிறதோ, அதே வாக்யம் ப்ரயோஜநவத்தர்த்த ஜ்ஞாநத்தை உத்தேசித்து வேதாத்யயநத்தை விதிக்கிறதென்று மீமாம்ஸகர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் வேதாந்திகள் கேவல ஸப்தராஸிகளைச் சொல்வதற்கும் பலம் உண்டென்று நிர்ணயித்திருக்கிறார்கள். கேவல வேதாப்யாஸம் செய்தவன், ஒரு மண்டபத்தைத் தாங்கும் தூண்போல வேத மூட்டையைச் சுமக்கிறான். எவனுக்கு



அர்த்த ஜ்ஞாநமிருக்கிறதோ அவனே மோக்ஷத்தை யடைகிறனென்று வேதமே அறிவிக்கிறது. 'ஸ்தாணுரயம் பாரஹார: கிலாபூத் அதீத்ய வேதம் ந விஜாநாதி யோऽர்த்தம் । யோऽர்த்தஜ்ஞ இத் ஸகலம் பத்ரமச்நுதே நாகமேதி ஜ்ஞாநவிதூதபாப்மா' என்றும், 'யததீதமவிஜ்ஞாதம் நிகதேநைவ சப்த்யதே । அநக்நாவிவ சுஷ்கைதோ ந தஜ்ஜ்வலதி கர்ஹிசித் ॥' [காய்ந்த கட்டையை நீர் முதலியவற்றில் போட்டால் எவ்விதம் எரியாதோ, அவ்விதம் அர்த்தஜ்ஞாந மில்லாதவனிடத்தில் வேதாத்யயநம் ப்ரகாஸிக்க மாட்டாது] என்றும் ஸ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அர்த்த ஜ்ஞாநமாவது, ஸிக்ஷா, வ்யாகரணம், சந்தஃ, நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்று சொல்லப்பட்ட ஆறு அங்கங்களின் அப்யாஸத்தால் ஏற்படக்கூடியது. அதனாலேயே அது 'ஷடங்க வேதவிதக்ஷரம்' என்றும் சொல்லப்படுகிறது. ['வேதோ நித்யமதீயதாம் ததுதிதம் கர்ம ஸ்வநுஷ்டீயதாம்'] இப்படி ஷடங்க வேதாப்யாஸம் செய்து, அநுஷ்டாநங்களைச் செய்யவேண்டுமென முடிவாகிறது.

இன்னும் இந்த தர்மார்ஜநத்துக்குக் கீழ்சொன்ன வேத வேதாங்கங்கள் தவிர மற்றும் சில ப்ரமாணங்கள் உண்டு. 'புராணந்யாயமீமாம்ஸாதர்மசாஸ்த்ராங்கமிச்ரிதா: । வேதா: ஸ்தாநாநி வித்யாநாம் தர்மஸ்ய ச சதுர்தச ॥' என்கிற இப்பதினான்கும் தர்ம போதகங்கள். தர்மமென்றால், யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியில், 'ஸத்யமஸ்தேயமக்ரோதோ ஹ்ரீ: சௌசம் தீர்த்ருதிர்தம: । ஸம்யதேந்த்ரியதா வித்யா ஸர்வ: ப்ரோக்த உதாஹ்ருத:' என்றும், 'த்ருதி: க்ஷமா தமோऽஸ்தேயம் சௌசமிந்த்ரியநிக்ரஹ: । தீர்வித்யா ஸத்யமக்ரோதோ தசகம் தர்மலக்ஷணம் ॥' என்றும், தர்மத்துக்குப் பத்து வித ஸ்வரூபம் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்சொல்லப்போகிற மநுஸ்ம்ருதி வாக்யத்துடன் கீழ்சொன்ன வாக்யத்

னதயும் சேர்த்து ஆலோசித்தால், இந்தப்பத்துவித ஸ்வரூபமுள்ள தர்மம் நான்கு வித ஆஸ்ரமார்ஹர்களான ப்ராஹ்மணருக்கே அவஸ்யமென ஏற்படுகிறது. அதாவது, '[illegible] ॥' இத்யாதி வசனங்களாலும் தர்மார்ஜனம் அவஸ்யமென ஏற்படுகிறது. சில நாஸ்திகர்கள், 'தர்மமென்றால் என்ன? அது கறுப்பா? சிவப்பா? அதைக் காட்டாவிடில் நம்ப மாட்டோம்' என்றும், 'ஶாஸ்த்ரங்களெல்லாம் பொய்' என்றும் வாதம் செய்கிறார்கள். இப்பொழுது இதற்குப் பதில் அளிக்க நாம் ஶ்ரமப்பட வேண்டியதில்லை. இந்த ஜர்மன் யுத்தாரம்பத்துக்கு முன், ஸ்ரீராமாயண பாரதாதி கதைகளைப் பொய்யென்றும், ஆக்னேய வாருணாஸ்த்ரங்கள் அஸம்பாவிதங்களென்றும் வாதம் செய்த சிலர், ஆகாஶ விமானத்தையும் நூதனயுத்த விஶேஷங்களையும் டைம்ஸ் பத்ரிகையில் கண்ணுற்ற மாத்ரத்திலேயே ராமாயணாதி கதாப்ராமாண்ய ஸ்தாபனத்திற்கு அஹமஹமிகயா ப்ரவ்ருத்திக்கிறார்கள். இவர்கள், 'தர்மத்தைக் காண்பிக்க வேணும்; நாம் ப்ரத்யக்ஷத்தையே ப்ரமாணமாகக் கருதுவோம்; அநுமானத்தை அங்கீகரியோம்; புத்தகத்தில் சொன்னதை நம்பமாட்டோம்' என்கிறார்கள். நாம் அவருக்கு அளிக்கும் பதில் என்னவெனில்:— நாம் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது ஆகாயத்தில் பறந்த பறவையை, அது மறைந்ததும் 'அது இல்லையே' யென்று சொல்வோம்; தவிர, நம்மவர்களால் பார்க்கப்படாமல், புத்தகத்திலிருந்தும் பத்ரிகைகளிலிருந்தும் மாத்ரம் தெரிந்துகொள்ளக்கூடிய தேஶங்களை இல்லையென்றும் சொல்வோம்; அதற்கு அவர்கள், 'இதற்குப் புஸ்தகரூப ஶப்தப்ரமாணம் இருக்கிறது' என்றால் அது நமக்கு இஷ்டமே. ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லிய தர்மத்தை அவர்கள் அங்கீகரித்தே தீரவேணும்; அல்லது அவர்கள் இஷ்டப்படி தர்மத்தை ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தாலும் ஸாதிக்கலாம்.



ப்ரத்யக்ஷம் இரண்டு விதம். அவை லௌகிகம் யௌகிகம் என்பன. நாம் யாவர் கண்ணுக்கும் புலப்படுவது லௌகிக ப்ரத்யக்ஷம். ஜ்ஞாநிகளுக்கு யோகாப்யாஸத்தினால் ஏற்படுவது யௌகிக ப்ரத்யக்ஷம். சிலர், "'[illegible] ॥' என்கிற வசனத்தால் யுகபேதேந தர்மபேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன; அந்த தர்மம் வேறு, இது வேறு" என்று உரைக்கிறார்கள். அநேக மஹர்ஷிகளால், '[illegible] ॥' என்று கொண்டாடப்பட்ட பராஶர ஸ்ம்ருதியையாவது அவலம்பித்துத்தானே தீரவேண்டும். எப்படியாவது தர்மமென்று ஒரு வஸ்து உண்டென நினைத்தால் போதும். இவ்விதம் வீண்வாதங்களாடிச் சிலர் காலயாபனம் செய்கிறார்கள். 'அஜ்ஞஶ்சாஶ்ரத்ததாநஶ்ச ஸம்ஶயாத்மா விநஶ்யதி । நாயம் லோகோऽஸ்தி ந பரோ ந ஸுகம் ஸம்ஶயாத்மந: ॥' என்கிற ஸ்ரீகீதா ஸ்ரீஸூக்திப்படி இவர்களுக்கு ஐஹிகாமுஷ்மிக ஸுகமே கிடையாதென ஏற்படுகிறது.

(இன்னும் வரும்.)

ஸ்ரீரங்கம். வே. தி. ச. திருமலைதாத தாஸன்
ஸம்ஸ்க்ருத பண்டிதன்
பட்டுக்கோட்டை.

---

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 3. ஸ்ரீ பாகவத் தசஸ்லோகீ—(ஸ்ரீ: சேட்லூர் நரஸிம்மாசார்யர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 4. ஸ்ரீ சதுஸ்லோகீ விவரணம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 5. ஸ்ரீராமாயணத்தில் விசேஷார்த்தங்கள் ஸ்ரீ. உ.ப. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 6. ஆர்யாப்யுதயம் ஸ்ரீ உ.பா.டி. இ. சடகோபாசாரியர் ... ... ... | 0 | 2 | 0 |

ஸ்ரீ:

# கடிதங்கள்.

(1)

𑌸𑌂𑌶𑌯𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌕𑌾𑌚𑌨 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌾. 𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍇𑌷𑍁 '𑌸𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌯 𑌹𑍇𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌯 𑌔𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇. 𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌷𑍁 [illegible] 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌸𑍍𑌥𑌲𑍇𑌷𑍁 𑌶𑌂𑌖𑌸𑍍𑌯; 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 - '𑌧𑌰𑌾𑌧𑌰𑌸𑌂𑌬𑌦𑍍𑌧𑌕𑍇', '𑌶𑌂𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌧𑌰𑌃', '𑌧𑍃𑌤𑌶𑌂𑌖𑌚𑌕𑍍𑌰𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿. 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌗𑌾𑌥𑌾𑌯𑌾𑌂 𑌚 - 'சங்கு சக்ரங்கள் என்று கைகூப்பும்' 'சங்கினோடும் நேமியோடும்' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿. 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌾 𑌵𑌾 𑌉𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃? 𑌸𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌶𑌂𑌖𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌸𑍍𑌮𑌿𑌂𑌶𑍍𑌚𑌿𑌦𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌧𑌾𑌨𑍍𑌯𑌂 𑌭𑌵𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌤𑌿 - 𑌤𑌾𑌦𑍃𑌶𑌪𑍍𑌰𑌾𑌧𑌾𑌨𑍍𑌯𑌂 [illegible] 𑌨 𑌕𑍁𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇.

𑌅𑌪𑌿 𑌚, 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌂𑌪𑌰𑌾𑌯𑌾𑌂 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑌸𑍍𑌯, 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑌾𑌤𑍍 [illegible] 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑌰𑌂𑌪𑌰𑌾 - 𑌤𑌤𑍍𑌰, 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌶𑍍𑌰𑌿𑌯𑍈, 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑌸𑍍𑌯, 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑍇𑌨 𑌶𑌠𑌕𑍋𑌪𑌸𑍍𑌯 𑌉𑌪𑌦𑍇𑌶𑌃 𑌕𑍃𑌤 𑌇𑌤𑌿 𑌕𑍇𑌨𑌵𑌾 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇𑌨 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇?

சர்மாதேவி, 20-8-19. } 𑌗𑍋𑌮𑌠𑌂 - 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃.

(2)

[ஸ்ரீ ஜயந்தி விஷயமாக ஒரு கடிதம் நமக்குக் கிடைத்திருக்கிறது. அந்தக் கடிதம் எழுதினவருடைய விலாஸம் ஸமக்ரமாக அந்தக் கடிதத்திலிருந்து படாமையால் அது ப்ரசுரம் செய்யப்படவில்லை. ஸ்ரீ. வே. தீ. மானேஜர்



(3)

## இன்ப்ளூயென்ஸா என்னும் ஜ்வரத்தைப்பற்றிச் சுருக்கமான குறிப்புகள்.

சென்ற வருஷத்தில் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் ஜனங்களுக்கு இன்ப்ளூயென்ஸா என்னும் ஜ்வரம் கண்டது. ஜ்வரம் நின்றுபோனபிறகும் அனேகர் பலவீனமடைந்து சொற்ப நோய்களினால் கஷ்டப்பட்டார்கள். கோடைகாலத்தில் இந்த ஜ்வரத்தினால் ஜனங்களுக்கு அபாயம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால், இலையுதிர்காலத்தில் அது மறுபடியும் தோன்றி, அதனால் அனேக ஜனங்கள் மாண்டார்கள். அது வெகுசாய் மறுபடியும் தோன்றக்கூடும். ஆகவே, அது தங்களுக்கு வாராதபடி தடுத்துக்கொள்ளச் சகலரும் சித்தமாயிருக்கவேண்டும். தகுந்த முறைகளை அனுசரிக்கிற பக்ஷத்திலே இந்த ஜ்வரம் ஒருவருக்கும் வாராதபடி தடுக்கலாம் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. ஆனாலும், இப்போது கீழே சொல்லியிருக்கும் உபாயங்களை ஜனங்கள் அனுசரித்தால் அவர்களுக்கு வெகுவாய் நன்மை உண்டாகும்.

இப்படிப்பட்ட உபாயங்களை ஜனங்கள் கவனமாய் அனுசரிக்கும்படி அவர்களை நிர்ப்பந்தப்படுத்த சட்டமொன்றும் கிடையாது. ஆனால், அவர்களுடைய நன்மையை உத்தேசித்தே இப்போது சொல்லியிருக்கும் உபாயங்களை அவர்கள் அனுசரிக்கவேண்டுமே.

இன்ப்ளூயென்ஸா ஜ்வரம் காண்பதற்குமுன் தும்மலும் இருமலும் சாதாரணமாய் உண்டாகின்றன. ஆகவே, ஒரு மனிதனுக்குத் தும்மலும் இருமலும் உண்டாயிருந்தால், இதர ஜனங்கள் அவனைவிட்டு விலகியிருக்கவேண்டும். மேலும், ஒருவனுக்கு ஜ்வரமும் இருமலும் தும்மலும் இருந்தால் அவன் இதர ஜனங்களுககுச் சமீபத்தில் போகக்கூடாது.

உடம்பை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொண்டு இந்த ஜ்வரம் கண்டிருப்பவர்களுக்குச் சமீபத்தில் போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். உமக்கே ஜ்வரம் வந்துவிட்டால் நீர் இதர ஜனங்களுக்கு சமீபத்தில் போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

கிரமமான வேளைகளில் ஆகாரம் எடுத்துக்கொள்ளவேண்டும். நன்றாய்த் தூங்கவேண்டும். தேகப்பயிற்சி செய்யவேண்டும். சீதளம் சேராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். சாராயம் முதலியவை குடிக்கக்கூடாது. இந்தப்படியெல்லாம் செய்தால் ஜ்வரம் வந்தாலும் ஜனங்கள் அதைத் தாங்கக்கூடியவர்களாயிருப்பார்கள். தும்மல் மூலமாகவும் இருமல் மூலமாகவும் ஜ்வரம் இதர ஜனங்களுக்குப் பரவும். தும்மும்போதும் இருமும்போதும் மூக்கையும் வாயையும் எப்போதும் மூடிக்கொள்ளவேண்டும்.

வேலைசெய்யும்போதும் தூங்கும்போதும் ஜன்னல்களை எப்போதும் திறந்து வைத்திருக்கவேண்டும். ஒரு தேயிலைக்கரண்டி உப்பு கலந்த ஒரு பைன்ட்

தண்ணீரினால் மூக்கின் உட்புறத்தைக்கழுவி, தொண்டையில் அந்த உப்புத் தண்ணீரை விட்டுக் கொப்புளிக்கவேண்டும்.

ஜனங்கள் நிறைந்திருக்கும் அறைக்குள் போகக்கூடாது. கூட்டங்களில் சேராமல் விலகியிருக்கவேண்டும்.

எவருக்காகிலும் ஜுரமாவது தும்மலாவது கண்டால், அவர் உடனே ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும்; அல்லது வீட்டுக்குப்போய்ப் படுத்துக்கொண்டு உடம்பைச் சூடாக வைத்திருந்து, கூடுமானால் வைத்தியர் ஒருவரை வரவழைக்கவேண்டும். காலியாயிருக்கும் அறை கிடைக்குமானால் அதில் படுத்துக்கொள்ளவேண்டும். அந்தப்படி கிடைக்காவிட்டால், அறையின் மற்ற பாகத்துக்கும் படுக்கைக்கும் மத்தியில் மறைப்பு வைக்கவேண்டும். மூக்கில் வடியும் சளியைத் துடைப்பதற்காகக் கைக்குட்டைகளை உபயோகிக்கும்பட்சத்தில் அவைகளைத் தண்ணீரில் போட்டு வேகவைக்கவேண்டும். துணிகளையாவது காகிதத்தையாவது உபயோகித்தால் அவைகளைக்கொளுத்திவிடவேண்டும்.

பூர்த்தியாய் சொஸ்தமாகும்வரையில் மறுபடியும் வேலைக்குப் போகக்கூடாது. அந்தப்படி போவது இதர ஜனங்களுக்கு அபாயத்தை விளைப்பதாகும். மேலும், அதிசீக்கிரத்தில் வேலைசெய்யத் தொடங்கினால், வேறே வியாதிகளும் காணக்கூடும். ஜுரம் நின்று ஏழு தினம் ஆகும் வரையில் கூட்டங்களுக்கும் வேடிக்கைகள் பார்ப்பதற்கும் போகக்கூடாது. இந்த ஜுரம் கண்டவர் படுத்துக்கொண்டிருந்த அறைக்குள் வெயில் காயும்படிச் செய்யவேண்டும்.

இன்ப்ளுயென்ஸா ஜுரம் கண்டிருக்கும் ஜனங்களைப் போய்ப் பார்க்கக்கூடாது. ஒருவரோடொருவர் நெருங்கியிருப்பதனாலேயே இந்த வியாதி அனேகமாய் ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவுகிறதென்பதை மறக்கக்கூடாது. வெளிக்காற்றிலிருப்பதும் அறைகளில் காற்று தாராளமாய் வீசும்படிச் செய்வதுமே இந்த ஜுரத்தைத் தடுப்பதற்குச் சிறந்த உபாயங்களென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

பப்ளிஸிடி போர்ட்.

---

(4)

## அதிக விலைகள்.

சில அறியாத ஜனங்கள், ஜர்மானியரோடு இன்னும் சண்டை முடியவில்லையென்றும், சண்டையில் ஜர்மானியர்தான் வெற்றி யடைந்தார்களென்றும், ஆகையினாலேதான் இந்தியாவில் அகவிலை அதிகமாயிருக்கிறதென்றும் நினைக்கிறார்கள்.



2. உண்மையில் இது முற்றும் பிசகு, ஜூன்மீ 28உ துணையரசர்களால் ஏற்படுத்தப்பட்ட சமாதான நிபந்தனைகளுக்கு ஜர்மானியர்கள் உடன்பட்டு, அந்தச் சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டார்களென்று, கல்வியறிவுள்ள எல்லாருக்கும் தெரியும்.

3. அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி, ஜர்மானியர் அதிக பூமியையும், மிகுந்த பணத்தையும், அநேக சண்டைக் கப்பல்களையும் இழந்தார்கள். அவர்கள் மிகவும் கொஞ்சமான சேனையையும் சில சண்டைக் கப்பல்களையும்மட்டுந்தான் வைத்திருக்கலாம். அவர்களுடைய குடியேற்ற நாடுகளையெல்லாம் இழந்தார்கள். ஜர்மானியர்களுக்குண்டாகிய நஷ்டமெல்லாம் துணையரசர்களுக்கு இலாபமாய்க் கிடைத்தது. சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஜர்மானியர்கள் சரிவர நிறைவேற்றுவதற்குப் பிணையாக, ஜர்மானியில் மிகவும் செழிப்பான பூமிகளையும், அதிசெல்வம் நிறைந்த பட்டணங்களையும் துணையரசர்கள் நாளைக்கும் தங்கள்வசம் வைத்திருக்கிறார்கள்.

4. ஆகையினாலே, ஜர்மானியரோடு நடந்த சண்டை முடிவு பெற்றதென்பதையும் ஜர்மானியர் முற்றும் தோல்வியடைந்தார்கள் என்பதையும் பற்றி சந்தேகப்படுவதற்கு இடமேயில்லை. துணையரசர்கள் என்ன நிபந்தனைகளைச்சொன்னார்களோ அவைகளை ஜர்மானியர்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்யும் திறமை துணையரசர்களுக்கிருந்தது. ஜர்மானியரே இதை மறுத்துச்சொல்லவில்லை. ஆனால் இதற்கு மாறாக, ஜர்மானியர்கள் ஒப்புக்கொள்ளும்படி சேர்க்க சமாதான நிபந்தனைகள், மிகவும் கடுமையானவைகளென்று அவர்களே முறையிடுகிறார்கள்.

5. ஆனால், துணையரசர்கள் வெற்றியடைந்திருந்தால், ஏன் எல்லா சாமான்களின் விலையும் அவ்வளவு அதிகமாயிருக்கிறது?

6. இதற்குக் காரணம், ஐந்து வருஷங்களாய் நடந்த சண்டையால் உண்டான சேதங்களை ஒருநாளையில் சீர்படுத்த முடியாதென்பதே. நாலு, ஐந்து வருஷங்களாக, நிலத்தையுழுது தானியப்பயிரிடவேண்டிய மனிதர்களெல்லாம் போர்ச்சேவகர்களாகச் சண்டைசெய்தும், யந்திரங்களைச் செய்வதிலும் துணிகளை நெய்வதிலும் இன்னும் மற்ற உபயோகமுள்ள சாமான்களைச் செய்வதிலும் முயற்சியாயிருக்க வேண்டியவர்கள், பீரங்கிகளையும் சண்டைக்குவேண்டிய எல்லாவித ஆயுதங்களையும் செய்து வந்தார்கள். அதே காலத்தில், சேனைகள் பட்டணங்களையும், கிராமங்களையும், அங்குள்ள சாலைகளையும் தொழிற்சாலைகளையும் அவற்றிலுள்ள யந்திரங்களையும் அழித்து நாசமாக்கிவந்தார்கள். அச்சேனைகள், பயிரிடும் நிலத்தைப் பாழாக்கியும், இருப்புப்பாதைகளையும் அவற்றிலோடும் வண்டிகளையும் நாசமாக்கியும் வந்தார்கள். கடலிலே அநேகம் கப்பல்கள் முழுகச்செய்யப்பட்டன. இதின் பயனாக, சமாதான காலத்தில் ஏராளமாயிருந்துவந்த தானியம், துணி முதலிய மற்றும் மனிதர்களுக்குவேண்டிய அவசியமான சாமான்களும் குறைந்துவிட்டன. அச்சாமான்களை வைத்திருந்தவர்கள், அதிகவிலை கிடைத்தாலல்லது அவைகளை விற்கச் சம்மதப்படவில்லை.

7. இதே காலத்தில், எல்லா தேசங்களிலுமுள்ள இராஜாங்கத்தார்களும், சண்டைசெய்யும் போர்வீரர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும், அவர்கள் சண்டையில் உபயோகப்படுத்தின பீரங்கிகளையும் மற்றுமுள்ள சாமான்களையும் வாங்குவதற்கும், பொன் வெள்ளி நாணயங்கள்; கடிதாசி நோட்டுகள் முதலிய புதிய நாணயத்தை வெளியிட்டுவந்திருக்கிறார்கள். இவ்வாறு, உலகமுழுதும், பொன் வெள்ளி நாணயங்களும், கடிதாசி நோட்டுகளும் ஏராளமாய் விருத்தியாகிவிட்டது; மனிதர் ஜீவனத்திற்கு வேண்டிய முக்கியமான சாமான்களும் முன்னிலும் அதிக குறைவு ஆகிவிட்டது.

8. ஆகையால்தான் மனிதர்கள் ஜீவிப்பதற்கு மிகவும் அவசியமாயுள்ள சாமான்களெல்லாம் உலகமுழுதும் அதிக விலையாகிவிட்டன.

9. எல்லா சாமான்களின் விலையும் அதிகமானபடியால், வேலைக்காரர்கள் கஷ்டமில்லாது ஜீவிக்கக்கூடியதாய் அவர்களுக்கு அதிகச்சம்பளம் கொடுக்கவேண்டியதாயிற்று. இப்பொழுது, ஐரோப்பாவிலும் வேலையாட்களின் கூலி அதிகமாக்கப் பட்டபடியால், அத்தேசங்களில் சாமான்களைச்செய்யும் செலவு அதிகமாய்விட்டது. ஐரோப்பாவில் செய்யப்படும் சாமான்களின் விலை, சீக்கிரத்தில் குறையாது.

10. மேலும், இப்பொழுது சமாதானம் உண்டாகிவிட்டது. சுட்டெரிக்கப்பட்ட பட்டணங்களையும் கிராமங்களையும் திரும்பவும் கட்டுவதற்கும், நாசமாக்கப்பட்ட சாலைகளையும், தொழிற்சாலைகளையும், உடைத்து நாசமாக்கப்பட்ட இருப்புப்பாதைகளையும் இருப்புப்பாதை யந்திரங்களையும் கப்பல்களையும் பழுதுபார்க்கவும் திரும்பிச்செய்யவும் ஐரோப்பாவில் அதிக வேலைக்காரர்களும் தளவாடங்களும் அநேக யந்திரங்களும் தேவையாயிருக்கிறது. ஆகையால், ஆங்கிலேய தேசத்திலிருந்தும் மற்றதேசங்களிலிருந்தும் கொண்டு வரப்பட்ட துணி, இரும்பு, யந்திரம் முதலிய மற்ற சாமான்களின் விலை இன்னும் அதிகமாயிருக்கிறது. அது சீக்கிரம் குறைய ஏதுவில்லை.

11. இந்தியாவில், ஐரோப்பாவிலுண்டானதுபோல சண்டையால் அவ்வளவு கெடுதியுண்டாகவில்லை. இந்தியாவில் உண்டாக்கப்படும் சாமான்களின் விலை முதலில் அதிகமாகவில்லை. ஆனால் சென்றவருஷம் சரியாய் விளையவில்லை. அதினால், ஆகாரத்தானியங்கள் குறைந்துபோய்விட்டன. இவ்வாறு குறைந்ததினால், அரிசி முதலிய சாப்பாட்டுத் தானியங்களின் விலை அதிகமாய்விட்டது. இது ஏழைஜனங்களுக்கு அதிகக் கஷ்டத்தை உண்டுபண்ணிற்று. சண்டை இன்னும் கொஞ்சநாளைக்கு நடந்திருந்தால், இந்தக் கஷ்டங்கள் இன்னும் அதிகமாகவேயிருந்திருக்கும். ஆனால், சமாதானம் உண்டாயிருந்தாலுங்கூட, விளைவில்லாததினால் உண்டான கஷ்டங்களை முற்றும் தடுப்பது கூடாதகாரியம்.

12. சாப்பாட்டுத் தானியங்கள் குறைந்துபோனதற்குக் காரணம், ஏராளமான தானியத்தை, மெஸோப்பொட்டோமியாவுக்கும் மற்று வேறு பிறதேசங்களுக்கும் ஏற்றுமதிசெய்கிறதினால்தானென்று சில ஜனங்கள் நினைக்கிறார்கள். அது அப்படியல்ல. இதற்கு முக்கியமான காரணம் நல்லவிளைவு இல்லாததுதான். முந்தின வருஷங்களில், சாப்பாட்டுத்தானியங்களில் பெரும்பாகம் இந்தியாவிலிருந்து பிற தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டன. இந்த வருஷம் கூடியவரையிலும் எளியவர்களுக்கு உதவிசெய்யும் பொருட்டே, இராஜாங்கத்தார், இந்தியாவிலிருந்து சாதாரணமாய் ஏற்றுமதியாகும் சாப்பாட்டுத்தானியங்களின் பெரும்பாகத்தை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று தடுத்துவிட்டார்கள். பர்மாவிலிருந்து ஏராளமான அரிசியையும், ஆஸ்திரேலியாவிலிருந்து மிகுதியான கோதுமையையும் வரவழைக்கிறார்கள். இந்த சென்னை இராஜதானியில், வேறு தேசங்களுக்காவது அல்லது இந்தியாவின் வேறுபாகங்களுக்காவது அரிசி ஏற்றுமதி செய்யக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. சில சமயங்களில், சிலர் இந்த விதிக்கு விரோதமாய் அரிசியைப் பிற தேசங்களுக்கு அனுப்ப முயர்சிக்கலாம். ஆனால், இவ்வாறு செய்வதில் ஏராளமான அரிசி அனுப்ப முடியாது. ஏனென்றால் சட்டத்துக்கு விரோதமாய், அரிசியை ஏற்றுமதிசெய்தால் அவர்களுக்கு அதினால் கஷ்டமுண்டாகுமென்பது எல்லா ஜனங்களுக்கும் தெரியும். ஆகையால், இவ்விதமாய் அரிசி அனுப்புவதை, இராஜாங்க அதிகாரிகளிடம் தெரிவிக்க அவர்கள் சித்தமாயிருப்பார்கள். அவர்கள் உதவியைக்கொண்டு, அதிகாரிகள், அவ்விதம் அரிசி ஏற்றுவதைத் தடுத்துவிடக்கூடும்.



13. இவ்வருஷம், சாப்பாட்டுத் தானியங்கள் அதிக விலையாயிருப்பதற்கு முக்கியமான காரணம் நல்லவிளைவு இல்லாததுதான். ஆனால், இந்த இராஜதானியின் எல்லா ஜில்லாக்களிலும், அடுத்த வருஷத்திற்கு நல்ல விளைவு உண்டாகக்கூடியதாயிருக்கிறது. ஆகையால், சாப்பாடுத்தானியங்கள் இந்த வருஷம் அறுப்புக்குப் பின்னால் ஏராளமாய்க் கிடைக்கக்கூடும். அதினால், தானியவிலையும் கூடியசீக்கிரத்தில் குறையுமென்று நாம் நம்பலாம்.

14. தானியங்களின் விலை அதிகமாய் இருப்பதால் ஜனங்கள் அதிகமாய்க் கஷ்டப்படுகிறார்கள் என்பது உண்மையே. ஆனால், இராஜாங்கத்தார்கள், இந்த இராஜதானியிலிருந்து அரிசி யேற்றுமதிசெய்வதைத் தடுக்காமலும், பர்மாவிலிருந்து அரிசி வரவழைத்து, அதைக் குறைந்த விலைக்கு விற்கும்படி ஏற்பாடு செய்யாமலுமிருந்தால் ஜனங்களின் கஷ்டம் இன்னும் அதிகப்பட்டிருக்குமென்பதை நாம் ஞாபகத்தில் வைப்பது நியாயமாயிருக்கிறது. ஆறுமாதங்களுக்கு முந்தி மண்ணெண்ணெய் கிடைப்பது மிகவும் கஷ்டமாயிருந்ததென்பதையும், ஆனால் இப்பொழுது மண்ணெண்ணெய் சுலபமாய்க் கிடைக்கிறதென்பதையும் நாம் ஞாபகத்தில் வைப்பதும் நியாயம். இதல்லாமலும், விலையதிகப்பட்டிருப்பதால், கஷ்டப்படுகிறவர்கள் இந்தியாவில்மட்டுமல்ல என்பதையும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். உலகத்திலுள்ள எல்லா தேசத்தார்களும் கஷ்டப்படுகிறார்கள். சில தேசங்களில் மிகவும் அதிகமாய்க் கஷ்டப்படுகிறார்கள்.

பப்ளிஸிடி போர்ட்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஒன்பதாவது

## ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம்.

ஏற்கெனவே விஜ்ஞாபித்துக்கொண்டிருக்கிற ப்ரகாரம், இவ்வருஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம், வருகிற மார்கழி மாஸம் 13, 14, 15, 16-ம் தேதிகளில் திருவஹீந்த்ரபுரத்தில் நடைபெறும். மஹாமஹோபாத்யாயர் ஸ்ரீ. உப. கபிஸ்தலம் தேஶிகாசார்ய ஸ்வாமி அந்த ஸதஸ்ஸின் அக்ராஸநாதிபத்யத்தைக் க்ருபையுடன் திருவுள்ளம்பற்றி இருக்கிறார். யதாபூர்வம் பலவிடங்களிலிருந்து பல வித்வான்கள் எழுந்தருளி உபந்யாஸத்தைச் செய்தருளுவார்கள். இது விஷயத்தில் குதூஹலிகளாக இருக்கும் ஸகல ஆஸ்திகர்களும் அக்காலத்தில், அவ்விடத்திற்கு எழுந்தருளி, ஸ்ரீ தேவநாதன் அப்பொழுது கண்டருளும் திவ்யோத்ஸவத்தையும் அவனது விபூதி விசேஷமாயுள்ள ஸ்ரீ பாகவத ஸதஸ்ஸின் ஸம்ருத்தியையும் ஆத்ருப்தி அநுபவித்து ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்களை தந்யர்களாக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

வித்வத் ஸதஸ்ஸின் அபிவ்ருத்தியைப்பற்றி ஏற்கெனவே தீபிகாத்வாரா விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறோம். பக்தர்களாக இருக்கும் ஆஸ்திகர்கள் அதற்கு உசிதமான த்ரவ்ய ஸஹாயத்தைச் செய்து அதை நன்றாக நடப்பித்துவைக்கவேணும். நமது ஸித்தாந்த ஸம்பத்துகளான க்ரந்தங்களை அநந்ய ப்ரயோஜநமாக அப்யஸித்து அவைகளுக்கு லோபம் வராதபடி ஸம்ரக்ஷித்துவரும் நமது வைதிக வித்வான்களை நாம் அநாதரித்துவிட்டால், நம்மால் எதிர்பார்க்கப்படும் ஶ்ரேயஸ் எவ்விதத்தில் ஸித்திக்குமென்பது நமக்கு புலப்படவில்லை. பலவிடங்களில் இம்மாதிரி பல ஸதஸ்ஸுகள் நடைபெற்று, வைதிக வைதுஷ்யம் கிஞ்சித் புரஸ்கரிக்கப்பட்டால், இன்னும் ஸ்வல்ப காலத்திற்காவது அது நிலைபெற்று நிற்கலாம். தநவான்கள் அல்பமாகவும், தநமில்லாத நாம் ஆயிரக்கணக்காக இருக்கிறோம். அதிக தநமில்லாமற்போனாலும், நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு ரூபாய் இதற்காகக் கொடுத்து வந்தால், நமது ஸதஸ் எவ்வித குறைவுமில்லாமல் பூர்த்திபெறும். தநவான்களுடைய பஹிர் விதர்ஜனைக்கு அஞ்ஜலி செய்துவிட்டு நாம் ஸுகமாக இருக்கலாம். அவ்விதமாக பாகவதர்கள் அநுக்ரஹிக்க வேணுமென்று ப்ராரத்திக்கிறோம்.

ஸ்ரீ. வாஸுதேவன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 10 ] ஸித்தார்த்தி௵ கார்த்திகை மீ [ ஸஞ்சிகை 2.

த்ரிபுவனகமனம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததானே - வபுரலககுலாவ்ருதானநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽனவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

‘ஸுராபகாதீரஜுஷாம் [illegible] விஜயாமாஹாத்ம்ய [illegible] நாவ்யாதாயாம் । வஸந்திகாஶ்யாமிவ வஸதாஶ்யாம் [illegible] ஷாம் நரகாவகாஶ: ॥’ என்று மஹாகவி வேங்கடாசார்யர் ப்ரசாதித்ததாக நாம் கேட்டிருக்கின்றோம். கங்கையினுடைய திவ்ய தீர்த்தங்களாலும், ரமணீய வர்ணங்களுடன்கூடிய பக்ஷி விசேஷங்களுடைய காந்தியால் மநோஜ்ஞமான உபவநங்களாலும் சூழப்பட்ட காஶீ நகரத்தில் வஸிப்பவர்க்கு மறுபடி நரகவாஸமில்லையென்றும், மத்யபாந பசுமாரணநிதாருண கர்மயுக்தர்களாயும், விப்ரர்களுடைய தேஜஸ்ஸை ஸதா நாஶம் செய்பவர்களாயும் இருக்கும் யவநர்களால் வ்யாப்தமான வங்கவாசியில் குடியிருப்பவர்க்கு முன்னமே ப்ராப்தமாய் விட்டபடியால் புநரபி நரகவாஸத்துக்கு இடமில்லை யென்றும் ஶ்லோக தாத்பர்யம். இவ்வண்ணம் நம் பூர்விகர்கள் மத்யபாந மாம்ஸ போஜநாதிகள்

விப்ரத்வேஷத்தைத் தானாகவே உண்டாக்கிவிடுமென்று எண்ணினார்கள். அப்போது சுருட்டு கிடையாது. இல்லாவிட்டால் அதையும் விப்ரத்வேஷ காரணங்களில் சேர்த்து எடுத்திருப்பார்கள். 'അന്നമയം ഹി സോമ്യ മനഃ' என்று ஶ்ருதி சொல்லிற்று. ஒருவன் புஜிக்கும் ஆஹாரங்கட்கு ஏற்றபடியே அவனுடைய மாநஸம் பரிணமிக்கின்றது. பாஶ்சாத்யரும் மாம்ஸபக்ஷகங்களான ம்ருக பக்ஷிஜாதிகளை Beasts and Birds of prey என்று சொல்லி, அவற்றினுடைய நைஸர்க்கிக க்ரௌர்யதையை ஒப்புக்கொண்டார்கள். தழை புல் முதலானவற்றை மேயும் அஜங்கள், அஶ்வங்கள், பசுக்கள் முதலான ம்ருகங்கள் ஜந்து ஹிம்ஸையில் ரமிப்பதில்லை. 'ആഹാരശുദ്ധൌ സത്ത്വശുദ്ധിഃ' எனும் ஶ்ருதியும், ஸாத்விகாஹாரத்தால் சித்தசுத்தியைச் சொல்லி, 'സത്ത്വശുദ്ധൌ ധ്രുവാ സ്മൃതിഃ' என்று, சித்தசுத்தி யுண்டானால்தான் பகவானுடைய உபாஸநம் கைகூடுமென்றது. பாகவத ஸம்ப்ரதாயம் வைதிக கர்மங்களையும் பசுஹிம்ஸையை விலக்கிச் செய்யும்படியாக விதித்தது. ஔவையும் கோன்பென்பது கொன்றுதின்னாமை என்றனள்.

இந்த விஷயம் இப்படியிருக்க, நூதந ஸம்ஸர்க்கங்களால் நூதந ருசிகளையும், அவற்றிற்கேற்றபடியே சித்த ப்ரவ்ருத்திகளையும் ஸம்பாதித்துக்கொண்ட சிலர், நவ ஹிந்துமத மென்று ஒன்றைத் தம்யுக்தியால் கல்பிக்க எண்ணுகின்றார்கள். அப்படி எண்ணும் போதும், தேவாலயங்களில் கர்ப்ப க்ருஹங்கள் மத்யபாந மாம்ஸ போஜநாதிகளில் ரமிப்பவர்களுடைய ப்ரவேசத்தால் தூஷிக்கப் படத்தகாதவை யென்றும், இப்படிப்பட்ட நடத்தையுள்ளவர்கள் ஜாதிமாத்ர ப்ராஹ்மண்யத்தைச் சுமந்தாலும், அந்த நடத்தையுடன்கூடிய மற்றோரை யொத்துத் தேவாலயங்களில் தூரத்தில் நிற்கவேண்டியவர்கள் என்றும் ஓர் வ்யவஸ்தையை ஒருவர் அபேக்ஷித்தார். இவ்வபிப்ராயத்தை மற்றொருவர் பொறுத்தாரில்லை. அவர் மதுமாம்ஸ விஷயத்தில் பக்ஷபாதம் உள்ளவர்போலும்!! அவர் கர்ப்ப க்ருஹங்களில் மதுமாம்ஸங்களை ஸேவிப்பவர்களுடைய ஸாந்நித்யமே பகவத் ஸாந்நித்யம் ஏற்படுவதற்கு ஒரு ஸம்ஸ்கார விஶேஷமென்று யோசிப்பவர்போலும்!! தத்கால தேவாலயங்கள் ஆகமமெனப்பட்ட சில ப்ரமாண க்ரந்தங்களை யநுஸரித்து ஸ்தாபிக்கப்பட்டன. அவற்றை நிராகரித்துப் புதிய ஏற்பாடுகளைச் செய்வதைக்காட்டிலும், நவஸம்ப்ரதாயத்தை உண்டாக்கினவர்கள் நவஸம்ஹிதைகளைக் கல்பித்து, அவற்றிற்குத் தக்கபடியே நூதநாலயங்களைக் கட்டிக்கொண்டு, ஸர்வபாந ஸர்வ பக்ஷக ஸமர்த்தர்களால் அவ்வாலய ப்ரதிஷ்டைகள் செய்துகொள்வது யுக்தமாயிருக்கின்றது.



மஹாத்மாவெனும் பெயரினால் சிலரால் பூஜிக்கப்பட்ட 'கந்தி' யெனும் பரோபகாரி இந்தத் தக்ஷிண தேசவாஸிகளைக் கண்ணுற்று, இந்திய நாட்டின் இதர தேசவாஸிகளைப் பார்க்கிலும் தாக்ஷிணாத்யர்கள் நம்முடைய பூர்வகால ஸ்மரணங்களை விஶேஷித்து ரக்ஷித்துவந்தார்களென்றும், அவர்களுடைய பாஹ்ய வேஷங்கள் அந்த யோசனையை நன்கு த்ருடப்படுத்துகின்றனவென்றும், அவர்களுடைய தர்ஶநம் பூர்வ ருஷிகளை ஸ்மரிக்கச்செய்கின்றதென்றும் ப்ரஸ்தாபித்தனராம்.

'ആകാരസദൃശപ്രജ്ഞഃ പ്രജ്ഞയാ സദൃശാഗമഃ । ആഗമൈഃ സദൃശാരംഭഃ ആരംഭസദൃശോദയഃ ॥' அதாவது, ஆகாரத்துக்குத் தக்கபடி மேதையும், மேதைக்குப் பொருந்தியபடி ஶாஸ்த்ர பரிசயமும், அதற்குத் தக்கபடி அநுஷ்டாநமும், அதற்கேற்ற பலஸித்தியும், திலீபராஜனிடம் ப்ரகாசித்தன வென்று மஹாகவி காளிதாஸன் மொழிந்தார். அவ்வண்ணமே, 'தாக்ஷிணாத்யர் பாஹ்யவேஷத்துக் கொத்தபடியே சித்த வ்ருத்தியையும் உடையவர்களோ?' என்று கந்தி மஹாத்மா ஸந்தேஹித்தார். பாஹ்யவேஷம் இத்தேஶத்தார்க்கு பகு வேகத்துடன் மாறிக் கொண்டு வருகின்றது; சித்த வ்ருத்தியைப்பற்றி ஶங்கிக்கும் ஶ்ரமம் அவர்க்கு ஶீகரமே அற்றுப்போம் என்று நாம் யோசிக்கின்றோம்.

விபரீதமாயும், ஸதாசாரவர்ஜிதமாயுமுள்ள புத்தி விகாஸத்தை ராவணனிடம் கண்டு, பிராட்டி, "ஸதுக்களை நீ அநுவர்த்திப்ப

இல்லையோ?" என்று அவனைக் கேட்டாள். தென்னிலங்கை வாஸிகள் நடுவில் ஸத்துக்களுடைய இருப்பு எவ்வண்ணம் நேரும் என்று தோன்றி, "இங்கே ஸத்துக்கள் இல்லையோ?" என்றும் பிராட்டி கேட்கும்படியிருந்தது. அந்த ஸ்திதியானது, பூர்வம் லங்காராஜ்யத்துக்கு உள்ளடங்கிநின்றதும், ஜநஸ்தாநமென்று பூர்வ ப்ரஸித்தியுள்ளதுமான த்ராவிட ப்ரதேசத்துக்கு இப்போது நேரிட்டிருக்கின்றது. ஆத்மகுண பூர்த்தியற்ற ஆசார்யர்கள், ப்ரஹ்ம த்விட்டுக்களான ஶிஷ்யர்கள், '[illegible] ॥' என்கிற க்ரமத்தில் காஷாயதாரிகள், ஸ்வகர்மத்யாக ஶீலராயும் கர்மாந்தராவலம்பிகளுமான ப்ராஹ்மணர்கள், ப்ரஹ்மத்வேஷத்தில் ரமித்த இதரர்கள், இவர்களைப் பஹுமாநிக்கும் உபபக்ஷர்கள், இப்படிப்பட்டவர் மத்யே ஸத்துக்கள் க்வசித் க்வசித் மறைந்து வஸித்தபோதிலும், அவர்களைத் தேடிப் பிடிப்பது ஸாத்யமாக இல்லை.

த்ராவிடம் ஜநஸ்தாநமாக ப்ரகாசிக்கப்போகின்றது; அதாவது, புண்யஜந வ்யாப்தமாகும் கர்ம ஶூத்ரர்களும் ப்ராஹ்மண ஜந்மமாத்ரத்தால் த்வேஷிக்கப்பட்டால், ப்ராஹ்மண்யம் இந்நாட்டில் அழிந்துபோக நாள்களை எண்ணவேண்டும். இக்காலத்தில் யஶஸ் ஸம்பாதிக்க வழி ஸுலபம். வர்ணாஶ்ரமங்களைத் தூஷித்தல், அவற்றிற்குரிய கர்மங்களின் ஸ்வரூபத்யாகம், நியமமற்ற பாநங்கள், அபோஜ்ய போஜநங்கள், ஸர்வத்ர ஸஹபோஜநம், ஸர்வத்ர விவாஹாதி ஸம்பந்தம், விதவாவிவாஹம், தேவாலய பரித்யாகம், தேசாந்தரரைப்போல் தேஹாலங்கரணம், இவ்வண்ணம் ஸர்வ மர்யாதைகளையும் அழித்துக்கொண்டு, யதாருசி நடந்துகொண்டு யஶஸ்வியாக இருப்பதைக்காட்டிலும், பல கட்டுப்பாடுகளைக் காப்பாற்றிக்கொண்டு கர்ம நியமங்களிலும் ஆஹாராதி நியமங்களிலும் அகப்பட்டுக்கொண்டு ஸங்கடப்படுவது மதியீனமென்று நினைக்கப்படுகின்றது.

தேசாந்தரங்களில் ஜநங்கள் பல வகுப்பினர்களாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். பரம்பரையாகப் பூமியில் பெருத்தவர்கள் ப்ர-



புக்களெனப்பட்டார்கள். வர்த்தகம், கைத்தொழில், வ்யவஸாயம், உத்யோகம் முதலான வ்ருத்திகளால் பணம்பெற்றவர்கள் மத்யம வகுப்பினராக எண்ணப்பட்டனர். சரீர ஶ்ரமத்தால் ஜீவநம் செய்பவர்கள் உழைப்பாளிகள் அல்லது கூலிக்காரர் எனப்பட்டார்கள். அநியத வ்ருத்தியில் இழிந்த ரிக்தர்களும் அங்கே உண்டு. இந்த வகுப்புக்கள் பாரம்பர்யமெனப்பட்ட விஶேஷத்தை முற்றிலும் ஒதுக்கவில்லை. ஒருவனுடைய பொருளும் வ்ருத்தியும் அவனுடைய ஸந்ததியாரைச் சேர்வது லோகஸம்மதம். ஆனால் தேசாந்தர வரம்புகள் உபபத்தியை அநுஸரித்து உண்டாயின. நம் தேசத்திலோ உபபத்தி யோசிக்கப்படாமல் கேவல வ்ருத்திகள் ஜநங்களை விபஜித்தன. பாரம்பராகதங்களான வ்ருத்திகளில் ஜநங்கள் நிலைத்தார்களாகில், காலக்ரமத்தில் ஜாதியால் பிரிக்கப்படுகின்றார்கள். தேசாந்தர க்ரமங்கள் த்வேஷத்தையும் பொறாமையையும் வ்ருத்திசெய்கின்றன. நம் தேசத்தின் ஏற்பாடு அவற்றை ஒழிக்கவென்றே உண்டாயது. எங்கு நமது ஏற்பாடுகள் தேசாந்தராசாரங்களினின்று பேதிக்கின்றனவோ, அந்த ஒரே ஹேதுவால் அவை த்யஜிக்கத்தக்கவை யென்று சிலருடைய அத்யவஸாயம்.

பல ஜந்ம ப்ராஹ்மணர்களும் இதரர்களும் திரை கடலோடித் திரவியம் தேட நினைத்து, மெஸபொடேமியா வெனும் துருக்க நாட்டுக்குச் சென்றார்கள். அங்கிருந்து ஒரு அநார்யன் வருந்தி எழுதுகின்றான். அந்த நாட்டில் அவர்களுடைய ப்ரதம ப்ரவேச ஸமயத்தில் ஜாதிவரம்பின்றி ஸஹபோஜநமும், மத்யபாநமும், மாம்ஸ பக்ஷணமும் அநுஷ்டிக்கப்பட்டு வந்தனவாம். பிற்காலங்களில ஜந்ம ப்ராஹ்மணர் ஸஹபோஜந ஸர்வபக்ஷண நிரஸநார்த்தமாக ப்ரத்யேக நிவேஶநங்களை அபேக்ஷிக்கின்றனராம். அந்த அநார்ய ஶிரோமணி இப்படிப்பட்ட அந்யாயத்தை ஸஹிக்கமுடியாமல், ஜந்ம ப்ராஹ்மணர்களுடைய நைஸர்கிக க்ரௌர்யத்தை வெறுக்கின்றான். அவர்கள் ஸ்வஸ்த்ரீகளுடன் பாக்டாட் தேசத்துக்குச் சென்றார்களாகில், அவர்களுடைய க்ரூரகர்மம் வேறு ப்ரகாரமாகவும் ப்ரகாசிக்கும்போலும்!! ப்ரஹ்மத்வேஷம் ஸர்வ ஸாத-

கமாகப் பரிணமிக்கின்ற காலம் இது. ஒரு ப்ரயோஜநத்தை உத்தேசித்துப் பாராட்டப்பட்டுவந்து, காலக்ரமத்தில் பலர்க்கு அது ஸஹஜமான சித்த விகாரமாக முடியுமென்று எண்ணுகின்றோம்.

மைஸூர் கலா ஸங்கத்தில் 'பெண்களுக்கு வித்யாப்யாஸம் தேசபாஷையின் மூலமாக நடத்தப்படவேண்டுமோ?' எனும் விஷயம் தர்க்கிக்கப்பட்டது. ஏழுபெயர் அந்த யோசனையை அங்கீகரித்தனர். முப்பது பெயர்க்குமேல் அதை விரோதித்தனர். அவர்க்குள் பாஶ்சாத்ய வித்யாபரிசயமுள்ள ஒரு ப்ராஹ்மண ஸ்த்ரீயும் சேர்ந்தனள். வித்யைக்குப் பாஷை இல்லை. பௌதிக ஶாஸ்த்ரங்கள் அந்ய தேசங்களில் ஸ்வதேச பாஷைகள் மூலமாக அப்யஸிக்கப்படுகின்றன. தேசாந்தர பாஷை ஸர்வவித்யா பரிசயத்துக்கும் உபகரணமாய் நிற்பது நமது தேசத்துக்குத் தனிமையில் ஏற்பட்ட நிலை. இது தேச ஜநங்களுடைய பாரதந்த்ரிய பலம். மைஸூர் ஸ்வதேச ராஜாங்கமுடையதாயினும், பாரதந்த்ர்ய ஸ்திதியை அது அதிக்ரமிக்கவில்லை. ஹைதராபாக்கத்தில் ஒரு நூதந கலாஸங்கம் ஸ்தாபிக்கப்படுகின்றது. அங்கு ராஜாங்க பாஷை உர்டு பாஷை. வித்யாப்யாஸம் அந்தப் பாஷாத்வாரா நடத்தப்படும். அவ்விடம் ஆங்கிலேய பாஷாவித்யாப்யாஸம் அநிவார்யமென்று யோசிக்கப்பட்வில்லை. மைஸூரைக்காட்டிலும் ஹைதராபாத் தேசம் ஸ்வாதந்த்ர்யாதிக்யத்தை உடையதோ என்பது நமக்குப் புலப்படவில்லை. ஆர்ய த்ராவிட ஜாதியர்க்கும் மஹம்மதியர்க்கும் உள்ளபேதம் தான் மேலே விவரித்த வ்யத்யாஸ காரணமோ என்பதும் தெரியவில்லை. மைஸூரில் ஸ்த்ரீவித்யையும் தேசாந்தர பாஷாத்வாரா நடத்தவேண்டுமென்று தீர்மானித்துவிட்டார்கள். தேசாபிமாநமென்றால், தேசபாஷையிலும், ஜநங்களிலும், வித்யையிலும், மதங்களிலும், ஆசாரங்களிலும், அபிமாநமென்று கொள்ளவேண்டும்; தேசத்தினுடைய மண்ணினிடம் அபிமாநம் என்றால் பொருந்தாது. நம்மிடம் இல்லாத பொருளை தேசாந்தரஸ்தர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். இருப்பதைத் துறத்தல் அபிமாநமென்று யார் சொல்வார்? தேசாந்தர பாஷா பரிசயம் புருஷர்க்கு நிர்ப்பந்தத்தால் ஏற்பட்டது. அதுவே ஜீவ



நோபாயமென்று கருதி, நம்மவர் தம் பிள்ளைகளை அந்த விஷயத்தில் நிர்ப்பந்திக்கின்றார்கள். ஸ்த்ரீகளுக்கு அந்த நிர்ப்பந்தம் வேண்டாம். ஆனால் ஒரு பிராஹ்மண ஸ்த்ரீ இவ்வித நிர்ப்பந்தத்தை உகப்பளேன்? ஜந்மாந்தரவாஸனையும் ஸம்ஸர்க்க குணதோஷங்களும் அந்த விஷயத்தில் காரணங்களாக ஊஹிக்கப்படுகின்றன. ஸம்ஸர்க்கங்களும் ஜந்மாந்தர வாஸனைக்கு இணங்க ஏற்படுமென்பர். இப்படி, தூஷித சித்தர்கள் எந்தச் சரீரத்தைச் சுமந்தால் என்ன? அது அகிஞ்சித்கரம்.

ஸமீபகாலத்தில் ஸர்க்கார் உத்யோகத்தில் விசேஷ பதவியை அடைந்த சிலர், ஹிந்து மதமென்பது எப்படியிருந்தபோதிலும், வர்ணபேதங்களும் வர்ணாஶ்ரம தர்மங்களும் அபாவத்தை யடைய வேண்டியது தேசநன்மையின்பொருட்டு மிகவும் ப்ரார்த்தநீயமென்று உபந்யாஸத்தாலும், ஆமோதத்தாலும் நிஷ்கர்ஷித்தார்கள். அவர்க்குள் உபந்யஸித்தவர் தாம் ஸ்வதர்மங்கட்கு ஸ்வரூப த்யாகத்தை இன்னும் உண்டாக்கவில்லை யென்று சொன்னார். அக்ராஸநம் பெற்றவர் தியாஸபி ஸமாஜத்தைச் சேர்ந்தவர். இவர்கட்கு ஸபையார்களுடைய மர்யாதையை ஆவிஷ்கரித்தவர் நவஹிந்து ஸமாஜத்தின் ஜந்மத்தில் ப்ரயத்நப்படுபவர். காலதேச குணங்கள் வர்ணாஶ்ரம தர்மநாசத்தை அசிரேண பிறப்பிக்கும் எனும் விஷயத்தை யாம் அப்யுபகமம் செய்கின்றோம். வர்ணாஶ்ரம தர்மங்கட்கும் ஆசாரங்கட்கும் காலாநுகுணமாகப் பூர்வகாலங்களில் மாறுதல் உண்டாயினவெனும் அம்ஶத்தையும் நாம் அங்கீகரிக்கின்றோம். ஸர்வ சரீரங்கட்கும் மூலமான ப்ரக்ருதி ஒன்றே. ஆனால் அதற்கு ஸர்வத்ர குணஸாம்யம் உண்டானால் ப்ரளயம் நேரிடும். ஸர்வத்ர குணவைஷம்யம் நிலைக்கும்மட்டும் தான் ஸம்ஸாரம் ப்ரவஹிக்கும். ஸர்வத்ர பரச்சந்நனாய், ஸர்வ ஸம்ஸார ப்ரவ்ருத்திகளுக்கும் ஆஶ்ரய பூதனாய் நிற்கும் ஜீவாத்மாவும் ஸர்வதா ஸமாநாகார விஶிஷ்டனே. ஸர்வத்ர அந்தஃப்ரவிஷ்டனாய், ஸர்வ ஜநங்கட்கும் நியந்தாவாய் இருக்கும் ஈஶ்வரன் ஒருவனே. ஆயினும் பல ஜந்மாந்தர ஸம்ஸ்காரங்களாலும், பரம்பரா ஸம்பந்தத்தால் பெற்ற சரீரங்களாலும், ப்ராயேண மேற்

சொன்ன காரணங்களால் ஏற்பட்ட ஸம்ஸர்க்கங்களாலும் பேதங்கள் சரீரங்களை விடமாட்டா. இவ்வித பேதங்கள் ஆசார பேதங்களை விளைவிக்கும். ஸர்வாசார நிவ்ருத்தியால் ஸர்வ ஸாம்யம் ஏற்படமாட்டாது. ஸர்வர்க்கும் ஸ்திராஸ்தியாலும் சாஸ்தியாலும் ஸாம்யம் இருக்கமாட்டாது. ஸர்வர்க்கும் ஐஹிக ஸுகங்களும் போகங்களும் ஸமமாய் ஏற்படமாட்டா. ஸர்வர்க்கும் த்ரிகுணங்கள் ஸமமாய் ப்ரகாசிக்கமாட்டா. தர்மபேதங்களும் ஆசார பேதங்களும் அஸுபாஜகங்களாகில், வித்யாபேதம், தநபேதம், ஸுகபேதம், உபபத்திபேதம், உத்யோகபேதம், முதலானவைகளும் அஸுபாஜகங்களே. ருஷியா, ஜர்மனி முதலான நாடுகள் வர்ணாச்ரம தர்மங்களால் தூஷிக்கப்படவில்லை. 100-வருஷங்களுக்குமுன் பிராஞ்சு தேசத்தில் உண்டான அராஜகம் வர்ணாச்ரமஜந்யமன்று. நிருபாதிக ஸ்வாதந்த்ர்யத்தை யாவரும் அபேக்ஷித்தால் ராஜாங்கம் என்பது ஏற்படமாட்டாது. வர்ணாச்ரம தர்மங்கள் வைதிக ஸம்ப்ரதாயத்தை ஆச்ரயித்து உண்டாயின. ஒன்று அழிந்தால் மற்றொன்றும் அழியத்தான்வேண்டும். அத்தகைய அழிவு உண்டானபின்பு, வைதிக மதமென்பதும், வேதாந்த மதமென்பதும், ஹிந்துமதமென்பதும் ரக்ஷிக்கப்படுமென்பது மித்யை. ருஷியா தேசத்திலும் ஜர்மனியிலும் எந்தமதம் ஸம்ரக்ஷிக்கப்படுகின்றதோ அதுதான் இந்தியாவிலும் மிகுந்து நிற்கும். ஸுகத்தையும் தநத்தையும் த்யாகம் செய்யச்சொன்ன கிறிஸ்துவின் சிஷ்யர்கள் அவ்விரண்டு அம்சங்களில் ஏனையோர்க்குயாதுமின்றி அவற்றை முற்றிலும் கைக்கொண்டனர். தம்பொருளைப்பரர்க்கீந்து பரர்பொருளைக் கவராது நிற்கச் சொன்னவர் சிஷ்யர்கள் உலகத்தின் பொருளையெல்லாம் தம வயமாக்கினர். தன்னைப் பரர் அடிக்க ஸஹித்துப் பரரை அடிக்காமல் விடவேண்டுமென்றவர் சிஷ்யர்களால் ஆக்ரமிக்கப்படாத தேசத்தார் இல்லை. இந்தியாவில் இனி உண்டாகப்போகின்ற வேதாந்திகளும்; அவகாசம் உள்ளவரையில் இவ்வண்ணம் பரிணமிப்பவர்களே.

---

ஸ்ரீ:

# ப்ரேம ப்ரவாஹம்.

ஆச்ரிதரக்ஷக! ஸர்வபோஷக! ஸ்வர்ணமயமான பாத்ரமொன்றால் உனது திவ்யவதநம் மூடப்பட்டு நிற்கின்றதே! அனைக்யமான ப்ராக்ருத பதார்த்தங்களுக்குள் மறைந்து வஸிக்கின்ற ஸத்யமே! உன்னைப் பஜிக்கின்ற எனக்கு உனது தர்சநம் ப்ராப்தமாகும்படியாக, அந்த ஆவரணத்தைப் போக்கு. விஸ்தரித்து ப்ரகாசிக்கின்ற கிரணங்களை விலக்கு. என்னால் ஸஹிக்கக்கூடாத உனது தேஜஸ்ஸை அடக்கு. அதிஸுந்தரமான உனது ரூபத்தைத் தர்சிக்க விரும்புகின்றேன்.

ரமணீய மண்டலத்துக்குள் வஸிக்கும் நீ, எனக்குள்ளும் வஸிக்கின்றாய். நான் யாவன்? எனது சரீரம் அதற்குக் காரணமான பூதங்களில் லயிக்க, அது அக்நியில் ஹோமம் செய்யப்படும். மிகுந்தது பஸ்மமாகக் காணப்படும். எனது ப்ராணன்கள் முக்ய ப்ராணனில் லயிக்கும். அப்போது, உன்னுடைய அநுகூல ஸங்கல்பத்தை நான் ப்ரார்த்திக்கின்றேன்; உன்னை நான் ஸ்மரிக்கும்படி நீ ஸங்கல்பிக்கவேண்டும். அப்படிக் கில்லாவிட்டாலும், கல்லைப்போல் கட்டையைப்போல் நான் மரித்தபின் காணப்படவும், எனது ஆவி நிலை கலங்கி, உன்னை நினைக்க நான் திறனற்றுக் கிடக்கையிலும், உனதடியானை நீ நினைத்து நற்கதிக்குக் கொண்டுபோவதாக, நீ சொன்ன சொல்லை நினைப்பாயாக! நான் செய்த வினைகளில் நீ அவ்வண்ணம் ஸங்கல்பிக்கும்படி எவை அநுகூலங்களாயிருக்குமோ, அவற்றை ஸ்மரிப்பாய். 'நம' வென்று நான் உன்னைக் கூவி முறையிட்டதை எண்ணி, எனது பாபரூப ப்ரதிபந்தங்களைச் சேதிப்பாய். உன்னிடம் என்னைக் கூவிக்கொள்வாய். ச்ருதி காட்டியபடியே இவ்வண்ணம் நான் ப்ரார்த்திக்கின்றேன்.

பார்க்குமிடமெங்கும் நீ நிறைகின்றாய். காணும் பதார்த்தங்கள் யாவும் உனது தநுக்கள். ஆயினும் உண்மையில் உனைக் காண்பதென்பது யார்க்கும் கிடைக்கவில்லையே! ஸூக்ஷ்மதர்சிகள், ஸூக்ஷ்மங்களுக்குள்ளெல்லாம் ஸூக்ஷ்மதரமாயிருக்கின்ற உன்னைத் தம்முடைய ஜ்ஞாநக் கண்களால் தர்சிப்பார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸூக்ஷ்மத்தை யான் காணேன்,

ஞானக்கண் எனக்கு உதிக்கவில்லை. அது உதிக்க, நின்னருளும் வரவில்லை.

உனது முகமானது ரமணீயமான ஆவரணங்களால் மூடப்பட்டிருக்கின்றது. இவ்வுலகில் நினைக் காண்பதெப்படி? உனது ரூபம் ஆநந்த மெனப்படுகின்றது. மநுஷ்யர்க்கு ஆநந்த மென்பது மதுரமான பதார்த்த ஸேவையால் லபிக்கின்றது. அதி போக்யதமமான நீ யாவர்க்குள்ளும் இருப்பதால் தான், பாஹ்ய பதார்த்தங்களை ஸேவித்து, ஆநந்த லேசத்தை ஒருவன் பொருந்துகின்றான் என்று சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட உனது இருப்பால் தான், ஒருவர்க்கொருவர் ப்ரியமென்பதைப் பாராட்டுகின்றார்கள். உனது சிரம் ப்ரியமெனப்பட்டது. அசாரணமாக ப்ரியமென்பது எங்கே உண்டாகின்றதோ அங்கே உனது முகம் ப்ரகாசிக்கும். ஆனால் அங்கும் அது திரைக்குள் மறைகின்றது.

நீ ஒன்றும் எனக்குச் செய்யவேண்டாம். உனை நான் காணப்பெற்றால் அதுவே எனக்குத் துக்கநிவ்ருத்தி. ஒரு சிறு குழந்தை செய்யப்போகின்ற தொன்றை எண்ணியா அதனிடம் வாத்ஸல்யம் வைக்கின்றனர் பெற்றோர்? ப்ரியமென்பது குழந்தையினிடம் பெருகுவதுபோல் மற்றெங்கும் பெருகாது. பதிபார்யைகளுக்குள் பரஸ்பரம் காமம் உண்டாவது உனது ஸங்கல்பத்தாலென்று சொல்லப்பட்டது. அப்படிக்கு அவர்களுடைய சித்தங்களுக்குள் ஸ்நேஹத்தை விளைவித்து, அது நிலைக்கவென்று நீ போடும் ஆநந்த ரூபமான முடிச்சுக்குக் குழந்தையென்று பெயர். அதனிடம் ப்ரியமென்பது யாவர்க்கும் ஸஹஜமாய் உண்டாகின்றது. பெற்றோர்க்கு அது உண்டாதல் விசேஷமில்லை. ஏனென்றால் ஸத்ய ஸ்வரூபியான உனது முகம் சிசுவெனப்படும். மற்றோரைக் கெடுக்கும் சித்த விகாரங்கள் அதனிடம் உண்டாவதில்லை. தூங்கும் போது அது சிரிக்கின்றது. விழித்திருக்கையிலும், ஒரு வ்யாஜமின்றி சிசு சிரிக்கக் காண்கின்றோம். அதனிடம் ப்ரியத்தைப் பாராட்டினால் அதனுடைய முகம் மலர்கின்றது. ஸாதுத் தன்மை அதனிடம் ஸ்வபாவ ஸித்தமாய் ப்ரகாசிக்கின்றது. ஆதலால், சிசு உனது முகமெனப்படலாம். ஸுஷுப்தியில் அது உன்னிடம் லயிக்கும்போது, ஸர்வ சோகங்களையும் கடந்து, உனது ஸம்பந்த மாத்ரத்தால் சிற்றின்பமெனும் லோககாமங்கள் ஒழிந்து, பேரின்பமெனும் ஸர்வ காமங்களை அநுபவிக்கின்றது. அப்போது, யாவரும் அவ்வநுபவமொன்றைத் தவிர்த்து, உள்ளும்



புறமும் வேறொன்றையும் அறியமாட்டாரென்று ஸ்ருதி மொழிந்தது. அதற்கு உபமாநமாக, ஒருவனுடைய முழு ப்ரியத்துக்கும் விஷயமாகின்ற பெண்மணியால் அவன் ஆலிங்கநம் பண்ணப்பட்டானாகில், எவ்வண்ணம் உலகத்தில் உள்ளும் புறமும் வேறொன்றை அறியமாட்டானோ, அவ்வண்ணமே ஸுஷுப்தி காலத்தில் உனது பரிஷ்வங்கத்தைப் பெற்றவனுக்கு வேறொன்று எண்ணத்தில் உதிக்கமாட்டாதென்று ஸ்ருதியே வெளியிட்டது; உத்தம ரஸமாகிய உன்னைப் பெற்றானாகில் புருஷன் ஆநந்தாநுபவம் செய்கின்றானென்று சொல்லிற்று. அத்தகைய அநுபவத்தை அடிக்கடி அடைந்து அதனுடைய பரீவாஹமாகக் குழந்தையினுடைய முகம் மலர்கின்றதோ?

அல்லது, அதனுடைய பூர்வ சரீரத்யாகாவஸரத்தில், இந்த்ரியங்கள் மநஸ்ஸில் லயித்து, மநஸ் ப்ராணனிடம் லயித்து, ப்ராணன் ஜீவனிடம் லயித்து, ஜீவன் ஹ்ருதயகமலத்தில் இருக்கின்ற பரதேவதையான உன்னிடம் விஶ்ரமிக்கவும், படுகுழியில் தவறி விழுந்த பாலனைத் தூக்கியெடுக்க விறங்கும் பெற்றோனையொத்து, நீ அந்த ஜீவனைக் கையிலேந்தி, அவன் ஶ்ரமத்தைப் பரிஹரித்துப் பின்வரும் ஜந்மத்தின்பொருட்டு அச்சரீரத்தினின்று மெல்லெனத் தூக்கிவிட்டனையே? அந்த நினைவால் குழந்தை ஸந்தோஷிக்கின்றதோ?

அப்போது உனது தர்ஶநம் பெற்ற பாக்யமன்றோ, கர்ப்பவாஸ காலத்தில் அந்த ஜீவனுக்கு விஶேஷ நிஶ்சயங்கள் பிறக்கக் காரணமாகின்றது. "இதை நான் விட்டுப் பிறந்தேனாகில் எப்போதும் விஷ்ணுவை ஹ்ருதயத்தில் பஜிப்பேன்; என்றும் உளனாய், ஆநந்த ரூபியாய், அம்ருத ப்ரதனாய் விளங்கும் நாராயணனைப் பஜிப்பேன்" என்று, கர்ப்பவாஸ யோசனைகளை ஸ்ருதி விவரிக்கின்றது. அவை முற்றிலும் மறவாதமட்டும், குழந்தைகளுக்கு உண்டாகின்ற அநிமித்தமான ஸந்தோஷங்கட்கு நீ ஆதாரமாகின்றனை யன்றோ?

சிறு குழந்தையின் குவளைக் கண்கள் பரம புருஷனைக்காட்டும் த்வாரங்கள். அது தாயைப் பார்க்கையில் பார்வைக்கு அர்த்தம் வெளியாவதில்லை. ஆயினும் அவள் களிக்கின்றாள். சொல்லாகவும் எழுத்தாகவும் ஏற்படாமல குழந்தை சப்திக்கின்றது. அந்தச் சப்தத்தின் பொருள் தாய்க்குப் புலப்படவில்லை. அது

என்னென்று அவள் குழந்தையை வினவுகின்றாள். விடையொன்று மில்லை. விடை உதிக்கமாட்டாதென்று தெரிந்தும் அவள் அவ்விதமாக ஸந்தோஷிக்கின்றாள். ஒரு புன்னகை, விடையின் ஸ்தானத்திலே சிசுவினுடைய முகத்தில் மலர்கின்றது. அதைக் கண்ட தாயினுடைய முகமும் மலர்கின்றது. தனது சிசுவுடன் காலங் கழித்து, அவள் ஆநந்தாநுபவம் செய்கின்றாள். அதைவிட்டு வேறு ஒரு காலக்ஷேபத்தில் அவள் களிக்கின்றாளில்லை. அதைக் குளிப்பாட்டுகின்றாள். அதற்கு ஆகாரம் கொடுக்கின்றாள். அதனிடம் அசுத்தி உண்டானபோது அதை நிவர்த்திக்கின்றாள். அதற்கு உறக்கம் ப்ராப்தமானபோது அதை உறங்கச்செய்கின்றாள். அதற்கு த்ருப்தியுண்டாகப் பாடுகின்றாள். இவ்வண்ணம் லாலநம் செய்து ஸ்வயம் களிக்கின்றாள். அத்தகைய தாயை விட்டுப் பிரிய சிசுவும் ஸஹிப்பதில்லை. இருவர்க்குள்ளும் நீயிருந்தன்றோ இவ்விதமான ப்ரேமையை வளரச்செய்கின்றாய்!

ஸர்வ லோகங்களும் உனக்குள் அடங்குகின்றன. ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த பெண்ணுக்கு, ஸர்வலோகங்களும் அக்குழந்தைக்குள் அடங்குகின்றன. உனக்குப் பணிவிடை செய்ய இச்சிப்பவர்க்கு, ஜநநீ குழவியை லாலநம் செய்வதை உவமையாகக் காட்டப்பட்டது. அந்தச் சித்தவ்ருத்தியை வாத்ஸல்யம் என்பார்கள். அப்படி வாத்ஸல்யாதிசயத்தால் கட்டப்பட்ட பெண்மணியானவள், தன் மடியில் குழந்தையை வைத்துக்கொண்டு பாலமுது ஊட்டுங்கால், அது கண்மூடி மரணமடைந்தால், தாயின் செயலை விவரிக்க வொண்ணுமோ? அவள், அழுவாள், எழுவாள், அலறிக் கதறுவாள். தன் அருமைக் குழவியை அலைவாள் அழைப்பாள். முகத்தொடு முகம்வைத்துப் புலம்புவாள், பழிப்பாள். கண்ணீர் பெருக்கிக் கலங்கித் தவிப்பாள். தன் இளங்குழந்தை மீண்டும் உயிர்த்தெழு மென்பாள். கண்டவர் தமையெல்லாம் கூவியே தன் குழவியைக் காக்கவேண்டிக் கால்களைப் பற்றுவாள். மரித்தபின் தன்மகன் வருவதேதென்று முடியாத் துயரத்தில் மூழ்கித் துடிப்பாள். இவ்வண்ணம் வாத்ஸல்யம், விரஹத்தால் துக்க ஹேதுவாகின்றது. குழந்தை இருக்கையில் அவள் ப்ரியத்துக்கு எல்லையற்றது. குழந்தை மரித்தபின் அந்த ப்ரியத்தால் வளரும் துக்கத்துக்கும் எல்லை இல்லை.

இது உன் மாயையென்பர். மாயையென்றால் ஸங்கல்பம். இது உன் ஸங்கல்பமா?



உலகமெல்லாம் ஒரு குடையின்கீழ் ஆளப்பெற்ற அதிராஜ்யத்தைக் காட்டிலும், தனது ப்ரியநாயகி ஏவினபடியே தொழில் செய்யும் பாக்யத்தை ஶ்லாகித்தான் ஒரு மன்னன். அவனுடைய நாயகியும், தனது ஜீவநம் அவனை ஆஶ்ரயித்து நிற்பதை அறிந்தாள். ரூபத்தாலும், உத்தம பத்நிக்குரிய குணங்களாலும், அவள் தன் நாயகனுடைய சித்தத்தைக் கவர்ந்து நின்றாள். அவர்க்குள் பரஸ்பரம் ஸ்நேஹபாவமானது இருவர்க்கும் வேறு யோசனைகளையும் வேறு ப்ரவ்ருத்திகளையும் தகைந்தது. ஒருவர் மற்றொருவர் ஸாந்நித்யமொன்றினாலேயே, ஸர்வார்த்தங்களையும் ஸாதித்ததாக எண்ணினார்கள். ஒருவரைவிட்டு மற்றொருவர், க்ஷணமாகிலும் இருக்கக்கூடுமென்பதை இருவரும் சிந்தித்தார்களில்லை. ஒரு ஸாயங்காலத்தில், அவர்கள், தமது உத்யாநவநத்தில், மலர்கள் பூத்து நன்மணம் நாற்புறமும் பரவச் சந்திரன் நிலவில் களித்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அத்தருணம் ஆகாசத்தினின்று ஒரு புஷ்பஹாரம் நாயகியின் வக்ஷஸ்தலத்தின்மீது விழுந்தது. அந்த வ்யாஜத்தால் அவள் நிர்யாணமடைந்தாள். அப்போது நாயகனுடைய செயலை விவரிக்க வொண்ணுமோ? தனது ப்ரியை மரித்தாள் என்று தோன்றும்போதும், அவளுடைய மரண ப்ரயுக்தமாக அவன் கதறியழுகையிலும், அவள் இறந்ததாக எண்ணமாட்டான். அங்குநின்ற மரங்களையும், மரங்களில் தங்கிய பறவைகளையும், வநத்தில் ஸஞ்சரிக்கும் மான்களையும், மயில்களையும் அழைத்துத் தனது நாயகியைப்பற்றிக் கேட்பான். அவள் ஜீவித்திருப்பதுபோல் பாவித்துப் பேசுவான். காமத்தால் பீடிக்கப்பட்டவன் மதியின் நிலைமை யிழந்தவனே. நாயகன் இறந்தபின், நாயகியினுடைய அவஸ்தையும் இந்த க்ரமத்தில் யோசிக்கத்தக்கது. இருவரும் இருக்கையில், இருவரையும் அநிர்வசநீயமான ப்ரியமானது கட்டியது. ஒருவர் இறந்த பின்பும், அதுவே விரஹத்தால் விஸ்தரித்துத் துக்கத்துடன் கலந்து ப்ரகாசித்தது. இதுவும் உனது ஸங்கல்பமதாமன்றோ? ஸதியானவள் ப்ரிய பர்த்தாவினிடம்போல் உன்னிடம் உனது தாஸன் வர்த்திக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது.

பதியின் இச்சையால் பத்நீ அவனிடம் ப்ரியம் கொள்ளமாட்டாள். பத்நீயினுடைய இஷ்டத்தால் பதிக்கு அவளிடம் ப்ரிய முண்டாகமாட்டாது. இருவர்க்குள்ளும் ப்ரியம் உண்டாவது, பரமாத்மாவான உனது ஸங்கல்பாயத்தமென்று சொல்லப்பட்

டது. அந்த ஸங்கல்பம் நித்யஸங்கல்பம். அதாவது, நீ ஶாஶ்வதமாக ப்ரவஹிக்கும்படியாக விதித்த லோக ஸ்திதி ப்ரவ்ருத்தியால் அந்த ப்ரியம் உண்டாகின்றது. ப்ரளயத்தில் அசேதந துல்யங்களாய் முழுகிநின்ற ஜந்துக்களிடம், உன்னுடைய ஸஹஜகாருண்யமானது ப்ரவ்ருத்திக்கின்றது. சரீரங்கள் பெற்றன்றோ, அந்த ஜந்துக்கள் ஸர்வ புருஷார்த்தங்களையும் ஸாதித்துக்கொள்ளவேண்டும். அவர்கள் சரீரங்களை அடையவேண்டி, நீ ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்தாய்; அதனிமித்தமாக உனது அம்ருத ஸ்வரூபத்தை நீ அதிக்ரமித்து, ப்ரபஞ்சரூபத்தைமேற்கொண்டாயென்று ஶ்ருதி சொல்லிற்று. ஸூத்ரத்தில் மணிக்கூட்டங்கள்போல், உன்னிடம் உலகத்தின்கண் உள்ள யாவும் கோக்கப்பட்டதென்று நீயே சொன்னாய். ஸர்வ விகாரங்களும் உன்னைத் தொடரா. அப்படிப்பட்ட உன்னிடம் இந்த விஶ்வமானது, நீ அதற்கு ஆதாரமாயிருக்கும்படியாக நெய்யப்பட்டதென்றும் சொல்லப்பட்டது. இவ்வண்ணம் நீ, ஸர்வத்தையும் சரீரமாகக்கொண்டு தரிக்கின்றாய்; ப்ரளயதசையிலும், ப்ரபஞ்சதசையிலும், நீயே ஸர்வத்துக்கும் ஆதாரமாயிருக்கின்றாய். அதனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பதார்த்தங்களுக்குத் தனித்தனியே ப்ரவ்ருத்தி பேதங்கள் யதாவத்தாக ஏற்படமாட்டா. ஆகையால், நீ ஸர்வத்துக்குள்ளும் அநுப்ரவேஶம் செய்தாய்; யாவற்றிலும் உள்நின்று எல்லாவற்றையும் நியமிக்கின்றாய். இந்த நியமந பலமன்றோ பதிக்குப் பார்யையிடம் ப்ரியம் உண்டாவது; பார்யைக்குப் பதியிடம் ப்ரியமுண்டாவது; இருவர்க்கும் புத்ரர்களிடம் ப்ரியமுண்டாவது?

நீ ஸர்வலோகத்துக்கும் ஆத்மா. ஒவ்வொரு பதார்த்தமும் உன்னை அந்தராத்மாகவுடையது. ஆகலால் நீயே விஶ்வரூபி; ஸர்வமூர்த்தி; நீ ஸர்வ சேதந வஸ்துக்களுக்கும் நிஸர்க்க ஸுஹ்ருத். நீ ஸர்வ ஜகத்துக்கும் ஹிதத்தையே ஸங்கல்பிக்கின்றாய். ஏனென்றால் நீ கருணாகரன்; ஜீவாத்மாக்கள் துன்பப்படுவதெல்லாம் அவ்வற்றின் கர்மபலங்களே. அந்த வகையில் அவற்றிற்குக் கர்மக்ஷயம் உனது க்ருபையால் நிறைவேறுகின்றது. அப்படிப்பட்ட உன்னைப்பற்றிக் கேட்டும், சிந்தித்தும், த்யாநித்தும், மநுஷ்யர் உன்னை யடையவேண்டிய மார்க்கத்தை நீயே பலதரம் காட்டியிருக்கின்றாய்.

(இன்னும்வரும்.)

பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# வேதாந்த ஸங்க்ரஹம்.

ஆத்மா வேறு தேஹம் வேறு என்று நன்றாய் ஸந்தேஹமறத் தெளிந்து வேதத்தின் பூர்வபாகத்தில் உதாஹரிக்கப்பட்ட நித்ய நைமித்திக கர்மங்களையும் யாகயஜ்ஞாதி கர்மங்களையும் அநித்யமான பொருளையும் சிற்றின்பத்தையும் கோராமல் பகவதாராதந ரூபமாக அநுஷ்டிக்கவேண்டும். அப்படி அநுஷ்டித்தால் நல்ல வைராக்யம் த்ருடப்பட்டு, பகவத் ஜ்ஞாநம் உண்டாகும். பகவத்ஜ்ஞாந முண்டான பிற்பாடும், நித்யநைமித்திக கர்மங்களைப் பகவதாராதந ரூபமாக அநுஷ்டிப்பது பகவதுபாஸநத்துக்கு அங்கம். மேன்மேல் பகவத்ஜ்ஞாநத்தின் அபிவ்ருத்திக்கும் உதவியாயிருக்கும். மஹாஜ்ஞாநிகளில் தலைவரான ஜநகர் முதலானோர் ‘கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:’ கர்மங்களை அநுஷ்டித்தே ஸித்தி யடைந்தார்கள். ப்ருஹ்மஜ்ஞாநிகளில் அநேகர் ஜ்ஞாநமடைந்த பிறகும் கர்மத்தை விடவில்லை. ‘தம் வித்யாகர்மணீ ஸமந்வாரபேதே’ என்கிறபடி ஜ்ஞாநமும் கர்மமும் முக்யம்தான். ஆனால் அநித்யபலனை உத்தேசித்துச் செய்யுமவை, நிரந்தரமான பகவத் ஜ்ஞாநத்துக்கு ப்ரயோஜநப்படா; மேன்மேலும் புண்ய பாபத்துக்கு உட்படுத்திப் பிறவிக்கு உடலாக்கும் தன்மையன.

கர்மத்தின் உபயோகம். (III-4-ம் பாதம்.)

அவைகளைப் போக்கடிக்கத்தகுந்தது ப்ருஹ்ம ஜ்ஞாநமே. ‘பித்யதே ஹ்ருதயக்ரந்திஶ்சித்யந்தே ஸர்வஸம்ஶயா: । க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே ॥’ என்று முண்டகோபநிஷத்தில் சொன்ன ப்ரகாரம், ஹ்ருதயத்தில் முடிச்சுகள் அவிழ்ந்துண்டு, ஸகலஸம்ஶயமும்

ப்ருஹ்ம ஜ்ஞாநமே மோக்ஷோபாயம்.

நீங்கி, ஸகல கர்மங்களும் பகவத் ஸாக்ஷாத்காரத்தால் தொலையும், இந்த ப்ருஹ்ம ஜ்ஞாநி, கர்மாநுஷ்டாநத்தை ஆயுள் முழுவதும் செய்தாலும் அக்கர்மம் அந்த ஜ்ஞாநியை ஒட்டாது. 'ஸம்ஸாவாஸ்ய மிதம்ஸர்வம்............குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்சதம் ஸமா:...........' என்று உபநிஷத் வெளியிட்டது. 'ப்ருஹ்ம விதாப்நோதிபரம் ........... யோவேத நிஹிதம்குஹாயாம் பரமே வ்யோமந் ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ', 'வேதாஹ மேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத் தமேவம் வித்வாநம்ருத இஹபவதி நாந்ய: பந்தா வித்யதேயநாய...........', 'வித்யாம் ........... ஸ ஹோபயம் ஸஹ அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாம்ருதமச்நுதே' என்று அநேக உபநிஷத்துக்களின் ப்ரகாரம் உபாஸநம் த்யாநம் என்று சொல்லப்பட்ட பகவத் ஜ்ஞாநத்தால் ம்ருத்யுவைக் கடந்து நித்யமான பரமபதத்தை யடைகிறான் என்றும், ப்ருஹ்ம ஜ்ஞாநத்தால் தான் நித்யமான ஒப்பில்லாத உயர்ந்த மேலான பதவி கிடைக்கும் என்றும், கேவலம் கர்மத்தால் அது கிடைக்காது என்றும், 'புருஷார்த்தோத: ஶப்தாத்' என்று ஸூத்ரகாரர் நிர்ணயித்திருக்கிறார். (III. 4. 1. ஸூ)

கர்மம் ப்ருஹ்ம ஜ்ஞாநத்துக்கு உதவி.

ஆனால் 'ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதி ஶ்ருதேரஶ்வவத்' (III. 4. 26 ஸூ) என்கிற ஸூத்ரப்படிக்கும், 'தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸா நாஶகேந' என்கிற ஶ்ருதிகள் இருக்கிறபடியாலும், ஸத்கர்மங்களுக்கு ப்ரயோஜநமில்லை யென்று சொல்லக்கூடாது. கேவலம் வேதவாக்யத்தின் அர்த்த ஜ்ஞாநத்துக்கு ஜ்ஞாநம் என்று சொல்லக்கூடாது. உபாஸநம் த்யாநம் என்று சொல்லப்படுகிற பகவத் ஜ்ஞாநத்தை அப்பாஸஞ் செய்து, ப்ரேம ரூபமாய், பகவானை நேரில் ஸாக்ஷாத்கரிக்கும் ஜ்ஞாநத்துக்கு நித்யநைமித்திக கர்மாநுஷ்டாநம் உதவியாயிருக்கும். ஸஞ்சரிக்கவேண்டிய ஒரு மனிதனுக்கு, ஸஞ்சாரத்துக்கு உபயோகமான ஒரு குதிரைக்கு, வேலைக்காரன் ஜேணம் முதலிய ஸாமான்



கள் வேண்டியிருப்பன போல, ப்ருஹ்ம ஜ்ஞாநிக்குக் கர்மமும் உபயோகம். கண்ணன் ஸ்ரீ பகவத்கீதையில் 'யஜ்ஞதாநதப: கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத் .................. பாவநாநி மநீஷிணாம்' என்று கர்மங்களைப் பகவதாராதநமாகச் செய்தால் சுத்தியுண்டாகு மென்றும், 'யத: ப்ரவ்ருத்திர் பூதாநாம்............ ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:' (18. 5. 46) இப்படிப் பகவதாராதநத்தால் ஸித்தியடைவர் என்றும் அருளிச் செய்தபடி ஸூத்ரகாரர் கர்மத்தின் உபயோகத்தை நிச்சயித்தார்.

ஜ்ஞாநிக்கு அவஶ்யமான குணங்கள்.

ஶமம் (பொறுமை), காமக்ரோத மின்மை, அஹங்கார மில்லாமை,) தமம் (இந்த்ரிய ஜயம்,) சௌசம் (மனத்தில்தோஷம் அசுத்தம் அழுக்கில்லாமை), இவை யெல்லாம் பகவதுபாஸநத்திற்கு இன்றியமையாத மிக முக்யமான குணங்கள். பயனை உத்தேசியாமல் கர்மங்களைப் பகவதாராதந ரூபமாகச் செய்தால் இவைகள் உண்டாகும். 'தஸ்மாத் ஏவம்வித் ஶாந்தோ தாந்த உபரதஸ் திதிக்ஷு: ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யேவ ஆத்மாநம் பஶ்யேத்' காம க்ரோத அஹங்காரமின்றி, ஶாந்தியும் பொறுமையும் உண்டாகி, எம்பெருமானை ஸாக்ஷாத்கரிப்பன். 'யஜ்ஞேந பாபம் அபநுததி' என்று பழைய பாபங்கள் பகவத் ஜ்ஞாநத்துக்குத் தடையாயிருக்குமவைகள். ஸத்கர்மங்களை இம்மைப் பயனைக் கருதாமல் அநுஷ்டித்தால் 'ஸஹகாரித்வேந' என்கிற ஸூத்ரப்படி பக்வத் ஜ்ஞாந வ்ருத்திக்கு அவ்வநுஷ்டாநம் உதவியாயிருக்கும்.

கேவலம் ஆஶ்ரம கர்மங்கள் மட்டுந்தான் ப்ரயோஜநம் என்று சொல்லக்கூடாது. ஒருவன் அநாஶ்ரமியா யிருக்கும்படி நேரிட்டால்கூட, 'யஜ்ஞேந தாநேந தபஸா நாஶகேந' என்கிற ப்ரமாணப்படி ஜபம் உபவாஸம் தாநம் தேவதாராதநம் முதலிய கர்மங்களை அநுஷ்டித்துப் பகவதுபாஸநம் செய்யலாம். 'மைத்ரோ ப்ராஹ்மண உச்யதே' (மநு II - 17) என்கிறபடியே ஒரு

வன் ஸர்வஜ்ஞ ஸூஹ்ருத்தாய் ஸத்கர்மத்தைச் செய்தால், அவனை ப்ராஹ்மண னென்றே சொல்லலாம். 'தபஸா ப்ரஹ்மசர்யேண ஶ்ரத்தயா வித்யயாத்மாநமந்விஷ்ய' தபஸ்ஸினாலும் வைராக்யத்தினாலும் ஶ்ரத்தையாலும் ஜ்ஞாநத்தாலும் பகவானை அடைய வேண்டுமென்று ப்ரஶ்நோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி எந்த ஆஶ்ரமத்தில் இருந்தாலும் பகவத்யாநம் செய்யவேண்டியவன், 'தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந' வேதாத்யயநத்தினாலும், யாகம் முதலிய கர்மாநுஷ்டாநத்தினாலும் தாநத்தாலும் மநோ நைர்மல்யத்தை யடைந்து, பகவதுபாஸநத்தில் ருசி உண்டாகி, மேன் மேலும் ஜ்ஞாநத்தின் வ்ருத்தியை யடைகிறான்.—'ஶாந்தோ தாந்த இதி' மனத்தில் பொறுமை காம க்ரோத அஹங்கார மாத்ஸர்ய மின்மை, முதலிய குணங்களை அவன் அவஶ்யம் உடைத்தாயிருக்க வேண்டும். 'ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:' என்கிறபடி பகவானை நேரில் ஸாக்ஷாத்கரிப்பதற்கு வேதத்தினுட் பொருளை த்தெரிந்து, அதையே நன்றாய் விசாரம் செய்து, மநஸ்ஸில் த்ருடப்படுத்திக் கொஞ்சமும் மறக்காமல் எப்பொழுதும் நிலைநிற்கும்படி நன்றாய் த்யாநம் செய்யவேணும். இந்த மூன் தசைகள் ஶ்ரவண மநந நிதித்யாஸந தசைகள்.

இந்த அதிகாரிக்கு 'தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத் இதி' என்கிற ஶ்ருதிப்படி முதலில் பாண்டித்யம் மிக உபயோக முள்ளது. நன்றாய் ஶ்ருதியின் அர்த்தத்தை அறிந்து, அதை மநஸ்ஸில் ஸந்தேஹமில்லாமல் பூர்ணமாய் வ்யக்தமாய் தெளிவாய் நிலைநிறுத்தி, அதையே ஜ்ஞாபகத்தில் வைத்து அப்யாஸம் செய்தால், பகவதநுக்ரஹத்தால் மனச்சுத்தி யடைகிறார்கள். பகவானையும் பகவத் குணங்களையும் த்யாநம் செய்யச்செய்ய, ஒரு குழந்தைபோல இந்த அதிகாரி இருப்பன்; பால்யம் என்கிற தசையை அடைவன்; அதாவது டம்பம், கர்வம், அஹங்காரம் யாதொன்று மில்லாமலிருப்பான்;



இதற்குமேல் மௌநம் என்கிற தசையை அடைவன்; பகவா னைத் தவிர இன்னொன்றை நாடான். பகவத் ஸாக்ஷாத்கார தசை க்குப் பூர்வ தசையை அடைகிறான். கடைசியில் பரமபக்தி ரூப மான இடைவிடாத தைல தாரைபோன்ற பகவத் ஜ்ஞாநத்தால் பகவானை ஸாக்ஷாத்கரிக்கிறான்.

ஆக, பாண்டித்யமும் இம்மைப் பயனை உத்தேசிக்காத கர்மா நுஷ்டாநமும் உடையனாய், காமம், க்ரோதம், டம்பம், அஹங்கா ரம், கர்வம் முதலியன இல்லாதவனாய், ஒரு குழந்தைபோல் இரு ந்துகொண்டு, சுத்தமான ஆஹாரத்தை ஸ்வீகரித்துக்கொண்டு, துர் நடவடிக்கை யில்லாமல், மனச்சுத்தத்துடன், ஶாந்தியும் பொறுமை யும் உடையனாய் இருந்தால், பகவத் ஜ்ஞாநம் மிக வ்ருத்தியடையும். [' நாவிரதோ துஶ்சரிதாந் நாஶாந்தோ நாஸமாஹித:। நாஶா ந்த மாநஸோ வாபி ப்ரஜ்ஞாநேநைநமாப்நுயாத்' ' ஆஹார ஶுத்தௌ ஸத்வஶுத்தி:' ] கேவலம் பாண்டித்யமாவது கர்மாநுஷ் டாநமாவது ப்ரயோஜநப்படமாட்டாது. மேற்சொன்ன அதிகாரி, மேற்கூறிய குணங்களை உடையவனாய், மஹாப்ரேம ரூபமான பக் தியுடையவனாயிருந்தால், பகவதநுக்ரஹத்தால் பகவானை ஸாக்ஷாத் கரித்து அவனை அடைவான். 'நாஹம் வேதைர் ந தபஸா... ......ஶக்ய ஏவம்விதோ த்ரஷ்டும்' என்று கீதையில் சொன்னபடிக் கும், 'நாயமாத்மா ப்ரவசநேந......ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந ந.........யமேவைஷ வ்ருணுதே' என்கிற ஶ்ருதிப்படிக்கும், பகவான் பக்தியுள்ள ஒருவனையே தன் க்ருபையால் வரிக்கிறான் என்று ஸூத்ரத்தின் 3-வது அத்யாயம் வெளியிடுகிறது.

பகவதுபாஸநம் செய்து, அந்த த்யாநம் மஹாப்ரேமத்தோடு கூடியதாய், தர்ஶந ஸமாநமான-பக்வநிலையையடைய கர்மாநுஷ் டாநமும், ஸத்யம் முதலிய ஆத்ம குணங்களின் பூர்த்தியும், அவஶ் யம் வேண்டியவைகள் என்று ஸூத்ரகாரருக்கும் த்ரமிட பாஷ்ய காரருக்கும் பிற்பட்ட டங்கர் என்கிற வாக்யகாரர் பின்வருமாறு வெகு சுருக்கமாகச் சொல்லுகிறார். 'தல்லப்திர் விவேக விமோகா

ஸ்ரவத்ருபா ஸ்ம்ருதிர் அநவரத ப்ரஸக்தி ஸம்ஸ்வர ஸிவ்யநாதெதி' இந்த இடைவிடாத சிந்தனை ரூபமான த்யாநம் (விவேகம், விமோகம், அப்பாஸம், க்ரியை, கல்யாணம், அநவஸாதம், அநுத்தர்ஷம்) என்பவைகளால் உண்டாகிறது, என்று சாஸ்த்ர வசனத்தாலும் யுக்தி ந்யாயங்களாலும் ஏற்படுகிறது.

**விவேகம்.** ஜாத்யாச்ரய நிமித்த துஷ்டமான ஆஹாரம் தவிர இதர ஆகாரத்தால் தேஹத்தை அசுத்திசெய்யக்கூடாது. 'ஆஹார ஶுத்தௌ ஸத்வஶுத்திঃ ஸத்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதிঃ' என்று சாந்தோக்ய உபநிஷத்தின்படி, ஆகாரம் சுத்தமானல் மநஸ் சுத்தமாகும்; மநஸ் சுத்தமானல் தான் இடைவிடாத பகவத் சிந்தனை செய்ய முடியும்.

**விமோகம்.** அநித்ய விஷயங்களில் ஆசையில்லாமல் சாந்த மனஸ்ஸுடன் கூடியிருத்தல் 'சாந்த உபாஸீத' என்று உபநிஷத் சொல்லுகிறது.

**அப்யாஸம்.** அடிக்கடி விடாமல் சிந்தனையை மேன்மேலும் செய்கிறது, 'ஸதா தத்பாவபாவிதঃ' என்று கீதையில் சொல்லுகிறபடி எப்போதும் பரமாத்மாவினிடத்தில் சிந்தையாயிருக்கும்படி விடாமல் மறுபடியும் மறுபடியும் த்யாநம் செய்வது.

**க்ரியை.** 'க்ரியாவாநேஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்டঃ' என்று ப்ரஹ்மஞாநிஷ்டர்களில் ஸத்கர்மங்களைச் செய்பவர்கள் மேலானவர்கள் என்று முண்டகோபநிஷத் வெளியிடுகிறது. 'தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி', 'யஜ்ஞேந தாநேந தபஸாநாசகேந' என்கிற ப்ருஹதாரண்ய வாக்யத்தில் வேதாத்யயநத்தாலும், யாகத்தாலும் தபஸ்ஸாலும் தாநத்தாலும் உபவாஸம் முதலியவற்றாலும் ப்ராஹ்மணர்கள் பரப்ருஹ்மத்தை அறிகிறார்கள்



என்று சொல்லப்பட்டிருக்கிறது. நித்யம் செய்யவேண்டிய பஞ்சமஹா யஜ்ஞம் செய்யவேண்டும்.

**கல்யாணம்.** கன்னடத்தை அதாவது ஸத்யம் பேசுதல், பிறரிடத்தில் அன்போடிருத்தல், தாராளமாய்ப் பிறருக்குக் கொடுத்தல், காமக்ரோதமின்றி இருத்தல், அஹிம்ஸை, பணத்தாசையின்மை, முதலியன; 'ஸத்யேந லப்யஸ் தபஸா ஹ்யேஷ ஆத்மா...... விரஜோ ப்ரஹ்மலோகঃ' என்றும், ஸத்யத்தால் ப்ருஹ்மலோகத்தை யடையலாம் என்று வேதம் சொல்கிறது.

**அநவஸாதம்.** துக்கத்தை உண்டாக்கும் காரணங்களை நினைத்து வருத்தப்படாதிருக்கை; மனோபலமும் தைர்யமும் இருக்கவேண்டும். 'நாயமாத்மா பலஹீநேந லப்ய:' என்று ஶ்ருதி சொல்லுகிறது.

**அநுத்தர்ஷம்.** ஸாதாரண விஷயங்களில் உண்டான ஆநந்தத்திற்கும் ஸந்தோஷத்திற்கும் காரணம் நமக்கு இருப்பதை யிட்டுக் களிப்பும் மகிழ்ச்சியு மின்மை: அவ்வித மகிழ்ச்சியும் களிப்பும் த்யாந விரோதி. 'ஶாந்தோ தாந்த' என்று உபநிஷத் சொல்கிறது.

மேற்சொன்னவைகளை ஒருவன் உடைத்தாயிருந்து சாஸ்த்ரத்தால் விதிக்கப்பட்ட கர்மங்களை அநித்ய பலனை உத்தேசிக்காமல் செய்தால், நிஜமான பக்தி நிஷ்டையை அடைந்து, பக்வநிலையைப் பெற்றுப் பகவதாநந்தத்தை யடைவன். ஆக ஸாதநாத்யாயம் எனப்பட்ட மூன்றும் அத்யாயம் முற்றுப்பெற்றது.

* * * * * *

ஒருவன் இருக்கவேண்டிய படியைப் பூர்வாசார்யர்களில் ஒருவர் அடியிற்கண்டபடி அருளிச்செய்கிறார்.

"(பகவான் தவிர) புறம்புண்டான பற்றுக்களை யடைய வாஸனையோடு விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும், பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும், (அதாவது த்ருடமான அத்யவஸாயமாகிற பூர்ண நம்பிக்கை உடைத்தாயிருத்தல்) பேற்றுக்கு த்வரிக்கையும் (பகவானிடத்தில் ப்ரேமம் கனத்துப் பிரிவில் மஹா ஆற்றாமையுடன் அவனை அடைய அவஸரப்பட்டுத் துடித்தல்), இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களில் (எம்பெருமான் தனது நிகரற்ற கருணையால் அர்ச்சையாக எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளில்) ப்ரவணனாய்க் குணாநுபவ கைங்கரியங்களே போது போக்காகையும், இப்படியிருக்குமவர்கள் ஏற்றமறிந்து உகந்திருக்கையும், (திருவஷ்டாக்ஷரமாகிய) திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியதனாகையும், ஆசாரிய ப்ரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் எம்பெருமான் பக்கலிலும் க்ருதஜ்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞானமும் விரக்தியும் ஶாந்தியுமுடையனாய் இருக்கும் பரம ஸாத்விகனோடு ஸஹவாஸம் பண்ணுகையும் (இந்த வேதாந்த மதத்தை அநுஷ்டிப்பவனுக்கு) அவஶ்யாபேக்ஷிதம்."

மேற்குறித்த வாக்யத்தில் ப்ருஹ்மவித்யையில் ஒன்றாகிய ந்யாஸவித்யை அநுஷ்டிக்கும் ப்ரபந்நனுக்கு வேண்டியபடிக்கும், ப்ருஹ்ம ஸ்வரூபங்களில் ஒன்றாகிய அர்ச்சாவதாரத்தின் முக்யம் அறியும்படிக்கும் இந்த அதிகாரிக்கு வேண்டியவற்றைச் சுருக்கமாய் வெளியிடப்பட்டிருக்கிறது.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

---

ஸ்ரீ:.

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | | ரு. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. | ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |


ஸ்ரீ:.

ஸ்ரீமதே ஹயவதந பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீ[illegible] சரணாரவிந்தாப்யாம் நம:.

ஸ்ரீ[illegible] ஶ்ரீ[illegible] மஹாதேஶிகாய நம: ।

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய: ஸ்ரீரங்கநாத வாசக: ॥

# ஸநாதந தர்ம ஸம்ரக்ஷணம்.

(தொடர்ச்சி.)

'ஶமோதமஸ்தபஶ்ஶௌசம் க்ஷாந்திரார்ஜவமேவ ச । ஜ்ஞாநம் விஜ்ஞாநமாஸ்திக்யம் ப்ரஹ்மகர்ம ஸ்வபாவஜம்' என்கிற கீதா வசநப்படி ப்ராஹ்மணனுக்கு ஶமதமாதிகள் ஜந்மஸித்தம். இவற்றுடன், ஶ்ருதி ஸ்ம்ருத்யுக்த தர்மாநுஷ்டாநங்களைச் செய்து, புண்ய பரிபாகத்தினால் கடைசியாய் ஜ்ஞாநியாய், ஜீவாத்மாவானவன் பகவத் பாதாரவிந்தங்களை அடைகிறான். இப்படியே கீதாசார்யனும், 'பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே' என்று அருளிச்செய்திருக்கிறார்.

இன்னும் சிலர் 'நித்ய கர்மாநுஷ்டாநம் செய்யாவிட்டால் என்ன பாதகம்? பக்தியே வேண்டுவது; அதனால் பகவச்சரண கமலங்களை அடையலாம்' என்றும், அதற்கு ப்ரமாணமாக 'அநந்யாஶ்சிந்தயந்தோமாம்', 'யேயதாமாம் ப்ரபத்யந்தே', 'யோ யோ யாம் யாம் தநும் பக்த:' 'ஸம் ஸம்ஸாரவிஷாநுஹாவம்' இத்யாதி கீதா ஸ்ரீ ஸூக்திகளையும் சொல்லுகிறார்கள். அவர்கள், 'ஶ்ருதி ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாம் உல்லங்க்ய வர்த்ததே । ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ:' என்கிற பகவத் வாக்யத்தைக் கவனித்தார்களில்லை. முன் ஶ்லோகங்களுக்கும் அநுஷ்டாநத்துடன் கூடின பக்தியென்று சொல்லத்தான் பொருந்தும்.

கேவல பக்தியினால் பகவானை ஸாக்ஷாத்கரிப்பது ஸாத்யமாகுமோ? ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நத்தில், ‘யிமலாதிஶேஷி நீதம் நிஸர்கம் ஶாஶ்வதம் பரமேஶ்வரஷயோகம் யோகிவயமாஹு மநீஷ்ய: । விபிநவஸநகாஶ்ரித்ய யத்நாத் ஸ்ருதிபத்ஸாரம் தவ வரிஜநவாவம் காஸ்யெ காவ்யூத்தூ:’ என்று அருளிச்செய்தார்.

தேவேந்த்ராதிகள் கூட பரம புருஷனது பராக்ரமம் அறியாமல் மதிகலங்கி நின்றதாய் உபநிஷத் சொல்லுகின்றதே! முன்னொரு காலத்தில் தேவாஸுரயுத்தம் நடந்தது. அதில் பகவான் தேவர்கள் பக்கம் நின்று ஜயித்தார். பிறகு தேவதைகள், இந்த ஜயம் தங்கள் தங்களால் எனச் சொல்லிக் கலஹப்பட்டார்கள். அவர்கள் அஹங்காரத்தை அடக்கப் பகவான் அவர்கள் முன்னிலையில் ஓர் யக்ஷ ரூபேண அவதரித்தார். உடனே தேவர்கள் இதென்னவென்று அறிய அக்நியை அனுப்பினார்கள். அக்நி யக்ஷனிடம் சென்றதும்,

யக்ஷன் :—‘நீ யார்?’

அக்நி :—‘நான் அக்நி அல்லது ஜாதவேதஸ்’

யக்ஷன் :—‘உம்முடைய பராக்ரமம் என்ன?’

அக்நி :—‘பூமியிலுள்ள ஸகல வஸ்துக்களையும் கொளுத்திவிடுவேன்.’

யக்ஷன் :—(அக்நி முன்னிலையில் ஒரு த்ருணத்தை வைத்து) ‘ஆனால் இதைக் கொளுத்து பார்ப்போம்’ என்றான். அக்நி வெகு வேகத்துடன் த்ருணத்தைத் தஹிக்கச் சென்று, முடியாமல், திரும்பித் தன்னிருப்பிடம் வந்து சேர்ந்தான். உடனே தேவர்கள் வாயுவை அனுப்ப, அவனும் அவ்விதம் சென்று, ‘பூமியிலுள்ள ஸகல வஸ்துக்களையும் ஒரே அடியாகத் தூக்கிச் செல்வேன்’ என்று யக்ஷனிடம் கூற, அவனும் முன்போல் புல்லை வைத்து எடுக்கும்படி சொல்ல, வாயு அதை எடுக்கமுடியாமல் தனது இருப்பிடம் வந்தனன். பிறகு இந்த்ரனை அனுப்ப, யக்ஷன் மறைந்தான். அப்பொழுது ஆகாயத்தில் விளங்கிய பார்வதியைக் கண்ட புரந்தரன் ‘இந்த யக்ஷன் யார்?’ என்று வினவ, அவ்வுமையும், அவ் யக்ஷன் ப்ருஹ்ம மென்றும், அவனால் தான் உங்களுக்கு யுத்தத்தில் ஜயம் உண்டானதென்றும் உரைத்தாள்.



அதற்கு மேல், பரப்ருஹ்ம மென வருந்திப் பரிதபித்தார்கள் என்று கேநோபநிஷத்தில் மூன்றாவது கண்டத்தில் காணப்படுகிறது.

அப்படிப்பட்ட பகவானைக் கேவல பக்தியால் பார்க்க முடியுமா? கீழ்ச் சொன்ன தர்மாநுஷ்டானங்களிலும் ஸம்ப்ரதாய பகவதுபாஸநாதிகளிலும் எது அவரவர்கள் பெரியோர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோ அதையே ஆஶ்ரயிக்கவேணும். அப்படியே, ‘ஶிவாம்ஶ்ச ஸம்ப்ரதாயம்ஶ்ச ஸதாசாரம்ஶ்ச ஸேவேத । ஸம்ப்ரதாய பராவஸிதம் ஸம்ப்ரதாயவிதாம் ஸவேத ॥’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஶ்ருதியிலும், ஸம்ப்ரதாயாகதமான தேவதையை ஒருவன் உபாஸித்தால் இவ்விரண்டு தேவதைகளும் அவனைக் கைவிடுவதுமன்றி மஹாபாபியாகவும் ஆய்விடுகிறான் என்று உரைக்கிறது. இந்த ஶ்ருதியை ப்ரமாணமாகப் பரிக்ரஹித்து ஸ்ரீ நிகமந்த குருவரனும், ‘ஶக்திபேத நிஜாம்ஶதி தேவதா ஸம்ஶய த ஸ்வயமேதஜாஷதேவ்யம் ।’ என்று அருளிச்செய்திருக்கிறார்.

கீழே, வேதாத்யயநம் ஸாங்கமாக அப்யஸிக்கப்படவேண்டுமென்று உரைத்தோம். அவ்விதம், ஸகல ஶாஸ்த்ர வேதவேதாங்கங்களை அப்யஸித்தவனாயினும், ஆசார ஶீலனாக இல்லாவிடில் அவனுக்கு ஆமுஷ்மிக பலன்களை வேதாதிகள் தரமாட்டா. [‘ஆசாரஹீநம் ந புநந்தி வேதா யத்யப்யதீதா: ஸஹ ஷட்பிரங்கை: ॥ சந்தாம்ஸ்யேநம் ம்ருத்யுகாலே த்யஜந்தி நீடம் ஶகுந்தா இவ ஜாதபக்ஷா: ॥’] இறகு முளைத்த பறவை கூட்டை விட்டுப் பறக்குமாப்போல், ஶீலமில்லாதவன் அப்யஸித்த வேதாதிகள், அவனுடைய அந்த்ய காலத்தில் அவனைவிட்டு விலகிவிடுகின்றன. இதை அநுஸரித்தே, ‘ஆசார ப்ரபவோ தர்ம:’ என்றும், ‘யதோக்த வேதா: ப்ரதிஷ்டிதா:’ என்றும் சொல்லப்படுகிறது.

ப்ராஹ்மணர்களுக்கு ஶ்ரைஷ்ட்யத்தையும் வேதங்கள் கூறுகின்றன. வேதாத்யயநம் செய்த ப்ராஹ்மணனிடத்தில் ஸகல தேவதைகளும் வஸிக்கிறபடியால், அவர்களை அநுதிநம் ஸேவிக்கும்படியும், ‘ப்ராஹ்மணோ வை ஸர்வா தேவதா: - யாவதீர் வை தேவதாஸ்தா: ஸர்வா வேதவிதி ப்ராஹ்மணே வஸந்தி

'தஸ்மாத் ப்ராஹ்மணேப்யோ வேதவித்ப்யோ திவேதிவே நமஸ்குர்யாத்' என்று ஸ்ருதியும் சொல்லுகிறது. 'தைவாதீநம் ஜகத் ஸர்வம் மந்த்ராதீநம் து தைவதம் । தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் ப்ராஹ்மணா மம தேவதா ॥' என்றும் சொல்லப்படுகின்றது. ஆகலால், ப்ராஹ்மணர்கள் கௌதம ஸ்ம்ருதியில் சொல்லியபடி 40 - ஸம்ஸ்காரங்கள், 8 - ஆத்ம குணங்கள், இவைகளுடன் கூடினவர்களாய், விஸிஷ்ட ஸ்ரீ வைஷ்ணவர்கள் பஞ்ச ஸம்ஸ்காரங்களுடன் ஸாங்க வேதாத்யயநம் செய்து ஆஹிதாக்நிகளாய், [illegible] ஸ்வாத்யாய யோகஸம்பந்நா ஏவ [illegible] பாராயணர்களாயும், ஷட்கர்ம நிரதர்களாயுமிருந்து, ஆஸ்ரம தர்மங்களை ஸம்பாதிக்கவேண்டும்.

இவ்விதம் அநுஷ்டிக்த பாகவதர்களுக்குப் பகவானை ஸாக்ஷாத்கரிப்பது ஸ்ரமமாகுமோ? இவனையே பரப்ருஹ்ம ஸ்வரூபம் எனல் பொருந்துமே. புண்ய தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்து, திவ்ய தேஸயாத்ரை செய்து, திவ்ய மங்கள விக்ரஹங்களைத் தினம் ஸேவித்துவரும் பக்தனைவிட, மேற்சொன்ன பாகவதர்களுக்கே மேன்மை அதிகம் கூறப்பட்டிருக்கிறது. ஹஸ்திகிரி மாஹாத்ம்யத்தில் ப்ருஹஸ்பதிக்கு மஹர்ஷி ஸாபம் நேர்ந்த கதையை ப்ருகு மஹர்ஷிக்கு நாரதர் சொல்லுகிறார் :—

"ஒரு காலவிஸேஷத்தில் தேவேந்த்ரன் ஸபாஸநாரூடனாய் மஹர்ஷிகளைப் பார்த்து, 'ஓ! மஹர்ஷிகளே!! ஒருவன் மூன்று அக்நிகளையும் அநுதிநம் வளர்த்து, அதிதி பூஜைகள், வேத வேதார்த்த விசாரம், நல்லோர் ஸஹவாஸம், இவைகளைச் செய்து, பஞ்சமஹா யஜ்ஞங்களைத் தவறாமல் அநுஷ்டித்து, க்ருஹத்திலேயே பகவதாராதநம் செய்து கொண்டு வஸிக்கிறான். மற்றொருவன் அக்நித்ரய பஞ்சமஹா யஜ்ஞாதிகளையும் வீடுவாசல் முதலியவற்றையும் விட்டு, விரக்தனாய்த் தினந்தோறும் புண்ய ஸ்தலம் சென்று, தீர்த்தங்களில் ஸ்நாநம்செய்து, அர்ச்சாரூபியான அநாதி புருஷனைப் பணிந்து, சுத்த வநங்களில் சென்று தபஸ்செய்கிறான். இவ்விருவரில் யார் ஸ்ரேஷ்டர்? சொல்லுங்கள்' என்று தேவேந்த்ரன் கேட்க, மஹர்ஷிகள் ஸுரகுருவான ப்ருஹஸ்பதியைப் பதில் அளிக்கும்படி நியமிக்க, அவரும், 'திவ்யதேஸ யாத்ரை பண்ணினவரே உத்க்ருஷ்டர்' என்று தேவகோஷ்டியில் உத்



கோஷித்தார். உடனே மஹர்ஷிகள் மஹத்தான கோபங்கொண்டவர்களாய், 'ஸ்ருதி ஸ்ம்ருதி விஹித ஸத்கர்மங்களை நீர் நிஷேதித்ததால், நீர் பூலோகத்தில் அதி தரித்ரனான அந்தணனது புதல்வனாய்ப் பிறந்து, மஹத்தான கஷ்டங்களை அநுபவிக்கக்கடவீர்' என்று ஸபித்தார்கள். உடனே ப்ருஹஸ்பதி, மஹர்ஷிகள் ஸாபத்தின்படி பூலோகத்தில் பிறந்து, பல கஷ்டங்களை அநுபவித்து, தபோ மஹிமையால் வரதனை வணங்கி, த்வாபரயுகத்தில் பகவத் பூஜைசெய்து, பிறகு தேவலோகம்போய்ச் சேர்ந்தார்." இக்கதையினாலும் அநுஷ்டாநத்திற்கே ப்ராபல்யம் ஏற்படுகிறது. 'ஜந்மநா ஜாயதே ஸூத்ர: கர்மணா ஜாயதே த்விஜ:' என்கிறபடி ப்ராஹ்மண்யத்திற்குக் கர்மாநுஷ்டாநமே காரணமாகிறது. அதற்கு உபநயநம் முக்யம். ஆகலால் ப்ராஹ்மணர்கள் உபநயநமானதும் வேத வேதாங்கங்களை அத்யயநம் செய்து, ஆஸ்ரம தர்மங்களை ஸம்பாதித்து, ஐஹிகா முஷ்மிக பலங்களைப் பெறவேணுமென நிஸ்சயமாகிறது.

ஆனால் 'இக்காலத்தில் வேதாத்யயநம் செய்வது எப்படி முடியும்? அதனால், பணம் உத்யோகம் கௌரவம் முதலியன ஏற்படமாட்டாவன்றோ? தவிர, வேதம் அப்யஸித்தவரைச் சாந்தஸனெனவும் தூஷிக்கிறார்களே' என்று ஸங்கை ஜநிக்கலாம். ஸ்ரத்தை இருந்தால் எதுவும் கைகூடும். கலி மாஹாத்ம்யத்தினால் ஐஹிக ஸௌக்யத்திற்குப் பாஷாந்தராப்யாஸம் உத்யோகம முதலியன அவஸ்யமாக இருந்தாலும், காலையில் எழுந்திருந்து 11 - மணிக்குள் ஸ்நாந ஸந்த்யாதிகளைச் செய்து, பகவந் நிவேதிதாந்நங்களை புட்கொண்டு லௌகிக வ்யாபாரங்களைக் கவனிப்பதுடன், விடியற் காலத்தில் உபயுக்தமான உபநிஷதாதிகளையும் அத்யயநம் செய்து வரலாமே. வேதம் முழுவதும் அப்யஸிக்க யாரால் தான் முடியும்? வேதத்திற்கு முடிவு இல்லையென வேதமே உத்கோஷிக்கிறதே. இதற்கு உதாஹரணம் :—

முன்னொரு காலத்தில் பாரத்வாஜர் மூன்று ஆயு: ப்ரமாணங்களில் வேதங்களை அப்யஸித்து, நான்காவது ஆயு: ப்ரமாணம் வேண்டுமென்று தபஸ் செய்தார். பகவான் அவர்க்கு ப்ரத்யக்ஷமாகி, 'நான்காவது ஆயு: ப்ரமாணம் தந்தேன்; இதனால் நீ என்ன செய்யப்போகிறாய்?' என்று கேட்க, பாரத்வாஜர், 'ப்ருஹ்மசர்யத்துடனிருந்து அத்யயநத்தைப் பூர்த்தியாய்ச் செய்யபோகி

றேன்' என்றார். உடனே, பகவான் மூன்று மலைகளை உண்டு பண்ணி, ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு முஷ்டி எடுத்து, 'இந்த மூன்று மலைகள்போல வேதங்கள் இருக்கின்றன. மூன்று ஆயுஃ ப்ரமாணத்திலும் நீ அப்யஸித்தது இந்த மூன்று முஷ்டியே. பாக்கி நீ அப்யஸிக்காதது. வேதங்களுக்கு முடிவு இல்லை.' என்று அருளிச்செய்ததாக வேதமே சொல்லுகிறது. இவ்விதமிருக்க வேதத்தைப் பூர்த்தியாய் அப்யஸிக்க முடியாது.

ஆஸ்திக ஸார்வபௌமர்களே! கீழ்ச்சொன்ன விஷயங்கள் இல்லையென உபதேசிக்க ப்ரவ்ருத்தித்ததாய்த் திருவுள்ளம் பற்றக் கூடாது. 'ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி' என்கிற ஸ்ரீ கீதா ஸ்ரீ ஸூக்திப்படி, ஆஸுர ப்ரக்ருதிகளான சிலர் உத்தம வர்ணத்தில உதித்து, உத்யோகம் தநம் செல்வாக்கு பாஷாந்தர ப்ரபல பரிசயம் இவைகளின் மதங்களால் வர்ணாஸ்ரம தர்மங்களை வெறுத்து, வர்ண ஸாங்கர்யத்தைக் (Social reform) கல்பிக்க ஆங்காங்கு கூட்டங்கூடிப் பேசுகிறார்கள். நாமும், நமது சிறுவர்களும் அவர்களது மாயைவலையில் அகப்படாமல் 'பாஷண்ட ஷண்டிநாம் பரிஸரேஷு மாபூத' என்கிற ஸ்ரீமதாசார்ய ஸ்ரீ ஸூக்திப்படி பகவானை ப்ரார்த்தித்துக் கொண்டு, ஜாமருகர்களாக இருக்கவேண்டுமென்பதே நம் முக்ய நோக்கம்.

'யஸ்யாபிமாதவஸ்ய ஸித்ராணி யஸ்யாபிமாதவஸ்ய ஶாஸ்வதாः ।
யஸ்யாபிஷேவாநோ நோகேயஸ்யாபி ஸுஷுப்ஸிதः ॥'
'ஸாக்ஷாத் ஸாக்ஷாத்காரேவ ஹஸ்ஸ மூர்த்தஹஸ்தி.'

இதி ஶம்.

ஜயது ஜயது தேயம் தேவஷாநாம் ஸரோஜ:
ஜயது ஜயது ஜேஷ்டீ விக்ஷ்ஜேஸ ராணாம்
ஜயது ஜயது நித்யம் தீபிகா பத்ரிகாநः
ஜயது ஜயது ஶோபம் வஸ்யநு வாஸுதேவ:.

இதி ஶம்.

ஸ்ரீரங்கம். வே. தி. ச. திருமலைதாத தாஸன்.
ஸம்ஸ்க்ருத பண்டிதன்
பட்டுக்கோட்டை.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஹாரவாஹ ஹாஸ்ய ஹாணே நம:.

திருக்கச்சிநகர்

# பேருளாளன் பஞ்சரத்தினம்.

---

(முன் ஸஞ்சிகையின் தொடர்ச்சி.)

## வேற்று மகுடம்.

1. முன்னமொரு சிலையழகின் மாதுமீர் வாளனைய
முதுகோந்தி குலவேந்தனும்
முனைவாளி சுட்டளவில் கரியான கர்ப்பமணி
முடிராச புத்ரனுமலா
தன்னநடை யுடையபெண் ணுணுமா கத்திரு
வருட்செய்த சாமிமிகவு
மஞ்ஞானி யானவெனை யரைநொடியில் விஞ்ஞானி
யாக்குதலுனக் கருமையோ
உன்னத புசாதண்ட உத்தண்ட கோதண்ட
உக்ரசம ரப்ரசண்டா
உற்புல்ல தாமரச தளயுகள சமநேத்ர
உசிதசுகு மாரகர்த்ரா
கன்னிகா மணிபெருந் தேவிநய நாநந்த
கரகாஞ்சி புரநிவாசா
கனகமய வரசிகர நிகரகரி கிரிநிலய
கரமுகர தரவரதனே.

2. அண்டர்குல மெத்தனை யவைக்கேக நாதனீ
யகிலவத் துவுநின்பொருள்
அப்பொருளி லிவைதருதி யென்றிரங் கிலனின்னை
யடியே னிரத்தலிதுகேள்
மண்டுதிரை யெறிகங்கை வந்தநின் பதகஞ்ச
மறவாது சிந்தித்திடும்

மதியுதவ வேணுமது தருவையேல் வைகுந்த
வாழ்வெலா மெனதுகண்டாய்
புண்டரீ கவசிட்ட நாரதசு காதிமுனி
புங்கவத் தோத்ரபாத்ரா
புசகேந்த்ர பணசங்க ரங்கட னுதங்க
பூதரவ ராதபத்ரா
கண்டவிட மலினபசு பதிசாப கண்டனு
காகுத்த குலமண்டனு
கனகமய வரசிகர நிகரகரி கிரிநிலய
கரமுகர தரவரதனே.

3. அந்தமது ராபுரியில் ம்ருகமத படீரத்தை
யருளினு ளங்கவக்ர
மத்தனையு மக்கணமி மிர்த்தனையெ னப்புகல்வ
ரவ்விதமு னக்கருமையோ
இந்தநில முதிர்கருங் காலியடி வனைதுண்ட
மெனவலிது கோணலாகும்
என்மனது செம்மையாய் நிற்கும்வகை புரிவையே
லெளியனற் புதமடைகுவேன்
நந்தகோ பகுமார யதுகுலோத் தமவீர
நவநீத சோரதீரா
நாளீக நாபமது சூதனபு ராதனு
நரகாசு ரச்சேதனு
கந்தமத சலபத்ர கசராச ஸேவோப
காரகாஞ் சீவிகாரா
கனகமய வரசிகர நிகரகரி கிரிநிலய
கரமுகர தரவரதனே.

4. சங்கரனி ருத்தலிற் சுத்தமா னதுரசத
சயிலமதில் பரிசுத்தனுஞ்
சம்புவும காசுத்த நதியென்று கங்கைசடை
தாங்கினு னக்கங்கைநின்
பங்கயப தப்பரிச மொருகால மடைதலிற்
பரிசுத்தி பெற்றதென்பார்
பலகாலு முன்றுனை மனம்வைத்த பாகவதர்
பரிசுத்த மோதவசமோ.



அங்கசகி ரீடசம பீனகுச பாஞ்சாலி
யபிமான் தனரக்ஷகா
ஆலோல கல்லோல சாலகன கோலாக
லாம்போதி யோகசயனு
கங்கணவி ராசிதக ரத்வந்த்வ மேதினீ
காந்தாம ணுநாயகா
கனகமய வரசிகர நிகரகரி கிரிநிலய
கரமுகர தரவரதனே.

5. அச்சகடு தைத்தலகை யாருயிரு முலையுமுண்
டன்றுகன் றுல்விளவெறிந்
தப்புள்ளின் வாய்கிழித் தானையவ தைத்திகவி
யடுமல்லர் தமையழித்துத்
துச்சரித கஞ்சனைக் கொன்றனையெ னப்புகல்வர்
துர்வார மத்தசித்த
துட்டனே னுலகினிற் புரியகா டாவியுந்
துணிக்கின்மிக விசையுண்டுகான்
மச்சகன கச்சபவ ராகநர சிம்மவா
மனரூப பரசுராமா
மனுவம்ச ராமபல ராமமோ கனக்ருஷ்ண
மகனீய துரகவேஷா
கச்சனவி சாலநய னத்துவய பெருந்தேவி
காமினீ சேவநாதா
கனகமய வரசிகர நிகரகரி கிரிநிலய
கரமுகர தரவரதனே.

## வேற்றுமகுடம்.

1. மச்சங்கு தித்துமணி மழைதடவி வருவேக
வதியாறு நடுவீதியும்
வான்மதியை முத்தமிடு கோபுரமு மிலகுபொன்
மதிலும்ப டைத்துடையநின்
கச்சிநகர் மேவிவாழ் பாகவதர் விரசைசூழ்
தன்னிவை குந்தபுரியைக்

காணவினை யாரந்த வைகுந்த நித்யரிக்
கச்சிதொழ விச்சிப்பர்காண்
நிச்சங்க நிர்ப்பய நிராமய நிரஞ்சன
நிராகார நிர்வ்யாகுலா
நிர்த்வந்த்வ நிரதிசய நித்யவை பவநிகில
நிகமசன் னுதநிருபமா
அச்சுதா நந்தித வகண்டித வபங்குர
வசஞ்சல வனந்தநாமா
அர்க்கசசி நயனயுக சக்ரகர தலவரத
வத்திகிரி சிகரமணியே.

2\. பண்டுகண் டாகர்ணன் காகாசு ரற்குமருள்
பண்ணினைப ணிந்தமையினல்
பார்க்கிலோ சிலதீயர் தாழ்வினற் சார்வைப்
படைத்தமை குறித்தவைக்கும்
மண்டலத் துதவிசெய் தனைசுகிர்த லேசமறு
மாபாவி யாகுமெனையாள்
வாயென்னின் முன்பெற்ற புகழிரு மடியாகி
வருபுகழை யடைவைகண்டாய்
சண்டதம தம்போளி சமசஞ்சு மஞ்சுதர
சத்கண்ட கருடதுரகா
சத்குணத் தோமமே சுச்யாம சிரங்க
தாமசுர சார்வபௌமா
அண்டபரி பூர்ணமணி குண்டல த்வயகர்ண
வாசானு பாகுயுகளா
அர்க்கசசி நயனயுக சக்ரகர தலவரத
வத்திகிரி சிகரமணியே.

3\. வேகவதி தீர்த்தில் வந்தபெரு மாள்பிரமன்
வேள்விக்கு கந்தபெருமாள்
வீறியதி ருக்கச்சி நம்பியொடு வாசகம்வி
ளம்புபெரு மாளவனியில்
பிகரா சுரவேட்டை யாடுபெரு மாணல்ல
பெண்ணையா ளுக்குமெங்கள்
பெருமா ளெனத்தின முனைத்துதி நரர்க்குவரு
பேறச்சு ரர்க்குமுளதோ



சிகரச டாரிப்ர காலமுக வாரிசதி
வாகரபு ராரிவினுதா
செகத்கார ணசதுர்த் தசபுவன பாரண
திவ்ய துளசீபூஷண
ஆகவார்ச் சுனசூத நீளாச மேதவனி
லாத்மசர மப்ரதோ
அர்க்கசசி நயனயுக சக்ரகர தலவரத
வத்திகிரி சிகரமணியே.

4\. தாசானு தாசன மவனைத் தலைக்கறி
சமைத்திடுக வென்றுசற்றுந்
தயவிலா தோதுபர தேவர்மிக நாணவுஞ்
சன்னிதியி லாலவட்டம்
வீசோர்தி ருக்கச்சி நம்பிக்கொ ராளாகி
வேலைசெய் தனையாதலால்
வீறியவு னக்காகு மருளாள னெனுநாமம்
வேறுதே வர்க்காகுமோ
வாசாம கோசரகு ணதிசய கோபால
வரவேணு கானலோலா
மதனமத னுகுந்த முகுளரத னுபக்த
மானச பவித்ரசதன
ஆசிவி ஷோபமமு ராந்தகா சயராவ
ணசுரா னுசபாந்தவா.
அர்க்கசசி நயனயுக சக்ரகர தலவரத
வத்திகிரி சிகரமணியே.

5\. கனதரங் கத்திருவ ணந்தசர சாடாத
காயம்வெங் காயநின்னைக்
கங்கைகொண் டான்மண்ட பத்தினிற் கலுழன்மிசை
காணாத கண்கள்புண்கள்
தினமுனைப் பணியாத முடிகணடு முடிவலஞ்
செய்யாத கால்பந்தலிற்
சேர்கால்தொ மாதகை யுலக்கைதுதி பண்ணாத
சிலவாய்கள் பிலவாய்கள்காண்
வனசபவ விநுதமன சிசனக கனகனித
வசனசுப நளினவதன

## வேதாந்த தீபிகை.

மாரீச தானவவி ஞசபர மாகாச
வைகுண்ட புரவரேசா
அநுபமம கோற்சவா கேசவா ரத்னமய
காரகாஞ் சிவிகாரா
அர்க்கசசி நயனயுக சக்ரகர தலவரத
வத்திகிரி சிகரமணியே.

பொருளாளன் பஞ்சரத்தினம்
முற்றுப்பெற்றது.

கோ. ஸுதர்ஸநாசார்யன்

---

ஸ்ரீ:

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்

ஸ்ரீ. வாஸுதேவாசார்யரால்

இயற்றப்பட்ட.

தமிழ் வ்யாக்யாநத்துடன்

விலை. ரூபா. 1—0—0.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்,
மாம்பலம், சைதாபேட்டை.
மதிராஸ்.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

## பகவத் ப்ரார்த்தனை.

'அந்நம் வா தநம் வஸ்த்ராண்யாயுராரோக்யமேவ ச।
ஆபத்யபி ந யாசேத பக்த: ஸாத்வதோத்தம:'

[பகவானை ஆராதிக்குமொருவன் அந்தப் பகவானிடமிருந்து, அன்னம் பானம் தனம் வஸ்த்ரம் ஆயுஸ் ஆரோக்யம் பதவி முதலிய எவ்வித பலத்தையும் எந்த ஆபத்காலத்திலும் யாசிக்கக்கூடாது] என்று த்ருஷ்ட பல ப்ரார்த்தனையானது நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது. த்ருஷ்ட பலங்கள் மநுஷ்யனுக்கு ஹிதங்களல்லவென்றும், அவை அஹிதங்களானபடியால் அவைகளை யாசிப்பது மஹத க்ருத்யமென்றும், பக்தி ஜ்ஞாநம் பாகவத கடாக்ஷம் முதலியவை ஹிதங்களானபடியால் அவைகளை யாசிப்பதால் தோஷமில்லையென்றும்

'த்வத்பாதபக்திஜ்ஞாநாப்யாம் பலமந்யத்கதாசந।
ந யாசேத் ப்ரணதோ விஷ்ணும் யாவந்நாஸ்தி யுகக்ஷய:'

இத்யாதி வாக்யங்களால் ஏற்படுகின்றது. இம்மாதிரியான நிஷேதத்தின் கருத்தை நாம் சற்று விசாரிப்போம்.

இந்த லோகத்தில் ப்ராயேண எல்லா ஜனங்களும் ஐஹிகபோகங்களை அபேக்ஷிப்பவர்களாகவும் பரமாத்ம ஸம்பந்தங்களான வஸ்துக்களில் விரக்தர்களாகவும் இருக்கிறார்கள் என்பது ஸ்பஷ்டம்.

'ஸநத்குமாராத்யா விஷயாவஸந்நசேதஸ உ ஸம்பதீ।
ந வவ்ருரே வைகுண்டம் ஹி மோக்ஷதம் தே ஸநாதநா'

மஹாதபஸ்விகளாகவும் ப்ரஹ்ம புத்ரர்களாகவுமிருந்த ஸநதபஸ் முதலிய மஹான்கள்கூட ஸாக்ஷாத் பகவத் தர்ஸநத்தைப் பெற்றும் க்ராம்ய போகத்தில் இச்சையுள்ளவர்களாகவே மோக்ஷத்தை யாசியாமல் வேறு வரனையே வரித்தார்கள். தவிரவும், ஸம்ஸாரத்தில் ஏற்படும் தாபங்களும் அவைகளால் ஸம்பவிக்கும் தைந்யமும் உண்மையே. அம்மாதிரியான தாபங்களின் நிவ்ருத்தியை நாம் அபேக்ஷிக்காமல் இருப்பது என்பது ஸாத்யமான விஷயமாகுமோ? அப்படி அபேக்ஷியாமலே இருக்கவேண்டுமென்று ஸாஸ்த்ரங்

கள் தாம் விதிக்குமோ? இத்யாதியான ஶங்கையின் நிவ்ருத்யர்த்தமே இந்த விசாரம் செய்யப்படுகின்றது.

லோகத்தில ஒவ்வொரு ஜநத்தின் அதிகாரம் ஒவ்வொரு விதம். ஐஹிக போகங்களின் அநுபவத்தில் நோக்கமுள்ளவர்களெல்லாரையும் புபுக்ஷுக்களென்றும், மோக்ஷத்தையே கருதுமவர்களெல்லாரையும் முமுக்ஷுக்களென்றும் ஸாமாந்யமாக ஜநங்களை இரண்டுவித அதிகாரிகளாகப் பிரிக்கலாம். அவர்களுள் முமுக்ஷுக்களாக இருக்குமவர்கள் த்ருஷ்ட பலங்களில் எப்பொழுதாவது ப்ரமாதத்தால் அபிநிவேஶத்தைச் செய்வது பாதகாவஹமாகுமாதலால் அவர்கள் அந்நாதிகளை உத்தேஶித்து பகவானை ப்ரார்த்திப்பது தோஷமென்றே க்ரஹிக்கப்படும். அவர்களை நோக்கியே இந்த த்ருஷ்ட பல ப்ரார்த்தனை நிஷேதிக்கப்படுகின்றது. புபுக்ஷுக்களைப்பற்றி இம்மாதிரியான நிஷேதத்தை ஶாஸ்த்ரம் செய்ய ப்ரவ்ருத்திக்காது. யதார்த்தமான தத்வஜ்ஞாநம் ஏற்படாமல் ஸாம்ஸாரிக துக்கங்களால் ஆயிரக்கணக்கான தாபங்களை அநுபவித்து வரும் நம்மை நமது ஹிதத்தையே தேடும் நோக்கமுள்ள ஶாஸ்த்ரம் அநாதரித்து நிற்குமோ? நமது பரம பிதாவாக இருக்கும் பகவான் நாம் வருந்துவதை உபேக்ஷித்திருப்பானே? அப்படி அவன் இருந்தால் அவன் ரக்ஷகன, நாம் ரக்ஷ்யர்கள் என்னும் ஸம்பந்தம் எப்படி உண்மையாகும்? ஸகல கல்யாண குண கணங்களானும் நிறைந்துள்ள ஈஶ்வரனிடத்தில் வாத்ஸல்யம் ஸௌஶீல்யம் முதலிய குணங்கள் இல்லாமல் இருக்கக்கூடுமோ? ஆகையால், பசியால் வருந்தும் ஒரு ஏழையை 'நீ அந்நத்தை யாசிக்கக் கூடாது' என்றாவது, நோய்களால் வருந்தும் ஒரு வ்யாதிதனை 'நீ வ்யாதி நிவ்ருத்தியை ப்ரார்த்திக்கக்கூடாது' என்றாவது பகவான் நிஷேதிப்பான் என்பது ஸர்வப்ரகாரத்தாலும் அஸம்பவம். ஶாஸ்த்ரத்தைப் பார்க்குமளவிலும், அவன் நம்முடைய பரமஹிதைஷியென்றும் நம்முடைய அல்ப துக்கங்களையும் நிவ்ருத்தி செய்யும் ஸ்வபாவமுள்ளவனென்றும் தெரிய வருகிறது.

‘𑌵𑍍𑌯𑌸𑌨𑍇𑌷𑍁 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌭𑍃𑌶𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌃 ।
𑌉𑌤𑍍𑌸𑌵𑍇𑌷𑍁 𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌪𑌿𑌤𑍇𑌵 𑌪𑌰𑌿𑌤𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 ॥’

[தன்னை ஆஶ்ரயித்த ப்ரஜைகளுக்குள் யாராவது ஒருவனுக்கு ஏதாவது ஒரு வ்யஸநம் நேர்ந்தால், அந்த வ்யஸநம் தனக்கு நேர்ந்ததுபோலவே மிகவும் துக்கிப்பான் ராமன். அவர்களுக்குள் யாராவது ஒருவன் ஒரு ஆநந்தத்தை அநுபவித்தால் அதைப் பார்த்து பிதா போல களிப்பான்] என்று ப்ரஜைகளுடைய துக்கத்தால் துக்கிதனாகவும் அவர்களுடைய ஸுகத்தால் ஸுகிதனாகவும் பகவான் இருப்பதாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

‘𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌮 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌮𑌭𑌵𑌨𑍍 𑌕𑌥𑌾𑌃 ।’



என்று அவரிடத்தில் ஜநங்கள் வைத்திருந்த ப்ரேமையின் ஸௌக்ஷ்மம் இதுவன்றோ? கேவலம் அவர் பரமைகாந்தி பக்ஷபாதியாக இருந்தால் யார் அவரை நேஸித்திருப்பார்?

துர்யோதநனுடைய துர்த்யூத ஸதஸ்ஸில் துஶ்ஶாஸநனுடைய தௌஷ்ட்யத்திற்கு ஆளாகி அவமாநம் தாங்கமாட்டாமல்,

‘𑌶𑌂𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌪𑌾𑌣𑍇 𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌾𑌨𑌿𑌲𑌯𑌾𑌚𑍍𑌯𑍁𑌤 ।
𑌗𑍋𑌵𑌿𑌂𑌦 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷 𑌰𑌕𑍍𑌷 𑌮𑌾𑌂 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌾𑌮𑍍 ॥’

என்று கதறி அழுத த்ரௌபதியை பகவான் உடனே அநுக்ரஹித்து அவமாநத்திலிருந்து ஸம்ரக்ஷித்தானன்றோ? அப்படி ஸம்ரக்ஷித்திருந்தும், அவளுடைய ஆர்த்திக்கும் பக்தியின் உறுதிக்கும் அநுகுணமான ஸம்ரக்ஷணத்தைத் தாம் செய்யவில்லை போல,

‘𑌗𑍋𑌵𑌿𑌂𑌦𑍇𑌤𑌿 𑌯𑌦𑌾𑌕𑍍𑌰𑌂𑌦𑌤𑍍 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌮𑌾𑌂 𑌦𑍂𑌰𑌵𑌾𑌸𑌿𑌨𑌮𑍍 ।
𑌋𑌣𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑌮𑌿𑌵 𑌮𑍇 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌪𑌸𑌰𑍍𑌪𑌤𑌿 ॥’

[எனது பக்தையான த்ரௌபதி துக்கம் ஸஹியாமல் என்னைக் கூப்பிட்டுக் கதறினளே! அது பெரியதொரு கடனாக என் மீது வளர்ந்துகொண்டு என்னை வருத்துகிறதே!] என்று பகவான் ஶோகித்ததாக நாம் புராணங்களில் படிக்கிறோம்.

‘𑌵𑌿𑌷𑌾𑌨𑍍𑌮𑌹𑌾𑌗𑍍𑌨𑍇𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌦𑌦𑌰𑍍𑌶𑌨𑌾-
𑌦𑌸𑌤𑍍𑌸𑌭𑌾𑌯𑌾 𑌵𑌨𑌵𑌾𑌸𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌤𑌃 ।
𑌮𑍃𑌧𑍇 𑌮𑍃𑌧𑍇𑌽𑌨𑍇𑌕𑌮𑌹𑌾𑌰𑌥𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑍋
𑌦𑍍𑌰𑍌𑌣𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮 𑌹𑌰𑍇𑌽𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 ॥’

பாண்டவர்களை நஶிப்பிப்பதற்காக துர்யோதநன் கணக்கற்ற உபாயங்களைத் தேடினன். விஷத்தைக் கொடுத்தான்; தீயிட்டான்; ராக்ஷஸர்களை ஏவினன்; அஸத்ஸபையொன்றைக் கூட்டினன்; காட்டுக்குத் துரத்தினன்; யுத்தத்தில் பீஷ்மாதிகளைக் கொண்டும் அநேக தீங்குகளைச்செய்ய முயன்றான்; யுத்தத்தில் பீஷ்மாதிகளைக் கொண்டு மஹத்தான அஸ்த்ரங்களை ப்ரயோகம் செய்வித்தான்: இவைகளெல்லாவற்றிலுமிருந்து பாண்டவர்களை பகவான் காப்பாற்றினானன்றோ?

‘𑌆𑌪𑌾𑌨𑌾𑌰𑍋𑌹𑍍𑌯 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌸𑍋𑌮𑌾𑌂 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌷𑌙𑍍𑌗𑌿
𑌦𑌦𑌾𑌤𑌿 𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍇𑌵 𑌹𑌰𑌿𑌃 ॥’ [காநு।

[பகவான் மோக்ஷப்ரதனாக இருக்கையிலும், தன்னை த்யாநிக்குமவர்களுக்கு ஸகல போகங்களையும் கொடுக்கிறான்.]

'[illegible]'

[தர்மத்தைவிட்டு விலகாமல் இருப்பவர்களுக்கு ஒருபொழுதும் ஆபத் என்பது இல்லை.] இத்யாதியான வாக்யங்களும் பகவான் த்ருஷ்ட பலத்தையும் கொடுக்கிறான் என்றே சொல்லுகின்றன.

உண்மை யென்னவென்றால்—நமக்கு ஶாஶ்வதமான ஶ்ரேயஸ் மோக்ஷமே. ஆகையால், நாம் அதையே ப்ரார்த்திக்க வேணும். ஆனால், அநேக கோடி ஜந்மங்களாக பற்பல கர்மங்களைச் செய்து அதன் வாஸனையால் ஆக்ராந்தர்களாய் ஸம்ஸாரத்தில் உழலுகிறவர்களே ப்ரபஞ்சத்தில் பெரும்பாலும் தென்படுகிறார்கள். அவர்களுக்கு ஐஹிக போகங்களில் வைராக்யம் ஜநிக்காது. ஆகையால், அவர்கள் முமுக்ஷுக்கள் ஆகார். புபுக்ஷுக்களாக இருந்து இஷ்ட வியோகத்தாலும் அநிஷ்ட ஸம்யோகத்தாலும் வருந்தி, அந்த வருத்தத்திலிருந்து நிவ்ருத்தியடையும்பொருட்டு பகவானை ஆஶ்ரயிக்கிறார்கள். அவர்கள் விஷயத்தில் பகவான் இரங்கி அவர்களால் ப்ரார்த்திக்கப்படும் பலங்களைக் கொடுக்கிறான் என்பதுதான் ஶாஸ்த்ரத்தின் ஹ்ருதயம்.

'[illegible]
[illegible]'

என்கிறபடி நாம் அவன் திருவடிகளை நிர்வ்யாஜமாக ஆஶ்ரயிப்பதுதான் இந்த பல ப்ராப்திக்கு முக்கிய ஹேதுவாகின்றது. இம்மாதிரியான அல்ப பலங்களைக் கொடுப்பது தேவதாந்தரங்களின் ஶீலமென்றும், மோக்ஷ ப்ரதாநம்தான் பகவான் செய்யக்கூடுமென்றும் சிலர் சொல்வார்கள். அப்படிச் சொல்வதால் பகவானுக்கு இந்த அல்ப பலங்களைக் கொடுக்க ஶக்தி இல்லையென்றுவது, பகவான் அவைகளைக் கொடுக்கமாட்டானென்றுவது அவர்கள் சொன்னதாகாது.

'சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோऽர்ஜுந।
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப॥
உதாராஸ்ஸர்வ ஏவைதே'

ஐஶ்வர்ய ப்ரம்ஶத்தால் வருந்துவார்த்தி தீரவேணுமென்னும் ஆசையுடையவனும், தனம் வேணுமென்று அபூர்வ ஐஶ்வர்யத்தில் ஆசையுடையவனும், ப்ரக்ருதி வியுக்த ஆத்ம ஸ்வரூப அவாப்தியில் இச்சையுடையவனும், பகவானுடைய சரணத்தையே அர்த்திப்பவனுமான இவர்களெல்லாரையும் பகவான், தம்மை அவர்கள் ஆஶ்ரயிப்பதையே உபகாரமாக அநுஸந்தித்து, நிதி கொடுப்பாரை ப்ரதிக்ருஹீதாக்கள்போல, அத்யுதாரர்களென்று புகழ்ந்து பேசவில்லையோ?

'மாதா பிதா ப்⁴ராதா......நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத்'

என்னும் உபநிஷத் வாக்யத்தை நாம் மறக்கக்கூடாது.

ஓர் தத்வ விமர்ஶி.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:.

# ஒன்பதாவது

# ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம்.

ஏற்கெனவே விஜ்ஞாபநம் செய்துகொண்ட ப்ரகாரம் இவ்வர்ஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம் திருவஹீந்த்ரபுரத்தில் நடைபெறுகிறது. அதன் க்ரமம் பின்வருமாறு இருக்கும். மார்கழி 13வ ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு உபக்ரமம். திருவஹீந்த்ரபுரம் ஸ்வாமிகளின் ப்ரதிநிதியாக இருக்கும், ஸ்ரீ. உப. டி. இ. ஶடகோபாசார்ய ஸ்வாமியின் ஸ்வாகத ப்ரஶ்நாநந்தரம், ஸ்ரீ. உப. மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கபிஸ்தலம் தேஶிகாசாரிய ஸ்வாமியின் அக்ராஸநாதிபத்ய ஸம்பந்தமான உபந்யாஸம். அதற்குப் பிறகு அன்றியதினத்திலும் அடுத்து வரும் மூன்று தினங்களிலும் மேல் குறித்திருக்கிறபடி உபந்யாஸங்கள் செய்யப்படும்.

(1) 'ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்ய ஸார்வபௌமத்வம், லோக ஹிதைஷித்வம் ச'—திருவையாறு ஸம்ஸ்க்ருத பாடஶாலை, ஸ்ரீ. உப. வேதாந்தாசார்யர்.

(2) '[illegible] ஶதகம்'—ஸ்ரீ. உப. சேட்லூர் பகவத் விஷயம் நரஸிம்ஹாசார்யர்.

(3) '[illegible]'—ஸ்ரீ. உப. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர்.

(4) 'திருச்சந்த விருத்தம்'—ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

(5) 'ஸ்ரீ வைஷ்ணவ பஞ்ச ஸம்ஸ்காரா:'—ஸ்ரீ. உப. புலவனூர் தேஶிகாசார்யர்.

(6) 'கஜேந்த்ராழ்வான் விஷயத்தில் ஆழ்வார்களின் அநுபவம்'—ஸ்ரீ. உப. ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யர்.

(7) 'அவதார வைபவம்'—ஸ்ரீ. உப. வாஜபேயம் வீரராகவ தாதாசார்யர்.

(8) 'ஜீவ ஸ்வரூப ஸ்வபாவ:'—ஸ்ரீ. உப. ஈயுண்ணி ஸ்ரீநிவாஸாசார்யர்.

(9) 'ஸ்ரீ ஸம்ப்ரதாய வைசிஷ்ட்ய:'—ஸ்ரீ. உப. மதுராந்தகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

(10) 'ஸம்ஸ்க்ருத பாஷாபிவ்ருத்தியும் ஆலய பரிஷ்காரங்களும்.' ஸ்ரீ. உப. வேங்கடாத்ரிஹரம் அநந்தாசார்யர்.

(11) 'வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநம்'—ஸ்ரீ. உப. அக்நிஹோத்ரம் கோபால தேசிகாசார்யர்.

(12) 'பரதேவதா பாரமார்த்ய'—ஸ்ரீ. உப. பாஷ்யம் ரங்க ராமாநுஜாசார்யர்.

இந்த உபந்யாஸங்களுடன் வித்வத் ஸதஸ் ஒன்றும் நடைபெறும். முதல் மூன்று தினங்களில் இராத்திரி தநூயாராதநாநந்தரம் ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தின் அபிநயமொன்றை நடத்துவதாக ஸ்ரீ. உப. சேட்லூர் நரஸிம்ஹமாசார்ய ஸ்வாமி மிகுந்த குதூஹலத்துடன் அதற்கு உசிதமான ப்ரயத்நங்களைச் செய்து கொண்டிருக்கிறார். நாலாவது இராத்திரியில், திருச்சினாப்பள்ளி மெடிகல் ஆபீஸ் ஹெட் கிளார்க் ஸ்ரீ. உப. எஸ். ஸௌந்தரராஜ ஐயங்கார் என்பவர் 'குசேல சரித்ரம்' என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு ஹரிகதா ப்ரவசநத்தை காநத்துடன் செய்வார். இவை யெல்லாவற்றையும் கேட்டும் பார்த்தும் ஸகல ஆஸ்திகர்களும் ஆநந்தத்தை அநுபவிக்கவேணுமென்பது ஸபா ப்ரவர்த்தகர்களின் ப்ரார்த்தனை.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 10.] ஸித்தார்த்தி ஹு மார்கழி மீ [ஸஞ்சிகை 3

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9 33 ]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

பாஷாந்தரத்தில், 'இச்சையானது யோசனைக்குப் பிதா' என்று ஒரு பழமொழி உண்டு. விஷய விவேசநம் செய்ய ஸக்தர்களான க்யாதியுள்ளவர்களும், இச்சாப்ரயுக்தமாக ஜநிக்கின்ற எண்ணங்களைத் தத்வமென்று அப்யுபகமம் செய்கின்றார்கள். பெருமாள் கோவிலில் சில காலத்துக்குமுன் வாஸம்பண்ணின ப்ரதிவாதி பயங்கரம் அநந்தாசார்யஸ்வாமி உத்தரதேசங்களில் பஹுகாலமாக ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்தார். ஸமீபகாலத்தில் அந்த ஸ்வாமி பாண்டியநாட்டிற்கு எழுந்தருளி அங்கே கூடிய ஒரு ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸில் அத்யக்ஷதையை வஹித்தார். அப்போது அந்த ஸ்வாமி, பகவத் ராமாநுஜன் வர்ணஸாங்கர்யத்திலும் வைதிக கர்மங்களின் ஸ்வரூப த்யாகத்திலும் அநுகூலாபிப்ராயம் கொண்டதாக உபந்யஸித்தாரென்று ஒருவர் பேபர்களுக்கு எழுதிவிட்டார். இது இப்படி யன்றென மற்றொருவர் எழுதினபோதிலும், சிலர் த்ருடபூர்வபக்ஷர்களாகவே பரிணமித்தார்கள். அவர்கள் வர்ணஸாங்கர்யத்தில் ரமித்தவர்கள். ஆதலால் வர்ணாச்ரமதர்மங்கள் அவர்களுடைய சித்த ஸமா

தாநத்தைத் தடுக்கின்றன. அந்த விஷயங்களில் தாங்களே ஒரு நூதந ஸமாஜ ஸ்தாபகர்களாக இருப்பதைவிட்டு, ப்ராசீந ஆசார்யர்களிலும் தங்களுக்கு அநுகூலர் ஒருவர் வேண்டுமெனும் இச்சையால் தடுமாறிக்கொண்டிருந்தார்கள். அந்த ஸமயத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் அவர்களுடைய அபிப்ராயத்தில் கலந்தவரென்று ஒரு பண்டிதாப்யுபகமம் கிடைத்ததென ஒரு மநுஷ்யன் சொன்னதே அவர்களுக்குப் போதுமான ஸாதகமெனத் தோன்றி விட்டது.

ப்ரதிவாதி பயங்கரம் ஸ்வாமி மேலே குறித்தபடி உபந்யஸித்தாரென்பது நம்பக்கூடிய விஷயமன்று; அந்த ஸ்வாமி ஸம்ப்ரதாய பரிசயமற்றவரன்று; யதிராஜ ஸூக்தி தாத்பர்ய மறியாதவரன்று. இன்னும், தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களும் இது வரையிலும் வர்ண ஸாங்கர்யத்தில் ப்ரவ்ருத்திக்கார்களில்லை; வர்ண வரம்புகளை அதிக்ரமித்து அவர்கள் விவாஹாதி ஸம்பந்தங்கள் பண்ணிக்கொள்ளவில்லை. அந்த ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குள் பல ஜாதியார்களும் சேர்ந்து ஸஹபோஜநம் செய்யவில்லை. வைதிக தர்மங்கட்கு ஆத்யந்திக த்யாகத்தையும் அவர்களில் ப்ராஹ்மணர்கள் கொண்டாடவில்லை. ஆகையால் ஒரு பண்டிதர், மேலே சொன்னபடி, பாஷ்யகாரர் அபிப்ராயப்பட்டார் என்று சொல்ல விரகில்லை. அப்படிச் சொன்னது வாஸ்தவமானால் அது அத்யந்தம் அநாதரணீயம்.

பாஷ்யகாரருடைய க்ரந்தங்கள் யாவராலும் பரிசயம் பண்ணக்கூடியவைகள். அபஶூத்ராதிகரண ந்யாயத்தை ஒப்புக்கொண்டு ப்ரஹ்மவித்யாதிகாரம் அத்விஜர்க்கில்லை யென்றும், விஹிதத்வாதிகரண ந்யாயத்தை அங்கீகரித்து, வித்யாஸஹகாரித்வேந த்விஜர்கள் ஆஶ்ரமகர்மங்களை நியமத்துடன் அநுஷ்டிக்கத்தக்கவரென்றும் ஸ்ரீபாஷ்ய பங்க்திகள் காணப்படுகின்றன. ப்ரதம ஸூத்ர பாஷ்யத்தில் பலவிடங்களிலும், ப்ருஹ்மப்ராப்திக்கு ஸாதநபூதஜ்ஞாநமானது ஸர்வாஶ்ரம கர்மாபேக்ஷம் எனும் ந்யாயம் ஶ்ருதி ஸ்ம்ருதி ப்ரமாணங்களுடன் நிஶ்சயிக்கப் பட்டிருக்கின்றது. இன்னும் உள்ளிப்பூண்டு வெங்காயம் முதலான ஜாதி துஷ்டங்களான அந்நங்களையும், பதித சண்டாளாதிகளுடைய ஸம்பந்தங்களால் ஆஶ்ரய துஷ்டங்களான அந்நங்களையும், உச்சிஷ்டாதி நிமித்த தோஷதுஷ்டங்களான அந்நங்



களையும் முற்றிலும் விலக்கவேண்டிய நியமமும் அங்கே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. கீதா பாஷ்யத்திலும் பலவிடங்களில், ஒவ்வொருவர்க்கும் ஸ்வகர்மாநுஷ்டாநம் விதிக்கப்பட்டிருக்கின்றது; ஸ்வகர்மஸ்வரூப த்யாகம் நிஷேதிக்கப்பட்டுமிருக்கின்றது. பரமைகாந்தியானவன், தன்னுடைய ஆத்மா பகவத் ஶரீரமாகின்றபடியால், பகவததீநமான ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளுடன் கூடியதென்கிற தத்வாநுஸந்தாநத்தைப் பண்ணிக்கொண்டு, தன்னால் அநுஷ்டிக்கப்பட்ட ஸர்வ கர்மங்களும் பகவானாலேயே பண்ணப்பட்டவைகளென்று நினைத்து, அவற்றால் பகவான் ஸ்வயமேவ ஆராதிக்கப்படுகின்றானென்று விஶ்வஸித்து, அக்கர்மங்களுடைய பலங்களில் தனது ஆசையைத் தவிர்த்து, அவை தன்னால் அநுஷ்டிக்கப்பட்டவை எனும் மமதையை விலக்கி, ஸ்வதர்மங்களைச் செய்யக்கடவன் என்று ஸ்ரீபாஷ்யகாருடைய திருவுள்ளம். 'ஸ்வகீயேநாத்மநா கர்த்ரா ஸ்வகீயைஶ்ச கரணை: ஸ்வாராதநைகப்ரயோஜநாய பரமபுருஷ: ஸர்வஶேஷீ ஸ்வஶேஷபூதம் இதம் ஸ்வயமேவ ஸ்வகர்மாணி காரயதி' என்கிறபடியே அநுஸந்தாந க்ரமம் பகவத் ராமாநுஜனால் விவரிக்கப்பட்டிருக்கின்றது. பாஷ்யகாரர் வர்ணஸாங்கர்யத்தையாவது வைதிக கர்மஸ்வரூப த்யாகத்தையாவது ஈஷத்தும் ஸ்மரித்ததாக ப்ரமாணபாவததோடு, இவற்றை நிஷேதித்ததாக ப்ரமாண பாஹுள்யமும் ஏற்பட்டிருப்பதால், மித்யா ப்ரவ்ருத்திகளில் இழிய நிஶ்சயம் செய்பவர்கள் மித்யா ஹேதுக்களை ஆதரத்துடன் தேடுவது கலியின் கொடுமையென்று நினைக்கவேணும்.

பாஷ்யகாரர், பஞ்சமர்களுக்குத் திருநாராயணன் ஸந்நிதியில் ப்ரவேசத்தை ஸம்வத்ஸரத்தில மூன்று நாள் வரையில் உண்டு பண்ணினாரென்றொரு கதையுண்டு. இந்தக் கதை மர்யாதைகளை யழிப்பவர்க்கு ஸாதகமாய் நிற்கின்றது. மேற்படி ஸந்நிதியில் சில நாட்களில் பஞ்சமர் ப்ரவேசிக்கின்றார்கள் என்பதை நாம் கேட்டிருக்கின்றோம். அதற்குப் பாஷ்யகாரர் உபகரித்தாரென்பது அஸம்பாவித விஷயம். தில்லிபாச்சா, துலுக்க நாச்சியார், வெள்ளைசாத்துப்படி, பறைச்சேரி ப்ரவேசம் முதலான அம்ஶங்களைப் பகவத் ராமாநுஜனுடன் புணர்த்தல் ஸாத்யமில்லை. ராமாநுஜன் லீலாவிபூதியை (கிறிஸ்தவ வருஷம்) 1137-ல் விட்டுவிட்டார். அப்போது தில்லியில் ஆர்யமதிபர்கள் அரசாண்டனர்.

தில்லிராஜ்யம் துலுக்கரால் 1193-ம் ௵ கைப்பற்றப்பட்டது. கதைகளுக்குக் கால்கள் இல்லையென்பார்கள். பாஷ்யகாரர், செய்திருக்கக்கூடாத கார்யத்தைச் செய்தாரென்று முறையிடுதல் மதியின் பிழையே யன்றி வேறல்ல.

ராமாநுஜன் கருணைக்கடல் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம். அவர் ஜநங்கட்குச்செய்த பரமோபகாரத்தை விவரிப்போம். வேத வேதாந்த ஶப்தராஶிகள் ஆர்யஜநங்களால் ஏகதேசத்தில் க்ரஹிக்கப்பட்டன. ஆர்யர், அநார்யர்க்கு அவற்றை உதவவில்லை. இன்னும் அத்தகைய ப்ரவ்ருத்தி வேத ஶப்தங்களால் நிஷேதிக்கப்பட்டது. ஆதலால், மஹர்ஷிகள் இதிஹாஸ புராணங்களைக்கொண்டு வேதார்த்தங்களை, அநார்யர்கள் அறியும்படியாக வெளியிட்டார்கள். வேதார்த்த விசாரம் செய்கின்ற த்விஜர்களுக்கும், இதிஹாஸ புராணங்கள் வேதோபப்ருஹ்மணங்களாக உபகரித்தன. இது இப்படியிருக்க, ஏகாந்திகள் மதமென்றும், ஸாத்வதர்கள் மதமென்றும், நிஷ்காம கர்மகாரிகள் மதமென்றும் சொல்லப்பட்ட கர்மயோக ஸம்ப்ரதாயமானது ஶ்வேத த்வீபவாஸிகளிடம் ஜநித்து, ஆர்யநாட்டிலும் பல காலங்களில் பல அதிகாரிகளால் அநுஷ்டிக்கப்பட்டு வந்தது. 'ഇദം മഹോപനിഷദം ചതുൎവേദസമന്വിതം । സാംഖ്യയോഗകൃതാന്തേന പഞ്ചരാത്രാനുശബ്ദിതം ॥' என்கிற பாரதவசநப்படியே, அந்த ஸம்ப்ரதாயம் வைதிக மதத்தை அநுஸரித்தது; வேதாந்தார்த்தங்களை ப்ரகாசிப்பிக்கின்றது. ஸாங்க்யம் எனப்பட்ட தத்வஜ்ஞாநத்தை உட்கொண்டது; ஸ்வகர்மங்களையே பகவதாராதநமாகச் செய்யவேண்டிய க்ரமத்தை வெளியிடுகின்றது. இந்த ஸம்ப்ரதாயம் 'ബ്രാഹ്മണൈഃ ക്ഷത്രിയൈൎവൈശ്യൈഃ ശൂദ്രൈശ്ച കൃതലക്ഷണൈഃ । അൎച്ചനീയശ്ച സേവ്യശ്ച നിത്യയുക്തൈഃ സ്വകൎമ്മഭിഃ ॥ സാത്വതം വിധിമാസ്ഥായ' என்கிறபடியே, எக்குடி பிறந்தவராயினும், யாவரேயாயினும், ஸ்வகர்மங்களாலே பகவானை ஆராதிக்கலாமென்பதைக் காட்டியது. எல்லா வர்ணத்தார்களும் வர்ணாஶ்ரம வரம்புகளைக் கடவாமல், ஸ்வகர்மங்களால்



பகவானை ஆராதித்து ஸமாநமான முக்தியை யடையக்கூடும் எனும் இதே விஷயத்தைப் பகவான் கீதாமூலமாய்க் காட்டியருளினான். பாகவத ஸம்ப்ரதாயமானது மோக்ஷதர்மத்தில், நாராயணீயம் என்கிற சரமபாகத்தில், விஸ்தாரமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. கீதையும், பாகவத ஸம்ப்ரதாயத்தைத்தான் அநுஸரித்துண்டாயது. எந்த வர்ணத்தில் பிறந்தவரேனும், பாகவதத்வத்தால் ஒரு விஶேஷாகாரத்தைப் பொருந்தலாம். பாகவத ஶூத்ரனைக் கேவல ஶூத்ரனாகப் பாவித்தல் பாபம். அவன் எல்லா வர்ணஸ்தர்களாலும் பஹுமாநிக்கத்தக்கவன்.

மேலே விவரித்தபடியே பாகவத ஸம்ப்ரதாயமானது பாரத காலத்துக்கு முன்பே இருந்தது. ஸ்ரீக்ருஷ்ணனால் அது மறுபடியும் தழைத்தெழுந்தது. ப்ரஹ்மஸூத்ரத்தில் அதற்கென்று ஒரு அதிகரணமுண்டு. போதாயநருடைய ஸூத்ரவ்ருத்தி க்ரந்தத்திலும் அந்த ஸம்ப்ரதாய ப்ரஸ்தாவம் இருந்திருக்க வேண்டும். பாஸ மஹாகவியினுடைய நாடகங்களைப் பார்த்தால், அவர் பாகவத ஸம்ப்ரதாயஸ்தரென விளங்குகின்றது. அவர், 2000 வருஷங்கட்கு முற்பட்டே இருந்தவர். மஹா அலெக்சாந்தர் என்பவருடன் இந்தியாவைப் படையெடுத்து வந்த க்ரீக் தேசத்தாரால் ஸ்தாபிதமான ராஜ வம்ஶத்தார் பாகவத ஸம்ப்ரதாயாநுஸாரிகளெனச் சரித்ர விமர்ஶிகளால் நிஶ்சயிக்கப்பட்டிருக்கின்றது.

ஆழ்வார்களும் பாகவத ஸம்ப்ரதாயஸ்தர்களே. அந்த ஸம்ப்ரதாயத்தை ஸ்ரீமந்நாதமுநிகளும் ஆளவந்தாரும் க்ரந்தங்களெழுதி ஸ்தாபித்தவர்கள். பகு ஜநங்களுக்கு உபகாரமாகும்படி அதைப் பரவச் செய்தவர் பகவத் ராமாநுஜன். ஸர்வ வர்ணஸ்தர்களும் அந்த ஸம்ப்ரதாயத்தின் ப்ரயோஜநத்தை அடையக் குறையில்லை. யாவர்க்கும் உபதேசிக்கக்கூடிய தத்வவிஷய ஜ்ஞாநம் ஸமாநமே. யாவராலும் அபேக்ஷிக்கக்கூடிய புருஷார்த்தமும் ஸமாநமே. அதை ஸாதித்துக்கொடுக்கும் உபாயமும் அந்தணர்முதல் அந்த்யஜர்வரையில் ஸமாநமே. இவ்வளவே ராமாநுஜன் யாவர்க்கும் செய்த உபகாரம்.

சிலகாலத்துக்கு முன் ஒரு ப்ராஹ்மண த்வேஷி, சில நாயன்மார்களுடைய பாடல்களைக் காட்டி, அவை வேதங்களையும் வேதியர்களையும் தூஷித்ததாகச் சொன்னார். ஸமீபகாலத்தில் ஒரு விப்ரதூஷகர், ஆழ்வார்களும் அத்தகைய தூஷணையில் இறங்கினதாகப் பேபர்களுக்கு எழுதினார். நாமறிந்தவரையில் ஆழ்வார்கள் அப்படிச் செய்தார்களில்லை. இன்னும் வேதங்களிடமும் வேதியர்களிடமும் அவர்கள் மிகுந்த விச்வாஸத்தை வஹித்ததாக அவர்களுடைய பாசுரங்களைக்கொண்டு நாம் ஊஹிக்கின்றோம். தூஷணையாகத் தோன்றுமிடங்களைத் தூஷகர் எடுத்துக் காட்டினாராகில் நாம் மேலே விஷயம் சொல்லக்கூடும். சைவ ஸித்தாந்தம் வேதபாஹ்யமென்று ஸூத்ரகாரர்பக்ஷம். அது வேதவிருத்தமென்பதற்கு, 'காலஞ்சென்ற டி. ஏ. கோபிநாதராவ் அவர்கள் எழுதிய (Elements of Hindu Iconography Vol. ii. Part 1 - ல்) அவதாரிகையைப் படிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். தடஸ்தர்களுடைய அபிப்ராயங்கள் அங்கே ஸங்க்ரஹித்து எழுதப்பட்டிருக்கின்றன.

---

ஸ்ரீ:.

ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்

ஸ்ரீ வாஸுதேவாசார்யரால்

இயற்றப்பட்ட.

தமிழ் வ்யாக்யாநத்துடன்

விலை. ரூபா. 1—0—0.

ஸ்ரீ வாஸுதேவாசார்யர்,

மாம்பலம், சைதாபேட்டை.

மதிராஸ்.

# ப்ரேம ப்ரவாஹம்.

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.)

எதைப் பார்த்தால் என்ன? முடிவில் வஸ்துவெனப்பட்ட யாவும் அந்தர்யாமியான உன்னுடைய இருப்பால், வஸ்து ஸ்வரூபத்தை யடைகின்றன; நீ வ்யவஸ்தித்தபடியே யாவும் க்ரியைகளில் ப்ரவ்ருத்திக்கின்றன. எவனுடைய சித்தத்தில் நீ குடிகொள்கின்றையோ அவன் உன்னையன்றி ஓர் பொருளைக் காணமாட்டான். ஸர்வ சரீரியாய் நீ இருப்பதால், புருஷன் எனப்படுகின்றாய்; ஸர்வமும், புருஷனை நீயேயென்றும் சொல்லப்பட்டது. அநித்யங்களான சரீரங்களைக் கர்மவசத்தால் ஸம்பாதித்துக்கொண்டு, புருஷத்வ ப்ரமையைச் சுமக்கின்ற மானிடர்களைக்காட்டிலும் உனது உத்தம புருஷத்வத்தை விளக்க உன்னைப் புருஷோத்தமனென்று சொல்வார்கள். ஆதி மத்யம் அந்தமெனப்பட்ட அவஸ்தைகளின்றி, எப்போதும் ஏகரூபத்துடன் கூடிய நீயே வஸ்து; உன்னைத்தான் தத்வமென்பார்கள். விஷயங்களுடைய போகஸம்பந்த மற்றபடியால் விசேஷ முக்தமாய், ராகாதி மலங்களற்றதாய், விகாரலேசமற்று நித்யமாய், மநுஷ்யர்களுடைய சித்தங்களுக்குரிய சோகமோஹாதிகளில்லாததாய், ஒன்றாய், எப்போதும் ஒரே ப்ரகாரமாய் இருக்கின்ற ஜ்ஞாந ஸ்வரூபி நீ. ஆகலால் நீ பரமன்; பரர்க்கெல்லாம் நீ ஈசன். அப்படிப்பட்ட வாஸுதேவனே! உன்னையன்றி ஒன்றுமில்லையே! ஆகலால் ஸூர்ய சந்த்ர நக்ஷத்ரங்கள் நீயே! புவநங்கள் நீயே! வ்ருக்ஷங்கள் நீயே! மலைகளும் திக்குகளும் நீயே! நதிகள் ஸமுத்ரங்கள் முதலான ஸர்வமும் நீயே! அதனாலன்றோ, "நான் அவனாகவே இருக்கின்றேன். என்னிடம் யாவும் உண்டாயின. யாவும் யானே. என்னிடம் ஸர்வமும் லயிக்கின்றன" என்றிவ்வண்ணம் ப்ரஹ்லாதனுக்கு அநுபவம் நேரிட்டது.

லோகத்தில் ஸர்வவிதமான ப்ரியங்களுக்கு ஹேதுவாய், ஸர்வ ஜந்துக்களிடமும் ப்ரியம் நிறைந்தவனாய், ப்ரியமிரஸ்கனாய், மோதம், ப்ரமோதம், ஆநந்தம் எனப்பட்ட குணங்களைச் சரீரமா

யுடையவனாய் இருக்கின்ற உன்னிடம் ப்ரியத்தைப் பாராட்டாத மூடர்களைப்பற்றி என் சொல்வேன்? நீ மநுஷ்ய லோகத்தில் அவதரித்த காலங்களில் உனது ரூபாதிசயத்தாலும் ஸமஸ்த கல்யாண குணங்களாலும் ஸர்வ ஜநங்களுடைய த்ருஷ்டிகளை ஆகர்ஷித்து, அவர்களுடைய சித்தங்களையும் கவர்ந்தாய். துஷ்க்ருதிகளாய் உன்னிடம் த்வேஷம் வைத்தவர்களையும் உன்னிடம் ஸ்நேஹம் கொள்ளும்படி செய்தாய். உனது தர்மத்தை ரக்ஷித்தாய். லோகதர்மத்தை ரக்ஷித்தாய். அதனிமித்தம் உன்னுயிர்க் குயிராயிருந்த பிராட்டியையும் துறந்தாய். ஜீவலோகத்தை ரக்ஷித்தாய். ஸ்வஜநத்தை ரக்ஷித்தாய். நீ தர்மத்தைக் கைவிடாதவன்; ஸத்யஸந்தன்; ப்ரஜைகட்கு எப்போதும் ஹிதம்புரிந்தாய். பூர்ண சந்த்ரனிடம்போல, ஸர்வலோகமும் உன்னிடம் ப்ரியம்கொண்டது. "எனக்கு ஸ்வர்க்கம் வேண்டாம்; ஸ்வர்க்க லோகத்தில் தேவனாயிருக்கக் கேட்டால் அதுவும் வேண்டாம். உன்னையன்றி இந்த ஸர்வலோக ஸாம்ராஜ்யமும் வேண்டாம். என்னை உனது தாஸனாகக் கொள்வாய். அப்போது நான் க்ருதார்த்தனாவேன். எனக்கு இவ்வண்ணம் ஸ்வரூப தர்மத்தைத் தந்து, உன் பக்தர்களுக்கு ஹிதம் புரிவதென்கிற உனது ஸங்கல்பமும் நிறைவேறும். உனக்கு ஸர்வப்ரகாரமாக நான் பணிவிடை செய்கின்றேன்" என்றிவ்வண்ணம் ஸௌமித்ரி கேவலம் ஸ்துதிக்காகச் சொல்லியிருக்கமாட்டான். "ராமா! உன்னைக்காட்டிலும் ப்ரியதமன் உலகத்தில் எனக்கு ஒருவனும் இல்லை. இதை நான் ஸத்யமாகச் சொல்கின்றேன். ஸத்யமாக ப்ரமாணம் செய்கின்றேன்" என்று குஹன் உன்னிடம் ஆவிஷ்கரித்த பக்தி மித்யையா? "உன்னோடு நானும் வநம் செல்வேன். உன்னை யாசிக்கின்றேன். என்னை த்யஜிக்கவேண்டாம். க்ருபை பண்ணு. உன்னுடன் வநத்தில் இருக்கின்றேன். இங்கே என்னைவிட்டு நீ சென்றாயாகில் அக்நிப்ரவேசம் செய்துவிடுவேன். அயோத்தியும் வேண்டாம். தேவலோகமும் எனக்குவேண்டாம். ஓ ப்ருத்யவத்ஸல! உனது ப்ருத்யனும் பக்தனுமான என்னை விடாதே." என்று பக்திமானான ஸுமந்த்ரன் முறையிட்டது யாரால் மறக்கமுடியும்? இன்னும் தான் நடத்திவந்த ரதத்தில் கட்டிய குதிரைகளும் வநத்தில் உனக்குப் பணிவிடை செய்து பரமகதியை அடைந்துவிடுமென்று அவன் சொன்னானாகில், உனது பணிவிடையில் அவ்வயித்த ம்ருகபக்ஷிகளுக்கும் மோக்ஷம் ஸித்தமென்று ஏற்படுகின்



றது. ஸர்வ ப்ரகாரமாக ப்ரார்த்திக்கப்பட்டபோதும், பிதாவினுடைய ஆஜ்ஞாபரிபாலநத்தில் ஸ்திரபுத்தியை நீ வஹித்து நிற்கும்போது, "இவ்வுலகில் உன்னையொத்து யார் இருப்பார்? துக்கம் உன்னைப் பிடிக்கவில்லை. ஸுகம் உனக்கு ஸந்தோஷ மளிக்கவில்லை. இருப்பும் இறப்பும் உனக்கு ஸமாநமே. நஷ்டமும் லாபமும் உனக்கு ஒன்றே. அப்படிப்பட்ட உன்னைத் துக்கமென்பது எவ்வண்ணம் தொடும்? நீ தேவதுல்யன்: மஹாத்மா; ஸர்வஜ்ஞன்; ஸர்வதர்சீ" என்று பரதன் உன்னை வர்ணித்தான். அந்த ஸத்பத்தாலன்றோ நீமோக்ஷத்வத்தைப் பஹுமாநித்த ஸர்வேச்வரனென்று உலகம் உன்னைக் கொண்டாடுகின்றது? நீயும் அக்காலம், 'மோஹத்தாலாவது, லோபத்தாலாவது, அஜ்ஞாநத்தாலாவது, ஸத்பத்தினுடைய ஸேதுவைப் பேதிக்கமாட்டேன்' என்று சொன்னாய். நீ ஸத்யமே. "தர்மமே ஸ்ரீராமனாக அவதரித்தது. ஸ்ரீராமன் ஸாது; ஸத்யபராக்ரமன். ஸர்வலோகத்துக்கும் அவன் ஈச்வரன். ஜநகாத்மஜை அவனுடையவள் என்றால், அவனுடைய தேஜஸ்ஸைப்பற்றிச் சிந்திக்கமுடியுமோ!" என்று இவ்வண்ணம் மாரீசனும் உன்னை அறிந்தான். உன்னிடம் ஸஹஸ்ராபராதங்களைச் செய்து, உனது க்ருபையால் உயிரோடு விடப்பட்டபிறகும், மாரீசன் உன்னிடம் பயத்தால் மரங்களைக் காணும்போதெல்லாம் வர்ண ஸாத்ருச்யத்தால் தநுர்பாணாங்கிதனான உன்னைக் காண்பதாய் எண்ணினான். எப்புறம் திரும்பினாலும் உன்னையே கண்டான். வநமெல்லாம் அவனுக்கு ராமமயமாகத் தோன்றியது. ஸ்வப்நத்தில் ராகவனைக் கண்டு பயந்தான். அவ்வண்ணம் அவனுக்குப் பீதியைத் தந்து, உனது ஸ்மரணத்தை அவனுக்கு இடைவிடாமல் அளித்தாய். உன்னிடம் அவன் சாமதசையில் பண்ணின அபராதத்தைத் தண்டனையால் க்ஷமித்து அவனுக்கும் நற்கதி தந்தாயன்றோ?

உனது திருவடிகளில் கைங்கர்ய பாக்யத்தைப் பெற்ற ஹநுமான், "ஸ்வாமிந்! உன்னிடம் என்றும் எனக்குப் பரமமான ஸ்நேஹம் நிலைத்திருக்க வேண்டும். உன்னிடம் எனக்கு நியதமான பக்தி இருக்கட்டும். உன்னைத் தவிர மற்றொரு வஸ்துவினிடம் எனது சித்தம் செல்லாமலிருக்க விரும்புகின்றேன்." என்று ப்ரார்த்தித்தான். மஹாதபஸ் புரிந்து ஸித்திபெற்ற சபரியெனும் வ்ருத்தையும் தன்னுடைய தபஸ்ஸின் பலமாக உனது திவ்யதர்

ஶாந்தை அடைந்தாள். "உன்னைத் தர்சித்த இப்போது எனது தபஸ்ஸுக்கு ஸித்தியுண்டாயது. நான் தபஸ்புரிந்ததும், குரு ஜநங்களைப் பூஜித்ததும் ஸபலங்களாயின. என் ஜந்மமே இப்போது ஸபலமாயிற்று. தேவஶ்ரேஷ்ட! உன்னை நான் பூஜிக்கப்பெற்றேன். எனக்குப் பரமபத ப்ராப்தி நிஶ்சயம். ஓ ரகுநந்தந! கருணாரஸத்தைப் பொழிகின்ற உனது கண்களால் பார்க்கப்பட்டேன். உனது ப்ரஸாதத்தால் அக்ஷயமான லோகங்களை அடைவேன். நீ சித்ரகூடம் வந்தவுடன் உன்னைத் தர்சித்த மஹர்ஷிகள் என்னிடம் சென்று, 'நீ இங்கு ப்ராப்தமாவாய்' என்றும், 'உன்து தர்சந மாத்ரத்தால் எனக்கு அக்ஷய பதப்ராப்தி யுண்டா' மென்றும் சொன்னார்கள்." என்று இவ்வண்ணம் அவள் மொழிந்தது நீ ப்ரிய ஶிஷ்யன் என்கிற ஶ்ருங்கார்த்தக்கைக் காட்டவில்லையா? கேவலம் கேள்வியால் உன்மஹிமையறிந்த தாரையும், ஸாதுக்களுக்கு நிழல் தரும் வ்ருக்ஷமென்றும், ஆபத்தை யடைந்தவர்க்கு உத்தமகதியென்றும், ஆர்த்தர்க்கு ஆஶ்ரய பூதனென்றும், ஸர்வ யஶஸ்ஸுக்கும் ஓரிருப்பிடமென்றும், கல்யாண குணங்கட்கெல்லாம் ஓர் மஹாநிதி யெனும் உன்னை வர்ணித்தாளன்றோ?

ப்ரியமென்பது ரூபிகரித்து நீ அவதரிக்கின்றாய். உன்னைக் கண்டு உன்னிடம் ப்ரியம் கொள்ளாதிருக்க முடியாது. உன்னைக் காணாத நாங்கள் ஶாஸ்த்ரத்தால் உனது ப்ரியரூபத்தை அறிய வேண்டியிருக்கின்றோம். லோகத்தில் காணப்பட்ட எல்லா ப்ரியமும் ஸர்வத்ர உனது ஸாந்நித்யத்தை மூலமாயுடையது. ஜநங்களுடைய கர்மமானது உன்னை அவர்கள் காணவொட்டாமல் ப்ரக்ருதி விகாரங்கொளப்பட்ட திரைகளால் மறைக்கின்றது. மஹாஸுக்ருத மிருந்துதான் உனது அவதார திருமேனிகளைப் புண்யவான்கள் தர்ஶித்தனர். அஃதில்லாத ப்ரஜைகள் வஸ்துக்களையும் வஸ்து பேதங்களையும் அவற்றோடு உனது ஸம்பந்த மறியாதபடி ஸாக்ஷாத்கரிக்கின்றனர். ஸர்வ போக்ய பதார்த்தங்களும், போக்தாவான சேதநர்களும், பரிபூரணனாய்ப் பராத்பரனாய் இருக்கின்ற உன்னிடம் நிலைத்திருக்கும் உண்மையை அறிந்துகொள்ளும்படி நீ உபதேசித்தபடியால், ஜ்ஞாநபலமற்ற கோபஸ்த்ரீகளும் உனது திவ்யரூப ஸ்மரண மாத்ரத்தால் ஸர்வபாப விநிர்முக்தர்களாய் அத்யாத்ம வித்யா ஸித்தி பெற்றுத் தேஹாவஸாநத்தில் உன்னை யடைந்தார்களன்றோ? அவதார காலங்களிலும், உனது ஸந்நி



தான ஸாமீப்யத்தைவிட, உனது விரஹத்தில் ப்ராப்தமான உனது ஸ்மரணமானது பகுசேதநர்களைக் கடைத்தேறச் செய்தது. லோகத்தில் ப்ரியஜநங்களைப் பிரிந்த காலங்களில் அவர்களுடைய பிரிவாற்றாமல் அவர்களை மிகவும் ஸ்மரிக்கின்றார்கள். ப்ரிய ஜநங்களுடைய ஶாஶ்வத வியோகம் நேரிட்ட காலத்தில் ப்ரியஸ்மரணமானது துக்க மிஶ்ரமாக விஸ்தரிக்கக் காண்கின்றோம். பரம பாகவதர்களுக்கு இந்த ரூபமான அநுபவம் உண்டாவது யாவரும் அறிந்த விஷயமே.

உனது திருமார்பில் க்ஷணமளவும் அகலாது நித்யவாஸம் செய்யும் அலர்மேல்மங்கையானவள், உன் அவதாரதசையிலும் பிரிவிலளாக நிற்கக் கருதி, உன்னுடன் வநவாஸம் செய்ய இசைந்தனள். அப்போது பவஸாகரத்தில் மூழ்கும் ஜநங்களுக்கு உனது பதப்ராப்தியானது ஸம்பவிக்கத் தகுந்த மார்க்கத்தைக்காட்டியருளவேண்டி, அவள் ஒரு வ்யாஜஸாபேக்ஷையாய் நிற்கையில், அந்த விஷயத்தில் ஶூர்ப்பணகையும் தசாநநும் அவளுக்கு ஸஹாய பூதரானார்கள். உன்னுடைய ஸ்வரூப குணவிபவங்களில கொஞ்சமும் ஸந்தேஹத்துக் கிடமின்றியே பரிபூர்ணமான ஜ்ஞாநமும், ஜ்ஞாநாநுகுண விஶ்வாஸ தார்ட்யமும், பிராட்டிக்கு இல்லாத காலமொன்றை நாங்கள் சிந்திக்க இடமில்லை. ஆயினும், உனது ஸங்கல்பத்தைப் பரிபாலிக்க இச்சித்தவளாய், பரமபாகவதனான இளைய பெருமாளிடம் ஈஷத் அபராதமென யோசிக்கத்தக்க வ்யாஜத்தையும், கேவலம் மாயாம்ருகத்தை வாஸ்தவமான ம்ருகமென்று ப்ரமித்து த்ருணதுல்யமான அதனிடம் ஒரு அபேக்ஷையைக் காட்டினதுபோல ஒரு ஸந்தர்ப்பத்தையும் ஸ்வயமே கல்பித்துக்கொண்டு, அதன் பலமாக, பவஸாகர மத்யத்தில் மநோநுகத்தஞ்சராதிஷ்டிதமாய் ஶரீரதுல்யமாய் இருக்கும் லங்காத்வீபத்தில் ப்ரவேஶத்தையும், பிராட்டி ஸம்பாதித்துக்கொண்டாள். இவ்வண்ணம் உழலுகின்ற பத்தசேதநர்க்கு உன்னிடம் பக்தியொன்றே உத்தாரகமெனக் காட்டியருள, அந்தப் பக்தியினுடைய விவித பரீவாஹங்களை ஸுந்தர காண்டத்தில் விளங்கக்கப்பட்டபடியே ஆவிஷ்கரித்தருளினாள். ராவணனால் கொண்டாடப்பட்ட ஐஹிக போகங்களை அதுதுச்சமாக வெண்ணினாள். தஶேந்த்ரியாநநுடைய வஞ்சனைகளை வெறுத்தாள். மநஸ்ஸாகும் நிஶாசரனுடைய பலத்தை த்ருணீகரணம் பண்ணினாள். தனது

ண்டிய ப்ரியநாயகனான ராகவனைத் தர்சிக்கப் பெற்றவர்கள் மஹா தபஸ்விகளென்று நினைத்தாள். "ராகவ! ஸத்யத்தையே வ்ரதமாகக் கொண்டவனே! ஆச்ரிதரக்ஷண ஸமர்த்தகங்களான திருத்தோளாய்! யாவரும் ப்ரியப்படத்தக்க பூர்ணசந்த்ர நிபாநனே! ஜீவலோகத்துக்கெல்லாம் ஹிதம் செய்பவனே! யாவர்க்கும் ப்ரியனே! ராக்ஷஸர்கள் என்னைக் கொல்லப் போகின்றாரென்பதை நீ அறியமாட்டாயோ!" என்று உன்னைக் கூவியழுதாள். ராமா! ராமா! என்று இடைவிடாமல் நினைத்தாள். அந்த உனது திவ்ய நாமங்களை வாயினால் ஸதா சொன்னாள். நாமங்களையே ஸதா சிந்தித்தாள். பார்க்குமிட மெங்கும் உன்னைத் தர்சித்தாள். கேட்கும் சப்தங்களெல்லாம் ராமமயமாய்ப் பிராட்டிக்குத் தோன்றியது. அவளுடைய ஸர்வபாவமும் உன்னிடமே சென்றது. இத்தகைய அநுபவமுள்ளவர்க்கு, அநுபவமெல்லாம் உன்னோடு முடிகின்றது. அவ்வநுபவம் உனது ப்ரியபத ப்ராப்தி ஸாதகமாயினும், அது ஸ்வயம் ப்ரயோஜநமாயும் இருக்கின்றது. உன் ஸங்கல்பப்படி ஸ்வர்க்கத்தில் வஸித்தாலும், பூமியில் வஸித்தாலும், நரகத்தில் விழுந்தாலும் தனக்கு விசாரமில்லை என்றும், எப்போதும் உனது திருவடித்தாமரைகளை ஸ்மரிக்கப்பெற்றால், அதுவே தனக்குப் போதும் என்றும் குலசேகரன் ப்ரார்த்தித்தானே! நீ வரமளிக்கக் கருதி ப்ரஹ்லாதனை வேண்டவும், உன்னிடம் நிலைத்த பக்தியானது அவனுடைய ஹ்ருதயத்தினின்று அகலாதிருக்க வேண்டினானன்றோ? அவிவேகிகளுக்கு ஐஹிக காமங்களில் உண்டாகும் ப்ரீதியை, உன் சரண கமலங்களில் மாத்ரம் நிலைக்கும்படி அவன் ப்ரார்த்தித்தான். இன்னும் தனது ஹ்ருதயத்தில் ஐஹிக விஷய காமங்கள் உதிக்காமலிருக்கவும் வரம் கேட்டானன்றோ? அது உனது ஸ்வரூபகுண விபவங்களின் தத்வமறிந்ததன் பயனன்றோ? யாவர்க்குள்ளும் ஆத்மாவாய், அக்காரணத்தினாலேயே யாவர்க்கும் ப்ரியனாய் இருக்கின்ற உன்னிடம், பரம புருஷார்த்த ஸ்வரூபமறிந்த விவேகிகள் வேறு ப்ரயோஜநமொன்றைக் கருதாமல், நிரந்தரமான பக்தியைப் பண்ணுகின்றார்களென்று விப்ரஸ்த்ரீகளுக்கு நீ சொன்னாயன்றோ? ப்ராணன், புத்தி, மனஸ், சரீரம், பத்நீ, புத்ரர்கள், தநம் முதலான யாவும், உன்னுடைய ஸம்பந்தத்தால், அல்லது உன்னிடம் பக்தி செய்ய உபகரணங்களாய் இருக்கின்றபடியால், அவை யாவர்க்கும் ப்ரியமாகின்றனவென நீ உபதேசிக்கவில்லையா? ஆதலால் உனது



பக்தர்க்கு யாவத் ப்ரியமும் உன்னிடமே விச்ரமிக்கவேண்டும். மநுஷ்யர்க்குள் ப்ரீதியின் பொருட்டும், ஸ்நேஹ வ்ருத்தியின் பொருட்டும் ஆலிங்கநம் முதலான சரீர ஸ்பர்சங்கள் யோசிக்கத்தக்கனவானாலும், உனது கதாச்ரவணம், திவ்யமங்கள விக்ரஹ தர்சநம், த்யாநம், நாமஸங்கீர்த்தநம் முதலானவைகள் உன்னிடம் ப்ரேமை விஸ்தரிக்கத்தக்க ஸாதநங்களாகின்றனவென்றும், உனது ஸாமீப்யம் அந்த விஷயத்தில் அவ்வளவு அநுகூலம் செய்யமாட்டாதென்றும் நீயே விப்ரஸ்த்ரீகளுக்கு உரைத்தனை. உன்னிடம் பாவம் ரூடமாவதற்கு விரஹாவஸ்தையைப்போல் ஸந்நிகர்ஷம் கார்யகரமாகாதென்று கருத்து. கோபஸ்த்ரீகளும், உன்னிடம் ப்ரேமைகொண்டு, ஸர்வ ஸௌந்தர்ய ஸர்வ கல்யாணகுணங்களால் அலங்க்ருதமான உனது (அவதார) திருமேனியைவிட்டுத் தூரத்தில் இருக்க அத்யந்தம் அஸக்தர்களாயிருக்கையில், உத்தவரை அவர்களிடம் அனுப்பி, நீ அவர்கள் த்ருஷ்டிக்குத் தூரநின்றபோதிலும், அக்காரணத்தாலேயே, அவர்கள் உன்னை இடைவிடாமல் த்யானிக்க நேர்ந்து, அவர்களுடைய சித்தமானது உன்னால் ஆகர்ஷிக்கப்படவேண்டும் எனும் ஸங்கல்பத்தை அவர்களுக்குத் தெரிவித்தாய். ஸாதாரணமாக ப்ரியநாயகன் த்ருஷ்டிகோசரனாயிருக்கும் காலத்தைவிட, அவன் தூரத்தில் ஸஞ்சரிக்கையில் ஸ்த்ரீகளுடைய சித்தம் அவனிடம் தீவ்ரமாக நிலைக்கின்றது, எனும் உபமானமும் உன்னால் காட்டப்பட்டது. முழு மனஸ்ஸும் உன்னிடம் நிலைத்து, இதர வ்ருத்திகளை அது முற்றிலும் துறந்து, உன்னையே நித்யம் அது ஸ்மரித்துக்கொண்டிருந்தாகில், உனது ப்ராப்தி உனது பக்தர்க்கு சீக்ரமாக உண்டாகும்.

(இன்னும் வரும்.)

---


ஸ்ரீ:

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் சிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |

ஸ்ரீ:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரஸங்க்ரஹம்.

ஸ்ரீ தயாசதகத்தில் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த அடியிற்கண்ட ச்லோகமானது, இப்பொழுது ஆரம்பம் செய்யப்படுகிற ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரஸங்க்ரஹம் நிர்விக்நமாய் முடியவேண்டியதற்காக, இங்கு, அநுஸந்திக்கப்படுகிறது.

‘அசேஷவிக்நசமநம் அநீகேச்வரம் ஆச்ரயே
ஸ்ரீமத: கருணாம்போதே: சிக்ஷாஸ்ரோத இவோத்திதம்’.

[ஸ்ரீநிவாஸனுடைய தயையாகிற பெரியமடுவில் உண்டான சிக்ஷை யென்கிற ப்ரவாஹம் போன்றவராய், ஸர்வ விக்நங்களையும் சமிப்பிக்கும் ஸ்வபாவ முள்ளவருமான ஸேநாபதி என்றும்பெயருடைய விஷ்வக்ஸேநரை ஆஸ்ரயிக்கிறேன்.] இங்கு இன்னொருவிதமான யோஜனையும் உண்டு. “கருணாநிதியான பகவானை, மஹாநதியின் ப்ரவாஹமானது பெருங்கடலைச் சலிப்பித்தாற்போல, பகவந்நிக்ரஹ பாத்ரர்களான அபராதிகளை ரக்ஷிப்பிக்கும்படி அவனுடைய கருணையைச் சலிப்பிக்கும் தன்மையுடையரான (‘[illegible]’ என்கிறபடி) ஸேனை முதலி யாரை அநேக விதங்களான எல்லா விக்நங்களையும் சமநம் செய்ய வேண்டியதற்காக ஆஸ்ரயிக்கிறேன்.” என்பதே.

‘அநந்தா வை வேதா:’ என்கிற ஸ்ருதிவாக்யப்படி வேதங்கள் அநேகம். ஒவ்வொரு ஸ்ருதியும் பூர்வபாக மென்கிற கர்மகாண்ட மென்றும், உத்தர பாகமென்கிற ப்ருஹ்ம காண்டமென்றும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதில், கர்மகாண்டங் களில், நான்கு வர்ணத்தார்களும் செய்யவேண்டிய க்ரியைகளும்,



அவற்றிற்குரிய விதிகளும், அவைகளின் பலன்களும் ப்ரதி பாதிக்கப்பட்டிருக்கின்றன. சில பாகங்களில் பௌண்டரீக யாகாதிகளும், சில வேதங்களில் ஆபிசாரம் முதலிய ஹேயமான விஷயங்களும் கூறப்பட்டிருக்கின்றன. இவைகள் விஷயமாய், அவைதிகர்களும், பாஸ்சாத்ய பாஷையில் தேர்ச்சியடைந்தவர்களான சில வைதிகர்களும், இவ்விதமான விஷயங்கள் வேதங்களில் ப்ரதி பாதிக்கப்படலாமோ வென்று ஆக்ஷேபிக்கிறார்கள். அவ்விதமான ஆக்ஷேபங்களை எடுத்துக்கொள்ள ந்யாயமே இல்லை. ஒரு பெரிய மளிகைக் கடையில் உப்புமுதல், கற்பூரம்வரையில் இருக்கிறது போலவும், அதிநிக்ருஷ்டமான சுருள்ளி முதல் அத்யுத்க்ருஷ்டமான கஸ்தூரிவரையில் இருக்கிறது போலவும், வேதங்களிலும், ஸாத்விக ராஜஸ தாமஸ ப்ரதாநர்களான அந்தந்த சேதநர்க்குரிய கர்மங்களை ப்ரதிபாதிக்கிறதில் யாதொரு பாதகமும் இல்லை. ஆனால் இவ்விதம் சொல்லவேண்டியது அவஸ்யமோ வென்னில், சேதநர்கள் தங்கள் தங்கள் ப்ராரப்த கர்மங்களுக்கு அநுகுணமான சேஷ்டிதங்களைச் செய்யவேண்டிய தாகையாலும், அவ்விதமான செய்கையினால் தான் இந்த லீலாவிபூதியின் ப்ரவாஹ நித்யத்துக்குப் பங்கம் வாராமல் இருக்குமாகையாலும், எல்லாவற்றையும் சொல்லவேண்டியது அவஸ்யமாயிற்று. இது விஷயமாய் வேதங்களில் ந்யூநதையைக் கல்பிக்கக் கொஞ்சமும் அவகாசமில்லை.

உபநிஷத் பாகமென்கிற ப்ருஹ்ம காண்டங்கள், சேதநாசேதந ப்ருஹ்ம ஸ்வரூபங்களையும், கர்ம பத்தர்களான சேதநர்களுடைய ஜநந மரணங்களையும், அவைகளால் அடையும் கஷ்டங்களையும், இவ்வித கஷ்டங்களினின்றும் கரையேறும்படியான உபாயங்களையும், முக்தனானபின் சேதநனுக்குப் பகவதநுபவத்தினால் உண்டாகும் தன்மையையும் பற்றிச் சொல்கின்றன. இவைகளில், அநேக உபநிஷத்துக்களில் அநேக விதமாக பூர்வோத்தர விருத்தங்கள் போலவும், பரஸ்பர விருத்தங்கள் போலவும் காணப்படுகிற வாக்யங்களை, உபக்ரமோபஸம்ஹார ந்யாயத்தினா

லும், ஸர்வ ஶாகாப்ரத்யய ந்யாயத்தினாலும், ஸ்ரீ வ்யாஸ பகவான் ஐகண்ட்யப்படுத்தி ஸூத்ரங்களாகச் செய்தருளினார். ஸூத் ரார்த்தங்கள் அத்வைத த்வைத விஶிஷ்டாத்வைத ரூபங்களாய் மூன்று விதங்களாகப் பர்யவஸித்தன. மேற்படி ஸூத்ரங்களுக்கு ஸ்ரீபோதாயனர் செய்தருளிய வ்ருத்தி க்ரந்தத்தையும், த்ரமிடர் டங்கர் குகதேவர் முதலிய பூர்விகர் செய்தருளிய விவரண க்ரந் தங்களையும் அநுஸரித்து, 'ഗിരാ_തംകാ ടംക ദ്രമിഡ ഗുഹദേവ പ്രഭൃതയഃ' என்று யதிராஜ ஸப்ததியில் ஸ்ரீ தேசிகன் உகந்தரு ளினபடி, ஆதிசேஷாவதார பூதரான ஸ்ரீ பாஷ்யகாரர், விஶிஷ்டா த்வைத ஸித்தாந்தம் உஜ்ஜீவிக்கும்படிக்கு ஸ்ரீமத் பாஷ்யத்தைச் செய்தருளினார். அது, ஶாஸ்த்ரஜ்ஞரல்லாத மந்த ப்ரஜ்ஞர்க ளுக்கு துரவகாஹமாயிருக்கிறது. பகவதவதார பூதர்களான ஆழ்வார்கள் 'அந்தமிலா வாரணங்கள் நாலாய் நின்ற வதன் கருத்தை யாழ்வார் களாய்த்தெடுத்துச் செந்தமிழா லருள்செய்த' என்றும், 'സഹസ്രശാഖോപനിഷത്സമാഗമം' என்றும், 'வேதம் தமிழ்செய்த மாறன் சடகோபன்' என்றும், உபநிஷதர்த் தங்களை ப்ரதிபாதிக்கிற பாசுரங்களைச் செய்தருளினார்கள். மேற்படி பாசுரங்களும், மிதப்ரஜ்ஞர்களையும் பகவத் விஷயாதி காலக்ஷேபம் செய்யாதவர்களையும் இருக்கிறவர்களுக்கு மிகவும் துர்ப்போதமாக இருக்கின்றன. ஸ்ரீ பாஷ்யத்திலும் கீதாபாஷ்யத் திலும் ப்ரதிபாதிக்கப்படுகிற பக்தியோகமானது, த்ரைவர்ணிகர் களில் உத்தம ப்ரஜ்ஞர்களுக்கே ஸாத்யமாக இருப்பதாலும், அவர் களுக்கும்கூட அது இக்கலியுகத்தில் துஸ்ஸாத்யமாக இருப்பதா லும், ஸகல வர்ணத்தார்களும் ஸகலாஶ்ரமிகளும் ('വശാംശിന്ന ഷ്യൗഃ വക്ഷീവാ' என்றபடி) ஸகல சேதநர்களும் தாபத்ரயாதிகளி னின்றும் கரையேறி, கர்மபந்த நிவ்ருத்தி ரூபமான மோக்ஷஸாம் ராஜ்யத்தை அடைவதற்கு ஹேதுவான ப்ரபத்தி ஶாஸ்த்ரத்தை, ஸ்ரீ பாஷ்ய கீதாபாஷ்யார்த்தங்களையும் ஆழ்வார்களுடைய அரு ளிச்செயல்களையும், ஸ்ரீமத்ராமாயண ஸ்ரீ விஷ்ணுபுராண ஸ்ரீபாக வத மஹாபாரதார்த்தங்களையும் க்ரோடீகரித்து, ஸர்வோபஜீவ்ய



மான மணிப்ரவாள ஶைலியில் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரரூபமாகச் செய்தருளினார்.

'ക്ഷൂതഭീവ ജനവൈവശ്യാന്ന ക്ഷീയിഹഷ്ഠ യൊമാന്ന ക്ഷൂവണ
ഭീവമാഹാന്ന വീക്ഷ്യ ശൊകാർതാനാണാം । വൃവഭഃ ന വഭ
വീണഃ വാപ്യനാം വായതീം വൃയധി ഭയാവഹ സവൃത്തദത്ര
ശ്രുതദത്രഃ ॥' என்று பெரியோர்களால் ஆசார்ய சம்புவில் ப்ரஸா தித்தருளப்பட்டிருக்கிறது. கீதையில் சரம ஶ்லோகத்தால் பக்தி நிஷ்பத்திக்காக ஸத்வாரக ப்ரபத்தி சொல்லப்படுகிறதே தவிர, ஸாக்ஷாத் மோக்ஷோபாயமாகிற அத்வாரக ப்ரபத்தி யென்கிற ஶர ணாகதி சொல்லப்படவில்லை என்று மதாந்தரஸ்தர்கள் சொல்லுகி றார்கள். அப்படியானால், சரமஶ்லோகமானது பக்தியோகத்தின் ஆரம்பத்திலாவது மத்தியிலாவது கடைசியிலாவது படிக்கப்பட வேணும். அப்படியில்லாமல், க்ரந்தஸமாப்தியில் படிக்கப்பட்டி ருக்கிறபடியால் அத்வாரக ப்ரபத்தி விஷயமென்றே ஸ்ரீ நிகமா ந்த மஹாதேசிகன் முதலிய ஆசார்யர்கள் அபிப்ராயப் பட்டிருக் கிறார்கள். ஸ்ரீபாஷ்யகாரரும் சரமஶ்லோகம் ஸ்வதந்த்ர ப்ர பத்தி விஷயமென்பதைப்பற்றி கத்யத்ரயத்தில் உகந்தருளியிருக் கிறார். இதுவிஷயமாக பத்ராதிபர் ஸ்வாமி, ஶ்ருதி ஸ்ம்ருதி பாஞ்சராத்ரம் ராமாயணம் விஷ்ணுபுராணம் பாகவதம் பாரதம் முதலிய க்ரந்தங்களிலிருந்து ப்ரமாணங்களை வேதாந்த தீபிகை யில், முன்வந்த ஸஞ்சிகைகளில் ப்ரதிபாதித்திருக்கிறபடியால், இங்கு மறுபடியும் சொல்வது புநருக்தியாகும்.

(இன்னும் வரும்.)

மாடபூசி - ராமபத்ரதாஸ:.

சேர்மாதேவி.

ஸ்ரீ:.

ஸ்ரீவெங்கடேச பரப்ரஹ்மணே நம:.

முத்தமிழ்க்கவி வீரராகவமுதலியார் இயற்றிய

# திருவேங்கடத்தான் பதிகம்

1. உலகுதனின் மழலையஞ் சொற்குழவி கைத்தலத்
தன்பது கொடுத்தனிலே
ஒருசிறிது வளருமக் குழவிபா லிக்கவு
முங்கனுடன் கவருமவர்போல்
அலகிலா மானிடர்க் கூழ்முறையின் வாழ்வருளி
யவர்கள்சில பொருளுதவவே
அப்பொருள் களைத்தினங் கைக்கொள்வ தவரிட
தன்பினு லல்லவோகாண்
சலசலென வருமருவி முழவதிர முதுமந்தி
தாளத்தர் போலக்கரம்
தட்டக் கருங்குயிற் சுரமான தித்திநா
தங்கூட்ட வண்டுபாட
விலகிவில் லுமிழ்மேனி மயிலாட மலரம்பொன்
வேங்கைசொரி யுரகாசலா
மென்கமல பாதவலர் மேன்மங்கை நாதனே
வெயில்பொழி குழைக்காதனே.

2. நீமேவு திருமலையி லஞ்சாயன் மயிலாடு
நிலைகுருடர் காணவறுகால்
நிரையிம்மெ னப்பாடு மிசைசெவிடர் வினவவந்
நீர்மைகண் டுமைபுகழ
மாமேவு கைப்பொருள் பறித்தோடு கெடியவான்
மந்தியின் பங்கோடவே
மன்னுலகி னிலைபன் னுவாய் சுவாமியுன்
மாயையா ரறியவல்லார்



தீமேவு கண்ணுதற் கடவுளுங் குறுநகைத்
திசைமுக மறைக்கிழவனும்
திகழும்வள ரொளிவச்சி ரதரனு முதாசனத்
தேவர்குல முந்தொழுதாம்
பூமேவு கற்பகக் கொழுவிய தடம்பணையின்
விரிமலர் சுமந்துமெலியும்
மென்கமல பாதவலர் மேன்மங்கை நாதனே
வெயில்பொழி குழைக்காதனே.

3. கண்மலரை யிலகுதன் விழிமலரி லிட்டவிரு
காலினொரு விற்படையுடைக்
கரவேட னுக்குகந் தன்றுதன் பதமுதவு
கறைமிடற் றவனுநாண
மண்மலரை யுன்சரண மலரிடு குலாலற்கு
மாமுத்தி வாழ்வருளினாய்
வந்தடிய ரெப்பொருள் கொடுத்தாலு முன்போல
மகிழ்வுறுந் தேவரெவர்காண்
தண்மலர் நறுந்தொடையல் சொருகுமள காடவிச்
சவரமங் கையர் செங்கையால்
தகைகெழு கழங்காக வாடல்புரி நீல்மணி
சஞ்சரிக குலமென்னவே
விண்மலர் நறுங்கற்ப தருமேல் விழுந்திழியும்
வேங்கடா சலநாயகா
மென்கமல பாதவலர் மேன்மங்கை நாதனே
வெயில்பொழி குழைக்காதனே.

4. வாரியி னிடத்தோல மிட்டுவரு கடவுணதி
வகைபோல வுன்பால்வரும்
மனிதர்திரள் கோவிந்த மிட்டெழும் பேரோசை
மழையொலி யவிப்பதன்றிப்
பாரிலறி வற்றசனர் செவியினி லுழைந்துளம்
பயில்பாவ வனலுமவியப்
பண்ணுமப் பெயருடைய வுன்மகிமை யெம்மைப்
படைத்தவனு மோதறிவனோ

கூரிய மருப்புடைக் கவையமடி யாகிய
குடங்கொண்டு சொரிகுறியபாற்
கொள்ளையும் பிள்ளைமதி யின்கொம்பு முப்பனைக்
கொம்பிருள் விண்டுதாவும்
வேரியு மலைக்கங்கை சேர்பொன்னி யிற்பெருகு
வேங்கடா சலநாயகா
மென்கமல பாதவலர் மேன்மங்கை நாதனே
வெயில்பொழி குழைக்காதனே.

5. அனவரத மபசார மேசெயு மிளங்குழவி
யதனிடத் தாதரவுசெய்
தம்மகவின் மழலைசொல வினவிமகிழ் தாயர்போ
லாயிரங் குற்றங்களைத்
தினமுமொழி யாதுபுரி கொடியே னிடத்திலுந்
திருவருட் பார்வைவைத்துச்
செப்புசொற் பொருள்வழுவு தழுவுமென் புன்கவி
செவிக்கொண்டு மகிழ்வெய்துவாய்
தனதுதெளி புனலினைக் கண்டோரு மப்புனற்
றவழ்கால் படப்பெற்றபேர்
தாமுமா னந்தகர முத்திபெற வைத்துவிடு
தண்டுறைக் கோனேரியாய்
வினைதசுத னெதிர்நின்று தொழுவவற் கெந்நாளும்
விழியினருள் பொழிமேகமே
மென்கமல பாதவலர் மேன்மங்கை நாதனே
வெயில்பொழி குழைக்காதனே.

6. நிதந்த பிரபஞ்ச வனமதனில் நெறியலா
நெறிசென்று வளர்பாவமாம்
நிகழ்தாவ வனல்கடச் சித்தச கிராதசரர்கிரை
வந்தா தைத்துருவியே
கோதந் தலைக்கவும் வேரியங் குழன்மகளிர்
நோக்கெனும் படுகுழிவிழ
சோர்ந்தங் கனைகிடக் கின்றதென் மனயானை
நோய்துடைத் தேறிக்கொளாய்



மாதங்க மும்மதக் கறையடித் தழைசெவியின்
மத்தமா விடாகலவே
மலைமுழைப் பேழ்வா யிடங்கரடு சுடர்நேமி
வலனேந்து மென்சாமியே
வேய்தந்த நாளம்வான் மீனைப்ப ழித்திலகும்
வேங்கடா சலநாயகா
மென்கமல பாதவலர் மேன்மங்கை நாதனே
வெயில்பொழி குழைக்காதனே.

## வேற்றுமகுடம்.

1. நாடுதுதி செய்யுமுன் மலைக்கேக வேணுமென
நாடியோ ரடிவைக்குமுன்
நாடுவிட் டோடுமவர் பாதக மனைத்துமின்
னன்மலைப் படியேறினோர்
பீடுடைய தெய்வத விமானமே றுவருன
பெருங்கோயி றனிற்புக்கபேர்
பிரமனுல கிற்புகுவ ருன்னடி தொழப்பெற்ற
பேர்முத்தி பெறுவர்கண்டாய்
தாடகா சிவாப காரகன கீர்த்திவித்
தாரகன காத்ரிதீரா
ஸகலஜக தாதார தினஜனமந்தாரா
தர்மரகு குலவிகாரா
ஆடக கிரீடகஸ் தூரிதில கலலாட
அஸுரகுல தளவிபாடா
அமரகுல பயநாச ஸ்ரீவேங்க டேசனே
அனந்தரவி சங்காசனே.

2. முகரித்த ரங்கத்தை வீசிவரு முனதுபொன்
முகரியு மகன்றநெடுவோன்
முகடுதொடு குவடுடைய மடமலையு மக்கிரியு
முச்சகமு மற்புதமுறும்
நிகரிலுன் பொற்கோயி லழகையுங் காணிலோ
நித்யசூ ரியர்விரசையும்

நிரதிசய பரமபத மணிமண்ட பத்தையும்
நினைத்துமீ ளப்போவரோ
மகரகுண் டலகர்ண மகநீய சுரசமய
வசனகன நீலவர்ணா
வனமாலி காபரண வரவிபீ ஷணசரண
மஞ்சுமஞ் சீரசரணா.
அகிலலோ காதீத பஞ்சபாண் டவதூத
அகணித மகாவினோத
அமரகுல பயநாச ஸ்ரீவேங்க டேசனே
அனந்தரவி சங்காசனே.

3. கமலமகள் மார்பினி லடங்கவிதி யுந்தியங்
கஞ்சப்பொ குட்டடங்க
கடல்சுற்று மன்னுலகும் விண்ணுலகு முன்னிலை
காலினு ளடங்கவண்டம்
விமலமா முதரத் தடங்கப் படைத்துநீ
வீறுதே வகிவயிற்றும்
மெய்யடியர் நெஞ்சினு மடங்கிநின் றனையுன்
விளைகத்தை யோதவசமோ
சமரசித தூஷ ணாமிருது பாஷ ணாருசிர
தரகவுஸ் துவபூஷணா
ஸத்யசா ரித்ரவசு தேவவர புத்ரவதி
தர்மபது குலபவித்ரா
அம்ருதகரு ணாகரா லலிதகுண சாகரா
அகிலதா னவபீகரா
அமரகுல பயநாச ஸ்ரீவேங்க டேசனே
அனந்தரவி சங்காசனே.

4. தெண்டிரையை யெறிகங்கை முதலான புண்யநதி
தீரத்தி னுமமறையும்
தினமேவு நாவுமறி செயவேள்வி நூறும்விதி
செய்தகை யிலையாகுமால்
முண்டகமு முளவிப்ர னுகிவாழ் தலினுளது
முதியகிரி யிற்கிருமியாய்



முளைத்தெழும் புல்லா யிருத்தலே நன்றெளிதில்
முத்திபெற லாமுண்மைகாண்
புண்டரீக லோசனா பவநாச னாவிதுர
போசனா கருடாசனா
புருகூத வந்தனா கனசிந்து பந்தனா
புண்யதே வகிநந்தனா
அண்டகவ ளக்ராச தாருசம் பரநாச
ஆநந்த நிலயவாசா
அமரகுல பயநாச ஸ்ரீவேங்க டேசனே
அனந்தரவி சங்காசனே.

5. காகாசு ரற்குமருள் செய்தகண் மலருமொரு
கல்லினுக் குதவிபுரிதாட்
கடிமலரு மலகைமுலை பொழிதரள மங்கீ
கரித்தவாய் மலருநெடுவோன்
மேகாட விச்சிலா வருடந் தவிர்க்கமுரண்
வெற்பைச் சுமந்தகரமும்
மென்மலரு முடையநீ பொல்லாத வினையாறல்
விதிதமே யெனையாட்கொள்வாய்
நாகாரி வாகனா கனசகன மோகனா
நானாக வனதாகனா
நந்தகுல பரிபால சங்கீத லோலவபி
நவகனக மயதுகூலா
ஆகாச சன்னிபா காரவது விதவீர
அகிலலோ கோபகாரா
அமரகுல பயநாச ஸ்ரீவேங்க டேசனே
அனந்தரவி சங்காசனே.

திருவேங்கடத்தான் பதிகம்

முற்றிற்று.

கொ. ஸுதர்ஶநாசார்யன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வேதாந்த ஸங்க்ரஹம்.

நாலாம் அத்யாயத்தில் முக்யமாய்ப் பகவது³பாஸநத்தின் பலன் விசாரிக்கப்படுகிறது. த்யாந ப்ரகாரத்தின் முக்யமான அம்சத்தை முதலில் விவரித்து, பிறகு பலன் விவரிக்கப்படுகிறது. யாகம் யஜ்ஞம்போல, 'ஒரு கார்யத்தை உத்தேசித்து ஒரு தடவை செய்தால் போதும், பயன் வந்துவிடும்;' என்று த்யாந விஷயத்தில் சொல்லக்கூடாது. உபநிஷத்தில் த்யாநம் உபாஸநம் வேதநம் ஜ்ஞாநம் என்று சொல்லப்படுமவற்றை விடாமல் மேன் மேலும் அப்யஸிக்க வேண்டும். 'ப்³ரஹ்மவிதா³ப்நோதி பரம்', 'ஜ்ஞாத்வா தே³வம் முச்யதே ஸர்வபாஶை:', 'ஆத்மா வா அரே த்³ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதி³த்⁴யாஸிதவ்ய:' என்றும் சொல்லுகிறபடிக்கு, பகவத் ஸாக்ஷாத்காரத்திற்கு இவன் செய்யவேண்டியது த்யாநம்; அதை மேலும் மேலும் ஸ்ம்ருதிபண்ணி அப்யாஸம் செய்யவேண்டும்.

த்யாநம் அப்யாஸம்.

பகவானை, 'ஆத்மேதி தூபக³ச்ச²ந்தி க்³ராஹயந்தி ச' என்கிற ஸூத்ரப்படிக்கு, உபாஸகனுடைய ஆத்மாவாய், அந்தர்யாமியா யிருக்கிறான் பகவான், என்று த்யாநம் செய்யவேண்டும். இப்படித்தான் பூர்வத்தில் மஹான்கள் செய்தார்கள். முன் அநேக இடங்களில் ஏற்கெனவே குறிக்கப்பட்டிருக்கிற அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில், 'ய ஆத்மநி திஷ்ட²ந்

பகவானை ஆத்மாவாக உபாஸிக்கவேண்டும்.



.........யஸ்ய ஆத்மா ஶரீரம்..............ஆத்மாந்தர்யாம்யம்ருத:' என்றும், 'ஸர்வம் க²ல்விதம் ப்³ரஹ்ம' எல்லாம் ப்ருஹ்மத்திலிருந்து உண்டாகி அதனால் தரித்திருந்து அதில் லயிக்கிறது என்றும், 'அந்த:ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா.........ஐததா³த்ம்யமிதம் ஸர்வம்' என்றும் ஸகல ஜீவன்களுக்கும் ப்ருஹ்மம்தான் மூலம், ஸர்வத்துக்கும் அவன்தான் ஆத்மா வென்றும் வெகு இடங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் பகவான் ஆத்மாவாயிருப்பதால் ஸகல ஶப்தங்களும் ப்ருஹ்மத்தைத்தான் குறிக்கும். ஸகலமும் ப்ருஹ்மம்தான் என்று சொல்லத் தடையில்லை. ஆகையால் ப்ருஹ்மத்தைவிட்டு ஒன்றைப் பிரித்து, ஜ்ஞாநிகளுக்கு அர்த்தமாகாதெல்லாம் ப்ருஹ்மமாகத் தெரியும். அப்படி உபாஸகன் தன்னுடைய ஆத்மாவாக பகவானை உபாஸித்தால் ப்ருஹ்மத்தை அடையலாம். 'யதா²க்ரதுரஸ்மிந் லோகே புருஷோ ப⁴வதி' இங்கே எப்படி உபாஸிக்கிறானோ அப்படித்தான் பயனை யடைவன் என்கிற ந்யாயத்திற்கும் மேற்சொன்னது ஒத்திருக்கிறது.

இந்த உலகத்தில் இந்த ஶரீரம் நமக்குள்ளவரையில், 'ஆப்ரயாணாத் தத்ராபி ஹி த்³ருஷ்டம்' என்று மரணம் வரையில் இப்படி த்யாநம் செய்யவேண்டும். உபாஸகன் நித்யப்படி த்யாநம்செய்யுமிடம் சுத்தமானதாய், மனச்சஞ்சலப்படாமல் இருக்கும்படியான இடத்தில், இன்னொன்றிலும் புத்திசெல்லாமல், ஏகாக்ர புத்தியுடன், 'ஶுசௌ தே³ஶே ப்ரதிஷ்டா²ப்ய ஸ்தி²ரமாஸநமாத்மந:......தத்ரைகாக்³ரம் மந: க்ருத்வா யதசித்தேந்த்³ரியக்ரிய:' என்று கீதையில் சொன்னபடிக்கு ஏகாந்தமான இடத்தில் த்யாநம்செய்ய வேண்டும்.

இதுவரையிற் சொன்னபடி, பகவத் த்யாநம் செய்தால், பகவான் க்ருபைகூர்ந்து நம்முடைய ஸகல பாபங்களையும் நஶிப்பிக்கச் செய்வர். ['தத³தி⁴க³ம உத்தரபூர்வாக⁴யோரஶ்லேஷ விநாஶௌ' என்கிற

கர்மவிநாஶம்.



161406
RCS m2U/NIGVP
... 600 008.

ஸூத்ர ப்ரகாரம், 'தத்யதா புஷ்கர பலாச ஆபோ ந ச்லிஷ்யந்தே......ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ச்லிஷ்யதே' 'ந கர்மணா லிப்யதே பாபகேந'] ப்ருஹ்மஜ்ஞாந மடைந்தவனுக்குத் தாமரையிலையில் ஜலம் ஒட்டாததுபோல் பாபம் ஒட்டாது. ['தததிகம உத்தரபூர்வாகயோ ரச்லேஷவிநாசௌ தத்வ்யபதேசாத்', 'தீயினிற்றூசாகும்'] பஞ்சு நெருப்பில் எரிவதுபோல, 'தத்யதேஷீகாதூல பாப்மாந......க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி' என்று பகவத் ஸாக்ஷாத்காரத்தால் ஸகல கர்மமும் நசிக்கும். இந்த மஹா பகவத் பக்தன்பேரில் ஈச்வரன் க்ருபைகூர்ந்து நிக்ரஹத்தை மாற்ற அநுக்ரஹிக்கிறான். 'நாவிரதோ துச்சரிதாத்' என்று ஒருக்காலும் ஜ்ஞான முண்டானபிறகு, பக்தன், தன் மநஸ்ஸாலும் வாக்காலும் தேகத்தாலும் ஒரு கெடுதலும் செய்யமாட்டான். ஆனால் அஜாக்ரதையால் புத்தி பூர்வகமில்லாமல் ஏதாவது பிசகு செய்ய நேரிட்டால், அந்தப் பாபத்தையும் ஈச்வரன் போக்கிவிடுவான்.

மேலும், பாபம்தவிர சில புண்யங்களும் ஒரு பக்தன் செய்திருக்கக்கூடும். அப்புண்யங்களுக்கும் சில அநிஷ்டமான ஸம்ஸாரத்தை உண்டுபண்ணும் பயன்களைக் கொடுக்கச் சக்தியுண்டு. ஆனால் மேற்சொன்ன ப்ருஹ்ம ஜ்ஞாநியாகிற பக்தன் விஷயத்தில் 'ஸுஹ்ருத ஸாதுக்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம்', 'இதரஸ்யாப்யேவ மஸம்ச்லேஷ: பாதே து' என்கிற வாக்யங்களின்படி இப்புண்யமும் நசிக்கும். அவைகள் இந்தச் சரீரம் போகும்போது நசிக்கின்றன. 'தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே' என்கிற ஶ்ருதி ப்ரகாரம் ப்ராரப்த கர்மத்தின் பயனை இந்தத் தேகமுள்ளவரைக்கும் ப்ருஹ்மஜ்ஞாநியும் அநுபவித்துத் தீரவேண்டும். சில கர்மத்தின் பயன் ஆரம்பித்திராத பக்ஷத்தில், ப்ருஹ்மஜ்ஞாநம் அடைந்தவுடன் அக்கர்மமும் நசிக்கும். ஏற்கெனவே ஒரு கர்மத்தின் பயன் ஆரம்பித்திருந்தால் தேஹமுள்ள



வரையில் தாமஸம். ஆந்தரதமஸ், வஸிஷ்டர், முதலான அதிகாரி புருஷர்கள் விஷயத்தில் அந்தக் கல்பத்தில் அவரவர்கள் அதிகாரம் முடியும் வரையில் வெவ்வேறு தேஹங்களைக்கூட அடையும்படியா யிருக்கும். ஒரு தேஹமோ அல்லது அநேக தேகங்களோ ஒருவனுக்கு எப்படி ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிறதோ, அப்படி ப்ராரப்த கர்ம விஷயத்தில் அந்தந்தப் பயனை அநுபவித்து, பிற்பாடுதான் ப்ருஹ்மஜ்ஞாநி பகவானை யடைகிறான். இப்படி 4-ம் அத்யாயம் முதற்பாதம் சுருக்கிச் சொல்லப்பட்டது.

நாலாம் அத்யாயம் 2-ம் பாதத்தில், ஜ்ஞாநியால் தேஹவியோக ஸமயத்தில் இந்த ஜீவன் எப்படி வெளிப்படுகிறான் என்கிற விஷயமும், ஸூக்ஷ்மதேஹ மடைகிற விஷயமும் விசாரிக்கப்படுகின்றன. ப்ருஹ்ம ஜ்ஞாநி மரணமடைவதற்கு இன்ன காலம், மாஸம், அயநம் தான் நல்லது என்கிற நியமம் இல்லை என்று ஸூத்ரகாரர் நிச்சயிக்கிறார்.

அர்ச்சிராதி கதி.

IV. 3-ம் பாதத்தில் ப்ருஹ்ம ஜ்ஞாநி மோக்ஷத்துக்குப் போகும் மார்க்கம் விசாரிக்கப்படுகிறது. ப்ருஹ்ம ஜ்ஞாநிகளை ஆதிவாஹிகர் என்று சொல்லப்பட்ட தேவதைகள் மேலே அழைத்துக் கொண்டுபோய் அமாநவபுருஷ ப்ருஹ்மத்தினிடத்தில் சேர்ப்பிக்கிறான். மறு ஜந்மம் இல்லாதவர்களுக்குத்தான் இந்தப்படி அர்ச்சிராதிகதி உண்டு. 'ப்ருஹ்மணா ஸஹ தே ஸர்வே ஸம்ப்ராப்தே ப்ரதிஸஞ்சரே', 'யோ ப்ருஹ்மாணம் விததாதி' ஸர்வேஶ்வரன் ப்ருஹ்மாவை முதலில் உண்டாக்கி அவனுக்கு ஜ்ஞாநத்தைக் கொடுத்தான். ப்ருஹ்மாமுதல் ஸகலருக்கும் மறுபிறவி உண்டு. ஸ்ரீமந்நாராயணனாகிற ஸர்வேஶ்வரனாகிற பகவானை உபாஸிப்பவர்களுக்குத்தான் மறுஜந்மம் இல்லை. 'ஏஷ ஸம்ப்ரஸாதோஸ்மாச் சரீராத் ஸமுத்தாய பரம்ஜ்யோதி

[illegible]' இந்த ப்ருஹ்ம ஜ்ஞானியாகிற ஜீவன், தேஹத்தைப் பிரிந்து பரஞ்சோதியாகிற ப்ருஹ்மத்தை அடைகிறான். '[illegible] .......... [illegible]' குதிரையானது, மயிரை உதிர்க்கிறாற்போலவும், சந்த்ரன் ராஹுவினின்று விடுபடுகிறாப்போலவும், பாபத்தையும் சரீரத்தையும் விட்டுப் பரஞ்சோதியை அடைகிறான்.

ஞானிகள் இருவகைப்பட்டிருக்கின்றனர். ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத பரிசுத்த ஆத்ம ஸ்வரூபமாய், ஜ்ஞானானந்த லக்ஷணமுடையதாய், பகவானுக்கு ப்ரகாரமாயிருக்கிற ஜீவாத்ம யோக நிஷ்டர்களாகிற கைவல்யம் என்கிற ஜீவாத்ம ப்ராப்தியை அடைபவர்கள் சிலர். பகவத் கைங்கர்யமே நிரதிசய புருஷார்த்தமாய்க் கோரி, அவனையே அடைய உபாஸநம் செய்யும் ப்ருஹ்ம ஜ்ஞானிகள் சிலர். இவ்விருவகை ஜ்ஞானிகளுக்குப் அர்ச்சிராதிகதி உண்டு. சாந்தோக்யத்தில் பஞ்சாக்நி வித்யையில் விவரிக்கப்பட்டிருக்கிற ஆத்ம ப்ராப்தி காமனுக்கும் அர்ச்சிராதிகதி உண்டென்று ஸூத்ரகாரர் நிச்சயித்திருக்கிறார்.

இயல்பான நிஜஸ்வரூபம்.

4-ம் அத்யாயம் கடைசிபாதமான முக்தி பாதத்தில், ப்ருஹ்ம ஜ்ஞானியின் முக்திதசை சொல்லப்படுகிறது. ஜ்ஞானானந்த ஸ்வரூபம் ஜீவனுக்கு இயல்பாய் உள்ளது. ஸம்ஸார தசையில் கர்மத்தால் அந்த ஸ்வரூபம் மறைந்து ஸங்கோசப்பட்டிருக்கிறது. இந்தக் குறைவான தசை போய், பாபத்தினின்றும் விடுபட்டு, துக்கம், தாகம், மூப்பு, மரணம் முதலியன இல்லாமல் நித்யமான ஆநந்த ஸ்வரூபத்தை அடைந்து, ஒன்றும் குறைவில்லாமல், நினைத்ததை முடிக்கும் ப்ரபாவம் உடைத்தாய், தன் நிஜஸ்வரூபத்தில் ஆத்மா முக்தி தசையில் ஜ்வலிக்கின்றது. '[illegible]



[illegible]' மேற்சொன்ன வகையில் பரமாத்மாவைப் போல், ஜீவாத்மா மேற்சொன்ன குணங்களை முக்தி தசையில் உடைத்தாயிருக்கிறான்.

பகவத் குணாநுபவம்.

இவன் பகவானையும் அவனுடைய கல்யாண குணங்களையும் அநுபவித்துக் கொண்டிருக்கிறான். '[illegible]', '[illegible]' எம்பெருமானை ஸாக்ஷாத்கரிக்க, பாபம் கழித்து அவனுடன் ஸமத்வத்தை யடைகிறான்.

ஸமத்வமடைதல்.

'[illegible]' என்று கீதையிலும், 'தம்மையே யொக்க வருள்செய்வர்', 'சமன்கொள் வீடு தரும்' என்று ஆழ்வார்களாலும், '[illegible]' என்று ஸூத்ரகாரராலும், முக்தி தசையில் முக்தனுடைய அநுபவம், பகவானுடைய அநுபவத்திற்கு ஸமம் என்று வெளியிடப்பட்டது. '[illegible]' ஸ்வேச்சையாய் இஷ்ட ப்ரகாரம் ஸஞ்சரிக்கிற சக்தியுடையவனாயிருப்பன். '[illegible] .......... [illegible]'; உப்பு என்றால் மேல் கீழ் இல்லாமல் ஒரே ரஸமாய் உப்பாகவே இருப்பதுபோல, இந்த ஜீவன் ஜ்ஞானானந்த ஸ்வரூபமாயிருக்கிறான். கேவலம் தன் ஸங்கல்பத்தாலேயே ஸகலத்தையும் செய்யவல்லவன்.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஒன்பதாவது
# ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கம்.

---

திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஆஹ்வானத்தின் பேரில், மதிராஸ் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஒன்பதாவது வார்ஷிக மஹா ஸங்கம் காளயுக்தி வருஷம் மார்கழி மாஸம் 13, 14, 15, 16-ம் தேதிகளில் (1919 டிஸம்பர், 28, 29, 30, 31) திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீ பகவத் க்ருபையை முன்னிட்டு நடைபெறுகின்றது. அப்பொழுது ஸ்ரீ. உப. மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி, முதல் தினத்தில் அக்ராஸநாதிபத்யத்தை வஹித்து ஸதஸ்ஸை ப்ரவ்ருத்திப்பிக்க க்ருபையுடன் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். அநேக பரிகணிதர்களான வைதிக வித்வான்களும் லௌகிக ஆஸ்திகர்களும், நமது வேதாந்த விஷயமாக உபந்யாஸங்களைச்செய்ய அங்கீகரித்திருக்கிறார்கள். ஆஸ்திகர்களாயுள்ள ஸகலரும் அக்காலத்தில் அவ்விடத்திற்கு எழுந்தருளி ஸதஸ்ஸை அலங்கரிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

இந்த ஸதஸ் நடக்கும் காலத்தில், யதாபூர்வம், ஸ்ரீ தேசிகாசார்ய ஸஹித ஸ்ரீ ஸாஹ்யத்தில் ஒரு பண்டித பரீக்ஷையும் நடைபெறும். அந்தப் பரீக்ஷையின் லிகிதமான அம்சம், ஸதஸ்ஸின் இரண்டாவது தினமாகிற 14-ம் வ காலை 8-30-மணிக்கும், வாசிகமான அம்சம், ஸதஸ்ஸின் ஐந்தாவது தினமாகிற 17ம் வ காலை 8-மணிக்கும் நடைபெறும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அந்தப் பரீக்ஷையில் பரீக்ஷ்யர்களாக அங்கமிக்க இச்சையுள்ள வித்வான்களெல்லாரும் வருகிற மார்கழி மாஸம் 10வ க்கு (25-12-19) முன்னதாகவே, "மாம்பலம், சைதாப்பேட்டை, மதிராஸ்." என்னும் விலாஸத்திற்குத் தமது பெயரையும் விலாஸத்தையும் தெளிவாக எழுதி ஒரு பத்திரிகையை அனுப்பவேணுமென்று ப்ராத்திக்கிறோம். இருகலையாரும் இந்தப் பரீக்ஷையில் அங்கமிக்க அர்ஹரர்கள். இதைப்பற்றிய மற்றை அம்சங்கள், அவைகளை அபேக்ஷிப்பவர்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

ஸங்கத்தில் நடக்கப்போகும் உபந்யாஸங்களின் க்ரமம், இப்பொழுது நிச்சயித்திருக்கிறபடி, மறு பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது.

மாம்பலம்,
ஸித்தார்த்தி வருஷம்
மார்கழி மாஸம் 1வ
(16-12-19.)

தட்டை தீ. ரங்காசார்யர்,
(ஸ்ரீ. வை. ஸி. ஸபாத்யக்ஷர்.)
ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்,
தீ. கோதண்டராம ஐயங்கார், |
(ஸ்ரீ. வை. ஸி. கார்யதர்சிகள்.)
டி. ஈ. ஶடகோபாசார்யர்.
(ஸத்கார ஸபாத்யக்ஷர்.)



## 13வ ஞாயிற்றுக்கிழமை (28-12-19.)

காலை 8 மணி.

i. ஸ்வாகதம் - ஸ்ரீ. உப. டி. ஈ. ஶடகோபாசார்யர், பி. ஏ., பி. எல்., திருப்பாதிரிப்புலியூர்.

ii. அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம்.

iii. 'ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்ய ஸர்வோத்க்ருஷ்டத்வம், லோக ஹிதைஷித்வம் ச'—திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜ் ப்ரின்ஸிபால் ஸ்ரீ. உப. வேதாந்தாசார்யர், எம். ஏ.

மாலை 2 மணி.

i. 'திருத்த திருத்தம்'—ஸ்ரீ. உப. வித்வாந் புத்தங்கோட்டகம் ஶ்ரீநிவாஸாசார்யர், ராஜமன்னார் ஸந்நிதி.

ii. 'ஸ்ரீ வைஷ்ணவ வம்ச ஸம்ஸ்காரா:' ஸ்ரீ. உப. வித்வாந் புலவனூர் தேசிகாசார்யர், புலவனூர், கூடலூர்.

## 14வ திங்கட்கிழமை (29-12-19.)

காலை 8 மணி.

i. 'அத்வைத ஶததூஷணீ'—ஸ்ரீ. உப. சேட்லூர் பகவத்விஷயம் வித்வாந் நரஸிம்ஹாசார்யர், மதிராஸ்.

ii. 'ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் யாதார்த்யம்'—ஸ்ரீ. உப. என். ஶ்ரீநிவாஸாசார்யர், பி, ஏ., பி. எல்., மதிராஸ்.

(காலை 8-11 மணி. பண்டித பரீக்ஷையின் லிகிதமான அம்சம்.)

மாலை 2 மணி.

i. 'ஸம்ஸ்க்ருத பாஷாபிவ்ருத்தியும் ஆலய பரிஷ்காரங்களும்.' ஸ்ரீ. உப. வித்வாந் வேங்கடாத்ரி அகரம் அநந்தாசார்யர், மதிராஸ்.

ii. 'ஶரணாகதி:'— ஸ்ரீ. உப. வித்வாந் வாஜபேயம் வீரராகவதாதாசார்யர், திருக்குடந்தை.

இரவு 9 மணி.

ஹரிகதை, 'குசேல சரித்ரம்' — ஸ்ரீ. உப. எஸ். ஸௌந்தரராஜ ஐயங்கார், திருச்சினப்பள்ளி.

## 15வ செவ்வாய்க்கிழமை (30-12-19.)

காலை 8 மணி.

i. 'ஸத்ஸித்தாந்த ப்ரகாஸநம்'—ஸ்ரீ. உப. வித்வாந் இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர், பெருமாள் கோயில்.

ii. 'ஸ்ரீ. தேவநாதன் வைபவம்'—ஸ்ரீ. உப. அன்பில். வி. கோபாலாசார்யர், பி. ஏ., பி. எல்., திருச்சிறுப்பள்ளி.

மாலை 2 மணி.

i. 'வர்ணாஸ்ரம தர்மாநுஷ்டாநம்'—உப. வித்வாந் அக்நிஹோத்ரம் கோபால தேசிகாசார்யர், திருக்குடந்தை.

ii. 'ஸ்ரீ ஸாஹித்யதர்சி:'—ஸ்ரீ. உப. வித்வாந் மதுராந்தகம் ஸ்ரீநிவாஸாசார்யர், திருவையாறு.

## 16வ புதன்கிழமை (31-12-19.)

காலை 8 மணி.

i. 'கஜேந்த்ராழ்வான் விஷயத்தில் ஆழ்வார்களின் அநுபவம்'—ஸ்ரீ. உப. வித்வாந் ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யர், திருக்குடந்தை.

ii. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த-ஸபையின் அங்கத்தினர்களின் வார்ஷிக ஸங்கம்.

மாலை 2 மணி.

i. 'ஜீவ ஸ்வாதந்த்ர்ய பாரதந்த்ர்யவாத:'—ஸ்ரீ. உப. வித்வாந் ஈயுண்ணி ஸ்ரீநிவாஸாசார்யர், திருவையாறு.

ii. 'ஸாதேவதா ஸாமரஸ்யம்'—ஸ்ரீ. உப. வித்வாந் பாஷ்யம் ரங்கராமாநுஜாசார்யர், திருவஹீந்த்ரபுரம்.

## 17வ வியாழக்கிழமை (1-1-20.)

காலை 8 மணி. வித்வத் ஸதஸ்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 10.] ஸித்தார்த்தி வருஷ தைமீ [ஸஞ்சிகை 4

த்ரிபுவனகமனம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததானே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

இது குடியரசு காலம். இப்போது ஒருவன் தன்னிடம் ஒரு விசேஷத்தைப் பாராட்டினானாகில், அதை மற்றொருவன் ஸஹிக்கமாட்டான். ஆதலால் வர்ணபேதங்கள் நாஸமடைய வேண்டும் என்றார் உத்யோகத்தில பெருத்த ப்ராஹ்மணர் ஒருவர். ஆனால் பரமஸாம்யம் ஜநங்களுக்குள் எப்போதாவது நேரிடுமோ? ஸர்வத்ர குணஸாம்யம் ப்ரளயத்தில் முடியும். குணவைஷம்யம் ப்ரபஞ்ச ஸ்திதிக்குக் காரணம். ஒரே வகுப்பில் படிக்கும் பிள்ளைகளுக்குள் புத்திவைஷம்ய ப்ரயுக்தமாக வித்யாக்ரஹணத்திலும் வைஷம்யம் ஸித்திக்கின்றது. குடியானவர்க்குள் க்ருஷி வைஷம்யத்தால் பல வைஷம்யம் உண்டாகின்றது. வாணிஜ்யத்தில் ஸ்ரமப்படுபவர்க்குள்ளும் பல காரணங்களையிட்டு லாப நஷ்டங்கள் பலவாறாக ஸித்திக்கின்றன. மழை ஒரு நாட்டில்போல் மற்றொரு நாட்டில் பொழிவதில்லை. மநுஷ்யர்களுள் வித்யாப்ராப்தியிலும், தநார்ஜநத்திலும, க்ருஷி பலங்களிலும், கருஹாராம க்ஷேத்ரங்களினுடைய உடைமையிலும், வைஷம்யங்கள் அநிவார்யம்; ஸுகதுக்கங்கள் ஸமாநமாக மநுஷ்யர்க்குள்

சேரிடுவதில்லை. புத்ரதாராதி ஸௌக்யம் விஷமமாகத்தான் மநுஷ்யர்க்கு உண்டாகின்றது. தாயஸம்பத்து ஏகரூபமாக யாவர்க்கும் அமைவதில்லை. அத்ருஷ்ட பலங்களும் ஸமாநமாக ஏற்படுவதில்லை.

இந்த வைஷம்யங்கள் அநிவார்யம்; இதைப்பற்றிப் பேசுகின்றோமில்லை; ஜாதிக்ருத வைஷம்யம் மாத்ரம் போகவேண்டும் என்று சொல்லக்கூடும். ஜாதிகள் விஷமபுத்தியை விளைவிக்காமல் அநேகமாயிரம் வருஷங்களாக நமது நாட்டில் இருந்தன. அவை அக்காலங்களில் ஈர்ஷைக்கு ஹேதுவாகவில்லை. ஒவ்வொருவனும் ஸ்வதர்மத்தை ஸர்வஜநாநுகூலமாகப் பண்ணிக்கொண்டுவந்தான். தர்மவ்யாதர் துலாதாரர் விதுரர் முதலானோர் மஹாஜ்ஞாதாக்களாக இருந்தும், ஸ்வதர்மங்களை அதிக்ரமித்தார்களில்லை. 'ஸஹஜம் கில யத்விநிந்திதம் ந கலு தத்கர்ம விவர்ஜநீயம் । பஶுமாரண கர்மதாருணோऽநுகம்பாம்ருதுரேவ ஶ்ரோத்ரிய: ॥' என்று, செம்படவனும் ஸ்வகர்மத்தை ஶ்லாகிக்கும்படியாக இருந்தது. மநுஷ்யர், முற்காலம் ஸ்வகர்மபேதங்களால் தமக்குள் தாழ்மையையும் உயர்ச்சியையும் பாராட்டினார்களில்லை. மஹாஜநங்களுக்குத் தம்மால் உண்டாக வேண்டிய நன்மையைப்பற்றியே யோசித்தனர். ஆத்மகுண ப்ரகாசம் எங்கு உண்டாயிருந்ததோ அங்கே ஜநங்கள் பஹுமாநத்தைத் தம்மிச்சையால் கொண்டாடினர். இப்போது தேசாந்தரஸ்தர்கள் சிலர் இவ்விடம் வந்து, ஸ்வார்த்தம் ஜநங்களுக்குள் மித்ரபேதங்களை விளைவிக்க, அதற்கு உட்பட்டுச் சில ஜநங்கள் யுக்தாயுக்த விசாரமின்றி, அகாரணத்வேஷங்களை அஸ்தாநங்களில் பண்ணினார்களாகில், புத்திமான் ஒருவன் ஸ்வரூப நாசத்தை ப்ரார்த்திப்பது நலமோ? ரிக்தன் தநவானைத் தநநிமித்தமாக த்வேஷிக்கின்றான். அக்காரணத்தால் தநவான், ஸ்வதநத்தை ரிக்தர்களுக்குள் விபாகம் செய்துவிடுவனோ? ரூபயௌவந ஶாலியாக ஒருவன் களத்ரம் பெற்றானாகில், பரருடைய அஸூயைக்காக அவளைப் பரர்கள் ரமிக்கத் தத்தம் செய்வனோ? ஶ்ரமப்பட்டு ஸம்பாதித்த



வித்யையைப் பரர் வெறுக்கின்றாரென்று மறந்துவிடுவது தர்மமாமோ?

இந்த விஷயங்களை ஒத்துக்கொண்டு, "வ்யக்திகளுக்குள் பேதம் போகமாட்டாது; ஜாதிக்ருதங்களான பேதங்கள் ஒழியவேண்டும்" என்று சொல்லக்கூடும். 'ஏன்?' என்று வினவுகின்றோம். ஒருவன் தனது கர்மம் தனக்கு நன்மையளிக்குமென்று நம்பினால், அவன் தனது பரம்பரையில் அக்கர்மம் நிலைக்க வேண்டமாட்டானோ? மந்த்ர த்ரஷ்டாக்களான ருஷிகளுடைய ஸந்ததியார்கள் ப்ராஹ்மணர்கள்; அவர்களும் அவர்களுடைய ஸந்ததியார்களான அந்ய ருஷிகளும் உகந்த கர்மங்களை அவர்கள் அநுஷ்டித்து வருகின்றார்கள். ப்ராஹ்மணர் ஸ்வகர்மங்களை அநுஷ்டிப்பதால் மற்றவர் கஷ்டப்படுவது எவ்வித ந்யாயத்தில் சேர்ந்ததோ தெரியவில்லை. ப்ராஹ்மணனுடைய ஜாதிகர்மங்கள் ஆசாரங்கள் இவற்றை த்யஜிக்க இச்சிப்பவன் த்யாகம் செய்யட்டும். அவன் அவ்வண்ணம் த்யஜித்தபிறகு, தான் ப்ராஹ்மணன் என்று சொல்லிக்கொள்ளாமல் இருந்துவிட்டால் போதும். த்யஜிக்க இஷ்டமில்லாதவனை நிர்ப்பந்தம் செய்வது யாது ந்யாயமோ? ஸமாந பக்ஷங்களுடன் கூடின பறவைகள் ஒன்று கூடுகின்றன. அவ்வண்ணமே ஸமாநகர்மங்களும் ஆசாரங்களும், அவற்றுடன் கூடின ஜநங்களைக் காலக்ரமத்தில் தனிமையில் பிரிக்கின்றன. வர்ணஸாங்கர்யத்துக்கு அநுகூலமான காலமிது. ஸ்வதர்மத்தைக் காப்பாற்ற வேண்டியவன், ஸ்வரக்ஷணார்த்தம் அந்யதர்மங்களை ஆபத்தர்மங்களாக அநுஷ்டிக்கக்கூடும். அநுஷ்டிக்க வேண்டியதெனும் புத்தியால், ஸ்வதர்மத்தைச் செய்பவனைப் பரர் அஸூயைப்படுகின்றார்; ஆதலால் அதை விட்டுவிட வேண்டுமெனல், ந்யாயமெனத் தோன்றவில்லை. ஜாதிபேதங்களும் கர்மபேதங்களும் முற்காலம் நமது ஜநங்களில் வைஷம்யத்தை உண்டாக்கவில்லை. இவையன்றித் தேசாந்தரங்களில், பரஸ்பரம் த்வேஷிக்கின்ற பல வகுப்புக்கள் இருக்கக் காண்கின்றோம். பூமியில் பெருத்தவர்களைப் பார்த்து அந்யர்கள் ஸஹிக்காமல் வருந்துகின்றார்கள். வர்த்த

கத்தில் மிக்கவர்களை வெறுத்துக் கூலி ஜனங்கள் கும்பல்கூடி அவர்களை ஹிம்ஸிக்கின்றார்கள். தத்காலம் ஒருவித மர்யாதையும் நிலைக்கமாட்டாதுபோல் தோன்றுகின்றது. பழைய மர்யாதைகளை யழிப்பவர் பலர்; புது ஏற்பாடுகளைப்பற்றிப் பல விதமாகச் சிந்திப்பவர் பலர். அவர்கள் மதிபேதங்களால் அபிப்ராய பேதங்களில் இழிந்து, பரஸ்பரம் தூஷிக்கின்றனர். லோகத்தில் மநுஷ்யர் தமது விஸ்வாஸங்களையும், தர்மங்களையும், ஆசாரங்களையும் அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பதுதான் க்ஷேமமென்பார்கள் சிலர். ஸததவிகாரம் ப்ரக்ருதியின் ஸ்வபாவம். விஷயத்ருஷ்ணையில் மூழ்கிப்போன ஜனங்களை ப்ரக்ருதிஸம்பந்தத்தால் மனோவிகாரங்கள் இடைவிடாமல் பாதிக்கின்றன. மநுஷ்யனுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களையும், அவனுடைய ஜன்மத்தினுடைய முக்ய ப்ரயோஜனத்தையும்பற்றிச் சிந்தியாமல், வைஷயிக ஸுகாபேக்ஷையால் காலோசிதமாகப் புத்திபேதங்களில் ஸ்வயம் இழிந்தும், பிறரை இழியச்செய்தும், வர்த்திக்கும் ஜனங்களுக்கு இது காலம். இந்தக் கலக்கமெல்லாம் நமது தேசம் ஸ்வாதந்த்ர்யத்தை இழந்ததன் பலம். 'ராஜ்ஞி தர்மிணி தர்மிஷ்டா: பாபே பாபா: ஸமா: ஸதா। ராஜாநமநுவர்த்தந்தே யதா ராஜா ததா ப்ரஜா:॥' என்பது ப்ராசீந வசநம். கேவலம் தேசாந்தரஸ்தர்களுடைய ஆக்ரமணத்தோடு முடியவில்லை; தேசாந்தர வித்யையினுடைய ஆக்ரமணத்தாலும் நமது ஜனங்கள் நடுவுநிலைமையைப் பறிகொடுத்துவிட்டார்கள். ஶரீரஶாஸ்த்ர பண்டிதர்கள் ஸ்த்ரீ புருஷ ஸம்பந்தவிதிகளை நிஸ்சயிக்க வேண்டுமென்று ஒருவர் யோசிக்கின்றனர். அவர்கள் விசாரம் ஒரே நிர்சயத்தில் முடியுமோவென்பதைப்பற்றி நாம் அயிர்க்கின்றோம். இது குடியரசு காலமானபடியால் ஒவ்வொருவனும் ஸ்வாபிப்ராயத்தைப் பண்டிதர்களுடைய யோசனைக்காக விட்டுவிடுவனோ? கர்மவிஷயமாயும், ஆசார விஷயமாயும் வேதஶாஸ்த்ரங்களிலும் லௌகிகாநுபவங்களிலும் ஸமர்த்தர்களாய், க்ரோதலோபாதிக ளற்றவர்களாய், தர்மகாமிகளுமாய் இருக்கும் ப்ராஹ்மணர் விசாரக்ஷமர் என்று ஶ்ருதிப்ரமாணத்தை நம்பி ஒருவன் நடக்கலாம். பௌதிக ஶாஸ்த்ர நிஸ்ச



யங்கள் பேதித்துக்கொண்டு வருகின்றன. ஶரீரதத்வ விமர்ஶம் பண்ணி ஏகாபிப்ராயம் உண்டாவதென்பதை ஒரு வ்யாதிக்ரஸ்தன் விஷயத்தில், வைத்யாபிப்ராயங்கள் பேதித்து நிற்கும் க்ரமங்களை யோசித்து நிஸ்சயிப்பது யுக்தம்.

ஆத்மகுண ப்ரகாஶங்கள் ஜாதிக்ருதங்களாக ஏற்படுவானேன்? என்று சொல்லக்கூடும். அந்தக் குணபூர்த்தியானது, ஜன்மாந்தரவாஸனை, ஜன்மத்தால் ஏற்படும் ஸம்ஸர்க்கங்கள், இவற்றை முக்யமாக அபேக்ஷிக்கின்றது. பூர்வ வாஸநாநுகுணமாக உத்தர ஜன்மங்கள் ஏற்படுவதென்னும் ந்யாயத்தால், மேலே குறித்த இரண்டு அம்ஶங்களும் ஜாதிவரம்புகளை அபேக்ஷிக்கின்றன. ஜாதி நிபந்தனையால் ப்ராஹ்மணாதி வர்ணங்களில் ஆத்மகுண ப்ரகாசங்கள் அதிக வ்யக்திகளில தோற்றுகின்றன; அன்யத்ர அவை வ்யக்தி விஶேஷங்களில்மட்டும் காணப்படுகின்றன. ஶாந்தராய், தத்வஸ்திதிகளை அறிந்தவராய், ஆஸ்திகராய், அஸூயாரஹிதராய், பகவத் சரணகமலைகாந்த மநஸ்கராய், த்ருண துல்யங்களான விஷயபோக விமுகராய், பகு மஹான்கள் விப்ரகுலங்களில ப்ரகாசித்தார்கள். இந்த நிலைமைக்குப் பாஹ்ய ஶத்ருக்களும் ஆந்தர சத்ருக்களும் தேசகால வைகுண்யங்களால் உண்டாய்விட்டனர்.

ஐஹிகத்தில் ஸர்வஜனங்களுக்கும் ஸுகமென்பது எங்கும் எக்காலமும் உண்டாகமாட்டாது. ஐரோப்பா கண்டத்திலும் அன்யத்ரவும், ஜனங்களுடைய தத்கால ஸ்திதியை ஆலோசிக்கலாம். பாதி ஜனங்கள் ஸம்ஹரிக்கப்பட்டு மற்றவர் ஸுகமடைவார் என்பது மித்யை. ஒருவர்க்கோ பலர்க்கோ, த்வேஷலக்ஷ்யமாய் நின்றவர் ஒழிந்தால், மிகுந்தவர்களில் அத்தகையவர் உண்டாய் விடுவார்கள். தாழ்த்தப்பட்ட ஜாதிகள் தேசாந்தரங்களில் இல்லையென்பது மித்யை. இந்த நாட்டில் ஒருவர் மற்றவரைத் தாழ்த்தினார்கள் என்பது பொய். தாழ்மை, பிறப்பாலும் செயலாலும் உண்டாகவேண்டும். ப்ராஹ்மணர்களில் தாரித்ரியம் மிகுதி. அதனால் அவர்களை, தாழ்த்தப்பட்டவர்களென்றால் அது பொய். ஏனென்றல், அவர்கள் ஸ்வயமே த்ருணதுல்யமான போகங்களையும் போகஸாதனங்களையும த்யாகம் செய்தவர்கள். எல்லா ஜனங்களும் பொருளில் பெருக்கமாட்டார்கள். கூலி கொடுப்பவர்

என்றும் சிலரே. கூலி வாங்குபவர் என்றும் பலரே. உயர்ச்சி சிலவிடங்களிலும், தாழ்மை பலவிடங்களிலும் உலகத்தின்கண் ஒழியமாட்டா. யோசிக்கப் புகுந்தால், வர்ணவரம்புகள், லோகத்தில் அஸூயையை மிகவும் விலக்கின வென்று புலப்படும். வர்ணவரம்புகள் குணகர்ம விபாகங்களால் ஈச்வர ஸம்மதத்தால் ஏற்பட்டன. இவை அழிந்தால், பரஸ்பர த்வேஷம் ஜநங்களுக்குள் மிகவும் ப்ரகாசிக்கும். ப்ராஹ்மணர் பிச்சையெடுத்துப் படித்தவர்களென்று ஒருவர் அவர்களை நிந்தித்தார். பிச்சை யெடுக்காதவர்கள் மற்றவர்களில் ப்ராஹ்மண ஸமூஹத்தைக் காட்டிலும் பெருத்து நிற்கவில்லையா? ஏன் அவர்களில் படித்தவர்கள் அவ்வளவு மிதமாய்ப் போய்விட்டார்கள்? ப்ராஹ்மணர்க்குப் பிச்சையிடக்கூடாதென்று நிஸ்சயித்தும் விட்டார்கள். அன்னவர்களிடம் ப்ரதிக்ரஹமானது ப்ரத்யவாயகரமென்று ஸ்ம்ருதி கர்த்தாக்களுடைய நிஸ்சயம். ப்ராயேண ரிக்தரான விப்ரர், உபபத்தியுள்ள விப்ரர்களிடம் யாசகம் செய்கின்றனர். ஐயமிடுவதில் ப்ராஹ்மணர் மற்றோர்க்குச் செய்யுமளவு, மற்றோர் ப்ராஹ்மணர்க்குச் செய்கின்றதாய் நாம் எண்ணுகின்றோமில்லை. ப்ரஹ்ம குலத்தைச் சில ஜந்ம ப்ராஹ்மணர் ப்ரஹ்ம த்வேஷிகளுக்குக் காட்டிக் கொடுக்கின்றார்கள்.

---

ஸ்ரீ:

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | | ரு. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. | ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |
| 3. | ஸ்ரீ பாகவத சதுஶ்லோகி - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 4. | ஸ்ரீ சதுஶ்லோகீவிவரணம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 5. | ஸ்ரீராமாயணத்தில் விசேஷார்த்தங்கள் ஸ்ரீ. உ.பா. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |

# ப்ரேமப்ரவாஹம்.

(தொடர்ச்சி.)

இவ்வண்ணம் உன்னிடம் ப்ரேமையுண்டானபடியால், வநசரர்களும் அநாசாரஶீலர்களுமான கோபீஜநங்களும், உனது நிரந்தர ஸ்மரணத்தால் ஸம்ஸாரக்கடலைக் கடந்து, அத்யாத்ம வித்யையையும் ஸாதித்தார்கள்; உனது பரமபத ப்ராப்தியையும் பெற்றார்கள். ஓ பத்மநாப! ஸம்ஸாரப் படுகுழியில் விழுந்துழலும் க்ருபணர்களுக்கு அதைக் கடப்பதற்கு ஓர் அவலம்பமாய் இருக்கின்ற உன்னுடைய திருவடித்தாமரைகள் அளவிடக்கூடாத ஜ்ஞாந ஸம்பத்துடன் கூடிய யோகேஶ்வரர்களால் ஸதா த்யாநிக்கப்பட்டவைகளானாலும், கேவல க்ருஹவ்யாபாரஸக்த சித்தர்களான தங்களுடைய மநஸ்ஸிலும் ஸதா ஆவிர்ப்பவிக்க வேண்டும் என்று, கோபஸ்த்ரீகளால் ப்ரார்த்திக்கப்பட்ட விஷயமானது, அத்யந்தாகிஞ்சநர்களும், ப்ரியமென்பதே மூர்த்தீகரித்ததென விளங்கும் உனது திவ்ய மங்களவிக்ரஹத்தில் ஈடுபட்டு, யோகிகளுக்கும் துஸ்ஸாத்யமான உனது ஸாயுஜ்யத்தை ஸம்பாதித்துக்கொள்ளக்கூடும் எனும் உண்மையை தெரிவிக்கின்றது. அதனாலன்றோ நமது நாட்டை அலங்கரித்த நாராயண பராயணர்களுடைய திவ்யஸூக்திகள், மஹர்ஷி ப்ரோக்தங்களான க்ரந்தங்களைக் காட்டிலும் விசேஷித்தன வென்று ஸ்ரீநிகமாந்தாசார்யன் நிஷ்கர்ஷித்தார். தத்காலத்தவர்கள் நினது ப்ரேமையெனப்பட்ட மஹார்ணவ மக்நர்களாகில் அவர்கள் வேறொன்றையும் அபேக்ஷிக்க வேண்டியதில்லை.

உனது திவ்யகதைகளில் ரஸாநுபவம் செய்கின்ற பாக்யமுள்ளவர்களுக்கு வேறொன்றும் வேண்டாம். அந்த விஷயத்தில் வர்ணநியமம் இல்லை; ஆஶ்ரமநியமமும் இல்லை. இந்த ஏற்றம் எங்கும் ப்ரகாசிக்கக்கூடும். ஆனால் அதனுடைய இருப்பை எண்ணிக்கொண்டு ஒருவன் அஹங்காரத்தில் இழிந்தானாகில் அவன் நஶித்துப்போவான். ஸர்வத்ர உனது ஸ்திதியானது எவன் புத்தியில் நிலைக்கின்றதோ, அவனுக்கு ஸர்வத்ர மித்ரபாவமானது இறைப்

பொழுதும் மறக்கத்தகாததே. நீ ஸர்வ பூதங்களிடமும் அந்தராத்மாவாய், ஸர்வஜகத் ஸ்வாமியாய், ஸர்வஜகத்தையும் சரீரமாயுடையவனாய் இருக்கையில், எந்தவிடத்திலும் சத்ருத்வம் எனப்பட்டது எண்ணக்கூடாததே. இன்னும் எந்த ஜந்துவினிடத்திலும் உனது பக்தன், அமித்ரத்வம் எனப்பட்ட உதாஸீந வ்ருத்தியையும் ஆவிஷ்கரிக்கக்கூடாது. அஜ்ஞாநத்தால் ஜநங்கள் ஒருவரை யொருவர் த்வேஷிக்கலாம். த்வேஷத்துக்குக் காரணம் லோகத்ருஷ்டியில் உண்டாயிருக்கலாம். காரணமின்றியும் மோஹத்தால் த்வேஷம் ஜநிக்கலாம். ஜ்ஞாநஹீநர்களுடைய ப்ரவ்ருத்திகளைத் தடுக்கமுடியாது. அவர்களுடைய ப்ரவ்ருத்தியால் துன்பமடைந்த உனது பக்தன், அந்த ப்ரவ்ருத்தியானது அஜ்ஞாநத்தில் பிறந்ததெனத் தெரிந்துகொண்டு, அதன் பலமாக அவர்கள் துக்கானுபவம் செய்யவேண்டியவர்களென்று எண்ணி சோசிக்கத்தக்கவன். அஜ்ஞாநாவரணத்தால் மறைந்துநின்ற அவர்களுடைய ஆத்மாவானவன் ஸ்வரூபத்தால் ஜ்ஞாநாநந்தமயன் என்றும் உனக்கு சேஷபூதன் என்றும் அறிந்தவனுக்கு அவர்களிடம் அநுகம்பை பிறக்கவேண்டுமேயன்றி, வருத்தமென்பது கொஞ்சமும் நினைக்கத்தக்கதன்று. அஜ்ஞாநமாவதென்ன? சரீரத்தை ஆத்மாவாக ப்ரமித்தல், சரீர ஸம்பந்திகளைத் தம்முடையதென்று ப்ரமித்தல். அந்த ப்ரமையைக் கடக்காதவர்கள் உண்மையில் நினது அடியார்கள் ஆகமாட்டார்கள். நீண்டகால அப்யாஸத்தாலும், ப்ரேமப்பட்டும், அஜ்ஞாநமென்பதைக் கடக்கக்கூடும். சாஸ்த்ரார்த்தத்தைக் கேட்டமாத்ரத்தால் அது ஸித்திக்கத்தகாதது.

ஸர்வத்ர ஹிதபுத்தியானது, தேசாபிமாநம் எனும் சித்தவ்ருத்தியால் உண்டாகமாட்டாது. தேசாபிமாநமென்பது, ஹிதப்ரவ்ருத்திக்கு ஏகதேச ஸஞ்சாரத்தைமட்டும் ஸஹிக்கும். பராயிகயாக அது தேசாந்தர த்வேஷத்தையும் ஜநிப்பிக்கும். தேசாபிமாநம் தேசாபிமாநமாய்ப் பிறந்து, தேசாபிமாநத்திலேதான் முடியும். நின்னபிமாநத்தால் அது ஜநித்தால் நின்னபிமாநத்துலே நிலைத்து, அதைவிடாமல் அது ஸர்வதேசத்துக்கும் பரவும். ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் உன்னிடம் ப்ரியம்கொண்டு, உனது வாஸஸ்தாநமாக ஸர்வத்தையும் கருதி, தனது சக்திக்கும் அவகாசத்துக்கும் பொருந்தியபடி, உனபொருட்டாக,



உனது ப்ரீதிக்காக, ஹித ப்ரவ்ருத்தியில் ப்ரவேசிக்கின்றவனுக்கு ஸர்வ ஜந்துக்களும், அவர்களுடைய தேவதிர்யக் மநுஷ்ய ஸ்தாவராதி ரூபங்களுடன் மட்டும் பாவிக்கமாட்டா; இவை யாவும் கர்மயோநிகளான சரீராகார பேதங்களாகத் தோன்றி, அவற்றுள் கேவல ஜ்ஞாநரூபியாய், உன்சேஷபூதனாய் விளங்கும் ஜீவன் அவனுடைய ஹித ப்ரவ்ருத்திகளுக்கு லக்ஷ்யமாவான். தாய் பூமியென்றும் தந்தை பூமியென்றும் சொல்லிக்கொண்டு, ஓரிடம் அபிமாநமும், அந்யத்ர த்வேஷமும் கொண்டாடுகின்ற அதிகாரிக்கு நாமரூப பேதங்களனைத்தும் அஸ்தமநத்தை யடைகின்ற உனது திவ்ய ஸ்வரூபமானது எவ்வண்ணம் புலப்படும்? யாவும் உனது பூமி; ஸர்வ ஜந்துக்களும் உனது சரீரங்கள். ஆதலால் உன்னிடம் ப்ரியம் கொண்டவனுக்கு மித்ராமித்ர கதையில்லை; அவனுக்கு ஒருயிரிடமும் த்வேஷம் உண்டாகாது. எல்லாவுயிரிடத்தும் அவன் ஸ்நேஹத்தைப் பாராட்டுவான்; அஜ்ஞாநத்தால் த்வேஷிப்பவரிடம் கருணைகொள்வான். உன் ப்ரீதிக்காக ஸர்வத்ர ஹிதம் செய்வான். உனக்கு அப்ரியன் ஒருவனுமில்லை. நீ ஜகத்ஹிதனானபடியால் நின்னடியானும் அவ்வண்ணமே இருக்கக் கடமைப்பட்டிருக்கின்றான்.

ஸமயகோடிகளெலாம் தந்தெய்வ மெந்தெய்வமென்று எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நீ தனியே நிற்கின்றாய். உன்னையறியவும், உனக்கு ப்ரியமாய் நடக்கவும் நினைத்து, அவ்வகைகளில் வழிதடுமாறிப் பல மதஸ்தர்கள் பரஸ்பரம் த்வேஷம் செய்கின்றனர். ஓரிடத்திலும் த்வேஷம் உனக்கு ப்ரியமாகாது. ஸம்ஸார தந்த்ரத்தை நீ வஹிக்கின்றபடியால், உனது சாஸ்வதமான தர்மத்தை ரக்ஷிக்கவெண்ணி, நீ சேதநர்களுடைய பாபங்கள் சிக்ஷையுறும்படி விதிக்கின்ற சிக்ஷைகள், அவர்களுக்கு ப்ராயச்சித்தரூபமாக உபகரிக்கின்றன. ஆதலால் ஒரு மதத்தில் அகாரணமான அபிமாநமும், மதாந்தரத்தில் அகாரண த்வேஷமும் உனதிடம் உதிக்கமாட்டா. யுக்தாயுக்த விசார ஸாமர்த்யமின்றி, ஸ்வமதத்தில் காரணமற்ற அபிநிவேசம் செய்பவன் நின் ப்ரீதிக்கு விஷயமாகான்; பரமதத்தில் அகாரண த்வேஷம் செய்பவனும் அப்படியே. லோகத்தில் உத்பத்தி தெரிந்த மதங்கள் பல; உத்பத்தி புலப்படாமல் அநாதி ஸித்தமாய் நித்யமென விச்வஸிக்கப்பட்டதான வைதிகமதம் ஒன்றே. லோகத்தில் ஏதேனு

மொரு ரூபத்தால், யாதேனு மொருபெயரால், உனை ஜநங்கள் தேடாதகாலம் யோசிக்கத்தக்கதன்று. உனது க்ஷேத்ரஜ்ஞ ஶக்தியெனப்பட்ட ஜீவாத்மாக்கள் தங்களுடைய விவித சரீரங்களுக்குத் தக்கபடியே தாரதம்யத்தோடு தமது ஜ்ஞாநஶக்தியை ப்ரகாசிப்பிக்கின்றனர். அவ்வண்ணமே உனைப்பற்றிய ஜ்ஞாநமும் மநுஷ்யர்க்கு ஜந்மாந்தர ஸம்ஸ்காரங்களாலும், தத்காலத்திய ஜந்ம ஸம்ஸர்க்கங்களாலும் ஏற்பட்ட அவகாசங்கட்குத் தக்கபடியே, தரதம பாவத்தோடு ஸித்திக்கின்றது. உத்பந்நங்களான மதங்களும் அவற்றிற்குப் பூர்வமேயிருந்த மதங்களை ஆஶ்ரயித்து உண்டாயினவாதலால், உனது அதிமாநுஷ ஸ்வரூபத்தைப் பற்றி மநுஷ்யர்களால் ஆத்யந்திகமாக யோசிக்கப்படாத காலமேயில்லை. ஜநங்கள் அவ்வவர்க்கு உற்ற ஜ்ஞாநஶக்தியை அநுஸரித்து, உனை மாதாவென்றும், பிதாவென்றும், தேவனென்றும், ஸர்வேஶ்வரனென்றும் பலவிதமாக விஶ்வஸித்து வழிபட்டனர். ஆனால் உன் விஷயமான தத்வஜ்ஞாநம், உனது ப்ரஸாதத்தால், அதைப் பெறத்தகுந்த அதிகாரிகளுக்குத்தான் கிடைத்தது. அந்தக் காரணத்தினால் நிக்ருஷ்டாதிகாரிகள் அறிந்துகொண்ட மிதமான ஜ்ஞாநபேதங்கள் நிந்தாவிஷயங்களாகமாட்டா. தபஸ்ஸாலும், சித்தஸம்ஸ்காரத்தாலும், உனது ஜ்ஞாநம் படிப்படியாக வ்ருத்தியாக வேண்டும். நீ ஸர்வகாரணனென்றும், ஸர்வபோஷகனென்றும், முடிவில் யாவர்க்கும் லயஸ்தாநமாகின்றாயென்றும் ஆசார்யன் உபதேசிக்க, இந்த லக்ஷணங்களுடன் கூடிய உனது ரூபத்தைப்பற்றிச் சிந்தித்த ஶிஷ்யன், முற்பட அதை அந்நமென்றும், பின் ப்ராணனென்றும், மநஸ்ஸென்றும், விஜ்ஞாநமென்றும் க்ரமமாக யோசித்து, முடிவில் அதை ஆநந்தமென்று நிஷ்கர்ஷித்தான். மற்றவை உனது சரீரங்கள். இவ்வண்ணமே, உனது ஸ்வரூபமானது ஜிஜ்ஞாஸுக்களால் பலரிடம் கேட்டுப் படிப்படியாக அறியப்பட்ட க்ரமங்கள் உபநிஷத்துகளில் காணப்படுகின்றன.

தேசங்கள் பல; பாஷைகள் பல; வித்வான்கள் பல விடங்களிலும் பல காலங்களிலும் பல ப்ரகாரமாக உண்டாயிருக்கின்றனர். ஆதலால் உனைப்பற்றிய ஜ்ஞாநமும், காலத்தாலும் தேசத்தாலும் பேதிக்கவேண்டும். புத்திமான்கள் பல மதங்களையும் தடஸ்த பக்ஷத்தை ஆஶ்ரயித்துப் பரீக்ஷித்தார்களாகில், உண்மை



விளங்காமல் போகாது; ஒவ்வொரு மதஸ்தர்களும் கேவலாபிநிவேசத்தால் ஸ்வமதம் ஸத்யமென்றும், மதாந்தரங்கள் மித்யையென்றும் கூவுவது அஜ்ஞாந விஜ்ரும்பணம். காலம் எல்லையற்றது; தேசம் எல்லையற்றது; ப்ராக்ருத வஸ்துக்கள் எல்லையற்றன. ப்ரக்ருதியானது ப்ரவாஹத்தால் நித்யமானது. உத்பந்நமானது நாசத்தில் முடியும். ஶாஶ்வத வஸ்துவுக்கு உத்பத்தியில்லை. ஜீவன் ஸ்வரூபத்தால் நித்யன், நிர்மலன்; ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் அவன் தோஷயுக்தன். இவ்வண்ணம் வேதாந்தார்த்தங்களை அவலம்பமாக ஆஶ்ரயித்தவர்க்குத்தான் ஸத்ஸம்ப்ரதாயம் வெளியாகும். அந்ய மதங்கள் ஏகதேசாம்ஶங்களில் ஸத்யத்தைச் சொல்கின்றன. இவ்வண்ணம் விவேகித்த ஒருவன், உனது ஸர்வஸமத்வத்தை அறிந்தானாகில், நீ ஸர்வஸுஹ்ருத் என்றும், ஸர்வஹிதன் என்றும், உன்னிடம் மித்ராமித்ர கதையில்லையென்றும், ஒவ்வொருவனுடைய தர்மாசரணமும் அபிக்ரம நாஶமின்றி பர்யவஸாநத்தில் உனது ப்ரஸாத ப்ராப்தியை உண்டாக்கும் என்றும் அவனுக்கு எளிதில் விளங்கும். மதப்ரயுக்தமான த்வேஷங்கள் உனக்கு எக்காலும் ஸந்தோஷமளிக்கமாட்டா. அவை அஜ்ஞாநத்தால் உண்டாகின்றன; உனது நிக்ரஹத்தை விளைவிக்கின்றன. தமது மதம் பெரிதென்றும் பரமதங்கள் பொய்யென்றும் சொல்லிக்கொண்டு, காலதேச வைகுண்யங்களை ஆஶ்ரயித்து, அஜ்ஞர்களுடைய புத்தியைக் கலக்கி, ஒரு ஜந ஸமூஹத்தில் மிதபேதங்களை ஜநிப்பிப்பவர்கள் உன்னை உண்மையில் வருத்துபவர்களே. அவர்கள் செயல்களால் ஸமஸ்த லோகமும் ஸுகத்தை அடையமாட்டா. அன்றியும் ஸ்வமத ப்ரயுக்தமான ஆக்ரஹத்தைக்கொண்டு, பலர் பரமதஸ்தர்களை ஹிம்ஸிக்கக் களிப்பவர்கள் அத்தகைய ப்ரவ்ருத்திகளால் அவர்கள் உனைக் களிப்பிப்பதாக ப்ரமிக்கவும் காண்கின்றோம். மௌட்யம் இதன்மேல் [illegible]லமாட்டாது. ஆஸுரத் தொழில்புரிந்து, உனை ஸந்தோஷிப்பிப்பதெனும் புத்தி, மாயையால் அபஹரிக்கப்பட்ட சித்தமுடையவர்களுக்குத்தான் பொருந்தும். வேதாந்த மார்க்கத்தில் ப்ரதிஷ்டிதராகின்ற அதிகாரிகள், புண்ய கார்யங்களில் ப்ரயத்நப்படுவார்கள், பரஹிம்ஸாரூப பாபத் தொழில்களைக் கனவிலும் நினைக்கமாட்டார்கள். பரமஸாம்யத்தை அவர்கள் ப்ரார்த்திப்பவர்களாதலால் ஸர்வத்ர ஸமத்வத்தையே ஸாதிக்க யத்நிப்பார்கள். ஸர்வமும் உனை அந்தராத்மாக உடையன. ஆகையால ஸமத்வ

புத்தி ஸத்யத்தில் நிலைகொள்கின்றது. தேவர்கள் மநுஷ்யர்கள் ம்ருகங்கள், பக்ஷிகள், வ்ருக்ஷங்கள், புழுக்கள் முதலான யாவும் உனது ரூபங்கள். விஶ்வரூபத்தை நீ தரிக்கின்றாய். அஜ்ஞாநத்தால் உனை விட்டுத் தனிமையில் அவை நிற்பதாகக் காண்கின்றார்கள். அந்தர்யாமியான உன்னுடன் சேர்ந்தவைகளாகவே ஸர்வ ஸ்தாவர ஜங்கம பதார்த்தங்களும் தர்சிக்கத்தக்கன. இத்தகைய ஜ்ஞாநம் ஸ்திரப்பட்டவர்களுக்குப் பரமேஶ்வரனான உனது ப்ரஸாதம் ஸித்தம். அது ஸித்தித்தபின்பு க்லேஶமென்பது எங்கு நிற்கும்? மோஹத்தால் அவ்வதிகாரிகளை ஒருவன் ஹிம்ஸிக்கப் புகுந்தானாகில், அவர்கள் ஹிம்ஸிக்கப் புக்கவனிடமும் உனையே காண்பார்கள்; அவனுடைய ஆயுதங்களிலும் உனதிருப்பை அறிவார்கள். ஸர்வப்ரகாஶகனான நீ, அவர்களுடைய ஹ்ருதய கமலங்களில் இருக்கின்றாய். ஆதலால அவர்களுக்குப் பயம் எங்கும் எக்காரணத்தாலும் உண்டாக விரகில்லை. அப்யத்ர பய ஹேதுவாகும் வஸ்துக்கள் அவர்களுடைய த்ருஷ்டியில் உன்னோடுகூடி ப்ரகாசிக்கின்றன. இவ்வதிகாரிகள், சேர்க்கையாலும், ஸோபலத்தாலும், பாபர்களை ஆக்ரமிக்க மாட்டார்கள். தமமதத்தாலும் பரரைப் பிடிக்கமாட்டார்கள்.

பத்ராதிபர்.

(இன்னும் வரும்.)

---

श्रीः।

श्रीमते रामानुजाय नमः।

श्रीमते निगमान्त महादेशिकाय नमः।

श्रीमते श्रीनिवासार्य वर्याय नमः।

"श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि॥"

ओङ्कारो व्याकरोति त्रिभुवनविभवं साक्षा- [illegible] प्रव्यक्तं जगति जनिमतां [illegible] । [illegible] जगदवकरणे यः [illegible] स [illegible] वेदवेद्यः [illegible]

[illegible] ।
[illegible] कारुण्यसिन्धुः श्रीपति [illegible] ॥

* இப்படிப்பட்ட மஹநீய கோஷ்டிக்கு நல்வரவு கூறியழைத்து ஸத்காரம் பண்ணும்படி நேர்ந்த பாக்யத்தை ஒப்பில்லாப் பேறாக எண்ணிய அடியேனுக்கும் மற்ற ஸத்கார ஸங்கத்தினர்க்கும் இன்றே ஜந்மஸாபல்யம் வாய்த்ததென்பது பற்றி இம்மஹா ஸதஸ்ஸை அலங்கரிக்கும் உத்தமர்கட்கும் இவ்வித ஸதஸ்ஸைக் கூட்டும்படி அநுக்ரஹித்த புருஷோத்தமனுக்கும் நாங்கள் அத்யந்தம் க்ருதஜ்ஞதையுள்ளவர்களாயிருக்கிறோம். என் போன்றோர்க்குக்கூட இவ்வித நன்மை விளைந்ததென்பதை யோசிக்குமிடத்து, 'संभवामि [illegible]' போல், ஸர்வேஶ்வரன் தீநர்களை விஷயீகரித்து ப்ரவ்ருத்திப்பிக்கும் தம்முடைய நிர்வ்யாஜ க்ருபா ப்ரவாஹத்தின் மஹிமையே வ்யக்தமாகிறது.

---

* இது, சென்ற மார்கழி மீ-ல் திருவஹீந்த்ரபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தின் 9-வது வார்ஷிக மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உ.வே. டி. ஏ. சடகோபாசார்ய ஸ்வாமியால் படிக்கப்பட்ட ஸ்வாகத பத்ரிகை.

காலதேசாதிகளால் ஏற்பட்ட அஸௌகர்யங்களைப் பாராட்டாமல் கேவலம் அநுக்ரஹார்த்யவஸாயத்துடன் நாநாஸ்தலங்களிலிருந்து இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ மஹாத்மாக்கள் விஷயத்தில் எவ்வித ப்ரத்யுபகாரம் பண்ணினால் ஆந்ருண்யமுண்டாகு மென்று யோசிக்க யோசிக்க அடியோங்களுடைய அத்யந்தாஸக்தியே புலப்படுகிறதே தவிர, எள்ளளவேனும் நாம் கைம்மாறு செய்யவல்லரென்று நினைக்க ஹேதுவில்லை. ஆனது பற்றி ப்ரணிபாத ப்ரஸந்நர்களான ஸாதுக்கள் ஸந்நிதியில் அஞ்ஜலி பூர்வகமாகக் கார்ப்பண்யாநுஸந்தாநமே ப்ரபலோபாய மென்று உணர்ந்து, உபசாராபதேசமாக இங்கு ஸம்பவிக்கும் அஸ்மதீயாபசாரங்களை க்ஷமித்து 'பக்த்யுபாத' மென்கிற ஆகாரத்தை மாத்ரம் உகந்து க்ருபை பண்ணவேணு மென்று ப்ரார்த்திக்கிறேன்.

மேலும், '[illegible]' என்கிறபடி, அசக்தர்கள் பகவானுடையவும் பெரியோர்களுடையவும் திருவருளை, சக்தர்களைக் காட்டிலும் சீக்ரத்தில் ஸம்பாதிக்கிறார்கள் என்கிற ந்யாயத்தை அநுஸரித்து, என்போன்ற அஸமர்த்தர்களுடைய ச்ரவணீயமான பரிச்ரமமே உத்தமமான சிபார்சாகிற தென்று நினைக்கக் கொஞ்சம் தைர்யமுமுண்டாகிறது.

ஆனால், அஸ்மதாதிகள் எவ்வளவு அநர்ஹர்களாயிருந்தபோதிலும், இந்தத் திவ்ய தேசத்தின் மஹிமையையும், தத்ராபி இந்த ஸதஸ் கூடியிருக்கும் ஸ்தலத்தின் பெருமையையும், இந்த க்ஷேத்ரத்தில் அநாதியாய் வாஸம் செய்துவந்திருக்கும் ஸாது பரம்பரையையும் உத்தேசித்து, இந்த மஹாஸபை இங்கே கூடியிருப்பது உபபந்ந மென்றே தோன்றுகிறது.

பூர்வம், மார்க்கண்டேயாதி மஹர்ஷிகளுக்கு ப்ரத்யக்ஷராய், அவர்கள் ப்ரார்த்தனைக்கு இணங்கி லோகாநுக்ரஹார்த்தம் அடியவர்க்கு மெய்யன் என்கிற அந்வர்த்தமான திருநாமம் பூண்டு அர்ச்சா ரூபியாய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீதேவநாயகன், பிற்



காலத்தில் '[illegible]' என்று புராணத்தில் ஸூசிப்பிக்கப்பட்ட திருவேங்கடமுடையானது கண்டாம்சமாகிய அஸ்மதாசார்யன் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனால் சிரகாலம் மங்களாசாஸநம் பண்ணப்பெற்று, அவ்வாசார்யனுடைய பக்தி ப்ரவாஹத்தில் ஈடுபட்டு, '[illegible]' என்றபடி, சரீரத்துக்கு ஆத்மாவை விட்டுப்பிரிய எப்படி ஒண்ணாதோ, அதுபோல் அப்பரமைகாந்தியின் விச்லேஷா ஸஹிஷ்ணுவாக '[illegible]' புறப்பட்டுச் சென்றவரை மறுபடியும் தன்னிடம் அழைத்து இருக்கும்படி செய்த திவ்ய தேசம் இதுவே. அவ்வாசார்யனது திருமாளிகை இந்த ஸதஸ் கூடியிருக்கும் ஸ்தலத்தில் அமைந்துள்ள தென்பதும், இவ்விடத்திலேயே அவர் வெகு காலம் ஸத்ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளினார் என்பதும் பரம்பரா ப்ராப்தமான விஷயம். அம்மஹான், 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' என்று தமக்கு ஸாக்ஷாத் ஸ்ரீரங்கநாயகியால் அருளிச்செய்யப்பெற்ற திருநாமத்தை வஹிப்பதில் அஸூயை கொண்ட சிலருடைய துர்ப்போதனையால் ஏவப்பட்ட ஒரு கொத்தன் ஸ்வாமியை நோக்கித் தான் சொல்லுகிறபடி ஒரு கூபநிர்மாணம் செய்யாவிடில் அந்தத் திருநாமம் ஸ்வாமிக்குத் தகாதென்று உரைக்க, ஸ்வாமியும் அதை அங்கீகரித்து, அவன் கொடுத்த விஷமாகாரமான உருக்குக் கற்களைக்கொண்டு தம் திருக்கைகளால் கட்டிய திருக்கிணறும் இங்கிருப்பதை ஸேவிக்கிறோம்.

ஸ்ரீ தேசிகன் காலத்திற்குப் பிறகு, அவ்வாசார்யனது திவ்ய கடாக்ஷ மஹிமையாலும், அவரது திருவடி யவலம்பத்தாலும், அவர் உபதேசித்தருளிய ஜ்ஞாநமும், அவர் அநுஷ்டித்த ஸதாசாரமும், அவர் நிலைநிறுத்திய ஸத்ஸம்ப்ரதாயமும் ஆசார்ய சிஷ்யக்ரமமாய் இந்தத் திவ்ய தேசத்தில் நடைபெற்று வந்திருக்கிறது. அந்தப் பாகவதோத்தமர் தாம் உகந்து அநுபவித்து, ஸ்ரீ ஹேமாப்ஜநாயிகாஸமேத ஸ்ரீ தேவநாதனையும், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் முதலிய திருநாமங்களையும் மங்களாசாஸநம்செய்த ஸரணியை

அநுஸரித்தே அத்யாபி இங்கு அநுஷ்டாநம் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீமந் நாதமுநிகளால் லுப்தோத்தாரணம் செய்யப்பட்ட 'திவ்ய ப்ரபந்தம்' என்று அந்வர்த்த நாமதேயமுள்ள த்ரமிடோபநிஷத்தின் பாராயண பத்ததி தேவகாநமென்று சொல்லத்தக்கவாறு அந்யாத்ருஶமாக இங்கு அமைந்திருப்பதும், ஸ்ரீதேஶிகனும் பிற்கால அவ்வாசார்யன் மநோரதத்தை அநுஸரித்து, அநுஷ்டாந நிர்வாகம் செய்துவந்த பெரியோர்களும் ஏற்படுத்திய பரிஷ்காரத்தின் பலமே யாகும்.

இவைபோன்ற விஶேஷ விபவம் பொருந்திய இந்தத் திவ்ய க்ஷேத்ரத்தில் இம்மாதிரி ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர்களான ஸ்ரீவைஷ்ணவர்களின் மஹாஸதஸ் கூடுவது, '[illegible]' என்கிற ந்யாயப்படி ஆநுரூப்ய ராமணீயகத்தால் எல்லாரும் உகக்கத்தக்கதே. இந்த மஹாஸபையில் எழுந்தருளியிருக்கும் ஒவ்வொரு திருநாமத்தையுமே அவரவர் இருக்குமிடத்துக்குச் சென்று ஸேவித்துக்கொள்வது ஸபலமான கைங்கர்யமாயிருக்க, இங்கு எல்லோரும் ஒருங்கு சேர்ந்து ஸேவை ஸாதிக்கும்படியான ஸந்தர்ப்பம் நேர்ந்தது, ஜநங்களின் அத்ருஷ்ட வஶத்தாலென்றே நினைக்கவேண்டியதா யிருக்கிறது.

ஆனால், இந்த ஸதஸ்ஸை அலங்கரிக்கவேண்டிய சில ப்ரதாந ரத்நங்கள் அத்ருஶ்யமாயிருப்பது மநஸ்ஸுக்கு ரொம்ப கேதத்தை உண்டுபண்ணுகிறது. சென்ற வர்ஷங்களில் நடந்த ஸதஸ்ஸுக்களில், தம் வாழ்ம்ருதத்தினால் எல்லோரையும் ஆநந்திக்கச்செய்த சதுஶ்ஶாஸ்த்ர வேதகல்பதரு ஸ்ரீசேஷாசார்யஸ்வாமி நமக்கு அப்ரத்யக்ஷராய் ஸாக்ஷாந்நித்யவிபூதி கைங்கர்ய ரஸிகராய்விட்டது, இந்த லோகத்துக்கு அபரிஹார்யமான நஷ்டத்தை உண்டாக்கிவிட்டது. அந்த ஸ்வாமியின் மேதையையும் ப்ரதிபையையும் தேஜஸ்ஸையும் பாடவத்தையும் உத்ஸாஹத்தையும் பற்றி விவரிக்க நான் அதிகாரியல்ல. ஆனால் எனக்கு நேர்ந்த க்ஷண பரிசயத்தால் நான் உணர்ந்தது என்னவென்றால், நமக்கு ஸத்ஸம்ப்ரதாய ப்ராப்தமான ஆர்ய வித்யையையும் ஆர்யாசாரத்



தையும் லோகமெங்கும் பரவச்செய்வதே இந்தக் காலத்துக்கு சித்தமான முக்ய வ்யாபாரமென்றும், அதுவே லோகோஜ்ஜீவநமான கைங்கர்யமென்றும், அந்தக் கைங்கர்யம் சரிவர நடைபெறநாமே உத்தரவாதமென்றும், அதை நிர்வஹிக்கவேண்டிய பொறுப்புடன் அந்த ஸம்ப்ரதாயத்தின் தத்வத்தை அறிந்தவர்கள் எல்லோரும் ஸர்வ ப்ரகாரமாயும் விடாது முயற்சிக்கவேண்டுமென்பதும், இதுவரையில் வித்யாப்ரவசநத்துக்காகவும் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தநத்துக்காகவும் நம் பெரியோர்கள் நாள்முதல் நடந்துவரும் உபாய ப்ரக்ரியை, அதாவது ஆசார்ய வரணம், சிஷ்ய ஸங்க்ரஹம் முதலியன யதாபூர்வம் அங்க உபாங்கங்களோடு ஸாத்யமான ஸந்தர்ப்பங்களில் முறைப்படி விடாமல் தொடர்ந்து நடைபெற்று வருவது அவஶ்யமேயாகிலும், அத்துடன் அந்த க்ரமத்துக்கு எவ்வித ஹாநியுமில்லாமலே இந்தக் காலத்துக்கு அநுகுணமான சில ப்ரவசந மார்க்கங்களை நாம் அவலம்பிக்க வேண்டியது அவஶ்யமென்றும், அது ஶாஸ்த்ர ஸம்மதமென்றும், பூர்வாசார்யாபிமத மென்றும், ரஹஸ்யார்த்தத்தை ஆசார்யாஜ்ஞா லங்கநம் பண்ணி லோகோஜ்ஜீவநார்த்தம் வெளியிட்ட ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளத்துக்கு உகப்பாகவே இருக்குமென்றும் ஸ்ரீசேஷாசார்ய ஸ்வாமியின் கருத்தென்று கண்டுகொண்டேன். இப்போது அபரிஹார்ய விஷயத்தில் ஶோசிப்பது யுக்தமல்லாததால், நாம் அந்த ஸ்வாமியின் விஶ்லேஷத்தைக் குறித்துத் துக்கித்துக்கொண்டிராமல் அவரது ஶ்ரேஷ்டதமமான அபிஸந்தியை நிறைவேற்ற யத்நிப்பதே அவர் விஷயத்தில் நாம் க்ருதஜ்ஞதையையும் ப்ரீதியையும் காண்பிக்கக்கூடிய முக்ய ப்ரகாரமென்று நினைக்கிறேன்.

ஶ்வேதத்வீபவாஸிகள் போன்ற பாகவதோத்தமர்களால் அமைந்த இந்த மஹா ஸதஸ்ஸைச் சேர்ப்பித்து ஆராதிப்பதே ஸ்வயம் பலமேயாகிலும் பகவத்பக்தியைப்போல் இதற்கும் பரமோத்தேசமுண்டு. அது இப்படிப்பட்ட பாகவத பரம்பரை திகேப்ராசயமடைந்த ஸதவித்ய ஸதாசாராதிகளை மேன்மேலும்

ஓங்கச்செய்து ஜகத்தை நிரஸ்ததோஷமாக்கி பகவத்ப்ரகல்பிதமான தர்மவ்யவஸ்தையை எல்லோரும் பூர்ணமாக அறிந்து, அதற்கு அநுகுணமாகத் தங்கள் ஒழுக்கங்களைச் சீர்ப்படுத்திக்கொண்டு தம்தம் ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொள்வதற்கு வேண்டிய உபாயங்களை நிரபாயமாய்த் தேடிக்கொள்ள வழிகாட்டுவதுதான். இதற்கு ஜ்ஞாநம், அநுஷ்டாநம் இவ்விரண்டையும் ஆங்காங்கு நிலைநிறுத்தி ப்ரவசநாத்யுபாயங்களால் பரவச்செய்யவேண்டும்.

லோகத்தில் ஒவ்வொருவனும் தன்னுடைய ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொள்ள ஆவலுள்ளவனாயிருக்கிறானென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்கது. ஆனால், அவ்வகையான ஶ்ரேயஸ் யாதென்பதைப்பற்றியும் அதைத் தேடிக்கொள்ள உபாயம் எப்படிப்பட்டதென்பதையும்பற்றி மதிபேதம் இருப்பதால், வைவித்யம் ஏற்பட்டிருக்கிறது. இதுவே அநேக ப்ரகாரமான வைமநஸ்யத்துக்கும் க்ஷோபத்துக்கும் காரணம் என்பதை நாம் காண்கிறோம். ஆகையால் பரம நிஶ்ரேயஸம் இது என்பதையும் அதை ஸாதிப்பதற்கு உபாயம் இன்னது என்பதையும் எல்லோருக்கும் புலப்படும்படி நன்றாய்க் கூறி அது விஷயத்தில் கலக்கமில்லாமல் தெளிவிக்கவேண்டியது ஜ்ஞாதாக்களின் ப்ரதம க்ருத்யம். அதற்காகவே மஹர்ஷிகளும் ஆசார்யர்களும் தத்வஹிதபுருஷார்த்தங்களை விஸ்தாரமாகவும் நாநா ப்ரகாரமாகவும் நிரூபித்திருக்கிறார்கள். அதைப் பின் வருபவர்கள் தொன்றுதொட்டு ப்ரவசநம் பண்ணி, லோகத்தில் ஸூர்யாலோகம் போன்ற யதார்த்த ஜ்ஞாநத்தை ப்ரசாரமடைவிப்பதே ஸாரதமமான கைங்கர்யமென்றும் உகந்திருக்கிறார்கள். அப்படி பூர்வாசார்ய சோதிதமான கைங்கர்யத்தை அவலம்பித்து, இப்போது காலதேஶாத்யநுகுணமாக நடைபெறச் செய்வது இந்த மஹாஸபையின் முக்யோத்தேஶ்யமாகையால் அதற்கு வேண்டிய உபாயங்களை நிர்ணயிப்பது இங்கு ஸந்நிஹிதர்களான மஹநீயர்களுடைய பொறுப்பாயிருக்கிறது.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:.

# ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரஸங்க்ரஹம்.

(தொடர்ச்சி.)

தாபத்ரயம், த்ரிகுணங்கள், அர்ச்சை, ஸுக்ருதம், அபசாரம், பாகவதலக்ஷணம், சேஷசேஷி பாவம், ப்ரபத்தி முதலியன மேலே குறிப்பிடப்படுமாகையால், அவைகளின் ஸ்வரூப ஸ்வபாவங்கள் இங்கு சுருக்கமாய் விவரிக்கப்படுகின்றன.

I. தாபத்ரயம் :—

ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என தாபத்ரயம் மூன்று வகைப்படும். ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதிகளில் இவை பலவிதமாய் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன.

(1) சாரீரகோபநிஷத்:—ஜந்மாதி வ்யாதிகளால் வரும் வ்யஸந தாபமும், காமக்ரோதாதிகளால் வரும் வ்யஸந தாபமும், ஆத்யாத்மிக வ்யஸந தாபங்கள். ம்ருக பக்ஷி மநுஷ்ய பூத பைஶாச ராக்ஷஸ அஸுராதிகளால் வரும் வ்யஸந தாபம் ஆதிபௌதிகம் எனப்படும். ஶீதோஷ்ணம், இடி, மின்னல், வர்ஷம் முதலியவற்றால் வரும் வ்யஸந தாபங்கள் ஆதிதைவிகமெனப்படும்.

(2) பராஶரஸ்ம்ருதி :—ஆத்யாத்மிகமாவது, சரீரத்தில் வாத பித்த ஶ்லேஷ்மம், [illegible] தாதுக்களின் உயர்வு தாழ்வுகளால் உண்டாகும் ஜ்வரம் முதலியன. ஆதிபௌதிகமாவது, பாம்பு [illegible] முதலியவைகளால் உண்டாகும் உபத்ரவங்கள்; ஆதி[illegible]மாவது, மின்னல், இடி, முதலியவற்றால் உண்டாகும் உபத்ரவங்கள்.

(3) இதிஹாஸம்:— [illegible] அத்யாத்மம், ஜீவ ஸ்வபாவ

மென்றும்; அதாவது ஜீவனுக்கு ஸாதகமாயிருக்கிற ஸூக்ஷ்மபூதங்களென்றும்; ஆதிதைவம், ஸகல தேவதைகளுக்கும் அதிபதியான ப்ருஹ்மா வென்றும்; ஆதிபூதம், நாசமடையத்தக்க அசேதந வஸ்துவென்றும் அர்த்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

(4) ஸ்ரீ விஷ்ணுபுராணம்:—(6-வது அம்சம், 5-ம் அத்யாயம்) ஆத்யாத்மிகம் இரண்டுவிதம். அவை, தேஹத்தையும் மநஸ்ஸையும் பற்றிய துக்கங்கள்; சரீரத்தைப்பற்றியன வெகு விதங்கள். அவை தலைநோய், பீனஸம், ஜ்வரம், குன்மம், பேதி, வாந்தி, கண்ணோய் இவைகள். மனத்தைப் பற்றியவை, காமம், க்ரோதம், பயம், த்வேஷம், துக்கம் மோஹம், சோகம், அஸூயை, அவமாநம் முதலியன. ஆதிபௌதிகமாவது, ஜந்துக்களைப்பற்றி உண்டாவது; ம்ருக பக்ஷி பிசாசு முதலியவைகளால் உண்டாகும் துக்கங்கள். ஆதிதைவிகமாவது, தைவத்தால் வருவது, குளிர்காற்று, வெப்பம், மழை, இடி, முதலியவற்றால் உண்டாகும் துக்கங்கள். இது பலவகைப்படும். அவை, கர்ப்பவாஸம், பால்ய, யௌவந, வார்த்தகம், நரகயாதனை முதலியன.

(5) ஸ்ரீ பாகவதம் (தசமஸ்கந்தம்):—

[illegible] ஸாத்யாத்மம், எல்லாத் தேஹங்களிலும் இருக்கப்பட்ட ரூபத்தை யுடையவனும்; ஸாதிபூதம், ப்ருதிவி முதலிய ஐந்து மஹாபூதங்களில் இருக்கப்பட்ட ரூபத்தை யுடையவனும்; ஸாதிதைவம், ஆதித்ய மண்டலம் முதலியவைகளில் இருக்கப்பட்ட ரூபத்தை யுடையவனும்; என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. த்விதீய ஸ்கந்தத்தில் அத்யாத்மம் ஜீவவிஷயம்; ஆதிதைவிகம், இந்த்ரிய ஸம்பந்தம், ஆதிபௌதிகம் சரீரஸம்பந்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(6) [illegible]:— [illegible]



[illegible]

இதன் தாத்பர்யம், விஷ்ணுபுராணம் என்னும் தலைப்பின் கீழ்ச் சொல்லியிருப்பதுதான். மேற்சொல்லியவைகளின் ஸாமாந்ய அர்த்தமாவது:—ஆத்யாத்மம், தேஹத்தை ஆஸ்ரயித்து உண்டாகும் ஜ்வரம் தலைவலி முதலியன. ஆதிதைவிகம், தைவத்தால் உண்டாகும் இடிவிழுதல், புயல் அடித்தல் முதலியன. ஆதிபௌதிகம், புலி ஸிம்ஹம் முதலிய பூதங்களால் உண்டாகும் துன்பங்கள்.

II. த்ரிகுணங்களாவன:—

த்ரிகுணங்கள், ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்பன. இவற்றுள் ஸாத்விக குணமாவது, நிர்மலமானதாயும், ப்ரகாசிப்பதாயும், உபத்ரவ மில்லாததாயும், ஆத்மாவை ஸுகத்தில் சேர்க்கிறதாயும், ஆத்மா பரமாத்மா இவைகளின் ஜ்ஞாநத்தைக் கொடுப்பதாயும், ரஜஸ்தமோ குணங்களை உயர்த்த வொட்டாமல் அடக்குவதாயும், சப்தாதி விஷயங்களை ச்ரோத்ராதி ஸர்வேந்த்ரிய த்வாரங்களிலும் ப்ரவேசிப்பித்து ஜ்ஞாநப்ரகாசமாக அறிவிப்பதாயும், ஸுகதுக்கங்களையும் ராக த்வேஷங்களையும் ஸமப்படுத்துவதாயும், எப்போதும் எல்லா உயிர்களின் மீதும் தயையும் பொறுமையும் நீதியுமுடையதாயும், ஜீவஹிம்ஸை கொலை களவு முதலிய துர்க்குணங்களில் ப்ரவேசியாமலும், ஸத்வாக்யங்களைக் கைக்கொண்டும், ப்ருஹ்மசர்யம் அபரிக்ரஹம் குரு சுச்ரூஷை சௌசம் ஸந்தோஷம் ஸதாசாரம் பகவத்ஸந்நிதியைத் தர்சித்தல் முதலிய நற்குணங்களில் ப்ரவேசிக்கும்படி செய்தலும், ஜீவகாருண்யம் கோபமில்லாமை ஸௌலப்யகுணம் இவை முதலிய நல்லொழுக்கங்களோடு கூடியிருக்கச்செய்தும், அழியாத நித்ய மோக்ஷத்திற்கு ப்ராப்தியுடையவனாகச் சேதநனை செய்துவிடும்.

ரஜோகுணமாவது, ஆசாமுகத்தால் மஹா ப்ரீதியை உண்டாக்குவதாயும்; ஆத்மாவை ராகரூபமாயிருந்துள்ள பொருள்களை

வ்ருத்தி செய்விக்கும்படியான கர்மங்களில் மூட்டி, அவற்றில் பற்றுண்டாக்கிக் கட்டுவிக்கின்றதாயும், தநத்திலேயும் அபிமாநத்திலேயும் டம்பத்திலேயும் உறுதிப்படுத்துவதாயும், க்ருஹம்முதலானவைகளை ஸம்பாதிக்கும்படியான முயற்சிகளிலே ஒழிவில்லாமையைச் செய்விப்பதாயும், மன ஊக்கம் ஜ்ஞாநம் தர்மம் தானம் கேள்வி இவைகளையெல்லாம் ஜந்மத்திற்கு ஹேதுவாகும்படியான விதத்தைச் செய்விப்பதாயும், நான் கர்த்தா போக்தாவென்று அஹங்கார முண்டாயிருப்பதே ராஜஸ குண லக்ஷணம்.

தாமஸகுணமாவது, அஜ்ஞாநத்தை யுண்டாக்குவதாயும், ஸமஸ்த ப்ராணிகளையும் மயங்கச் செய்வதாயும், த்வேஷம் சோம்பல் நித்ரை இவைகளிலே கொண்டுபோய்ச் சேர்ப்பதாயும், மறதி வஞ்சனை களவு சூது கொலை இவைகளில் த்ருடப்படுத்துவதாயும், துக்கம் சோகம் பொய் காமக்ரோதாதி ஸமஸ்த அநீதி முதலியவற்றைச் செய்வித்து நிக்ருஷ்டமான ஜநந மரண நரகங்களில் சேர்ப்பிப்பதாயும், போகம் ராகம் இவை முதலிய துர்க்குணங்களைக் கொடுக்கக்கூடியது தாமஸகுணம். உத்தமம் ஸாத்விக குண லக்ஷணம்; மத்யமம் ராஜஸ குண லக்ஷணம்; அதமம் தாமஸ குண லக்ஷணம். ஸாத்விககுணம், பரிசுத்த ஆஸ்திக புத்தியையும் நிவ்ருத்தி மார்க்கத்தையும், அசஞ்சல பகவத் பக்தியையும் ஸாது ஜந விஸ்வாஸத்தையும், ப்ருஹ்ம ஜ்ஞாநத்தையும் கொடுக்கும்.

ஸாங்க்ய காரிகையில் ஸத்வகுணத்தை வெளுப்பாகவும், ரஜோ குணத்தைச் சிவப்பாகவும், தமோ குணத்தைக் கறுப்பாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ரஜோ குணத்துக்கு ஸ்வாதீநமாக ப்ரவ்ருத்தியில்லை யென்றும், அது ஸத்வகுணத்துடன் சேர்ந்து ஸாத்விக வ்ருத்தியைச் செய்கிறதென்றும், தமஸ்ஸோடு சேர்ந்து அது கேவல வ்ருத்தியைச் செய்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜீவனுடன், ப்ரக்ருதி ஸம்பந்தித்தாலொழிய ப்ரவ்ருத்தி உண்டாகாதென்பதுபோல், ரஜோகுணமாவது, மற்ற உத்தம அதமகுணங்களோடு சேர்ந்தாலொழிய ப்ரவ்ருத்தி உண்டாகமாட்டாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு தீபத்துக்கு வெள்ளை சிவப்பு கறுப்புக் கண்ணாடிகள் போட்டால், வெளிச்சம் எப்படிமாறின நிறத்தைக்கொள்கிறதோ அவ்விதம் த்ரிகுணங்களினுடைய ஸ்திதியை அறியவேண்டியது.



III. அர்ச்சையின் விதங்கள்:—

நடாதூரம்மாள் ஸாதித்த பஞ்சராத்ரம் என்கிற பரத்வாதி பஞ்சகத்தில் பகவத் ஸ்வரூபத்தை பரவ்யூஹ விபவாந்தர்யாமி அர்ச்சாரூபமாக ஐந்து ப்ரகாரமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ வைகுண்டத்தில் நித்யமுக்தர்களுடைய ஸேவைக்கும் கைங்கர்யத்துக்கும் உபயோகமாயிருக்கும் திவ்யமங்கள விக்ரஹம் பரவாஸுதேவனென்றும், ப்ரஹ்மாதிகளுக்கு ஸேவைஸாதிக்க வேண்டியதற்காக க்ஷீராப்தியில் எழுந்தருளியிருக்கும் திவ்யமங்கள விக்ரஹம் வ்யூஹ வாஸுதேவாதிகளென்றும், ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள் விபவமென்றும், 'ஏகஃ ஸந் பஹுதா ஜாயதே
ஸர்வான் ஸந்தர்ப்ய, தஸ் ஸ்ரஷ்டா ததேவாநு ப்ராவிஶத், நீவார
ஶூகவந் தந்வீ பீதாபாஸ்யா த்வநூபமா - தஸ்யா ஶிகாயா
மத்யே பரமாத்மா வ்யவஸ்தித: - ஸ்வம் ஸ்வ ஸ்வஸ்மிந்தாநாம் ஹ்ரு
தயே ஜநார்தநஸ்திஷ்டதி' இத்யாதிகளிற் சொல்லியபடி, ஸமஸ்த சேதநர்களுடைய ஹ்ருதய குஹாராந்தர்வர்த்தியான ஸ்வரூபம் அந்தர்யாமி யென்றும், ஸ்ரீரங்காதி திவ்யக்ஷேத்ரங்களில் எழுந்தருளியிருக்கும் திவ்யமங்கள விக்ரஹங்கள் அர்ச்சை யென்றும் வ்யவஹரிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயங்கள் முன் ஸஞ்சிகைகளில் பல பண்டித ஶிரோமணிகளால் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கிறபடியால் இங்கு விவரிக்கப்படவில்லை. அர்ச்சை, திவ்யம் ஆர்ஷம் மாநுஷம் ஸ்வயம் வ்யக்தம் என்கிற விபாகங்களைத் தவிர, லயார்ச்சை போகார்ச்சை காம்யார்ச்சை யென்று மூன்று விதப்படும். பகவதாகாரத்துக்கு லயார்ச்சை கிடையாது. காம்யார்ச்சையாவது, மதநகோபால ராதாக்ருஷ்ண விக்ரஹம் முதலியன. போகார்ச்சையாவது, திவ்யதேசங்களில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கநாதாபர்யாப்தாம்ருத விக்ரஹம் முதலியவைகள் லக்ஷ்மிக்குக் காம்யார்ச்சையாவது, ஸ்ரீரங்கநாயிகா கோயில் நாச்சியார்கள். போகார்ச்சையாவது, பகவானுடைய வலது பக்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீதேவியென்று ஸம்ஜ்ஞை பெற்றதிவ்யமங்கள விக்ரஹம். லயார்ச்சையாவது, பகவானுடைய திருமார்பில்

எழுந்தருளியிருக்கும் தன்மை. பெருமாள் தனியே எழுந்தருளியிருந்தால் இந்த லயார்ச்சையில் ஸ்ரீப்ரபத்தி பண்ணுகிறது ஸம்ப்ரதாயம். காம்யார்ச்சைகளில் உபாயாநுஷ்டாநம் பண்ணுவது ஸம்ப்ரதாயமில்லை. பகவானுடைய இடது பக்கத்தில் எழுந்தருளியிருக்கும் பூதேவியும் போகார்ச்சைதான். நீளாதேவி என்கிற ஆண்டாள், பகவானுடைய பக்கத்திலிருந்தால் போகார்ச்சை; தனியாக தனிக்கோயிலில் எழுந்தருளியிருந்தால் காம்யார்ச்சை. நீளாதேவியே கோகுலத்தில் நப்பின்னைப்பிராட்டி என்கிற வ்யவஹாரம் பெற்று அவதரித்தாள். பகவத் பக்தியில்லாத பாமரர்களுக்கு லக்ஷ்மியை அர்ச்சனை செய்து, முதல் மூன்று புருஷார்த்தமான இஷ்டஸித்தி உண்டாவதன்பொருட்டு லக்ஷ்மிக்குக் காம்யார்ச்சாரூபேண ப்ருதகவஸ்தாநம். பகவானுக்கு ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி என்று மூன்று தேவிகள் வேணுமோ வென்றால், ஸ்ரீதேசிகன் ஸாதித்தருளின தயாஶதகத்தில், மூன்று பேர்களுக்கும் வெவ்வேறு அதிகாரம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:— 'ஸ்தந்ய ஜநநீம்வதே வைதந்ய ஸந்யாயிநீம் । வேயஸீம் ஸ்ரீநிவாஸஸ்ய கருணா மிவ ரூபிணீம் ॥' [ஜ்ஞாநமாகிய முலைப்பால் கொடுக்குமவளாய், யாவருக்கும் மிகவும் கொண்டாடத்தகுந்தவளாய், ரூபங்கொண்ட ஸ்ரீநிவாஸனுடைய கருணையைப் பெற்றவளாயிருக்கும் ஸர்வலோக மாதாவாகிய பெரியபிராட்டியாரை வணங்குகிறேன். தாயானவள் முலைப்பாலாலே சிறுவனை வளர்க்குமாப்போல், அர்த்தபஞ்சக ஜ்ஞாநமாகிற முலைப்பாலைக் கொடுத்துச் சேதநர்களை உஜ்ஜீவிப்பிக்குமவளாய், ஸ்ரீநிவாஸனுடைய கருணையானது ஓர் பெண்வடிவு கொண்டதோ வென்று ஊஹிக்கைக்கு உறுப்பான குணபூர்த்தி யுடையவளாய், திருவில்லாத் தேவர்களிற்காட்டில் வேறுபாடு நிலைநிற்கும்படி பரவஸ்துவுக்கும் அதிஶயாவஹையாக இருக்கையால் அவனிலும் கொண்டாடத் தகுந்தவளுமாயிருக்கும் நிகில லோகமாதாவான பெரியபிராட்டியாரை வணங்குகின்றேன் என்று தாத்பர்யம்] இதனால் ஸ்ரீதேவிக்கு ஜ்ஞாந ப்ரதாநம் ஐஸ்வர்ய ப்ரதாநம் பண்ணுவது ஏற்பட்டிருக்கிறது. 'வந்தே விஶ்வம்பராம் தேவீம் விஶ்வதாரிணீம் । தஸ்யா: ப்ரதிவாதாநாம் க்ஷமா வாரணம் யயா ॥' க்ஷமை யென்று பேருள்ளவளான, (அர்த்தாந்தரம்:— பெருமை யென்கிற குணத்தினுடைய ஸ்வரூபமுள்ளவளான), யாதொரு பூதேவியினாலே ஸ்ரீநிவாஸனுடைய க்ருபையின் தடைகளுக்குத் தடையுண்டாகிறதோ. [அதாவது-ஸ்ரீநிவாஸ க்ருபையானது எவளுடைய ப்ரயத்நத்தினாலே தடையன்றியில் ப்ரவஹிக்கிறதோ] ஸ்ரீநிவாஸனுடைய பட்டமஹிஷியாய் விஶ்வதாரிணியென்று பெயருடையவளான அந்தப் பூமிப்பிராட்டியாரை வந்தநம் செய்கிறேன். இதனால் பகவத் க்ருபையை அபராதிகளிடத்திலும் தடையின்றி ப்ரவஹிக்கும்படி செய்வது இவளுடைய கார்யமாகிறது. 'நிஶாமயது மாம் நீளா யத்போகபடலைர் த்ருவம் । பாவிதம் ஸ்ரீநிவாஸஸ்ய பக்ததோஷேஷ்வதர்ஶநம் ॥' எந்த நீளாதேவியினுடைய போகங்களாகிற நேத்ர தோஷங்களாலே ஸ்ரீநிவாஸனுக்கு ஆஶ்ரிதர்களுடைய அபராதங்களில் பார்வையில்லாமை உண்டுபண்ணப்பட்டதோ, அந்த நீளையானவள் அடியேனைக் கடாக்ஷிக்கக்கடவள். அதாவது - பக்ததோஷங்களை மறப்பித்தல் இவளுடைய கார்யம். கோதாஸ்துதியிலும் ஸ்ரீதேசிகன் இவ்விதமே திருவுள்ளம்பற்றி யிருக்கிறார். 'க்ருதாபராதஸ்ய பராபிஜநஸ்ய ஸம்ரக்ஷணாய ப்ரணதஸ்ய ஸத்ய: விநிவேஶ்ய நாதே । வாசாஸ்வயா பதிதஸ்ய நாயிகே, ஸ்தாநே ப்ரியேண தேவி த்வயா யதிதஸ்ய வரிவஸ்யதம் ஸ்யாத்.' அபராதிகள், பகவத் ஸமீபம்வர, அவர்களைப் பார்க்க இஷ்டமில்லாமல் பகவான் லக்ஷ்மியின் பக்கத்தைத் திரும்பிப் பார்க்க, அவள், அபராதிகளை அநுக்ரஹிக்க வேண்டுமென்று சொல்ல, அதற்கு ப்ரியமில்லாமல் ஆண்டாள்பக்கத்தைச் சார்ந்திருக்க, அவளும், 'ஸ்ரீதேவி சொல்கிறது போதாதோ? என் பக்கம் பார்க்க வேண்டாம்' என்று மறுத்துச் சொல்ல, பகவான் அபராதிகளைக் கடாக்ஷிக்கும்படி நேர்ந்தது. அப்படிக்கில்லாவிட்டால் பகவானுடைய திருமுகமண்டலம் ஒரு பக்கம் சார்ந்திருக்கு மென்று தாத்பர்யம்.

ஸம்ஸ்க்ருதமாவது, யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகம் என்று மூன்று வகைப்படும். அதில் யாத்ருச்சிகமாவது, திவ்யா

பரணங்களை அணிந்த தம்பதிகள் ஒரு க்ராமத்திலிருந்து மற்றொரு க்ராமத்துக்குப் போகும்போது, ஆபரணங்கள் முதலியவைகளைத் திருடவேணு மென்று பின்தொடர்ந்த திருடர்கள் அக்கம் பக்கம் ஸமீபத்தில் ஒருவரும் வராத ஸமயத்தில் தம்பதிகள் ஸமீபத்தில் சென்று திருட யத்தனிக்கையில், ஒரு ராஜபுருஷன் அவஸரதபால் கொண்டு ஓடிவரக்கண்டு திருடர்கள் கொஞ்சம் விலகி, பிற்பாடு அக்கம்பக்கத்தில், வண்டிகளும் மநுஷ்யர்களும் இடைவிடாமல் வந்துகொண்டிருந்தபடியால் திருடமுடியாமற் போய்விட்டது. இது ஸங்கதி தெரியாமலிருந்த ராஜபுருஷனுக்குத் தனக்குத் தெரியாமல் ஒரு ஸுக்ருதம் ஏற்படுகிறது. இது யாத்ருச்சிக ஸுக்ருதம். ‘உ஦்யா_நாஸ்டம் ஜ஬ெஸ்வ஧ெ ய஑ோ ஸ்யா வஶிஜ்ஞா_த஼ ஸ஑ுஸ்யா ஸவிஶெஸ஧_நம’

தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சும்போது, தோட்டக் காரனுக்குத் தெரியாமல் தூரவிலிருக்கும் தண்ணீர் பாய்வதும் அபரிஜ்ஞாத யாத்ருச்சிக ஸுக்ருதம், ‘ஸ஻ட஻ஂபவ்யாவாரா த்தூடம் ஶ8_நகாஶெ வூணயகஒஶொஸஸவாதிவூஸக்யா ஞூஶத ஐஶவஞ்ஶஸ்_நாதிகம். ஐதஜ஻ - வ஻ஶிவஸ் உவஶிஜ்ஞா_த ஸம஑வம ஸஶ்யாஸ வஶிஜ்ஞா_தஶெவ’

குடும்ப வ்யாபாரத்துக்காக ஓரிடம் போகும்போது, அவ்விடத்தில் மட்டையடி உத்ஸவம் முதலியவற்றின் ப்ரஸக்தியினால் உண்டாகும் பகவத்ஸேவை யாத்ருச்சிக ஸுக்ருதம். இது, முன் அறியாமல் ஏற்பட்டுப் பின்னால் தெரிந்த விஷயம்.

‘வூாஸஂஶிகஞா8 - ‘ஸாய஻ாஸ் த஻ஶாஶெஶ ஶ8_நகாஶெ 8ஶெயூதிவூ ஶெஶாதள ஐஶவஶஸ்_நம’ மஹாராஜாக்கள் கவர்னர்ஜனரலைப் பார்க்கக் கல்கத்தாவுக்குப் போகும்போது, கங்கை முதலான திவ்யதீர்த்த ஸ்நாநமும், மயை காசி முதலான திவ்ய க்ஷேத்ர தர்சநமும் நேரிடுகின்றன. இது ப்ராஸங்கிக ஸுக்ருதம்.

ஆநுஷங்கிகமாவது:—ஷை அரசர்களுடன் கூடப் போகிற அமாத்ய ப்ருத்ய வர்க்கர்களுக்கு ஏற்படும் ஸுக்ருதம் ஆநுஷங்கி



கம் எனப்படும். ‘ஶரீர ஶௌவ்யாஸ்டம் ஶஂஶாஷா_நவேி ஞூ_ந஻ஷஂஶிக ஸ஻ஸ்ரு_தம’ சரீரத்தின் அழுக்கைப் போக்கடிப்பதற்காகச் செய்யப்படும் கங்காஸ்நாநமும் ஆநுஷங்கிக ஸுக்ருதமாகும், மேல்கண்டது பெரியோர்களுடைய அபிப்ராயமாகும்.

அபசாரமாவது.—பகவதபசாரம் பாகவதாபசாரம் அஸஹ்யாபசாரம் என்று மூன்று வகைப்படும். அதில் பகவதபசாரமாவது, ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷையில் சொல்லப்பட்டிருக்கிற முப்பத்திரண்டு அபசாரங்கள். பாகவதாபசாரமாவது, பகவத் பக்தர்களைக் கண்டபோது ஸத்காரம் செய்யாமலிருப்பதும், அவர்கள் விஷயத்தில் அஹிதாசரணம் செய்வதுமாம். ஷை அபசாரங்கள் பகவத் பக்தர்களுக்கு ஒருக்கால் தெரியாமலும் இருக்கக்கூடும். அஸஹ்யாபசாரமாவது, இவ்விஷயம் ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளில் காணப்படவில்லை. ஆகையால் பெரியோர்களுக்குள் இதைப்பற்றி அபிப்ராயபேதமுண்டு.

பகவதபசாரங்களில் எந்த அபசாரங்களுக்கு, ‘_நக்ஷஶோதி வஸ஻ஂயஶெ’ என்று பகவத் வசநம் ஏற்பட்டிருக்கிறதோ, அவைகளெல்லாம் அஸஹ்யாபசாரமாகு மென்று சிலரும், பாகவதன் ஆசார்யனாக இருக்கையில், அவன் விஷயமாய் நேரிடும் அபசாரம் அஸஹ்யாபசார மாகுமென்று சிலரும், பாகவதர்களிடம் அபசாரப்பட்டபோது அந்த அபசாரம் க்ஷாந்திபண்ணக்கூடியதாயிருந்தும் க்ஷமாபணம் செய்யப்படாமலிருந்தால், அது அஸஹ்யாபசாரமென்று சிலரும் திருவுளம்பற்றியிருக்கிறார்கள். ‘ஸஹம ஐக்ஷவாஶாயஶெ_நாஹஶி ஷு_தஜு ஐவஷிவஃ। தஶெவ ஶஶ ணஂஶஷ _நாஸாஶ_த_நயம 8஻ஶெ_ந॥ ஸாஶவ_தாவஶாஶெ தஶெவ க்ஷாவயெஸ_த஦ஸாஶெ _தீநு; ஞூாதிஸ ஶெஷா8ஹாஶெ ஸவ஻ா_தா_நம ஐஶவஜஶெவ க்ஷாவயெஸ’ என்கிற ஸ்லோக வாக்ய தாத்பர்யப்படி, பாகவதாபசாரத்துக்கு எவரிடத்தில் அபசாரம் நேர்ந்ததோ அவரிடத்திலே க்ஷமாபணம் செய்துகொள்ளவேணும். அவர் தீர்க்கமாய்விட்டால் அவர்கள் ஸந்ததியிலாவது, அவர்களும் இல்லா

விட்டால் பகவத் ஸந்நிதியிலாவது க்ஷமாபணம் செய்துகொள்ள வேணும்.

பாகவதலக்ஷணம்:—'அநந்யார்ஹ-ஶேஷத்வம் அநந்ய ஶரணத்வம் அநந்யபோக்யத்வம்' [பராசர ஸ்ம்ருதி.] அதாவது எம்பெருமானைத்தவிர மற்றொருவனுக்குச் சேஷனன்றியில் இருக்கை; எம்பெருமானைத் தவிர மற்றவனைச் சரணம் புகாமலிருக்கை; எம்பெருமானைத் தவிர மற்றவருக்குப் போக்யனன்றியிலிருக்கை.

சேஷசேஷி பாவமாவது:—'ஶேஷீ ப்ரயோஜநபாக் ஶேஷ: ப்ரயோஜநோத்பாதக:' ஒருவன் படுகிற ஶ்ரமத்தின் பலனை அடைகிறவன் ஶேஷி; ஶ்ரமப்படுகிறவன் ஶேஷன். இந்த்ரியங்களுடன்கூடிய ஶரீரமாகிய அசேதநம் சேதநனாகிற ஜீவனுக்குச் சேஷபூதம். ஜீவன் ஶேஷி. இதுபோல், சேதநா சேதநவர்க்கங்களெல்லாம் பகவத்ஶேஷபூதம்; பகவான் ஸர்வஶேஷி.

ப்ரபத்தியாவது:— இதற்குச் சரணாகதி யென்றும் ப்ரபதநமென்றும், அத்ருஷ்ட மென்றும், உபாயாநுஷ்டாந மென்றும் ஸம்ப்ரதாயப் பேர்களுண்டு. இது ஸத்வாரக மென்றும் அத்வாரக மென்றும் இருவகைப்படும். ஸத்வாரகமாவது, பக்திநிஷ்பத்திக்காகச் செய்யப்படுவது: அத்வாரகமாவது ஸாக்ஷாத் மோக்ஷோபாயமாகச் செய்யப்படுவது. ஸத்வாரகத்தை அங்கப்ரபத்தி யென்றும், அத்வாரகத்தை அங்கிப்ரபத்தி யென்றும் சொல்வார்கள்.

மாடபூஷி-ராமபத்ரதாஸ்,

(சேர்மாதேவி.)

(தொடரும்.)

ஶ்ரீ:.

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

## ஶ்ரீ ஶ்ருதப்ரகாஶிகாஸஹித ஶ்ரீபாஷ்ய ப்ரஶ்நா:. *

(அதோ நிர்திஷ்டேஷு ஷட்ஸு ப்ரஶ்நேஷு யதேஷ்டம் க்ருஹீதாநாம் பஞ்சாநாமேவ ப்ரஶ்நாநாம் உத்தரம் தேயம்.)

(1) "குஹாம் ப்ரவிஷ்டாவாத்மாநௌ ஹி தத்தர்ஶநாத்" இதி ஸூத்ரம் யதாபாஷ்யமேவ தாத்பர்ய வ்யாக்யாத. தத்ஸூத்ர ஸ்யாதிகரணஸாரக்வம் ஸங்க்ரஹதோ பக்ஷம் ச வர்ணயத.

(2) "யஸ்மிந் பஞ்ச பஞ்சஜநா ஆகாஶஶ்ச ப்ரதிஷ்டித: தமேவ மந்ய ஆத்மாநம் வித்வாந் ப்ரஹ்மாம்ருதோऽம்ருதம்" இத்யேதத்வாக்ய விஷயாதிகரண பூர்வபக்ஷ ஸித்தாந்தௌ ஸூத்ரார்த்த விவரணபூர்வகம் விவ்ருணுத.

(3) "ஸூக்ஷ்மசிதசித்வஸ்து ஶரீரம் ப்ரஹ்ம காரணம், ஸ்தூலசிதசித்விஶிஷ்டம் ப்ரஹ்ம கார்யம்" இதி ஶரீரவாசக ஶப்தாநாம் ஶரீரிபர்யந்தத்வேநைவ ஹி ப்ரஹ்மண உபாதாநத்வம் ப்ரக்ருத்யதிகரணே ஸமர்த்திதம். இத்தம் ஸ்திதே க்ருத்ஸ்நப்ரஸக்திநிரவயவத்வஶப்தகோபோ வேத்யேவம் வ்யாக்ஷேபஸ்ய கதம் ஸமாதாநம்? தத்ப்ரகாரஶ்ச க:?

(4) "ந ச பர்யாயாதப்யவிரோதோ விகாராதிப்ய:" இத்யேதத்ஸூத்ரபாஷ்ய ஶ்ருதௌ: ஸங்கோசவிகாஸஸூத்ராவ

* இந்த ப்ரஶ்ந பத்ரிகை, சென்ற மார்கழிமாஸத்தில் நடைபெற்ற வித்வத் பரீக்ஷையில் கொடுக்கப்பட்டது.

[illegible]

(5) “[illegible]”. [illegible]

(6) [illegible]

(7) [illegible]

ஸ்ரீ:

ஸ்ரீமதே [illegible] நம:

மதிராஸ்

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

## 1918-19-ம் [illegible] வர்ஷாந்த அறிக்கை. *

1. அங்கத்தினர்ன் தொகை:—

| | |
|---|---|
| (வர்ஷ ஆரம்பத்தில்) | |
| முதல் வகுப்பு அங்கத்தினர் | ... 54 |
| இரண்டாவது ,, | ... 212 |
| ஷை ,, ஸாஸ்வத அங்கத்தினர் | ... 1 |
| தீபிகைச் சந்தாதாரர் | ... 29 |
| ஆனரெரி அங்கத்தினர் | ... 10 |
| ஆக | ... 306 |
| (வர்ஷ முடிவில்) | |
| முதல் வகுப்பு அங்கத்தினர் | ... 49 |
| இரண்டாவது ,, | ... 243 |
| ஷை ,, ஸாஸ்வத அங்கத்தினர் | ... 1 |
| தீபிகைச் சந்தாதாரர் | ... 26 |
| ஆனரெரி அங்கத்தினர் | ... 8 |
| ஆக | ... 327 |

2. ஸபா (ப்ரவர்த்தகர்கள். எக்ஸிக்யுடிவ் போர்ட்):—வர்ஷாரம்பத்தில் இவர்களுடைய ஸங்க்யை 37; வர்ஷ முடிவில் 34. இவர்கள், கார்யதர்ஸிகளாற் செய்யப்பட்டு வரும். வரவு செவுகளைப் பரிஸீலநம் செய்து, அவர்களால் அப்பொழுதைக் கப்பொழுது தாக்கல் செய்யப்பட்ட கணக்குகளை அங்கீகரித்து வந்ததுடன், ஸபை ஸம்பந்தங்களான பல விஷயங்களைப் பற்றி, அடிக்கடி, கார்யதர்ஸிகளுக்கு அபேக்ஷிதமான உதவியையும் புரிந்து வந்தார்கள்.

3. உபந்யாஸங்கள்:—இவ்வர்ஷத்தில் உபந்யாஸ மொன்றும் நடக்கவில்லை. உபந்யாஸங்களை த்ருப்திகரங்களாக நடப்பிவிக்க தநம் அபேக்ஷிதம். அந்தத் தநம் நமக்கு துர்லபமாக இருப்ப

* இந்த அறிக்கை, சென்ற மார்கழி மாஸத்தில் நடைபெற்ற மஹாஸங்கத்தில் ஸப்யர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

தால் தான் உபந்யாஸ மொன்றும் நடத்தப்படாமல் இருக்கும்படி ஸம்பவித்தது. அநந்ய ப்ரயோஜநமாக உபந்யாஸங்களைச் செய்ய வித்வாந்களோ ஸந்நத்தராக இருக்கிறார்கள். அவர்களை வரவழைத்து, அவர்களுக்கு தக்ப்ரயுக்தமாக ஏற்படும் செலவைத் தரிக்கக்கூட நமக்கு ஶக்தி இல்லை. செலவைச் செய்துகொண்டு அங்கங்குபோய் உபந்யாஸங்களை அவர்கள் செய்யவேண்டுமென்று அவர்களை நாம் ப்ரதீக்ஷிப்பது ந்யாய்யமாகுமோ? ஆகையால் இது விஷயத்தில் ஆஸ்திக ப்ரபுக்கள் தகுந்த த்ரவ்ய ஸஹாயத்தைச் செய்யும் பக்ஷத்தில் நமது மநோரதம் ஸாதிதமாகுமென்பதை இதனால் விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறோம்.

4. வார்ஷிக மஹாஸங்கம்:—சென்ற 1918ஆம் டிஸம்பர் மாஸக்கடைசியில் திருக்கச்சி நம்பியின் அவதார ஸ்தலமாகிற பூவிருந்தவல்லியில் 8-வது ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கம் நடைபெற்றது. அதைப்பற்றிய ஸகல அம்ஶங்களும் எற்கெனவே ஸ்ரீவேதாந்த தீபிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ. உப. வித்வான் திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி அக்ராஸநத்தை வஹித்தார். மிகுந்த வைதிகச் சிறப்புடன் அந்த ஸங்கம் நடைபெற்றது என்பதை அங்கு வந்திருந்த எல்லாரும் அறிவார்கள்.

5. ஸ்ரீவேதாந்த தீபிகை:—யதாபூர்வம் இந்தப் பத்ரிகை நடைபெற்று வருகின்றது. ஸபையின் அத்யக்ஷரான ஸ்ரீ. உப. திவான் பஹதூர் தட்டை தி. ரங்காசார்யர் ஸ்வாமியே அதன் ஸம்பாதகராக இருந்து வருகிறார். அநேக வித்வான்கள் விஷய ப்ரதாநத்தினால் அதை ஆதரித்து வருகிறார்கள். சற்றேறக்குறைய 350 சந்தாதாரர்களுடைய அபிமாநம் இதற்கு ஏற்பட்டிருக்கிறது. வைதிக த்வேஷமும் நாஸ்திக்யமும் தலையெடுத்து நிற்கும் இக்காலத்தில் இவ்வளவு அபிமாநம் இதற்குக் கிடைப்பதே பெரியதென்று எண்ணி நாம் இதைக்கொண்டே ஒருவித ஸமாஶ்வாஸத்தை அடைகின்றோம்.

6. ஒரு ஶோசநீயமான விஷயம்:—திருக்குடந்தை சதுஶ்ஶாஸ்த்ர வேதகல்பதரு ஸ்ரீ. உப. மாடபூஷி ஶேஷாசார்யஸ்வாமி சென்ற சித்திரை மாஸத்தில் ஸ்வல்பகாலம் நோவு சாற்றிக்கொண்டு எழுந்தருளியிருந்து, பிறகு அதே வ்யாஜமாக திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஶாஸ்த்ரங்களில் சிறந்த யோக்யதையையும் ஸதஸ்ஸில் அபாரமான வாக்மித்வத்தையும் அவர் ஸம்பாதித்திருந்தார். ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கே அவர் இருந்தது பெரியதொரு அவலம்பமாக இருந்தது. வைதிக ஶ்ரீயை வ்ருத்தி செய்யவேண்டுமென்றும் ஜகத் முழுவதற்கும் அத்யந்தம் ஹிதமாயுள்ள ஸ்ரீவைஷ்



ணவ ஸித்தாந்தம் எல்லாவிடத்திலும் பரவவேண்டுமென்றும் அவருக்கு தீவ்ரமான அபிஸந்தி உண்டு. அதை ஸாதித்துக்கொள்ள அவரால் செய்யப்பட்ட பலவித ப்ரயத்நங்களுள், நமது ஸதஸ்ஸை அபிவ்ருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்பதும் ஒரு முக்யமான ப்ரயத்நம். ஸ்ரீபகவான் அவரை இந்த விபூதியில் இன்னும் ஸ்வல்பகாலம் இருக்கும்படி ஸங்கல்பித்திருந்தால், நமக்கு ஏராளமான ஶ்ரேயஸ் ஸம்பவிக்கும் என்பது நம்முடைய த்ருடமான நம்பிக்கை. அது நமக்கு துர்லபமாகப் போனது நமது தௌர்பாக்யமே.

7. வரவு செலவுகள்:—

(ஸபை ஸம்பந்தமாக)

| | | |
|---|---|---|
| வர்ஷாரம்பத்தில் கையிருப்பு | ரூ. | 139- 6-4 |
| வர்ஷத்தில் வரவு | ,, | 1140-15-0 |
| ஆக | ... | 1280- 5-4 |
| செலவு | ... | 1126- 3-9 |
| இருப்பு | ... | 154-1-7 |

(வார்ஷிக ஸதஸ் ஸம்பந்தமாக)

| | | |
|---|---|---|
| வர்ஷாரம்பத்தில் கையிருப்பு | ரூ. | 191-15-2 |
| வர்ஷத்தில் வரவு | ,, | 395-14-0 |
| ஆக | ... | 587-13-2 |
| செலவு | ... | 473-10-6 |
| இருப்பு | ... | 114- 2-8 |

இதன் விவரம் மறுபக்கத்தில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. நமது ஸபையின் அங்கத்தினருள் ஒருவரான பச்சையப்பன் காலேஜ் உபாத்தியாயர் ஸ்ரீ. உப. பி. என். ஸ்ரீநிவாஸாசார்யர் எம். ஏ. க்ருபையுடன் இந்தக் கணக்கைப் பரிஶோதித்துப் பார்த்து அதில் தோஷமில்லையென்று அங்கீகரித்திருக்கிறார். அது விஷயமாக அவரிடத்தில் நாம் க்ருதஜ்ஞதையுள்ளவர்களாக இருக்கிறோம்.

மதிராஸ்,
1-12-19.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்,
தி. கோதண்டராம ஐயங்கார்,
(கார்யதர்ஶிகள்.)

## ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் வார்ஷிக வரவு செலவு கணக்கு.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | வர்ஷாரம்பத்தில் இருப்பு ... | 139 | 6 | 4 |
| 2. | சந்தாத்தொகை ... ... | 1071 | 8 | 0 |
| 3. | வேதாந்த தீபிகை ஸம்பந்தமான ஸ்டாம்பு செலவில் திரும்பிவந்த தொகை ... | 21 | 6 | 0 |
| 4. | பழைய ஸஞ்சிகைகளின் விற்பனையால் வரவு | 25 | 9 | 0 |
| 5. | விளம்பரங்களினால் வரவு ... | 2 | 8 | 0 |
| 6. | ஒரு ரூபாய் முதல் ... ... | 20 | 0 | 0 |
| | ரூபா. | 1280 | 5 | 4 |

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | வேதாந்த தீபிகையாற் செலவு ... | 883 | 8 | 3 |
| 2. | குமாஸ்தா ... ... ... | 206 | 0 | 0 |
| 3. | உபந்யாஸம் ... ... ... | 5 | 0 | 0 |
| 4. | ஏஜென்ட் ... ... ... | 10 | 8 | 0 |
| 5. | அச்சுப்பதிப்பினால் ... ... | 9 | 11 | 0 |
| 6. | காகிதம், பென்ஸில், பேனா வகைரா ... | 7 | 14 | 0 |
| 7. | தபால் சார்ஜ் ... ... ... | 3 | 10 | 6 |
| | ஆக ... | 1126 | 3 | 9 |
| | வர்ஷாந்தத்தில் இருப்பு ... | 154 | 1 | 7 |
| | மொத்தம் .... ரூ. | 1280 | 5 | 4 |

கணக்கைப் பரிசோதித்துப்பார்த்து அது நிர்தஷ்டமாக இருக்கின்றது என்று ஒத்துக்கொண்டேன்.

பி. என். ஸ்ரீநிவாஸாசாரியர்.

5-12-19.

தீ. கோதண்டராம ஐயங்கார்.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் கார்யதர்ஸிகள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸக்ஷீந்ருஸிம்ஹவரவ்ருஷப்ஹேன நம:

# நமது ஸபையின் ஒன்பதாவது மஹா ஸங்கம்.

---

**சங்கத்தின் சிறப்பு.** நமது ஸபையின் ஒன்பதாவது வார்ஷிக மஹா ஸங்கம்; சென்ற மார்கழி மாஸம 13, 14, 15, 16 - தேதிகளில் ஸ்ரீ தேவநாதன் அர்ச்சாரூபியாக எழுந்தருளி இருந்து ப்ரஜைகளை அநுக்ரஹித்து வரும் திருவஹீந்தரபுரம் என்னும் திவ்யதேஸத்தில், ஸ்ரீ நிகமாந்த மஹாதேஸிகன் திருமாளிகையில், ராமாநுஜஸித்தாந்த மெனப்பட்ட வைதிக ஸம்ப்ரதாயத்தைத் தத்காலம் பாதுகாக்கும் பண்டிதர்களுள் மிகச்சிறந்தவரென்று கொண்டாடக்கூடிய ஸ்ரீ: உ.பா. மஹா மஹோபாத்யாய கபிஸ்தலம் தேஸிகாசார்ய ஸ்வாமியின் அத்யக்ஷதா ரூபமான அநுக்ரஹத்தைப் பெற்று ஸர்வப்ரகாரமான அதிஸயத்துடன் நடந்தேறியது. நமது ஸம்ப்ரதாயஸ்தர்களான வித்வத்ரத்நங்களில் பலர் அந்த ஸதஸ்ஸை அலங்கரித்து, ஸம்ப்ரதாய விஷயங்களைப் பற்றி பல உபந்யாஸங்களைச் செய்தார்கள். ஸதஸ்ஸின் பொருட்டு எழுந்தருளின ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸங்க்யையும் அதிகமாகவே இருந்தது. ஸதஸ்ஸில் நடந்த உபந்யாஸங்களில் சில பண்டித ரஞ்ஜகமாகவும் மற்றும் சில பாமர ரஞ்ஜகமாகவும் இருந்த போதிலும், அவையெல்லாம் எல்லாராலும் ஸ்லாகிக்கக்கூடியவைகளாகவே இருந்தன. ஸ்வயமாகவே பலகாரணங்களால் பரமபதம் போல பரம போக்யமாயிருக்கும் அந்த திவ்யதேஸம், அந்த ஸதஸ் நடந்த நாலு தினங்களிலும், ஸந்யஸமுத்ரம் போல ஆவிர்பூதத்தில் அப்பொழுது ஸந்நிஹிதர்களாயிருந்த ஸ்ரீவைஷ்ணவ வித்வான்களால் ஸம்ஸேவித்த ஒரு ஸோபையை வஹித்ததென்றே சொல்லவேண்டும்.

மஹாஸங்கம் மிகுந்த சிறப்புடன் நடந்தேறியதென்றால், அதன் நிர்வாஹத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு விசேஷ ஸ்ரமம் உண்டாயிருக்க வேண்டுமென்று அநுமானிக்கத் தக்கதே. ஸர்வ பதார்த்தங்களும் மிக விலையுயர்ந்து, கிடைப்பதற்கும் அரிதாகி, தேஸம் முழுவதும் துர்பிக்ஷத்தால் பீடிக்கப்பட்டு வருந்தும் காலத்திலும், ஏராளமாக ஸதஸ்ஸின் பொருட்டு எழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்கள் யாவரையும், ஒருவருக்கும் எவ்வித [illegible] [illegible]யும் இல்லாதபடி ஸுகமாக ஆராதித்த ஸ்ரீ திருவஹீந்த்ரபுர வாஸிகளான ஸ்வாமிகளின் ஸ்ரத்தையையும் ஆஸ்திக்யத்தையும் பார்த்து விஸ்மய

மடையாதவர் ஒருவருமில்லை. அவர்களுள் விசேஷமாக, தமக்கு ஸம்பவித்த தேஹஶ்ரமமொன்றையும் கவனியாமலே, அதிதிகளுடைய ஸத்காரத்தைப் பெரிதாகக் கருதி, அதற்காக இராப்பகல் பலவித பரிஶ்ரமத்தை வஹித்த ஸ்ரீ. உ.வே. தி. ஈ. ஸடகோபாசார்ய ஸ்வாமிக்கும் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீராமாசார்யருக்கும் ஸபையாருடைய க்ருதஜ்ஞதையை இதன் மூலமாக நாம் வெளியிடுகின்றோம். அநந்யப்ரயோஜனமாக இந்தக் கைங்கர்யத்தில் ப்ரவ்ருத்தித்த அந்த உதாரர்கள் விஷயத்தில் வேறு எவ்வித கைம்மாறும் செய்யக்கூடியதில்லை.

பாஶ்சாத்ய ஆசாரங்களால் தேசம் முழுவதும் ஆக்ரமிக்கப்பட்டு, தேஹாதிரிக்தமான ஆத்மாவின் ஸத்பாவத்தில் விஶ்வாஸமில்லாமலும், அந்த ஆத்ம வித்யையை உபதேசிக்கும் ஶாஸ்த்ரங்களிலும் அவைகளில் விஶ்வஸிக்கும் வைதிகர்களிடமும் மஹத்தான த்வேஷத்தைச் செய்துகொண்டு, கேவலம் அர்த்தகாம ப்ரவணர்களாய் கலியின் கோலாஹலத்திற்குப் பெருமையை ஸாதித்துவரும் அஜ்ஞர்கள் பெருகும் இக்காலத்தில், ஓஷதிபோல துர்லபராய், பகவத்கைங்கர்யத்தில் புத்தியைச் செலுத்தி கலியின் ஆக்ரமணத்திலிருந்து பயந்து ஒளிந்து வர்த்திப்பதுபோல ஏகாந்தமாக வர்த்தித்துவரும் வைதிக பண்டிதர்களை நமது ரக்ஷகர்களென்று நாம் த்ருடமாக நம்புகின்றோம். அவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து நமது ஸதஸ்ஸின்மீது க்ருபைகூர்ந்து, பகவானைப்பற்றிய ஜ்ஞானத்திலும் அவன் திருவடிகளில் பக்தியிலும் தீவ்ராபேக்ஷை ஏற்படுவதற்கு உபகாரகங்களான உபந்யாஸங்களைச்செய்து அநுக்ரஹித்தார்களென்றால் அது நமது பாக்ய விசேஷமன்றோ? அவர்கள் விஷயத்தில் நாம் எவ்வித ப்ரத்யுபகாரத்தைச் செய்து ஆந்ருண்யத்தை ஸம்பாதித்துக் கொள்ளப் போகிறோமென்று நமக்கு புலப்படவில்லை.

* * * * * *

**ஒரு பாரிதோஷிகம்.**

இந்த ஸதஸ்ஸின் அபிவ்ருத்தியில் ஶ்ரத்தை எடுத்துக்கொள்ளும் மஹான்கள் சிலருண்டு. அவர்களுள் ம-ள-ள-ஸ்ரீ, கனம் பொருந்திய டி. நம்பெருமாள் செட்டியார் என்னும் ப்ரபு ஒருவர். ப்ரதி ஸம்வத்ஸரமும் அவர் இந்த ஸதஸ்ஸின் உபயோகத்திற்காக த்ரவ்ய ஸஹாயம் செய்து வருகிறார். இந்த ஸம்வத்ஸரத்தில், 'அர்ச்சாவதார ப்ராமாண்யம்' என்னும் விஷயத்தைப்பற்றி ஸம்ஸ்க்ருத பாஷையில் சிறந்ததோர் உபந்யாஸத்தை எழுதி அனுப்பும் வித்வானுக்கு தாம் ரு. 30 பாரிதோஷிகமாகக் கொடுப்பதாய் எழுதி அனுப்புவித்தார். நன்றியறிவுடன் அந்தச் செய்தியை நாம் அங்கீகரித்து, பத்ரிகா த்வாரா அதை நமது தேசத்திய வித்வான்களுக்குத் தெரிவித்தோம். நாலு வித்வான்களிடமிருந்து அம்மாதிரியான உபந்யாஸங்கள் கிடைத்தன. அவைகளை ஸபா பரீக்ஷகர்களைக்கொண்டு பரிசீலனம் செய்ததில், அவைகளுள், ஸ்ரீ. உ.வே. வித்வான் ராயம்பேட்டை வாத்ஸ்ய



சக்ரவர்த்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் எழுதி அனுப்பப்பட்டதே ஶ்லாக்யதமமென்றும் அவருக்கே அந்தப் பாரிதோஷிகம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் ஏற்பட்டது. அப்படியே அந்தப் பாரிதோஷிகம் அவருக்கு அனுப்பப்படுகின்றது; அவரால் எழுதப்பட்டுள்ள உபந்யாஸமும் ஶீக்ரத்தில் அச்சுப்பதிப்பிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படும். இம்மாதிரி ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு மஹான் த்ரவ்ய ஸஹாயம் செய்து வந்தால், நமது ஸம்ஸ்க்ருதத்திற்கு ஒருவித அபிவ்ருத்தி ஏற்படுவதின்றி, கூடமாக இருக்கும் நமது ஶாஸ்த்ரார்த்தங்களும் அஜ்ஞர்களால் தூஷணத்திற்குப் பாத்ரமாகாதபடி யதாவஸ்திதமாக வெளிப்படும்.

* * * * * *

**பெரியதோரு உபகாரம்.**

இந்த ஸம்வத்ஸரத்திய ஸதஸ்ஸிற்கு வந்த ப்ரபுக்களுள், ம-ள-ள-ஸ்ரீ சதுர்புஜ தாஸ் குஶால் தாஸ் என்பவர் ஒருவர். அவர் ஸதஸ்ஸில் ஸந்நிஹிதராக இருந்த காலத்தில், ஸதஸ்ஸின் அங்கத்தினர்கள், த்ரவ்ய ஸஹாயக் குறைவினால் ஸதஸ் ஶ்ரமப்படுவதையும், பண்டிதர்களுக்கு யதோசிதம் ஸம்மானாதிகளைச் செய்யக்கூடாமலும் ஶாஸ்த்ராபிவ்ருத்திக்கு முக்கிய ஹேதுவாக இருக்கும் வார்ஷிக பரீக்ஷையை த்ருப்திகரமாக நடத்தக்கூடாமலும் அந்தந்தக் காலங்களில் யாசகம் செய்து அப்பொழுதைக்கப்பொழுது கிடைக்கும் தனத்தைக்கொண்டு மாத்ரம் ஸதஸ்ஸை நடத்தும்படியாகவும் இருக்கும் இந்தத் துர்தசையையும் பற்றி சர்ச்சைசெய்து கொண்டிருக்கும்படி ஸம்பவித்தது. அப்பொழுது, ஸதஸ்ஸின் அத்யக்ஷதையை வஹித்து வந்த ஸ்ரீ. உ.வே. திருப்பதி ஸ்வாமி, இந்தத் துர்தசை நிவார்யமே தவிர அநிவார்யமன்றென்றும், தநிகர்கள் நமது விஷயத்தில் ஔதாஸீன்யத்தை வஹியாமல் யதாஶக்தி உபகரித்தால் நமக்குப் போதுமான தனம் கிடைக்குமென்றும், திருப்பதியில் நடைபெறும் மத்வ ஸித்தாந்த ஸபை பூர்வம் இம்மாதிரியான ஸ்திதியிலிருந்து இப்பொழுது தநிகர்களின் ஸஹாயத்தால் மேன்மையை அடைந்திருக்கிறதென்றும், அந்த மார்க்கத்தை நாம் அநுஸரித்தால் நாமும் மேன்மேல் நல்ல ஸ்திதிக்கு வரலாமென்றும் பலவாறு மிகுந்த உத்ஸாஹத்துடன் எல்லாருடைய மனஸ்ஸிலும் உண்மை பதியும்படி எடுத்து உரைத்தார். அதற்குப் பிறகு ஸ்ரீ. உ.வே. திருவஹீந்த்ரபுரம் தி. ஈ. ஸடகோபாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத பாஷா ஜ்ஞானமில்லாமல் நமது சிறுவர்கள் பாஷாந்தரத்தில் ப்ரவ்ருத்திப்பதே நமக்கு ஶோசநீயமான அம்ஶமென்றும், பாஷாந்தர பரிசயம் தேஹயாத்ரைக்கு அவஶ்யமாக இருந்தாலும் அது ஸம்ஸ்க்ருத ஜ்ஞான ஸம்வலிதமாகவும் வைதிக ஸம்ஸ்கார புரஸ்க்ருதமாகவும் இருந்தால் இப்பொழுது நம்மை வருத்தும் துர்தசை நமக்கு நேர்ந்திராது என்றும், அப்படிப்பட்ட பாடசாலைகள் பலவிடங்களில் ஏற்பட்டால் அவை நமக்கு ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொடுக்குமென்றும், அதற்கும் தநிகர்களுடைய ஸஹாயம் அவஶ்யாபேக்ஷிதமென்றும் பஹு நிதர்ஶந

பூர்வகமாகச் சொன்னார். இவை யெல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த ம-ா-ா-ஸ்ரீ சதுர்புஜதாஸ் என்னும் ப்ரபு, ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொள்வது நமக்கு அவஶ்யமே என்பதை ஒத்துக்கொண்டு, அதை ஸாதித்துக்கொள்வதற்கு எது உசிததமமான மார்க்கம் என்பதைத்தேடி அதைத் தமக்குத் தெரிவித்தால் தாம் யதோசிதம் த்ரவ்ய ஸஹாயம் செய்வதாயும், அதற்குப் பூர்வாங்கமாக இப்பொழுது ரூ. 500 தாம் கொடுப்பதாயும், இதைப் பற்றி கடைசியாகப் பேசின ஸ்ரீ. உ.ப. தி. ஈ. ஶடகோபாசார்யர் த்வாரா தமது அபிப்ராயத்தை வெளியிட்டார். இது பெரியதொரு உபகாரமே. இந்த உபகாரத்தை யதா கார்யம் ஸபலம் செய்யும் பொருட்டு இதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் கமிடியார் தகுந்த ப்ரயத்நத்தைச் செய்வார்களென்று நம்புகிறோம். இந்த ப்ரபுவைப் போன்ற உதாரர்களான வேறு ப்ரபுக்களும் பலர் உளர். அவர்களையும் இம்மாதிரி இந்த விஷயத்தில் உபகரிக்கும்படி ஸ்ரீ பகவான் ப்ரேரிப்பிக்க வேண்டுமென்பதே நமது ப்ரார்த்தனை.

* * * * * *

**ஸித்தாந்த ப்ரசாரம்.**

இந்த ஸதஸ்ஸில் ஆலோசிக்கப்பட்ட விஷயங்களுள் இப்பொழுது நமது ஸித்தாந்தத்தைப் ப்ரகாசம் செய்வதற்கு ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையார் தாத்காலிகமாக என்ன உபாயம் செய்யலாம் என்னும் விஷயம் ஒன்று. இந்த ஆலோசனையில் மிகுந்த உத்ஸாஹத்தை வஹித்தவர்களுள், ஸ்ரீ. உ.ப. ஸ்ரீ வைகுண்டம். எஸ். ஆர். தேஶிகாசார்ய ஸ்வாமியும் ஸ்ரீ. உ.ப. மதுரை எஸ். டி. கிருஷ்ண அய்யங்கார ஸ்வாமியும் முக்கியமானவர்கள். இந்த விஷயத்தைப்பற்றி நாக்ஷமாக ஆலோசித்து கடைசியாக, பரிகணிதர்களான பண்டிதர்களைக்கொண்டு ஆங்காங்கு ஶாஸ்த்ரார்த்தங்களைப்பற்றி உபந்யாஸம் நடப்பிப்பதே உசிதமான உபாயமென்று நிர்ணயம் செய்யப்பட்டது. அதற்காக சற்றேறக்குறைய ரூ. 200-ம் அவ்விடத்திலேயே வஸூல் செய்யப்பட்டது. ப்ரதம ப்ரவ்ருத்தியாக, ஸ்ரீ வைகுண்டம், திருக்குருங்குடி ஆழ்வார் திருநகரி முதலிய தக்ஷிண தேஶங்களில் உபந்யாஸம் செய்யும்பொருட்டு ஸ்ரீ. உ.ப. புதுக்கோட்டை வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ப்ரார்த்திக்கப்பட்டு, அவரும் அதைத் திருவுள்ளம்பற்றி இருக்கிறார். அநேகமாக இன்னும் இரண்டொரு தினங்களில் அந்த உபந்யாஸங்கள் உபக்ரமிக்கப்படும். உபந்யாஸ விஷயங்களும் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

(1) விஶிஷ்டாத்வைத மதமும் மதாந்தர வைலக்ஷண்யமும்.

(2) விஶிஷ்டாத்வைத ப்ரவர்த்தகர்களான ஆழ்வார் வைபவமும் அநுபவமும்.

(3) பகவத் ராமாநுஜன் இம்மதத்தை நிலைநிறுத்தின ப்ரகாரமும் அவர் க்ரந்தங்களின் பெருமையும்.



(4) ஆழ்வான் முதல் தேஶிகன் பர்யந்தமான ஆசார்யர்களுடைய பகவதாசார்ய பக்தியும் அவர்கள் க்ரந்தங்களின் பெருமையும்.

(5) ஸ்ரீ தேஶிகன் இம்மதத்திற்குச் செய்த உபகாரமும் அவர் வைபவமும்.

(6) குரு ஶிஷ்ய லக்ஷணமும் அவர்கள் இருக்கவேண்டிய தன்மையும்.

(7) குருப்தேஶ லப்யமான பக்தியின் மாஹாத்ம்யம்.

(8) ப்ரபத்தி வித்யையின் ஸ்வரூபமும் அதன் மோக்ஷ ஸாதநத்வ வர்ணநமும்.

(9) ப்ரபந்நருக்கும் வர்ணாஶ்ரம தர்மாநுஷ்டாநாவஶ்யகத்வம்.

(10) ப்ரபத்தி ஶாஸ்த்ரமான ஸ்ரீ ராமாயணத்தின் ஸாராம்ஶம்.

ஒவ்வொரு ஸ்ரீ க்ரமத்திலும் ஒவ்வொரு மாஸகாலமிருந்து இந்தப் பத்து உபந்யாஸங்களை அநுஸ்யூதமாகச்செய்து வந்தால் ஶாஸ்த்ரார்த்தம் கொஞ்சம் ப்ரசரிக்கப்பட்டதாகுமென்பது ஸபா ப்ரவர்த்தகர்களின் நம்பிக்கை. ஸ்ரீ பகவான் இந்த ப்ரயத்நத்தைத் தலைக்கட்டிவைக்கவேணும்.

* * * * * *

**வித்வத் பரீக்ஷை.**

யதாபூர்வம் இவ்வர்ஷத்திலும் வித்வத் பரீக்ஷை ஒன்று, ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகா ஸஹித ஸ்ரீ பாஷ்யத்தில் நடத்தப்பட்டது. அந்தப் பரீக்ஷையில் பரீக்ஷ்ய கோஷ்டியில் அந்வயித்தவர்கள் இரண்டு ஸ்வாமிகளே. பலர் அந்வயிப்பார்களென்று ஸபையார் ப்ரத்யாஶை கொண்டிருந்தார்கள். அப்படி அந்வயிக்காமல் இருந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. ஸ்ரீ பாஷ்யாதிகாரிகளே இக்காலத்தில் ம்ருக்யராகிவிட்டார் என்பதே அவைகளுள் முக்கியமான காரணம். எங்கேனும் அப்படிப்பட்ட அதிகாரிகள் சிலர் தென்பட்டார்களேயாகில், ப்ராயேண அவர்கள் இம்மாதிரியான பலத்தை அபேக்ஷியாதவர்களாகவே இருக்கிறார்கள். புதிதாக அந்த ஶாஸ்த்ரத்தை அப்யஸித்து, அப்படி ஸம்பாதிக்கப்பட்ட ஜ்ஞாநத்தை வெளியிடுவதிலும் அதனால் வித்வத் பரிதோஷத்தை ஸம்பாதிப்பதிலும் ஊக்கமுள்ளவர்களின் ஸங்க்யையும் ஸ்வல்பமாகவே இருக்கின்றது. தவிரவும், நாம் செய்யும் ஸம்மாந ரூப ஸத்காரமும் அதிமாத்ரம் பரிமிதமே. ஸ்ரீ பகவான் த்ரவ்ய ஸம்பத்தைப் பூர்ணமாக அநுக்ரஹித்து, வித்வான்களுக்கு யதோசிதம் உபகரிக்கும்படியான ஶக்தியைக் கொடுக்கும் பக்ஷத்தில், ஒருகால் இப்பொழுதைக் காட்டிலும் அதிகமான ஸம்மாநார்த்திகள் வரக்கூடும். அந்தக் காலத்தை நாம் உந்முகராக எதிர்பார்த்திருக்கிறோம். ஸதஸ்ஸுக்கு எழுந்தருளியிருந்த சிலஸ்வாமிகள், இதர க்ரந்தங்களிலும் பரீக்ஷை வைத்துக்கொள்ளாமல் இருப்பதைப்பற்றி ஆக்ரோஶப்பட்டதை நாம் வருத்தத்துடன் கவனித்தோம். அவர்கள், அப்படி ஆக்ரோஶப்படும் முன்னதாகச் சற்று விஷய பராமர்ஶம் செய்திருந்தால், ஸம்ரம்பத்திற்கு எவ்வித ஹேதுவுமில்லை என்பதை அவர்களே அறிந்திருக்கலாம்.

வித்வத் ஸம்மானம்.

ஒவ்வொரு ஸம்வத்ஸரத்திலும், வித்வத் ஸதஸ்ஸுக்கு அபேக்ஷிதமான த்ரவ்யத்தை நாம் யாசித்தே ஸம்பாதிக்கிறோம் என்பது ப்ராயேண எல்லாருக்கும் விதிதமே. இந்த ஸம்வத்ஸரத்தில், நமது யாசந ஶக்திக்குறைவினாலோ, அல்லது எவ்விடத்திலும் பயத்தை உத்பாதநம்செய்துகொண்டு பரவிவரும் துர்பிக்ஷ பிஶாசத்தின் ஆக்ரமணத்தினாலோ, அல்லது இம்மாதிரியான விஷயங்களுக்கு உபகரிக்கும் மஹான்களுடைய குறைவினாலோ, வேறு எந்தக் காரணத்தினாலோ நமது ஸம்பாதநம் அத்யந்தம் மிதமாக இருந்தது. இதைப்பற்றி விசாரப்பட்டுக்கொண்டிருந்த ஸமயத்தில், நமது ஸதஸ்ஸிலும் அதன் ப்ரவ்ருத்தியிலும் ஸாநுத்வ க்ரஹணம் செய்திருக்கும் ஒரு உதாரர் ஸ்வயமாகவே, 'இவ்வர்ஷத்திய வித்வத் ஸம்மானத்திற்காக நான் ரூ. 250 கொடுக்கிறேன்' என்று ஒரு பத்ரிகை எழுதி அனுப்பினார். பகவானால் ப்ரேரிதராய்க்கொண்டு இவர் எழுதி இருக்கிறார் என்று உணர்ந்து, ப்ரதிஜ்ஞாதமான தொகையின் முதல் பாகமாக அவரால் அப்பொழுது கொடுக்கப்பட்ட ரூ. 100-யும் பெற்றுக்கொண்டு ஸதஸ்ஸை நடத்தும்படியான ஶக்தியை அடைந்தோம். இப்படி பகவானால் இந்த விஷயத்தில் நிமித்தமாக வரிக்கப்பட்ட ஸ்ரீமாந், மதிராஸில் பிப்ஸன் கம்பெனி ஏஜன்டாக இருக்கும் ஸ்ரீ. உப. டி. எஸ். வரதாசாரியர் என்பவரே. அவர் விஷயத்தில் ஸபையார் எல்லாரும் மிக்க க்ருதஜ்ஞதையுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை இதனால் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறோம்.

தவிரவும், திருவஹீந்த்ரபுரத்தில் ஸதஸ் நடந்துகொண்டிருந்த காலத்தில் ஒவ்வொரு நாளும் மிக்க ஶ்ரத்தையுடன் ஸதஸ்ஸுக்கு வந்து வித்வாங்களால் செய்யப்பட்ட உபந்யாஸத்தைக் கேட்டு அதனால் அளவற்ற ஆநந்தத்தை அடைந்த ம-ா-ா-ஸ்ரீ ராஜகோபால பிள்ளை என்னும் ஒரு தநிகர், 20-பொன் நாணயம் வாங்கி அவைகளை வித்வதர்ப்பணம் செய்யவேணுமென்று அவருக்குப் பரிசிதரான ஸ்ரீ. உப. தி. ஈ. ஶடகோபாசார்யரை ப்ரார்த்தித்தார். இந்தத் தொகையும் சேரவே, வித்வாங்களுக்கு இதற்குப் பூர்வம் ஸமர்ப்பித்துக்கொண்ட ஸம்மானத்தைக் காட்டிலும் இவ்வர்ஷத்தில் கொஞ்சம் அதிகமாகவே ஸமர்ப்பித்துக்கொள்ள ஸாத்யப்பட்டது. 'ஸ்ரீமேஷ ஜந்தவிநம் ஸெகமவசம் ஸ்வயமேவ காரயதி'. அதைப்பற்றி நாம் கரைவதற்கு எவ்வித காரணமுமில்லை.

இந்த ஒன்பதாவது மஹாஸபை ஸம்பந்தமான மற்றை அம்ஶங்கள் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேஶிகாய நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 10.] ஸித்தார்த்தி௵ மாசிமீ [ஸஞ்சிகை 5.

ஸ்ரீ... [illegible]

... [illegible] [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

இப்போது நாற்பது ஐம்பது ஸம்வத்ஸரங்களுக்கு முன்வரையில் தக்ஷிணதேசத்தில், ஸ்வல்ப ஸந்துஷ்டர்களாய், ஸ்வதர்மத்தில் ஶ்ரத்தையுடன் நிலைத்தவர்களாய், ஸர்வ பூதங்களிடமும் ஸுஹ்ருத்தமர்களாய், நிரஹங்காரிகளாய், ஶாந்தஹ்ருதயர்களாய், க்ருதக்ருத்யர்களாய், ஸ்வநிஷ்டையை மறவாதவர்களாய் பகு விப்ரவர்யர்கள் தர்ஶிக்கப்பட்டார்கள். விவாத ஸ்தலங்களிலும், வாதக்ரந்தங்கள் எழுதும்பொழுதும், ஸ்வஸம்ப்ரதாய ஸ்தாபநத்தின்பொருட்டுத் தமது பாண்டித்யத்தை ப்ரகடநம் செய்வதன்றி இதரகாலங்களில் ஸம்ப்ரதாயாபி நிவேஶத்தை அவர்கள் மறந்தவர்கள். தமது ப்ரவ்ருத்திகளுக்கெல்லாம் பகவத்ப்ரீணநமே அவர்களுக்குப் போதுமான ஹேதுவாக இருந்தது. ஸ்வஜநங்கள் வித்தாந்வேஷிகளாய்ப் போந்து, அதற்கென்று ஸ்வவித்யா பரித்யாகபூர்வகமாக அந்ய வித்யா பரிசயத்தில் இழிவதில், அவர்கள் மிகவும் விமுகராய் நின்றனர். அப்படிப்பட்ட மஹநீயர்களுடைய ஸத்பாவத்தால் லக்ஷ்மீகாந்தன் பல திவ்ய க்ஷேத்ரங்களில் ஸாந்நித்யம் செய்ய உகந்தருளினான். இந்த நிலைமை இக்காலம் மாறிவிட்டது.

பால்யத்தில் யாம் ஒரு கதை கேட்டதுண்டு. ஒரு பட்டணத்தில் பல விப்ரர்கள் பகவத்பக்தராய் ப்ரகாசித்துக்கொண்டு வஸித்தனர். க்ருஹந்தோறும் பகவதாராதநம் க்ரமமாக நித்யம் அநுஷ்டிதமாயிருந்தது. ஸர்வத்ர தாரித்ர்யமும் பரவியின்றது; யாவரும் கஷ்டஜீவநம் செய்தனர். ஒரு காலவிசேஷத்தில் ஒரு க்ருஹத்தில் க்ருஹிணியானவள் பூஜாத்ரவ்யமான அக்ஷதையைச் செய்துவைக்காமல் இருந்தாள். க்ருஹபதியானவர் பகவதாராதநத்தை உபக்ரமித்த பிறகு அதைக் கண்டுகொண்டு அவளைக் கேட்டனர். அவளும் அவஸரத்தில் அத்யந்தம் அசுத்தமானதோர் ஜலத்தை உபயோகித்து அக்ஷதையைப் பண்ணிப் பூஜார்த்தம் கொண்டுவைத்தனள். அவ்வண்ணம் பூஜையும் நடந்தேறியது. மறுநாள் க்ருஹஸ்வாமி பகவத்பூஜையில் பூர்வதினம் உபயுக்தமான அக்ஷதைமுழுதும் ஸ்வர்ணமாக ப்ரகாசிக்கக்கண்டு ஸந்தோஷித்தனர்; காரணத்தைப்பற்றி விசாரியாமலே பூர்வதினத்தில் அக்ஷதை ஸம்பாதித்தபடியே ப்ரதிதினமும் நடக்கலாமென்று பத்நிக்குக் கட்டளையிட்டார். அதன்பிறகு மிகுந்த ஸ்வர்ணத்தை அவர் ஸம்பாதித்துக்கொண்டனர். ஸம்பத்தினுடைய அடையாளங்கள் க்ரமேண அவருடையவீட்டில் ப்ரகாசிக்கப்பெற்றன. அண்டைவீட்டுப் பெண்கள் அவ்வீட்டுக்காரியை அதைப்பற்றிக் கேட்கவாரம்பித்தனர். அவளும் சிலகாலம் ரஹஸ்யத்தை வெளிவிடாமலிருந்து, பிறகு தன் ஸ்நேஹத்தைப் பெற்ற ஒரு ஸ்த்ரீயினிடம் மாத்ரம் ரஹஸ்யத்தை வெளியிட்டாள். அவ்வண்ணம் ரஹஸ்யத்தைக் கண்டுகொண்டு அவளும் அதை அநுஷ்டாநத்துக்குக்கொண்டுவந்தாள். அவள் வீடும் பொன்மயமாகப் போந்தது. பெண்டுகள் மூலமாகவே அந்த ரஹஸ்யம் பட்டணமெங்கும் ரஹஸ்யமாகவே பரவி, யாவரும் மஹா தநிகர்களானார்கள். பட்டணமெல்லாம் மெத்தை வீடுகளும் ஆடையாபரணங்களும் சோபித்தன.

இந்த ஸ்திதியை அறிந்துகொண்ட ஒரு விப்ர குலோத்தமர்; தமது பத்நியை அழைத்து மற்றோர்கள் தநாட்யராகப் போந்த வழிகள், அவை எப்படி இருந்தபோதிலும், தமது க்ருஹத்தில் அநுஸரிக்கத்தகாதவை யென்று கட்டளையிடவும், அந்த ஸ்த்ரீயும் பர்த்தாவினுடைய ஆஜ்ஞாதிலங்கநம் பண்ணாமலிருந்தாள். அந்த ஒரு ப்ராஹ்மணன்மட்டும் தனது ரிக்ததையை உகந்துமின்



ஞர். சில நாள்கள் இந்த விதமாகக் கழிந்தன. பிறகு ஓரிரவில் அவருடைய க்ருஹத்தில் வைஸ்வாநர துல்யராய் ஒரு அதிதி ப்ரவேசித்தார்; க்ருஹஸ்வாமியால் சாஸ்த்ர விதிப்படியே பூஜிக்கப்பட்டார். பிறகு அந்நகரத்து த்விஜர்கள் வித்தமோஹத்தால் பகுபாபத்தில் இழிந்து, பகவானுடைய நிக்ரஹ ஸங்கல்பத்துக்குப் பாத்ரமானார்களென்றும், ஸ்வநிஷ்டையைத்துறக்காமல் காப்பாற்றிய அந்த க்ருஹஸ்வாமி ஒரு நிமிஷமும் அந்தப் பாபபூமியில் தங்கக்கூடாதென்று பகவானுடைய திருவுள்ளமென்றும், அவ்வதிதியானவர் சொல்லி, அந்த க்ருஹஸ்வாமியையும் அவருடைய ஜநங்களையும் தத்க்ஷணமே அழைத்துக்கொண்டு அப்பட்டணத்தைவிட்டுச் சென்றனர். போகும்வழியில் அந்த க்ருஹஸ்தர் மஹாப்ரகாசமொன்றை நாற்புறமும் கண்டு திரும்பிப் பார்க்கவும், அவருடைய பட்டணமானது தீமாரியால் எரிக்கப்படுவதைக் கண்ணுற்றார்; தம்முடன்வந்த அதிதியையும் காணமற்போனார்.

அத்யுத்கடமான பாபங்கள் க்ஷிப்ரமாக பகவானுடைய நிக்ரஹத்தை விளைவிக்கின்றன. மேலே விவரித்த ரீதியில்; இக்காலத்தில் விப்ரகுலத்தோர் யாவரும் ஸ்வபுத்ரர்களுக்குத் தேசாந்தர வித்யையைக் கற்பிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அது ப்ரதமத்தில் ஜீவநமற்றவர்க்கு ஜீவநோபாயமாயிருந்தது. அல்பஜீவநமுள்ளவர்க்கும் விசேஷ தநத்தைக் கொடுத்தது. ஐஹிக ஸுகமொன்றுதான் வித்தம் பெருத்த யாவர்க்கும் வித்தாபிலாஷிகளுக்கும் ப்ரதாநமாயிருக்கிறது. வித்தமோஹத்தால் மூடன் ப்ரமாதத்தில் விழுகின்றான்; அப்படிப்பட்ட அஜ்ஞனுக்கு ஆமுஷ்மிக விஷயம் மநஸ்ஸில் உறைக்கமாட்டாது. இதுதான் லோகம், இதனை மேல் ஒன்றுமில்லையென்று அவன் எண்ணுவன்; மறுபடியும் மறுபடியும் தர்மராஜனுடைய வசத்தில் அகப்படுவன்; ஸ்ருதி நிர்ணயமானது அவர்களால் விஸ்வஸிக்கப்படமாட்டாது; சிலர் போனவழியே லோகத்தில் பலரும் செல்கின்றனர். லோகத்தார் பரமார்த்த சிந்தை செய்பவர் அல்லர். விப்ரகுலத்தோர் ஸ்வதர்மத்தை இழந்தார்கள்; அந்யர்களுடைய அவஜ்ஞைக்கும், த்வேஷத்துக்கும் லக்ஷ்யமாயினார்கள். அவர்களில் பலர் ஸ்வஜாதி சத்ருக்களாகவும் பரிணமித்துவிட்டார்கள்.

லோகாந்தரத்துக்கும் இந்த லோகத்துக்கும் எவ்வாவது ஸந்தி நேரிட்டிராமல் போனால் லோகாந்தர விஸ்வாஸம் ஆஸ்திக்

கத்தக்கதன்று. ப்ராயேண மநுஷ்யர்க்கு லோகாந்தரம் ப்ரத்யக்ஷ விஷயமன்று. ஸதநுமாநங்களாலும் அது ஸாதிக்கத்தக்கதன்று. பெரும்பான்மையோர் அந்த விஷயத்தில் சில சேதநர்களுடைய அநுபவங்களை விஸ்வஸித்து, மதங்களென்பன லோகத்தில் உண்டாயிருக்கின்றன. அவ்வநுபவங்கள் வாஸ்தவமோ அவாஸ்தவமோ என்பதைப்பற்றிப் பலர் யோசிப்பதில்லை. அவை ப்ரமையால் உண்டாயிருக்கக்கூடும்; மித்யையாகவும் இருக்கக்கூடும். அநாதி காலஸித்தமாய், அநந்த சேதநர்களுடைய அநுபவங்களால் ஸ்திரப்பட்டதாய், ஓரேரூபமாய் வளர்ந்தது வைதிக ஸம்ப்ரதாயம். பூர்வ மந்வந்தரங்களில் அந்த ஸம்ப்ரதாயம் லோகத்தில் பரவியிருந்தது. மந்த்ர த்ரஷ்டாக்களான ருஷிகள் பூர்வ மந்த்ரங்களையோ அவற்றின் அர்த்தங்களையோ ஸாக்ஷாத்கரித்து வேதமந்த்ரங்களை லோகத்திற்கு உதவினார்கள். அந்த விஷயத்தைப்பற்றிப் பூர்வமே விசேஷமாக விசாரித்திருக்கின்றோம். லோகாந்தர விஷயத்தில் வைதிக ஸம்ப்ரதாயம் பொய்யாகில், மற்றெந்த மதமும் உண்மையினுடைய லேசத்தை உட்கொள்ள இடமில்லை. ஆகலின், ஆர்ய ஸம்ப்ரதாயத்தில் ஜநித்தவர்கள் ஆஸ்திகர்களாகில், அதை விட்டு விலக ஹேதுவேயில்லை.

ஆர்யமதப்படி ஒவ்வொரு ஆர்யனும் ஜந்மத்தால் தேவருஷி பித்ருக்களுக்கு ருணியாகப் பிறக்கின்றான். அந்த ருணம் வேதாத்யயநத்தாலும், வைதிக கர்மாநுஷ்டாநங்களாலும், ஸந்ததி வ்ருத்தியைப்பொருட்டு க்ருஹஸ்தாச்ரமத்தை ஸ்வீகரிப்பதாலும் தீர வேண்டியிருக்கின்றது. அத்யாத்ம வித்யோபதேசத்தைப் பெற்று மோக்ஷாபேக்ஷியொன்றை அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவந்தவன் உடனே கடன்சீட்டைக் கிழித்துவிடுகின்றானானாலும், பகவதாஜ்ஞைப்படி அவனுக்கு ஜந்மஸித்தமான ஸ்வதர்மங்கள் வித்யாஸம்ஸ்காரித்வேந அநுஷ்டிக்கத்தக்கவைகள். வித்யாப்ராப்திக்கு முன் அந்தத் தர்மங்களுடைய ஸ்வரூப த்யாகமானது தேவதைகளுக்கும் ருஷிகளுக்கும் த்ரோஹத்தில் பர்யவஸிக்கும்; வித்யாப்ராப்தியின் பிறகு அது பகவானுடைய ஆஜ்ஞையை அதிலங்கித்ததாகும். ஸர்வ வைதிக ஸம்ப்ரதாயங்களுக்கும் பரமாசார்யனான த்வைபாயனருடைய மதம் அவ்வண்ணம் இருக்கின்றது. ப்ராஹ்மணனுக்குக் காலவ்யத்யாஸத்தினால் வ்ருத்திக்குறைவு நேரிட்டிருக்கின்றபடியால், இதை ஆபத்காலமாகக் கருதி வ்ருத்யந்தரத்தை அவன் ஸ்வீகரிக்கக்கூடியவன்; ஆயினும் முக்யமான ஸ்வதர்மங்



களுக்கு ஸ்வரூப த்யாகத்தைப் பண்ணாமலிருக்கக்கடவன். இதை ப்ரமாணமாக ஒவ்வொரு த்விஜனும் அங்கீகரிக்க வேண்டியது; அங்கீகரிக்காதவன் த்விஜனன்று; அவன் ப்ரஷ்டனேயாவன்.

ஒன்றும் தெரியாமல் கிறிஸ்த்வ மதத்தைப் புகழ்ந்தும், நமது ஸம்ப்ரதாயத்தை இகழ்ந்தும் ஒருவன் பேசப் பல மூடர் அவனைக் கேட்கின்றார்கள். அவர்களில் ஒருவன் யாதேனுமோர் ஹேதுவினால் ஸ்வமத த்யாகம் செய்து ப்ரஷ்டனாகக் காண்கின்றோம். இவ்வண்ணமே நமது மதத்தின் ஸ்வரூபம் தெரியாமல், அதனுடைய கட்டுப்பாடுகளை அதிக்ரமிக்க இச்சிப்பவர்களுக்குப் பேசும் திறமையுள்ளவர்கள் பேச்சுக்களே ப்ரமாணமாக முடிகின்றன. பேசும் திறமையே வாதகோஷ்டியில் ஜயஹேதுவாகமாட்டாது. கர்ம ப்ரஹ்மார்த்தமான சாஸ்த்ரத்தில் ஹேத்வாதிகளை நிரஸிக்கத்தக்க பண்டிதர்கள் ஆர்ய ஸம்ப்ரதாயங்களில் இன்னும் அற்றுப்போகவில்லை. தத்காலத்தில் பதிதராக விரும்புகின்றவர்களுக்கு ஸம்யக் தர்க்கமென்பதே கர்ணகடோரமாயிருக்கின்றது.

ஸர்வ ஸம்ப்ரதாயங்களுக்கும் பரமாசார்யனான பாராசர்யர், ப்ரஹ்மத்தை சாஸ்த்ரமொன்றினால் தான் அறியக்கூடுமென்று நிஷ்கர்ஷித்தார். ச்ருதியும், ப்ரஹ்மம் இருக்கின்றதென்ச் சொல்லும் சாஸ்த்ரத்தாலன்றி எவ்வண்ணம் அதனுடைய ஸ்வரூபகுண விபூதிகள் அறியக்கூடுமென்றது; இன்னும் வேறுவிதமாக ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபத்தை அறிந்ததாக எண்ணுகின்றவனை நோக்கி, "நீ நிஜமாக ப்ரஹ்மத்தினுடைய ரூபத்தைப்பற்றித் தப்ரம்தான் அறிந்தனை" என்றுரைத்தது. தப்ரமென்றால் அத்யல்பம். சாஸ்த்ரமென்றால் ச்ருதி; ஸர்வ வேதங்களும் சாஸ்த்ரமெனப்படும். அவை அநந்தகாலமாகப் பல மஹாத்மாக்களால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட தத்வார்த்தங்களை உட்கொண்டிருக்கின்றன. அவற்றைத் துறந்து, ஒவ்வொரு மநுஷ்யன் ஸ்வயுக்தியைக்கொண்டு கல்பிக்கும் மதங்களை அங்கீகரிப்பது குணத்தில் பர்யவஸிக்கமாட்டாது. ப்ராசீநமாக ஏற்பட்ட ஸம்ப்ரதாயார்த்தங்களை விட்டு, வேதங்களுக்கு அர்த்தாந்தரங்களைக் கல்பிப்பதும் யோக்யர்களால் அப்யுபகமம் செய்யத்தக்க விஷயமன்று. ஸர்வ மர்யாதைகளையும் காபுருஷர்கள் த்ருப்தியை உத்தேசித்து நாசம்செய்வது தர்மவிரோதம். எந்தவிதத்திலும் பல பண்டிதர்கள் கூடி யோசிக்கத்தக்க விஷயங்களைக் கேவலாபிநிவேசத்தைக்கொண்டு மனம்போனபடி யெல்லாம் நிர்ணயிப்பது சாஸ்த்ர சித்தர்க்குப் பொருந்தமாட்டாது.

ஸ்ரீ:

# ப்ரேம ப்ரவாஹம்.

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.)

உனதிடம் ப்ரேமையானது உன்னுடைய திவ்யரூபங்களுடைய ஸ்மரணத்தை அபேக்ஷிக்கின்றது. அது ஸர்வத்ர ராகவனைத் தர்சிக்கும்; ராகவனிடம் ஸர்வத்தையும் தர்சிக்கமாட்டாது; அது ஸர்வத்ர வாஸுதேவனைத் தர்சிக்கும்; தன்னைக் கோவிந்தனைப் பாவிக்கப்பண்ணும்; கோவிந்தனிடம் அந்ய ரூபங்களை ஆரோபிக்கமாட்டாது; வேதாந்திகளும், யோகிகளும் ஸர்வத்தையும் உன்னிடம் காண்பார்கள். உனது ப்ரேமார்ணவத்தில் மூழ்கினவர்களுக்கு எதைக் கண்டாலும் உனது தர்சனம் தான் ஸித்திக்கும். நீ அவதாரமெடுத்த காலங்களில் உனது திவ்ய ரூபத்தால அவர்களுடைய கண்களைக் கவர்ந்தாய்; உனது கல்யாணகுணங்களால் அவர்கள் ஹ்ருதயங்களில் ஸுப்ரதிஷ்டிதனாய். ஜந்மாந்தரங்களில மஹா ஸுக்ருதத்தை ஸம்பாதித்தவர்கள் உனது அவதார திருமேனிகளைக் காணப்பெற்றார்கள். உனது ஸமச்லேஷாதிகள அவர்களுக்குக் கிடைத்தன. உனது திவ்ய சேஷ்டிதங்களுடைய ஸ்மரணம பலர்க்கு ச்ரேயஸ்ஸாதகமாயிற்று. அவ்வவதார ரூபங்கள் ததகாலம் நினது நவ்யமங்கள விக்ரஹ ரூபங்களாக நினதுஅடியார்களால் அநுபவிக்கப்படுகின்றன. உனது கதாச்ரவணமானது உனது அவதார விக்ரஹங்களை உனது பக்தர்களுடைய மனோகோசரங்களாகப் பண்ணுகின்றது. ஸம்ஸார காந்தாரத்தில தமது வல்வினைகளால சிக்கித் தவிப்பவர்களுக்கு, உனது கதாம்ருதம ஸர்வபாப நிவாரணமாகின்றது. அதைப பருக ஸர்வ ஜனங்களும் ஆசைகொள்ளும்படியாகக் கவிச்ரேஷ்டர்களான வால்மீகி வ்யாஸாதிகள் க்ரந்த நிர்மாணம் செய்திருக்கின்றார்கள். இவ்வண்ணம் லோகத்தார்க்கு உனது காருண்யத்தால கிடைத்த உனது ரூபஸ்மரணமும, உனது கதாம்ருதமும், இப்போது காலதேசவைகுண்யங்களால கைவிடப்படுகின்றன. இதற்குடைய காரணமற்ற தேசாந்தரபாஷா



பரிசயத்தில் ரமிக்கின்றவர்கள் தாமும் கெட்டுப் பிறரையும் கெடுக்கக் காண்கின்றோம். ஸத்ஸம்ப்ரதாயங்களில் ஜநித்தவர்களுக்குத் தாய் தநமாகக் கிடைத்த பரம்பாகவதோக்திகள் படிக்கப்படாமலும் கேட்கப்படாமலும் போகின்றன. பண்டிதர்களென்று எண்ணப்பட்ட சிலர் அர்த்தகார்ப்பண்யத்தினால் தாமறிந்த விஷயங்களைப் பரர்க்கு விக்ரயித்து ஜீவிக்கின்றார்கள். ஸந்யாஸிகளெனக் காணப்படுபவர்களும் தநத்தை ஸதா ஸ்மரித்துக்கொண்டு, அதனுடைய ஆர்ஜநநிமித்தம் உனது தர்மங்களை அதிலங்கனம் செய்கின்றார்கள். இத்தகைய கலியின் கொடுமையிலும் உனது மூர்த்திகளைத் தர்சித்து, அத்தர்சநத்தில் ஈடுபட்டு, உனது ஸஹஜ காருண்யத்தை ஆச்ரயிப்பவர்கள் அங்கங்கே இருப்பார்கள் என்று விச்வஸிக்கின்றேன். இன்றைக்கும், என்றைக்கும், இன்னும் உண்டாகப்போகின்ற ஜந்மாந்தரங்களிலும், நினது திருக்கோயில் சென்று நின் தர்சநத்தில் களித்து, நினக்கு ஆள்செய்யும் பாக்யம் கிடைத்ததாகில், அதுவே மஹா உத்தாரகம். கலியின்கண் அவதரித்துக் கலியைக் கெடுத்தெழுந்த மஹாநுபாவர்கள் பலர் அத்தகைய அநுபவத்தைப் பெற்றுப் பேரின்பத்தில் ஆழ்ந்தனர். அவ்வநுபவத்தை நானும் ப்ரார்த்திக்கின்றேன்.

ஓ கருணாகர! அது எனக்குக் கிடைக்க நீ அருள்புரியவேண்டும்: மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்வர் இவ்வையத்துள்ளார். நூலினேரிடையார் திறத்தே நிற்பார் இஞ்ஞாலத்தார். உண்டியே உடையே உகந்தோடுவர் இம்மண்டலத்தார். நீதில் நன்னெறி நிற்க, அல்லாது செய்நீதியார் அவர்கள். அன்னவரோடு கூடுவதில்லையென்று குலசேகரன் துணிந்தான்; அன்னவர்க்குள் நான் நிற்பேன். அன்னவரோடு எவ்வண்ணம் நான் கூடாதிருப்பேன்! உனது தர்மத்தைக் காக்கத் திறனில்லேன். எத்திறத்திலும், யாரொடும் கூடும் என் சித்தம்; ஆயினும் உனக்கே யென்று எனைப் பணிகொள்ளக் கேட்கின்றேன். எனது ஆகிஞ்சந்யமும், உனது தயையும் எல்லையற்றன. ஆதலால் அவ்வண்ணம் ப்ரார்த்திக்கத் துணிந்தேன்.

வாயோ பல ருசியைத் தேடுகின்றது. எவ்வளவு தின்றும் அதற்கு த்ருப்தியில்லை. இடும்பைகூர் வயிற்றுடன் வாழ்தல் அரிதென்றார் ஒரு கவி. மெய்யும், காதும், மூக்கும், கண்களும், என்னுடைய கர்மேந்த்ரியங்களும், ஒரு புருஷனைப் பல பார்யை

கள் பல புறமும் இழுப்பதையொத்து என் மனதை ஒவ்வொன்றும் ஆகர்ஷிக்கின்றன. என் மனஸ்ஸோ ஸ்வரூபத்தால் ஸதா சலிக்கின்றது. இந்த்ரியங்கள் விஷயங்களை அதற்கு எப்போதும் காட்டிக்கொண்டிருக்க, அது, விஷயங்கள்மீது ஸதா பாய்ந்தோடுகின்றது. எனது பாபத்தால் அது துஷ்டஸ்வபாவத்தில் நிலைத்துவிட்டது; அஸாது கார்யங்களில் அது த்வரிக்கின்றது. ஸர்வவித காமங்களும் அதன்கண் உதிக்க, அவற்றால் அது பீடிக்கப்படுகின்றது. ஒரு வேளை அது ஸந்தோஷிக்கின்றது; மற்றொருகால் துக்கிக்கின்றது; மறுபடி கோபிக்கின்றது; உடனே பயங்கொள்கின்றது. உன்னைத் தேடுவதற்காக அதை நீ எனக்கு ஒரு ஸாதனமாய் அளித்தாய். அதைக்கொண்டு உன்னை நான் எவ்வண்ணம் அறிவேன்? 'ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பப் பாவியேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ?' என்று ஆழ்வார் அருளிச்செய்தார். ஆதலால், 'தாவி வையம் கொண்ட தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளும் காலம் இன்னும் குறுகாதோ' என்று உன்னை வேண்டினார். எனது வினைகள் தீரவே, நீ பல காட்டி என்னைப் படச்செய்கின்றாய். என் பாடெல்லாம் நானே ஸம்பாதித்துக் கொண்டேன். அந்த விஷயத்தில், வேண்டுதல் வேண்டாமையிலானெனப் பெயர்கொண்ட உனது அநாதிகர்ம ஶக்தியானது பக்ஷபாதமின்றி வ்யாபரிக்கின்றது. எனது யோசனைக்கெட்டிய காலமெல்லாம் நான் அநுபவித்தபோதிலும், எனது ஸஞ்சித கர்மங்கள் அநுபவத்தால் தீரமாட்டா. அவை தீரும்படியாக நீ விதித்த கர்ம ஜ்ஞாந பக்தி யோகங்களில் அந்வயிக்க எனக்கு யோக்யதை இல்லை; ஸர்வபாப நிவாரணார்த்தம் ஶிரஸ்ஸில் அஞ்ஜலிபத்தர்களாய் 'நம' என்று உன் முன்பாக ப்ரணமம் செய்தால் 'போது'மென்று நீ கோபிஜநங்கட்குச் சொன்ன விஷயம் என்போலியர் பொருட்டென்று யோசிக்கின்றேன். நீயே விதித்தபடி உனது திருவடித் தாமரைகளில் பண்ணப்பட்ட ஶரணாகதியானது அகிஞ்சநர்க்குப் பரம புருஷார்த்த ப்ரதமாகின்றது. உனது ப்ரபாவத்தினால் அந்த ஶரணாகதியானது என் போலியர்களையும் தோஷமற்றவராக்குகின்றது. உனது கல்யாண குணங்களுக்குள் உனது கருணையானது ஸார்வபௌமீயென்று சொல்லப்பட்டது. எனது காலங்களை உனது திவ்ய சரித்ரங்களை ஸ்மரித்துப் போக்கும்படி நீ க்ருபை செய்யவேண்டும். ஶ்யாமஸுந்தரனான உனது அவதாரரூபமு



னது எனது ஹ்ருதயத்தை விட்டகலாதிருக்க நீ ஸங்கல்பிக்க வேண்டும்.

ஶாஸ்த்ரத்தால் உனது தத்வஸ்வரூபம் அறிந்து, ஜ்ஞாந த்ருஷ்டியால் அதை ஸாக்ஷாத்கரிக்க வல்லவர்களுக்கு உன்னை எங்கும் எல்லா பதார்த்தங்களிலும் காணப் பொருந்தும். ஹர்ஷாமர்ஷபயோத்வேகங்களால் பீடிக்கப்பட்ட ஹ்ருதயமுடையவர்கள் அவ்வண்ணம் உன்னை எப்படிக் காண்பார்கள்? ஸர்வமும் நீயென்று அநுபவத்தால் அறிந்து நான் ஶாந்தியடைந்தவனல்லேன். ஸர்வத்துக்குள்ளும் மறைந்துறையும் உன்னை நான் எவ்வண்ணம் ஸாக்ஷாத்கரித்து உபாஸிப்பேன்? ஸ்வரூபஜ்ஞாநம் உண்டாவதற்கு முன் பக்திஸாரன் உன்னை ஊரகத்தில் நிற்கவும், பாடகத்தில் இருக்கவும், வெஃகாவில் துயிலமரவும் கண்டார். அந்த ஜ்ஞாநம் நிலைத்த பிறகு, ஸர்வ ப்ரகாரமாகவும் நீ அவர் நெஞ்சுக்குள் நிலைத்தாய். நீ திருமலைமீது நிற்கவும், விண்ணுலகில் இருக்கவும், திருப்பாற்கடலில் கிடக்கவும் முன் கேட்டவர், தத்வஸாக்ஷாத்காரம் பிறந்த பின்பு, நீ தம்முடைய ஹ்ருதய நிகேதநனென்று கண்டுகொண்டார். ஆதித்யாதி ஸர்வ பதார்த்தங்கட்குள்ளும் அந்தராத்மாவாய் நியந்தாவா யிருக்கின்ற நீயே, எனக்குள்ளும் அந்தராத்மாவாயும் நியந்தாவாயு மிருக்கின்றாய், என்று உபநிஷத் காட்டியது. எனக்குள் நிற்கும் உன்னை யறிந்து உபாஸிக்க எனக்கு ஶக்தியில்லை. யாவுமறிந்த மஹாத்மாக்களும் உனது அவதார சேஷ்டிதங்களைப் பாடி, உனது அவதார ரூபங்களைத் தம்முடைய மனஸ்ஸால் அநுபவித்துக் களித்தார்கள். உனது திருக்கோயில்களில் உனது திவ்ய மூர்த்திகளைத் தர்ஶித்து ஆநந்தித்தார்கள். அவ்வநுபவம் தான் என்போலியர்க்குக் கைகூடுமோ? அதுவும் நினதருளின்றி நிறைவேறமாட்டாது.

க்ருதயுகத்தில் உன்னை த்யாநித்தும், த்ரேதாயுகத்தில் யஜ்ஞங்களால் உன்னைப் பூஜித்தும், த்வாபரயுகத்தில் பக்தாநுகம்பையால் திவ்யமங்கள விக்ரஹரூபியாக அவதரித்த உன்னை அர்ச்சித்தும் எந்தப் பலனை அடைந்தார்களோ, அதே பலனைக் கலியுகத்தில் உன்னுடைய நாம ஸங்கீர்த்தநத்தால் அடைவார்கள் என்றதும், உனது திருக்கோயில்கள் உன்னன்பர்கள் களிக்கும் முறையில் பரிபாலிக்கப்பட மாட்டாவென்கிற யோசனையாலோ என்று தோன்று

கின்றது. முக்தி தரும் நகரங்கள் ஏழும், நினது நாமாம்ருதத்தினுடைய ரஸத்தைப் பருகும் பக்தர்களுடைய சித்தங்கள் ஸந்தோஷிக்கும் ஸ்திதியில் இல்லாமற்போனால், பகுமானார்ஹங்க ளென்றெண பல காலங்களுக்கு முன்னமே யோசிக்கப்பட்டன. பாகவத ஸம்ருத்தியெனும் ஔசித்யம் எந்தத் திவ்யதேசத்தை விட்டகன்றதோ, எவ்விடம் நினது ஏகாந்தி ஒருவனும் அகப்படானோ, எவ்விடத்தில் உனது பாதஸேவையின் பொருட்டும் ஆராதநத்தின் பொருட்டும் சித்தத்துக்கு ஐகாக்ரியம் உண்டாகமாட்டாதோ, அவ்விடம் க்ருதக்ருத்யன் வாஸம்செய்வது யுக்தமன்றெனவும் யோசிக்கப்பட்டது. மேலே விவரித்த அவஸ்தைகள் தத்காலம் திவ்யதேசங்களை மூடிக்கொண்டன. ஜனங்கள் அந்யாய காரணங்களையிட்டுப் பரஸ்பரம் த்வேஷிக்கின்றனர்; உனது திருவடிகளில் மிகவும் அபசாரப்படுகின்றனர். உன் ஸந்நிதி விசாரணை கர்த்தர்கள் செய்கின்ற அக்ரமங்களால் ஸேவார்த்திகள் வருந்துகின்றார்கள். உன்னுடைய விபவத்தைப் பலர் கெடுக்கின்றனர். உன் ஸ்தோத்ரங்களைப் படிப்பவர்களும் உன் கோயிலை இடிப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். என்ன பாபம் பண்ணி இக்காலம் நான் இருக்கப்பெற்றேனோ? ஆனாலும் உனது நாமஸங்கீர்த்தநம் பண்ண எனக்குக் குறையொன்றுமில்லை. தேசம் எப்படியிருந்தபோதிலும், காலம் எப்படிக் கெட்டபோதிலும், உன்னிடம் ப்ரியம் வளர எப்போதும் வழியிருக்கின்றது. உனது ரூபங்களை எண்ணினால் எனக்கு ஆநந்தம் உண்டாகின்றது. உனது சரித்ரங்களை ஸ்மரித்தால் என் மனம் த்ருப்தியடைகின்றது. உனது நாமங்களைக் கேட்டாலும் சொன்னாலும் எனக்கு உடனே ஸந்தோஷம் ஜநிக்கின்றது. நான் காண்கின்ற பொருளெல்லாம் உன்னை உள்ளடக்கி ப்ரகாசிக்கின்றன வென்று சாஸ்த்ரம் முறையிடுகின்றது. ரமாநாத, ரங்கபூரவலிக, க்ருஷ்ண, விஷ்ணோ, ஹரே, த்ரிவிக்ரம, ஜநார்தந, த்ரியுக, நாத, நாராயண, என்று ஸுபப்ரதங்களான உனது திவ்யநாமங்களைச் சொல்லி நான் களிக்கக் குறையில்லை. உனது க்ருபையினால் திவ்ய த்ருஷ்டியைப் பெற்றும், உனது விச்வரூபத்தைத் தர்சிக்கப் பார்த்தன் அசக்தனானான். உன்னைக் கிரீடியாய், கதாயுக்தனாய்ச், சக்ரஹஸ்தனாய்த் தர்சிப்பதையே அவன் வேண்டினான். தத்வதர்சிகளான மஹர்ஷிகளும், ஸர்வ பதார்த்தங்களுக்கும் காரணனாய், வாஸஸ்தாநமாய், பரமகதியாய், அந்தர்



யாமியாய் நீ விளங்கும் உண்மையைப் போதிக்கின்ற உனது நாராயணனெனும் திருநாமத்திலும், உனது ஸர்வ வ்யாபகத்வத்தை ப்ரகடநம் செய்கின்ற விஷ்ணு எனும் திருநாமத்திலும், உனது பரமப்ராப்ய ரூபத்தை ஜ்ஞாபிக்கும் வாஸுதேவ நாமத்திலும் மிகவும் களித்தவர்களானாலும், ஸம்யக் ஜ்ஞாநத்தால் அறியக்கூடிய உனது பரஸ்வரூபத்தைக் காட்டிலும், உனது அவதார ரூபங்களைப் பகு ப்ரியத்துடன் கருதி, உன்னை வநமாலீயென்றும், கதீயென்றும், சார்ங்கீயென்றும், சங்கீயென்றும், சக்ரீயென்றும், நந்தகீயென்றும் சொல்லி ஆநந்தித்தார்கள். அவ்வாநந்தம் இச்சித்தவர்க்கெல்லாம் எப்போதும் உண்டாகக் குறையில்லை. அன்னவர்க்கு நரகபயமென்பது எண்ணத்தக்கதல்ல. உனது நாமஸங்கீர்த்தநம் செய்யும் ஸுக்ருதம் எனக்குண்டாகட்டும். உனது ரூபஸ்மரணம் என் மநஸ்ஸை விட்டகலாது நிற்கட்டும். உனது திவ்ய சேஷ்டிதங்களை வாசித்தும் கேட்டும் எனக்குக் காலக்ஷேபம் நடக்கும்படி நீ அநுக்ரஹிக்க வேண்டும். உனக்கு நான் என்றும் அநுகூலன்; புத்திபூர்வகமாக உனக்கு ப்ரதிகூலனாய் என்றும் நான் வர்த்திக்கவேண்டாம். ஆதலால், உனது ரூபமான ப்ரபஞ்சமெங்கும் எனக்கு அநுகூல புத்தியே ஸ்திரப்பட வேண்டும்.

பத்ராதிபர்.

---


ஸ்ரீ:

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் சிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |
| 3. ஸ்ரீ பாகவத சதுச்ச்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர், நரஸிம்மாசார்யர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 4. ஸ்ரீ சதுச்ச்லோகீவிவரணம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 5. ஸ்ரீராமாயணத்தில் விசேஷார்த்தங்கள் ஸ்ரீ. உ.வே. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸாய-சார்யாய நம:

# *ஸ்வாகத நிவேதந பத்ரிகை.

இது விஷயத்தில் சிலர், "லோகோஜ்ஜீவநார்த்தமான இவ்வளவு பெரிய கார்யத்தை யத்நிக்க நாம் ஸமர்த்தர்களா? அப்படி ஆரம்பிப்பது ஸாஹஸமாக மாட்டாதா? நம் ப்ரதிஜ்ஞைப்படி நாம் அதை ஆரம்பிக்காமல், ஆடம்பரத்துக்கு மாத்ரம் சொல்லிக்கொள்வதானால் அது தர்மமா? பல தூர்த்தர்கள், தாம் செய்வதெல்லாம் லோகோபகாரார்த்தம் என்று நடித்து, ஜநங்களை வஞ்சித்து ஸ்வோதரபூரணம் பண்ணுவதுபோல் இதுவும் ஆகாதா?" என்று ஆக்ஷேபிக்கக்கூடும். இதைப்பற்றி ஸந்தேஹ நிவ்ருத்தி செய்யவேண்டியது அவஸ்யம். தத்வஹித புருஷார்த்தங்களைப்பற்றி அநுஷ்டாநோபயோகியான விஸதம ஜ்ஞாநம், நம் முன்னோர்களும் மஹர்ஷிவர்யர்களுமான ஆர்யர்களுக்கே அஸாதாரணமாய் அமைந்த ஸம்பத்தென்பது நிர்விவாதம். யாராவது ஆக்ஷேபித்தாலும் அது நிர்விவாதமாய் ருஜுப்பிக்கக் கூடிய விஷயம். கேவலம் ஆஸ்திக்யம், அதாவது பகவதஸ்தித்வ ஜ்ஞாநம், நாஸ்திகேதர ஸாதாரணமாயிருந்தபோதிலும் பகவத் ஸ்வரூபம் ஸ்வஸ்வரூபம் முதலிய விஸேஷாம்ஸங்கள் ஸம்பந்தமான யதார்த்த ஜ்ஞாநம் ஸ்ருதி-பாஹ்யர்களுக்கு ஏற்பட்டிருக்கவில்லையென்பது ஸர்வப்ரமாண ஸித்தம். இது காரணமாகத்தான் நம் பூர்வீகர்க்கு 'ஆர்யர்கள்' என்கிற அநந்ய ஸாதாரணமான வ்யபதேசம் ஏற்பட்டது. 'கர்தவ்யம் ஆசரந் (கார்யம்) அகார்யம் அநாசரந் । திஷ்டதி ப்ராக்ருதாசாரே ஸ ஆர்ய இதி ஸ்ம்ருத:' அதாவது: தத்வமின்மையைத் தூர விலக்கிய கூரறிவுடையோர் ஆர்யரென்பது.

* இது, சென்ற பத்ரிகையின் தொடர்ச்சி.



விதை முதலற்றவன் எப்படிப் பயிர்செய்ய வொண்ணாதோ, அப்படியே வேதபாஹ்யர்களால் லோகத்தில் ஜ்ஞாந பீஜாவாபம் பண்ணமுடியாதென்பது ஸ்வரூபஸித்தம். அது விஷயத்தில் அவர்கள் யத்நிப்பது எவ்வளவு அநர்த்த பர்யவஸாயியாகிறதென்பது லோகசரித்ரத்தால் நன்கு விளங்குகிறது. ஆகையால், லோகத்துக்கு ஸ்ரேயஸ்ஸாதநமான ஜ்ஞாந ப்ரவசநம் பண்ணவேண்டியது ஆர்யர்களுடைய ஸ்வதஸ்ஸித்தமான பரமே தவிர, வேறு ஒருவரும் அதற்கு அதிகாரிகளல்லர். தத்ராபி, ஆதிமுதல், தொன்று தொட்டு விச்சேதமில்லாமல் வந்திருக்கும் ஸத்வித்யா ஸம்ப்ரதாயஸ்தர்களே அதற்கு உத்தமமான அதிகாரிகளாவர். அவ்வித ஸம்ப்ரதாயம் யாதென்று யோசிக்குமளவில் அது ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்தமே யாகும் என்கிற நிர்ணயம் ஸ்வரஸமாக ஸித்திக்கின்றது. ஸகல ஸாஸ்த்ரங்களுக்கும் யுக்திக்கும், அநுபவத்துக்கும் ஸமஞ்ஜஸமாய், நிராபாதமாய், ஸர்வோபஜீவ்யமாய், ஸர்வஹிதமாய், ப்ரமாண வஸ்ம் வஸமாய் அமைந்துள்ள இந்த ஸத்ஸம்ப்ரதாயத்தின் ஏற்றத்தைப்பற்றி இந்த ஸதஸ்ஸில் உபந்யஸிக்கப் போகிற வித்வான்கள் பஹுப்ரகாரமாய் உபபாதிப்பார்கள். அதை விவரிக்க இது ஸமயமன்று; நானும் அதிகாரியல்லன். ஆனால், இவ்வளவு மாத்ரம் இங்கு உரைக்க ப்ராப்தாவஸரம். அதாவது, லோகத்தில் யதார்த்த ஜ்ஞாநமும், அதற்கு அநுரூபமாக ரத்நத்துக்குக் காந்திபோன்ற விஸுத்தாசாரமும் ப்ரசாரமடைய வேண்டுமானால், ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸம்ப்ரதாய ப்ரவசநமல்லது வேறு கார்யகாரியான உபாயமில்லையென்பதே. இது கேவலம், "காமம் பவது பவது வஸ்து கநகவிஷ்டா பஹுமதா" என்கிற ந்யாயத்தை அநுஸரித்து அஸ்மதீயத்வாகாரத்திலுள்ள பக்ஷபாதத்தினால் சொல்வதன்று; பூதார்த்தமே யென்பது ஸத்விசாரம் பண்ணும் விவேகிகட்குப் புலப்படும். இதை உத்தேஸித்துத்தான், 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம் । திஸஸு வ்யாபிநீ பூர்ணா ஸர்வலோகஹிதைஷிணீ' என்று பெரியோர்கள் அநவரதம் அநுஸந்திப்பது. ஆகவே, ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த ப்ரவசநம் லோகோஜ்ஜீவநார்த்தம் செய்யவேண்டிய ப்ரதம கைங்கர்ய மென்பது ஸ்பு

ஷ்டமாகிறது. அக்கைங்கர்யம் ஸ்வயம்ப்ரயோஜந மென்பதும் பகவன் முகோல்லாஸக மென்பதும் நமக்கு ஏற்பட்ட விஷயம்.

அப்படி ப்ரவசநம் பண்ண யத்நிப்பதற்கு முன், ஸித்தாந்த நிர்த்தாரணமும் ப்ரவசந ப்ரக்ரியா நிர்த்தாரணமும் செய்து கொள்ளவேண்டியது அவஶ்யம். ப்ரதம வ்யாபாரமாகிய ஸித்தாந்த நிர்த்தாரணம் ஏற்கெனவே ஸதாசார்ய பரம்பரையால் செய்யப்பட்டிருப்பதால், அது விஷயத்தில் தத்காலம் ஶ்ரமப்பட வேண்டிய அவஶ்யம் அதிகமில்லை. மேலும், முக்யாம்ஶங்களில் எல்லா ஆசார்யர்களும் ஏகமதியா யிருப்பதாலும், அநுஷ்டாநாதிகளில் சிற்சில ஸூக்ஷ்மபேதங்கள் இருக்கபோதிலும், அவை, அநுஷ்டாதாக்களுடைய ருச்யநுகுணமாக நிர்வஹித்துக் கொள்ளத்தக்கவைகளே தவிர வேறல்ல. ஸர்வ ஸாதாரணமான ப்ரதாநாம்ஶங்களே லோகத்துக்கு ப்ரவசநோபயோகியே தவிர, ஸூக்ஷ்மாநுஷ்டாநங்களைப்பற்றி நம் உத்தேச ஸம்பந்தமாய்க் கவலைப்பட வேண்டியதில்லை.

ப்ரவசந க்ரமத்தை உத்தேஶிக்கையில் முற்காலத்துக்கும் இக்காலத்துக்கும் இருக்கும் பல மாறுதல்களைக் கவனிக்க வேண்டியது அவஶ்யமாயிருக்கிறது. அம்மாறுதல்களுக்கு அநுகுணமான ஏற்பாடுகள் செய்யாவிடில் நம் யத்நங்கள் ஸபலமாகமாட்டா. நம் முன்னோர்கள் ப்ரவசநத்துக்காக அவலம்பித்த முக்யோபாயம் ஶிஷ்ய பரிக்ரஹம்; அதாவது, ஜிஜ்ஞாஸையுடன் தன்னைவந்து ஆஶ்ரயித்த பாத்ரபூதனான ஶிஷ்யனுக்கு ஆசார்யன் வித்யையைப் போதிப்பது. ஒவ்வொருவரும் வித்யாக்ரஹணம் செய்ய வேண்டியது அத்யந்தம் அவஶ்யமென்றும், வித்யை யில்லாமல் த்ரைவர்ணிகருக்கு ஸ்வரூப ஸித்தியேயில்லை யென்றும், ஜகத்தில் எல்லா ப்ராணிகளும் தம்தம் வ்யாபாரத்தில் பரபரப்புடன் ப்ரவ்ருத்திப்பதுபோல் ஆயுஸ்ஸின் ப்ரதம பாகத்தில் வித்யாப்யாஸம் பண்ணவேண்டு மென்றும், அப்போது ஶரீரேந்த்ரிய மநோவ்ருத்திகளுக்கு இதர வ்யாஸங்கம் கூடா தென்பதற்காகவே ப்ருஹ்மசர்ய வ்ரதாநுஷ்டாநம் செய்யவேண்டு மென்றும் நியமத்தைக் காப்பாற்றிவந்த காலத்தில் அம்மாதிரி ஶிஷ்ய ஸங்க்ரஹ ரூபமான ப்ரவசநோபாய மொன்றே உபபந்நமாயும் பர்யஸ்தமாயு மிருந்தது. இப்போது அவ்வித நியமம் தவறி, ஸத்வித்யா விஷயத்தில் அதிகமான அஶ்ரத்தையும் அவஜ்ஞையும் ஏற்பட்டு, ஜிஜ்



ஞாஸை என்பதற்கு அவகாஶமே இல்லாத ஸந்தர்ப்பத்தில், முன் நடைபெற்றுவந்த ப்ரவசந க்ரமமொன்று மாத்ரம் கார்யகாரியாகா தென்பது நிச்சயம். மேலும் இக்காலத்தில் ஶிஷ்ய குணங்களுக்கு ந்யூநதை ஏற்பட்டிருப்பதுபோல், ஆசார்ய குணங்களும் புஷ்கலமா யில்லாமலிருப்பது ப்ரத்யக்ஷஸித்தம். யதாபூர்வம் வித்யா ப்ரவசநம் நடைபெறாம லிருப்பதற்கு இதுவும் ஒரு முக்ய காரணம். இதற்கெல்லாம் தக்க பரிஹாரம் தேடவேண்டியதற்காக முதலில் இவ்வகையான வைபரீத்யத்துக்கு மூலகாரண மென்னவென்று தெரிந்துகொள்ள வேண்டியது அவஶ்யமா யிருக்கிறது. அதைத் தெரிந்துகொள்ளாமல் யத்நிப்பது நிதாநம் அறியாமல் சிகித்ஸை செய்வது போலாகும்.

வித்யை இருவகைப்பட்டது; அவை ஸாமாந்ய வித்யை, ஶாஸ்த்ரவித்யை என்பன. பிற்கூறியது அத்யாத்ம வித்யை யென்றும் வ்யவஹரிக்கப்படும். ஸாமாந்ய வித்யை, புத்தி மநோ வாக் காயங்களுக்குச் சுத்தியையும், பாடவத்தையும் உண்டுபண்ணி, ஒவ்வொருவரையும் ஸ்வதர்மாநுஷ்டாநத்திற்கு ஸமர்த்தராக்கி, அத்யாத்ம வித்யாக்ரஹணத்திற்கு அதிகாரத்தை உண்டாக்குகிறது. ஸாமாந்ய வித்யாஸம்ஸ்காரம் பூர்ணமாகப் பெற்ற பிறகு விஶேஷ வித்யையில் அதிகரிப்பவர்களுக்கு, உழவுசெய்து தீனிபோட்டுப் பண்படுத்தப்பட்ட நிலத்தில் விதைப்பதுபோல், பலப்ராப்தி கைகண்டதாகிறது. அப்படிக்கு ஸாமாந்ய வித்யா ஸம்ஸ்காரமின்றியே விஶேஷ வித்யாப்யாஸம் செய்வது கரம்பில் விதைப்பதற்கு ஒப்பாகும். ஆகையால் அத்யாத்ம வித்யையில் அதிகரிப்பதற்கு ஸாமாந்ய வித்யாஸம்ஸ்காரம் நியதமான பூர்வாங்கமென்பது நிஶ்சயம். முற்காலத்தில் ஸாமாந்ய வித்யா ஸம்ஸ்காரம் ஒவ்வொருவருக்கும் நியதமாய் அமைந்திருந்தபடியால், விஶேஷ வித்யையில் ஜிஜ்ஞாஸை ஸ்வதஸ்ஸித்தமாய் ஏற்பட்டு அவரவர் ஆசார்யர்களைத் தேடி ஆஶ்ரயித்து, அத்யாத்ம வித்யாக்ரஹணம் பண்ணுவது ஸாதாரணமாயிருந்தது. இப்போது ஸாமாந்ய வித்யாப்ரசாரம் மிகவும் ஸங்கோச மடைந்துவிட்டபடியால், விஶேஷ வித்யையில் ஸ்வரஸ ப்ரவ்ருத்திக்கு ஹேதுவில்லை. ஆதலால், ஸாமாந்ய வித்யா ப்ரவசநத்தைப் பரிஷ்கரித்து, அதனால் வித்யார்த்திகளை ஆஹித ஸம்ஸ்காரர்களாக வேண்டியது நமது ப்ரதம கர்த்தவ்யமாகிறது. பற்பல விப்லவங்களால் இந்தக் காலத்தில் ஆர்யவித்யா

ஸம்ப்ரதாயத்துக்கு விச்சித்தி ஏற்பட்டிருக்கிறது. பூர்வம் அநுஷ்டாநத்திலிருந்த பத்ததி இப்போது ப்ரசாரத்தில் இல்லாதபடியாலும், இப்போது நடைபெறும் க்ரமம் ஸமக்ரமாய் இல்லாததாலும் தான், நமது ஆர்ய வித்யையின் ஸம்ஸ்காரம் அதையே பரிசீலநம் செய்பவர்களில் அநேகர்க்குக்கூட முன்போல் புஷ்கலமாய் அமைந்திராமையைப் பார்க்கிறோம். இதற்கு முக்ய காரணங்களில் ஒன்று என்னவென்றால், முன்னிருந்தவர்கள் ஆர்ய பாஷா வ்யுத்பத்தி ஸம்பாதிப்பதற்கு எடுத்துக்கொண்ட பரிஶ்ரமம் இக்காலத்தில் எடுத்துக்கொள்ளப்படாமை என்று தோன்றுகிறது. வித்யை வாங்மயமானபடியால், வாக்ஸம்ஸ்காரமில்லாமல் வித்யா ஸம்ஸ்காரம் பலிக்காதென்பது நிஶ்சிதமான விஷயம். ஒரு க்ரந்தகர்த்தாவின் பாவம், நமக்குப் பிடிபடவேண்டுமானால், அவருடைய க்ரந்தத்தை அஸக்ருத் பரிசீலநம் பண்ணுவதால், அவருடைய ஆஶயம் யதாவத்தாகத் தெரிகிறதுபோல, நம்முடைய வித்யை ஆசாரம் முதலிய யாவற்றையும் ப்ரவ்ருத்திப்பித்த ஆர்யோத்தமர்களாகிய மஹர்ஷிகளுடைய பாவம் நமக்கு யதாவத்தாய்ப் புலப்படவேண்டுமானால், அவர்களுடைய க்ரந்தங்களை நன்றாய்ப் பரிசீலநம் பண்ணவேண்டியது அவஶ்யம். மேலும், ப்ராசீந க்ரந்த கர்த்தாக்களாகிய மஹர்ஷிகள் காலங்களில், ஆர்யபாஷை ஸர்வ வ்யவஹாரங்களிலும் ஸாதாரணமாய் வழங்கிவந்தபடியால், அப்பாஷையின் ஜீவகலை அவர்கள் க்ரந்தங்களில் அமைந்திருக்கிறது. ஆகையால், மஹாநதீ ப்ரவாஹம்போல விபுலமாகவும் ஸ்வரஸவாஹியாயுமிருக்கும் அக்ரந்தங்களில் அவகாஹநம் பண்ணினால் மாத்ரம் ஸரியாக ஆர்யபாஷா வ்யுத்பத்தி நம் வித்யார்த்திகளுக்கு ஏற்படுமே தவிர, கூப பல்வலாதிகள் போன்ற க்லிஷ்டஶைலியில் ஏற்பட்ட அர்வாசீந க்ரந்தங்களையே பரிசயம் பண்ணுவதால் பாஷையின் தத்வம் பிடிபட மார்க்கமில்லை. பாஷையின் நிஜமான ஸ்வரூபம் ஏற்படாதவரையில் பாவஜ்ஞாநம் பூர்ணமாக அமையமாட்டாது. இந்த லோபமே சில க்ரந்தங்கட்கு நாநாப்ரகாரமான அபார்த்தம் கல்பிப்பதற்குக் காரணமாகிறது. இவ்வித குறைவைச் சீர்படுத்த வேண்டியதற்காக மஹர்ஷி ப்ரணீதமான ஸ்ரீமத்ராமாயண மஹாபாரதாதி க்ரந்தங்களையும் மந்வாதி ஸ்ம்ருதிகளையும் வித்யார்த்திகளுக்கு படநபாடந க்ரமத்தில் கொண்டுவரவேண்டியது அவஶ்யம். மிகுந்த ஸமர்த்தனான வேலைக்காரன்



செய்த ரத்நமாலையில் ரத்நங்களே ப்ரதாநமாகவும் அவைகளைச் சேர்த்து இழைக்க உபயோகப்படுத்தப்பட்ட ஸ்வர்ணம் அதிஸ்வல்பமாகவும் கண்ணுக்கு வேறுபட்டுத்தெரியாமல் ரத்நங்களின் இடையில் கலந்து, அவைகளோடு ஒன்றாகவே காணப்படுவது போல வால்மீக்யாதி மஹர்ஷிகளுடைய க்ரந்தங்களில் பாவங்கள் ஸமுந்மிஷிதமாயும், அவைகளைத் தெரிவிக்கும் ஶப்தங்கள் பாவங்களோடிணங்கி ஒன்றாய்ப் பொருந்தியிருப்பதையும், அநுபவிப்பவர்களின் புத்தியும் மநஸ்ஸும் அவ்வாமம்ருதத்தினால் ப்லாவநம் பண்ணப்பட்டுத் தந்மயமாய் விடுகிறது. இதுதான் க்ரந்தாத்யயநத்தால் பாலர்களுக்கு ஏற்படக்கூடிய உத்தமமான ஸம்ஸ்காரம். இதை உண்டாக்கவேண்டிய உத்தேஶத்துடன் வித்யாப்ரவசந க்ரமத்தைப் பரிஷ்கரிக்கவேண்டியது அவஶ்யம். மேலும், ஆர்ஷக்ரந்தங்களில் மஹாபுருஷ சரித்ரமும், தத்வநிரூபணமும், தர்மோபதேஶமும், லோகவ்ருத்தாந்தமும் இன்னும் அவஶ்யஜ்ஞாதவ்யமான அநேகாம்ஶங்களும் அடங்கியிருப்பதால், அத்யேதாக்களுக்கு அர்த்தஜ்ஞாநமும் ஸதஸத்விவேகமும், குணபௌஷ்கல்யமும் ஸ்வரஸமாய் ஸித்திக்கின்றன. இவ்விதமான ஸத்ஸம்ஸ்காரம் இளம்வயதில் ஏற்படுமாகில், அது, காலக்ரமேண ரூடமூலமாய் எப்போதும் அநுவர்த்திக்கும்.

புத்தி, மநஸ் இவைகளின் ஸம்ஸ்காரம் பாஷாஜ்ஞாநத்தைப் பொறுத்ததென்பது அநுபவஸித்தமான விஷயம். பாஷை எதுவாயிருந்தபோதிலும், நமக்கு அர்த்தம் ப்ரதாநமேதவிர வேறில்லை. ஆகையால் பிள்ளைகட்கு எந்த பாஷை கற்பித்தாலும் அதனால் ஒன்றும் பாதகமில்லையென்று நினைப்பது ஸரியன்று. ஒவ்வொரு பாஷைக்கும் ப்ரதிநியதமான பாவங்கள், அந்தந்த பாஷையை ஸ்வதஸ்ஸித்தமாய் உபயோகித்துவரும் ஜநங்களின் ஸ்வபாவம் ஆசாரம் முதலியவைகட்கு அநுகுணமாக அமைந்திருக்கின்றன. ஆகையால், அந்தந்த பாஷையைப் பால்ய தஶையில் கற்றுக்கொள்வதால் அந்தந்த பாவமும் ஆசாரமும் ஸம்ஸ்காரமும் அதனுடன் நாம் அறியாமலே ஏற்பட்டுவிடுகிறது. பிறகு அந்த ஸம்ஸ்காரம் நம்மை விட்டு நீங்குவதில்லை. பால்யம் முதல் இங்லீஷ் பாஷையைப் பரிசயம் செய்தவர்களுக்கு அந்த பாஷா ஸம்ஸ்காரமே ப்ரபலமாக ஏற்பட்டு வருவதால் அவர்கட்கு ஸ்வபாஷையில் பேசுவதாயிருந்தாலும் எழுதுவதா

யிருந்தாலும் இங்க்லிஷ் ஸம்ஸ்காரமுள்ள பாவங்களே புத்தியில் படிகின்றன வென்பதும், அந்த பாவங்களை ஸ்ரமப்பட்டு ஸ்வபாஷையில் அவர்கள் பரிணமம் செய்யவேண்டி யிருக்கின்றதென்பதும், அவர்கட்கே புலப்படக்கூடியது. ஸப்தார்த்த ஸம்பந்தம் நித்யமானபடியால் பாஷாஜ்ஞானத்தை நாம் அநாதரம் பண்ணுவது கொஞ்சமேனும் யுக்தமன்று. ஆர்யபாஷையில் பால்யம் முதல் பரிசய மிருந்தால்தான் ஆர்ய ஸம்ஸ்காரம் நன்றாய் அமையுமென்பதும், அப்படிக்கல்லாமல் ஆர்யேதர பாஷையை முக்யமாய் அவலம்பித்தால் ஆர்யேதர ஸம்ஸ்காரம்தான் ஏற்படு மென்பதும் கவனிக்கவேண்டிய விஷயம். இவ்விதம் பாஷா வ்யுத்பத்திக்குள்ள ப்ராபல்யத்தை உத்தேஸித்தே இங்க்லிஷ் பாடசாலைகளில் அந்த பாஷாஜ்ஞானத்தை ப்ரதானமாய்க் கவனிக்கிறார்கள். ஆர்ய ஸம்ஸ்காரம் முக்யமென்று நாம் நிஸ்சயிக்கும் பக்ஷத்தில் ஆர்ய பாஷாஜ்ஞானம் அவஸ்யமென்பதற்கு ஆக்ஷேபமேயில்லை. ஆகையால், ஸாமாந்ய வித்யாப்ரவசந க்ரமத்தில் ஆர்ய பாஷாஜ்ஞ நம் ஸம்ருத்தமாய் அமைவதற்குத் தக்க பரிஷ்காரம் செய்வதை முதல் அங்கமாக எண்ணவேண்டியது.

வித்யையால் புத்தி மநோவாக்காயங்களுக்கு ஸம்ஸ்காரம் ஏற்பட வேண்டியபடியால், பாஷாஜ்ஞானத்துடன் க்ரியா பரிஷ்க்ரியையும் அதன் முக்யாம்ஸங்களில் ஒன்றாகிறது. யதாஸாஸ்த்ரம் விஹித தர்மாநுஷ்டானம் தான் ஒருவன் செய்யவேண்டிய க்ரியை அல்லது கர்மம். ஆகையால், வித்யார்த்திகளுக்கு வித்யாப்யாஸ காலத்திலேயே ஸதநுஷ்டானத்தைக் கற்பிப்பதும், ஸஹிம்ஸா ஸ்த்யாஸ்தேய ஸௌஹார்த்ய நிக்ரஹரூபமான ஸாமாந்ய தர்மங்களை வற்புறுத்துவதும், அதையெல்லாம் அவர்கள் எப்போதும் மாறில்லாமல் அநுஷ்டிக்கும்படி கவனிப்பதும், அவஸ்யமான விஷயங்கள். ([illegible]) என்பது எல்லாக் காலங்களிலும் உள்ளதேயாயினும், முக்யமாய் யுக்திவாதம் ப்ரபலமாயிருக்கும் இக்காலத்தில்; நம் பாலர்களுக்கு நம்முடைய ப்ராசீநாநுஷ்டானத்தின் ஸ்வரூபத்தையும் ப்ரயோஜநத்தையும் தெளிவாக விவரிப்பது ரொம்பவும் ஸார்த்தமானது ஏனென்றால், நம்முடைய ஆசாரங்களும் தர்மங்களும் ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையாகவோ நிஸ்ரேயஸ ஸாதகமாகின்றன வென்



பதைத் தெரிந்துகொண்டால் அவைகளை ஆவலுடன் பாலர்கள் அநுஷ்டிப்பார்கள். யாராவது அவ்வநுஷ்டானத்தின் தத்வத்தைப் பற்றி ஜிஜ்ஞாஸையுடன் கேட்டாலும், அல்லது அஜ்ஞானத்தால் நிந்தித்தாலும், அவர்களுக்குத் தக்க ஸமாதானம் சொல்லி, அவர்களைத் தம் வழிக்குக் கொண்டுவருவார்கள். அப்படிக்கல்லாமல் கேட்கின்றவர்களுக்குச் சொன்ன விஷயம் தெரியாவிடில், அவர்களைச் செவ்வைப்படுத்த முடியாமற்போவதுடன், தங்களுக்கும் ஸ்ரத்தைக் குறைவுநேரிடக் காரணமாகிறது. ஆகையால் இதுவும் கவனிக்கத்தக்க விஷயம்.

இவ்விதமாக, ஜ்ஞானம் அநுஷ்டானம் இவைகள் பரிஷ்கரிக்கப்பட்டால், பிறகு அத்யாத்ம வித்யை காந்தத்தினிடம் வைக்கப்பட்ட ஊசியைபோல் அதிஸீக்ரமாய் க்ரஹிக்கப்படுகிறது. ஆகையால், மேற்கூறிய க்ரமமாக ஸத்வித்யா ப்ரவசநம் ப்ராசுர்யேண நடைபெறும்படி முயற்சிக்க வேண்டியது அத்யந்தம் அவஸ்யமான கடமை. ஆனால், இவ்விதமாக வித்யாப்ரவசநம் பண்ணுவதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள் இக்காலத்தி லில்லாமையாலும், இப்போது அர்த்தமே பரமபுருஷார்த்தமாய் விளங்குகிற படியால் அர்த்த ஸம்பாதநத்துக்கு வேண்டிய மார்க்கங்களையே ஜநங்கள் பகுவாய் அவலம்பித்திருக்கிறபடியாலும்; நம் ஆர்யவித்யையில் எவ்வளவுதான் அபிமானம் இருந்தபோதிலும், அர்த்தஜ்ஞானத்துக்கு அது ஸாதகமாயில்லாதவரையில் அதில் ஜநங்கள் ப்ரவ்ருத்திக்கமாட்டார்கள் என்று அநேகர் ஸங்கிக்கிறார்கள். அப்படி ஸங்கிப்பது ஸாதாரணமா யிருப்பதாலும், இப்போது ஆர்ய வித்யை மாலிந்யத்தை யடைந்திருப்பதற்கு இதுவே முக்ய காரணமாகையாலும்; இதைச் சற்றுப் பராமர்சித்து ஜநங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ப்ரமத்தைத் தீர்க்கவேண்டியது அவஸ்யமாகிறது. ஆர்யவித்யையால் அர்த்தார்ஜநத்துக்கு உபகாரமில்லாமலிருப்பதும் தவிர, ப்ரதிபந்தமும் உண்டாகிறதென்று ஒரு அபவாதம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் சில ஜநங்கள் ஆர்யவித்யையினிடமிருந்து பயந்து ஒதுங்குகிறார்கள் இது கேவலம் ப்ராந்தியே தவிர வேறில்லை. ராஜஸேவையினால் ஏற்படும் வ்ருத்திகள் ஸம்பந்தப்பட்டவரையில் ராஜபாஷா பரிசயமும், அது விஷயமாக ஏற்பட்டிருக்கும் பரீக்ஷா நியமங்களும் அவஸ்யமே தவிர, இதர வ்ருத்திகளுக்கு அவை முக்யமே யல்லவென்பது எல்லாருக்கும் தெரிந்த

விஷயம். ராஜபாஷா கந்தமேயில்லாத அநேகம் பெயர்கள் க்ருஷி வாணிஜ்யாதி வ்ருத்திகளைக் கைக்கொண்டு நிரவதிகமான தநஸஞ்சயம் செய்து வருவதே இதற்குத் தகுந்த திருஷ்டாந்தம்.

மேலும், ஆர்யவித்யாப்யாஸத்தினால் எந்த வ்ருத்திக்கும் ஹானி கிடையாது. ஒவ்வொரு வர்ணத்துக்கும் ப்ரதிநியதமான சில வ்ருத்திகள் ஏற்பட்டிருந்தபோதிலும், அவ்விதம் ஶாஸ்த்ர ஸித்தமான வ்ருத்தி உத்தமவர்ணத்தினர்க்கு அகப்படாத ஆபத்காலங்களில் அவரவர்ணங்களின் வ்ருத்தியை ஆஶ்ரயிக்கலாமென்று ஶாஸ்த்ரமே இடங்கொடுக்கிறது. 'ஶாகாவித்ய ஸஹஸ்ரேஷு வக்ஷ்யதாம்ஶாஸ்த்ரம்' என்கிற நம்பிக்கையுள்ள நாம், நம் அஶக்தியால் நேரும் துக்கங்களைப்பற்றி ஸர்வஹிதமான ஶாஸ்த்ரத்தின்பேரிலும் ஸத்வித்யையின்பேரிலும் பழி சுமத்துவது கொஞ்சமேனும் யுக்தமல்ல. இவற்றையெல்லாம் யோசித்து வித்யார்த்திகளில் வ்ருத்தியொன்று தேடிக்கொள்ளவேண்டிய அவஶ்யமிருப்பவர்களுக்கு வித்யா பரிஸமாப்தியானவுடன், ஜீவநோபாயம் தகுந்தபடி தத்ஸாதந பூதமான அம்சங்களில் பயிற்சியடைவிப்பது ஒரு முக்யமான கார்யம். அப்படி ஒரு க்ரமம் நிஷ்பத்திசெய்தால் தான் ஆர்யவித்யாப்யாஸத்தினால் வ்ருத்தி ஹானி ஸம்பவிக்கிறதென்கிற பயம் ஜநங்கட்கு நீங்கி, எல்லோரும் அதில் அந்வயிக்க விரும்புவார்கள்.

தவிரவும், ஜீவநார்த்தம் ஒரு வ்ருத்தி தேடியாகவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லாத உபயநர்கள், தம் சிறுவர்களுக்கு ஆர்யவித்யா விநயநம் செய்விக்கவேண்டியது அத்யந்தாவஶ்யமென்று உணர்ந்து, அதைத் தவறாது கைக்கொள்ளவேண்டும். 'யத்யதாசரதி ஶ்ரேஷ்ட ஸ்தத்தேவேதரோ ஜநः' என்கிறபடி, தநவான்களும், லௌகிக மேன்மை உடையவர்களும் செய்வதை இதர ஜநங்கள் ஸ்வரஸமாய் அநுவர்த்திக்கிறார்கள். ஆனதுபற்றி ஜந ஸமுதாயத்தை ஒரு ஸந்மார்க்கத்தில் ப்ரவ்ருத்திப்பிக்கவேண்டுமானால், தநவான்களும் ப்ரபுக்களும் அதை அநுஷ்டித்துக் காட்டுவது தவிர, வேறு ஸுலபதரமான உபாயமொன்றுமில்லை. இப்போது நம் ஜநங்களுக்கு ஆர்யவித்யையில் ப்ரவ்ருத்திக்குறைவு ஏற்பட்டிருப்பதற்கு ப்ரதான காரணங்களில் ஒன்று,



நம்மில் ப்ரமுகர்கள் அதை அவஜ்ஞை செய்வதுதான். இனி அப்படிச் செய்யாமல், அவ்வித்யையின் குணப்ரகர்ஷத்தை நன்கு உணர்ந்து, நம் ப்ரமுகர்கள் அதில் தம் பாலர்களை விநயநம் பண்ணி வழிகாட்டத் துணிவார்களேயாகில், அவ்வுத்தம வித்யை நாடெங்கும் பரவி, நம் பாரதவர்ஷத்துக்கு ஸர்வமங்கள ஹேதுவாகுமென்பதற்கு ஐயமில்லை. இதுவரையில் ஏதோ ராஜாதிகாரம் தநம் முதலிய மஹாலாபங்கள் கிடைக்குமென்கிற சாபலத்தினால் ஸ்வவித்யையை அநாதரம் பண்ணி, இதர வித்யையில் இறங்கு ஹேது இருந்தபோதிலும், மாதாபித்ருக்களிடத்தில் பண்ணிய ப்ரபலாபசாரம்போன்ற அவ்வநாதரமே ஸகியோ பகவந்நிக்ரஹத்துக்குக் காரணமானதுபோல் நமக்கு இனி முன்போல் லாபசாபலமிருக்க இடமில்லாமல் செய்தருளுவதை நாம் ப்ரத்யக்ஷீகரிக்கிறபடியால், இதுபற்றியாவது ஆத்மோஜ்ஜீவநமும் ஸர்வமங்கள ப்ரதமுமான ஸ்வவித்யையை த்ருடமாய் அவலம்பிக்க நாம் யத்நிப்போமென்று நம்ப இடமுண்டாகிறது.

ஆனால், நம் வித்யையைக் கற்பதில் லோக வ்யவஹாரமொன்றும் தெரியாமற்போய் விடுகிறதென்றும், லௌகிக வ்யவஹாரத்துக்கு அடியோடு யோக்யதையற்றுவிடுகிறதென்றும் ஒரு அபவாதம் ஏற்பட்டிருக்கிறது. அதுவும் ப்ரம ப்ரயுக்தமே தவிர வேறில்லை. நம் முன்னோர்கள் சரித்ரத்தையும் அவைகள் எழுதியிருக்கும் க்ரந்தங்களிலுள்ள விஷயங்களையும் கவனித்தால், அவர்கள் எல்லா ப்ரகாரமான லௌகிக வ்யவஹாரத்திலும் நிரதிஶயமான நைபுண்யத்தை அடைந்திருந்தார்கள் என்று தெளிவாகிறது. அப்படியிருக்க, இப்போது நம் வித்யையைக் கற்பவர்களுக்கு லோகவ்யவஹாரம் தெரியவில்லையென்றால், அது அவ்வித்யையின் தோஷமாகமாட்டாது. இப்போது அதைக் கற்பிக்கும் பத்ததி பரிஷ்காராபேக்ஷயாய் இருக்கிறதென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. முற்கூறியபடி, ப்ராசீந வித்யாஸம்ப்ரதாயத்துக்கு லோபம் வந்துவிட்டபின், ஆங்காங்கு சில வித்யாபிமானிகள் தம் தமக்கு எட்டியவரையில் அவ்வித்யையின் சிற்சில பாகங்களை ப்ரவசநம்பண்ணி வந்திருப்பதுதவிர, ஸமக்ரமாய் அது நடைபெற்று வராததுதான் அவ்வித ந்யூநதைக்குக் காரணம். அதைச் சீர்படுத்துவதற்காகவே அவ்வித்யை ஸர்வ வ்யவஹாரங்களுக்கும் பரமாதாரமாயிருந்த காலங்களில் ஏற்பட்ட

மஹார்ஷிப்ரணீதங்களான இதிஹாஸாதி மஹா க்ரந்தங்களை நம் வித்யார்த்திகளுக்கு நிரவஸேஷமாய்க் கற்பித்து, அவர்கள் அவைகளை அநவரத பரிஸீலநம் பண்ணும்படி செய்யவேண்டியது அவஸ்யமென்று ஏற்கெனவே சொல்லப்பட்டது. இக்காலத்தில் உண்டாயிருக்கும் லௌகிகமான மாறுதல்களுக்குத் தக்கபடி, ஆங்காங்கு சில பரிஷ்காரங்களும் செய்யவேண்டியது அவஸ்யமே. அது விஷயமாகவும் புத்திமான்கள் யோசித்து, ஒரு ஸாம்ப்ரதாயிகமான நிஷ்பத்தி ஏற்படுத்தவேண்டியது முக்யமான கார்யம். அவரவர்கள் தாத்காலிகமாய் ஸ்வகபோலகல்பிதமான மாறுதல்கள் செய்வதும், அதை ஆத்மீயமென்கிற அபிமாநத்துடன் ப்ரசாரமடைவிப்பதும் யுக்தமன்று. ப்ரமாண அவிருத்தமாகக் கூடிய வரையில் முன்வழிகளை அநுஸரித்து, விவேகிகளுடைய அநுமதியைப் பெற்றுச் செய்வதே உத்தமம் இவ்வித பரிஷ்காரங்கள் ஏற்பட்டுவிட்டால், நம் வித்யை ஸர்வ ப்ரகாரமாகவும் உபஜீவ்யமாய் ஐஹிக ஸ்ரேயஸ்ஸையும் பாரலௌகிக ஸ்ரேயஸ்ஸையும் நிஸ்ஸங்கமாய் ஸாதித்துக்கொடுப்பதற்கு அத்விதீயமான உபாயமாகுமென்பதற்கு எவ்வித ஆக்ஷேபமும் இல்லை தாத்ருஸமான மஹாபலத்தை உத்தேசித்தே யதாத்ருஸமான மஹா ஸதஸ்ஸில் அந்வயித்திருக்கும் மஹாங்கள் உத்யோகிக்க அர்ஹர்களே தவிர. இதர ப்ரகாரமான அல்பாஸ்திர பலங்களைக் குறித்து ப்ரவ்ருத்திப்பதில் ப்ரயோஜநமில்லை. நமது ஆர்யத்வம் நிலைபெற வேண்டுமானால் ஆர்யஸந்ததியை நாம் அவிச்சிந்நமாய் வளர்ச்செய்யவேண்டும். அதற்கு ஆர்யவித்யையில் எல்லாரும் ஸ்வரஸமாய் அதிகரித்து, அவ்வித்யை ஓங்கவேண்டும். அதற்கு ஸாக்ஷாத்தாகவாவது பரம்பரையாகவாவது உபகாரகமான கார்யங்கள் ஸார்த்தங்களே தவிர, மற்றவையல்ல வென்பதை நம் ஜநங்கள் எல்லாரும் நன்றாய் அறிந்து, அவ்வறிவுக்குத் தக்கபடி அநுஷ்டிக்க வேண்டியது.

இக்காலத்தில் நம்மில் ஒவ்வொருவரும் முற்காலத்தில்போல் தம் வாழ்நாளில் பெரும்பான்மையை வித்யைக்காகவே செலவழிப்பது ஸாத்யமில்லாமற்போனபோதிலும், இளமைப்பருவத்திலாவது, அதாவது குறைந்தபக்ஷம் 15-வயது வரையிலாவது நம் சிறுவர் ஒவ்வொருவரும் ஆர்யவித்யாப்யாஸம் செய்யவேண்டி



யது அவஸ்யம் என்கிற நியமம் ஏற்படுத்தவேண்டியது அதிக முக்யமான அம்ஸம். அந்தக் காலத்தில் ஆர்யவித்யையை நம் பாலர்களுக்கு ஸரியான ரீதியாய்த் தகுந்தவர்கள் போதிக்கும் பக்ஷத்தில், ஆர்ய ஸம்ஸ்காரம் அவர்கட்குப் பூர்ணமாய் ஏற்படுவதுடன், ஆர்ய தர்மத்தின் தத்வமும், ஆர்யவித்யையின் உயர்வும், ஆர்யகுலத்தின் மேன்மையும் அவர்களுக்கு நன்றாய்ப் பிடிபட்டு, ஆர்யத்வம் அவர்களிடம் ரூடமூலமாய்விடும். பிறகு கதாசித் ஸந்தர்ப்ப ஸௌகர்யமில்லாமல் வ்ருத்தி ப்ரயுக்தமாயாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது ஏதாவது ந்யூநாதிரேகங்கள் ஸம்பவித்தபோதிலும், அவர்களுடைய பூர்வ ப்ரதிஷ்டிதமான ஆர்ய ஸம்ஸ்காரம் எப்போதும் லோபமடையாமல், ப்ரதிபந்தக ஸாமக்ரீ நிவ்ருத்தி சேர்ந்தவுடன் புநருஜ்ஜீவிதமாய் அவர்களைக் காக்கும்.

இக்காலத்திய ஸரணியை அநுஸரித்துப் பரீக்ஷாந்தர ப்ராவீண்யத்தை ஸம்பாதித்து, ராஜாதிகாராதி லௌகிக ப்ரதிஷ்டையை அடையவேண்டு மென்று, ஆஸ்தை யுள்ளவர்களுக்கும் நம் குலவித்யையையே பூர்ணமாகக் கைக்கொண்டு அதில் நிஷ்ணாதர்களாக வேண்டு மென்கிற அபிஸந்தியுள்ள வர்களுக்கும் அல்லது அர்த்த ஸம்பாதநத்துக்குப் போதுமான வயது வந்தவுடன் அர்த்தார்ஜநத்துக்கு ப்ரவ்ருத்திக்க வேண்டு மென்கிற நிஸ்சயமுள்ளவர்களுக்கும் மேற்கூறியபடி இளமைப்பருவத்தில் ஆர்யவித்யா ஸம்ஸ்காரம் ஏற்படுவது எல்லாவிதத்திலும் ரொம்ப நன்மையை விளைவிக்குமே தவிர வேறல்ல. ஸத்ஸம்ஸ்காரத்தினால் புத்தி மநோவாக்காயங்கள் விஸுத்தியையும் பாடவத்தையும் அடைவது எல்லா ஸந்தர்ப்பங்களிலும் அநுகூலமே தவிர ப்ரதிகூலமாகமாட்டாது. இவை யெல்லாவற்றையும் தீர்க்கமாய்ப் பராமர்ஸித்து, இக்கால ஸ்திதிக்கும் நம்முடைய நிலையான ஸ்ரேயஸ்ஸுக்கும் லௌகிக ஸௌகர்யங்களுக்கும் அநுகுணமாக ஸத்வித்யா ஸம்ப்ரதாயத்தை ப்ரவ்ருத்திப்பித்து, எப்போதும் அது வ்ருத்தியடைந்துகொண்டே யிருக்கவேண்டியு

வீடுவார்கள் என்னும் நம்பிக்கை உறுதியா யிருப்பதால் இவ்வாறு துணிந்தேன். ஆகையால், மஹான்கள் அடியேனுடைய உபந்யாஸத்தில் அதிக விஷயம் எதிர்பார்க்கமாட்டார்க ளென்று நம்புகிறேன்.

ஸ்ரீராமாநுஜ தர்சநத்தைச் சேர்ந்த ஸ்ரீவைஷ்ணவனுக்கு உபய வேதாந்தங்களிலும், அல்லது நிர்ப்பந்தமாய்த் தமிழ் வேதாந்தத்திலாவது பரிசயமிருப்பது இன்றியமையாத விஷயம். "உ.ப. வே." என்று போடாமலிருந்தால் எல்லாருக்கும் கோபம் பிறப்பது ஸஹஜமா யிருந்தாலும், இரண்டிலும் ஒரு மாதிரியாவது பரிஶ்ரம முள்ளவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். வாஸ்தவத்தில் ஒரு ஸம்ஸாரி சேதநனுக்கு, மனஸில் சாந்தியும் தேறுதலும் ஆநந்தமும் உண்டாக வேண்டுமானால், அவனுக்கு நமது ஆழ்வார்களின் திவ்ய ஸூக்தி பரிசீலநத்தைவிட ஸுலபமான வேறுவழி இருக்கும் என்று அடியேனுக்குத் தோன்றவில்லை.

பகவத் கிருபையையும் உயர்ந்த ஜ்ஞாநத்தையும் பெற்ற நமது ஆழ்வார்கள் பதின்மரும், பகவானுடைய கல்யாண குணங்களில் ஈடுபட்டு அவனை த்யாநித்து அநுபவிக்க, அவர்களது உள்ளத்தில் ஊறின ஆநந்தாம்ருதமே உள்ளடங்க முடியாமல் உலகத்தாரும் உஜ்ஜீவிக்கும்படி பெருகி, பாசுரங்களாக வெளியில் ஓடத் தொடங்கிற்று. ஆகையாலேதான் இந்தப் பாசுரங்களுக்குத் தனிமையில ஓர் இனிமையும் கேட்போரைக் கவரும் வலிமையும் அமைந்து கிடக்கின்றன.

இவர்கள், பகவானுடைய அநேக அவதாரங்களைப் பற்றியும் குணசேஷ்டிதங்களைக் குறித்தும் மதுரமாகப் பாடியிருக்கிறார்களென்றாலும், அர்ச்சாவதாரத்தின் ஸௌலப்யாதிசயத்தையே நினைந்து நினைந்து உள்ளமுருகினவர்களாகையால், இவர்களுடைய பாசுரங்கள் மிகுதியும் அர்ச்சாவதாரத்தைப் பற்றினவாகவே காணப்படுகின்றன; விபவாவதாரங்களிலும், இவர்களுக்கு ராமாவதாரத்திலும் க்ருஷ்ணாவதாரத்திலுமே விசேஷமான பற்றுதல். இதில்கூட ராமாவதாரத்தைக் காட்டிலும், க்ருஷ்ணாவதாரத்தில் நமது ஆழ்வார்களுக்குப் பரிவு அதிகம். இதன் காரணத்தைப் பூர்வர்கள் வெகு சமத்காரமாய்க் காட்டியிருக்கிறார்கள்.



அதாவது:— "ஆழ்வார்கள் எல்லாரும் க்ருஷ்ணாவதாரம் என்றவாறே போரமண்டியிருப்பார்கள். அதுக்கடி அல்லாத அவதாரங்கள் போலன்றிக்கே ஸமகாலமாகையாலே, ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப் பெற்றிலோம் பாவியேன். பல்லிலே பட்டுத் தெறிப்பதே என்னும் இழவாலும், பரிவர் தேட்டமான அவதாரமாகையாலே அத்தை அநுஸந்திக்கையால் வந்த வயிற்றெரிச்சலாலும். ராமாவதாரத்திலே தகப்பனார் சம்பராந்தகனாய் ஏகவீரனா யிருப்பானொருவன். பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகள். குடிதானே வன்னியமறுத்திருப்பதொரு குடி. இவையெல்லாம் மிகையாம்படி குணத்தாலே நாட்டையெல்லாம் ஒருமார் வெழுத்தாக்கிக்கொண்டு இருப்பார்கள். ஆகையாலே எதிரிகள் என்கிற சப்தமில்லை. இங்கு அங்ஙனன்றிக்கே, தகப்பன் ஒரு ஸாதுவ்ருத்தன். பிறந்ததும் கம்ஸன் சிறைக்கூடத்திலே. வளர்ந்ததும் அவன் தகத்தருகே. ஸ்ரீ ப்ருந்தாவநத்திலே எழும் பூண்டுகளகப்பட அஸுரமாயிருக்கும். ரக்ஷகரானவர்கள் ஓரடிதாழ நிற்கில் பாம்பின்வாயிலே விழும்படியாய்த்து அவன்படி யிருப்பது. இப்படியானால் வயிறெரியாதார்களோ இவர்கள்."

நமது கஜேந்த்ராழ்வானைக் காப்பாற்றினவன், நான்காம் மந்வந்தரத்தில் ஹரிமேதஸ் என்பவருக்கு ஹரிணி என்னும் பத்நியிடத்தில் ஹரி என்ற பெயருடன் அவதரித்த பகவானே என்று ஸ்ரீபாகவதத்தில் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ கஜேந்த்ரன் விஷயத்தில் ஆழ்வார்களின் ஈடுபாட்டை எழுதுவதற்குமுன் ரிஷியின் அநுபவத்தைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுகிறேன்.

ஸ்ரீ கஜேந்த்ர மோக்ஷோபாக்யாநம் ஸ்ரீ பாகவதத்தில் எட்டாவது ஸ்கந்தத்தில் இரண்டாவது முதல் நான்காவது அத்யாயம் வரையில் ஆக மூன்று அத்யாயங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அதில் காணும் கதையின் சுருக்கம் அடியில் வருமாறு:—

"பாற்கடலின் மத்தியில் த்ரிகூடம் என்றதோர் மலை உண்டு. இது பரப்பிலும் உயர்விலும் பதினாயிரம் யோஜனை தூரமுள்ளது. இதற்கு முக்யமாய் மூன்று சிகரங்கள் இருக்கின்றன. இவைகளுள் ஒன்று வெள்ளியாலும், மற்றொன்று இரும்பாலும், வேறொ

ன்று தங்கத்தாலும் ஆயிருக்கின்றன. இரத்தினங்களும் காவிக்கற்களும் நிறைந்த வேறு பல கொடிமுடிகளு மிருக்கின்றன. இந்தக் கொடிமுடிகளின் ஒளியால் ஆகாசமும் திசைகளும் ஸமுத்ரமும் விளங்குவனவா யிருந்தன. இந்த மலையினது அடிவாரத்தில் எப்பொழுதும் பாற்கடலின் அலைகள் மோதிக்கொண்டிருக்கும்; இதினின்று பற்பல அருவிகளும் 'ஜோ' என்ற த்வநியுடன் பெருகிக்கொண்டிருக்கும். மேலும், இதனது அடிவாரம் முழுவதும் மரகதக்கற்கள் நிறைந்து பச்சைப்பசேல் என்றிருந்தது. இதனுடைய குகைகளில் ஸித்தர் சாரணர் கந்தர்வர் வித்யாதரர் கிந்நரர் அப்ஸரஸ்ஸுக்கள் ஆகிய இவர்களெல்லாரும் வந்துகூடி களிப்புடன் விளையாடுவதுண்டு. இதன் நாற்புறமும் அடர்ந்த காடுகள் படர்ந்திருந்தன.

இந்த மலையினது சரிவில் வருணனுடைய சிங்காரவனமொன்றுளது. இதன் பெயர் 'ருதுமத்' என்பது. இதனில் பல ஜாதி மரங்களும், பலவகைப்பட்ட புஷ்பச் செடிகளும் எங்கும் நிறைந்திருந்தன. இதில் தேவமங்கையர் குலாவுவதுண்டு. இவ்வழகிய பூஞ்சோலையின் மத்தியில் மிகவும் பெரிதான ஒரு தடாகமிருக்கின்றது. இதில் தங்கத் தாமரைப்பூக்களும் ஆம்பல்களும் கருங்குவளைகளும் செங்கழுநீர் மலர்களும் ஏராளமா யிருக்கின்றன. இதனில் எப்பொழுதும் வண்டினங்களின் பாடலும், அன்னங்களின் இன்னிசையும், சக்ரவாகங்களின் மதுரத்வநியும், நீர்க்கோழிகளின் கூக்குரலும் கேட்பதுண்டு. மீன் ஆமை முதலிய நீர்ப்ராணிகளும் இதில் நிரம்பவு மிருந்தன.

இது இங்ஙனமிருக்க, ஒருநாள் இம்மலையிலுள்ள ஒரு கானகத்திலிருந்து பெரியதோர் ஆனை புறப்பட்டு, அங்குள்ள மரங்களை முறித்தும், புதர்களை அழித்தும், மூங்கில்களையும் பிரப்பங்கழிகளையும் பறித்தெறிந்தும், இவ்வாறு பலவித சேஷ்டைகளைச் செய்துகொண்டு தன்னிஷ்டப்படி ஸஞ்சரிக்கத் தொடங்கிற்று. இதனுடன் அநேக பிடியானைகளும் கன்றுகளும் பின்தொடர்ந்து வந்தன. இந்த யானையினுடைய மதஜலத்தின் வாஸனை வீசினாலேயே மற்ற கஜங்களும் புலிகளும் சிங்கங்களும் நடுக்கமுற்று ஓடிவிடுவது வழக்கம். இப்பெரிய ஆனை தனது பிடிகளுடனும் கன்றுகளுடனும் கானகத்தில் சுற்றித் திரிந்தமையால், வேட்கை பொறுக்கமாட்டாமல் விடாயுற்று, எங்கு பொய்கை புலப்படுமென்று தேடி நடந்தது. அக்காலையில் முற்கூறிய தடாகத்தினின்று குளிர்ந்த காற்று தாமரைமலரின் நறுமணத்துடன் வீசவே, அடுத்து ஒரு பொய்கை இருக்க வேண்டுமென்று அநுமானித்து, அக்காற்று வந்தவழியே சென்று, அந்தத் திவ்யதடாகத்தைக் கண்ணுற்றது. உடனே அதில் இறங்கி நீந்திக்குளித்துக் களிப்புடன் அமுதம்போன்ற அவ்வாவியின் நீரைப்பருகி விடாய்தீர்ந்து நிம்மதியுடன் நிற்கையில், ஆஹா! என்னே தெய்வச்செயல்! இக்களிற்றின் காலைத் திடீரென்று அப்பொய்கையில் வாழும் ஒரு முதலை கவ்விக்கொண்டது. எவ்விதமாகவாவது தனது காலை முதலைவாயினின்று விடுவிக்க வேணுமென்று நினைத்து இந்த யானை எவ்வளவு பாடுபட்டும் பயன்பெறவில்லை. கூடவந்த யானைகளின் ஸஹாயமும் பலிக்கவில்லை. பிடிகளெல்லாம் கதறத்தொடங்கின. ஆனை கரைக்கிழுக்க, முதலை ஜலத்திற்குள் இழுக்க, இவ்வாறு இவை இரண்டிற்கும் ஆயிரம் தேவ வருஷகாலம் வலிய மல்யுத்தம் நடந்தது. ஆனைக்கு ஜலம் தன்னில மல்லாமையால் நாள் ஏறஏற மனம் சோர்வுற்று சக்தி குறைந்து வந்தது. முதலைக்கோ ஜலம் தன்னில மாகையால் காலக்ரமேண பலம் கூடிவந்தது. தனது யத்நம் இனி பலிப்பதரிது என்று ஆனைக்குத் தீர்மானம் ஏற்பட்டபிறகு, ஜந்மாந்தர ஸுக்ருத வாஸனை மூலமாக, இனி பகவானையே துணைக்கழைக்க வேணுமென்ற நல்ல புத்தி கஜேந்த்ரனுக்கு உண்டாயிற்று.



இவ்வாறு உறுதிசெய்துகொண்ட கஜேந்திரன் பூர்வஜந்மத்தில் தான் ஜபித்துவந்தபடி மிக்க மேன்மைபொருந்திய ஸ்தோத்ரத்தைச் செய்யத்தொடங்கினான்.

“யமனைக்கண்டு அஞ்சி ஓடும் ஜனங்கள் எவனிடம் அடைக்கலம் புகுந்து ரக்ஷைப்படுகிறார்களோ, எவனுக்குப் பயந்து யமன் கூட ஓடி ஒளிகிறானோ, அந்தப் பகவானை நான் சரணமடைகிறேன். சித் அசித் என்று இருவகைப்பட்ட இவ்வுலகத்தை எவன் உண்டாக்கிக் காப்பாற்றுகின்றானோ, இவ்வுலகம் முடிவில் எவனிடத்தில் லயிக்கின்றதோ, இவ்வுலகம் எவனிடமிருந்து உண்டாகின்றதோ, எவன் தானே இவ்வுலகமாக நிற்கின்றானோ, எவன் இந்த அசித்தையும் சித்தையும்விட வேறுபடும் தன்மையுள்ளவனோ, எவன் பிரமன் முதலானோர்க்கும் இறைவனோ, அவனை நான் த்யானிக்கின்றேன். ஆதிகாரணமான அந்தப் புருஷனைத் தஞ்சம்

புருகிறேன். உலகமென்னும் அரங்கத்தில் நடனைப்போல் பல வேஷம் எடுத்துக்கொள்ளும் எவனுடைய உண்மையான ஸ்வரூபத்தைத் தேவர்களும் ரிஷிகளும் அறியமாட்டார்களோ, அவன் என்னைக் காப்பாற்றுவானாக. எவனுக்குக் கர்மம் வழியாகப் பிறப்பு தொழில் பெயர் உருவம் விகாரம் முதலியன இல்லையோ, எவன் ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்காகவும் துஷ்டர்களை அழிப்பதற்காகவும் அவ்வப்போது தன் இஷ்டப்படி ஜன்மாதிகளைக் கைக்கொள்ளுகிறானோ, அவன்தான் எனக்கு கதி. ப்ருஹ்மாதிகளுக்கும் ஈசனாய் அபாரசக்தி யுள்ளவனாய் உருவமற்றவனாய் பலவுருவமுற்றவனாய் விசித்ரமான வ்யாபாரமுள்ளவனாய் விளங்கும் அந்தப் பெரியவனுக்கு நமஸ்காரம். ஸ்வயம் ப்ரகாசனாய், ஸகலத்தையும் நேரில் காணுபவனாய், ஸகலத்திற்கும் அந்தர்யாமியாக நிற்பவனாய், வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதவனாய் இருக்குமவனை நமஸ்கரிக்கின்றேன். சரீரம் வீடு பணம் பிள்ளை பந்து என்பவைகளில் பற்றுள்ள ஸம்ஸாரிகளுக்குக் கிட்டாதவனாய், உலகப் பற்றறுத்த பெரியோர்களால் தமது மனத்தில் த்யானிக்கப்படுபவனாய், ஜ்ஞான ஸ்வரூபியாய், ஸர்வ நியந்தாவாய் விளங்கும் பகவானைப் பணிகின்றேன். மேலும், நான்கு புருஷார்த்தங்களையும் விரும்பும் சேதநர்கள், எவனைப் பூஜித்துத் தமக்கு வேண்டிய பலங்களை அடைகின்றார்களோ, அவன் என்மீது கருணைகூர்ந்து என்னை விடுவிப்பானாக. எந்தப் பகவானிடத்தில் ப்ரபத்தி பண்ணின பரமைகாந்திகள், ஆச்சரியங்களும் மங்களங்களுமான எவனுடைய திவ்ய சரித்ரங்களை வாயாறப் பாடி ஆநந்தக்கடலில் அமிழ்ந்தினவர்களாயிருந்துகொண்டு, எவனிடமிருந்து மோக்ஷத்தைக்கூட அபேக்ஷிப்பதில்லையோ, எவன் நமது இந்த்ரியங்களுக்குப் புலப்படுவதில்லையோ, எவன் பக்தியோகத்தால் மாத்ரமே அறியக்கூடியவனோ, எவன் பரிபூர்ணனோ, அவனை ஸ்துதிக்கின்றேன். அஹங்கார மமகாரஸ்பதமான இந்த கஜ சரீரத்தோடு கூடி இனியும் இவ்வுலகில் வாழ எனக்கு விருப்பமில்லை. இந்தக் கர்மபந்தத்தை ஒழித்து நான் வீடுபெற விரும்புகின்றேன். திரும்பவும் நான் இங்கு வராதிருக்க வேண்டுமானால், முக்தியன்றோ எனக்குக் கிடைக்க வேண்டும். எவனுடைய மாயையில் அகப்பட்டு அஹங்காரத்திற்காளாகி, எனது ஆத்மா பாழாய்ப் போனதை நான் உணரவில்லையோ, மஹாமஹிமை பொருந்திய அந்த பகவானைச் சரணமடைந்தேன்.''



இவ்வண்ணம் கஜேந்த்ரன் ஸ்துதித்தும் இவனைக் காப்பாற்ற, ப்ருஹ்மாதி தேவர்களில் ஒருவரும் வரவில்லை. இவர்கள் எல்லாரும் கர்மவச்யர்களாகையால், அகர்மவச்யன் என்றும் ஸர்வஸ்மாத்பரன் என்றும் ஜகத்காரண பூதன் என்றும் கஜேந்த்ரன் கூறிய விசேஷணங்கள், தங்களுக்குக் கொஞ்சங்கூடப் பொருந்ாதவைகளென்று தெரிந்துகொண்டே தூரவே தாழ்வாங்கினின்றார்கள்.

அப்போது, ஜகத்திற்குத் தானிருப்பிடமாய், ஜகத்தில் தான் அந்தர்யாமியா யிருப்பவனாய், ஸர்வதேவ ஸ்வரூபியா யிருக்கின்ற ஹரிபகவான், கஜேந்த்ரனுடைய உருக்கமான ஸ்தோத்ரத்தைக் கேட்டவுடன், கஜேந்த்ரன் சொல்லியவை யெல்லாம் ஒன்றும் விடாமல் தனக்கே யிருப்பதை நினைத்து, அவனைக் காப்பாற்றக் கருதி, சக்ராயுதத்தைக் கையிலேந்தி, வேதமயனான பெரியதிருவடிமேல் ஏறிக்கொண்டு மற்றதேவர்களெல்லாம் புடைசூழ்ந்து ஸ்துதித்துவர, கஜேந்திரன் தவித்துநிற்கும் தடாகத்தைக்குறித்து அதிவேகமாக வந்துசேர்ந்தான்.

அக்காலையில் மிக்கவலிமை வாய்ந்த முதலை தடாகத்திற்குள் இழுக்க, உடல்முழுவதும் அமிழ்ந்தி அகவாயில் ஜலம் புகும்தறுவாயில் நிரம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த கஜேந்த்ரன், கையில் சக்ராயுதத்துடன் பெரியதிருவடிமீது ஆகாசத்தில்ஸேவை ஸாதிக்கும் பகவானைக்கண்டு பேராநந்தங்கொண்டு, தாமரைப் பூவுள்ள தனது தும்பிக்கையை உயர்த்தி, ஆநந்தத்தாலும் ஜலத்தில் முழுகியிருப்பதாலும் தேகத்தளர்ச்சியாலும் நன்றாய்ப்பேச முடியாமல் வெகு ப்ரயாஸைப்பட்டு "ஏ லோகநாத! ஏ கல்யாணகுண பரிபூர்ண! ஏ நாராயண! உன்னை நமஸ்கரிக்கின்றேன்" என்று மொழிந்தான்.

உடனே பகவான் அந்தக் கஜேந்த்ரன் கஷ்டபடுவதைக் கண்ணுற்று, அதிவேகமாக ஆகாசத்தினின்று கீழிறங்கி, காலைக் கவ்வினபடியே விடாது நின்ற முதலையோடுகூடி கஜேந்த்ரனை அந்தப் பொய்கையிலிருந்து கைகொடுத்துத் தூக்கிக் கரை சேர்த்து, தேவர்களுடைய முன்னிலையில் அவர்கள் கண்டு அச்சமும் ஆநந்தமும் கொள்ளுமாறு, சக்ராயுதத்தால் முதலையின் வாயைப் பிளந்து அதனிலிருந்து ஸ்ரீ கஜேந்த்ரனை விடுவித்தான்.

அப்பொழுது அந்தரத் தமரரும் அருந்தவ முனிவரும் ஸ்ரீபகவானுடைய இந்த ஆர்த்த த்ராண வ்யாபாரத்தை வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்துப் பூமாரி பொழிந்தனர். கிந்நரர் கந்தர்வர் சாரணர் ஆகிய இவரெல்லாரும் திசைதோறும் குழுமிக்கொண்டு மத்தளி முழவங்களோடும் யாழ்குழல்களோடும்கூடி, கீதங்கள் பாடினர்; வம்பவிழ் வானவர் 'புருஷோத்தமன்' என்று வாயுரை வழங்கினர்.

உடனே முதலையானது சாபம் நீங்கப்பெற்றமையால் முன்போல 'ஹூஹூ' என்னும் கந்தர்வனாகமாறி, பகவானை வலஞ்செய்து கைதொழுது நாமம் பலபரவி, 'பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு' என்று பாடி, எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கையில் தனது கந்தர்வலோகம் சென்றான்.

ராயம்பேட்டை அபிநவ பட்டபாண க்ருஷ்ணமாசார்யர்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீஹயவதனபரப்ரஹ்மணே நம:

# திருத்த திருத்தம்.*

நமது தேசத்தில் அக்காலத்து அரசர்கள்போல் பரிசு அளித்து ஆஸ்திகரை ஆதரிக்கும் அருள்புரிந்த சிந்தையுடன் அறந்தவறாப் பெரியோர்கள் அவதரித்திருப்பதனாலன்றோ ஆர்யமதம் ஆங்காங்கு ஜீவித்துவருகின்றது! பின்னும் சில பிரபுக்கள், பூர்வ ஜந்ம புண்ணியத்தால் பெரும்பதவி பெற்றிருந்து, அரசருடைய கார்யங்களை அளவில்லாது ஆதரித்தும், தினந்தோறும் திரளாகும் த்ரவியத்தைச் சேமித்தும், கிளிமொழியாள் மாநரஸம் காமமுடன் அநுபவித்தும், மிகுந்திருக்கும் காலமெல்லாம் மதவிஷயம் மனம் வைப்பதை, நாம் மனங்குளிர்ந்து அநுமோதிக்கின்றோம்.

இஃதிருக்க, அவநியெலாம் வாழ்விக்க அருள் மிகுந்த சிந்தையுடன் ஜநித்திருக்கும் சிலர், சில நாளாகச் செய்துவரும் ஆசாரத்திருத்தமெனுங் காரியங்கள் ஆஸ்திகரா மனைவர்களாலும் ஆலோசிக்கப்படவேண்டியதா யிருக்கின்றன. நற்குணங்கள் நாடி நிற்கும் நவீந காரிகர்கள், நம் மதாசாரத்தை நாசஞ்செய்ய நினைத்துவிட்டதாக நாம் நிர்ச்சயிக்கவில்லை. ஆனாலும், நலமில்லாமல் நசித்துவரும் தேசங்கள் தழைத்தோங்கக் கருதிவரும் கருணைக்கு ஆளானதனால்; தாம் அழிந்துபோவதை அவர்கள் மறந்தார்களென்றே நாம் நினைந்து உருகுகிறோம். அன்புடனே அணிந்தாலும் அக்நிதன்னைச் சுடுவதுபோல், அருளுடையோர் தவறுதலால் வரும் நாசத்தாளாகாது நாம் கூடியவரையில் கவனிக்கவேண்டியது அவஶ்யமாய் அன்றோ இருப்பது!

* இது, சென்றவருஷத்தில் திருவஹீந்த்ரபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஒன்பதாவது வார்ஷிக மஹாஸங்கத்தில் ஸ்ரீ உப. புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

ஆனாலும், 'நாஹம் நிந்தாமி ந ச ஸ்தௌமி ஸ்வபாவவிஷமம் ஜநம்' (ஸ்வபாவத்தினாலேயே விஷயத்தில் ப்ரவர்த்திக்குமவர்களை நான் நிந்திப்பதுமில்லை துதிப்பதுமில்லை) என்று அஜகரர் சொன்னது போல், விஷயமென்னும் விஷக்காட்டில் விழுந்திழியுமவர் விஷயத்தில், கரையேற்றக் கூடப்பாத நாம் உதாஸீனராகவே இருப்பது உசிதமானாலும், 'ஸர்வேஷாம் ஶ்ரேய ஆஶாஸ்ய உபேக்ஷா ந வாராத்ருதி' என்கிறபடியே எல்லாருடைய க்ஷேமத்தையும் வேண்ட வேண்டிய தாகையாலும், 'துர்லபோ மாநுஷோ தேஹ:' என்கிறபடியே அதி துர்லபமான மானுஷ ஜன்மம் நிஷ்பலமாகிறதே என்கிற அநுதாபத்தினாலும், 'நித்யாநுஷ்டாந ஸம்யுக்தா ந ஜ்ஞாந துர்லபா: । வ்யாமோஹ யேது துர்லபா: விஶ்வஸேத்யம் கரோதி ய:' என்கிறபடியே நாஸ்திகர்களுடைய உபந்யாஸத்தினால் மந்தமதிகளாயும் அநுஷ்டாநபரர்களுமான ஆஸ்திகர்கள் மோஹமடையாததன் பொருட்டும், தெரிந்தவர்கள் தத்வஜ்ஞாபநத்தில் ப்ரவர்த்திக்கவேண்டியது அவஶ்யமாயன்றோ இருப்பது! இதைத்தானே 'யதாஶக்தி நிஷேத்தவ்யா: த்வதா ஶாஸ்த்ரநிஷேதகா:', ஶக்தியுள்ளவர்கள் ஈஶ்வராசார்ய தூஷகர்களைத் தடுக்கவேண்டியது அவஶ்யமென்றன்றோ ஶாஸ்த்ரம் விதித்திருப்பது!

சீர்திருத்தம் செய்துவரும் சிலர், பின்வருமாறு ஆலோசிக்கிறார்கள். 'நம் தேஶத்து ஜநங்கள் ஒற்றுமையாயிருந்தாலொழிய; தேஶம் க்ஷீண தஶையை யடையாமல் பாதுகாக்க முடியாதாகையினால், அவ்வொற்றுமைக்கு உபத்ரவமாயிருக்கும் ஜாதிபேதத்தைப் போக்கி, ப்ராஹ்மணரென்றும் பஞ்சமரென்றும் பலவகை பேதம் பாராட்டாமல் ஒருவர்க்கொருவர் உண்டுடுத்துப் பெண் கொடுத்து ஒருமனதாய் வாழவேண்டியது அவஶ்யமன்றோ?

'நம் ஹிந்துமதத்துக்கு முக்ய ப்ரமாணமான வேதங்களில், ஜாதியைப்பற்றிச் சொல்லவேயில்லை. புருஷஸூக்த சாந்தோக்யங்களில் 'ப்ராஹ்மணோऽஸ்ய முகமாஸீத்' என்றும், 'ரமணீய வர்ணா:........ப்ராஹ்மண யோநிம்வா' இவை முதலான ஜாதியை ஜந்ம ஸித்தமாகச் சொல்லும் வாக்யங்கள், புராதனமான ருக்வேதத்தில் இல்லாததனாலும், சில அந்யதா ஸித்தங்களாகை-



யினாலும் அப்ரமாணங்களாய் இருக்கின்றன. அல்லது அப்படியே ஜாதிக்கு ப்ரமாண மிருந்தாலும், அந்த பேதம் இக்காலத்தில் அதிகமான அஸௌகர்யத்தை உண்டு பண்ணுவதால், அந்த ஜாதி பேதத்தை நாம் அங்கீகரிக்காமல் நிராகரிக்க வேண்டியது அவஶ்யம்; மநுஸ்ம்ருதியில், 'அந்யே க்ருதயுகே தர்மா: த்ரேதாயாம் த்வாபரேऽபரே । அந்யே கலியுகே ந்ருணாம் யுகஹ்ராஸாநுரூபத:' [யுகங்களின் குறைவை அநுஸரித்து, க்ருதயுகத்தில் வேறு தர்மம்; த்ரேதாயுகத்தில் வேறு தர்மம்; த்வாபரயுகத்தில் வேறு தர்மம்; கலியுகத்தில் வேறு தர்மம்] என்று முன் காலத்தில், யுகபேதத்தை அநுஸரித்து, சில மஹர்ஷிகள் சேர்ந்து சில தர்மங்களைக் குறைத்தும், சிலவற்றை நிஷேதித்தும் இருப்பதுபோல், தத்காலத்துக்கு அநுகுணமாக அந்த வம்ஶ்யராயும் நாகரிகர்களுமான நாம் ஒன்று சேர்ந்து ஸௌகர்யார்த்த தர்மங்களை ஏற்படுத்தவும், அஸௌகர்யமான தர்மங்களை அழித்துவிடவும் செய்வது ஆகாதோ? 'தர்மஜ்ஞ ஸமய: ப்ரமாணம் வேதாஶ்ச' என்று வேதத்திற்கும் முக்யமான ப்ரமாண மாகவன்றோ ஜந ஸமுதாயத்தின் வார்த்தைக்கு மஹிமை யிருப்பது. 'ஸமயஶ்சாபி ஸாதூநாம் ப்ரமாணம் வேதவத் பவேத்' என்று மஹர்ஷிகள் ஜந ஸமுதாயத்தின் தீர்மாநத்தை வேதவாக்யமாகவன்றோ ஒப்புக்கொண்டிருக்கின்றனர்! ஆகையினால் அந்தந்தக் காலாநுகுணமாகப் பலபேர்கள் சேர்ந்து ஏற்படுத்துவதைத் தவிர தனியாகத் தர்மம் என்பது ஒன்றில்லை.

'இதை யெல்லாம் கவனித்தன்றோ பஞ்சம வேதமான பாரதத்தில், 'ஶ்ருதயோ விபிந்நா: நைகோ ருஷிர்யஸ்ய வச: ப்ரமாணம் ... மஹாஜநோ யேந கத: ஸ பந்தா:' என்று பரஸ்பர விருத்தமாக மஹர்ஷிகள் மொழிந்திருப்பதால், 'பல ஜநங்கள் போகும் வழியே நல்வழி' என வ்யாஸ பகவான் அருளிச்செய்தான்.

நம் மஹர்ஷிகளின் நிலைமையைக்குறித்து ஆஸ்திகர்களுக்கு உபதேசிக்கப்ரவ்ருத்திக்கும் இந்தத் தத்கால புத்திமான்கள், அவர்கள் காட்டிலிருந்து காய் கிழங்குகளைப் புஜித்து வளர்ந்ததனால் நாகரிகம் தெரியாதவர்களென்றும், ஸ்த்ரீ ஶூத்ர விஷயத்தில் பக்ஷபாதிகள்

என்றும், பெரிதுவான தர்மபுத்தியில்லாதவர்க ளென்றும், மூடர்க ளென்றும், பரஸ்பர விருத்தமாகப் பேசினர்க ளென்றும் சொல்லும் பல வார்த்தைகளே, அம்முனிவர்கள் மஹாமஹிமை பொருந்தினவர்களென்றும், ஸர்வஜ்ஞர்க ளென்றும், எல்லா ருஷிகளும் கடுகளவு விரோதமில்லாமல் ஶாஸ்த்ரங்கள் சொல்லியிருக்கிறார்க ளென்றும், இத்யாதியான பாவங்களை ஆஸ்திகர்களுக்குத் தோன்றப் பண்ணுவதால், நாகரிகர்கள் தமச் செலவையும் ச்ரமத்தையும் உத்தேசிக்காமல் செய்துவரும் உபதேஶம் வீணாகிறதே என்பதைப்பற்றி நாம் மிகவும் வருத்தப்படுகிறோம்.

ஸ்ம்ருதி புராணங்களில் இக்கலியுக தர்மத்தை முன்னமேயே மொழிந்திட்ட எல்லா மஹர்ஷிகளும் ஒற்றுமையாம் பழமறையைத் தூக்கிவிட்டு, புதுவேதம் பலசெய்து, தங்கள் திருவாக்கைத் தூஷிக்கும் தற்கால புத்திமான்கள் அவதாரத்துக்கு முன்னமேயே மங்களாஶாஸநம் செய்திட்டார்களன்றோ? தங்களுக்காக முன்னமேயே மங்களம்பாடும் நம் மஹர்ஷிகள் விஷயத்தில் நாகரிகர் க்ருதஜ்ஞதையுடன் இல்லாவிட்டாலும், அம்மஹான்களை மூடர்களென மொழியலாகுமோ? ஆகையினுல், இக்காலத்து வேதவ்யாஸராய், வேறு வேதம் ஸ்ம்ருதிகளை ஸ்ருஷ்டித்துவரும் நம் நூதந ருஷிகள் விஷயத்தில் ப்ரமாண ப்ரதர்ஶநங்கள் பயன்படாவாகையால், இவர்கள் ப்ரவ்ருத்தியின் ப்ரயோஜநத்தை மட்டும் சற்று விசாரிக்கிறோம்.

நம் அபிமாநிகள் தேஶக்ஷேமத்திற்காகவே ப்ராஹ்மணன் முதல் பஞ்சமர்வரையில் உள்ள பேதமெல்லாம் போக்கி ஸாங்கர்யமெனும் ஐஶ்வர்யத்தை அபேக்ஷிப்பதுபோல், பார் முழுதும் போற்றிவரும் பார்த்தன், 'அதர்மாபிபவாத் க்ருஷ்ண ப்ரதுஷ்யந்தி குலஸ்த்ரிய: ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர: — ஸங்கரோ நரகாயைவ' என்றும், 'உத்ஸாத்யந்தே ஜாதிதர்மா:' என்றும், 'நரகே நியதம் வாஸோ பவதி' 'அஹோபத மஹத் பாபம்' என்றும், 'யத்ராஜ்ய ஸுகலோபேந ஹந்தும் ஸ்வஜநம்' என்றும், என்றும், ஜாதி கலந்துபோனுல், நரகம் வந்துவிடுமே, ஜாதி தர்மம் போய்விட்டால் நரகத்திலேயே மீளாதிருக்க நேருமே, ராஜ்ய ஸுகத்தில் ஆஸை



யினுல் ஆத்மாவை அரு நரகத்துக்கு அனுப்பாது ('ஶ்ரேயோ போக்தும் பைக்ஷ்யமபீஹ லோகே') நான் பிச்சை வாங்கிப் பிழைப்பது க்ஷேமம் என்று நிச்சயித்து, 'க்ஷுத்ரம் ஹ்ருதய தௌர்பல்யம் த்யஜேச' என்கிற, ஶாஸ்த்ரார்த்தத்தை அநுஷ்டிக்கும் காலத்தில், இவ்வாசார சீர்திருத்தத்தில் அடிவைக்கா ததனுலன்றோ அவன் நம் அபிமாநிகளால் அஜ்ஞனென அநாதரிக்கப்படுகிறான்.

பின்பு யுத்தம் பண்ணும்படி ஆஜ்ஞாபித்த பகவானும் ஜாதி ஸாங்கர்யத்தினுல் நரகம் வருமென்று அர்ஜுநன் சொன்னதை நிஷேதிக்காமல், 'ப்ரஜ்ஞாவாதாம்ஶ்ச பாஷஸே' என்று அர்ஜுநன் சொன்ன நரகவாஸத்தையும், ஜாதி ஸாங்கர்யம் உண்டானுல் பித்ருக்களுக்குப் பிண்டோதக தானங்கள் கிடைக்கா வென்பதையும் குறித்து, அவனுடைய ஆத்ம ஜ்ஞாநத்தை ஸ்தோத்ரம் செய்ததனுல் இந்த ஸாங்கர்யத்தை அவன் நிஷேதித்தா னென்று ஆஸ்திகர்கள் அங்கீகரிக்க வேணும்.

திருத்தகாரர்கள் சொல்லும் ஸாங்கர்யமெனும் க்ஷேமமானது மேற்சொன்ன கீதா முதலான ப்ரமாணங்களின்படி ஆத்மாவுக்கு நரகத்துக்கு ஸாதநமான தர்மமாகையினுல் இந்த க்ஷேமம் ஆத்மாவுக்கென்று அறுதியிட முடியாது.

மனங்கொள்ளாத விஷயத்தில் மநு முதலாம் மஹர்ஷிகள் மொழிந்ததையும் மறந்திடவோ, மறுத்திடவோ, மாற்றுவிக்கவோ முயன்றுவரும் நம் நாகரிகர் திருவாக்கை அறம் அறிந்தோர் ஆதரிப்பது அரிதாகுமே! அறியாதோர் ஆதரித்தால் அறிந்தோர்கள் முன்னிலையில் அது மாறிப்போகுமே! ஆகையினுல், ஆத்மக்ஷேமத்தை உத்தேசித்து, இவர்களுடைய ப்ரயத்நம் பயன்படாதென்பது திண்ணம். வேறெந்த க்ஷேமமென்றுல், நம் தேசத்தார் தரித்ரத்தன்மையினுல் பரதேஶியாகாது பாதுகாப்பதையே க்ஷேமமெனச் சொல்லுகிறார்கள். இவ்விஷயம் யாவராலும் கொண்டாடக்கூடியதே. ஆனுலும், இதற்கு ஜாதிபேதம் என்ன விரோதத்தை உண்டுபண்ணுகிறது? ஒற்றுமையை ஒழித்துவிடுகிறது என்பது சரியல்ல. எவ்வளவோ பேதமுடன் இதுகாலம் வரையில் நாம் ஒற்றுமையாய் இருந்து வாழவில்லையா?

பணம்பெறவே கூடாது பட்டினியே சாவோ மென்று ப்ராஹ்மணரும் பஞ்சமரும் பிடிவாதம் பண்ணுவார்களோ? பார்முழு

தம் ஆண்டாலும் பணம் பெருகும் வழிக்கன்றோ போர் புரியும் புண்ணியரை ப்ரதி தினமும் பார்த்து வருகிறோம்.

'கோஹ்யர்த்தம் த்ருஷ்ணாம் விஸ்ருஜேச்ச ப்ராணைரப்யர்த்தமீப்ஸிதம் | பங்க்திர்ஷண்யஸாஹஸ: ப்ருஸ்ரேஷ்டஸ்வ ஸேவகோ வணிக் ||' என்கிறபடியே பணத்துக்காக ப்ராணனைப் போக்கி வரும் போர்வீரரையும், கப்பல் வ்யாபாரிகளையும் திருடரையும் நாம் பார்க்கவில்லையா? 'ஆறுதசெல்வத் தரம்பையர்கள், தற்சூழ, வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்' எனக்கவி பாடின குலசேகரன் காலம் கழிந்து போச்சுதே! ஆகையினால், தேசம் செழிக்கும் விஷயத்தில், ஒரு ஜாதியும் விரோதத்தைச் செய்யாமல் கூடியவரையில் கவலையுடன் ப்ரயத்னப்படுவதே அவச்யம்.

நம் மஹிமான்களின் முயற்சியால் சீர்திருத்தம் செய்யப்பட்டு, ஆசாரம் ஜாதிகள் அடியோடு அழிந்துபோன அநேகம் தேசங்களில், ஆஹாரத்துக்கும் வழியில்லாமல் அடிக்கடியும் சண்டைசெய்யும் ஜனங்களை நாம் பார்க்கவில்லையா?

பஞ்சமரின் மேன்மைக்குப் பாடுபடும் ப்ரபுக்களெல்லாம் பல ஜாதியாயிருந்தும் ஒருவர்க்கொருவர் உண்டுடுத்துப், பெண் கொடுக்கும் விஷயத்தில் ஒற்றுமையாய் உபக்யவித்திருப்பதால், தம் நிலைமை கவனிக்கும் கனவான்கள், ஜாதிபேதம் ஒற்றுமைக்கு விரோதமெனச் சொல்லலாகுமோ? ஒரு ஜாதிவீரர்கள் ஒற்றுமையே இல்லாமல் உலகெல்லாம் நசிக்கும் பெருயுத்தம் செய்யவில்லையா? இது நிற்க: ஜாதியெனப்படுவது உருவத்தின் ஒருவித ஆகாரமாகையினால், இத்திருத்தக்காரர்கள், புருடரைக் காட்டிலும் வேறுஜாதியாயிருக்கும் தம் பெண்டிருடன் தினந்தோறும் ஒற்றுமையே இல்லாமல் சண்டை செய்வார்களோ?

அந்தோ! தத்காலத் தெளிமதியோர் கண்ணுக்குக், கிளிமொழியாள் தேஹமெங்கும் தெய்வத்தின் திருவுருவாய்த் துலங்குகின்றதை நாம் பார்த்துவருகிறோம். நம் நாகரிகர் மதிமோஹத்தைத் 'தலையணை மந்திரம்' எனத் தமிழ்நாட்டில் துலங்கிவரும் தேன்மொழியாள் திருவாக்கு தீர்க்கலாகாதோ? சில நாட்களாக, அம்மந்திரத்தின் மஹிமையன்றோ, மறையோரும் மற்றோரும் மணம்புரியும் முயற்சியெல்லாம் மறந்து வருகின்



றது. கபோதோபாக்யானத்தில், குற்றமில்லாத விஷயத்தைக் கிளிமொழியாள் தம் கணவனையும் கேட்பிக்கக் கண்டிருக்கிறோமே. 'ஸ்த்ரீணாம் வஹ்னி: காந்தபத்தேவஸ்யாந்யாஸ்ரயம் ஹிதம் - ப்ராணைரபி' என்று ப்ராணனையும் கொடுத்துப் பரலோகப் பயனை விரும்பும்படியன்றோ அக்குருவி கணவனுக்குத் தர்மத்தைப் போதித்தது.

பரலோகத் தாழையினால் பதிவ்ரதையின் தர்மத்தைப் பாதுகாக்கும் பெண்மணிகள், பலவழியும் பர்த்தாவைப் பின்செல்லக் கேட்குங்கால், அப்புருடன் பஞ்சமர்க்குப் பெண்கொடுத்துப் பாதித்ய மடைந்தபின்பும் பர்த்தாவைப் பாதாரமாகக் கருதுவார்களோ? 'நஷ்டே ம்ருதே ப்ரவ்ரஜிதே க்லீபே ச பதிதே பதௌ | பஞ்சஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரந்யோ விதீயதே ||' 'பதிதம் பரித்யஜேத்' [பர்த்தா ஓடிப்போனாலும், இறந்துபோனாலும், ஸந்யாஸியானாலும், நபும்ஸகனாலும், வர்ணாச்ரம தர்மத்தைவிட்டவனானாலும், இவ்வைந்து காரணங்களில் இஷ்டமிருந்தால் ஸ்த்ரீகள் வேறு புருஷனைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாம்; பதிதனை விட்டு விடவேண்டியது] என்றும் சொல்லுகிற மநுவாக்யம் மடந்தையர்கள் அறியார்களோ? இக்கலியுகத்தில், கூடாதென்று வேறு கல்யாணம் செய்யாவிட்டாலும், பதிதனாகும் புருஷனைவிட்டுவிட வேண்டியது அவச்யமன்றோ? ப்ராஹ்மணரின் கன்னிகையை மணம்புரிய நண்ணாத புண்ணியரும், பஞ்சமக் குலமணிகள் பெருவாழ்வு வாழவில்லையோ? ப்ரஜையெல்லாம் ஸமமாகப் பார்த்துவரும் நம் பூபதிகள், பஞ்சமரோடு உடனுண்டு உறவாகும் ப்ராஹ்மணர்க்கே பெரும்பதவி தருவதாகத் தீர்மானம் செய்தார்களா? அல்லது பஞ்சமரோடு உடனுண்டால் பாலமுது இன்பண்டம் பணமாகப் பரிணமிக்குமோ?

(தொடரும்.)

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீஹயவதந பரப்ரஹ்மணே நம:

தீபிகாபிமாநிகளுக்கு விஜ்ஞாபநம் :—

1. நடந்த வார்ஷிக மஹாஸங்கத்தில் செய்யப்பட்ட ஏற்பாட்டின்படி ஸ்ரீ. உப. வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, சென்ற தை மாஸக்கடசியில் தக்ஷிண திவ்ய தேசங்களுக்கு எழுந்தருளி, நமது ஸித்தாந்த ஸம்பந்தமானப் பல உபந்யாஸங்களை மிக ஶ்லாக்யமாய் ஒருமாஸகாலம் செய்தருளினர். அந்த உபந்யாஸங்களைப்பற்றிய அறிக்கைகள் அடுத்த ஸஞ்சிகையில் வெளியிடப்படும்.

2. "பட்ட பாண சரிதம்" என்னும் ஒரு தமிழ் புஸ்தகமும் "பைமீ ஸ்வயம்வரம்" என்னும் ஒரு ஸம்ஸ்க்ருத நாடகமும், தீபிகையில் விமர்ஶிக்கும் பொருட்டு நமக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. சில நிர்பந்தங்களால் அந்த விமர்ஶ விஷயமாக ஏற்படும் விளம்பத்தை நமது அபிமாநிகள் க்ஷமிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

3. மதிராஸ் கோமளேஶ்வரம்பேட்டை ஆழ்வார் ஆசார்யர்கள் ஸபையின் இரண்டாவது வார்ஷிக மஹோத்ஸவம் வருகிற ஏப்ரல் மாஸம் 11௳ ஞாயிற்றுக்கிழமை தினம் நடத்தப்படுமென்று அச்சபையின் கார்யதர்ஶி தெரிவித்திருக்கிறார். பகல் 1-மணிக்கு உபக்ரமித்து, முதலில் வர்ஷாந்த அறிக்கையின் நிவேதநமும், பிறகு ஸ்வாகத ப்ரஶ்நமும், அதற்குப்பிறகு ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யருடைய உபந்யாஸமும் நடைபெறுமாம். மறுபடியும் ஸ்வல்ப விஶ்ரமாந்தரம், ஸாயம் 4- 0-மணிக்கு ஸ்ரீ. உப. சேட்லூர் பகவத்விஷயம் வித்வாந் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸமும், ஸந்த்யாகாலத்திற்குப்பிறகு ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தின் அபிநயமும் நடத்தப்படுமாம். பூர்வ பாகத்திற்கு ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியும், உத்தர பாகத்திற்கு ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியும் அக்ராஸநத்தை வஹிப்பார்களாம். ஆஸ்திகர்களெல்லாரும் அக்காலத்தில் ஸந்நிஹிதர்களாக இருக்க வேணுமென்பது அச்சபையின் கார்யதர்ஶியினுடைய ப்ரார்த்தனை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீஹயவதந பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர் :—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 10.] ஸித்தார்த்தி௵ பங்குனி௴ [ஸஞ்சிகை 5.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே .

வபுரலககுலாவ்ருதாநநாப்ஜ விஜயஸகே

ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

பௌதிக ஶாஸ்த்ரஜ்ஞாநம் தத்காலம் விஸ்தரித்திருப்பதற்குப் பொருந்தியபடி, ஸர்வ ப்ரபஞ்சமும், அதாவது, ப்ராக்ருத விகாரங்கள் பரவியிருக்கின்ற ப்ரதேசங்கள் யாவும், மநுஷ்யர்க்கு த்ருஷ்டி கோசரங்களன்று; நச்சுக்குழாய் முதலான தூரத்ருஷ்டி ஸாதகங்களான கருவிகளுக்கும் அவை முற்றிலும் அகப்படா. ஸர்வ ஜகத்ஸ்ருஷ்டி யென்பது, பரிணாம க்ரமத்தால் ஸித்தித்ததென்று ஊஹிக்க வமையுமேயன்றி, ப்ரத்யக்ஷ த்ருஷ்டம்போல அது சிந்திக்கத்தக்க விஷயமன்று. ப்ரபஞ்சத்தில் ஏகதேச ஸ்ருஷ்டியென்பதும் அவ்விதமாய்ச் சிந்தா விஷய மாகமாட்டாது. ஏகதேசமென்றால், நமக்கு ஸூர்யவ்யாபகமான ப்ரபஞ்சத்தின் ஓர் பகுதி. ஒவ்வொரு நக்ஷத்ரமும் ஸூர்யனை யொத்து ப்ராணிவாஸ யோக்யமானதும், ஆகத்தக்கதுமான கோளவர்க்கங்களுடன் கூடியதென்பது அநுமாநஸித்தம். அப்படிப்பட்ட நக்ஷத்ர ஸங்க்யையும் மநுஷ்யருடைய யோசனையில் அநந்த மென்றே சொல்ல வேண்டும்.

இந்த உண்மையாவும் புத்திமான்கள் தம் புத்தியைக்கொண்டு ப்ரத்யக்ஷ ப்ரமாணங்களாலும் அநுமானத்தாலும் அறிந்த விஷயங்கள். இவற்றை வேதஶாஸ்த்ரம் விஸ்தரித்து வெளியிட ப்ரவர்த்திக்கவில்லை. வேதஶாஸ்த்ரம் ப்ரஹ்ம ஸ்வரூப ரூபகுண விபூதிகளைச் சொல்லவந்தது. அவற்றைச் சொல்லுமிடம், ப்ரத்யக்ஷ ஶாஸ்த்ர விருத்தமாக அது ப்ரவர்த்திக்கவில்லை. பதார்த்த பேதங்கள் வ்யவஹாரத்தில் ஸாக்ஷாத்கரிக்கப்படுகின்றன. அவற்றின் ஸாக்ஷாத்காரம் ஸம்ஸாரத்துக்கு அநுகூலமாகின்றது. வஸ்துக்களிடம் வஸ்து பேததர்ஶநம் தத்வதர்ஶநத்தால் நாஶமடையும். வஸ்துக்களினிடம் பரமார்த்தம் ஸர்வேஶ்வரனே. அதாவது, ஶாஶ்வதனாய், அவிகாரியாய், ஸதா ஏகரூபியாய், ஸர்வாந்தராத்மாவாய், ஸர்வவ்யாபியாய் ஈஶ்வரன் இருக்கின்றான். ஆதலால் ஸர்வமும் அவனென வேதாந்த நிஶ்சயம். ப்ரஹ்ம ஜ்ஞாநமொன்றால், ஸர்வமும் அறிந்ததாகும் என்பதை வ்யவஹார ஶாந்தியை உத்தேஶித்துத் தெளிவிக்கவே, ஸ்ருஷ்டி க்ரமங்கள் ஶாஸ்த்ரங்களில் யோசிக்கப்பட்டன. அவை பௌதிக ஶாஸ்த்ரங்களின் தத்கால நிஶ்சயங்களுக்கு அநுகுணமாகவே யோசிக்கப்பட்டன. இது வைதிக மதத்துக்கு ஏற்பட்ட ஏற்றம்.

ஸர்வ பூதங்களுடன் கூடிய ப்ரபஞ்சம் பரமபுருஷனுடைய ஓரம்ஶம் என்று ஶ்ருதி சொல்லிற்று. அவனுடைய விஶேஷித்த அம்ஶமானது மரணதர்மமற்றதாய், அப்ராக்ருதமாய், விகாரமற்றதாய் ப்ரபஞ்சத்தை அதிக்ரமித்திருக்கின்றது. இந்த ப்ரபஞ்சம் யாவும் அவனது மஹிமை. அவனிடம் உண்டாகி இருந்து மறைகின்ற இந்த யாவத் வஸ்துக்களும், அக்காரணத்தால் அவனேயென்று ஶ்ருதி மொழிகின்றது. அவனை உண்மையாக அறிந்தால் யாவும் அறிந்தவையாகும். ப்ரஹ்மம் ஸர்வாதாரம்; ஸர்வாந்தர்யாமி; யாவும் ப்ரஹ்மத்துக்கு ஶேஷபூதம். ப்ரக்ருதி ப்ரஹ்மஶக்தி; யாவத்ஜீவனும் ப்ரஹ்மஶக்தி; இவ்விரண்டையும் புணர்ப்பது ப்ரஹ்மத்தின் கர்மஶக்தி. இந்த விதமாக ஸர்வமும் ஸர்வாவஸ்தைகளிலும் ப்ரஹ்மசரீரமாதலால், ஸர்வத்திலும் ஸமமாக நிற்கும் ப்ரஹ்மத்தினுடைய ஸாக்ஷாத்காரம் அம்ருதத்வஸாதகம்; வஸ்து ஸாக்ஷாத்காரம ப்ரஹ்ம ஸம்பந்தமற்று உண்டானால், அது ஸம்ஸார ஸாதகம்.

ப்ராணிகள் மநுஷ்யருடன் முடியவில்லை. க்ஷேத்ரஜ்ஞருடைய ஜ்ஞாநரூபமான ஶக்தியானது, க்ஷேத்ரமெனப்பட்ட சரீர



பேதங்களால் தாரதமபாவத்துடன் ப்ரகாசிக்கின்றது. மநுஷ்யர்க்குமேல் தேவாதி ஜீவன்கள் உண்டு; மநுஷ்யர்க்குக் கீழ் ம்ருக பக்ஷி முதலான ப்ராணிகளும் உண்டு. தேவதைகளுக்குள் ஸ்வகர்மங்களால் தேவத்வத்தைச் சிலகாலம் அடைகின்ற கர்மதேவதைகளும், விஶேஷ புண்யங்களால் சிரகாலம்பெற்ற அதிகாரங்களுடன்கூடிய தேவதாவிஶேஷங்களுமுண்டு. அவர்களில் அதிகாரி தேவதைகள் பகவதாஜ்ஞாநுஸாரிகளாய் மநுஷ்யர்க்கு ஹிதம் புரிபவர்கள். இவர்களை யஜ்ஞாதிகளால் ஆராதித்து மநுஷ்யர்கள் ஐஹிக காமங்களையும், ஸ்வர்க்க வாஸத்தையும் பெறுகின்றார்கள். ஸூர்ய மண்டலத்தினுடைய வ்யாபகதை செல்கின்றவரையில் அதிகாரி தேவதைகளுடைய அதிகாரம் விஸ்தரிக்கின்றதாக யோசிக்கக்கூடும்.

யஜ்ஞாதிகளால் உண்டாகின்ற ப்ரயோஜநங்கள் அல்பங்களும் அஸ்திரங்களுமாய் இருக்கின்றன. ஶாஶ்வதமான ப்ரஹ்ம ப்ராப்தியாகின்ற மஹா பலன் வித்யாவிஷயம். உபநிஷத்துக்களில் வித்யைகளும், வித்யாவிரோதிகளும் உபாஸ்யமான ப்ரஹ்ம ஸ்வரூபமும், ஸம்ஸார லக்ஷணமும், ஜீவனுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளும் விவரிக்கப்படுகின்றன. இந்த ரூபமான ஜ்ஞாந விஶேஷங்கள் உபநிஷத்துக்களின் ப்ரகாஶ காலத்துக்கு முன்பே சில மஹாத்மாக்களிடம் பதுகாலமாக நிலைத்திருந்தனவென்று உபநிஷத்துக்களே காட்டுகின்றன. ஆதலால் வேதத்தின் கர்மபாகமும் ப்ரஹ்மபாகமும் அநாதியென்றே கொண்டாடப்படுகின்றன.

இந்த லோகமே ஸர்வார்த்த ஸாதகமாக எண்ணுகின்றவர்களுக்கு லோகாந்தரசிந்தனை அநாவஶ்யகம். இந்த லோகவாஸத்தில் அநித்யத்வம், அஸுகத்வம், மிஶ்ரஸுகத்வம், ஜந்மவ்யாதி ஜரா மரணாதி துக்கத்வம், இவைபோன்ற குற்றங்களைக் கண்டு, அக்குற்றங்களில்லாத பரமஸுகத்தை ப்ரார்த்திப்பவர்க்குத்தான் லோகாந்தர விஷயசிந்தை வேண்டியிருக்கின்றது. அவர்கள் ஜீவ ஸ்வரூபம், ப்ரஹ்மஸ்வரூபம், இருவர்க்குமுள்ள ஸம்பந்தம், ஜீவனுக்கு ஸம்ஸார ப்ராப்திகாரணம், ஸம்ஸார மோக்ஷோபாயம், மோக்ஷஸ்வரூபம், இந்தவிதமான யோசனைகளைச் செய்யவேண்டியவர்கள். இந்த யோசனைகள் ப்ரத்யக்ஷாநுமானரூப ப்ரமாணங்களால் தெளியமாட்டா. ஶப்தமொன்றே அந்த விஷயத்தில்

ப்ரமாணம். ஶப்த நிர்ணயங்களும், ஸம்யக் தர்க்காநுக்ருஹீதங்களாய், யுக்தியுக்தங்களாய் இருந்தால் தான் விவேகிகளுடைய அப்யுபகமார்ஹங்களாயிருக்கும். அந்த விஷயத்தில் வைதிக ஸம்ப்ரதாயத்தின் ஏற்றம் ப்ரத்யக்ஷஸித்தம். அந்ய மதங்கள் ஆபாஸ யோசனைகளை ஆதரிக்கின்றன. ஸர்வஸம்பந்நனை ஈஶ்வரனுக்கு ஜகத் ஸ்ருஷ்டியில் ஸ்வார்த்தமாக ப்ரவ்ருத்தி உண்டாகாது. அம்ருதத்வத்துக்கு ஸ்வாமி ஸ்வஸ்வரூபத்தை அதிக்ரமித்து ப்ரபஞ்சரூபத்தை ஸ்வீகரிப்பானேன்? அந்த விஷயத்தில் அவனுடைய ஸங்கல்பமானது ப்ரளயத்தில் அசித்துல்யங்களாய் முழுகிநிற்கின்ற ப்ராணிகளுடைய கர்மங்களை ஆஶ்ரயித்து உண்டாகவேண்டும். ப்ராணி கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்கள் அவிச்சிந்நங்களாக ப்ரவ்ருத்திக்கின்றன. ஜீவனுக்கு முடிவில்லை யென்பதுபோல் உத்பத்தியும் இல்லை; உள்ளத்துக்கு நாஶம் இல்லை. இல்லாததற்கு உத்பத்தியில்லை. ஈஶ்வரனுக்கு ப்ராணிகளுடைய கர்மஸம்பந்தமின்றி நிக்ரஹஹேது வில்லை. மோக்ஷோபாயங்கள் என்றும் உண்டு. ஈஶ்வரனுடைய அவதார மென்பது ஒருதரம் நேரிடுமென்றால், பலதரமும் நேரிடக்கூடாத நிஷேதமில்லை. ஈஶ்வரனுக்கு அவதரிக்கக்கூடாதென்கிற நிர்ப்பந்தத்துக்கு ஹேதுவில்லை. அவனது காருண்யம் அவதாரண ஹேதுவாகின்றது. ஒருவன் பண்ணின பாபத்துக்காக அந்யர் தண்டிக்கப்படமாட்டார்கள். ஒருவன் மரணத்தால் மற்றோர்க்கு ரக்ஷணமென்பது நேரிடமாட்டாது. இந்த விஷயங்களிலெல்லாம் வைதிக ஸம்ப்ரதாயம் மட்டும் ஸரியான நிர்ணயங்களை அநுக்ரஹிக்கின்றது. அந்யமத நிர்ணயங்கள் யுக்தியுக்தங்களல்ல.

வைதிக ஸம்ப்ரதாயம், ஆர்யரென்றும் த்விஜரென்றும் சொல்லப்பட்ட ஜநங்களிடம் நீடித்து ப்ரகாஶித்தது. அவர்கள் ஸ்வாசார்யர்களுடைய கட்டளையால வேத ஶப்தங்களை ஆசார்யர்களுபதேசிக்கத் தடைபட்டுகின்றார்கள். அவர்கள் மந்த்ரங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் ப்ரயத்நபூர்வமாக ரக்ஷிக்கவேண்டியவர்கள். அவ்வுபதேசம் பலகாரணங்களையிட்டுப் பிறந்திருக்கும். ஆசார்ய நியமமை அதிலங்கிக்கத்தகாதது. அபஶூத்ராதிகரண ந்யாயமானது ஆஸ்திகர்களால் அங்கீகரிக்கத்தக்கது. த்விஜர் மத்யம ஆசார்யர்க்கில்லை. ஆசார்யர்களுடைய ஹிதத்தை உத்தேசித்தே, இதிஹாஸ புராணங்கள் வேதங்களுடைய ஸாரார்த்



தங்களை உட்கொண்டிருக்கும்படி, மஹர்ஷிகளால் பண்ணப்பட்டன. இதிஹாஸபுராண ஸம்பந்தமாக, வேதமதத்தைக்காட்டிலும் அந்யமதமொன்று உண்டானதென்று சொல்கின்றவர்கள் உண்மை யுரைப்பவர்களல்லர். பகவத் ஶாஸ்த்ரமும், 'ஶ்ரேயோ வதிஷ்டம், பதாவெந்தேஷு ஸத்ருதம்', என்கிறபடியே, வேதாநுஸாரியாகவே தான் ப்ரவர்த்தித்தது. நிஷ்காம கர்மாநுஷ்டானத்தைப் பகவதாராதநமாகப் பண்ணுவதென்பது அந்த ஶாஸ்த்ரத்தையொட்டி அநாதியாக ஏற்பட்டுக் கீதையின் மூலமாகப் பிற்காலத்தில் வெளியிடப்பட்டது. 'ஶ்ரீராஜீ ஶோ நவேஹஸா, பத்ருஷாஷம் ஹமுபெதாயம் பொஶேஹக்ஷ்யா ஶ்ருயஹதி', என்கிற வாக்யங்கள், திவ்யமங்கள ரூபத்தைத் தரிக்கின்ற பகவானுடைய ஸேவையை ப்ரதர்ஶிக்கின்றன. பகவதாராதந ஸௌகர்யம் அர்ச்சையை அபேக்ஷிக்கின்றது. அந்ய ப்ரகாரமான ஆராதநம் நிஷேதிக்கப்படவில்லை; தூஷிக்கவும்படவில்லை. ஆராதந ப்ரகாரங்கள் அதிகாரிநியதங்கள். அர்ச்சையை அதிக்ரமிக்கக்கூடிய அதிகாரிகளைப்பற்றி இக்காலத்தில் விரல்மடக்கவும் அமையமாட்டாது. அர்ச்சையைத் தவிர்த்தாலும் அதைப்போன்ற பாஹ்யவஸ்துக்களின் ஸஹகாரித்வமின்றிப் பகவத் சிந்தநம் என்பது இக்காலம் அமையாது. யோகிகளுக்கு இது காலமன்று. யோகிகளும் அர்ச்சாரூபியாகப் பகவான் ஸ்வபக்தர்களுக்கு அநுக்ரஹம் செய்யமாட்டாரென்று சொல்லத் துணியார்கள். இவ்வண்ணம் யோசிப்பவர்களுக்குத் தத்காலம் வழங்குகின்ற பகவதாராதந க்ரமங்களில் த்யஜிக்கவேண்டிய அம்ஶங்கள் யாதொன்றும் ஏற்படமாட்டாது. லோகங்களுக்குப் பரமோபகாரமாயிருக்கும்படியாக, ஶாஸ்த்ரார்த்தங்களை த்ராவிட ப்ரபந்தரூபமாக, ஆழ்வார்கள் அநுக்ரஹித்திருக்கின்றார்கள். அவர்கள் அர்ச்சாவதாரங்களில மிகவும் ஈடுபட்டவர்கள்.

அந்ய மதங்களை உண்டாக்குபவர்களையும், ஜந்மமதத்தை த்யாகஞ்செய்து அந்யமதங்களைச் சேர்பவர்களையும் நாம் கேட்க வேண்டியதொன்றுண்டு. 'உம்முடைய பூர்வமதஸ்தர்களெல்லாரும், இறந்தபின்பு என்னகதியை அடைந்தார்கள்? த்யாகம் செய்யப்பட்ட மதத்தை விஶ்வஸித்த உங்களுடைய பூர்விகர்கள் யாது கதியைப் பெற்றார்கள்?' இதற்கு விடையானது முற்பட்ட யாவரும் நரகத்துக்குச் சென்றார்கள், என்றல்லவோ உதிக்கவேண்

டும்? அந்த விடை அஹங்காரத்யோதகமன்றோ? ஸ்வஜநங்கள் யாவரும் நரகத்தில் வஸிக்கத் தான்மட்டும் நல்லகதிக்குப் போவதாக எண்ணுகின்றவனைக் காட்டிலும் பேதை இந்த லோகத்தில் பிறக்கமாட்டான். ஆகிலும், ஸமீசீந யோசனையின்றி அநாதியாய் அவிச்சிந்நமாய் வந்த ஸம்ப்ரதாயத்தை விட்டுவிட்டுக் கேவல யுக்தி கல்பிதங்களான ப்ரஹ்ம ஸமாஜமென்றும், ஆர்ய ஸமாஜமென்றும், தியாஸபி என்றும், ராமக்ருஷ்ணமதமென்றும், மதாந்தரங்களென்றும் சொல்லிக்கொண்டு ப்ரஷ்டத்வத்தில் பாய்ந்தோடும் ஜநங்களைப்பற்றி என் சொல்வோம்? மஹம்மதியர் வந்தவுடன் பலாத்காரத்தினாலும், ஐஹிக ஸௌகர்யங்களை உத்தேசித்தும், ஹிந்துக்களாயிருந்த பலர் மஹம்மதியர்களாய்ப் போனார்கள். ஐஹிக ஸௌகர்யங்களை எண்ணியும், ஸம்ஸர்க்கதோஷங்களாலும், தற்காலம் சிலஹிந்துக்கள் கிறிஸ்தவர்களாகின்றார்கள். மனம் போனபடியெல்லாம் மதங்கள் ஏற்படுவதும், மனம்போனபடியெல்லாம் ஆசாரங்களும் வேஷங்களும் மாறுவதும், இன்னும் விசேஷ காரணங்களையும் ஆச்ரயித்து நிற்கின்றன. அக்காரணங்களில் முக்யமாயிருக்கின்றது விஷய போகங்களுடைய இச்சை. ஒருதேசத்தார் தேசாந்தரங்களை ஆக்ரமிப்பதும், கூலிக்காரர் க்ஷத்ரிய வைச்யவ்ருத்திகளில் இருப்பவர்களை நிர்ப்பந்திப்பதும், பூர்வ மர்யாதைகள் அழிபடுவதும், அக்ருத்யகரணங்களும் க்ருத்யாகரணங்களும் ஜநங்களுக்குள் பரவுவதும், இன்னும் லோகத்தில் ப்ரகாசிக்கின்ற ஸர்வவித ப்ரயத்நங்களும், போகேச்சையிலும், தத்ப்ரதிபந்திகளானவர்களிடம் த்வேஷத்திலும் நிலைக்கின்றன. பகு பெயர் புதுமதங்களைக் கல்பித்துப் பழையமதங்களை த்வேஷிக்கின்றார்கள்; இன்னும் சிலர் அந்யமத ப்ரவிஷ்டர்களாய்ப் பூர்வமதத்தை நிந்திக்கின்றார்கள். ஒவ்வொருவனும், இல்லாதபாத்யங்கள் கொண்டாடிக்கொண்டு, அதற்கென்று பரரை த்வேஷிக்கின்றான்; தான் வேண்டிய பொருளின் இல்லாமைக்குத் தன்னிடமே காரணம் தேடுகின்றானில்லை. ஒவ்வொருவனும் பரர்க்குக் கடமைப்பட்டிருக்கும் மார்க்கங்கள் இக்காலம் ஒருவர்க்கும் தெரிவதில்லை. ஒருவன் ஸ்வஹித புத்தியினால் மேற்கொண்ட ஆசாரங்களும், அநுஷ்டிக்கின்ற கர்மங்களும, மற்றொருவனுக்குப் பதவைர மூலமாகின்றன. பல காரணங்களையிட்டு ப்ராசீந கொள்கைகள் விடப்படலாம். நூதந கொள்கைகள் விச்வாஸத்தோடு அங்கீகரிக்கப்படலாம். இத்தகைய செய்கைகளுடன் கூடினவன் ப்ரா-



சீந விச்வாஸங்களை விடாதவர்பக்கல் நிந்தையும் த்வேஷமும் செய்தானாகில், அவனைவிட அதமன் யோசிக்கக் கிடைக்கமாட்டான். எவ்விடமும் த்வேஷம் லோகஹிதத்தில் முடியமாட்டாது.

ஜீவனுக்கு சரீர ஸம்பந்தத்தால் பிறப்பு இறப்பு என்பவை யோசிக்கப்படுகின்றன. ஜீவனுடன் சேர்ந்த சரீரங்கள் மரணமடைகின்றன. ஜீவனுக்கு உத்பத்தியும் நாசமும் இல்லை. அப்படிப்பட்ட எல்லா ஜீவன்களும், ஸர்வ புருஷார்த்தங்களையும் ஒரே ஜந்மத்தில் ஸாதித்துக்கொள்ள வேண்டுமென்பது யுக்திக்குப் பொருந்தாது. ஜீவன் ஸத்விஷயத்தில் ப்ரவர்த்தித்தானாகில், அதன் பலன் ஜந்மாந்தரத்திலும் அவனுக்கு அநுகூலம் செய்யும். அவனுடைய அபிக்ரமத்துக்கு நாசமில்லை. அவனிட்டபடை கற்படையே. மேலே நாம் விவரித்ததை நன்றாக யோசித்து, ஒவ்வொருவரும் ஸ்வ ப்ரவ்ருத்திகளை நிச்சயித்துக்கொள்ள வேண்டுமென்று இவ்வளவுதூரம் எழுதினோம். எவ்வளவோ பேதங்களை ஆவிஷ்கரிக்கின்ற பூமியிலே, கர்மங்களாலும், ஆசாரங்களாலும், ஜ்ஞாநத்தாலும், லோகாந்தர சிந்தையாலும், பகவத்பக்தியாலும், ஆத்மகுண பூர்த்தியாலும், துஷ்க்ருத்யத்தாலும், அஜ்ஞாநத்தாலும் மநுஷ்யர்கள் ஸங்க்யாதீதங்களான வைஷம்யங்களுடன் ப்ரகாசிக்க, மநுஷ்யர் யாவரும் ஸமாநரென்று சொல்லிக்கொண்டு ஸாதுக்களை த்வேஷிக்கின்றவர்களை யெண்ணி எழுதினோம். கேவல தர்க்க ஸாமர்த்யத்தால் நினைத்ததெல்லாம் ஸாதிக்க யத்நிப்பது விசேஷமாகாது. லோகாந்தர விஷயத்தில் ஒவ்வொருவரும் ப்ரமாண சரணராய் இருப்பது நலம்: "ஆதலால் இவ்விச்வர தத்வத்தையும், ஈசிதவ்ய தத்வங்களையும் யதாப்ரமாணம் தெளிய ப்ராப்தம். இவ்விடத்தில் ஸர்வஜ்ஞனாகவும் வேண்டா. அத்யந்தாநுபயுக்தங்களிற்போலே ஸ்வல்போபயுக்தங்களான அவற்றில் அபிஸந்தி பண்ணவும் வேண்டா. அபரிச்சேத்யமான கடலில் படகோடுவார் வழிமுதலாக வேண்டுவன தெளியுமாப்போலே, இவ்வளவு விவேகிக்கை அவச்யாபேக்ஷிதம். இது ப்ரதிஷ்டிதமாகைக்காக இவற்றின் விரிவுகள் எண்ணுகிறது." உபயுக்தங்களில் தெளிவும், த்ரிவர்க்க நிரபேக்ஷதையும், மநோவாக்காயங்களை ஒரேவழியில் வைத்துக் கொள்வதும், பரமஸுக ப்ராப்திக்கு ரஸாயநமாகின்றன,

ஸ்ரீ:

# ப்ரேம ப்ரவாஹம்.

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.)

எனது சித்தத்தை உன்னிடம் செல்லாது இழுக்கின்ற இந்த்ரியார்த்தங்களைப் பரிசோதித்தால், உன்னை நினைக்காதிருக்க இயலமாட்டாது. சிதசித் பதார்த்தங்கள் யாவும் பௌதிக சாஸ்த்ர நிபுணர்களால் எவ்வளவுதூரம் சோதிக்கப்பட்ட போதிலும், முற்றிலும் விளங்காத சில அம்சங்கள் அவற்றுள் உள. அவ்வம்சங்கள், 'இவை யாவும் உனது மஹிமை' யென்று ச்ருதி சொல்வதை எடுத்துக்காட்டுகின்றன. பதார்த்தங்களை விபஜித்துக்கொண்டு, மநுஷ்யர்க்கு அவை போகஸாதநங்களாகும் க்ரமங்களை யோசித்துக்கொண்டு, சிலர் பண்டிதமாநிகளாகின்றனர். அவற்றினுள்ளும், அவற்றிற்கு வேறாகவும் நிற்கும் உனது மஹிமையென்று அவற்றைக் காண்பவன்தான் வீதசோகனென்று சொல்லப்படுகின்றான். பதார்த்த ஜ்ஞாநம் எவர்களுக்குப் போக ப்ரயோஜநமாகப் பரிணமிக்கின்றதோ, அவர்களுக்குப் பதார்த்தங்களின் பரமார்த்தம் நீயெனும் உண்மை எவ்வண்ணம் ப்ரகாசிக்கும்? ஆதலால் விஷய ப்ராவண்யத்தில் முழுகிய மநஸ்ஸானது உன்னைத் தேட அசக்தமாய் நிற்கின்றது. விஷயேச்சையைத் தன்பொருட்டோ பர்பொருட்டோ பெருக்குகின்றவர்களுக்கு, விஷயார்ஜநத்தில் ப்ரயத்நம், ஆர்ஜிதவிஷய ரக்ஷணத்தில் ஜாக்ரதை, அதை ஸ்வபோகத்தின் பொருட்டோ பருடைய போகத்தின் பொருட்டோ விநியோகித்தல், அந்த விநியோக பலாபேக்ஷை, பலப்ரயுக்தமான ஸந்தோஷம், வைபல்யத்தால் வரும் சோகம், பலோத்பத்திக்கு ப்ரதிபந்திகளாய் இருப்பவரிடம் த்வேஷம், இத்தகைய சித்த ப்ரவ்ருத்திகள் அநிவார்யங்கள். தத்காலத்தில் ப்ரஜைகளால் ச்ரேஷ்டர்களெனக் கொண்டாடப்படுகின்றவர்கள், மேலே விவரித்த ஸ்திதியை அதிக்ரமித்தவர்களல்லர். ஆனபடியால் ப்ராயிகமாக வாஹ்யார்த்த சிந்தனையானது உன்னுடைய ஸ்மரணையைத் தூர விலக்குகின்றது.



"பார்க்கப்பட்ட யாவத் வஸ்துக்களின் பரமார்த்தமும் நீயே. ஆதலால், இவை யாவும் நீயே. அநந்தன் யாவற்றினுள்ளும் உளன். ஆதலால் நானும் அவனே" என்கிறபடியே, லோகத்தினுடைய பரமார்த்த த்ருஷ்டியானது ப்ரஹ்லாதனுக்கு வாய்த்தது. இக்காலத்தில் அவ்வநுபவம் தகையப்பட்டு நிற்கின்றது. 'யதம்ஸோ வைஷ்ணவ: காய:' என்கிறபடியே, ஸர்வ ப்ரபஞ்சத்துக்கும் மூல காரணமா யிருக்கின்ற 'அப்' சப்தவாச்யமான ப்ரக்ருதியானது உனது சரீரம். அதனின்று 'விவிதா: ப்ரஜா:' எனப்பட்ட ஸர்வவித போக்தாக்களான சேதநர்களையும், அவர்களுக்கு உபயோகமான போக்ய பதார்த்தங்களையும் நீ பரிணாம க்ரமத்தில் உண்டாக்கினாய். அதுவும் உனது அநுப்ரவேசத்தால் ஸித்தித்தது. இந்த உண்மையறிந்தவர்களுக்கு ஸர்வ பதார்த்தங்களின் பரமார்த்தம் நீயென்பதும், ஸர்வமும் உனது சரீரங்களாகின்றபடியால் ஸர்வமும் நீயே என்பதும் விளங்கும். ஸ்வரூபத்தில் விகாரம் தட்டாத ஜீவாத்மாக்கள், ஸத் என்றும் அஸ்தி என்றும் வ்யவஹரிக்கப்படுகின்றார்கள். ஸதத விகாரிகளான பௌதிக பதார்த்தங்கள், அஸத் என்றும், நாஸ்தி என்றும் வ்யவஹரிக்கப்படுகின்றன. ஜ்ஞாநமே உனது ஸ்வரூபம். யாவும் உனது சரீரங்கள். ஆயினும் வஸ்துக்கள் யாவும் 'ஜ்ஞாந ஸ்வரூபியான நீயன்று. அசித் வஸ்துக்கள் உனது ஸங்கல்பத்தால் ஜீவாத்மாக்களுடைய கர்மங்களுக்கு அநுகுணமாக போகாயதநரூப பரிணாமங்களை அடைகின்றன. அப்படிப்பட்ட தேவாதி சரீரங்களை உனது வஹுவித ஸங்கல்பத்தால் நீயே தரிக்கின்றாய் என்று சொல்லப்பட்டது. வஸ்துக்களிடம் பாவிக்கின்ற பேதங்கள் போக்தாக்களான சேதநர்களுடைய கர்மங்களை மூலமாயுடைய உனது ஸங்கல்பத்தின் பலங்கள். எந்த சேதநனுக்கு ஸர்வகர்ம க்ஷயமுண்டாகி, ஸர்வதோஷ நிவ்ருத்தியால் அவனுடைய சுத்தமானதும் ஜ்ஞாநமாத்ரமானதுமான நிஜஸ்வரூபம் ஸித்திக்கின்றதோ, அவனுக்கு ஸர்வமும் உனது சரீரமாகத் தோன்றும். இந்த ப்ரபஞ்சம் முழுதும் நினது மஹிமையாகத் தோன்றும். நீயே தத்வம். ஆதிமத்யபர்யந்த ஹீநனாய், எப்போதும் ஒரே ரூபத்துடன் கூடினவனாய், ஸர்வ வ்யாபியாய், ஸர்வமூர்த்தியாய், இருக்கப்பட்ட உன்னைத்தான் வித்வான்கள் வஸ்துவென்பார்கள். ஒவ்

வொரு க்ஷணமும் விகாரத்தை யடைகின்ற யாவும் வஸ்துவாக மாட்டா. அவை லோக வ்யவஹாரத்தின் பொருட்டு ப்ராணி கர்மங்களைக் காரணமாகக்கொண்டு, உன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டன. ஆதலால் லோக வ்யவஹாரத்தை அதிக்ரமித்த மஹாத்மாக்கள் அஸத் பதார்த்த ஸாக்ஷாத்காரத்தால் உண்டாகும் பேத புத்தியைத் தவிர்த்து, ஜ்ஞானைகாகாரனை உன்னையே ஸர்வத்ர காண்பார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள் இக்காலம் இலர். ஜாக்ரதவஸ்தையில் பேதத்ருஷ்டிதான் ஸம்பாவிதம்.

ஸ்வப்நாவஸ்தை வ்யவஹாரத்துக்கும் ப்ரயோஜநமற்றது. அக்காலத்தில் உண்டாகின்ற அஸ்திரங்களான ஸுகதுக்கங்கள் மித்யாபூதங்களெனச் சொல்லப்படுகின்றன. அவை பூர்ணமாக மித்யையன்று. அவற்றிற்கு க்ஷணகாலம் வரையிலாவது ஸத்யத்வம் உண்டு. பாஹ்ய பதார்த்தங்களுக்கும் ஸத்யத்வம் அத்தகையதே. அவை ஸ்வப்ந த்ருஷ்ட பதார்த்தங்களைக் காட்டிலும் நீடித்துத் தோற்றுகின்றன. ஆனால் உனது மஹிமையை ஸ்வப்நாந்தத்தில் ஊகிப்பது ஸுலபம். ஜாக்ரதவஸ்தை இந்த லோகாநுபவம். மரணத்தின்பிறகு சேதநனுடைய கர்மாநுகுணமாகப் பரலோகாநுபவம் ப்ராப்தமாகின்றது. ஸ்வப்நாவஸ்தையில், இஹலோக பரலோகாநுபவங்கள் இரண்டும் ஸித்திக்கின்றன வென்று ஶ்ருதி நிர்ணயம். ஸ்வப்நாந்தத்தில் பூர்வாநுபூத பதார்த்த தர்சநம் பூர்வாநுபவ ப்ரத்யபிஜ்ஞை யென்று சொல்லக்கூடும்; பூர்வாநுபூதமாகாத தர்சநங்கள் ஸ்வப்நகாலத்தில் ப்ராப்த மாகின்றன. என்றும் பார்க்காத மநுஷ்யர்களையும், தேசங்களையும் பார்க்கின்றோம். என்றும் காணாத அநுபவங்கள் உண்டாகின்றன. இவற்றிற்கு ஒருவிதமாக சேதநன் ஸ்வகர்மங்களால் காரணனாகிலும், கர்மாத்யக்ஷனான நினது ஸங்கல்பமின்றி அவை உண்டாக மாட்டா வாகையால், ஸந்தி யெனப்பட்ட ஸ்வப்நகால ஸ்ருஷ்டங்களான தோற்றங்களுக்கு நீயே பரமகாரணன். சேதநன் காரணனாகில் அவனது இச்சைப்படி அநுபவங்கள் அவனுக்கு நேரிடலாம். ஆகலால் உனது மஹிமையைக் கண்டு ஸந்தோஷித்து, உன்னிடம் ஸர்வ சித்தத்தையும் செலுத்தாமல், ஸ்வப்நாந்தாநுபவங்களை யோசனையின்றி மறப்பவர்களுக்கு நீ தூரத்தில் நிற்கின்றாய். ஸ்வப்ந காலத்தில், இந்த்ரியாநுக்ராஹகங்களான ஆதித்யாதி ஸர்வஜ்யோதிஸ்ஸுக்களும் அபாவத்தையடைய, இந்த்ரிய



தேஜஸ்ஸுகளைத் தனக்குள் அடக்கிக்கொண்டு, ஜீவாத்மாவானவன் ஸ்வாநுபவங்களைத் தனது ஜ்யோதிஸ்ஸால் ஸாதித்துக்கொள்ளுகின்றான். அந்த ஸ்வயம் ஜ்யோதிஷ்ட்வம் அவனுக்குக் குறைவின்றி ஶாஶ்வதமாய் இருக்கின்றபடியால் தான் ஜாக்ரத் ஸ்வப்நாநுபவங்களெல்லாம் அவனுக்கு ஸித்திக்கின்றன. அவனே அக்காரணத்தால் ஶ்ருதியானது ஹிரண்மயனான புருஷனென்றது. ஜாக்ரத் முதலான ஸர்வாவஸ்தைகளிலும் அவன் ஒருவனே செல்கின்றானாதலால், அவனே ஏக ஹம்ஸனென்றது. ஸ்வப்ந காலத்தில் அவனுடைய க்ரீடைகளை ஶரீரவான்கள் ஸாக்ஷாத்கரிக்கின்றார்கள். போக்தாவான அவனைப் பார்ப்பவர்கள் இல்லை. அவன் போகங்களுக் கெல்லாம் பரம காரணனாக உன்னையும் நினைப்பார்களில்லை.

ஜீவன் ஸுஷுப்தி காலத்தில் உன்னிடம் விஶ்ரமிக்கின்றான்: ப்ரஸித்தமாக ப்ராஜ்ஞனென்று பெயர்பெற்று, ஹ்ருதய கமலத்தில் வஸிக்கின்ற நின்னால் ஆலிங்கிதனாகின்றான். ஆயினும் அவ்வண்ணம் விஶ்ரமிக்கும் காலத்தில் உன்னிடம் விஶ்ரமிப்பதாக அவன் அறிவதில்லை. மறுபடி ஸ்வப்நாவஸ்தைக்கும் ஜாக்ரதவஸ்தைக்கும் திரும்பிவருங் காலங்களில், ஸுஷுப்தியில் உனது ஸம்பந்தத்தைப் பெற்றதையும், அங்கிருந்து பாஹ்யாநுபவங்களுக்குத் திரும்பினதையும் எண்ணுகின்றானில்லை. அவ்வண்ணம் ஶ்ருதியே மொழிகின்றது. பாஹ்யாவஸ்தையில் தேவனென்றும், மநுஷ்யனென்றும், ம்ருகமென்றும், பக்ஷியென்றும் விவித ஶரீர ஸம்பந்த ப்ரயுக்தமாக வ்யவஹரிக்கப்பட்டவன், ஸுஷுப்தியில் ஸர்வ ஶரீர ஸம்பந்தமற்றுக் கேவலம் தனது நிஜஸ்வரூபத்தோடு உன்னிடம் லயிக்கின்றான். அப்போது பிதாவென்றும், மாதாவென்றும், திருடனென்றும், கொலைபுரிந்தவனென்றும், சண்டாளனென்றும், ஸந்யாஸியென்றும், தபஸ்வீ யென்றும் வ்யவஹரிக்கப்பட்டவன், மேலே விவரித்த ஆகாரங்களனைத்தும் முற்றிலும் நீங்கிப் புண்ய கார்யங்கள் செய்தவனாகில் அப்புண்ய கர்மங்களுடைய ஸம்பந்தமற்றும், பாபத்தொழில்கள் புரிந்தவனாகில் அவற்றினுடைய துவக்குமற்றும், தனது ஶுத்தமான ஜீவத்தன்மையில் உன்னிடம் லயிக்கின்றானென்றும் காட்டப்பட்டது. அப்போது அவனுடைய ரூபமானது ஸர்வகாமவர்ஜிதமென்றும், புண்ய பாபரூப உபய கர்மாஹிதமென்றும், அஜ்ஞாநத்தில் அவ்

குறிக்கின்ற ஸர்வபய விநிர்முக்த மென்றும் சொல்லப்பட்டது. இப்படி ஒவ்வொரு நாளும் ஜீவன் அநுபவிக்கும் தசையைப்பற்றி "நான் ஸுகமாகத் தூங்கினேன்; யாதொன்றையும் அறிந்தேனில்லை" என்று, இம்மட்டும் அவன் உரைக்க வொண்ணுமேயன்றி, வேறுசொல்ல அமையமாட்டாது. இத்தகைய மந்தபாக்யத்தைப் பற்றி என் சொல்லக்கூடும்? ஒருவன் வஸிக்கு மிடத்தின்கீழ், மஹாநிதி புதைக்கப்பட்டிருந்தால், அதனுடைய இருப்பை அறியாமலே அதன்மீது ஸஞ்சரிப்பவனுக்கு அதனுடைய ப்ரயோஜநம் முற்றிலு மிலது. நிதியின் இருப்பை அறியும் ஶக்தியுள்ளவரன்றோ அதை எடுத்து அநுபவிப்பார்கள்? அப்படியே இந்த்ரிய ஜயமுள்ளவர்கள் தமது மநஸ்ஸை யடக்கி நிஶ்சலமான புத்தியுடன்கூடினவர்களாய், ஹ்ருதய குகைக்குள் வஸிக்கும் உன்னை ஸாக்ஷாத்கரித்து உபாஸிப்பார்கள். மற்றோர்க்கு, உள்ளிருக்கும் நாதன் எவ்வண்ணம் ஸாக்ஷாத்காரார்ஹன் ஆவான்? இவ்வண்ணம் ஶ்ருதியே சொல்கின்றது. அத்யந்தம் அகிஞ்சநனான நான், எனது அந்தராத்மாவான உன்னை எவ்வண்ணம் தர்ஶிப்பேன்?

(இன்னும் வரும்.)

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. | ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்ய பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |
| 3. | ஸ்ரீ பாகவத தஶஶ்லோகி - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்மாசார்யர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 4. | ஸ்ரீ சதுஶ்ஶ்லோகிவிவரணம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 5. | ஸ்ரீராமாயணத்தில் விசேஷார்த்தங்கள் ஸ்ரீ. உப. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |

600 008.

ஸ்ரீ:.

ஶ்ரீமதே நம:.

# ஸம்ஸ்க்ருத பாஷாபி வ்ருத்தியும் ஆலய பரிஷ்காரங்களும்.*

---

ஸாதவம்ருத்தம் ஸமப்யஸ்ய
ஷாட்குண்ய ஸமிதஸ்திதம் ।
ஸம்ஸாராத்யஸ்ய க்ருத்யஸ்ய
பூர்ணம் ஸமஸ்த்ஸமாஹே ॥

**உபோத்காதம்.** ஶ்ரீபாஷ்ய வேதாந்தங்களிலும் 'அஸாதாரண' பாண்டித்யமுள்ள அநேக வித்வத் ஸிம்ஹங்களால் அலங்கரிக்கப்பட்ட இந்த மஹாஸபையில் சிற்றறிவுள்ள அடியேன் உபந்யாஸம் செய்ய ஆரம்பித்தது, இந்த மஹாஸபையின் நியமநத்தை ஶிரஸா வஹித்து; அதனால் உண்டான தைர்யத்தினாலேயே. அடியேன் உபந்யாஸம் செய்ய வேண்டிய விஷயம், 'கீர்வாண பாஷாபிவ்ருத்யுபாயமும் தேவாலய பரிஷ்காரங்களும்'. இவ்விஷயம் இரண்டாகத் தோன்றினாலும், இவை நஷ்டாஶ்வ தக்தரத ந்யாயத்தால் பரஸ்பரம் உபகார்யோபகாரக பாவத்தாலே ஒரே விஷயமாகவே மதிக்கப்படலாம். இந்த உபந்யாஸத்தில் கீழே சொல்லப்படும் 6-விஷயங்கள் விவரிக்கப்படுகின்றன.

---

* இது, சென்ற௵ டிசம்பர்௴ திருவஹீந்த்ரபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 9-வது வார்ஷிக மஹாஸங்கத்தில், ஸ்ரீ. உப. வேங்கடாத்ரி அகரம் - அநந்தாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

1. எல்லாரும் ஸம்ஸ்க்ருத பாஷையை அவஸ்யம் கற்கவேண்டும்.
2. ஆதிகாலங்களில் ஸம்ஸ்க்ருத பாஷையின் நிலைமை எவ்வாறு இருந்தது?
3. ஷை பாஷையின் தற்கால நிலைமை எப்படி?
4. ஷை பாஷை வ்ருத்தியாகவேண்டிய உபாயங்கள்.
5. தேவாலயங்களில் ஸம்ஸ்க்ருத பண்டிதர்களின் ஸம்பந்தம் இல்லாததனால் காணப்படும் குறைகள்.
6. அவர்களின் ஸம்பந்தத்தால் தேவாலயங்களுக்கு ஏற்படும் நன்மைகள்.

ஸம்ஸ்க்ருத பாஷையை எல்லாரும் அப்யஸிக்க வேண்டும்.

'ஜாயமானோ வை ப்ராஹ்மண: த்ரிபி: ருணவாஜாயதே - ப்ரஹ்மசர்யேண ருஷிப்ய: யஜ்ஞேன தேவேப்ய: ப்ரஜயா பித்ருப்ய:' என்னும் ஸ்ருதியினாலும், 'ருணாநி த்ரீண்யபாக்ருத்ய மநோ மோக்ஷே நிவேஸயேத்' என்னும் மநுஸ்ம்ருதியினாலும், ஒவ்வொரு ப்ராஹ்மணனும் மூன்று கடன்களோடு ஜநிக்கிறானென்று சொல்லப்படுகிறது. ருக் யஜுஸ் ஸாமம் என்கிற மூன்று வேதங்களை ப்ரவசநம் செய்துகொடுக்கும் கல்பஸூத்ர க்ருஹ்ய ஸூத்ராதிகளைச் செய்தும், ஸம்ப்ரதாயமான வர்ணாஸ்ரம தர்மங்களில் நமக்கு அதிகாரத்தைக் கொடுத்தும், தந்மூலமாய் 'ஆஹார ஸுத்தௌ ஸத்வஸுத்தி: ஸத்வஸுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:' என்று சொல்லும்படி இதர விலக்ஷணமான ஜ்ஞாந விஸேஷத்தைக் கொடுத்தும் மஹோபகாரம் செய்த மஹர்ஷிகளுக்கு நாம் ப்ரத்யுபகாரம் செய்வதுதான் அவர்களுடைய கடனைத் தீர்ப்பதாகும்.

'வேதாநதீத்ய வேதௌ வா வேதம் வாபி யதாக்ரமம் । அவிப்லுத ப்ரஹ்மசர்ய: க்ருஹஸ்தாஸ்ரமமாவஸேத்' என்று ப்ருஹ்மசர்யாஸ்ரமத்திற்கு விதிக்கப்பட்ட நியமங்களோடேகூட வேதங்களையும் வேதாங்கங்களையும் அத்யயநம் செய்வதுதான் அவர்களுக்கு நாம் செய்யும் ப்ரத்யுபகாரம். ஆகையால், ஸம்ஸ்க்ருத பாஷையை ஒவ்வொருவரும் யதாஸக்தி அத்யயநம் செய்ய வேண்டியது நிர்ப்பந்தமாய் விதிக்கப்படுகிறது.



ஸ்ருஷ்டி ப்ரயோஜந நிர்ணயம்.

மேலும், வர்ணாஸ்ரம தர்மங்களை அநுஷ்டிப்பதற்காகவே ஜநங்கள் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனரென்றும், ஷை வர்ணாஸ்ரம தர்மங்களின் ஸ்வரூபம் ஸம்ஸ்க்ருத பாஷையினாலேயே அறியத்தக்கது என்றும் ஸாஸ்த்ரம் சொல்லுகிறது.

'ஸஹயஜ்ஞா: ப்ரஜா ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி: । அநேந ப்ரஸவிஷ்யத்வம் ஏஷ வோऽஸ்த்விஷ்டகாமதுக்' என்று பகவத்கீதை மூன்றாவது அத்யாயம் 10-வது ஸ்லோகத்தில் யஜ்ஞரூபத வாச்யங்களான ஸ்வதர்மங்களை அநுஷ்டிப்பதற்காகவே ஸர்வேஸ்வரன் லோகத்தை ஸ்ருஷ்டித்தான் என்று சொல்லப்படுகிறது.

'யஜ்ஞஸஹ' என்று அப்ரதாநே த்ருதீயை இருக்கும்போது, அதெப்படியென்றால்: 'ஸ்வாராதநைகவேஷயஜ்ஞ ஸஹிதா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா' என்று ஸ்ரீபாஷ்யகாரர் ஸேஷ பூரணத்தினால் வ்யாக்யாநம் செய்திருப்பதால் ஸ்வதர்மாநுஷ்டாநத்திற்கு ப்ராதாந்யம் ஏற்படுகிறது.

ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் மூன்றும் ஜீவாத்மாக்களுடைய ஸ்ரேய: ப்ராப்த்யர்த்தமான ப்ரவ்ருத்தி விஸேஷமே ஒழிய வேறில்லை. ஸம்ஹாரத்தினால் ஜீவாத்மாக்களுக்கு என்ன உபகாரமென்றால், 'அநவரத ஸம்ஸரண ஸ்ரம பரிஸ்ராந்தாநாம் விஸ்ராமாய கரணாநாம் ப்ரளயம் அநாதி விஹிதாநாம் உபஸம்ஹார:' என்று ஸ்ரீமத் தாத்பர்ய சந்த்ரிகையில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஸிகன் அருளிச்செய்தார். அப்போது பகவானுடைய திருவுதரத்தில் அசேதந பாஷாணத்தி கல்பங்களாய்க் கிடக்கிற ஜீவர்களைப்பார்த்து கருணையினால் பகவான் இவர்களைக் கொண்டு வர்ணாஸ்ரமதர்மாநுஷ்டாந பூர்வகமாய்,

பக்திப்ரபத்யங்யதரோபயத்தை அநுஷ்டிப்பித்து ஸ்வரூப ப்ராப்தமான பகவத் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தை அடைவிப்பதற்காக ஸ்ருஷ்டிக்கிருரென்று ஶாஸ்த்ரத்தின் ஹ்ருதயம்.

'ஊவிஷ விஶிஷ்டாநு ஞூஉயெ ஜஊ-ு நவெஞாகூ ஜாத நிவெ-ஷா .. காணகஷெபாவொமம் விதாவஸி வூஷெஶெஷ நாயு காஙெண கூம்' இந்தப் பத்யமும் இவ்விஷயத்தில் ப்ரமாணம். அப்போது பகவத் ஸ்ருஷ்டியில் அகப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அதிகாரத்திற்குத் தக்கபடி வகுப்பட்டிருக்கும் ஸ்வதர்மங்களை அறிந்துகொள்ளவேண்டியது முதல் கட்டமையாகும்.

ஷி தர்மங்கள் 'யஉ-லூ தகூம் நிஷிதம் மாஊாயாழு' என்றும், 'ஸ-ுக்ஷுஃ வாஉ ஊஜெூ-யஃ' என்றும் சொல்லுகிறபடியே, அதி ஊருஹ மாகையால் அவைகளை எளிதில் அறிவிப்பதற்காக ஶ்ருதி ஸ்ம்ருதிதிஹாஸ புராணுதி க்ரந்த ஜாதங்களை அவதரிப்பித்தான்.

ஹுயஉ-ு ஜூா நாய ஶாஞூா யூபநம்.

இப்படி, பக்தி ப்ரபத்யங்யதர உபாயாநுஷ்டாநத்திற்கு விரோதியான அஜ்ஞாநத்தை நிவ்ருத்திப்பதற்காகவும், தது-ப்யுக்தஜ்ஞாந விஶேஷத்தை அடைவிப்பதற்காகவும் ஜாத கர்ம ப்ரப்ருதி ஸம்ஸ்காரங்களையும் ஸ்ருஷ்டித்தான்.

'மாஜெஷ-ு ஷெ-ர்ஜெஉ ஜ-ாத கஉ-ுவளஉ ஊளஂஜீ நிவநஜெ நஃ-ஜெவஜிகஂமாஹி-கூம் ஜெவஜெ நாவிஜா நா ஊவெூஜூஜெத' என்று ஜ்ஞாநோத்பத்தி ப்ரதிபந்தகமான பாப நிவ்ருத்திக்காக வே- ஜாதகர்மாதிகளென்று மநுஸ்ம்ருதி சொல்லுகிறது.

இப்படி சத்வாரிம்ஶத் ஸம்ஸ்காரத்தில் அந்தர்ப்பூதமாய், ஸமஸ்த புருஷார்த்த ஸாதநமான ஜ்ஞாநமாகிற லதைக்கு ஆலவால பூதமாய், 'தஜெவ ஞூஷம் ஜநூ' என்று ஶாஸ்த்ரங்களால் கொண்டாடப்படுகிற உபநயந ஸம்ஸ்காரத்தை நமக்கு அவஶ்ய கர்த்

உவநயநஸூ ஜெஹும்.



தவ்யமாய் ஏற்படுத்திக் கொடுத்த மஹர்ஷிகளிடத்தில் நாம் மிகவும் க்ருதஜ்ஞர்களாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போது நவீந நாகரிகங்களில் சிறந்த அநேக ராஜாங்கங்களில் ஜநங்களுக்கு நிர்ப்பந்தமான படிப்பு என்னும் சட்டத்தை மஹாஶ்ரமத்துடன் அமுலுக்குக் கொண்டுவரப் பார்க்கிருர்கள். நமக்கோ, உபநயநமாகிற நிர்ப்பந்தப் படிப்புச்சட்டம், ஆதிகாலம் தொடங்கியே அநுஷ்டாநத்தில் இருந்து வருகிறது.

பூமண்டலத்தில் தேஶபேதங்களையிட்டும், ஜாதிபேதங்களையிட்டும், பற்பல தேஶபாஷைகள் பிறந்து, மேன்மேலும் வ்ருத்தி யடைந்து வந்தாலும், ராஜபரிக்ருஹீதமான இங்க்லீஷ் பாஷையில் லோகம் மூழ்கினலும், ஆர்யமதத்தில் உதித்த நாம், ஸம்ஸ்க்ருத பாஷையை அப்யஸிக்காமல் இருக்க முடியாது. ஸந்த்யா வந்தநம் முதலான நித்ய நைமித்திக க்ரியா கலாபங்கள் ஸம்ஸ்க்ருத பாஷையிலே கோக்கப்பட்டிருக்கின்றன.

பால்யத்தில் குருகுல வாஸம் அவஶ்யம்.

அநேக ஆஸ்திக மஹான்கள் பூர்வ வயஸ்ஸில் வ்ருத்தப்பயுக்தமான பாஷாந்தரத்தைப் பரிசயம் செய்து, அபர வயஸ்ஸிற்குள்ளாக ஸம்ஸ்க்ருத பாஷையின் பெருமையைக் கொஞ்சம் தெரிந்துகொள்ள ஸந்தர்ப்பத்தை அடைந்து, பிறகு இது வரையில் வ்யர்த்தகாலம் கழித்தோமே யென்று பஶ்சாத்தாபப் படுகிருர்கள். அப்படி பஶ்சாத்தாப முள்ளவர்களாகிலும், தங்கள் குழந்தைகளுக்குப் பால்யத்தில் ஸம்ஸ்க்ருத பாஷாத்யயநம் செய்வித்து, அதனல் நம் மதாசாரங்களிலும், வர்ணுஶ்ரம தர்மாநுஷ்டாநத்திலும் வாஸநையை த்ருட ப்ரதிஷ்டிதமாக்கி, பிறகு வ்ருத்யுபயுக்தமான பாஷாந்தராத்யயநம் செய்து வைத்தார்களானல் உசிதமாயிருக்கும்.

உத்தர தேசத்தில் ஹரித்வாரத்தில் குருகுல மென்று ஒரு கலாசாலை ஏற்பட்டு, அதில் 15-வயது வரையில், மாணவகர்களுக்கு

ப்ருஹ்மசர்யாஸ்ரம நியமத்தோடு வேத வேதாங்காத்யயநம் செய்து வைத்தும், அத்துடன் உபஸர்ஜநமாய் இங்க்லீஷ் பாஷை முதலியன கற்றுக்கொடுத்து 15-வயஸ்ஸுக்குமேல் இங்க்லீஷ் பாடஶாலைகளுக்குப் பிள்ளைகள் அனுப்பப்படுகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம்.

ஸ்த்ரீ வித்யாப்யாஸம்.

கிம்வ, இக்காலத்தில் ஸ்த்ரீகளுக்கு ஆங்க்லீஷ பாஷாபரிசயம் செய்துவைப்பது என்ன காரணத்திற்காகவோ தெரியவில்லை. அவர்களுக்கு ஜீவனோபாயம் அவஶ்யமில்லை. கேவலம் ஜ்ஞாநமாத்ரம் அபேக்ஷிதம். ஆகையால் ஆர்யமதஸ்தர்கள் எல்லாரும் ஸ்த்ரீகளுக்கு ஸம்ஸ்க்ருத பாஷையையே படிப்பித்து வந்தால் அந்த ஸ்த்ரீகள் நம்முடைய பூர்வாசாரங்களைக் காப்பாற்றுவார்கள். அதனால் குழந்தைகளுக்கும் பூர்வாசார வாஸனைகள் த்ருட ப்ரதிஷ்டிதமாய் விடும்.

ஸம்ஸ்க்ருத பாஷையின் நிலைமை பூர்வகாலத்தில் எப்படியிருந்ததென்று கொஞ்சம் விசாரிப்போம்.

பூர்வகாலத்தில் குருகுலவாஸம்.

‘ஜந்மநாஷ்டமே வர்ஷே ப்ராஹ்மண முபநயீத, தமத்யாபயீத’ என்று அத்யயநயோக்யமான வயஸ் வந்தவுடனே வேதங்களையும் வேதாங்கங்களையும் படிக்கத் தொடங்கினார்கள். ஆசார்யர்களுக்கு ஶுஶ்ரூஷா ஒன்றுதான் ஶிஷ்யர்கள் செய்யக்கூடிய ப்ரதாந ப்ரத்யுபகாரமாயிருந்தது. இந்தக் காலம் மாதிரி ஆசார்யர்கள் அர்த்த ப்ரதாநகர்களாயில்லை. வித்யா க்ரஹணாநந்தரம் ‘ஆசார்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய’ என்று யதாஶக்தி குருதக்ஷிணை கொடுப்பது வழக்கம். அசக்தர்களிடத்தில் நிர்ப்பந்தப்படுத்தி வாங்குவதில்லை.

அக்காலத்திய குரு ஶுஶ்ரூஷையின் விஶேஷங்கள் மஹாபாரதத்தில் உத்தாலகன் உபமந்யு வைதந் என்னும் ஶிஷ்யர்களுடைய குருகுல வாஸகதையைக் கேட்டால் தெரியவரும். ‘வேத



மநூச்யாசார்யோந்தேவாஸிநமநுஶாஸ்தி’ என்று தொடங்கிச் சொல்லுகிறபடி, ஆசார்யர்கள் ஶிஷ்யர்களுக்கு ஸதாசாரங்களையும் ஸத்குணங்களையும் உபதேஶித்ததோடுகூட ஶிஷ்யர்களுடைய ப்ரமாதாலஸ்யாதிகளை விலக்கி, ஸமீபத்திலிருந்து அநுஷ்டிப்பித்தும் வந்தார்கள்.

‘ஆசார்ய: ஸ்ரேயாம்ஸமீக்ஷேத ஶிஷ்யஸ்ய...’ இதி ஸ்ம்ருதி. இப்படி அந்ய வ்யாபாரர்களாய் ப்ரவசநம் செய்துகொண்டு வந்த ஆசார்யர்களுடைய குடும்ப நிர்வாஹம் ராஜாக்களாலேயும் தநிகர்களாலேயும் நடத்தப்பட்டு வந்ததென்று பூர்வசரித்ரங்களைப் பராமர்ஶித்துப் பார்த்தால் தெரியவரும்.

குருகுலவாஸ கால நிர்ணயம்.

முற்காலத்தில் 12-வர்ஷங்களுக்குக் குறையாமல் குருகுலவாஸம் செய்யப்பட்டுவந்தது. ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரத்தில், ‘அஷ்டாசத்வாரிம்ஶத்வர்ஷாணி வேதப்ரஹ்மசர்யம். பாதோநம். த்ரிபிர்வார்தம். த்வாதஶாவராத்ர்யம்’ என்றும், மநுஸ்ம்ருதியில், ‘ஷட்த்ரிம்ஶதாப்திகம் சர்யம் குரௌ த்ரைவேதிகம் வ்ரதம் । ததர்திகம் பாதிகம் வா க்ரஹணாந்திகமேவ வா’ என்றும் விதிக்கப்பட்டது. ‘க்ரஹணாந்திகமேவ வா’ என்று ஷட்த்ரிம்ஶதப்தத்திற்கு மேலே அநுமதி கொடுக்கிறதே யொழிய, 12-வர்ஷத்திற்குக் குறைந்த காலத்தை விதிக்கிறதில்லை.

பூர்வகாலத்தில் பண்டிதர்களின் ஜீவனோபாயம்.

பூர்வகாலத்தில் ஸம்ஸ்க்ருத பண்டிதர்களுக்கு ஜீவனோபாயம் ஸுலபமாயிருந்தது. ராஜகீய ந்யாய ஸ்தலங்களில் தர்மஶாஸ்த்ர பண்டிதர்களுக்கே ப்ராட்விவாகாதி ஸ்தாநங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. ‘ஸேநாபத்யம் ச ராஜ்யம் ச தண்டநேத்ருத்வமேவ ச । ஸர்வலோகாதிபத்யம் ச வேதஶாஸ்த்ரவிதர்ஹதி’ என்று மநுஸ்ம்ருதியில் காணப்படுகிறது. யஜ்ஞங்கள் ஏராளமாய் நடந்துவந்ததால, யாஜநத்தினால் ஜீவநம் ஸுல

பமாயிருந்தது. ஸம்ஸ்க்ருதபாஷா வித்யார்த்திகள் அபரிமிதமாயிருந்தபடியால் அத்யாபநம் உத்க்ருஷ்ட ஜீவநமாயிருந்தது. ப்ராயஸ்சித்தாதி க்ரியைகளும் முக்ய கல்பமாய் நடந்துவந்தபடியால், ப்ரதிக்ரஹமும் ஏராளமாய்க் கிடைத்துவந்தது.

ராஜகீய கார்யாலயங்களில் தர்ம ஸம்ஸய நிர்ணயங்களுக்காக அநேக பண்டித பரிஷத்துகள் இருந்ததாக மந்வாதி ஸ்ம்ருதிகளிலிருந்து தெரியவருகிறது. தவிர, ப்ரதி க்ராமங்களிலும் ப்ராயஸ்சித்த விதாநத்திற்காகவும் நித்ய நைமித்திகாதி க்ரியைகளை விதிப்ரகாரம் நடத்திவைப்பதற்காகவும் அநேக ஸாஸ்த்ரஜ்ஞர்கள் அடங்கிய பரிஷத்துகள் இருந்தனவாகவும் தெரியவருகிறது.

'[illegible]' என்றும்; '[illegible]' இத்யாதி ஸ்ம்ருதிகள் பரிஷத்துக்களின் ஆவஸ்யகதையைச் சொல்லுகின்றன. இப்போதும் '[illegible]' என்று தொடங்கும் க்ரியைகளெல்லாம் ஷ பரிஷத்துக்களின் அநுமதியினால் செய்யப்படுகிறதாய்ப் பாவனை செய்யப்படுகிறன.

தவிரவும், அநேக வித்வான்களுக்கு வைத்யஸாஸ்த்ர வ்ருத்தியினாலேயும், ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரத்தினாலேயும், ஸில்ப ஸாஸ்த்ரத்தினாலேயும் அர்த்த ஸாஸ்த்ரத்தினாலேயும், ஸங்கீத ஸாஸ்த்ரத்தினாலேயும், புராணாதி கதாப்ரவசநங்களாலேயும் ஜீவநங்கள் ஸுலபங்களாயும் கௌரவாவஹங்களாயும் நடந்துவந்தன.

ஸம்ஸ்க்ருதம் வ்யவஹார பாஷையாயும் இருந்தது.

இப்படி ராஜாக்களாலும் மற்றுமுள்ள ஜநங்களாலும் ஆதரிக்கப்பட்டு வந்த இந்த ஸம்ஸ்க்ருத பாஷை வ்யவஹார பாஷையாயும் இருந்தது என்று சொல்வதற்கு அநேக ப்ரமாணங்கள் உண்டு. '[illegible]' என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் ஹநுமான் சொல்



லுகிறபடியாலும், பாணிநீயத்தில் 'ஊநுவலி' என்றும், 'ஸாஷாபாம' என்றும், 'ஜொகெ' என்றும் பிரித்து ஸப்த வ்யுத்பத்தி செய்வதாலும், இந்த பாஷை வ்யவஹார பாஷையாயிருந்தது என்று அநுமிக்கப்படுகிறது.

இப்படி, பூர்வகாலத்தில் ஸம்ஸ்க்ருத பாஷை எல்லா ஜநங்களாலும் ஆதரிக்கப்பட்டு வந்தமையாலும், ப்ருஹ்மசர்யாஸ்ரம வ்ரதமும் மற்றுமுள்ள க்ருஹஸ்த தர்மங்களும் ஸ்ரத்தையுடன் அநுஷ்டிக்கப்பட்டு வந்ததாலும், அதனால் ப்ராஹ்மணர்களுடைய ஜ்ஞாந விகாஸம் விஸேஷமாயிருந்தபடியாலும், முற்காலத்தில் ஸம்ஸ்க்ருத பாஷையின் மாஹாத்ம்ய விஸேஷம் அத்யாஸ்சர்யகரமாயிருந்தது.

1. சிரகாலத்தினால் லுப்தங்களான வேதங்களைக் கண்டுபிடித்து ப்ரவ்ருத்திப்பித்தார்கள். 2. வேதார்த்த நிர்ணயத்திற்கு உபகாரங்களான ஸ்ம்ருதிகளை அவதரிப்பித்தார்கள். 3. ஸ்ருத்யுக்தமான தர்மங்களை உதாஹரண முகேந ப்ரகாஸிப்பிக்கும்படியான இதிஹாஸங்களை ப்ரகாஸிப்பித்தார்கள். 4. '[illegible]' இத்யாதி ஸ்ருதி ப்ரதிபாதிதமான ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதி லோகதத்வங்களையும், அநேக ப்ராசீந சரித்ரங்களையும் புராணங்களால் வெளியிட்டார்கள். 5. ஸ்ருத்யுக்தமான யஜ்ஞாத்யநுஷ்டாநங்களை ஸப்ரகாரமாய் விளக்கும்படியான ஸ்ரௌத ஸாஸ்த்ரத்தையும் க்ருஹ்ய ஸூத்ரங்களையும் கல்பஸூத்ரங்களையும் விஸ்தரித்தார்கள். 6. யஜ்ஞாதி ஸ்வதர்மாநுஷ்டாநத்திற்கு உபயுக்தமான கால நிர்ணயத்தைப் பூகோள ககோளாதி விபாக பரிகரிதமான ஜ்யோதிஸ் ஸாஸ்த்ரத்தினால் வெளியிட்டனர். 7. ஜ்யோதிஸ் ஸாஸ்த்ரங்களுக்கு அத்யந்தோபகாரகங்களான கணித விஷயங்களைப் பாடீகணிதம், வீஜகணிதம், ஜ்யாமிதி முதலிய விபாகங்களோடே விபஜித்தார்கள். 8. ஸ்ருதி ஸூபகமான ஸ்தோத்ரத்தால் தேவதைகளையும் ராஜாக்களையும் வஸீகரிக்கும்படி ஸங்கீத ஸாஸ்த்ரத்தில் ப்ராவீண்யத்தைக் காட்

டினர்கள். 9. ராஜ்ய வ்யவஹாரங்களுக்கு உபயுக்தமான தண்டநீதிகளை "ஆந்வீக்ஷிகீத்ரயீவார்த்தா தண்டநீதி:" இத்யாதி அர்த்த ஶாஸ்த்ரங்களையும் உண்டுபண்ணினர்கள். 10. மந்திர தேவாலய ப்ரஸாதாதி நிர்மாணங்களை யதாஶாஸ்த்ரம் செய்யவேணு மென்று விதிக்கிற வாஸ்து ஶாஸ்த்ர ஸஹக்ருதமான ஶில்பஶாஸ்த்ரத்தை நமக்குக் கொடுத்தார்கள். 11. மந்த்ர ஶாஸ்த்ரத்தால் அபீப்ஸித ஸாதநத்திற்கு உபயுக்தமான நாநாவித தேவதா ப்ரஸாதத்தை ஸுலபமாக்கினர்கள். 12. பாஞ்சராத்ராதி ஆகம ஶாஸ்த்ரங்களால் அத்யாத்ம மதங்களுக்கு ஆதாரமா யிருக்கிற தேவாலயங்களின் பெருமையை விளக்கிக் காட்டினர்கள். 13. பகவத் விபூதியில் ப்ரதாந ப்ரயோஜநமான மோக்ஷ ஸாம்ராஜ்ய ப்ராப்தியை வேதாந்த ஶாஸ்த்ரத்தினல் ப்ரதிபாதித்தார்கள். 14. அநேக ந்யாய கர்ப்பிதமான மீமாம்ஸா ஶாஸ்த்ரத்தால் ஶ்ருதிவாக்யத்தில் பரஸ்பரம்வரும் விரோதங்களை ஶமிப்பித்தாகள். 15. ப்ரதிபா விகாஸகமான ந்யாய ஶாஸ்த்ரத்தினல் ஊஹாபோஹ ஸாமர்த்யத்திற்குத் திங்மாத்ர ப்ரதர்ஶநம் செய்தார்கள். 16 ஸமஸ்த ஶாஸ்த்ரத்திற்கும் ஆதாரபூதமான ஸம்க்ருத பாஷையின் பெருமையைக் காலாந்தரத்தினல் அபஹரிக்கப்படாதபடி வ்யாகரண ஶாஸ்த்ரத்தினல் காப்பாற்றினர்கள். 17. யோகஶாஸ்த்ரத்தினல் பக்தியோகத்தை ஸுகரமாக்கினர்கள்.

இப்படி நம் முன்னேர்களின் ப்ரதிபா சக்ஷுஸ் ப்ரஸரிக்காத இடம் கிடையாது.

(தொடரும்.)

வேங்கடாத்ரி அகரம் - அநந்தாசார்யர்.

ஸ்ரீயை நம:.

ஸ்ரீமத்ப்யோ திவ்யஸூரிப்யோ நம:.

## * ஸ்ரீ கஜேந்த்ரன் விஷயத்தில் ஆழ்வார்களின் அநுபவம்.

இக்கந்தர்வன் பண்டொருகால் ஒரு தடாகத்தில் ஸ்த்ரீகளோடுகூடி ஜலக்ரீடை செய்துகொண்டிருக்க, அப்பொழுது நீராடவேண்டி தேவலன் என்னும் மஹர்ஷி அதே தடாகத்தில் இறங்கினன். அப்பொழுது ஹூஹூ என்ற இவன் அம்மஹர்ஷியின் காலை முதலைபோலக் கவ்வி உள்ளுக்கு இழுத்தான். அது கண்டு வெகுண்டு 'முதலையாகப் போகுக' என்று அந்த மஹர்ஷி சபித்துவிட்டான். ஆபத்து வந்தவுடன் புத்தி ஸ்வாதீநம் பெற்ற கந்தர்வன் அம்மஹர்ஷியை வணங்கி, பொறுத்தருளப் பிரார்த்திக்கவே, ரிஷிக்கும் சினம் நீங்கி மனம் தெளிந்தது. பின்னர் அம்முனிவர், "நீ மடுவில் மருவியிருக்குங் காலையில் ஏதாவது ஒரு யானையின் காலைப் பிடிக்கும்படி உனக்கு ஸமயம் ஏற்படக்கூடும். அப்போது உனது சாபம் தொலைந்து நீ முன்போலவே உனது உலகத்தில் உல்லாஸமாய் உலவுவாயாக" என்று அநுக்ரஹம் செய்தனர். ஆகையால் வெகுகாலமாகவே ஒரு கைம்மாவின் காலைப்பிடிக்க இக்கந்தர்வ முதலை காத்துக்கொண்டிருந்தது.

இங்கு ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கும் ஸ்ரீ பகவானுடைய ஸ்பர்ஶத்தால் கர்மபந்தம் நீங்கிற்று. உடனே நான்கு திருக்கைகள் தோன்றப் பீதகவாடை உடுத்து, பிரானின் ரூபத்தைப் பெற்று ஸ்ரீ கஜேந்த்ராழ்வான் மாசு களைந்த மணியைப்போல விளங்கினன். ஸ்ரீஹரியும், எல்லாரும் கேட்டுக்கொண்டிருக்க அடியில் வருமாறு ஸ்ரீ கஜேந்த்ரனேடு அருளினன்:—"எவர்கள் என்னையும், உன்னையும், இந்தத் தடாகத்தையும், இம்மலையையும், காட்

* இது சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.

டையும், புத்ரர்களையும், இந்தப் பாற்கடலையும், ஶ்வேத த்வீபத்தை யும், இங்குள்ள ப்ருஹ்ம ஶிவாதி ஸ்தாநங்களையும், எனது பஞ்சா யுதங்களையும், நாரதனையும், ப்ரஹ்லாதனையும், மற்றும் என்னு டைய விபூதிகளையும் குறித்து, ப்ராதஃ காலத்தில் எழுந்து மநஸ் ஸமாதாநத்துடன் த்யாநிக்கிறார்களோ, அவர்களுடைய ஸகல பாபங்களும் தீயினில் தூசாகும். எவர் விடியற்காலையில் விழித்து எழுந்து, எனது இச்சரிதையைப் பாடிப் பரவுவரோ, அவருக்கு எய்ப்பு வந்து நலியும்போது அங்கேதும் என்னை நினைக்கமாட் டாது தவிக்குந் தருணத்தில், அவர் அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்திருப்பவ ராகையால், நான் என்னுடைய ஸ்மர ணம் வரும்படி செய்வேன்."

இவ்வண்ணம் மணிவண்ணன் மொழிந்ததும், தனது படை போர் புக்கு முழங்குமப் பாஞ்சசன்னியத்தை எடுத்தூதி தேவர் களெல்லாம் கொண்டாட அஞ்சிறைப் பறவைமேல் ஏறிக்கொண்டு தனது பரிஜந பரிவாரங்களின் கூட்டத்திற்குள் புதிதாய்ச் சேர்க் கப்பட்ட ஸ்ரீ கஜேந்திராழ்வானையும் அந்தமில் பேரின்பத்தடிய ரோ டிருத்தக் கருதி, கூடவே அழைத்துக்கொண்டு மேலாத் தேவர் மேவித்தொழும் நலமந்த மில்லதோர் நாட்டிற்குச் சென் ருன்.

இந்த ஸ்ரீ கஜேந்த்ராழ்வான் தானுகட்டும், 'த்ரவிடேஷு ச பூரிஶ:' என்று கொண்டாடப்படும் தமிழ் நாட்டில் பாண் டிய தேசத்திற்கு அரசனுன இந்த்ர த்யும்னனுவான். இவ்வர சன், பகவத்பக்தி மேலிட்டு, எப்போதும் பகவானையே பஜித்து வந்தான். அவன் ஒருநாள் மலயபர்வதத்தின் தாழ்வரையில் ஒரு குடிசை கட்டிக்கொண்டு, பரம நிஷ்டையோடு மௌந வ்ரதம் பூண்டு பகவானை ஆராதித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது பாகவதோத்தமராகிய அகஸ்த்ய மஹர்ஷி அவ்விடம் வந்தார். வந்ததும், இவ்வரசன் கேவலம் பகவத் குணுநுபவத்தில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தமையால், இந்த ரிஷிக்கு எதிர்கொண் டழைத்தல் முதலிய யாதொரு உபசாரமும் செய்யவில்லை. உடனே முனி வர் சினமேற்று, "நீ யானையைப்போல் மதம் பிடித்து, புத்தி தடு மாறி, அடுத்துவந்த அந்தணனை அவமானித்தா யன்றே! ஆத லின், நீ ஆனையாகக் கடவாய்" என்று சபித்தனர். பிறகு செய்தி



தெரிந்த இந்த்ரத்யும்நன், செயலை நினைந்து வருந்தினுனுயினும், ரிஷிசாபம் பொல்லாதாகையால் உடனே இவனுக்கு கஜஜந்மம் எடுக்க நேரிட்டது. இந்த ஜந்மத்தில் இந்த்ரத்யும்நனுக்கு ஶாப பலத்தால் தன்னைப்பற்றிய யாதொரு விஷயமும் நினைவிற்குவர, இடமில்லாமல் போயிற்றென்றாலும், தனக்கு நேர்ந்த மஹாபத் காலத்தில் தன்னைக் காப்பாற்றும்படி கண்ணனைக் கதறி அழைக் கத் தோன்றியது, பூர்வ ஜந்மத்தில் செய்த பகவதர்ச்சனையின் மஹிமையே.

ஸ்ரீ பகவானே மலை முதலியவைகளை அநுஸந்திக்கும்படி நிய மித்திருப்பதாலும், 'ததஸ்ஸரோ வாஸாநிகே' என்னுமாப்போலே இங்குத்த ஸகல வஸ்துக்களும் உத்தேஶ்யங்களாய்ப் போக்யங் களா யிருப்பதாலும், பகவத் குணுநுவர்ணந வ்யதிரிக்த ஸ்தலங்க ளில் வெகு ஸங்க்ரஹமாகப் பேசும் ஶுகமஹர்ஷி, இங்கு மலை யையும் சோலையையும் பொய்கையையும் கொஞ்சம் விஸ்தரித்தே வர்ணித்திருப்பது, ஸ்ரீ கஜேந்த்ராழ்வான் விஷயத்தில் மஹர்ஷிக் குள்ள ஈடுபாட்டை விளக்கிக் காட்டுவதா யிருக்கிறது.

விஷ்ணு தர்மத்தில் இந்த உபாக்யாநத்தில் கொஞ்சம் கொஞ் சம் பேதம் காண்கிறது. அதில் 'நாஹம் கஜேஶ்வரஸ்யாஸ்ய த்ராணாய் ப்ரயாஸ்யே ந । கஸ்ய கஜேந்த்ர வரநய கஸ்யசி தாம் ஹரே:' என்று காண்கிறபடி, அழகிய தாமரைப் புஷ் பத்தைக் கண்டவுடன், அனைத்துலகு முடைய அரவிந்தலோசன னின் திருக்கமலபாதம் வந்து தன் கண்ணினுள்ளன வொக்கின் றமையால், இந்தப் புஷ்பத்தைப் பறித்து ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடித் தாமரைகளில் சேர்த்து அந்தச் சேர்த்தியையோ இர ண்டிற்கு முள்ள வைலக்ஷண்யத்தையோ அநுபவிக்கக் கோலி இந்த வாவியி லிறங்கினதாகத் தெரியவருகிறது. இந்த வழியைத் தான் நமது திவ்யஸூரிகள் பின்பற்றுகிறார்கள். 'உத்க்ஷிப்ய ஸாரஸ்வஜகாம' என்று ஸ்ரீ பாகவதத்திலும் இது ஸூசிதமாகவு மாம். 'ஸ்தம்ஸரோ ருத்தா காஞ்சநே' என்றல்லவோ ரஸிகர்

களின் ஆஶாஸநம். ஶபரியும், தான் ருசிபார்த்தவைகளையே பகவானுக்குப் பச்சைவைத்தது ப்ரஸித்தமன்றோ? கலியன் முதலியவரும், 'மீனமர் பொய்கை நாண்மலர்கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்த, கானமர்வேழங் கையெடுத்தலற' என்றும் மற்றுமாக இப்படியே அநுஸந்தித்தார்கள். இதனைப் பரக்கப் பிற்பாடு பேசுவோம்.

'நக்ராக்ராந்தே கரீந்த்ரே முகுளித நயநே மூலமூலேதி கிந்நே' என்று காண்பதுபோல், விஷ்ணு தர்மத்திலேயாவது ஸ்ரீபாகவதத்திலேயாவது ஒன்றும் காணவில்லை. ஒரு ஆழ்வார் 'கண்ணா கண்ணா' வென்று கதறினதாகவும், மற்றொருவர், 'நாராயணா! ஓ மணிவண்ணா! நாகணையாய்!' என்று கூப்பிட்டதாகவும் அநுஸந்திக்கிறார்கள். பதகமுதலை வாயின் வ்யாக்யாநத்தில் 'மூலமேதி ஶப்தவத³வதி ஹி வேந்த்ரே' என்று கொண்டு 'மூலமே!' என்று கூப்பிட்டானாகப் பௌராணிகர் சொன்னார்களிறே' என்று குறிப்பிடாமல் பெரியஜீயர் எழுதுகிறார். 'ஸ்ரீ கஜேந்த்ராழ்வானும் ஆதிமூலமென்று கூப்பிட்டதென்றன்றோ ப்ரஸித்தி' என்று தாவளந்துலகமுற்றின் அரும்பதத்தில் காணப்படுகிறது.

இங்கு விஷ்ணு தர்மத்தில் 'பரமாபதமாபந்நோ மநஸா சிந்தயத்தரிம் - ஸது நாகவர: ஸ்ரீமாந் நாராயண பராயண:' என்று ஒரு ஶ்லோகமுண்டு. இதனைப் பூர்வர்கள் அங்கங்கு வ்யாக்யாநித்திருக்கிறார்கள். அந்த வ்யாக்யாநம், மேலே சொல்லப்புகும் பல விஷயங்களுக்கும் ப்ரமாணமாகவும் மார்க்க ப்ரதர்ஶகமாகவுமிருக்குமாகையால், அதை இங்கு எடுத்து எழுதுவதுடன் புதிதாயும் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

'மநஸா சிந்தயத்தரிம்' என்கிறபடியே திருவடிகளை நினைக்க, தான் நெடுநாள் நோவுபடா நிற்க முகங்காட்டாதொழிவதே! என்று நிலாய்க்க ப்ராப்தமிறே. அது செய்ததில்லை: 'பரமாபதமாபந்ந:' ஆபத்துக்கு உத்கர்ஷமாவது, ஸர்வேஶ்வ



ரன் வந்து உதவும்படியாயிருக்கை. அடிக்சமுஞ்சு பெற்றிருக்கை. 'நாராயண பராயண:' ப்ரஹ்மாதிகளைப்போலே ப்ரயோஜநாந்தரத்திற்காகச் சரணம் புகுகையன்றிக்கே இவன் றன்னையே ப்ரயோஜநமாகப் பற்றுகை. நெடுநாள் வ்யாபரித்த சரீரமானது மிடுக்கற்றது. 'நாராயணா! ஓ மணிவண்ணா!' என்கிற வாஹ்யத்ரிய வ்யாபாரமும் ஒழி 'வாங்மநஸி ஸம்பத்யதே' என்கிறபடியே நெஞ்சாலே நினைக்கும்படியாய்த்து' என்று ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநம்.

'பரமாம் ஆபதம் ஆபந்ந:' என்கிறதுக்கு இரண்டு பொருள். 'ஆபத்துத்தான் அல்பமின்றிக்கே மிக்க ஆபத்தென்னுதல்; அதாவது துதிக்கை முழுத்தும்படியாயிருக்கை; அன்றிக்கே ஸர்வேஶ்வரனைத் தானிருந்த விடத்திலே வந்து விழப்பண்ணுகையாலே, ப்ரஹ்மாதிகளும் 'விபத³: ஸந்து ந: ஶஶ்வத்' இவ்வாபத்து நமக்கு உண்டாகவேணுமென்று ப்ரார்த்திக்கும்படி ஶ்லாக்யமான ஆபத்தென்னுதல்' என்ற ஸ்ரீவசநபூஷண வ்யாக்யாநத்தில் வேறொருவர் வ்யாக்யாநிக்கிறார்.

'ஆபந்ந:' என்றால் போதாதோ? 'ஆபதம் ஆபந்ந:' என்று வேணுமோ? 'தபஸ்தப்யதே' என்பது போலவும், 'நல்ல அடி அடித்தான்' என்பது போலவும், 'நல்ல ஆபத்து வந்தது' என்று மஹர்ஷி ஆபத்தை ப்ரஶம்ஸிக்கிறார். ஆபந்ந:, ஆபதீ³ ஆபந்ந:, பரமாம் ஆபதம் ஆபந்ந: ஸர்வேஶ்வரனைப் பூர்வ ஜந்மத்தில் ஆராதித்து வந்தவனுக்கு, அகஸ்த்ய ஶாபம் வந்ததே முதல் ஆபத்து; இப்போது முதலை வாயிலகப்பட்டது இரண்டாவது ஆபத்து; முதலை மூலம் அழிந்துபோவதாயிருந்தாலும், இவன் மநோரதித்தபடி ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளில இப்புஷ்பத்தை ஸமர்ப்பித்த பிறகு இது நடக்கக்கூடாதோ? அதற்கு முன்னதாகவே இப்படி ஏற்படவேணுமா? சேதநனுக்கு பகவத் கைங்கர்ய லாபமன்றோ உண்மையான ஆபத்து என்று 'ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம்' என்பதுபோல மூன்றுதடவை

யிலும் மூன்று ஆபத்து வரவேணுமா என்று மஹர்ஷி ஸ்ரீ கஜேந்த்ரனைக் குறித்து அங்கலாய்ப்பதாகவுமாம். அன்றிக்கே 'ஞூவ ஢ஶ ஞூவஹ: வாஶ சுவிஜயக' என்று பிரித்து ஆபத்து வந்த பிறகே சிந்திக்கத் தலைப்பட்டான். இதற்கு முன் மதம் மேலிட்டுக் கண்மூடியா யிருந்தா னென்னலாம். 'அன்றிடரடுக்க ஆழியான் பணிந்து' என்றும், 'துப்புடையாரை யடைவதெல்லாம் சோர்விடத்துத் துணையாவரென்றே' என்றும் பிரஸித்தமன்றோ? 'ஞூவ்தி ஹஜதி நஹஜதி ஸூஒஹெஸெஹ' என்றல்லவோ கவிகளும் எழுதுவது! அல்லது, 'ஞூவஷ்ஂ வாஶ சுத்ருஷுஶ ஞூவஹ: ஞூஷூ:' 'ஈசுவரனும் ஒரு முழங்கைத் தண்ணீருமென்றிருந்த காலமன்றியே அவனுலல்லது செல்லாது' என்று ஆபத்தின் நிலைமையை நன்கு உணர்ந்தானுயிற்று. சுயவா, 'ஞூவஷ்ஂ வாஶ ஞூவஹ:, ஞூவநூதூஂ ஞூஷூ:' செவ்விமாருது இந்தப் புஷ்பத்தைச் சேவடியில் சேர்க்கவேணு மென்கிற கைங்கர்ய ஸம்பத்தை அடையாமல், மாருக முதலைவாயில் பட்ட ஆபத்தை மாத்திரம் அடைந்தானுயினுன். சுயவா, 'தேநஸாவாஂ ஓெநாஶாெஞூண ஞூவஷ்ஶ ஞூவஹ:' 'சுஷ்ரு வாஜ ஶதாஷெவா ஶூத்ருஒெவெஹ ஞூணிநாஂ யூஒவ:' என்கிறபடி தனது சரீரம் அழிவதைக் குறித்து வருந்தாமல் தன் அபீஷ்டம் ஸித்திபாது போனதைப் பற்றி துக்கிக்கிருனுயிற்று. 'ஹாஶி சுவிஜயக' 'ஹாஶிஹஶதி வாவாஶி' என்கிறபடி கேவல ரூடமாய் நிற்காமல் யோகரூடமான திருநாமத்தை ஸ்மரித்தானுயிற்று. இவனுக்குப் பாபம் நீங்கவேண்டிய ஸமயமன்றோ இது. அன்றிக்கே 'ஸக்ருஷுவு ஶிதஂெந ஹாஶிஶித்ரூ க்ஷாஷயஂ-வஜ: வாஶிகாஷெநெ ஶொக்ஷாய ஶதநஂ ஞூஷி' என்கிறபடி, இப்போது திருவாட்டுக்குப் புறப்பட அரைக்கச்சையை இழுத்துக் கட்டும் கஜேந்த்ரனுக்கு ஹரிஸ்மரணமே ப்ராப்த மென்னலாம். அல்லது, 'யா நிஶா ஸவஹுதா நாஶ' என்னும் ராத்ரியில் இதுவரையிலும் தூங்கிக்கொண்டிருந்த கஜேந்திரனுக்கு, அந்தப் படுக்கையை விட்டெழுந்



திருக்க வேண்டிய ஸமய மாகையால் 'உதூஷஂ ஸ்ஜயநுஹாஶி' என்று சௌநகன் நியமித்திருக்கும் ப்ரகாரம் இப்பொழுது ஹரி சிந்தநமே ந்யாய்ய மென்ருகவுமாம். 'ஜூாதஂ ஶயா வஷிஷெந ஸாஶாதீதஂ ஶஹாதூநா- ஶஹத்ரூா வஷிஸஂ ஞூவெ ஷூதஹ வெஶா ஶவாநு ஹாஶி:' என்ற பாரத வசநம் இவ்வர்த்தங்களை யெல்லாம் க்ரோடீகரித்தே நிற்கின்றது. ஸதூ நரஶவாஶ-ஸாதாரண யானையாயிருந்த அவனன்றோ இப்போது நாமவரனுயது. 'சுவிஜயக ஹாஶிஂ ஸதூ நாஶவாஶ'-ஹரியைச் சிந்தனை செய்ததும் பாபம் நீங்கிவிட்டபடியால் மற்ற யானைகளுக்குக் கிட்டாத பெரும்பேறு பெற்றுவிட்டான். '(ஸ்ரீஶாநு'- ஆபத்து நீங்கிஞல் ஸம்பத்து தானுகவே குடிபுகு மல்லவா? மூதேவி விலகிஞல் ஸ்ரீதேவி வருமென்றன்றோ லௌகிகோக்தி. 'நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் தன்னையேதான் வேண்டும் செல்வம்' என்றல்லவோ பெருமாளின் பாசுரம். 'தேசும் திறலும் திருவு முருவமும், மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும் - பேசில், வலம்புரிந்த வான்சங்கம் கொண்டான் பேரோத, நலம் புரிந்து சென்றடையும் நன்கு' என்று பேயாழ்வாரும் பேசினார். பகவத்ஸாம்யம் அடுத்திருப்பதை ஸூசிப்பிக்கிறதற்காகவே 'வஷ நாராயண: ஸ்ரீஶாநு', 'ஸதூ நாஶவாஶ: ஸ்ரீஶாநு' என்று சேஷிக்கும் சேஷத்துக்கும் ஸ்ரீஶதூம் சேரும்படி ஶப்தஸ்லேஷை முன்னிட்டு '(ஸ்ரீஶாநு' - என்றுன் மஹர்ஷி. 'ஞுக்ஷெணா- ஞுக்ஷி ஸஂவஹ:', 'சுஜாஶிக்ஷஶத: ஸ்ரீஶாநு' என்னுமாப்போலே ஸோபாதிக ப்ரதிகூல ஸம்பந்தம் அறவே, நிருபாதிக ஸ்வாமி ஸம்பந்தம் பெறுகை என்னும் ஸம்பத்துக்கு இனித்தட்டுண்டோ? இவ்வளவுக்கும் அடி ஏதென்ன, 'நாராயண வாராயண:' நாராயண பதத்தில் சொருகி நிற்கும் கல்யாண குணங்களை; தனக்கும் அவனுக்கு முள்ள ஸ்வஸ்வாமி பாவத்தை முன்னிட்டுக்கொண்டு அநங்யார்ஹ ஶேஷனுய் எப்போதும் அநுஸந்தித்து வந்ததின் பலமன்றோ இவனுக்கு இப்போது பகவத் ஸ்ம்ருதிக்கு உறுப்

பாய் நின்றது. 'க்ராஹம் ஸராம்ஸி' அர்த்தத்தை யுள்ளிட்டு நம் தேசிகன், 'ததேவ வஸ்துஸாமர்த்யாத் தஸ்ய தீவ்யந்தி ஸ்ரோதஸாம் ஸ்ரயம் விஹிதஸம்ஸ்ருதி:' என்று அநுக்ரஹித்திருக்கும் ப்ரகாரம் இப்போது நினைப்பூட்டுவது அவனுடைய க்ருத்யமன்றோ? 'சரணம்' என்னும் ஶரீர ஸம்பந்த நிவ்ருத்தி கஜேந்த்ரனுக்கும் ப்ரத்யாஸந்நையாக வன்றோ நிற்பது? 'நாராயண பராயண: நாமவாஸ: ஸ்ரீஸாநு' நாராயணனைப் பற்றினால் குலப்பெருமையும் பணப்பெருமையும்கூட வருமன்றோ? 'குலம் தரும் செல்வம் தந்திடு'மன்றோ நாராயண வென்னும் நாமம்!

இந்த உபாக்யாநம் மூலம் மஹர்ஷி நமக்கு உபதேஶிக்கும் ஆத்ம குணங்களில் ப்ரதாந ஜ்ஞாதவ்யங்களாவன - ஒருவனுக்கு பகவத்பக்தி யிருந்தாலும் பாகவதாபசாரம் நேர்ந்தால் அவன் அதோகதிக்கு ஆளாய் விடுவான். பாகவதர்களுடைய நிக்ரஹங்கூட நிக்ராஹ்யனுடைய பாபங்களை ஸமூலம் ஸவாஸநம் போக்கி கழித்து முடிவில அநுக்ரஹத்திலேயே பர்யவஸிக்கும். அபகார புத்தியாலே உண்டானாலும் ஸாது ஸமாஶ்ரயணம் வீண்போக மாட்டாது. த்ரிவர்க்கம் அபவர்க்கம் இரண்டையும் அவரவருடைய ஈப்ஸிதத்தை அவரவருக்குக் கொடுத்து ரக்ஷிப்பவன் நிருபாதிக பேஷியாய் ஜகத்காரண பூதனான ஸ்ரீமந்நாராயணனே. இதுபோல் வேறும் ஊஹித்துக்கொள்ளக் கடவது.

'தத்ர தம் புத்திஸம்யோகம் லபதே பௌர்வதேஹிகம் |
யததே ச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தந ||
பூர்வாப்யாஸேந தேநைவ ஹ்ரியதே ஹ்யவஶோபி ஸ: ||

என்கிற பகவத்கீதா வசநத்திற்கு இந்த உபாக்யாநமும் ஓர் உதாஹரணமாம்.

'ந ஜாதிபேதம் ந குலம் ந லிங்கம் ந குணக்ரியா: |
ந தேஶகாலௌ நாவஸ்தாம் யோகோஹ்யயமபேக்ஷதே ||
ப்ரஹ்மக்ஷத்ரவிஶ: ஶூத்ரா: ஸ்த்ரியஶ்சாந்தரஜாதய: |
ஸர்வ ஏவ ப்ரபத்யேரந் ஸர்வதாதாரமச்யுதம் ||'



என்னும் பாரத்வாஜ ஸம்ஹிதையின் ப்ரகாரம் ப்ரபத்திக்கு ஜ்ஞாநவ்ருத்தாதிகள் தந்த்ரமன்றென்று சொல்லி, இந்த கஜேந்த்ர ப்ரபத்தியையும் அதற்கு உதாஹரணமாகப் பூர்வர்கள் காட்டியிருக்கிறார்கள்.

இந்த கஜேந்த்ரோபாக்யாநமானது ஒரு சேதநனுக்கு இந்த்ரியங்களால் ஏற்படும் கஷ்டப்பாட்டையும், பகவதநுக்ரஹத்தால் அது நீங்கும் விதத்தையும் குறிப்பிடுவதாக மஹான்கள் அபிப்ராயப்படுகிறார்கள். ஆகையாலேதான், ஒவ்வொரு நாளும், துஷ்டாஶ்வம்போலக் கண்டவாறு திரிந்து நிற்கும் இந்த்ரியங்களை அமார்க்கத்தில் போக்காமல் ஸந்மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கும்படி க்ருபைசெய்ய வேணுமென்று நினைத்து, படுக்கையினின்று எழுந்திருக்கும்போதே 'க்ராஹக்ரஸ்தே கஜேந்த்ரே......' என்று பகவானுடைய கஜேந்த்ர மோக்ஷண வ்யாபாரத்தை நாம் அநுஸந்தித்துப் போருவது. 'வாரி சுருக்கி மதக்களி றைந்தினையும், சேரி திரியாமல் செந்நிறீஇ, கூரிய மெய்ஞ்ஞானத்தால் உணர்வார் காண்பரே மேலொருநாள், கைந்நாகம் காத்தான் கழல்' என்னும் முதல் திருவந்தாதிப் பாசுரமும், 'இருந்தான் கண்டுகொண்டென தேழைநெஞ்சாளும், திருந்தாதவோரைவரைத் தேய்ந்தற மன்னி, பெருந்தாள் களிற்றுக் கருள்செய்த பெருமான், தருந்தானருள் தானினியானறியேனே' என்னும் நம்மாழ்வார் பாசுரமும் இந்த விஷயத்தையே குறிப்பிடுகின்றன. ஸ்ரீதேசிகனும் 'கஜேந்த்ரரக்ஷாத்வரிதம் பவந்தம் க்ராஹைரிவாஹம் விஷயைர்விக்ருஷ்ட: | அபாரவிஜ்ஞாந தயாநுபாவம் ஆப்தம் ஸதா பத்ஸஹஜம் ப்ரபத்யே' என்று அஷ்டபுஜாஷ்டகத்தில் இதையே அநுக்ரஹித்தருளினர். 'அங்கு முதலை ஒன்று - எனக்கு முதலை ஐந்து - இங்கு ஆயிரம் தேவ ஸம்வத்ஸரம் - இங்கு அநாதிகாலம். அங்கு ஒரு சிறுகுழி - இங்கு பிறவி என்னும் பெருங் கடல். அதுக்கு ஶரீரநாஶம்; எனக்கு ஆத்மநாஶம். ஆனையின் காலைப் பற்று முதலை பற்றிற்று. இங்கு என்னுடைய நெஞ்சையாயிற்று

அருவித்தின்றிடுகிறது.' என்று வெகு அழகாய் வாசிதோன்ற ஈடில்லாத ஈட்டில் இதுவே காட்டப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷையில் தேசிகன் 'நமோ நாராயணாயேதி ஹரி: க்ருஷ்ணஸ்ததைவ ச, இதி யத்தேவதாத்வைகே யத்ராணேஷு மஹோத்ஸவேஷு ஹரிஸ்துதீய இதி ஸம்ப்ரதாய:, ஸஹஸ்ர தமோஹ்ருத்ஸு ஸாஸ்த்ர கஜேந்த்ர மோக்ஷ: ஸர்வாஸ்வபி ஸ்வஸ்திதா தாதிவார தமோஹ்ருத்ஸு ஜனார்ஜித மோக்ஷகேவ நாநாஸம்ஸ்யதே' என்று அநுக்ரஹித்திருக்கிறார். 'ஹேமாஸ்த்ரயா நநந்தோராம்' என்கிற மாதிரி, இங்கு 'வ்யூஹேஷு ஸம்நாஹ ஸம்கல்ப விஸ்வாஸ்ரீத ஸ்ரீவெளஹரே: । வ்யாபிதா வாமஸ்தோத்ரை வக்ஷீஸ்வா ஸாதுஸம்நேன' என்று ஸ்ரீதேசிகன் அநுக்ரஹித்திருப்பதை அநுஸந்தித்து 'பகவான், பெரியதிருவடி என்னும் ஸங்காஹத்தைக் கைக்கொண்டு, சக்ரமென்னும் ஸங்கல்பத்தாலே முதலை என்னும் தமஸ்ஸை நீக்கியருளினதாக இந்த உபாக்யாநத்தின் ஆந்தராபிப்ராய மென்று ஊஹிப்பதும் பொருந்தும்.

இனி ஆழ்வார்களின் அநுபவத்தை விசாரிக்கப் புகுவோம். ஆழ்வார்களில் எண்மரும் நாச்சியாருமாக ஸ்ரீ கஜேந்த்ரன் விஷயத்தை நாற்பத்திரண்டு ஸ்தலங்களில் அநுஸந்தித்திருக்கிறார்கள். பெருமாளோ, தம்மைப்போலுள்ள ஒரு தென்னாட்டரசனுக்கு வந்த கஷ்டப்பாட்டைத் தம் வாயால் வெளியிடக் கூச்சங்கொள்கிறார். நம் பாணநாதனோ, 'அரங்கத்தமலன் முகத்து, கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள், தன்னைப் பேதமை செய்தமையால் இவ்வழிக்கே வரவில்லை. ஒவ்வொரு ஆழ்வாருடைய அநுபவத்தையும் தனித்தனியாய் இரண்டாவது பாகத்தில் நிரூபிக்க உத்தேசிக்கிறேன்.

ராயம்பேட்டை. அபிநவ பட்டபாணர் க்ருஷ்ணமாசார்யர்,

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# கடிதங்கள்.

(1)

**ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபர்க்கு:—**

காளயுக்தி தை மாஸத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸபை வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீவைகுண்டம் வக்கீல் அக்நிஹோத்ரம் தேசிகாசார்யருடைய ப்ரயத்நத்தினால் ஸித்தாந்த ஸம்பந்தங்களான உபந்யாஸங்களைச்செய்யும்பொருட்டு இந்த ப்ரதேசங்களுக்கு எழுந்தருளினர். இந்தத் திவ்யதேசத்தில் தத்காலம் வஸிக்கும் ஆஸ்திகாக்ரேஸராகிய முனிசிப் ம-ரா-ரா-ஸ்ரீ என். சுப்பிரமணிய ஐயரவர்களும் ஆஸ்திகோத்தமர்களான அநேக வக்கீல்களும் வைதிக ப்ராம்மணர்களும் சேர்ந்து ஞாயிற்றுக்கிழமை மாலை 7 - மணி சுமாருக்கு ஸ்ரீவைகுண்டநாதன் ஸந்நிதியில் ஓர் ஸபைசேர்த்து 'தர்மம்' என்னும் விஷயத்தைப் பற்றி உபந்யஸிக்கும்படி ஷை ஸ்வாமியைக் கேட்டுக்கொண்டனர். அந்த ஸ்வாமியும் அச்சபையோர் அபிப்ராயத்துக்கு இணங்கி, 'தர்மம்' என்னும் பதத்தின் பொருள் இன்னதென்றும், அதை ப்ரத்யக்ஷம் அநுமாநம் என்னும் ப்ரமாணங்களினால் அறிய முடியாதென்றும், ஈஸ்வரனைப்போல் அநாதியான வேதத்தையும் அதற்கு வ்யாக்யானமான ஸ்ம்ருதி புராணங்களையும் கொண்டேதான் அதைத்தெரிந்து கொள்ளவேண்டுமென்றும் ஸ்ருதி ஸ்ம்ருதி புராணவசநங்களுடன் சொன்னதுடன், தத்காலம் புதுத்தருமம் பயின்றுவரும் சீர்திருத்தக்காரர்கள் சொல்வது தர்மமாகாதென்பதைப் பலவித யுக்திகளால் கண்டித்தும், நாகரிகர், நமது முன்னோராம் மஹர்ஷிகளை ப்ராம்மணர்க்குப் பக்ஷபாதிகளாகச் சொல்வது சரியல்லவென்றும், அம் முனிவர்கள் ப்ராம்மணருக்கும் மற்றையோர்க்கும் சொல்லியிருக்கும் தர்மத்தை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் அப்ராம்மணர்க்கே (ப்ராம்மணரல்லாதார்) அநுகூலத்தை நன்றாகச் சொல்லியிருக்கிறார்களென்றும் விஷயத்தை அநேக ஸ்ம்ருதி வாக்யங்களுடன் மிகவும் தெளிவாகச்சொல்லி, யாவரும் மிகவும் ஆநந்திக்கும்படி 10 - மணி வரையில் உபந்யஸித்தார். இராத்திரி அதிக நாழிகை ஆய்விட்டபடியால் அன்று ஸபை கலைந்தது.

மறுதினம் ஸாயங்காலம் 7 - மணி சுமாருக்கு ஷை இடத்தில் ஸபை கூடியது. ஸபைக்கு முன்சீப் அவர்களும், அநேக வக்கீல்களும் உத்யோகஸ்

தர்களும் ஆஸ்திக வைதிகர்களும் வந்திருந்தனர். அன்று 'ஸாமாந்ய தர்மம்' என்பதைக் குறித்து உபந்யாஸம் நடந்தது. அதில் எல்லாஜாதியார்க்கும் பொதுவான ஸத்யம் முதலியன அத்யந்தம் அவஶ்ய மென்பதை ஶ்ருதி ஸ்ம்ருதி வசனங்களுடனும், பாரத ராமாயணங்களிலிருந்து சிற்சில வ்ருத்தாந்தங்களுடனும் 10 - மணி வரையில் அழகாக உபந்யஸித்தார். அன்றும் வந்திருந்த ஆஸ்திகர்கள் அதிகமான ஆநந்தத்துடன் வித்வான் ஸ்வாமியைப் புகழ்ந்து பேசிப்பிரிந்தனர்.

மறுநாளும், முன்போல் மாலை 7 - மணி சுமாருக்கு யாவரும் வந்து சேர்ந்து உபந்யாஸம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று 'விஶேஷதர்மம்' என்கிற வர்ணாஶ்ரம தர்மம் என்னும் விஷயத்தை ஆரம்பித்து, முதலில் ப்ராஹ்மணன் முதலான நான்கு ஜாதிகளும் பிறவியினாலேயே உண்டாகின்றன வென்பதையும், அவை குணத்தினால் உண்டாகா வென்பதையும் அநேக ப்ரமாணங்களுடன் ஸ்தாபித்து, அநேக யுக்திகளாலும் ப்ரத்யக்ஷத்தினாலும் ஜாதி நன்றாக விளங்குமென்பதை மிகவும் தெளிவாக உபந்யஸித்து, பிறகு, ஷை நான்கு ஜாதிகளுடைய முக்ய தர்மங்களை மாத்ரம் விரிவாகச் சொல்லி உபந்யாஸத்தை முடித்தார். அதிக நாழிகையானபடியால் ஆஶ்ரம தர்மங்கள் சொல்லப்படவில்லை. கடைசியில் பெரியநம்பிகள் வம்ஶஸ்தரான வித்வான் ஸ்ரீ. உ.ப. அழகரய்யங்கார் ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத பாடஶாலை உபாத்யாயர் ம-ா-ா-ஸ்ரீ, சாம்பசிவ சாஸ்திரிகள் இவர்களுடைய உபந்யாஸ விஷயமான ஸ்துதி வாக்யங்களுடன் அன்று ஸபை முடிவு பெற்றது. தத்காலம் அங்கு வந்திருந்த முன்ஸிப் முதலான அநேக உத்யோகஸ்தர்களும் மற்றுமுள்ள ஆஸ்திகர்களும் இவ்விதமான உபந்யாஸங்கள் அடிக்கடி நடந்துவரவேணு மென்பதையும், இவ்வாறு நடக்காததனால் தான் நம் வைதிக மதங்களுக்கு தத்காலம் சில கலக்கம் உண்டாகிற தென்பதையும் சொல்லி, மிகுந்த ஸந்தோஷத்துடன் கலைந்து சென்றார்கள்.

அக்காலத்தில் வந்திருந்த ஆழ்வார் திருநகரி ஸ்ரீ வைஷ்ணவர்கள் தமது ஊரில் ஶைவஸபை ஒன்று ஸமீபகாலத்தில் நடைபெற்றதாகவும், அச்சபையில் ஶைவர்கள் ஸ்ரீவைஷ்ணவ மதத்தை வெகுவாக இகழ்ந்து பேசினபடியால், அங்கு அவஶ்யம் ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த உபந்யாஸம் நடக்க வேண்டுமென்று சொல்ல, மறுதினமாகிய புதன்கிழமை ராத்ரி 3-மணிக்கு, திருநகரி ஆதிப்பிரான் ஸந்நிதிவாசல் மண்டபத்தில் 'விஶிஷ்டாத்வைதம்' என்னும் விஷயத்தைப்பற்றி வித்வான் ஸ்ரீ. உ.ப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அத்புதஸாமர்த்யத்துடன் 10 - மணி வரையில் உபந்யஸித்தார். 'விஶிஷ்டா த்வைதம்' என்னும் பதத்திற்குச் 'சேதநாசேதநங்களுடன் கூடின நாராயணன்தவிர, அவனுக்குச் சமானனான வேறொருவன் இல்லை' யென்பது பொருள் என்றும், இவ்வர்த்தத்தை அத்வைத பாஷ்யகாரரும் அவரைச்சேர்ந்தவர்களும், ஸ்ரீ ஶங்கரபாஷ்யம், ஸ்ரீபகவத்கீதைகளில் பல இடங்களில் சொல்லியிருக்கிறார்க ளென்று அந்தந்த வாக்யங்களை எடுத்



துக்காட்டியதுடன் ஶைவபாஷ்யகாரரான ஸ்ரீ கண்ட ஶிவாசார்யரும், அப்பாஷ்ய வ்யாக்யாதமான அப்பைய தீக்ஷிதருடைய ஶிவார்க்கமணி தீபிகையிலும் அநேக இடங்களில் நாராயணனும் ஶிவனும் ஒருத்தரென்றும், சில இடத்தில் ஶிவனுடைய ஶக்தி நாராயணனென்றும் ... உபாஸித்தவர்களுக்கும் க்ரமமாக மோக்ஷம் உண்டென்றும் எழுதியிருக்கிறபடியால், நாராயணனை உபாஸிக்கும் நம்மை ஶைவர்கள் ... யென்றும், ஶைவ மதத்தை ஸூத்ரபாஷ்யத்தில் அத்வைத ... டாத்வைதிகள் பிசகென்று அவிழ்த்ததோம், ஸ்ரீகண்ட பாஷ்யத்திலும் வேதவிருத்தமான ஶைவமதம் பிசகென்று அவிழ்த்திருப்பதுவும், ... யர்களான ஶைவர்கள் வார்த்தையை நாம் ஆதரிக்க வேண்டியதில்லை யென்னும் விஷயத்தை மிகவும் தெளிவாக உபந்யஸித்தார். ஸபையிலிருந்தோர் யாவரும் நாழிகையானது தோன்றாதபடி அதிக ஸந்தோஷத்துடனிருந்து, பின்பு அக்ராஸநம் வஹித்த வக்கீல் ஸ்ரீ. உ.ப. வக்கீல் தேசிகாசார்ய ஸ்வாமியினுடைய உபந்யாஸ ஸ்தோத்ரத்துடன் ஸபை கலைந்தது.

மறுதினம், ஸாயங்காலம் 4 - மணிக்கு ஷை ஸந்நிதிக்குள் ஸபைகூடினது, அன்று ஷை வித்வான் ஸ்வாமி, விஶிஷ்டாத்வைத பதத்திற்கு உள்ள மூன்றுவிதமான அர்த்தத்தையும், இதர மதத்தார் யாவரையும் ஸமமாகப் பாவிக்கிற தென்பதையும், நாராயணனுடைய உத்கர்ஷத்தைப்பற்றி அநேகம் ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளுடன் 6-மணி வரையில், கேட்டிருந்தோர் யாவரும் ஆநந்திக்க உபந்யஸித்தார். ஸ்ரீ. உ.ப. தேசிகாசார்யர் முதலான அநேகவக்கீல்களும் உத்யோகஸ்தர்களும் வித்வான்களும் அநேக ஆஸ்திகர்களும் வந்திருந்தனர். மறுதினம் உபந்யாஸகருடைய தேஹ அஸௌகர்யத்தினால் உபந்யாஸம் நடைபெறவில்லை,

டி. எஸ். தாதாசார்யர்,
ப்ளீடர், (ஸ்ரீ வைகுண்டம்.)

(2)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபர்க்கு:—

நாளது ஹூ மாசிமீ 3உ ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபை வித்வான் ஸ்ரீ. உ.ப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, தென் திருப்பேரை என்னும் இத்திவ்ய தேசத்துக்கு எழுந்தருளினார். ஸமீபகாலத்தில் இங்கு நடைபெற்ற ஆசார சீர்திருத்த ஸபையின் கோலாஹலத்தினால் வருத்தமடைந்த ஆஸ்திகர்களான அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஶாஸ்த்ரர்களும் ஸ்ரீ ஸத்

ஸந்நிதியில் ஓர் ஸபைசேர்ந்து, ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமியை ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த வைபவத்தை உபந்யஸிக்கக் கேட்டுக்கொண்டனர். அந்த ஸ்வாமியும் அதற்கு இசைந்து, அன்று இரவு 7-மணிக்கு உபந்யாஸத்தை ஆரம்பித்து, அதில் ஸ்ரீ பாஷ்யகாரர் மதத்துக்கும் அத்வைத த்வைத ஶைவ மதத்திற்கு முள்ள பேதத்தை எடுத்துக்காட்டி, ஸ்ரீ ராமாநுஜ மதத்தின் பெருமையையும், ஸர்வ ஜநங்களும் பேதமில்லாமல் புருஷார்த்தம் பெறும்வழி இந்த மதத்தில் தான் இருக்கிறதென்பதையும் அநேக ஶ்ருதி ஸ்ம்ருதிகளுடனும் ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளுடனும் தெளிவாக உபந்யஸித்து, அங்கு எழுந்தருளியிருந்த வக்கீல் ஸ்ரீ. உப. தேசிகாசார்யர் ஸ்ரீ. உப. தாதாசார்யர் முதலான ஆஸ்திகர்களுடைய அபிப்ராயப்படி, அந்த ஊரில் ஓர் 'ராமாநுஜஸபை' ஏற்படுத்தப்படவேணுமென்றும் யாவரும் ஆமோதிக்க உபந்யஸித்தார். அங்கிருந்த ப்ரபுக்களும் ஸ்வாமிகளும் இந்த உபந்யாஸத்தைப் புகழ்ந்து பேசினதுடன், ஸ்ரீ வானமாமலை ஆஸ்தான வித்வானான ஆசுகவி அநந்த க்ருஷ்ணையங்கார் என்னும் ஸ்வாமியும்,

இத்திருப்பேரை யாரும் களிப்புறப்
புத்தங்கோட்டக சீனிவா சப்புயல்
சுத்தனும்யதிராச சித்தாந்தமாம்
உத்தமச்சுதைபெய்த திங்கோங்கியே.

என்று பாசுரமிட்டுத் துதித்தனர். அவ்வூரில் எழுந்தருளியுள்ள அநேகம் ஸ்வாமிகள் ஒன்றுசேர்ந்து ஸாமவேத கோஷத்துடன் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்வாமிக்கு ரூ. 10-ஸம்மாநமாக அளித்தனர். அன்று நடந்த உபந்யாஸத்தின் ஆநந்தத்தினால் இன்னும் 2-தினம் இவ்வூரில் இத்தமாதிரியான உபந்யாஸம் நடைபெற வேண்டுமென அங்குக் குழுமியிருந்த ஸ்ரீவைஷ்ணவர்களுடைய அபிப்ராயம் வெளியாயிற்று.

உடனே பின்பு 2-தினம் உபந்யாஸத்தை ஒப்புக்கொண்டு நம்மாழ்வார், தாம் அவதரித்தருளிய திருக்குருகூரை 'வளங்கொள் தண்பணை சூழ்ந்தழகாய' என்று பாடி, இத்திருப்பேரையை 'வேதவொலியும் விழாவொலியும் பிள்ளைக்குழா, விளையாட்டொலியுமறாத் திருப்பேரை' என்று பாசுரமிட்டபடி, வைதிகமலிந்த இந்த ஊரில் 'ஸ்ரீ பகவத் ராமாநுஜஸபை' ஒன்று இருக்க வேண்டியது அவஶ்யமானதனால் அச்சபையை ஏற்படுத்த இது ஆதிநிதியாக இருக்கட்டும் என்று மேற்படி புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்வாமி அவர்களால் ஸம்பாவனையாகக் கொடுக்கப்பட்ட பணத்தை திருப்பி அவர்கட்கே கொடுத்துவிட, அதை யெல்லாரும் அநுமோதித்தார்கள். அன்றிரவு ஸபை கலைந்தது. சுமார் 100-பேர் ஸ்ரீ வைஷ்ணவர்களும் அநேகம் சூத்ரர்களும் சீர்திருத்தக்காரரும் அன்று அங்கு வந்திருந்தனர்.

மறுநாள் மாலை 7-மணிக்குப் புத்தங்கோட்டகம் ஸ்வாமியினாலே அதே இடத்தில் உபந்யாஸம் ஆரம்பிக்கப்பட்டு, 'சீர்திருத்தக்காரர்கள், மநுஷ்



களையும் வர்ணாஶ்ரமங்களையும் தூஷிப்பது ப்ரமாணங்கட்கும் யுக்திக்கும் பொருந்தாது' என்னும் விஷயமாக 10-மணிவரையில் உபந்யாஸம் நடத்தப்பட்டது. அவ்விடத்தில் அநேக வக்கீல்களும் உத்யோகஸ்தர்களும் வைதிகர்களான அநேக ஸ்வாமிகளும் வந்திருந்தனர். எல்லோரும் அதைப் பொறுமையுடன் கேட்டு ஆநந்தித்தனர்.

மறுதினமும் ஸ்ரீ ஸந்நிதியில் 7-மணிக்கு, 'தத்வஜ்ஞாநம் மிகுந்த அவஶ்யம்' என்னும் விஷயத்தைப்பற்றி 2-மணிகாலம் தெளிவாக உபந்யாஸம் நடைபெற்றது. அன்று, ஸமீபத்தில் ஸ்வதேஶ க்ஷேம விஷயமாய்ப் பாடுபடும் ம-ா-ா-ஸ்ரீ ஸத்யமூர்த்தி அய்யர் அவர்களது உபந்யாஸம் நடைபெற்றமையால், அன்றைதினம் கூட்டம் கொஞ்சம் குறைவாகவே இருந்தது. 3-தினங்களிலும், சீர்திருத்தத்தில் அதிக நோக்கமுள்ள பலர் ஸ்ரீஸ்வாமியின் உபந்யாஸத்தைக் கேட்டு ஶ்லாகித்துப்போனார்கள்.

மறுதினம், ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வார் ஸபையில் விஶிஷ்டாத்வைத விஷயத்தைப்பற்றி 3-தினம் உபந்யாஸம் நடத்துவதாக ஆரம்பிக்கப்பட்டு, ஸ்ரீ. உப. பு. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியினுடைய தேஹ அஸௌகர்யத்தினால் 3-வது தினம் நடைபெறாத 'ஈஶ்வர தத்வம்' என்னும் விஷயமானது, இரவு 8-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 9-மணிவரையில் ஸ்ரீ ஆதிப்பிரான் ஸந்நிதியில் நடத்தப்பட்டது.

ஒரு வாரமாக இடைவிடாது உபந்யஸித்த அவருடைய ஶ்ரமத்தினால் நீண்டகாலம் உபந்யாஸம் நடைபெறவில்லை. கடைசியில், திருநகரியில் நம்மாழ்வார் ஸபையார் இந்த ஸ்வாமிக்கு ஸம்மாநம்செய்ய, அவர், ஆழ்வார் ப்ரஸாதங்களைமட்டும் பெற்றுக்கொண்டு, பணத்தை அச்சபைக்கே திருப்பிக் கொடுத்துவிட்டனர்.

டி. எஸ். தாதாசார்யர்,

(3).

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபர்க்கு:—

காளயுக்தி மாசி மீ 9உ ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபா வித்வான் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி இவ்விடம் வந்தார். வக்கீல் ஸ்ரீ. உப. வெங்கடாசார்யர், வக்கீல ஸ்ரீ: உப. வி. வி. ஸ்ரீநிவாஸாசார்யர் இவர்களுடைய ப்ரயத்நத்தின்பேரில் பாளையங்கோட்டை ஸ்ரீ கோபாலன் ஸந்நிதி முனமண்டபத்தில் ஓர் ஸபைகூடிற்று. அங்கு அநேகம் வைதிக ஸ்ரீ வைஷ்ணவர்களும் வக்கீல்களும் ஸச்சூத்ரர்களான ஆஸ்திகர்களும் வந்திருந்தார்கள். மாலை 4-மணிக்கு ஸபையாருடைய அபிப்ராயத்தை அநுஸரித்து, 'ஸத்ஸம்ப்ரதாய மஹிமை' என்னும் விஷயத்தை

ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்வாமி ஆரம்பித்து 9/45-மணி வரையில், ஸ்ரீ ஸர்வேஸ்வரனே முதலில் நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கு ப்ரதமாசார்யன் என்பதையும், ஆசார்ய சிஷ்யலக்ஷணத்தையும், அத்யாத்ம சாஸ்த்ரார்த்தத்தை குருபதேச புரஸ்ஸரமாகவே க்ரஹிக்கவேணுமென்பதையும், தத்கால நாகரிகர்கள் அவ்விதமாக க்ரஹிக்காததனால் தான் அவர்களுக்கு அநேக விபரீதபுத்தி உண்டாகி அதர்மபுத்தி உண்டாகியிருக்கிறதென்பதையும் அநேக ப்ரமாண உதாஹரணங்களுடன் உபந்யஸித்ததுடன் நம் ஸம்ப்ரதாயந்தான் பக்ஷபாதமின்றி எல்லாஜாதியரும் மோக்ஷமடையும் வழியை நன்கு காட்டுகிறதென்றும், மற்றும் பலமதங்கள் இவ்வளவு தெளிவான அபிப்ராயத்தைக் கொள்ளவில்லை யென்றும பல ப்ரமாணங்களுடன் உபந்யஸித்ததைக்கேட்டு அங்குவந்திருந்த ஸச்சூத்ரர்கள் மிகுந்த ஸந்தோஷம் அடைந்தார்கள். பின்பு, ஸந்த்யாவந்தனத்துக்கு விரோதமில்லாதபடி ஸபை கலைந்தது. அக்காலத்தில் வக்கீல் ஸ்ரீ. உப. வெங்கடாசார்ய ஸ்வாமி உபந்யாஸத்தைப் புகழ்ந்து பேசினதுடன் மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு வீரராகவபுரம் ஹிந்து காலேஜில் 'விசிஷ்டாத்வைதம்' என்னும் உபந்யாஸம் நடத்தவேணுமென்றும், அதற்கு ஆஸ்திகர் அனைவரும் வரவேணுமென்று சொல்லவே, யாவரும் அதை அநுமோதித்தனர்.

மறுதினம் வீரராகவபுரத்தில் ஏற்படுத்தப்பட்ட விவேகவர்த்தினீ ஸபையின் ஆதரவில் ஹிந்துகாலேஜ் இங்க்லீஷ் ஹாலில் ஷெ உபந்யாஸம் நடத்துவதாக நோடீஸ் ப்ரசுரம் செய்யப்பட்டு மாலை 4-மணிக்குக் காலேஜுக்கு அநேகம் வக்கீல்களும் வைதிகர்களும் ஆஸ்திகர்களும் வந்து பார்க்கையில், குறிப்பிட்ட ஸ்தலம் பூட்டப்பட்டிருந்ததால் கொஞ்சம் காத்திருந்தும் ஸௌகர்யம் ஏற்படாததைக்கண்டு, ஸமீபத்தில் இருக்கும் வக்கீல் ஸ்ரீ. ஆபத்தாரணையர் அவர்களுடைய பங்களாவில் ஷெ உபந்யாஸம் நடத்தப்பட்டது. சுமார் 100-பேர் கூடியிருந்தார்கள். எல்லாரும் வக்கீல்களும் உத்யோகஸ்தர்களும் ப்ரபுக்களும் பண்டிதர்களாகவு மிருந்தார்கள்.

வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர் மாலை 4-மணிக்கு ஆரம்பித்து 6-45 மணிவரையில் அநேக ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களுடன் மற்ற பாஷ்யகாரர்களுடைய விஷ்ணுபரத்வ ப்ரதிபாதக வாக்யங்களுடனும் விரிவாக உபந்யஸித்து, கடைசியில் மற்ற வைதிகமதங்களைக் காட்டிலும் விசிஷ்டாத்வைத மதமானது பொதுவாக யாவரையும் ஸமமாக நோக்குவதால் இது அதிக மஹிமை பொருந்தினது என்று சொல்லிமுடித்தார். அக்காலத்தில் சைவத்தில் மிகுந்த நோக்குள்ள ஒரு பண்டிதரும், அவர் பின்போகும் ஒருவர்தவிர மற்றயாவரும் உபந்யாஸத்தைக்கேட்டு மிகவும் ஆநந்தித்தனர். பின்பு உபந்யாஸகரின் ஸ்தோத்ரத்துடன் ஸபைகலைந்தது.

பாளையங்கோட்டை.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

## மதராஸ்

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஒன்பதாவது வார்ஷிக மஹா ஸங்கம்.

சென்ற மார்கழிமீ 13, 14, 15, 16-ம் தேதிகளில், 1919-டிஸம்பர் 28, 29, 30, 31) 'தேவர் தானவர் சென்று சென்றிறைஞ்சும் தண்' திருவயிந்திர புரத்தில், மதராஸ் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஒன்பதாவது வார்ஷிக மஹாஸங்கம் மிகவும் ஶ்லாக்யமாக நடைபெற்றது. சென்ற வருஷங்களிற போலவே இந்த ஸம்வத்ஸரத்திலும் அநேக வைதிக லௌகிக ஆஸ்திகர்கள், தமது ஸாந்நித்யத்தால் ஸதஸ்ஸை அலங்கரித்தனர்.

ஏற்கெனவே ஸதஸ்யர்களால் செய்யப்பட்ட ப்ரார்த்தனைப்படி ஸதஸ்ஸின் அக்ராஸநாதிபத்யத்தை வஹித்து ஸதஸ்ஸை ப்ரவ்ருத்திப்பிப்பதாகத் திருவுள்ளம் பற்றியிருந்த ஸ்ரீ. உப. மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமியை, ஸபையின் கார்யதர்சி, அந்த ஸ்வாமி இறங்கியிருக்கும் திருமாளிகையினின்றும் வைணவர் குழாங்களுடன் அன்றைக்காலை, (28-12-19) ததீயாராத நாகஸ்வரம் பூர்ணகும்ப புரஸ்ஸரமாக வேதகோஷ மங்களவாத்யத்துடன் திருயாமணி மண்டபமெனத்தகும் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் திருமாளிகைக்கு எழுந்தருளப்பண்ணிக் கொண்டு வந்தனர்.

முதலில், திருவஹீந்த்ர புரஸ்தல வாஸிகளின் ப்ரதிநிதியாயும் உபசரணைகமிட்டி தலைவருமான ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி ஸதஸ்ஸை உத்தேசித்துச் செவிக்கினிய செஞ்சொல்லால் ஸ்வாகத ப்ரஸங்கம் செய்தார்.

அது முடிந்தவுடன், ஸ்ரீ. உப. பகவத்விஷய வித்வான் சேட்லூர் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியால் ப்ரேரேபிக்கப்பெற்று ஸபையோரால் அநுமோதிக்கப்பெற்று மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உப. கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி அக்ராஸநத்தை வஹித்து, ஸர்வ ப்ரகாரத்தாலும் ஶ்லாக்யதமமாக இருந்த ஒரு உபந்யாஸத்தைக் கடல்மடை திறந்தாற்போல் அநுக்ரஹித்தார்.

பிறகு, திருவையாறு ஸம்ஸ்க்ருத கலாசாலைத் தலைவர் ஸ்ரீ. உப. வேதாந்தாசார்யர் ஸ்வாமி (ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்ய ஸவைதிகத

ஸம், ஜோகஹிதெதஷிஸம்வ' என்றும் விஷயங்களைப்பற்றித் தாம் எழுதிக்கொணர்ந்த உபந்யாஸத்தைப் படித்துப் பரக்க உபந்யஸித்தார். ஸந்த்யாகாலம் ஸமீபித்தபடியால் அவைகளில் சிலபாகம் ஸங்க்ரஹமாகவே சொல்லப்பட்டு முற்றுப்பெற்றது. அறிக்கையிற் குறித்தவாறு அன்றை தினம் நடைபெறவேண்டிய உபந்யாஸம் மறுதினம் நடைபெறு மென்று அக்ரா. ஸநாதிபதி கூறி, மேற்கண்ட உபந்யாஸத்திற்கு முடிவுரையும் கூறினர். ஸபை 6 - மணிக்குக்கலைந்தது.

மறுதினம் காலை 8 - மணிக்கு ஸதஸ் சேர்ந்தது. ஏற்கெனவே அறிக்கையில் விஜ்ஞாபித்துக் கொண்டிருந்தபடி காலை 8 - மணிக்கு ஆரம்பித்து 11 - மணி வரையில் பண்டித பரீக்ஷையின் விகிதமான அம்சம் வேறோரிடத்தில் நிகழ்ந்தது. அப்பொழுது ஸ்ரீ. உப. மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் ஸ்வாமியே அக்ராஸநத்தில் அமர்ந்தார். முதலில், ஸ்ரீ. உப. பகவத் விஷய வித்வான் சேட்லூர் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி 'அச்யுத ஶதகம்' என்றும் விஷயத்தைப்பற்றி, மாரிமலை முழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும் சீரிய சிங்கம் அறிவுற்று முழங்குவதுபோல் முழங்கி ஸபையைக் களிப்பித்தார்.

பின்னர், 'ஸ்ரீவைஷ்ணவ மதத்தின் யாதார்த்யம்' என்றும் விஷயத்தைப்பற்றி ஸ்ரீ. உப. என். ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி அதிமாத்ரம் ரஞ்ஜகமாக உபந்யாஸாம்ருதத்தைப் பொழிந்து ஸபையோர்களைக் குளிரச் செய்தனர். அதன் ரஞ்ஜகதையை உணர்ந்த ஸபையோரிற் சிலர் அதனைப் புத்தகரூபமாக ப்ரசுரித்தல் நலமாகுமென அபிப்ராயப்பட்டனர்.

அநந்தரம், நவீந நாகரிகர்கள் ஏற்படுத்தியுள்ள ஆசார சீர்திருத்தங்களுக்குக் கண்டகமாக 'திருத்த திருத்தம்' என்றும் விஷயம், ஸ்ரீ. உ.ப. வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் உபந்யஸிக்கப் பட்டது. அங்குக் குழுமியிருந்த வைதிக லௌகிக ஆஸ்திகர் அனைவரும் ஶாஸ்த்ரத்துக்கு ஒட்டினதாயும் அநுபவத்திற்குப் பொருந்தினதாயுமுள்ள அவ்வுபந்யாஸத்தைப் புகழ்ந்து முடியவில்லை.

பிறகு, 'ஸ்ரீவைஷ்ணவ வம்ச ஸம்ரக்ஷணம்' என்றும் விஷயத்தைப் பற்றி ஸ்ரீ. உப. வித்வாந் புலவனூர் தேசிகாசார்ய ஸ்வாமி வெகு அழகாக உபந்யஸித்தார். அக்காலத்தில் சென்னையிலிருந்து ம-ா-ா-ஸ்ரீ கோவிந்ததாஸ் சதுர்ப்புஜதாஸ் என்றும் தநிகர் விஜயம் செய்திருந்தனர். அப்போது ஸ்ரீ. உப. சடகோபாசார்ய ஸ்வாமி, ஸபையோரிடத்துச் சில விஷயங்கள் மொழிந்தனர். அவை, நமது ஆர்யவித்யையை நாம் ப்ரதாநமாக ஏற்படுத்தி அப்யஸிக்காததனால் நம்மில் வித்வாந்கள் குறைகின்றன ரென்றும், இக்குறை ஆங்க்லபாஷை உலகத்தில் நிலவிய பிறகே நேர்ந்ததென்றும், இன்னும் எவ்விதமான கேவல ஸ்திதிக்கு நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் வந்து விடுமோ வென்று அஞ்சவேண்டியிருக்கிற தென்றும், அவ்வாறு நேராதிருப்பதற்கு வித்வான்களும் ஸ்ரீமான்களும் முயற்சிக்க வேண்டுமென்றும், இதனாலே ஆங்க்லபாஷாப்யாஸமே அடியோடு வேண்டாமென்பது தன்னுடைய கோரிக்கையல்ல வென்றும், பிள்ளைகள் 15 - வயது வரையிலாவது ஸ்வபாஷாப்யாஸம் பண்ணவேண்டு மென்றும், அதற்காகப் பாடசாலைகள் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட வேண்டு மென்றும் கூறிமுடித்தனர். அதன்மேல் அக்ராஸநாதிபதி இவற்றை ஆமோதித்துப் பேசுவது அத்யாவஶ்யமென்று கருதி, நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் தழைப்பதற்கு என்னென்ன க்ருஷிபண்ண வேண்டுமோ அவற்றை யெல்லாம் ஸாங்கோபாங்கமாய் உரைத்தனர்.



அதன்மேல் திருவாளர் கோவிந்த தாஸ் சதுர்ப்புஜதாஸ் என்பவர், இத்தகைய பாடஶாலை ஒன்று ஏற்படுத்துவதற்கு முதலில் 500 - ரூ. கொடுப்பதாகவும், பின்னர் அதன் அபிவ்ருத்தியை யோசித்து மேன்மேல் த்ரவ்ய ஸஹாயம் செய்வதாயும் வாக்தானம் பண்ணியிருக்கிறார் என்று ஸ்ரீமான். ஶடகோபாசார்யர் ஸ்வாமி சொன்னார். இதைக்கேட்டதும் ஸபையில் ஓர் பேராரவாரம் கிளம்பிற்று. அநந்தரம ஸபை 7 - மணிக்குக் கலைந்தது.

ததீயாராதநம் ஆனபிறகு ஸ்ரீ. உப. ஸௌந்தரராஜ அய்யங்கார் ஸ்வாமி 'குசேலசரித்திரத்தை ஶாஸபூர்வமாக நடத்தி ஸபையை ஸந்தோஷப்படுத்தினார்.

மறுபடியும், மறுநாள் காலை 8 - மணிக்கு ஸபை கூடியது. ஸ்ரீ. உப. கபிஸ்தலம் ஸ்வாமியே அக்ராஸநம் வஹித்தனர். அதன்மேல், ஸ்ரீ. உப. வித்வான் இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர் 'ஜகந்ஸத்ய ஸ்தாபநம்' என்றும் விஷயத்தை உபந்யஸித்தனர். ஶ்ரோதாக்கள் இந்த உபந்யாஸத்தின் மேன்மையைப் புகழமுடியா தவர்களாயினர்.

அதன் பின்பு, 'ஸ்ரீதேவநாதன் வைபவம்' என்றும் விஷயம், திருச்சிறுப்பள்ளி ஸ்ரீ. உப. அன்பில். வி. கோபாலா சார்யர் ஸ்வாமியால் அத்யாஹ்லாதத்துடன் உபந்யஸிக்கப்பட்டது.

பின்னர் 'ஸர்வ தேவகாரணம்' என்றும் விஷயத்தைத் திருக்குடந்தை வித்வான் ஸ்ரீ. உப. வாஜபேயம் வீரராகவ தாதாசார்யர் ஸ்வாமி, அநேக லௌகிக உபமாநங்களைக் கொண்டும் ஶாஸ்த்ரபாஸம் பொருந்திய அநேக கதைகளைக் கொண்டும் விளக்கி ஶ்ரோதாக்களின் மனக்கவலைகளைப் பறக்கடித்தார்.

அதன்மேல், ஸ்ரீமாந்: கோவிந்ததாஸ் சதுர்ப்புஜதாஸ் கருணைபுரிந்து உதவிய பணத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு நமது ஸம்ப்ரதாயாபிவ்ருத்திக்கு வேண்டிய செயல்கள் யாவை என்பது ஆலோசிக்கப்பட்டது. ஸ்ரீராமாநுஜ ஸம்ப்ரதாயம் ஓங்குவதில் அத்யந்தம் ஶ்ரத்தையத்தை வஹித்த ஸ்ரீ. உப. இஞ்சிமேடு ரங்கநாதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை அவலம்பித்தோர் யாவரும், (அதாவது மீ 1 - க்கு 25 - ரூ - க்கு மேற்பட்டவரும்படி யுள்ளோர்) ஒருமீ சம்பளத்தைத் தமது ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியின் பொருட்டு அநுப்பிக்க வேண்டியது அவஶ்ய மென்றும் வக்கீல்களும் உயர்ந்த உத்யோகத்தில் அமர்ந்துள்ள ப்ரபுக்களும் மனம் வைத்தால் இந்த எண்ணம் ஶ்ரமமின்றி ஈடேறிவிடு மென்றும், ஒவ்வொரு மாதத்திலும் த்ரவ்ய ஸஹாயம் செய்யாவிட்டாலும், தமது புருஷாயுஸ்ஸில் ஒருதரமாவது தமது ஒரு மாதசம்பளத்தையோ அல்லது தமக்கு இஷ்டப்பட்ட தொகை

யையோ கொடுக்கவேண்டுவது ந்யாயமாகு மென்றும் பல்படியாக வாதித்தார். அதன்மேல் ஸ்ரீ. உப. அன்பில் ஸ்வாமி அந்தக்கருத்தை ஆமோதித்து, ஒவ்வொருவரும் தமது புருஷாயுஸ்ஸில் ஒருதரம் உதவுவது, நமது ஸம்ப்ரதாயத்துக்கு நேர்ந்திருக்கும் க்ஷீணதைக்குச் சிகித்ஸை செய்யமாட்டாதென்றும், மாதம் கொஞ்சமாவது வருஷத்துக்கு ஒரு முறையேனும் உபகரிப்பதுதான் ந்யாயமெனும் இப்படி யெல்லாம் சொன்னதன்பேரில் ஸபையோர் இவற்றை யெல்லாம் கேட்டு 'எல்லாம் வாஸ்தவமே; செய்யவேண்டுவது ந்யாயம்தான்' என்று ஒப்புக்கொண்டனர்.

பின்பு, 'ஸ்ரீபாஷ்யோத்கர்ஷம்' என்னும் விஷயம் மதுராந்தகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸா சார்யஸ்வாமியால் உபந்யஸிக்கப்பட்டது. அது அதிமாத்ரம் ரஞ்ஜகமாக இருந்தது. அதன்மேல் அக்ராஸநர் முடிவுரைகூற ஸபை மாலை ஸுமார் 7 - மணிக்குக் கலைந்தது.

மறுநாள் காலை 8 - மணிக்கு ஸபைகூடிற்று. ஸ்ரீ. உப. மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் ஸ்வாமியே அக்ராஸநம் வஹித்தனர். அதன் மேல் ஸபையின் அங்கத்தினர்களின் ஸங்கம் நடந்தது. அதன் விவரங்கள் அடுத்த ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யப்படும்.

இது முடிந்ததும் 'ஜீவஸ்வதந்த்ர பாரதந்த்ர பாவ:' என்னும் விஷயத்தைப்பற்றி ஸ்ரீ. உப. வித்வான் ஈயுண்ணி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அங்குவந்திருந்த பண்டிதரெல்லாரும் களிக்கும்படி ப்ரஸங்கித்தார்.

இதற்குமேல் 'பரதேவதா பாரமார்த்யம்' என்னும் விஷயத்தை ஸ்ரீ. உப. வித்வான் திருவஹீந்த்ரபுரம் பாஷ்யம் ரங்கராமாநுஜாசார்ய ஸ்வாமி, வேதம், புராணம், இதிஹாஸம் முதலியவற்றிலிருந்து மேற்கோளெடுத்துக்காட்டி ஸ்ரீமந்நாராயணனே ஒப்புயர்வில்லாப் பரதெய்வம் என்பதை நிஷ்கர்ஷித்தார்.

அநந்தரம் 'கஜேந்த்ராழ்வான் விஷயத்தில் ஆழ்வார்களின் அநுபவம்' என்னும் விஷயத்தைப்பற்றி ஸ்ரீ. உப. வித்வான். ராயம்பேட்டை அபிநவ பட்டபாண க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி லலிதமான நடையில் ஓர் உபந்யாஸத்தை எழுதிப்படித்தனர். அதனால் ஆழ்வார்களின் ஈடுபாடு ரஸிகர்களான ஸ்ரோதாக்களுக்குத் தெள்ளிதில் விளங்கிற்று.

அதன்மேல், 'ஸம்ஸ்க்ருத பாஷாபி வ்ருத்தியும் ஆலய பரிஷ்காரங்களும்' என்பதைப்பற்றி ஸ்ரீ. உப. வித்வான் வெங்கடாத்ரி அகரம் அநந்தாசார்ய ஸ்வாமி ரஞ்ஜகமானதோர் உபந்யாஸத்தைச் செய்து முடித்தனர்.

அதன் பின்னர் வடமொழியில் வல்ல இரண்டு வித்வான்கள், நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமானது மாலிந்யமடைந்து வருவதில் மனம்பொறாது தமது குறைகளை ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே அரைமணி ஸாவகாசம் புங்காநுபுங்கமாகப் பொழிந்தனர். அதன் ஆஸ்சர்யம் அளவிடல் அரிது.

கடைசியாக, அக்ராஸநாதிபதி எழுந்திருந்து, மிகுந்த உவப்பெய்தி, முற்காலத்தில் ஆர்யபாஷைக்கு இருந்த ஏற்றத்தையும் தற்காலம் அதற்கு வந்திருக்கும் தாழ்வையும்பற்றி பேசுத்து, ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன், ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தம் தழைப்பதற்கு காந்த ரூபமாகவும் பிறவற்றாலும் செய்தருளின மஹோபகாரத்தைச் சிந்தித்தும் இக்காலத்தில் 'இந்த ஸம்ப்ரதாயம் இப்படி லோபித்துப் போவட்டியேன்?' என்றும் மனங்கரைந்துருகினர். இதனைக் கேட்டவர்களும் அழலடைப்பட்ட வெண்



ணெயாயினர். அதன்மேல் இது தழைப்பதற்கு உரிய உபாயங்களையும் விஶதமாகக்கூறி உபந்யாஸத்தை இனிது முடித்தார்.

பிறகு ஸ்ரீ. உப. சே. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி எழுந்திருந்து ஸ்ரீ. உப. தேசிகாசார்யர் எனும் அன்வர்த்தமான திருநாமம் வஹித்துள்ள அக்ராஸநாதிபதிக்கும், பாரத்வாஜ ஆதித்யம் என்று சொல்லலாம் படியான ஆதித்யத்தையே ப்ரதாநமாகக் கொண்டவரும் 'காசின்வாய்க் கரம்விற்கினும் கரவாதுமாற்றிலி சோறிட்டு' தேஶவார்த்தை படைத்த செல்வநம்பிகள் போன்றுள்ள உபசரணைத் தலைவருமான ஸ்ரீ. உப. ஶடகோபாசார்ய ஸ்வாமிக்கும், மற்றை வித்வான்களுக்கும் பிறர்க்கும் வந்தநத்தைச் செலுத்தினர். இரவு 7 - மணிக்கு ஸபை கலைந்தது.

ததீயாராதநம் முடிந்தபின்னர், கரூர் ஸ்ரீ. உப. சடகோபாசார்ய ஸ்வாமியால் ப்ரணீதமாயுள்ள 'பைமீ ஸ்வயம்வரம்' என்னும் நாடகத்திலிருந்து சிற்சில அம்ஶங்கள் அங்கு வந்திருந்த வித்வான்கள் முன்னிலையில் படிக்கப்பட்டன. ஸபை மறுபடியும் கூடிற்று.

பிறகு ஸதஸ்ஸைப் பூர்த்திசெய்துவைத்த உபகாரகர்களெல்லாருக்கும் க்ருதஜ்ஞதா விஷ்காரணம் செய்யப்படவே ஸதஸ் முடிவுபெற்றது.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

## புஸ்தக விமர்ஶம்.

(1) பைமீ ஸ்வயம்வரம் [கெ. டி. பார்த்தஸாரதி ஐயங்கார், வேலூர் (சேலம்), புகளூர்; விலை ரூ. 1-10-0.] இப்பெயர்பூண்ட ஸம்ஸ்க்ருத நாடகமொன்றை நாம் வரப்பெற்றோம். சற்றேறக்குறைய 150 வருஷங்களுக்கு முன் மைஸூர் ஸம்ஸ்தாந வித்வானாக இருந்த கரூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் குமாரரான ஶடகோபாசார்ய ஸ்வாமியால் இது ப்ரணீதமானதென்று நாம் அறிகிறோம். திருச்சிறுப்பள்ளி ஸென்ட் ஜோஸப் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிதர் ஸ்ரீ. உப. ஸாரஸ்வத ஸாரஜ்ஞ தட்டை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் வ்யாக்யாநத்துடனும், திருச்சிறுப்பள்ளி ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீ. உப. மீமாம்ஸாரத்நம் எ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்டுள்ள இங்லீஷ் முகவுரையுடனும் தேவநாகரலிபியில் ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணீ விலாஸ அச்சுக்கூடத்தில் அச்சுப்பதிப்பிக்கப்பட்டு, க்ரந்த கர்த்தாவின் ஸந்ததியில் ப்ரஸூதராயுள்ள ஸ்ரீ. உப. கெ. டி. பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமியால் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. சென்ற மார்கழிமாஸத்தில் திருவஹீந்த்ரபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் மஹா ஸங்கத்தில் ஸ்ரீ. உப. மஹாமஹோபாத்யாயர் கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி முதலான வித்வான்களின் முன்னிலையில் இந்த க்ரந்தத்தின் சில பாகங்கள் படிக்கப்பட்டு அவர்களால் ஶ்லாகிக்கப்பட்டன. கதா ஸந்தர்ப்பம், பாத்ர ஸந்நிவேஶம், ரஸபௌஷ்கல்யம் முதலிய அம்ஶங்களில் இந்நாடகம் மிகச் சிறந்ததாய் இருப்பதுடன், ஸுலபமான த்ராக்ஷாபாக நடையில் எழுதப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி நாம் மிகவும்

ஆதரிக்கிறோம். லோகோபகாரத்தை உத்தேசித்தே, சரீரச்ரமம் அர்த்த வ்யயம் முதலான ஒன்றையும் பாராட்டாமல் இப்புஸ்தகத்தை வெளிப் படுத்தி இருக்கும் ஸ்ரீ. உ.ப. பார்த்தஸாரதி ஐயங்கார் விஷயத்தில், ஸம்ஸ் க்ருத பாஷாபிமானிகளெல்லாரும் மிக்க க்ருதஜ்ஞதை யுற்றவர்களாகவே இருக்கவேண்டும்.

2. ஸ்ரீ ஹர்ஷ சரித்ரம் (தமிழ் மொழிபெயர்ப்பு. ஸி. ர. ஸ்ரீநிவாஸ பாட்டாசார்யர், 16, பாட்டாசார்ய தெரு, கும்பகோணம், விலை அணா 10.) இது, சற்றேறக்குறைய 1400 வருஷங்களுக்குமுன் இரண்டாம் சீலாதித் யன் என்னும் ஸ்ரீ ஹர்ஷ சக்ரவர்த்தியின் ஆஸ்தான பண்டிதராகிய மஹாகவி ஸ்ரீ பட்டபாணனால் எழுதப்பட்டது. ஸ்ரீ. உ.ப. ஸ்ரீவத்ஸ சக்ரவர்த்தி. அபி நவ பட்டபாண ஆர். வி. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி அதை எளிதான தமிழ் நடையில் மொழிபெயர்த்து, ஸம்ஸ்க்ருத பாஷா பரிசயமில்லாமலிருக்கும் நமது தேசாத்தபிமானிகளின் உபகாரார்த்தமாகவே வெளிப்படுத்தி இருக்கி ரூர். இப்பொழுது வெளிவந்திருக்கும் இந்த முதல் பாகத்தில், பாண கவி யால் எழுதப்பட்டுள்ள தன்னுடைய சரித்ரமே அடங்கி இருக்கிறது. ஸாதா ரணமாய் ஒரு பாஷையின் க்ரந்தங்களை மற்றொரு பாஷையில் மொழிபெ யர்த்தால், மூலக்ரந்தத்தின் அதிசயங்கள் ப்ராயேண லுப்தமாகி விடுகின் றன என்று ஜனங்கள் சொல்வதுண்டு. அப்படி அதிசயங்கள் லோபமடை வது ஸாமாந்ய அதிகாரிகள் விஷயத்திலே மாத்ரமென்றும் உத்தமாதிகாரி கள் விஷயத்தில் ஸர்வமும் ஸமஞ்ஜஸமாகவே முடியுமென்றும் இந்த க்ருதி யைப் படிக்குமவர்களுக்கு நன்கு புலப்படும். புஸ்தகமும் தர்சனமாத்ரத் தால் ஸந்தோஷப்ரதமாக இருக்கின்றது. நமது தேசத்திய ஜனங்களின் பண்டயகாலத்திய நடை உடை பாவனைகளை அறிந்துகொள்வதில் உத்ஸாஹ முள்ள தேசாபிமானிகளெல்லாரும் இப்புஸ்தகத்தை வாங்கிப்படித்து ஆதரிப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

3. ஸ்ரீ ராமாயண தனிஸ்லோகம். (ஸி. ர. ஸ்ரீநிவாஸ பாட்டாசாரியர், 16, பாட்டாசார்யதெரு, கும்பகோணம். 8 பாரமுள்ள ஒரு ஸஞ்சிகையின் விலை அணா 10.) நாலாயிர திவ்ய ப்ரபந்த வ்யாக்யானங்களில் ப்ரக்ருதாநு குணமாக அநேக ஸ்ரீராமாயண ச்லோகங்கள் எடுக்கப்பட்டு அதிரஞ்ஜக மாக வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கின்றன என்பது ப்ராயேண எல்லா ருக்கும் தெரிந்த விஷயம். அப்படி வ்யாக்யாதங்களாயுள்ள ச்லோகங் களை, ஸ்ரீ. உப. ஸ்ரீ வத்ஸ சக்ரவர்த்தி அபிநவ பட்டபாண ஆர். வி. கிருஷ்ண மாசார்ய ஸ்வாமி, காண்டம் ஸர்க்கம் ச்லோகம் என்னும் க்ரமத்தில் வரி சைப்படுத்தி தொகுத்து, அந்தந்த் திவ்யப்ரபந்த வ்யாக்யான ஸ்தலத்தை யும் குறிப்பிட்டு மிகுந்த ச்ரமத்துடன் பாஷாபிமானிகளுடைய உபகாரத்தை உத்தேசித்தே வெளிப்படுத்தி இருக்கிறார். தேசாந்தரங்களில் இந்த ரூப மான ப்ரயத்னங்கள் ப்ராயேண அர்த்தலாபத்தில் பர்யவஸிக்கின்றன. இங்கோ அத்தகைய ப்ரயோஜநத்தை ஆலோசிக்க இடம் இல்லை. ஸ்வதேச பாஷாபிமானமும் ஆசார்ய பக்தியுமே இந்த ப்ரயத்னத்துக்கு ப்ரேரகங்க ளாக இருக்கின்றன வென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? இவ்வித ச்ரமத்தை ஏற்றுக்கொண்டவர்கள் விஷயமாக நம்மவர்கள் செய்யக்கூடிய ப்ரத்யுபகாரமும் உண்டு. புஸ்தகத்தை விஸ்தாரமாக வாங்கி அதை ஒவ் வொருவரும் வாசிப்பதே அந்த ப்ரத்யுபகாரமாகும். அப்படியே எல்லா ரும் செய்வார்களென்று நாம் நம்புகிறோம்.

OFFICE OF ... 18 AUG 1920 MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 10.] ரௌத்திரி ஹு சித்திரை மீ [ஸஞ்சிகை 7

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

பௌதிக சாஸ்த்ரஜ்ஞர்கள் யோசிக்கின்றபடியே, ப்ரபஞ்சத்தினுடைய விஸ்தாரமானது மநுஷ்யர் யோசனைக்கு மிகவும் அதிசயித்திருக்கின்றது. ப்ரபஞ்ச விஸ்தாரத்தைப் பற்ற ஸூர்ய மண்டலம் முழுதும் ஒரு அணுமாத்ரமென எண்ணப்படலாம். ஸூர்ய மண்டலத்துக்கு நாம் வஸிக்கின்ற பூமி, ஓர் அணுவே யாகலாம்.

பூமியில் ப்ராணிகள் வாஸம் முதலில் உண்டான காலமானது, வருஷ ஸங்க்யையில் பதார்த்த சாஸ்த்ரஜ்ஞர்களால் ஊகிக்கத்தக்கதாகவில்லை. பூமியில் மநுஷ்யவாஸம் முதலில் நேர்ந்த காலத்தைப் பல பத்து லக்ஷம் அல்லது கோடி வருஷங்களென ஊகிப்பார்கள்.

முதலில் பூமி வாஸம் பண்ணின மநுஷ்யர் எவ்வண்ணம் உண்டானார்களானாலும், அவர்கள் தங்களுடைய அநீசத்வத்தைக் குறையின்றி அறிந்திருந்தார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை.

அங்க ஸ்திதியில் தங்களைக்காட்டிலும் ஜ்ஞாந ஶக்திகளில் அதிஶயித்தவர்கள் தங்களுக்கு ஸஹாயம் செய்யவேண்டுமெனும் இச்சையானது அவர்களுடைய சித்தத்தில் உதித்திருக்கவேண்டுமென்பதை மூடனும் மறுக்க வொண்ணாது.

தேஹ ஸம்பந்தமின்றி விலக்ஷணரான சேதநர்களுடைய ஸத்பாவத்தை விஶ்வஸிப்பவர்கள், அப்படிப்பட்ட சேதநர்கள் பூர்வ காலங்களில் அநீஶ்வரர்களான மநுஷ்யர்களுக்கு ஸஹாய பூதரானார்களென விஶ்வஸித்தல் அகாரண விஶ்வாஸமாக மாட்டாது. அஸத்துக்கு உத்பத்தியும் ஸத்துக்கு நாஶமும் இல்லையென்றும் காலம் அநாத்யநந்தமென்றும் தேசமும் அநந்தமென்றும் தத்வ ப்ரகாரங்களைக் கண்டவர்கள், இந்தப் பூமியில் மநுஷ்யவாஸம் நேரிட்ட ஆதிகாலத்தில், தத்பூர்வமே கேவல ஸ்தூல ஶரீராதிகளை த்யஜித்தவர்களாய், பூதஸூக்ஷ்மங்களால் நிர்மிதங்களான விஶேஷ ஶரீர யுக்தர்களாய், ஜ்ஞாந ஶக்திகளில் அதிக்ரமித்தவர்களாய், மநுஷ்யர்க்கு ஹிதம் செய்பவர்களாய்த், தேவதைகளென ப்ரஸித்தி பெற்றவர்களாய், சில சேதநர்கள் மநுஷ்யர்க்கு உபாஸ்யராய், அவர்க்கு ஸஹாயம் புரிந்தார் என்பதை அங்கீகரிக்கலாம். இந்த விஶ்வாஸத்தைக் கெடுப்பது நாஸ்திகதை யொன்றே. அஃதின்றேல், விவித சேதநஸத்பாவம் விஶ்வாஸார்ஹமாவது போல், ஸர்வ சேதநர்களுக்கும் ஸ்வாமியான பரமேஶ்வரன் விஷயமான விஶ்வாஸமும் யோக்யர்களுடைய அப்யுபகமார்ஹமே. ஸர்வ தேவதா ஶரீரியாக நின்ற அந்தப் பகவான் ஆரம்பம் முதற்கொண்டு ஸர்வதேவதைகளையும் ஜகத் ஹிதத்தின் பொருட்டு நியமிக்கின்றான். அவன் விஷயமாகவும், தேவதைகள் விஷயமாகவும், அநாதியாய் அவிச்சிந்நமாய் வருகிற நமது பூர்வீகர்களுடைய அநுபவத்தை நாஸ்திகர்களும் மூடர்களும் ப்ரமத்தில் அங்குரித்ததாக எண்ணுவார்கள். யோக்யர்கள் தேவதைகளும் ஸர்வேஶ்வரனும் நம் பூர்வீகர்களுக்கு அநுபவ விஷயமாகியே வைதிக ஸம்ப்ரதாயம் வளர்ந்ததென்று சொல்வார்கள்.

அப்படிப்பட்ட ஸம்ப்ரதாயத்தில் ஜநித்து, ஸம்ப்ரதாய க்ரந்தங்களை க்ரமமுறையில் காலக்ஷேபம் பண்ணின ஒரு ஸ்வாமியிடம் கேட்டறிந்து, அதன் பலனுக் உபாயாநுஷ்டாநமும் பண்ணின பிறகு, தியாஸஃபி ஸமூஹ ப்ரவேஶத்தை யடைந்த ஒருவர், ஸ்வஸம்ப்ரதாய க்ரந்த பரிசயம் தமக்குக் கர்வாவஹமானதாயும்,



பிறகு அத்வைத க்ரந்தங்களின் பராமர்ஶத்தால் தமது கர்வம் உஜ்ஜ்வலிக்கப்பெற்றதென்றும், தியாஸஃபி க்ரஹப்ரவேஶாநந்தரம் toleration எனும் சித்தவ்ருத்தியைத் தாம் ஸம்பாதித்ததாகவும், அந்தக் குணமானது விவேகாநந்தருடைய உக்திகளைப் படித்து ஸ்திரப்பட்டதென்றும், ஓர் அவஸரத்தில் உபந்யாஸம் செய்ததாகக் கேள்வியுற்றோம். toleration என்றால் அபிப்ராயபேதங்களை ஸஹித்தல். இந்த சித்த வ்ருத்தி நிலைக்கப்பெற்றவன் பிந்நாபிப்ராயங்களைக் குறித்து அவற்றைக் கொண்டவர்களிடம் த்வேஷம் செய்யமாட்டான். இப்படிப்பட்ட சித்தவ்ருத்தி வைதிக ஸம்ப்ரதாயஸ்தர்களிடம் எப்போதும் நிலைத்து நின்றது. பகவான் ஸர்வ பூதங்களுக்குள்ளும் அந்தராத்மாவாயிருக்க மித்ராமித்ர கதை எங்குண்டாமென்று அவர்கள் மதம். ததாகதர் தேசாந்தரத்தில் ஜநித்திருந்தால் சிலுவையில் மரணமடைந்திருப்பர். கிறிஸ்து நமது தேசத்தில இருந்தனராகில் அவ்வித மரணம் அவர்க்கு நேரிட்டிராது. தேசாந்தரங்களில் ஹிம்ஸிக்கப்பட்ட பார்ஸிகளும், யூதர்களும், கிறிஸ்தவர்களும், இத்தேசத்தில் அடைக்கலம்தேடி அதை அடைந்தார்கள். ஆதலால் ஹிந்து மதத்துக்கு toleration எனும் குணபாவம என்று மில்லையென்று சொலலலாம். பிந்நமதங்களை விஶ்வஸிப்பவர்களை யெல்லாம் வேறு காரணமின்றியே யூதர் நாசம்செய்தார்கள். யூதமதத்தின் கிளைமதங்களான கிறிஸ்தவ மஹமதியமதங்களை வழிப்பட்டவர்கள் அந்யமதஸ்தர்களைப் பலமுறையில் ஹிம்ஸித்தார்களென ப்ரஸித்தியுண்டு.

Toleration எனும் பதத்துக்கு அர்த்தகல்பனைசெய்து, ஸர்வ மதங்களிலும் ஸமாந விஶ்வாஸமே என்று அதைச் சொல்லும் பக்ஷத்தில், இது ந்யாயமறிந்தவர் அங்கீகரிக்கத்தக்க விஷயமன்று. நிர்விஶேஷ சிந்மாத்ரமே ப்ரஹ்மமே எனும் பக்ஷத்திலும், ப்ரஹ்மம் ஸர்வாவஸ்தைகளிலுமே சிதசித்ரூப ப்ரகார விஶிஷ்டமெனும் பக்ஷத்திலும் ஸமாந விஶ்வாஸம் பொருந்துமோ? ஜகந் மித்யாவாதத்துடன் ஜகத்தானது ப்ரவாஹேண ஸத்யமும் நித்யமுமெனும் வாதத்தை அங்கீகரிக்கக்கூடுமோ? அஸத்தினின்று ப்ரபஞ்சம் உண்டாயதென்பது, ஸத்தையே அது காரணமாகவுடையதெனும் விஶ்வாஸத்துடன் ஒக்குமோ? கர்மத்தையும் ஜந்மாந்தரங்களையும் விஶ்வஸிப்பவர் இவற்றை மறுப்பவரு

டன் எவ்விதம் ஒன்றுபடுவார்கள்? ஸர்வமதங்களிலும் ஸமரஸ விஸ்வாஸம் எங்கும் நிலைக்காதபடியால் toleration என்பது அந்தப்படிகளில் உதிக்கமாட்டாது.

தியாஸபி ஸபாத்யக்ஷதையை நிர்வஹிக்கின்ற துரைஸானி, தமது எழுத்துக்களில் பின்னாபிப்ராயம் கொண்டவர்களிடம் எவ்வளவு toleration ஆவிஷ்கரிக்கின்றாளென்பதை அவளுடைய பத்ரிகைகளைப் படிப்பவர் கண்டுகொள்ளலாம். மதவிஷயத்திலும் மற்ற விஷயங்களிலும் அந்தத் துரைஸானி அபிப்ராயங்களைப் பலதரம் மாற்றினின்றாள். அவளுடன் ஸர்வாம்ஸங்களிலும் ஸ்வாபிப்ராயங்களை மாற்றவல்ல சிஷ்யர்கள் அவளுக்கு அத்ருஷ்டவஸத்தால் உண்டாயிருக்கின்றனர். அவ்வகை துணிதற்கு ஸாமர்த்யமற்றவரிடம் அந்த அம்மாளுடைய பருஷோக்திகள் யாவருக்கும் தெரிய விளங்குகின்றன. இந்த நாட்டின் ப்ரதம ப்ரவேசத்தைச் செய்த காலத்தில், ப்ராஹ்மணரிடமும் வர்ணாஸ்ரம தர்மங்களிடமும் பகுமானத்தை ஆவிஷ்கரித்தவள், தத்காலம் வர்ணாஸ்ரமாபிமானிகளிடம் Bigotry எனும் மதாபிநிவேஸத்தையும் Superstition எனும் அகாரண விஸ்வாஸங்களையும் ஆரோபித்துத் தூஷிக்கின்றாள். இவளுடைய ஸந்நிதியில் ஒருவர் toleration கற்கச் சென்றதாகச் சொன்னால், பலர்க்கு நகைப்புண்டாய் அதை யடக்கமுடியாது. விவேகாநந்தர் ஸ்வாபிப்ராய விரோதிகளிடம் நிந்தையை ஆவிஷ்கரித்தது யார்க்குத்தான் தெரியாது? ஸங்கர ராமாநுஜ ப்ரப்ருதிகள் கருணையற்றவர்களென்றும் பண்டிதமாநிகளென்றும் அவரால் வர்ணிக்கப் பட்டார்களாகில் அவருடைய toleration விஸ்மயார்ஹமன்றோ?

ஜந்மத்தால் ப்ராஹ்மணனாய்ப் பிறந்து, பின் அடையாற்றின் ப்ரவேஸத்தால் ஜந்மஸித்த ஆசார தர்மங்களுக்கு ஸ்வரூப நாஸத்தைச் செய்து ரமித்த ஒருவர்க்குப் பிறந்து, ஷோடஸவர்ஷ பர்யந்தம் விவாஹமில்லாமல் வளர்ந்த ஒரு பெண்மணியானவள், சிரகால ஸம்ஸர்க்க ப்ரயுக்தமாய் அடையாற்றில் வஸிக்கின்ற அரண்டேல் எனும் ஐரோப்யரிடம் காமங்கொண்டனள் என்றும், அவர்களுக்குள் விவாஹமென ஒரு ஸம்பந்தம் அசிரேண நேரலாமென்றும் கேள்விப்பட்டோம். தத்காலம் மஹாதீக்ஷையுற்ற வைதிக ஸம்ப்ரதாயஸ்தர்களும் மற்றோரும், அவ்வித ஸம்பந்தத்தை ஸஹியாது, சில விடங்களில்கூடி ஸ்வாபிப்ராயங்களை ப்ரகடநம் செய்



தனர். இதற்கு ப்ரதி-ப்ரயோகமும் தியாஸபி ஜநங்களால் சிறிது பண்ணப்பட்டன. ஸமீப காலத்தில் அடையாற்றில் சில தியாஸபி ஸ்த்ரீகள் கூடினார்களாம். மஞ்சேரி அந்நபூர்ணியம்மாளும், அநந்தராமய்யருடைய பார்யையும், அரண்டேலுடைய மேலே விவரித்த விவாஹத்தைப்பற்றித் தங்களுடைய ஸந்தோஷத்தை வெளியிட்டார்களாம். அந்நபூர்ணி அம்மாள் அரண்டேலை ப்ராஹ்மணனாகவே அங்கீகரித்து விட்டாளாம். மதங்கன் என்போன் இந்த அம்மாளிடம் வராமல் ப்ராஹ்மண்யத்தை ஸம்பாதிக்க இந்த்ரனிடம் தெரியாமல் சென்றான் போலும். மஹாதேவ ஸாஸ்த்ரியுடைய மஹிஷியானவள், அரண்டேலுக்கு வரப்போகின்ற பரிணயத்துக்கு ஆக்ஷேபமாக எடுக்கப்பட்ட அம்ஸங்கள்யாவும் தர்க்க ந்யாயங்கள்முன் பறந்துபோய்விடுமென்று ஆயாஸமின்றிப் பக்ஷாந்தர நிரஸநம் செய்து முடித்தாளாம். இதுவன்றோ அடையாறு ப்ரபாவம்? மறுநாள் தியாஸபியில் சேர்ந்த ப்ராஹ்மண புருஷர்களும், அரண்டேல் துரையினுடைய குணவஸீக்ருத சித்தர்களாய், அவரிடம் தாம் கொண்ட பூர்ணவிஸ்வாஸத்தை லோகம் அறிய ப்ரகடநம் செய்ததுமன்றி, அரண்டேலுடைய விவாஹ ப்ரயுக்தமாக வந்த ஆக்ஷேபங்கள் யோசிக்கத் தக்கனவல்லவென்றும் தீர்மானித்து விட்டார்கள். வர்ணங்களுக்குள் பரஸ்பர ஸம்பந்தம் வர்ணஸாங்கர்யத்தில் முடியுமென்று அவை தர்மஸாஸ்த்ரங்களில் நிஷேதிக்கப்பட்டுள. ப்ராஹ்மண ம்லேச்ச ஸம்பந்தம் அப்யுபகமார்ஹமாயிற்றாகில், ஜாதி ஸங்கரம் பலனாய், ப்ராஹ்மண்யம் குன்றிப்போமென்பதில் ஸந்தேஹமில்லை.

வேதமார்க்கம் ரக்ஷகரற்றுப் போயிற்று. ஸங்கரனைக் குறித்து, "வில்லாலடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொருவன், கல்லாலெறியப் பிரம்பாலடிக்க விக்காசினியில், அல்லார் பொழில் தில்லையம்பல வாணர்க்கோ ரன்னைபிதா, வில்லாத தாழ்வன்றோ விங்ஙனே யெளிதானதுவே", என்றொரு கவி நிந்தாஸ்துதியாகப் பாடினர். வைதிகமதமெனப்படும் ஸநாதந தர்மத்தையோ வென்றால், உண்மையாகக் கிறிஸ்துமத ப்ரவர்த்தகர்கள் வில்லாலடிக்கின்றார்கள்; பூர்வம் மஹம்மதியர் அதைச் செருப்பால் உதைத்தார்கள்; ப்ரஹ்ம ஸமாஜத்தினர் அதைக் கல்லாலெறிவார்கள் போலும்; தியாஸபி ஜநங்களதைப் பிரம்பாலடிக்கின்றார்கள்; பாஷாந்தர பரிசயம்பெற்ற சிறுவர்கள் அதற்கு நாற்புறமும் தீயிடு

கின்றார்கள்; வேரும் வீட்டில் பிடுங்கினது லாபமென்று, அதன் சில பாகங்களை ஆர்ய ஸமாஜத்தினர்களும், விவேகாநந்தர் சிஷ்யர்களும் பற்றிக்கொள்கின்றார்கள். வைதிகரென்போர் அதில் தமக்குண்டான ஸம்பந்தத்தை ஜீவநோபாய மாக்குகின்றார்கள். மடாதிபதிகளும், அபிஜநரென்று தம்மைக் கொண்டாடுபவர்களும் தம் மநங்களை ஸததம் தநார்ஜநத்தில் செலுத்துகின்றனர். இவ்வண்ணம் அநாதித்வத்தால் மாதா பித்ரு ரூப ரக்ஷகரற்றுப் போய், த்வேஷிகளாலும் உதாஸீநர்களாலும் பரிவ்ருதமாய்ப் போய், ஶ்ருதி ஸ்ம்ருதி விஹிதங்களான தர்மங்களும், ஆசாரங்களும், மர்யாதைகளும் கஷ்டப்படுகின்றன. அவை ஜீவிக்குமோ என்றும் ஶங்கிக்கின்றோம்.

இப்போதாகிலும் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்களெனப் பிருதுகொண்ட மூன்று ஸம்ப்ரதாயாசார்யர்களும் கண்விழிப்பார்களோ? அவர்கள் ஸம்ப்ரதாயங்களில் தத்வ நிர்ணயமூலமான பரஸ்பர பேதங்களைச் சிலகாலம் கணிசியாமல் விட்டு, மூலத்தில் வெட்டவேண்டிக் கோடாலிகள் உயர்த்தப்பட்டிருப்பதை உணர்வார்களோ? வேத வ்ருக்ஷத்தின் ஸ்கந்தம் நிலைத்த பின்பன்றோ ஶாகைகளின் ரக்ஷணம் யோசிக்கத்தக்கது? ஸநாதந தர்மாபிமாநிகள் ஸ்வரக்ஷணார்த்தம் இனிக் கூடமாட்டார்களோ? தர்மத்துக்குப் பரிபவம் செய்பவர்கள் வ்ருத்தியாகக் காண்கின்றோம்; ரக்ஷகரை எங்கும் காண்கின்றோமில்லை. [illegible] விசக்ஷணராய் ஓர் அதிகாரி ஏற்படாரோ? இங்கே குத்ருஷ்டியென்றால் மேலே விவரித்த வேதமார்க்க தூஷகர்கள். கிறிஸ்தவர், மஹம்மதியர், ப்ரஹ்ம ஸமாஜத்தார் இவர்கள் ஸநாதந தர்மத்துக்கு ப்ரகாஶ விரோதிகள்; மற்றோர்களில் முக்யமாக தியாஸபி ஸமூகம் பூர்வம் ப்ரச்சந்ந விரோதியாயிருந்து, அவ்விஷயத்தில் இப்போது ஆவரணமற்று நிற்பதை ஆர்ய ஜநங்கள் அறிய வேண்டியவர்கள்.

லோகத்தில் அபௌருஷேயமாய், அநாதியவிச்சிந்நமாய் வருகின்றது வைதிக தர்மமொன்றே. அதில் ஜநித்தவர்களுக்கு இந்



லோகத்தில் வேத ஶாஸ்த்ரமொன்றே ஆமுஷ்மிகத்தைப் பற்றக் கைவிளக்காகக் கடவது. ‘[illegible] ॥’ என்கிற க்ரமத்தில், நம்மவர்க்கு ஈஶ்வரப்ரீதிக்காகச் செய்ய வேண்டிய கர்மங்கள் விஷயமாயும், விட்டொழிய வேண்டுமவற்றைப்பற்றியும், வேதம் ப்ரதம ப்ரமாணம்; அதன்பிறகு அதற்கு அவிருத்தமாக இருக்கும் வரையில் ஸ்ம்ருதி ப்ரமாணம்; இவற்றிற்கு விருத்தமில்லாத அம்ஶங்களில் இவற்றை அறிந்தவர்களுடைய ஆசாரங்கள் ப்ரமாணம்; ஸாதுக்களுடைய ஆசாரங்கள், யோக்யர்களுடைய அநுஶாஸநம்; ஸ்வகுலாசாரம், ஸ்வஸூத்ர ஸங்கேதங்கள், தேசாசாரம், ஸ்வஸந்துஷ்டி இவை தர்மாவிருத்தங்களாயிருக்குமட்டும் பின்பு க்ரமேண ப்ரமாணத்வேந அங்கீகரிக்கப்படலாம். ம்லேச்சர்களும், பதிதர்களும், ஶ்ருதி ஸ்ம்ருதி விருத்தமாக விதிப்பதை அங்கீகரித்து நடப்பவர்கள், ஜந்மத்தால் எவ்வண்ணமாயிருந்த போதிலும் ம்லேச்சபதித கோஷ்டிகளில் நிலைக்க வேண்டியவர்களேயன்றி, ப்ராஹ்மண்யாதி வர்ணாபிமாநத்தைக் கொண்டாடத்தக்கவர்களல்லர்.

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |
| 3. ஸ்ரீ பாகவத சதுஶ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்மாசார்யர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 4. ஸ்ரீ சதுஶ்லோகீவிவரணம் ... ... ... ... | 0 | 4 | 0 |

ஸ்ரீ:.

# ப்ரேமப்ரவாஹம்.

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.)

தேவதைகளை உனது தநுக்களென்று சொன்னாய். ஒரு தேவதாபக்தன் இஷ்டகாமஸித்தியின் பொருட்டு அந்தத் தேவதாராதநத்தை ஶ்ரத்தையோடு செய்ய இச்சிக்கின்றான். அப்போது அவனுக்கு அந்த ஶ்ரத்தை நிஶ்சலமாகும்படி நீயே அநுக்ரஹிப்பதாய் வெளியிட்டாய். அவ்வண்ணம் பரிணமித்த ஶ்ரத்தையோடு தேவதாபக்தன் தேவதாராதநத்தைப் புரிகின்றான். பிறகு இஷ்டகாமங்களை அடைகின்றான். அதுவும் கர்மாநுகுண பலாவாப்தியை ஏற்படுத்திய பரமேஶ்வரனான உனது ஸங்கல்பத்தாலென்று நீ உரைத்தனை. ஐஹிக காமங்களால் ஆகர்ஷித சித்தர்களன்றோ, காமஸித்தியின் பொருட்டு ஶாஸ்த்ர விஹிதங்களான கர்மங்களை ஸநியமமாகச் செய்து தேவதாந்தர பஜநம் செய்கின்றார்கள்? தேவதாந்தர பஜநத்தால் தேவதாந்தர ப்ராப்தியும், உனது பக்தர்களுக்கு உனது ப்ராப்தியும் சொல்லப்பட்டது. இவ்வண்ணம் ஆராதிக்கப்பட்ட தேவர்கள் இந்த்ராதி தேவதைகளோடு முடிந்து போகின்றார்களில்லை. அதிகாரி தேவதைகள் தேசாந்தரங்களில் நாமாந்தரங்களால் உபாஸிக்கப்பட்டார்கள். மநுஷ்யன் தனது அநீஶ்வரத்தைக் கண்டுகொண்டு, இஷ்டஸித்தியானது யாதேனுமோர் தேவதையோ, மஹாத்மாவோ தன்னிடம் க்ருபைகொண்டால் தான் தனக்கு லபிக்குமென்று நினைத்து, அப்படிப்பட்ட சேதந விஶேஷத்தை த்ருப்திசெய்ய ப்ரயத்நப்படுவது லோகாநுபவம். அந்தத் தேவதாவிஶேஷம் உண்மையில் இருக்கலாம்; இல்லாமலு மிருக்கலாம். ஆனாலும் அதற்கு ஸ்தாநமும் ஒரு ஶரீரமும் கல்பித்துக்கொண்டு, மநுஷ்யன் அதனுடைய பூஜையில் ப்ரவ்ருத்திக்கின்றான். அவ்விடம் ஆவாஹிதமாய் அந்தர்யாமியான உன்னை உட்கொண்ட தேவதையோ, அஃதின்றேல், அதனிடத்தில் ஆரோபிதரூப விஶிஷ்டனாக நீயோ, அவ்வாராதநத்தை அங்கீகரிக்க ஸாந்நித்யம் செய்வது ஸித்தம்.



ஒரு சேதநனுடைய ஜ்ஞாந ஸங்கோசமானது உனக்கு வெறுப்பை உண்டாக்கமாட்டாது. ஏகலவ்யன் தநுர்வித்யை அபேக்ஷித்து த்ரோணருடைய ப்ரதிமையை ஆஶ்ரயித்து அதைப் பெற்றானென்றால், அது நிஜமாக த்ரோண ப்ரஸாதஜந்யமன்று; ப்ரதிமா ப்ரஸாத ஜந்யமுமன்று. ஏகலவ்யன் ஶ்ரத்தையை நீ உகந்தாய்; அவனுடைய பூர்வ ஸுக்ருதமானது தநுர்வித்யா ப்ராப்திக்கு அநுகூலமாயிருந்தது. அவனுடைய கர்மாநுகுணமாகவும், ஶ்ரத்தைக்குத் தக்கபடியும், பலப்ரதாநமானது பரமேஶ்வரனான உனது கருணையால் உண்டாயிருக்க வேண்டியது. ஒரு தேவதா விஶேஷத்தை உத்தேசித்துப் பலகாமனையால் ஒருவன் யஜ்ஞாதிகள் செய்தானானாலும், ஸர்வயஜ்ஞங்களாலும் வாஸ்தவத்தில் நீயே ஆராதிக்கப்படுகின்றா யென்றும், அவற்றிற்குத் தக்கபடியே பலப்ரதாநம் பண்ணப்பட்ட ப்ரபுவும் நீயே யென்றும், ஸ்வயமே சொல்லியிருக்கின்றாய். ஆதலால், நீ காட்டினபடியே, ஸர்வதேவதாராதநங்களும் உன்னை உத்தேசித்து பண்ணப்படாமல் போனபோதிலும், அவிதிபூர்வகமாக அவை உனதாராதநங்களாகின்றன. கோபிஜநங்களால் அநுஷ்டிதமான காத்யாயநீவ்ரதத்தை யோசித்தால், இந்த விஷயம் ஸ்பஷ்டமாகின்றது. அவர்கள் தநுர்மாஸத்தில், அருணோதயகாலத்தில், யமுனையில் நீராடி, மணலைப் பிடித்துவைத்து, அதில் காத்யாயநீ தேவியை ஆவாஹநம் செய்து, கந்தபுஷ்ப தூபதீபாதி உபசாரங்களாலும் பலவித உபஹாரங்களாலும் அர்ச்சித்து, நீ தங்களில் ஒவ்வொருத்திக்கும் பதியாகவேண்டுமென்று ப்ரார்த்தித்து, அதற்கென்று ஒரு மந்த்ரஜபம் செய்தனர். ஆனால் பூஜாகாலங்களில் அவர்கள் சித்தம் உன்னிடம் லயித்து நின்றது. மாஸாந்தம் வ்ரதம் நடைபெற்றது. ஆனால் கோபகந்நிகைகளுக்குக் காத்யாயநீ வ்ரத பல மளிக்கவில்லை. வ்ரதமே ஸாபராதமாக அநுஷ்டிதம். அபராதத்தை அல்பவ்யாஜத்தால் நீ க்ஷமித்தருளினாய். அஜ்ஞாந க்ருதங்களான அபராதங்களை மஹா தயாதீஶனான நீ க்ஷமித்தருளுகின்றாய். அவர்களுடைய மநோரதமும் ஸர்வஜ்ஞனான உனக்குத் தெரிந்ததே; அது நிறைவேறத்தகாதது. "எனது பணிவிடையைக்குறித்து உங்களுடைய ஸங்கல்பமானது எனக்குத் தெரியும். அதை நான் அநுமோதநம் செய்கின்றேன். அது ஸத்யமாகத்தக்கது. என் விஷயமாக எனைப் பஜிப்பவருடைய காமமானது காமபோகத்தின் பொருட்டு ஆகமாட்டாது. என்னிடம் லயிக்கும் சித்தமானது

எனது மஹிமையால் ஸர்வவிஷய ஸ்ப்ருஹையும் நீங்கிச் சாம்ஸாந்தியை அடையவேண்டியது"; என்றல்லவா நீ கோபகந்நிகைகளுக்குச் சொன்னாய். ஆதலால் அவர்கள் அபேக்ஷித்தவகையில் அவர்களுக்கு நீ பதியாகாவிட்டாலும், பரமபதியான உனது ஸாயுஜ்யம் அவர்கட்குக் கிடைக்கும்படியாக அவர்கட்கு அத்யாத்மவித்யையை உபதேசிப்பித்தாய். ஆதலால் தேவதாரூபமாயோ அந்யரூபமாயோ காமார்த்திகள் உபாஸிப்பதையெல்லாம் ஸர்வசரீரியான நீ ஸ்வோபாஸநமாக அங்கீகரித்து, உபாஸகர்களுடைய அபீஷ்டங்களை அவ்வவர்களுடைய ஜந்மாந்தர ஸுக்ருதாநுகுணமாகத் தருகின்றாய். இந்த உன்னுடைய ஸஹஜகாருண்யத்துக்குத் தேசகால மதங்களுடைய நியமம் இல்லை. ஜநங்கள் தங்களுக்கு வேண்டிய காமங்களைக் கொடுக்கவல்லதாய் எந்த வஸ்துவையாவது நினைத்து, அதற்கு நாமரூப சக்தி குணங்களைக் கல்பித்துப் பிறகு அதைப் பஜித்தாராகில், அவர்களுடைய ச்ரத்தாமாத்ர த்ருப்தனாய், நீயே உன்னால் விஹித பலங்களை அளிக்கின்றாய். ஆனால் உனது தத்வஜ்ஞாநமுள்ளவர்க்குத்தான் உனது ஸாக்ஷாத் பஜநமும், தத்பலமாகிய உனது ஸாயுஜ்யமும் கிடைக்கும்.

இவ்வண்ணம் உனது நிரங்குசமான கருணையையும் மஹிமையையும் அறியாமல், பலர் தம்மிடம் ஒரு ஏற்றத்தை ஆரோபித்துக்கொண்டு, பரர்களை அஜ்ஞாநிகளென்று சொல்லிக்கொண்டு, அவர்களைத் தமது நிந்தைக்கு லக்ஷ்யமாக்குகின்றனர். இது அவர்களுடைய அஹங்கார ஜந்யம். ஸூக்ஷ்மார்த்தங்களை யாஜ்ஞவல்க்யர் ஜநகராஜனுக்கு உபதேசிக்கையில், "யாதேனுமொருவர் உனக்குச் சொல்லியிருந்தால் அதைக் கேட்போம்" என்றுரைக்க, ராஜன் "உதங்கரெனும் சௌல்பாயநர் ப்ராணன் ப்ரஹ்மம் என்றனர்" என விடைதந்தான். "தாயுடையவனாய்த் தந்தையுடையவனாய் ஆசார்யவானாயிருக்கின்றவன் எவ்வண்ணம் சொல்வனோ, அவ்வண்ணமே சௌல்பாயனர் சொன்னார். ஜீவிக்கின்றவனுக்குத் தான் ஸர்வ புருஷார்த்தங்களும் ஸித்திக்கும். ப்ராணனுடைய சரீரத்தையும் ஆச்ரயத்தையும் அவர் சொன்னாரோ?" என்று யாஜ்ஞவல்க்யர் வினவ, ஜநகன் "இல்லை" யென்றார். "ஆனால் ப்ராணப்ரஹ்ம ஸ்வரூபம் ஏகதேசந்தான் உனக்கு உபதிஷ்டமாயிற்று" என்றனர் ஆசார்யன். சேஷஜ்ஞாநத்தைப்பற்றி ஜநகன் கேட்டார், "ப்ராணனே சரீரம் ஆகாசம் ஆச்ரயம், ப்ரியமென்று



அதை உபாஸிக்கவேண்டும்" என்றனர் ஆசார்யன். ஜநகன் ப்ரியத்வமாவதென்னென்று கேட்டார். யாஜ்ஞவல்க்யர் "ப்ராணனே ப்ரியம்" என்றனர். அதற்கு உபபாதகமாக, ப்ராணனிடம் ப்ரியத்தால் வைதிக கர்மத்துக்கு அநதிகாரிகளாயிருப்பவர்க்கு அக்கர்மம் செய்ய உபகரிக்கின்றனர்; தாநம் வாங்கக்கூடாத விடங்களில் வாங்குகின்றார்கள்; பணம் தேடப்போகும் திசையில் மரணபயம் உண்டாயிருந்தாலும், ப்ராணனைக் காப்பாற்றச் செல்கின்றனர்" என்றிவ்விதம் சொன்னார். பல ஆசார்யர்களிடம் வாக், ப்ராணன், சக்ஷுஸ், ச்ரோத்ரம், மநஸ், ஹ்ருதயம் முதலானவைகள் ப்ரஹ்ம சரீரங்களென ஜநகன் கேட்ட விஷயங்களை அறிந்து, அவற்றைப்பற்றி ஜநகனுக்கு விசேஷாம்சங்களை யாஜ்ஞவல்க்யர் உபதேசித்தார். மற்ற ஆசார்யர்களை அவர் நிந்தித்தாரில்லை. அவர்களுடைய உபதேசத்தைத் தூஷித்தாரில்லை. இப்படிச் செய்வதெல்லாம் கலியின் கொடுமை. இத்தகைய பண்டிதமாநிகள் பூர்வ துஷ்க்ருதங்களால் உனது தத்வஜ்ஞாந விஷயமாகத் தமது மௌட்யத்தை ஆவிஷ்கரிக்கின்றனர். அவர்களுடைய பாண்டித்யமெல்லாம் பாஹ்யவிஷய பரீக்ஷையோடு முடிகின்றது. அதுவும், ஸர்வ பதார்த்தங்களையும் தமது போகஸாதநங்களாகச் செய்வதோடு, அதற்கு ப்ரதிபந்திகளாகத் தங்களால் எண்ணப்பட்டவர்களை அதர்ம ப்ரவ்ருத்திகளால் நிரஸநம் செய்வதற்கும் உதவுகின்றது. அந்தப் பாண்டித்யம் மாயாவிஷயமாதலால், அவர்களை, மாயையால் அபஹரிக்கப்பட்ட ஜ்ஞாநவான்களென்று நீ சொன்னாய். உனைப்பற்றிய ஜ்ஞாநம் மாயையால் அபஹரிக்கப்பட்ட அவர்களுடைய சித்தங்களில் ப்ரவேசிக்க மாட்டாது என்று கருத்து. அவர்கள் நிஜமாகத் தமது சரீரங்களையே ஆத்மாவாகக் கருதி, அவற்றின் போஷணையில் ஸதா உத்யுக்தர்களாய் இருக்கின்றார்கள். ஆதலால் பராக்ரமும் பரஹிம்ஸையும் அவர்களுக்கு உற்ற தொழில்களாக முடிகின்றன. அவர்களை ஆஸுர பாவம் கொண்டவரென்று நீ அபிப்ராயப்பட்டாய். இத்தகைய அதிகாரிகள் ஆசார்யர்களானால், இந்த நாட்டுச் சிறுவர்களுக்கு ஆத்மகுண பூர்த்தியென்பது ஸ்வப்நத்திலும் ஸித்திக்குமா?

நீ எந்தஜீவன் விஷயமாக அதோநயந ஸங்கல்பம் பண்ணுகின்றையோ, அவனை அஸாதுகார்யத்தில் மூட்டுகின்றாயென்பதும், எவன் விஷயமாக உந்நயந ஸங்கல்பம் பண்ணுகின்றையோ,

அவனை ஸாதுகர்மத்தில் மூட்டுகின்றா யென்பதும், நீ கர்மாத்யக்ஷனாகக்கொண்ட நித்ய ஸங்கல்ப விஷயம். அஜ்ஞாநிகளாய் அஸக்தர்களாய் இருப்பவர்கள், பின்னால் வருவதை அறியாமல், காலோசிதமாகத் தாத்காலிக ஸங்கல்பம் செய்வார்கள். ஸர்வஜ்ஞனாய், ஸர்வஸக்தியாய் இருக்கும் நீ, அவ்வண்ணம் செய்ய ஹேதுவில்லை. கர்மாத்யக்ஷதா ஸம்பந்தமான உனது ப்ரவ்ருத்தியானது நிருபிக்குங்கால் ப்ரவ்ருத்தியே யன்று. ஈக்ஷாமாத்ரத்தால் ஸர்வஜகத்வ்யாபாரமும் நடத்துகின்ற உனக்கு, ஒரு கார்யத்தைப்பற்றி ஒருவித ப்ரயத்நமும் வேண்டியதில்லை. கர்மம் என்றும் அவித்யை யென்றும் சொல்லப்பட்ட உனது ஸக்தி விஸேஷமானது அசேதனமா யிருக்கின்றபடியால், உனது கேவல த்ருஷ்டியையோ, ஸங்கல்ப பூர்வக த்ருஷ்டியையோ அபேக்ஷித்துக்கொண்டு வ்யாபாரவத்தாகின்றது. உனக்கு இச்சாத்வேஷங்களில்லை; ஸாதிக்க வேண்டிய அர்த்தங்களில்லை; இல்லாததோர் பொருளை ஆர்ஜிக்க வேண்டிய விருப்புமில்லை; அநிஷ்டமான தொரு வஸ்துவை வெறுக்கவும் த்யஜிக்கவும் வேண்டாம். உனது ஸங்கல்பம் யாவும் ஸத்ய ஸங்கல்பம்; அது ஸர்வகார்ய ஸாதகமாகின்றது. அதுவும் ஜகத்வ்யாபாரத்தின் பொருட்டேயன்றி, அதனால் உனக்கு ஆக வேண்டிய தொன்றுமில்லை. அது ஸர்வ பூதங்களுடைய ஹிதத்தில் பர்யவஸிக்கின்றது. ப்ராணி கர்மாபேக்ஷயா பூதஸங்காதங்களும் பௌதிக விகாரங்களும் ப்ரவஹிக்கின்றன. ஸரீரவான்களான புருஷர்கள் ஸர்வபுருஷார்த்தங்களையும் ஸாதித்துக்கொள்கின்றனர். அவர்களுக்குக் கர்மாநுகுணமாக ஸரீரங்களையும் போக்ய பதார்த்தங்களையும் உனது ஸங்கல்பத்தால் உண்டாகச் செய்து நீ யளிக்கின்றாய். மநுஷ்யர் ப்ரயத்நம், அவர்கள் புத்தியின்படி உண்டாகின்றது. புத்தியோ கர்மாநுஸாரிணி. இவை யாவும் உனது ஸாஸ்வத கர்மஸக்தியால் ப்ரவஹிக்கின்றபடியால், ஸ்வகர்ம ப்ரேரிதமான ஸ்வபுத்தியால், க்ரியைகளில் மநுஷ்யர் அந்வயித்து, அவற்றிற்கு உசிதபலங்களை யடைகின்றார்கள். உன்னுடைய கர்மாத்யக்ஷதா ஸம்பந்தமாத்ர யோசனையால், உன்னிடம் உக்ரமத்தோரமய ஸங்கல்பங்களும், ஸாத்வஸாது கர்மகாரயித்ருத்வமும் ஆரோபிக்கப்பட்டன.

உன்னை யொருவன் கல்லால் அடித்தானாகில், அது கல்லாகவே திரும்பி அவனை யடிக்கின்றது. உன்னை யொருவன் புஷ்பத்தால்



அர்ச்சித்தானாகில், அது புஷ்பரூபமாகவே அவனிடம் திரும்புகின்றது. உனை த்வேஷித்தவனுடைய த்வேஷமே அவனிடம் த்வேஷ பலமாகத் திரும்புகின்றது. நீ அவனை த்வேஷிக்கின்றாயில்லை. த்வேஷித்தவனுடைய பாபமானது அவனுடைய த்வேஷபலனை அவனிடமே உண்டுபண்ணிப் பாப நிவ்ருத்தியில் முடிகின்றது. இது உன் ஸ்வபாவம். வைக்கோலில் பற்றிய தீயானது காற்றுடன்கூடி, சுற்றிலும் உள்ள வஸ்துக்களைக் கொளுத்துகின்றது. அது அக்நியினுடைய ஸ்வபாவம். அவ்வண்ணமே எவன் உன்னை ஹ்ருதயத்தில் நிலைக்கச் செய்கின்றானோ, அவனுடைய ஸர்வ பாபமும் எரிக்கப்பட்டுப் போகின்றது. த்வேஷத்தால் ஹிரண்யகஸிபு உனது கோரரூபத்தைத் தர்ஸித்துப் பயந்தான். அப்போதே உனது பக்தனான ப்ரஹ்லாதனுக்கு நீ ஸௌம்ய மூர்த்தியாக ப்ரகாசித்தாய். உன்னிடம் அபராதம் புரிந்து, அபராத ப்ராயஸ்சித்தமாகவும் நீ விதித்த சிக்ஷையை யநுபவித்த பிறகு, ஒருவன் உனது உண்மையான கருணையை அறியாமல், உன்னிடம் பயங்கொண்டு, மாரீசன்போல எங்கும் உனைப் பய ஹேதுவாகக் காண்பதா யெண்ணிப் பயப்படலாம். ஒருவன் எந்தப் புத்தியுடன் உனை நெருங்குகின்றானோ அந்தப் புத்திக்கேற்றபடி நீ அவனுக்குத் தோற்றுகின்றாய். ஆதலாலன்றே, ஸ்ரீ விஷ்ணு புராணாந்தர்க்கத ப்ரஹ்லாத ஸ்துதியில் விவரித்தபடியே, நீ நிர்மல நிர்விகார ஜ்ஞாந ஸ்வரூபி என்றறிந்தவனுக்கு நீ பரமார்த்தமாய்ப் பாவிக்கின்றாய்; உனையே அஜ்ஞாநத்தால் அர்த்த ஸ்வரூபியாக, அதாவது, த்ருஸ்ய பதார்த்தமாகக் காண்கின்றனர் என்று சொல்லப்பட்டது. ஸூக்ஷ்மமான காரணரூபத்திலும், ஸ்தூலமான கார்ய ரூபத்திலும் ஜகத் உனது ஸரீரம்; க்ஷரம், அதாவது, விகாரத்துடன் கூடிய ப்ரதாநமும், அக்ஷரம் அதாவது ஸ்வரூபத்தில் விகாரமற்ற ஜீவாத்மாக்களும் உனது ஸரீரங்கள். ஆதலால் காரணாவஸ்தையிலும் கார்யாவஸ்தையிலும் ப்ரபஞ்சம் நீயே யென்பார்கள். அங்குள்ள சிதசித் வஸ்துக்களும் நீயே யென்பார்கள். உனது நிஜரூபம், அவ்யக்தம்; யாராலும் அறியக்கூடாதது. ப்ரபஞ்சம் உனது வ்யக்தரூபம். இந்த்ரியவிஷயமஹாபூதங்களெனப்பட்ட கலைகளை அதிக்ரமித்து நீ நிற்கின்றாய். அவற்றை உள்ளும் புறமும் வ்யாபித்தும் நிற்கின்றாய். ஸர்வ நியாமகனாயிருக்கும்போதும், ஸர்வத்தினுடைய தோஷங்களால் லேபிக்கப்படாமல் இருக்கின்றாய். த்ரிகுணங்களை ப்ரகாசிப்பிப்பவன்

நீ; அவற்றிற்கு ஆதாரபூதனும் நீ; த்ரிகுணங்களுடன் துவக்கற்றும் நிற்கின்றாய்; ஸமஸ்த கல்யாணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றாய். ஸ்தூலமான ப்ரபஞ்ச ரூபத்தால் நீ ஆகாரவிஶிஷ்டன். ஸூக்ஷ்மமான ஜீவரூபத்தால் அமூர்த்தன். விஶ்வரூபாத்யாயத்தில் விவரித்தபடியே, உனது பக்தர்கள் நீ அளித்த திவ்ய சக்ஷுஸ்ஸால் தர்ஶிக்கக்கூடிய மஹாமூர்த்தியும் நீயே. ஸர்வாந்தராத்மாவாகவும் நீ ஸூக்ஷ்மமூர்த்தி யெனப்படுகின்றாய். உனது பரரூபம் யாவர்க்கும் ஸ்புடமன்று. உனது அவதார ரூபங்கள் தான் உனது பக்தர்க்குத் தர்ஶந யோக்யங்களாய், யோகிகளுக்கும் த்யாநாஶ்ரயங்களா யிருக்கின்றன. ஸ்வரூபத்தால் நீ ஸௌம்யன் உன்னடியார் உனை யவ்வண்ணம் தர்ஶிப்பார்கள். அபராதிகட்கு நீ கராள ரூபதரனாகின்றாய். ஹிரண்யகஶிபு ராவணாதிகளுடைய யுத்தகாலத்தில் நீ அவ்வண்ணம் தோற்றினாய். நீ வித்யாமயனென்றும் அவித்யாமயனென்றும் சொல்லப்படுகிறாய். நீ வித்யையால் ப்ராப்யன். அவித்யை யெனப்பட்ட கர்மமானது வித்யாங்கமாகச் சொல்லப்பட்டது; அதனால் வித்யா ப்ராப்திக்குத் தடையாக நிற்கின்ற பாபங்களுடைய க்ஷயம் உண்டாகின்றது. நிஷ்காம கர்மம் உனது ஆராதநமாகப் பண்ணப்பட்டால், ஸ்வயம் ப்ரயோஜநமாகவும் இருக்கின்றது. இவை யாவும் ஸாக்ஷாத்தாகவும் பரம்பரையாகவும் உனது ப்ராப்தி ஸாதகங்களானபடியால், நீ அவற்றின்மயமாகிறாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸத்யமான நீ ஸத்யமும் அந்ருதமுமாயினாயென்று ஶ்ருதி வெளியிட்டது. ஆதலால் அஸத்தெனும் ப்ரபஞ்சமும் உனது ரூபம்; ஸத்தெனும் சேதநவர்க்கமும் உனது ரூபம்; நிருபாதிக ஸத்வம் உன்னிடம் மாத்ரம் நிலைக்கின்றபடியாலும், ஸதஸத் பதார்த்தங்கட்கு நீயே காரணமாயிருப்பதாலும், நீ ஸத்பாவனெனப்படுகிறாய். இன்னும் போக்தாக்களையும் போக்ய பதார்த்தங்களையும் பரிபாலிக்கின்றவன் நீயே. நித்ய ப்ரபஞ்சமான வைகுண்டமும் நீயே. அநித்ய ப்ரபஞ்சமான உனது லீலாவிபூதியும் நீயே. அதை அதிக்ரமித்தும் அதனோடு துவக்கற்றும் நீ இருக்கின்றாய். நிர்மலரான பக்தரால் ஆஶ்ரயிக்கப்பட்ட வஸ்துவும் நீயே. காரணாவஸ்தையில் நீ அத்விதீயனான ஒருவன். கார்யாவஸ்தையில் அநேக ரூபத்தைத் தரிக்கின்றாய். இந்த்ரிய மநஸ்ஸுக்களுக்கு அகோசரனாய், யாவராலும் அறியப்படாதவனாய், என்றும் ஒரே ஆகாரத்துடன் கூடிய உனது பரஸ்வரூபம் ஒன்றே. உனது அடியார்கள் உனை அநுபவிக்க



வேண்டி, அவர்களை நீ அநுக்ரஹிக்க ஸங்கல்பித்து, ஜகத்தின் உபகாரத்தின் பொருட்டு, உனது இச்சையால் நீ தரிக்கின்ற அவதார ரூபங்கள் பல. ஸர்வகாரண காரண! பரமப்ராப்ய! உன் பொருட்டு நமஶ்ஶப்தோச்சாரணம் செய்கின்றேன். ப்ராணிகர்மங்களை அபேக்ஷித்து நீ ஜகத்தை ஸ்ருஷ்டிக்கின்றாய். அசேதநமான கர்மஶக்தி உனது அத்யக்ஷதையின்றி அந்த விஷயத்தில் ப்ரவ்ருத்திக்கமாட்டாது. ஆதலால் ஜகத் ஹேதுவாகாத உன்னிடமிருந்து ஜகத் உண்டானதாகச் சொல்லப்படுகின்றது. நீ அந்தர்யாமியானபடியால் யாவும் உனது ஶரீரம். உனது ஶரீரமாகின்ற ஸகல வஸ்துக்களுடைய தோஷங்கள் உனை லேபிக்கமாட்டா. ஆகலால் நீ ஸர்வமுமா யிருக்கின்றாய் என்றும், ஸர்வத்துக்கும் நீ விலக்ஷணன் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்தூலமான ப்ரபஞ்சரூபத்தை நீ தரிக்கின்றா யாதலால் ப்ரகடனாக எண்ணப்படுகின்றாய். ஸூக்ஷ்மமான ஜீவதத்வ ஶரீரியானபடியால் ஜீவசைதந்ய ரூபப்ரகாஶமும் உன்னுடையதே. சேதநாசேதந வஸ்து விலக்ஷணனாய், அசேதநத்தை அதிக்ரமித்து, ஸர்வ சேதநர்களுக்கும் உத்தமனான புருஷோத்தமா! உன்பொருட்டு நமஸ்கரிக்கின்றேன். இவ்வண்ணம் மஹாபாகவத ஸ்தோத்ரத்தின் ஏகாம்ஶத்தை யானறிந்தமட்டும் விவரித்தேன்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# திருத்த திருத்தம்.*

ஒற்றுமையை உத்தேசித்து, உலகெல்லாம் ஒருஜாதியாய்ச் செய்ய ப்ரயத்னப்படும் நம் புத்திமான்கள், ஜீவகாருண்யத்தினால் மாடு ஆடு புலி சிங்கம் மற்றை ம்ருகங்களிடம் அன்பளிக்கவும் மணம் புரியவும் நிர்ப்பந்தம் பண்ணுவார்களோ? இராமாயணத்து இலங்கும் மானிடரும் மந்திகளும், குரங்குகளும் கரடிகளும், பற்பல ஜாதிகளா யிருந்தும், ஒருமனதாய் இருந்த கதை காதினால் கேட்கப்படாததோ? 'ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸமஜாயத ।' ஒருமனதாய் இருந்ததையன்றோ ஒன்றாகவே இருந்ததாகக் கேட்டுவருகிறோம். ம்ருகங்களானாலும், மதயானை, மர்க்கடங்கள் மாமிசத்தைத் தின்பதில்லையே. அந்ய ஜந்துக்களின் ஆகாரமாம் புல்லைப் பொல்லா விலங்கானாலும் புலி ஒருநாளும் தின்பதில்லையே. பிறர் மாம்ஸம் புசித்துவரும் பக்ஷிகளேயானாலும் தன் மாமிசம் தின்பதில்லையே. குலநியமமில்லாத காக்கையும் கருடனும் கல்யாணம் செய்துகொள்வதில்லையே. ஒருவிதமான ஶாஸ்த்ரங்களின் நிர்ப்பந்த மில்லாததனால், நினைத்ததெல்லாம் செய்தாலும் நரகம் புகவேண்டாத விலங்கு முதலானவெல்லாம் தொல்வழியை அநுஸரித்து, வரம்பழியா நிலைநடவாநிற்க, ஶாஸ்த்ரத்தின் வழிநடந்து ஜந்மத்தை ஸபலமாக்கும் மானிடரன்றோ முறையழிக்க முயற்சிக்கின்றனர்? பஞ்சமர் முதலானோரோடு பங்க்தியில் ஒன்றாய் உண்ணவும், பெண்களைக் கொடுக்கவும், பேதமில்லா திருக்கவும், பிறருக்கு உபதேசிக்கும் நம் பரோபகாரிகள், தம் புத்ரருடன் ஸமமாகப் பணமில்லாமல் ப்ராமணர்க்கும் பஞ்சமர்க்கும் பூமியையும் பணங்களையும் பங்கிட்டுக்கொடுக்கலாகாதா?

* இது சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.



தாராளமாய்ப் பெருகும் தனவான்கள் தயையெல்லாம், தனமில்லாத் திண்டாடும் தரித்ரர்களுக்கு த்ரவ்யத்தால் உபகரிக்கும் விஷயத்தில் பரலோகப் பயணமாயன்றோ போகின்றது? இது மாத்ரமா! வேதமெலாம் படித்து, விண்ணோரெல்லாம் துதித்து, வயிறுவளர்க்க வழியில்லாமல், வயிறு நனையும் சோற்றுக்கு வாசலெல்லாம் நுழைந்து வாயார வாழ்த்திவரும் வேதியரைக் கண்டக்கால், கதவடைத்துக் கண்மூடி, கண்மணிகளுடன் கனவு சொல்லும் நம் கலியுகத்துக் கனவான்கள் ஏழைகளைக் காப்பாற்றக் கரைபுரண்ட கருணையினால் கண்ணுறக்க மல்லாது கலங்குகிறார்களோ?

இஃதிருக்க, அவநியுள்ள ஜநமெல்லாம் ஆநந்த மநுபவிக்க ஆயிரத்துள் ஒருவனுகும் அந்தணனாய்ப் பிறந்தவாறே ஆஸ்தையுடன் அலைவது அவஶ்ய மானாலும் ஆத்மாவை அருநரகத்து அனுப்பாது அந்யர்க்கும் ஆநந்த மூட்டலாகாதோ?

நம் நாகரிகர் தேஹத்துள் ஆத்மா வெனும் ஒரு வஸ்து வஸிக்கவில்லையோ! 'யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்த்வம் ஸ்தாவரஜங்கமம் । க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத் தத்வித்தி பரதர்ஷப ।' என்று உலகத்துள் உண்டாக்கும் ஸ்தாவரத்துள்ளும் ஜங்கமத்துள்ளும் ஜீவாத்மா இருப்பதாகவன்றோ கீதாசார்யன் அருளிச்செய்திருக்கிறான். இருந்தாலும் அவ்வாத்மா தேஹத்தோடு அழிந்து போகுமோ? 'ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே - தேஹீ நித்யமவத்யோऽயம் தேஹே ஸர்வஸ்ய பாரத ।' என்று தேஹம் அழியுங் காலத்தில் ஆத்மா அழிகிறதில்லை யென்றல்லவோ அருளிச்செய்தான். அல்லது ஆங்கிலேயர் தமது அருமருந்தால் தேஹமே அழியாது தாங்குவார்களோ? 'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச' என்று, உண்டாகும் வஸ்துவெல்லாம் நிஶ்சயமாய் அழிந்து போவதா யல்லவோ அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

கீதை சொல்லும் கதையெல்லாம் இக்கலியுகத்துக் கில்லையென நம் காருணிகர் கருதினாலும், காலத்தின் ப்ரபாவத்தினால் காலனிடம் போய்நிற்கும் கலியுகத்துப் பாவிகட்குக் கடுந்தண்டனை விலக்க நம் கூர்மதிகள் காகிதமும் கொடுப்பார்களோ? அல்

லது ‘போ போ தர்மஜ ராஜர்ஷே புண்யாபிஜந பாண்டவ। அநுக்ரஹார்த்தமஸ்மாகம் திஷ்ட தாவந்முஹூர்த்தகம்॥ ஆயாதி த்வயி துர்த்தர்ஷே வாதி புண்ய: ஸுகாநில:। தவ கந்தாநுகஸ்தாத யேநாஸ்மாந் ஸுகமாகதம்’ என்கிற பாரத வாக்யப்படியே, தர்மபுத்ரர் தேஹத்தில் ஸ்பர்மித்து வழிவந்த வாயு தம்மேல் வீசினதால், நரகத்தின் துயர்தொலைந்து ஸ்வர்க்க ஸுகமநுபவித்த அந்த நரகவாஸிகள் கொஞ்சகாலம் ஆங்கு அவரை வஸிக்கும்படி வேண்டிக்கொள்ள, அப்புண்ணியராம் தம்புத்திரரைக்கூட போர்க்களத்தோர் பொய்சொன்னதற்காகப் பெருநரகமெல்லாம் பார்த்துவர விதித்திட்ட பக்ஷபாத மறியாப் பித்ருதேவதை நமது மதத்துப் புண்ணியரிடம் பயந்திருக்குமோ? அல்லது, தாம் இசைந்த தர்மத்திற்கு அநுகுணமாய்த் தர்மாஸநம் வஹிக்கும் தென்றிசைக்கோர் இறைவனைத் தேர்ந்தனுப்புவார்களோ? தம்மனம் போனபடி தினந்தோறும் தனித் தருமம் உண்டாக்கும் தயாளுக்களால் கர்மத்திற் கநுகுணமாய்த் தண்டனையை உண்டாக்கும் புது தர்மதேவதையும் திண்டாட வேண்டிவருமே.

இங்ஙனிருக்க, ‘ஶ்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா’ என்கிற ஈஶ்வரன் அபிப்ராயத்தைத் தபோமஹிமையினால் ஸாக்ஷாத்கரித்த தத்வதர்ஶிகளன்றோ தர்ம ஸ்வரூபத்தைத் தீர்மானித்ததாக நம் புராணங்களில் கேட்டுவருகிறோம். ஆகையினாலன்றோ ஆயிரம் ருஷிகளுக்குள் அருமையாம் சிலபேர்களே ஸ்ம்ருதிகளைச் செய்ததாகத் தெரியவருகிறது: அந்த ஸ்ம்ருதிகளும், உலகத்தாரும் ஸாத்விக ராஜஸ தாமஸரெனும் அதிகாரிகளை உத்தேஶித்துப் பலவிதமாக ப்ரவ்ருத்தித்தால், அவ்வபிப்ராயம் அறியாத அஜ்ஞர்களான நாம், மஹர்ஷிகள் பரஸ்பர விருத்தமாய் பல ஸ்ம்ருதிகள் செய்தார்களென்று சொல்வதும், நாமும் அம்மஹர்ஷிபோல்வாரென்று பேசுவதும் பாபமேயாகும். ‘தர்கோऽப்ரதிஷ்ட: ஶ்ருதயோ விபிந்நா: நைகோ ருஷிர்யஸ்ய மதம் ப்ரமாணம்। தர்மஸ்ய தத்த்வம் நிஹிதம் குஹாயாம்’ என்று பாரதமும், அவ்வபிப்ராயமறியாத நமக்குப் பலவாறாய்த் தோன்றுமெனச் சொல்கிறது.



‘மஹாஜநோ யேந கத: ஸ பந்தா:’ என்பதும், ஶாஸ்த்ரார்த்தமெல்லாம் அறிந்து அநுஷ்டிக்கும் மஹாபுருஷன் போனவழி போகச்சொன்னதே தவிர, பல குருடர் கிணற்றில் விழுந்ததற்காகத் தெரிந்தவனையும் விழச்சொல்லவில்லை. அப்படியானால் ஶாஸ்த்ரங்கள் முழுவதும் வீணாகவே முடியுமன்றோ? ‘அந்யேந்த்ரியாணி ஷ்யாதி மஹாயோகாவஸ்யா யதீந்த்ரிய:’ என்னும்படி வேறு உலகத்தை உண்டுபண்ணும் தபஸ்ஸின் மஹாமஹிமையுள்ள முநிவரை, மதிமான்கள் மூடரென மனந்துணிந்து மொழியலாகுமோ?

‘வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்’, ‘மின்னனைய நுண்ணிடையார் உருப்பசியு மேனகையும், அன்னவர்தம் பாடலொடு மாடலவை யாதாமேன்’. என்போன்ற மஹாத்மாக்களையும், காசாசைப் பேய்பிடித்துக் கண்டவர்கள் காலைக்கழுக்கைகூப்பி நிற்பவரும் பெண்டிர்க்குத் தொண்டராய்த் தண்டனிட்டுத் தொழுமவரும் ஒப்பிட்டுப் பேசுவதோ காலமாச்சரியம்! இவ்வர்த்த காமங்களையன்றோ நம மஹர்ஷிகள், ‘கோ நு மோஹ வசேநம் காலோ வாஸ்ரூத்யாஹிமெ। ஆவாதம் நபஸோ நஸ்ய வயஸ்யெஸ்வ நதாஷிந:’ என்றும், ‘யயாத்யா ஜமதக்நௌ ச ஸோமே கோடிம் ஶாந்தவேக்ஷ்மதா’ என்றும் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகும் குற்றவாளி ஸுகம் அநுபவிப்பதற்கொப்பாகவும், பாம்பின் வாயகத்துள்ளிருக்கும் தேரையானது ஆகாரம் தேடுவதற்கு ஒப்பாகவும் மிருகமென்று தெளிந்து மொழிந்தனர். ஆகையினால், ‘விஷ்ணோர்வராஹ ரூபஸ்ய விட் ஜாதம் க்ஷ்மாகதம்’ விஷ்ணு வராஹ ரூபமாய் அவதரித்ததனால் இக்காலப் பன்றிகளுக்கும் அப்பெருமை தகாததுபோல், நாம் மஹர்ஷி வம்ஶத்தில் பிறந்தவராயினும் புதிதாக ஸம்ருதிகளைச் செய்யச் சக்தியுள்ளவராக மாட்டோம்.

மநுஸ்ம்ருதியில், ‘அந்யே க்ருதயுகே தர்மா:’ என்று சொன்னதன் வ்யாக்யாநமாய் அடுத்த ஶ்லோகத்தில் ‘தப: பரம் க்ருதயுகே த்ரேதாயாம் ஜ்ஞாநமுச்யதே। த்வாபரே யஜ்ஞமெ.

ஸாஹஸ: ஜிதேந்த்ரியைர் தாநமேவ கலௌ யுகே' என்று பாபத்தைப் போக்கு வதற்கும் புண்யத்தை அடைவதற்கும் தேகஶக்தியை அநுஸ ரித்து, ('க்ருதே த்வஸ்திகதா: ப்ராணா: த்ரேதாயாம் மாம்ஸஸம்ஶ்ரிதா: - த்வாபரே ருதிரம் ப்ராணா: அந்நம் ப்ராணா: கலௌ யுகே' என்கிறபடியே) தபஸ் செய்யச் சக்தியில்லாததனால், தானம்செய்து பாபம் போக்கவும் புண்ணியத்தை அடையவும் சொல்லியிருக் கிறதே தவிர, வர்ணாஶ்ரமதர்மங்களைக் கூட காலாநுகுணமாக மாற்றிவிடச் சொல்லவேயில்லை.

அப்படி தர்மத்தை ஸங்க்ரஹித்ததும் ஒவ்வொரு யுகத்தின் ஆரம்பகாலத்தில் ஒருதடவையே தவிர, ஒவ்வொரு யுகங்களுக் குள்ளும் நினைத்தபோது அல்ல. அப்படிச் செய்வதும் பிரமாண மாகாது. அப்படிச்செய்தால் அவ்யவஸ்தை உண்டாகுமாதலால் நாகரிகர் நினைத்ததெல்லாம் நிறைவேறாது.

வேதத்தில் ஜாதிசொல்லப்படவில்லை யென்பதும், இருந்தா லும் அது வேறு அபிப்ராயங்கொண்டுள்ளது என்பதும் பிசகாகு மென்பதை முன்னமே தீபிகையில் விவரித்துள்ளோம். 'ஸமேஹாவிஸாதூநாம்' என்கிறதும் ருஷிகளுடைய ஸமுதாயத் தைச் சொன்னதேயல்லது, அவர்களுக்கு விபரீதமாக நடக்கும் நம் ஸித்தாந்தத்தைச் சொன்னதல்ல. நாம் ஸாதுக்களென நாமே நம்மைத் தீர்மானம் செய்துகொள்வதோ? 'உபரோத உபேக்ஷாணாம் ஸாதூநாம் ப்ரஹ்லாதவத்' என்கிறபடி ஸாதுவாயிருக்கும் ப்ரஹ்லாதனை 'ஸம்பாஷணீயோ ஹிரண்யநாத ந ஸ்யாத்' நம் புதுமதத்துப் புண்ணியருடன் பேசிவரும் பாவிகட்குப் புண்ணியங்கள் புடைசூழுமோ?

இன்னும் சிலர் கண்ணெதிரில் நில்லாது, கடுஞ்சொற்கள் பொருந்தியிருந்து கலிபுருடன் தலைமீது பழியெல்லாம் சுமத்தி விட்டுப் பாரதந்த்ர்யம் பாராட்டி, கண்டபடி உணவுடுத்துக் காம னையே பூசித்து புண்ணியராய்ப் பேசிவருகிறார்கள். தீதல நன் னெறி நிறைக அல்லாதுசெய்து, நரகத்திற்கு நாற்றங்காலாகும் இவர் விஷயத்தில் நல்லவழியை நாடுவோர் நிர்வேதப்படுவதே.



'க்ருதம் த்ரேதாயுகம் சைவ த்வாபரம் கலிரேவ ச | ராஜவ்ருத்தாநி ஸர்வாணி ராஜைவ யுகமுச்யதே || கலி: ப்ரஸுப்தோ பவதி ஸ ஜாக்ரத் த்வாபரம் யுகம் | கர்மஸ்வப்யுத்யதஸ்த்ரேதா விசரம்ஸ்து க்ருதம் யுகம் ||' என்றும், 'கலௌ க்ருதயுகம் தஸ்ய கலிஸ்தஸ்ய க்ருதே யுகே | யஸ்ய சேதஸி கோவிந்தோ ஹ்ருதயே யஸ்ய நாச்யுத:' என்றும், 'க்ருதாதிஷு ப்ரஜா ராஜந் கலாவிச்சந்தி ஸம்பவம்' என்றும், 'கலௌ ஸங்கீர்த்ய கேசவம்' என்றும், 'கலி: ஸாது:' என்றும், 'கலியும் கெடும் கண்டுகொண் மின்' என்கிறபடியே அரசன் கவனிக்காததுவே கலிகால மென் றும் அவன் தர்மத்தை விசாரிக்கும் காலமே க்ருதயுகமென்றும், அல்ப ஆயாஸத்தினால் பெரும்பயனைத் தருவதை உத்தேசித்து, க்ருதயுகத்தில் பிறந்தவர்கள் கலியுகத்தில் பிறக்க ஆசைப்படுவ தாயும், பலவாறாக இக்கலியுகமே 'ஸாது:' என்று பல ருஷிகள் அருளிச்செய்தார்க ளல்லவா?

இவ்வாறு புண்ணியத்தைப் பெருக்கித்தரும் இக்கலிகால மன்றோ பாவம்செய்வோர் பழியெல்லாம் ஒரு வழியாய்ச் சுமந்து பொறுமையுடன் நிற்கின்றது. ஆகையினால், 'நேமிசேர் தடங்கை யினானை நினைப்பிலாவலி நெஞ்சுடை பூமி பாரங்கள்' புண்ணியம் செய்வதற்குக் கலிகாலம் குறுக்கிட்டுத் தடுத்து விடாது.

கர்மம் செய்யக் கடப்படாது சோம்பேறியாகத் திரியுமவர்க ளன்றோ காலத்தை வ்யாஜமாக வைத்துக்கொண்டு காமமெல்லாம் அநுபவிப்பதும் கொடுமையெல்லாம் செய்திடவும் கோருகிறது வழக்கமாக இருக்கிறது.

பின்னும் சிலர், நமது தேசத்தில் பல ஜாதிபேதமும், ஆஹார பேதமும் நாநாவித நடையுடையும நிரம்பியிருப்பதால் நவநாம் நேசர்கள் பல பேதமுள்ள நம்மைப் பார்க்கப் பிடிக்காமல் நாகரிக மில்லையென நகை செய்கிறார்கள். நாகரிகம் நடையாடும தேசத் தவர்கள் எலலாம் நற்குணங்களாலும் நடையுடைகளாலும் ஒரே விதமாயும் ஒரே ஜாதியாயு மிருபபதனால் ஒற்றுமை யுண்டாகி உல காண்டு வருகிறார்களன்றோ?

ஆகையினால், ஒருஜாதியாவதும் உத்யோகம் செய்வதும் உல கெல்லாம் போவதும ஒன்றாக உண்பதும் தாழாமல வாழ்வது,

மான நல்ல குணங்களை நாம் பிறரிடத்துப் பரிசயம்செய்துகொள்ள வேணுமன்றோ? என்று பேசுகிறார்கள். இவ்வாறு பேசிவரும் புண்ணியரைக் கலியுகத்தே அவதரிக்கும் கலகியெனக் கொண்டாடும் குணநிதியின் கூட்டங்கள் கணக்கில்லாமல் ஓங்குகின்ற நம் நாகரிகரின் நிலைமையை நீதிமான்கள் கவனிப்பாராக.

நவரத்நம் கலந்திழைத்த நகை யெல்லாம் நாகரிகர் கண்ணுக்கு நன்றாகத் தோன்றவில்லையா? பலவகையாம் புஷ்பங்கள் சேர்ந்திருக்கும் மாலை யெல்லாம் பார்ப்பதற்குப் பிடிக்கவில்லையா? உத்தமர்கள் மனங்களிக்கும் உத்யாந நிலமெலலாம் பல ஜாதி மரஞ்செடிகள் பரவவில்லையா? வெவ்வேறு நிறமுள்ள நூல் நிறைந்த வஸ்த்ரங்கள் விசித்ரமா யிருக்கவில்லையா?

ஆகையினால் பலஜாதி மனிதரும் பற்பல ஆகாரமும் வெகுவிதமான வ்ருத்தியும், பலதேச வாஸமும் பரஸ்பரம் பரியமோடு வாழ்வதை உத்தேசித்தன்றோ ஈஶ்வரன் உண்டுபண்ணி வைத்திருக்கிறான். அவ்வாறு வ்யவஸ்திதமாம் ஜீவநம் ஜாதிகள் செத்துவிட நினைப்பதால் விரோதம் வ்ருத்தியாகுமே யல்லது ஒருநாளும் ஒற்றுமை உண்டாகமாட்டாது. உதாஹரணமாய்ப் பிராமணர்கள் ஜீவநங்கள் பலபடியும் போனாலும், க்ஷத்திரியரின் வ்ருத்திக்கு வழியில்லாவிட்டாலும், வைஶ்யரின் வ்ருத்தியினால் வயிறு வளர்க்கும்படியன்றோ வேதியரின் ஆசாரவழி விதித்திருப்பது?

ஶாஸ்த்ரங்கள் சொல்லாத சூத்ரரின் ஜீவநத்தில் பெரும்பாலும் ப்ராஹ்மணர்கள் புகுந்திட்டதனாலன்றோ பூஸுரரும் மற்றவரும் போர்புரிய நேரிட்டு விட்டது. ஜாதி வ்யவஸ்தையுடன் ஜீவநத்தின் நியமத்தைக் காப்பாற்றும் கடமை யுளார் கலியுகத்தில் குறைந்து போவதே!

(தொடரும்.)

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசாரியர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே நம:.

# ஸம்ஸ்க்ருத பாஷாபிவ்ருத்தியும் ஆலய பரிஷ்காரங்களும்.*

---

## ஸம்ஸ்க்ருத பாஷையின் தற்காலநிலைமை.

பாஷாந்தரோபமர்த்தத்தால் உபக்ந வ்ருக்ஷமில்லாமல் தவிக்கிற லதையைப் போல, மிகவும் பரிதாபமான நிலைமையி லிருக்கிற இந்த பாஷைக்கு அத்யந்த லோபம் வாராமலிருப்பதே உத்க்ருஷ்டலாபமென்று எண்ணவேண்டியிருக்கிறது.

**அத்யாபந சௌர்லப்யம்.**

முதலில் இது ராஜாக்களால் ராஜ்யகார்யநிர்வஹநத்துக்கு அநுபயுக்தமாக்கப்பட்டது. அதனால் ராஜாக்களுடைய ஆதரம் இல்லை. வித்யார்த்தி தௌர்லப்யத்தால் அத்யாபநமும் தௌர்லப்யம். சில பாடஶாலைகளில்மாத்ரம் இது கொஞ்சங்கொஞ்சம் ப்ரகாஶித்துக் கொண்டிருக்கிறது. அதிலும் இங்க்லீஷ் பள்ளிக்கூடங்களில் இந்தப் பாஷை படும் பரிபவத்தைவிட அத்யந்தாபாவமே மேல் என்று எண்ணக்கூடியதா யிருக்கிறது.

**ராஜகீயா நாதரம்.**

ராஜாக்களோ, ராஜ்ய வ்யவஹாரோபயோகிகளான ஸ்ம்ருதிக்ரந்தங்களை இங்கிலீஷில் விபரிணமம் செய்துகொண்டு பாஷையைத் தூரத் தள்ளிவிட்டார்கள். வைத்யம் முதலான சாஸ்த்ரங்களிலிருக்கும் அபூர்வ விஷயங்களை மாத்ரம் எடுத்துக்கொண்டு மேற்படி ஶாஸ்த்ரங்களை நிராகரிக்கப் பார்க்கிறார்கள்.

**தத்கால ப்ருஹஸ்பதிகளின் நிலைமை.**

யாஜநமோ மஹாபரிதாபமான நிலைமையில் இருக்கிறது. இக்காலத்திய ப்ருஹஸ்பதிகளுக்குப் பாஷாஜ்ஞாநம் வேண்டியதில்லை. வேதாத்யயநம் அநாவஶ்யகம். ஸ்வாநுஷ்டாநம் நிஷ்ப்ரயோஜநம். யாஜ்யகுலங்களில் கௌரவம் வேண்

---

* இது சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.

டாம். ப்ருஹஸ்பதி ஸம்பாவனை மாத்ரம் நிறையக் கிடைத்தாற் போதும். அவர்களுக்குத் தர்மசாஸ்த்ரத்தின் பெயரே தெரிய வேண்டியதில்லை. எவ்வளவு அபத்தமாய் க்ரியைகளைச் செய்து வைத்தாலும் மேல் விசாரணை கிடையாது. யாஜ்யர்களைக் காட்டிலும் யாஜகர்கள் குறைந்த நிலைமையிலிருக்கிறார்கள். இப்படியிருந்தால் ஜனங்கட்கு வைதிக கர்மங்களில் ஶ்ரத்தை எப்படி உண்டாகும்? ஐந்து நாள் கல்யாணங்கள் ஒரே நாளில் அடங்குகின்றன. குதபகால ஶ்ராத்தங்கள் ப்ராத: காலத்தில் முடிகின்றன. ப்ராஜாபத்ய க்ருச்ரங்கள் எல்லாம் ஒரு அணுவில் அடங்கிப் போயிக்கின்றன. அநுஜ்ஞைகளெல்லாம் காலணுவுக்கு மேலில்லை. ததீயாராதநங்களின் விமர்சைகளோ மிகவும் விசித்ரம்.

**சதுர்த்தாதி ஜாதிகளை விலக்கி விட்டது.**

அபூர்வமாய்ச் சில பண்டிதர்கள் இருந்தால், அவர்களில் பலர், கேவலம் ந்யாய ஶப்தாதி ஶாஸ்த்ரங்களில் சர்ச்சை செய்துகொண்டு லோகாநுபயுக்தர்களாய் ஆய்விடுகிறார்கள். ஆசார்ய புருஷர்கள் ஜ்ஞாநம் ஸம்பாதித்து சதுர்த்தாதி ஜாதிகளுக்கும் தர்மங்களையும் மதங்களையும் உபதேஶம் செய்துவந்தால், ப்ராஹ்மண த்வேஷம் இனி முற்றுமல் ப்ராஹ்மணரிடத்தில் கௌரவ முண்டாகும்.

### ஸம்ஸ்க்ருத பாஷை வ்ருத்தியாக வேண்டிய உபாயங்கள்.

இவ்விஷயம் பல பெரிய ஸபைகளிலும் ராஜாங்கங்களிலும் விசாரிக்கப்பட்டிருக்கிறது. ராஜாங்கத்தாரின் ஸஹாயமில்லாமல் இவ்விஷயத்தில் யாதொரு ப்ரவ்ருத்தியையும் ஸபலமாக்க முடியாது. ஆனாலும் இராஜாங்கத்தார் இந்த ஸம்ஸ்க்ருதபாஷையை வ்ருத்திசெய்ய வேண்டிய விஷயத்தில் ஶ்ரத்தை யுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். மற்ற தேஶங்களைவிட இந்த இந்தியாவுக்கு ஸம்ஸ்க்ருதபாஷை ஒன்றுதான் விஶேஷபலம் என்று சொல்லலாம். அந்ய தேஶத்தார்கள் எவ்வளவு ஶ்ரமப்பட்டாலும் இந்த பாஷை இந்தியாவுக்கு ஸ்வாதீநமா யிருப்பதுபோல மற்ற தேஶங்களுக்கு இல்லை. நம்முடைய இராஜாங்கத்தார் அநேக ஸம்ஸ்க்ருத பாடஶாலைகளுக்கு க்ராண்ட் (Grant) கொடுத்து உதவிசெய்கிறார்கள். ஸர்வ கலாசாலையிலும் ஶிரோமணி வித்வாந் என்னும் பரீக்ஷை ஏற்படுத்தியது ஸம்ஸ்க்ருத மாணவர்களுக்கு உத்ஸாஹார்த்தக மென்பதில் தடையில்லை.



ஆனால், மேற்படி ஸம்ஸ்க்ருத பண்டிதர்களுக்கு ஜீவனோபாயத்தைப்பற்றி இதுவரையில் யாதொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. ஒரு பாஷையை வ்ருத்தி பண்ண வேண்டுமானால், அதன் உபயோகத்தை வ்ருத்தி பண்ணவேணும். ராஜாங்கத்தார், ஸம்ஸ்க்ருதபாஷைக்காக ஸர்வகலாஶாலையில் பரீக்ஷைகளையும் ஏற்படுத்தச் சொன்னார்கள்; பாடஶாலா பரிஶோதகர்களையும் நியமித்தார்கள். தாவதா சரிதார்த்தர்களாய் நினைத்துக்கொண்டு பாஷாவ்ருத்தியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இக்காலத்தில் இங்லீஷ் பாஷையின் பரிசயமில்லாமல் ராஜாங்கங்களில் யாதொரு ஜீவனோபாயத்தையும் ஸம்ஸ்க்ருத பண்டிதர்கட்கு ஏற்படுத்துவது அஸாத்யமாகும். ஆனால் ராஜாங்கத்தாரால் ப்ரவேஶிக்கப்படாத சில கார்ய நிர்வாஹங்கள் நம்முடைய கையில் விடப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி இப்போது கவனிப்பது உசிதமாகும். அதாவது:

**ராஜாங்க ஸஹாயமில்லாமல் ஜநங்கள் செய்யக் கூடிய உபாயம்.**

1. ஜனங்களின் வர்ணாஶ்ரம தர்மங்களில் வரும் விசாரங்களைக் கவனிப்பது. 2. தேவாலயங்களின், நடவடிக்கைகளைச் சரிவர நடத்துவது. இவை இரண்டில், முதல் விஷயத்தை விசாரிக்க ஆரம்பிக்கும்போது மஹா ஜநங்களில் பல அபிப்ராய பேதங்கள் புறப்படு மென்று மிகவும் பயப்பட்டுப் பேசவேண்டியதா யிருக்கிறது. பழைய ராஜாங்கங்களில் ஜாதிபேதங்களையிட்டுத் தொழில்கள் ஏற்பட்டிருந்தபடியால் வர்ணாஶ்ர தர்மங்களைச் சரிவர விசாரிக்க வேண்டியது இராஜாங்க கார்ய நிர்வாஹங்களில் ஒன்றாக அமர்ந்திருந்தது.

**வர்ணாஶ்ரம தர்மங்களின் நிலைமையும் அதன் வ்ருத்யுபாயமும்.**

இப்போது மேற்படி விஷயம் வ்யாகுலீக்ருதமா யிருப்பதால், வர்ணாஶ்ரம தர்மங்களின் நிலைமை கலைக்கிடமாயிருக்கிறது. மேற்படி வர்ணாஶ்ரம தர்மங்களை நடத்தவேண்டிய அதிகாரம் புரோகிதர்களின் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்படி விஷயம் சரிவர நடக்காமல் நிலைமை தவறி இருப்பதற்குக் காரணம், பண்டிதர்களின் மேல்பார்வை இல்லாத தோஷமே யொழிய வேறில்லை.

நாஸ்திக்யோந்முகர்களான ஜனங்களும்கூட இக்காலத்தில் புரோஹிதர்களின் ஸம்பந்தத்தை விரும்பாதார் இல்லை. ஷை புரோஹிதர்களின் நிலைமையைச் சீர்திருத்துவதற்கு விசேஷ த்ரவ்ய ஸஹாயம் வேண்டாம். இராஜாங்கத்தாருடைய ப்ரயாஸமும் வேண்டாம். கேவலம் ஆஸ்திக மஹாங்களுடைய ஐகமத்யமே போதுமானது.

முதன் முதலில் ஒருஸபை சேர்ந்து சில பண்டித பரிஷத்துக்களை ஏற்படுத்தி, புரோஹிதர்களை ஷை பரிஷத்தின் விசாரணைக்கு உட்படுத்திவிட்டால், க்ரமேண வர்ணாஸ்ரம தர்மங்களின் நிலைமை வ்ருத்தியாகு மென்பதில் ஸந்தேஹமில்லை. இவ்வபிப்ராயம் அடியேனுடைய ஸ்வந்தமல்ல; அப்போதைக் கப்போது அநேக ஆஸ்திக ப்ரபுக்களின் அபிப்ராயத்தைச் சேகரித்து விசாரித்துச் சொல்லும் வார்த்தைகளாகும்.

**தத்காலத்திய தேவாலயாதிகாரிகள்.**

இரண்டாவது: தேவாலயங்களின் கார்யங்களைச் சரிவர நடத்துவது. இங்க்லீஷ் ராஜாங்கம் இந்தியாவுக்குவந்த புதிதில் தேவாலய கார்யங்கள்கூட இராஜாங்க நிர்வாஹத்தின் ஒரு பாகமாக இருந்தது. ஷை விஷயத்தில் வர்ணாஸ்ரமாசாரங்களும் மதவிஷயங்களும் பலவாறாய் அடங்கியிருப்பதால், நம்முடைய மதாசாரங்களில் ப்ரவேசமில்லாத இராஜாங்கத்தார் அதை நம்முடைய கையிலேயே கொடுத்துவிட்டனர். ஆகையால் ஷை விஷயத்தைக் கவனிக்க வேண்டியது நம்முடைய முக்ய கடமையாகும். இப்போது தேவாலயங்களைக் காப்பாற்றிவரும் தேவஸ்தாந கமிட்டிகள் ஷை தேவஸ்தாநங்களில் ஆதாய வ்யயங்களை த்ருப்திகரமாய் வேலைசெய்து வருகின்றன என்பதில் ஆக்ஷேபமில்லை.

ஆனால், தேவதாஸாந்நித்யத்தினால் விசேஷமஹிமை உண்டாகும்படி மந்த்ரதந்த்ராதி க்ரியைகள் லோபமில்லாமல் நடப்பதைக் கவனிக்கத்தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த ஸபை அபேக்ஷிக்கின்றது. 'நியோமாஸு ப்ராஹ்மணோ விப்ரா: லோகதந்த்ரப்ரவர்த்தகா:' என்னும் வசநத்தின்படி ஷை கார்யம் ணர்களுடைய கார்யம் தான்என்று தெரிகிறது.



இவ்விஷயத்தைக் கவனிக்கும்போது பண்டிதர்களின்ஸஹாயம் அத்யாவஸ்யகமாய் வருமென்பதே அடியேனுடைய அபிப்ராயம்.

### தேவஸ்தாநங்களில் பண்டிதர்களின் ஸம்பந்தம் இல்லாததனால் நேரும் குறைகள்.

முதலில் தேவாலயங்களால் லோகத்திற்கு ஏற்பட்ட உபயோகத்தைக் கவனிக்கவேண்டும். ஸ்வயம் வ்யக்த திவ்ய ஸைத்த ஆர்ஷ மாநுஷ சதுர்த்தா பிந்நமான விஷ்ணுவாலயங்களில் நமது விஸிஷ்டாத்வைத ஸித்தாந்தம் நிலைகுலையாமல் காப்பாற்றப்படுகிறது. அது எப்படி என்றால், பக்தி ப்ரபத்திகளில் இரண்டில் பஹுப்ரயாஸ ஸாத்யமாயும் அஸர்வாதிகாரமுமான பக்தியோகத்திற்கு எதிர்த்தட்டாய் அல்பப்ரயத்ந ஸாத்யமாய் ஸர்வாதிகாரமுமானப்ரபத்தி யோகத்திற்கு அர்ச்சாவதாரமே லக்ஷ்யபூதமென்று ஆழ்வாராசார்யர்களுடைய ஸரணாகத்யநுஷ்டாநத்தைப் பார்த்தால் நிஸ்சயமாய்த் தெரியவரும்.

(தொடரும்.)

வேங்கடாத்ரி அகரம். தி. ந. ச. அநந்தாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ஸங்க்ரஹம்.*

பெரிய ஆலய ப்ரதிஷ்டைகள், மஹாயாகாதிகள், இவை ஆரம்பிக்கப்படும்போது அவைகளின் நிர்விக்ந ஸமாப்தியின்பொருட்டு ப்ரபத்திசெய்யும் ஸம்ப்ரதாயமுண்டு. இதுவும் தவிர, ப்ரபத்தி உத்தர காலத்தில் சேதநர்களுக்கு ஏற்படும் பாபங்களை நிவ்ருத்திக்க, ப்ரதிபதோக்த ப்ராயஸ்சித்தத்தைப் பண்ண ஶக்தியில்லாதவர்களுக்கு அந்த ப்ராயஸ்சித்த ஸ்தாநத்தில் ப்ரபத்தி செய்விப்பிக்கிறதும் ஸம்ப்ரதாயம். இதற்கு ப்ராயஸ்சித்த ப்ரபத்தி என்று பெயர். '[illegible]' என்னும் வசநப்படி, ஒரே விஷயத்தை உத்தேஶித்து மறுபடி ப்ரபத்தி பண்ணக்கூடாதே தவிர, ஒரே சேதநனுக்குக் கார்யாந்தரங்களை உத்தேஶித்துப் பலதடவை ப்ரபத்தி பண்ணி வைக்கலாம்.

மூல ப்ரக்ருதிக்கு, ப்ரக்ருதி யென்றும், ப்ரதாநமென்றும், அவ்யக்த யென்றும் பெயருண்டு. பூதஶுத்தி ரூப பஞ்சோபநிஷந் மந்த்ரத்தில் 'அவ்யக்தம் அக்ஷரே லீயதே அக்ஷரம் தமஸி லீயதே [illegible]' என்கிற வாக்யத்தை அநுஸரித்து ப்ரக்ருதிக்கு அவஸ்தாத்ரயம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது: அவ்யக்தம் அக்ஷரம் தமஸ். தமஸ்த்வமாவது: குஸூலஸ்த பீஜதுல்யம்; கூண்டில் இருக்கிற விதைக்குச் சமாநம். அக்ஷரத்வமாவது: க்ஷேத்ரஸ்த பீஜதுல்யம்; பூமியில் விதையைப் போட்டவுடன் இருக்கும் அவஸ்தை. அவ்யக்தமாவது, உச்சூநத்வாவஸ்தை; புதும்புதல்; அங்குரத்வாவஸ்தா துல்யம்; முளைவருகிற நிலைமை.

'மோக்ஷஸ்ய ப்ரஹ்மணா ஸஹ [illegible] ஸாம்யம்' மோக்ஷ மடைந்தவனுக்குப் பிரம்மத்தோடுகூட ஐந்துவிதமான

* இது தைமாதத்து ஸஞ்சிகையின், 136-ம் பக்கத்தின் தொடர்ச்சி.



ஸாம்யமிருக்கிறது. அதாவது: ஸாரூப்யம், ஸாமீப்யம், ஸாலோக்யம், ஸாயுஜ்யம், ஸார்ஷ்டிதா. ஸாரூப்யமாவது, ஶங்க சக்ர கதா தாரத்வரூபேண ஸமாநரூபத்வம். ஸாமீப்யமாவது, ஸமீபதேஶ வர்த்தித்வம். ஸாலோக்யமாவது, ஸமாநலோக வர்த்தித்வம். ஸாயுஜ்யமாவது, அநுபவ விஷய பதார்த்த தாரதம்ய விஹீநத்வம். அதாவது, உபயவிபூதி விஶிஷ்ட ப்ரஹ்மாநுபவவிஷயே ஸாம்யம். ஸார்ஷ்டிதாவாவது, 'போக்யஸ்ய தாரதம்ய விஹீநதா - போகோ நாம - அநுபவஜநித ஆநந்த: தத்விஷயே ஸாம்யம்.

'பகவத: ஷாட்குண்ய [illegible] நாம - ஜ்ஞாநம், பலம், ஐஶ்வர்யம், வீர்யம், தேஜஸ், ஶக்தி. ஜ்ஞாநம், ஸர்வஸாக்ஷாத்காரம்; பலம், உபயவிபூதிதாரண ஸாமர்த்யம்; ஐஶ்வர்யம், நியந்த்ருத்வம்; வீர்யம், ஜகதுபாதாநபாவேபி விகாரவிரஹ:, தேஜ: கார்யேஷு ஸஹாய நைரபேக்ஷ்யம்; ஶக்தி:, அகடித கடநாரூபா. ஸௌஶீல்யம் - மஹத: மந்தை: ஸஹ நீரந்த்ரேண ஸம்ஶ்லேஷ:' வாத்ஸல்யம் - தோஷாநாதர:.

பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாவன :—

1. பரபக்தி: [illegible] விஶேஷ விஶிஷ்ட [illegible] (ப்ரஹ்ம) விஷயக [illegible] - [illegible].

2. பரஜ்ஞாநம் :—[illegible] ஸாக்ஷாத்கார: - [illegible].

3. பரமபக்தி :—[illegible] ஸாக்ஷாத்கார [illegible] [illegible] விஶேஷ [illegible].

ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் ஜநந மரணாதிகள், தாபத்ரயத்தில் ஒன்முன ஆதிதைவிகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இத் தாபத்ரயத்தை நிவர்த்தித்து இந்தக் கலியுகத்தில் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைவதற்கு ப்ரபத்தியைத் தவிர வேறே ஒரு உபாயமும் இல்லையென அநேகம் ப்ரகரணங்களில் ஸாதித்திருப்பதை அநுஸரித்து ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் செய்தருளின ஸ்தோத்ர ஜாலங்களிலும் அநேகவிதமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஸ்தாலீபுலாக ந்யாயத்தை அநுஸரித்து அடியிற் சில ஶ்லோகங்கள் உதாஹரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

அபீதிஸ்தவே.— 'ஸதி த்வதநுக்ரஹே நிதாந்தம் ஸ்வாமிந் பயம் நாயதி ஸம்ஸ்ருதே: பரஸ்தாத் । ஸமயே து தவ ஸ்வதந்த்ரஸ்ய ஸ்வயமேவ நாஸ்தி ரக்ஷா ந து தவ ஸ்வதந்த்ரஸ்ய ஸ்வயிஜாதநிரோதே ॥' 'ஹே ஸ்வாமிந்! ஸம்ஸாரத்தில் உண்டான பயத்தை நிவ்ருத்தி செய்யும்பொருட்டு, உம்மைத்தவிர வேறே ஒருவரையும் அநுஸரிக்கவேண்டியவராக நான் எண்ணவேயில்லை; ஏனெனில், நீர் க்ருபையோடு இருக்கும் விஷயத்தில் பயத்துக்கு ப்ரஸக்தியே ஏற்படுவதில்லை; நீர் நிக்ரஹத்தை ஸங்கல்பித்துக் கோபத்தை உடைத்தாயிருக்கும்போது ஆத்ம ஸம்ரக்ஷணத்துக்கும் ஒருக்காலும் ப்ரஸக்தி கிடையாது. பகவத் ஶரணாகதிசெய்தவருக்கு ஒருக்காலும் ஒருவிதமான பயமும் ஏற்படுவதில்லை. பகவான் க்ருபைகூர்ந்து அவனை ரக்ஷிக்கிருர்.'

'த்வதேகதந்த்ரம் கமலாஸஹாய! ஸ்வேநைவ மாம் ரக்ஷிதுமர்ஹஸி த்வம் । த்வயி ப்ரவ்ருத்தே மம கிம் ப்ரயாஸை: த்வய்யப்ரவ்ருத்தே மம கிம் ப்ரயாஸை: '—'ஹே லக்ஷ்மீகாந்த! உம்மை ஒருவரைத் தவிர வேறொருவரையும் நினைக்காமல், உம்மையே எப்போதும் நினைத்துக்கொண்டு இருக்கிறவனுன என்னை, நீர் தானகவே காப்பாற்ற யோக்யராகிறீர்; நீர் என்னை ரக்ஷிக்க ப்ரவ்ருத்திக்கும்போது என்னுடைய ப்ரயாஸம் வேண்டியதில்லை. நீர் என்னை ரக்ஷிக்கவேண்டி ப்ரவ்ருத்திக்காமலிருக்கும்போது, அப்போதும் என் ப்ரயாஸத்தினுல் ப்ரயோஜநம் இலலை.

காமாஸிகாஷ்டகே :—'த்வயி ரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை: த்வயி சாரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை: । இதி நிஶ்சிததீ: ஶ்ரயாமி



நித்யம் ந்ருஹரே! வேகவதீ தடாஶ்ரயம் த்வாம் ॥'—'நீர் என்னை ரக்ஷிக்கும்போது வேறே ரக்ஷகர்களால் ஒரு ப்ரயோஜநமும் இல்லையென்று உறுதியான எண்ணங்கொண்டு, ஹே ந்ருஸிம்ஹ! வேகவதி கரையில் வீற்றிருக்கும் உம்மை எப்போதும் பஜிக்கிறேன்; பகவானைத்தவிர வேறே கதியில்லை. அவனே ஸர்வரக்ஷகனென்பது கருத்து.

'வரதராஜபஞ்சாஶதி:— ஶரணாகதரக்ஷணவ்ரதீ த்வம் நவிஹாதும் ஶரணாகதம் அர்ஹஸி த்வம் । விதிதம் புவநே விபீஷணோ வா யதி வா ராவண இத்யுதீரிதம் தே ॥'— 'சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுவதையே முக்ய வ்ரதமாய்க் கொண்டவரான நீர் என்னை ஒருக்காலும் கைவிடக்கூடாது. விபீஷணனுகிலும் ராவணனுகிலும் யாராகிலும் ஶரணமென்று வந்தால் அவனைக் கைவிடமாட்டேன் என்று நீர் திருவாய் மலர்ந்தருளியது உலகத்தில் ப்ரஸித்தமாயிருக்கிறது.'

'காரணத்வம் விவாத்யத்வம் உபாயத்வ பலாந்விதா । இதி ஶாரீரக ஸூத்ரம் இஹ சாபி வ்யவஸ்திதம் ॥' என்கிறபடி ஸ்ரீ வேதவ்யாஸரால் அப்படிப்பட்ட ப்ருஹ்ம ஸூத்ரங்கள் எப்படி நாலு அத்யாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றவோ அவ்விதமே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரமும் நாலு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஜகத்காரணத்வாதிகளை ப்ரதிபாதிக்கிற முதல் அத்யாயார்த்தத்தை ஆநுஶாஸநிக பாகத்தினுலும், அபாத்ய த்வத்தை ப்ரதிபாதிக்கிற இரண்டாவது அந்யாயார்த்தத்தை ஸ்தரீகரண பாகத்தினுலும், உபாயத்வத்தை ப்ரதிபாதிக்கிற மூன்ருவது அத்யாயார்த்தத்தை யோஜநா பாகத்தினுலும், பல ரூபோபேயத்வத்தை ப்ரதிபாதிக்கிற நான்காவது அத்யாயார்த்தத்தை ஸம்ப்ரதாய ப்ரக்ரியா பாகத்தினுலும் ஆக இந்த நாலு பாகத்தினுல் ஸ்ரீபாஷ்யார்த்தங்கள் விஶதமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன வென்று ஆசார்யர்களுடைய திருவுள்ளம்.

(தொடரும்.)

மாட்பூஷி: ராமபத்ராசார்யர்.
(பேன்ஷன் ஜில்லா ரிஜ்த்ரார், வீரவநல்லூர்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வேதாந்த ஸங்க்ரஹம்.

'நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி' என்று முக்தன் பரமாத்மாவுடன் ஸாம்யத்தை அடைகிறதாகக் கீழே சொல்லப் பட்டுள்ளது. ஆனால் பரமாத்மாவுக்கும் முக்தனுக்கும் ஒருவித வித்யாஸமுண்டு. ஜகத் ஸ்ருஷ்டி முதலான வ்யாபாரங்களில் முக்தனுக்கு ஸம்பந்தமில்லை 'ததைக்ஷத பஹுஸ்யாம்' 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே' ஜகத் அவனிடமிருந்து உண்டாயிற்று. 'ய ஆத்மநி திஷ்டந்' என்று ஆத்மாவுக்கு அந்தர்யாமி, நியந்தா, பகவான். 'யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந் அத்ருஶ்யே அநாத்ம்யே அநிருக்தே அநிலயநே அபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே அத ஸோऽபயம் கதோ பவதி', 'ரஸோ வை ஸ: ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி',—எம்பெருமானிடத்தில் நிலைத்ததும் ஸகலபயமும் போய்விடும்; ஸகல ஜகத்தும் அவனில் தரிக்கிறது; ஒருவனும் அவனை மீறமுடியாது. 'பீஷாऽஸ்மாத் வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய: । பீஷாஸ்மாதக்நிஶ்சேந்த்ரஶ்ச............' அவனுடைய ஆஜ்ஞையால் தான் ஸூர்யன், சந்த்ரன் அக்நி இந்த்ரன் முதலானோர் அவரவர்கள் கார்யங்களை நடத்துகிறார்கள். 'ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத: ।' அவன் தான் எல்லாருக்கும் அதிபதி; ஸகல ப்ராணிகட்கும் ராஜா; ரக்ஷகன்; 'ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந: ஸர்வஸ்யாதிபதி: ஏஷ ஸர்வேஶ்வர: ஏஷ ஸேது:..........'—என்று ஶ்ருதிகள் வெளியிடுகின்றன.



கண்ணன், கீதையில், 'மயாऽத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் । ஹேதுநாநேந கௌந்தேய ஜகத்விபரிவர்ததே ॥' (IX—10). [ஜீவர்களின் கர்மத்திற்குத் தக்கபடி நம் ப்ரக்ருதியானது நம்மால் ஆளப்பட்டு, சராசரமாயுள்ள இந்த ஜகத்தை உண்டாக்குகிறது. ஜகத் என்றால்தான் இப்படிச் சுழல்கிறது.] 'விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நமேகாம்ஶேந ஸ்திதோ ஜகத் ।' [நான் எல்லாவற்றிலும் வ்யாபித்துக்கொண்டு, என்னுடைய ஒரு அம்ஶத்தால் ஜகத்தைத் தரிக்கிறேன்] என்றும் அருளிச் செய்திருக்கிறான். 'ஏஷ ஹ்யேவாநந்தயாதி' என்று பகவானே ஆநந்தத்தை ஸகலருக்கும் உண்டுபண்ணுகிறவனென்று ஶ்ருதி வெளியிடுகிறது. ஜகத் ஸ்ருஷ்டி முதலானவற்றில் முக்தனுக்கு ஸம்பந்தமில்லை.

இந்த முக்திதசையில் இந்த ஆத்மா தன்னைப் பகவானை விட்டுப் பிரிக்காமல் அவனுடைய ப்ரகாரமாகவே, 'ஸர்வம் ஹ பஶ்ய: பஶ்யதி', 'தத்த்வமஸி' என்கிற ஶ்ருதிகளின் ப்ரகாரம் அவனே தனக்கு ஆத்மா; அந்தர்யாமி; நியந்தா; ஸகலமும் பகவததீநம்; அவனையன்றி இருப்பு ஒரு வஸ்துவுக்குக் கிடையாது என்று நன்றாய் ப்ரத்யக்ஷமாய் அறிந்துகொண்டு, அவனையும், அவன் கல்யாணகுணங்களையும் பூர்ணாநந்தத்துடன் அநுபவித்துக் கொண்டு, அவன் கைங்கர்யமே புருஷார்த்தமாக உடையவனாயிருக்கிறான்; 'நோபஜநம் ஸ்மரந்நிதம் ஶரீரம்' ப்ரக்ருதி ஸம்பந்தம் எல்லாவற்றையும் விட்டிருக்கிறான். 'ந ச புநராவர்ததே' என்கிறபடிக்கும், 'அநாவ்ருத்தி: ஶப்தாத்' என்கிற ஸூத்ரப்படிக்கும் ஶாஶ்வதமான நிரதிஶயாநந்த ஸ்வரூபமான பகவத் ப்ராப்தியை அடைந்தவன் மறு ஜந்மமில்லாமல் பகவானையே அநுபவிக்கிறான். 'மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே'. பகவான் அபாரகாருண்ய முடையவன். பக்தர்களை ஒரு நாளும் கைவிடான்; 'ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச,

ஸ ச மம ப்ரிய:' [மஹாபக்தன் தன்னிடத்தில் மஹாப்ரீதியுடையவன்] என்றும் பகவானுகிறதான் அவனிடத்தில் ஏதோ கொஞ்சம் ப்ரியம் உள்ளவன்போல, பகவான் தன் மநஸ்ஸால் அதை மிகக்குறைவாய் எண்ணியிருப்பதாகவும் தானும்கூடக் கொஞ்சம் ப்ரீதியாயிருக்கிறான். தவிர, பக்தன் பகவானிடத்தில் மஹாப்ரீதியாயிருக்கிறதாக பகவத்கருணையால் பகவான் பக்தனை எண்ணுகிறான்.

உலகத்தில் கொடுப்பவர்கள் உதாரராகச் சொல்லக் கேட்டிருக்கிறோம். கேவலம் ஐஶ்வர்யம் முதலியவற்றை யடைய தன்னிடத்தில் பக்திபண்ணிப் பெறுமவர்களைக்கூட, பகவான் தன் மநஸ்ஸால் உதாரர் என்று எண்ணுவதாக அருளிச்செய்கிறான். 'உதாரா: ஸர்வ ஏவைதே'; கருணாநிதியான ஈஶ்வரன் திருவுள்ளம் இப்படி இருக்கிறது. 'உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை யெல்லாங் கண்ணன்' 'தாயும்நீ தந்தையும்நீ மக்களும்நீ சேலேய் கண்ணியரும்நீ' என்று ஆழ்வாரைப்போலே அநுபவிக்கும் மஹாங்களாகிற பரமபக்தர்களை 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' தனக்கு ஆத்மா தாரகன் உயிர் என்று தன் திருவுள்ளத்தைக் கீதையில் அருளிச்செய்கிறான். 'பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்மாம் ப்ரபத்யதே | வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:' இப்படிப்பட்ட ஜ்ஞாநவான் தன்னை அடைகிறான். இவன் பகவானுக்கு ஆத்மாவாய் உயிராயிருக்கிறபடியால் இவனுக்கு மறுபிறவிக்கு யாதொரு இடமும் இல்லை இவனை ஒருநாளும் பகவான் கைவிடான் என்று நான்காம் அத்யாயம் முடிக்கப்பட்டது.

ஆக, நல்ல ஆசார்யனை அடைந்து வேதாத்யயநம் செய்து, பூர்வகாண்டத்தில் விவரிக்கப்பட்ட கர்மத்தின் ஸ்வரூபத்தையும் பயனையும் விசாரித்து, கர்மம் அல்பமான நிரந்தரமில்லாத பயனைக் கொடுப்பதால், நிரந்தரமான அளவற்ற பேரின்பத்தைக் கொடுக்கும் ப்ருஹ்மத்தையும் அதன் ஸ்வரூப குணங்களையும் விசாரித்தல் அவஶ்யமென்று ஏற்பட்டது. அதைக் கேவலம் யுக்தியால்



மாத்ரம் ஸ்தாபிக்க முடியாது. அந்தப் பகவான் ஜகத்காரணம்; அவனே நிரதிஶய புருஷார்த்தமாயுமிருக்கிறானென்று 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி' 'ஆநந்தம் ப்ரஹ்ம' 'ரஸோ வை ஸ:', என்று ஶ்ருதிகள் வெளியிடுகின்றன. 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்............ ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி .........ஸ ஆத்மா.........ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்'— பகவான் ஜ்ஞாந ஸ்வரூபன். 'ஆநந்தம் ப்ரஹ்ம' 'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ', 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம',—அளவிடக்கூடாத ஆநந்த ஸ்வரூபன். 'ஹிரண்மய: புருஷ:, கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ'— அவன் அப்ராக்ருத திவ்ய திருமேனியை உடையவன். 'ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத், அத யதத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே'—தேஜோமயன்; நிரதிஶய தீப்தியுக்தன். 'அஜரோ அம்ருத:' மோக்ஷத்தை அளிப்பவன். ஸகல தேவதைகளையும் ஶரீரமாயுடையவன்.

'யஸ்ஸர்வஜ்ஞ: ஶாஶ்வத: ஸத்யஸங்கல்ப: | ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ: ||' ஸர்வஜ்ஞன்; ஸகல கல்யாண குணங்களை ஸ்வபாவமாக உடையவன். அவன் யோகிகளை அநுக்ரஹிக்கும்பொருட்டு ஹ்ருதயத்தில் எழுந்தருளி ஸேவை ஸாதிக்குமவன். இச்சையாலும் அருளாலும் ஶரீரத்தைப் பரிக்ரஹிக்கிறான். கர்மஸம்பந்தமில்லாதவன; ஸம்ஹாரகர்த்தா அவன்; ஆத்மாக்களுள்பட எல்லாவற்றிற்கும் அவன் அந்தர்யாமி. 'அபஹத பாப்மா விஜரோ விம்ருத்யு: - ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:' ஒருஹேய ஸம்பந்தமுமில்லாதவன்; கல்யாண குணஸாகரன; உலகத்தில் எது நமக்கு ஆநந்தத்தை உண்டாக்குகிறதோ, அது அவனால்தான் உண்டாக்கப்படுகிறதே தவிர வேறில்லை. உலகத்திற்கு

ஸகலவித காரணமும் அவனே என்று முதல் அத்யாயம் வெளியிட்டது.

இப்படி உபநிஷத்துக்கள் வெளியிட்டதை விரோதிக்கும் யுக்தியும் ஸ்ம்ருதியும் ப்ரயோஜனப்படா. ஆனால் பகவத் கீதையும் மநுஸ்ம்ருதியும் உபநிஷத்துக்கு அநுகூலமானவை.

உபநிஷத்தின் ஸாரத்தை ஸ்ரீபாஞ்சராத்ரம் வெளியிடுகிறது.

இரண்டாம் அத்யாயம்.

இப்படி ஸித்தமாய் நித்யமாயிருக்கும் பகவானைப் பற்றி முதலிற் சொல்லி, பிற்பட்டு கார்ய வர்க்கங்களைப்பற்றி ஸூத்ரகாரர் வெளியிடுகிறார். அசித் ஸ்வரூபம் அநித்யம். அது ஒரு படிப்பட்டு இராது. ஜீவன் நித்யன்; அவனுக்கு ப்ரயத்நசக்தி கொஞ்சம் உண்டு. கர்மத்தால் கட்டுண்டு சரீரமடைந்து ஜ்ஞாந ஸங்கோசத்தை அடைகிறான். ஸம்ஸாரதசை துக்கஸம்பந்தமுடையது.

மூன்றாவது அத்யாயம்.

பகவான் ஹேய வாஸனைகூட இல்லாதவன். எல்லாவித நற்குணமுடையவன். அபாரகாருண்யம், ஸௌலப்யம், ஸௌசீல்யம் உடையவன். அவனை அடையும் வழியைப்பற்றி முக்யமாய் மூன்றாம் அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. உபாஸநம், த்யாநம், வேதநம் என்று வேதாந்தத்திற் சொல்லப்பட்ட அநுபவ ரூபமான ஒருவித பகவத் ஜ்ஞாநம், மஹாப்ரீதி ரூபமாய் ப்ரத்யக்ஷத்திற்கு ஸமாநமாய்ப் பகவனை அடைவிப்பிக்கும் பக்தியென்று சொல்லப்படுகிறது. ப்ருஹ்ம வித்யை அநேகவகை; அதில் ந்யாஸ வித்யை யென்றும், சரணாகதி யென்றும் ப்ரபத்தி யென்றும் சொல்லப்பட்டது ஒன்று. ஸகலத்திற்கும் பகவத் க்ருபையே முக்யகாரணம்; அவனே உபாயம், என்று அவன் திருவடிகளில் ஆத்ம ஸமர்ப்பணம் செய்து மஹாப்ரேம ரூபமான காதலுடன் அவன் குணங்களை அநுபவிக்க அநுபவிக்க அவனை அடைந்தல்லது தரிக்கமுடியாதென ஒரு ஆவல் உண்டாகி, கடைசியில் பக்தர்கள் அவனை அடைகிறார்கள். பகவான் தவிர அடையவேண்டிய இன்னொரு ப்ராப்யம் யாதொன்றுமில்லை.



கேவல கர்மாநுஷ்டாநம் மாத்ரம் ப்ரயோஜநப்படாது. ஆனால் ஒருபயனை உத்தேசிக்காமல் பகவதாராதந ரூபமாய்ச் செய்யும் கர்மம் பக்தி உண்டாவதற்கு உதவியாயிருக்கும். ஒருவன் நித்ய நைமித்திக கர்மங்களை அநுஷ்டித்து, அஹங்காரம் மமகாரம் காமம் க்ரோதம் லோபம் மதம் மாத்ஸர்யம் இவைகள் இல்லாமல் மநோவாக் காயம் மூன்றும் ஒத்து, பகவானை த்யாநம் செய்து குழந்தைபோன்ற ஒரு தசையை அடைந்து, பகவத் பக்தி முற்றி, பகவானைத் தர்சந ரூபமாய் அநுபவிக்க ஸகல ஊழ்வினையும் நசிக்கும்.

மஹாபக்தனான ஜ்ஞாநி இவ்வுலகைவிட்டு, அர்ச்சிராதி கதியடைந்து மறுபிறவி யில்லாமல் நித்யமான சாஸ்வதமான நிரதிசயாநந்தமான மோக்ஷத்தையடைந்து, பகவானையும் பகவத் குணங்களையும் எப்போதும் அநுபவித்துக்கொண்டிருக்கிறான்.

இதுவரையில் 15 - ஸஞ்சிகைகளில் 'வேதாந்த ஸங்க்ரஹம்' என்பதை வேதாந்தத்தில் கொஞ்சமும் பரிசய மில்லாதவர்களுக்காகச் சுருக்கமாய் வேதாந்த சாஸ்த்ரத்தைப்பற்றி ஏதோ ஒருவிதமாய்ச் சொல்லிமுடித்தோம். இந்த ஸங்க்ரஹத்தில் அநேக தவறுதல்களும் தப்பிதங்களும் சிலர் ஒப்புக்கொள்ளக்கூடாத யோஜனா பேதங்களும் கிடைக்கும். குற்றங்களைத் தள்ளி, குணங்களை மஹான்கள் க்ரஹிப்பார்களென்று எண்ணி அடியேனை எல்லாரும் க்ஷமித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் வார்ஷிக ஸங்கம்.

சென்ற மார்கழி மாஸத்தில் திருவஹீந்த்ரபுரத்தில் நடைபெற்ற மஹாஸங்கத்தின் மூன்றுவது தினம் ப்ராதஸ்ஸமயத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வார்ஷிக ஸங்கம் நடைபெற்றது. அதன் ப்ரகாரத்தை அடுத்த ஸஞ்சிகையில் வெளிப்படுத்துவோ மென்று ஏற்கெனவே ப்ரதிஜ்ஞை செய்து கொண்டதை அநுஸரித்து இப்பொழுது அதைப் பற்றிய விசேஷங்களை ஸங்க்ரஹமாக விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறோம்.

மஹாஸங்கத்தின் அக்ராஸநாதிபத்யத்தை வஹித்த ஸ்ரீ. உப. கபிஸ்தலம் ஸ்வாமியே இதற்கும் அத்யக்ஷராக எழுந்தருளி இருந்தார். முதலில், அங்கத்தினரின் தொகை, வரவு செலவு கணக்கு முதலிய விசேஷங்கள் அடங்கியுள்ள வர்ஷாந்த அறிக்கை வெளிப்படுத்தப்பட்டது. ஸ்ரீ. உப. எழும்பூர் பீ. ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி அதை ஆமோதித்து, அதில் குறிக்கப்பட்டிருந்த அம்ஸம் ஒவ்வொன்றையும் பற்றி விஸ்தரித்துப் பேசி, ஸபை த்ரவ்யாபாவத்தால் ஸ்ரமப்படுவதை ஆஸ்திக ப்ரபுக்கள் பார்த்து உதாஸீநித்திருப்பது உசிதமன்றென்றும் அந்த ஸ்ரமத்தை நிவ்ருத்திப்பிக்க ஸதஸ்யர்கள் உசிதமான உபாயத்தைத் தேடவேண்டு மென்றும் விஜ்ஞாபித்துக் கொண்டார். அதற்குமேல் ஸ்ரீ. உப. இஞ்சிமேட்டு ஸ்வாமி, மாஸம் 1-க்கு ரூ. 25-க்கு மேற்கொண்ட வருமானமுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும், இந்த ஸபைக்கு மூலதநத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஒரு மாஸத்திய வரும்படியைக் கொடுத்து உதவி புரியவேண்டு மென்றும், அப்படி உதவிசெய்வது ஒவ்வொரு ஸம்வத்ஸரத்திலும் நடக்காமற்போனாலும் அவரவர்கள் புருஷாயுஸ்ஸில் ஒரு தரமாவது நடைபெற வேண்டு மென்றும் விஜ்ஞாபநம் செய்துகொண்டார். பிறகு ஸ்ரீ. உப. அன்பில் கோபாலாசார்ய ஸ்வாமி அதைப்பற்றி ப்ரஸ்தாவித்தபிறகு, அந்த ப்ரயத்நம் க்ரியையில் பர்யவஸிக்காமல் கேவலம் ஆலோசநாவஸ்தையிலேயே முடிந்து விட்டது. சென்ற வருஷத்தில் பூவிருந்தவல்லியில் உபக்ரமித்த ஒரு ரூபாய் மூலதநத்தைப்பற்றி சிலர் ப்ரஸ்தாவிக்க, அது ஸம்பந்தமாக



ரூ. 19-0-0 அப்பொழுது வஸூலாயிற்று. பிறகு வார்ஷிக விசேஷங்கள் அடங்கியுள்ள அந்த அறிக்கையும் ஸப்யர்களால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த அறிக்கை, நாலாவது ஸஞ்சிகை 139-வது பக்கத்தில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு பின்வருமாறு சில தீர்மானங்கள் செய்யப்பட்டன.

(1) இப்பொழுது இவ்விடத்திற் சேர்ந்துள்ள தென் இந்தியா வைஷ்ணவர்களின் மஹாஸமாஜம், இந்தத் தேஸத்து சக்ரவர்த்தியாகிற மஹாராஜன் விஷயத்தில் தமக்கு இயற்கையாயுள்ள ராஜபக்தியை ஸவிநயம் வற்புறுத்துகின்றது.

(2) நமது ஆசார்யர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளில் விவரிக்கப்பட்டுள்ள நமது ஸித்தாந்தத்தின் கொள்கைகளும் ரஹஸ்யார்த்தங்களும் ப்ரசாரம் அடைந்து அதுவழியாக ஸித்தாந்தம் அபிவ்ருத்தி அடைய வேண்டியது அவஸ்யமானதால், அதற்கு ஒரு முக்கிய உபாயமாயும் இப்பொழுது இச்சபையாரால் ப்ரதி ஸம்வத்ஸரமும் நடத்தப்பட்டு வருவதுமான 'வித்வத் ஸதஸ்' என்று வ்யவஹரிக்கப்படும் ஸங்காம்ஸத்திற்கு, ஸக்தர்களாயுள்ள ஆஸ்திகர்களெல்லாரும் யதாஸக்தி உபகரிக்க க்ருபைசெய்ய வேணுமென்று இச்சபையார் ப்ரார்த்திக்கிறார்கள்.

(3) மேற்கூறப்பட்டுள்ள ஸித்தாந்தாபிவ்ருத்தியானது, ஸம்ஸ்க்ருத பாஷாஜ்ஞாந வ்ருத்தியைச் சார்ந்திருக்கிறபடியால், அந்த ஸம்ஸ்க்ருத பாஷாபி வ்ருத்தியின் பொருட்டு பலவிடங்களில் ஸம்ஸ்க்ருத பாடஸாலைகள் ஆஸ்திக ப்ரபுக்களால் ஏற்படுத்தப்பட வேண்டு மென்றும், இம்மாதிரியான ப்ரயோஜநங்களை உத்தேஸித்தே ஆஸ்திக மஹாஜநங்களால் ஸமர்ப்பிக்கப்பட்டுள்ள த்ரவ்யத்தை யாவதபேக்ஷிதம் உடைத்தாயிருக்கும் ஸ்ரீ மடாதிபதிகள் இந்த விஷயத்தில் ஸ்ரத்தை எடுத்துக்கொள்ள வேண்டு மென்றும் இச்சபையார் ப்ரார்த்திக்கிறார்கள்.

(4) ஸ்ரீ அஹோபில மடத்தின் அபிவ்ருத்தியை உத்தேஸித்து, இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் உள்பிரிவாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்ரீ அஹோபில மடத்து ஸிஷ்ய ஸபையை அதன் ப்ரவர்த்தகர்களாயுள்ள ஸ்வாமிகள் யதாஸக்தி உஜ்ஜீவிப்பிக்க வேண்டு மென்றும், ஸித்தாந்த ஸ்தாபநோபயுக்தமாக ஏதாவது அந்த மடத்து ஸம்பந்தமான விஷயம் ஆலோசநார்ஹமாக இருந்தால் அதன் ஆலோசனையின் பொருட்டு அந்த உள் பிரிவின் ஸங்கத்தை அந்த ப்ரவர்த்தகர்கள் அதிக விளம்பமின்றிக்கே கூட்டவேண்டு மென்றும் இச்சபையார் ப்ரார்த்திக்கிறார்கள்.

(5) இத்தேஸத்தில் பஹுகாலமாக நடைபெற்றுவரும் வர்ணாஸ்ரம தர்மாநுஷ்டாநம் இத்தேஸத்திய ஜநங்களின் ஏவ்வித த்ருஷ்டபலத்திற்

கும் விருத்தமன்றுகையால், லௌகிகத்தில் உயர்ந்த பதவியில் இருக்கும் சில ப்ராஹ்மண ப்ரபுக்களால், வர்ணாஶ்ரமதர்மாநுஷ்டாநம் நஶித்தாலொழிய தேஶத்துக்கு ஶ்ரேயஸ் ஸம்பவியாது என்னும் ப்ரமத்தின் பேரில் அந்த அநுஷ்டாந விநாஶார்த்தம் இப்பொழுது செய்யப்பட்டுவரும் உபதேஶமும் ஸ்வாநுஷ்டாநமும் ஸர்வ ப்ரகாரத்திலும் அக்ராஹ்யங்களென்றும், ஆஸ்திகர்களாயிருக்கும் ஹிந்துக்களனைவரும் அந்த உபதேஶத்திற்கும் அநுஷ்டாநத்திற்கும் எவ்வித இடமும் கொடாமல் அவைகளைத் தடுக்க வேண்டியது அவஶ்ய மென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

இந்தத் தீர்மானங்கள் முடிந்த பிறகு, வருகிற வர்ஷத்திற்காக ஸபா ப்ரவர்த்தகர்கள் நியமிக்கப்பட்டார்கள். சென்ற ஸம்வத்ஸரத்தில் ப்ரவர்த்தகர்களாக இருந்தவர்களுடன் பின் குறிக்கப்பட்டுள்ள ஸ்வாமிகளும் அந்த அதிகாரத்தை அங்கீகரிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கப்பட்டார்கள்.

(1) ஸ்ரீ. உ.ப. என். ஸ்ரீநிவாஸாசார்யர் பி. ஏ., பி. எல்., புரசைபாக்கம்.

(2) ஸ்ரீ. உ.ப. எஸ். வேதாந்தாசார்யர், எம். ஏ., திருவையாறு.

(3) ஸ்ரீ. உ.ப. வித்வாந் ராயம்பேட்டை வாத்ஸ்ய கிருஷ்ணமாசார்யர், திருக்குடந்தை.

(4) ஸ்ரீ. உ.ப. வித்வாந் சேட்லூர் நரஸிம்ஹமாசார்யர் புரசைபாக்கம்.

இவையெல்லாம் நடைபெற்ற பிறகு, வருகிற ஸம்வத்ஸரத்திய மஹாஸங்கத்தை ஸ்ரீ ராஜமந்நார் ஸந்நிதியில் ஸ்ரீ ராஜகோபாலன் திருவடி வாரத்தில் ஸ்ரீ பாகவதர்களுடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு தாம் நடத்தி வைக்கப்போகிறதாக ஸ்ரீ. உ.ப. கோட்டூர் எஸ். ராஜகோபாலாசாரியர், ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமி முகமாக ஸதஸ்ஸுக்கு விஜ்ஞாபநம் செய்துகொண்டார். அந்த விஜ்ஞாபநத்தைச் செய்து கொள்ளும் பொழுது ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமி, அந்த மஹாஸங்க காலத்தில் யதாபூர்வம் ஸபையாரால் நடத்தப்படும் ஸ்ரீ பாஷ்ய பரீக்ஷையுடன், கோமளேஶ்வரம்பேட்டை ஸ்ரீ ஆழ்வார் ஆசார்யர்கள் ஸபையாரால் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸார பரீக்ஷை யொன்றும் நடத்தப்படுமென்றும் அதில் ரூ. 25 முதல் பல ஸம்பாவனைகள் செய்யப்படுமென்றும் விஜ்ஞாபித்துக் கொண்டார். இந்த விஜ்ஞாபநங்களெல்லாவற்றையும் ஸதஸ்யர்கள் மிக்க க்ருதஜ்ஞதையுடன் அங்கீகரித்தார்கள்.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.

OFFICE OF THE REGISTRAR
18 AUG 1920
MADRAS

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 10.] ரௌத்ரி வைகாசி [ஸஞ்சிகை 8.

“ த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥” [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

பூதமதமும், அதனின்று உத்பந்நங்களான கிளைமதங்களும் ஸர்வேஶ்வரனை ப்ரபஞ்சத்தின் வெளியே இருத்தின. அவனை நினைக்கும்போதெல்லாம், அம்மதஸ்தர்கள், அவன் பரமண்டத்தி லிருப்பதாக நினைத்தார்கள். வைதிக மதம் அவனை அநந்தனென்று அறிந்து, அவன் காலத்தாலும் தேசத்தாலும் யாதொரு வஸ்துவி னாலும் எல்லையிடக் கூடாதவனாயிருக்கும்போதும், லீலாவிபூதியிலும் நித்யவிபூதியிலும் ஸர்வத்ர அவன் நிலைத்து இருக்கின்றானென்றும் வெளியிட்டது. அவனில்லாத காலமிலது; அவனில்லாத தேசமிலது; அவனை உட்கொள்ளாத வஸ்துவிலது; ஆதலால் ப்ரபஞ்சம் ப்ரளய தசையிலும் ஸ்திதியிலும், அவனிடம் நிலைப்பது மன்றி, அதனுள் வர்த்திக்கும் யாவத் பதார்த்தங்களுக்குள்ளும் அவன் அந்தராத்மாவா யிருந்து, அவற்றினுடைய ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்குக் காரணனா யிருக்கின்றான். மரத்திலே நெருப்பானது மறைந்திருப்பதுபோல, ஸர்வ வ்யாபியான பகவான் ஸர்வத்திலுள்ளும் மறைந்து இருக்கின்றான். அதனால் ஸர்வ ஶரீரியான பகவானைப் பல ஶரீர விஶிஷ்டனாகவே,

நம் பூர்விகர்கள் உபாஸித்தார்கள். அதனால் அர்ச்சா ஶரீரகனாக அவனை உபாஸிக்கப் போதுமான ஹேது எக்காலத்திலும் உண்டாயிருக்கையிலும், அவனுடைய அவதார ரூபங்கள் தத்காலத்தில் அவனது அர்ச்சாரூபங்கள் ஏற்படுவதற்கு விஶேஷகாரணமாக நிற்கின்றன. அவதார காலங்களில் அவனுடைய பக்தர்கள் ப்ரத்யக்ஷமாக அவனை அநுபவித்தவண்ணம், அர்ச்சையில் அவனை ஆழ்வார்கள் ஆசார்யர்கள் முதலான பாகவத ஶ்ரேஷ்டர்கள் பிற்காலங்களில் அநுபவித்தார்களென்பது யாவருமறிந்த விஷயம்.

இந்த்ரியங்களுக்கு அகோசரனாய், மநஸ்ஸுக்கு அவிஷயனாய்; புத்தியை அதிக்ரமித்தவனாய், கேவலம் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபியாய், ஸர்வ வ்யாபியாய், ஸூக்ஷ்ம வஸ்துக்களுக்கெல்லாம் அதிஸூக்ஷ்மனாய் இருக்கும் பகவானை உபாஸிப்பதென்பது, அவனது ஶரீரங்களாய் நின்ற சிதசித் பதார்த்தங்களை விலக்கி அமையமாட்டாது. இவற்றினுள்ளும், அவனுடைய பக்தர்கள் உகந்த ரூபங்கள் அவனுடைய உகப்புக்கு முக்யஸ்தாநங்களாகின்றன. பரமபதத்தில் நித்ய முக்தர்களால் பகவான் அநுபவிக்கப்படுகின்றான் எனும் விஷயமும், அவர்களுடைய இச்சைக்கிடாகக் கர்மஸம்பந்தமின்றியே, பகவானுடைய ஸங்கல்பத்தால் உண்டாகின்ற ஶுத்த ஸத்வமயமான ஶரீரவிஶிஷ்டர்களாய், அவர்கள், அப்ராக்ருத திவ்யமங்கள விஶிஷ்டனான ஸர்வேஶ்வரனை அநுபவிக்கின்றனர் என்று நிர்ணயித்தால் தான் பொருந்தும். இந்த நிர்ணயம் வேதாந்த ஸம்மதத்தை முன்னிட்டுக்கொண்டு, வேதோபப்ரஹ்மணங்களால் ஆதரிக்கப்படுகின்றது. யூதர் கிறிஸ்தவர் முதலானவர்களுடைய மதபுஸ்தகங்களும் இவ்வித யோசனைகளுக்கு விதியின்றி இடம் தருகின்றன. கேவல ஜ்ஞாந ஸ்வரூபியான பரமாத்மாவைக் கேவல ஜ்ஞாந ஸ்வரூபிகளான சேதநர்கள் அநுபவிக்கும் முறையானது, நமபோலியருடைய யோசனைக்கு அகப்படாது. கரண க்ராமங்களுடன் கூடிய ஶரீரிகளான நாம், அத்தகைய ஶரீரைகஸாதநயுக்தர்களாய் ஜ்ஞாநாநந்தமய ஸ்வரூபியான பரமாத்மாவை அறிந்தநுபவிப்பதென்பது சிந்திக்கத்தகாததே.

வேதாந்த மார்க்கத்தை அநுஸரித்து உண்டான உபப்ரஹ்மணங்களான இதிஹாஸ புராணங்களாலும், பகவத் ஶாஸ்த்ரங்க



ளாலும், வெளியிடப்பட்ட க்ரமத்தில், கர்ம ஜ்ஞாந பக்தியோகங்களுக்கு அநதிகாரிகளான முமுக்ஷுக்கள் ஸ்வயம் ப்ரயோஜநமாக, அர்ச்சாரூபத்துடன் அவதரித்திருக்கும் பரமேஶ்வரனை ஆராதிப்பது யுக்தம். 'நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர । யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத்' என்கிறபடியே, வாஸுதேவன் பரமபதத்தில் நித்ய ஸித்தமான திவ்யமங்கள விக்ரஹ விஶிஷ்டனாய் நித்யமுக்தர்களால் அநுபவிக்கப்படுகின்றான் என்பதையும், அவன் யாவர்க்கும் பரன் என்பதையும் விஶ்வஸித்தவர்களுக்கு, இந்த லோகத்தில் அவன் அர்ச்சாரூபதானாய் ஸாந்நித்யம் செய்கின்றான்: அதுவும், விக்ரஹத்தினுடைய ஆகாரத்தோடொக்க ஶுத்த ஸத்வமயமாய், மநுஷ்ய த்ருஷ்டிகளுக்கு அகோசரமாய் இருக்கும் ஒரு திவ்யஶரீர விஶிஷ்டனாய், பரத்வாதி ஸகல கல்யாணகுண விஶிஷ்டனாய் ஸாந்நித்யம்பண்ணி, மநுஷ்யர்களுடைய தர்ஶநத்துக்கு மட்டும் அர்ச்சாரூப தானாய்க் காணப்படுகின்றான். ஸமுத்ரஜலங்களை மேகங்கள் ஸ்பர்ஶித்து, நம்போலியர்க்குப் பாநயோக்யமாகும்படி உபகரிக்கின்றன. அவ்வண்ணமே, மஹா பாகவதர்களால் ப்ரதிஷ்டாபித்து ஆராதிக்கப்பட்ட பகவான், நம்போலியர்களுடைய ஸேவாரூபாதி கைங்கர்யங்களை உகந்தருள யோக்யனாகின்றான். ப்ரதம ஸாந்நித்யம் ஓரதிகாரி விஶேஷத்துக்காகப் பண்ணியருளின பகவானைப் பரமைகாந்திகளான ஆழ்வார்களும் நம் பூர்வாசார்யர்களும் தங்களையே உகந்துவந்து அர்ச்சாவதாரம் பண்ணினவனாக அத்யவஸித்தார்கள். 'ஸவிஶேஷாதிஶாயிஷ்ணு ஸாந்நித்யம் ஸம்ஸ்தி தம் ஸந்த்ரபிம்பயோ:' என்கிறபடியே, மந்த்ரஶக்தியைப் பெற்ற மஹாத்மாக்களிடம் கௌரவத்தை வஹித்த ஸர்வேஶ்வரன் மந்த்ரரூபியாக இருந்துகொண்டே, அவர்களுடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி, அர்ச்சையில் அதிஷ்டாநம் செய்கின்றான்; அப்படிச் செய்கையிலும், தேஜோ பலைஶ்வர்ய மஹாவபோத ஸுவீர்ய ஶக்த்யாதி ஸர்வ கல்யாணகுண ஸம்பூர்ணனாய், அவன் அர்ச்சையில் அவதரித்திருக்கின்றதைப் பாகவதர்கள்

தெளிந்துகொள்வார்கள். அப்படிப்பட்ட அர்ச்சாரூபியான புருஷோத்தமனுடைய கேவல தர்சனமே ஸேவார்த்திகளுக்குப் பரமபாவனத்தை உண்டுபண்ணுகின்றது. '[illegible]' என்று சொன்னபடிக்கு, திவ்யமங்கள விக்ரஹத்தினுடைய கேவல தர்சனமே, தர்சிப்பவர் ஹ்ருதயத்தில் அந்த ரூப விசிஷ்டனாக எம்பெருமானை நிலைக்கச்செய்து, அவர்களுக்கு ஸர்வபாப நாசத்தையும் விளைவிக்கும். எம்பெருமானுடைய தர்சன பாக்யத்தைப் பெற்ற ஆழ்வார்களுடையவும், ஆசார்யர்களுடையவும் திவ்யஸூக்திகளைப் படிப்பவர்களுக்கன்றோ தர்சன பலமாகின்ற மஹாநந்த ப்ரீவாஹம் ஹ்ருதயங்களில் தெளிய ப்ரகாசிக்கும். '[illegible]' என்றன்றோ சொல்லப்பட்டிருக்கிறது. ஜன்மாந்தர ஸுக்ருதலேசம் உண்டான புருஷனொருவன் பூர்வம் துராசார மஹாபராத விசிஷ்டனாயிருந்தாலும், மஹாபாபியாயிருந்தாலும், தான் உத்தேசித்துப் போகாத ஸமயமொன்றில தற்செயலாகப் பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தைத் தர்சிக்கப்பெற்றானாகில, ப்ரத்யக்ஷ விஷயங்களில் ப்ரமத்தை உண்டாக்கும் துர்வாஸனைகளென்ன, அந்த ப்ரமத்தையென்ன, அநுமானம்போலத் தோன்றும் தர்க்காபாஸங்களென்ன, நாஸ்திக ஹேதுக்களென்ன, யதாவஸ்தித சாஸ்த்ரார்த்த ஜ்ஞானத்தைத் தலைகவிழ்க்கின்ற நாஸ்திகத்வமெனப்பட்ட விபரீத ப்ரமங்களென்ன; இவை முதலான சித்ததோஷங்கள் யாவும் நாசமடையும். இந்த விஷயத்திலே, ப்ரத்யக்ஷாதி 'ப்ரமாணத்ரயத்திலும் ஹேது பல பாவத்தாலே வரும் மதிமயக்குக்கெல்லாத்துக்கும், அத்தத்தர்சனம் மருந்தாயிருக்கு' மென்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தார். ஸர்வலோக சரண்யனான ஸ்ரீபார்த்தஸாரதியும்; '[illegible]' என்



றருளிச்செய்த உண்மையை மறுக்க வல்ல மூடன் லோகத்தின்கண் உளனோ? அந்த ஸ்லோகத்தினுடைய பூர்வார்த்தத்தை யோசிக்குமிடம், பகவானைப் பக்தியுடன் ஆஸ்ரயிக்கின்ற மஹாத்மாக்கள் எதை அவனுடைய திருமேனியாக உகக்கின்றார்களோ, அதையே தன்னுடைய தநுவாகத் திருவுள்ளம்பற்றி, அந்தப் பாகவதர்களுடைய சித்தாநுகுணமாகவே, அவர்கள் பண்ணும் ஆராதநங்கட்குப் பகவான் விஷயமாகின்றான், என்று நன்றாகப் புலப்படவில்லையோ? பகவத் ஸமாஸ்ரயணத்தை அபேக்ஷித்த மஹாத்மாக்களைப் பகவான் தேவமநுஷ்யாதி ரூப விசிஷ்டனாக அவதாரணம் செய்து ரக்ஷிக்கின்றான் என்பதோடு அவனுடைய கருணையானது முடிந்து போவதில்லை: அவ்வண்ணம் அவனை ஆஸ்ரயிக்க விரும்பும் ஸர்வ ஜநங்களும் எந்தெந்த ரூப விசிஷ்டனாக அவனைப் பாவித்து அடைய இச்சிக்கின்றனரோ, அந்தந்த ரூப விசிஷ்டனாகவே பகவான் அவர்களுக்குத் தர்சனமளித்து அநுக்ரஹிக்கின்றானென்பது ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளம். ஸ்லோகத்தினுடைய உத்தரபாகத்தை விவரிக்குமிடம், பகவானுடைய ஸ்வரூபமானது யோகிகட்கும் வாங்மநஸாகோசரமாக இருந்தபோதிலும், ஆஸ்திகர்களான மநுஷ்யர் யாவரும் பகவானை அடையவேண்டுமெனும் மநோரத விசிஷ்டர்களாய் இருந்துகொண்டு, அவனுக்கே அஸாதாரணமாகப் பொருந்திய விக்ரஹசேஷ்டா ஸௌசீல்ய ஸௌலப்யாதி விசிஷ்டமான அவனுடைய ஸ்வபாவத்தைத் தங்களுடைய சக்ஷுராதி கரணங்களால் தங்களுடைய அபேக்ஷாநுகுண ஸர்வ ப்ரகாரங்களாலும் அநுபவித்து அநுவர்த்திக்கின்றனர் என்று ஸ்ரீபாஷ்யகாரர் ஸாதித்தருளினர். தெளியாத மறைநிலங்களை நமக்குத் தெளிவிக்கின்ற திவ்யஸூக்தியும், 'தமருகந்த தெவ்வுருவம்' என்று பகவான் திருவுள்ளமுவக்கும் திவ்ய மங்கள விக்ரஹ ரூபங்களை விவரித்தது. '[illegible]' என்கிற ஸ்லோகத்தின்படியே, ஸர்வேஸ்வரன் சக்ஷுராதிகளுக்கு விஷயமாகான்;

ஶரீராதிகளற்றவன்; திவ்யாயுதங்களை வேண்டான். அவனுக்கு இருப்பிடமென்று ஒன்றிலது; ஆயினும் தமரெனும் பக்தர்க்கு, அவன் திவ்யமங்கள விக்ரஹ விஶிஷ்டனாய், ப்ரணதர்களுடைய ரக்ஷணார்த்தமாகவும் ஸ்வாலங்காரார்த்தமாகவும் திவ்யாயுதங்களைத் திருக்கரங்களில் கொண்டவனாய், ஒவ்வொரு ஸ்தாந விஶேஷங்களில் தர்ஶந மளிக்கின்றான் என்பது ஸத்யம். இதனால் பகவானுடைய வாங்மநஸ்ஸுக்களுக் கெட்டாத ஆஶ்ரித பாரதந்த்ரியம் ஸர்வஜநங்கட்கும் தெரியவருகின்றது. மேலே விவரித்த வண்ணம், மிகவும் மநோஹரமாக விளங்கும் எம்பெருமானுடைய திருமேனியைத் தர்ஶித்த கண்கள் மற்றொன்றைக் காணவிரும்புமோ? பகவதநுபவ மென்பதென்ன? உத்க்ருஷ்டாநுபவம் த்யாநம். த்யாநமென்பதும் த்யேய ரூபத்தை அபேக்ஷிக்கின்றது. பகவானுடைய த்யேயரூபங்கள் உபநிஷத்துக்களில் பலவாறு வர்ணிக்கப்பட்டுள. «ஏஷ தேவோ விஶ்வாத்மா ஸதா ஜநாநாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட: | ந்ருஸாரா ஜீவந ஸ்தந் யந்த்ர ஶரணாங்கித:» என்கிறபடியே ஶ்ரீசக்ரவர்த்தித் திருமகனுடைய த்யாநம் விதிக்கப்பட்டது. «ஆலோட்ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: | இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயணஸ்ஸதா» என்று பகவானுடைய அநவரத த்யாநத்தை வ்யாஸர் விதித்தருளினர். ஸந்த்யா காலங்களில் ஸூர்யமண்டல மத்யஸ்தனாய், ஸரஸிஜாஸநனாய், கேயூர மகரகுண்டல கிரீடஹாராதி திவ்யாபரண பூஷிதனாய், ஶங்கசக்ர கதாபாணியாய், நாராயணன் த்யாநிக்கப்படுகின்றான். யாவரும் நிரந்தர த்யாநாதிகாரிகளல்லர். பகவதநுபவம் அவ்வவர் அபிருசிக்குத் தக்கபடியே விகல்பத்துடன் கூடிநிற்கும். «ஸதீவ ப்ரியபர்த்தாரம்» என்கிறபடி, ஒரு பதிவ்ரதை ப்ரியநாயகனை உபசரிப்பதை யொத்துப் பகவானைப் பாகவதர் உபசரிக்கலாம். «ஜநநீவ ஸ்வநந்தநம்» என்கிறபடி, தாய் குழந்தையை உபசரிப்பதுபோல் ஹரியை உபசரிப்பதைச் சிலர் ப்ரியப்படுவர். ஆசார்யனை ஶிஷ்யனும், மித்ரன் மித்ரனையும் உபசரிப்பதுபோல் பகவானை உபசரித்தல் சொல்லப்பட்டது. நமக்கு ஸ்வாமியாய், ஸுஹ்ருத்தமனாய், பரமகுரு



வாய், மாதாவாய், பிதாவாய், ஸர்வவித பந்துவாய் இருக்கின்ற புருஷோத்தமனை அந்தந்த ஸம்பந்தத்துக்கேற்ற ஸர்வ பாவங்களுடன் நாம் உபசரிக்கக்கடவோம். இப்படிப்பட்ட ஸேவைகள் எல்லாவற்றிற்கும் விஷயமாகக்கூடிய பகவத்ரூபம் அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹமென்பதில் ஸந்தேஹ முண்டோ? ஸ்வாமியினுடைய திவ்ய பாதுகைகளிடம் பரதன் ராஜஸேவக வ்ருத்தியைப் பண்ணினதைப்பற்றிக் குற்றம் காண்பார் உளரோ? «ததா ஹி பகவாந் காஷ்டமயீ ஶக்தி: உபாயநம் சாவஹத் தந்மஹாநலம் | ஸ பாதுகாப்யாம் ப்ரயதோ நிவேத்ய வகாரவஶ்யாத் ஸாதா யயாவஶ ||» என்கிற ப்ரகாரங்களை ஆஸ்திகர் யோசிக்க வேண்டும். இப்படியேற்பட்ட கைங்கர்யத்தைப்பெற்று ஆழ்வார்களும் பூர்வாசார்யர்களும் பேராநந்தக் கடலில் நீந்தி விளையாடினார்கள்.

வஸ்து ஸ்வபாவம் இப்படியிருக்க, துருக்கரோடும் க்றிஸ்தவரோடும் ஸஹவாஸம் செய்த சிலர், அர்ச்சாரூபதரனான பகவானுடைய கைங்கர்யத்தில் நிந்தையும் த்வேஷமும் கொண்டாடத் தலைப்பட்டார்கள். அர்ச்சை பேசமாட்டாது, கண்களால் பார்க்கமாட்டாது, அது அசேதநம், ஸ்வரக்ஷணத்திலே அதற்கு ஶக்தியில்லை, பரரக்ஷணத்தில் அதற்கதிகாரமில்லை, என்றிவ்விதமாகத் தூஷணங்கள் வளரக் கேட்டிருக்கின்றோம். பேசவும் பார்க்கவும் திறனுள்ளதாய், சைதந்ய ஸ்வபாவத்தை நாமறிய ப்ரகாஶிப்பதாய், ஸ்வரக்ஷணத்திலும் பரரக்ஷணத்திலும் ஸமர்த்தமாய் ஒரு தெய்வத்தைப்ரத்யக்ஷத்தில் தூஷகர்கள் எங்கேனும் கண்டுளரோ? துருஷ்க யவநாதிகள் சில கதைகளை ஆஶ்ரயித்து, ஸர்வஜ்ஞமாய் ஸர்வஶக்தமாய் ஒரு தெய்வத்தை நம்புவது யாவர்க்கும் ஸமாநம்; கதைகளையும் ஆஶ்ரயிக்காமல் நம்புகின்றவர் நம்பட்டும்; எவன் எதைத்தான் தன்னிச்சையால் நம்பக்கூடாது. பகவானைப் பஜிக்கின்ற நம்மவர், அவனை அர்ச்சாஶரீரியாக விஶ்வஸித்துப் பஜிக்கின்றனர். பகவானுடைய சரணாரவிந்தங்களிலேயே தமது சித்தங்களை முற்றிலும் செலுத்தி, எல்லையற்றதான பகவத்விஷய ஜ்ஞாந பக்தி விஶிஷ்டர்களாய், பூர்ணமாய், நித்ய நிரந்தரமாய், விஶுத்தமமாய், வளர்கின்ற கைங்கர்யங்களை அந்ய ப்ரயோஜநர்பே

கைங்கர்யமற்று எல்லையற்ற ப்ரீதியுடன் ஸர்வாவஸ்தைகளிலும், தங்களுக்கு நிஸர்க்கமாய் உண்டாயிருக்கின்ற பகவத் தாஸத்வத்துக்கு உசிதமான முறைகளிலே, மிகவும் ஆசைப்பட்டுப் பண்ணும் பாக்யத்தைத் தங்களுடைய ஶரீராவஸாநத்தில் ப்ரார்த்தித்தவர்களாய், இந்த லோகத்தில் இருக்கும் நாள்களிலும் அவ்வித கைங்கர்யங்களைப் பண்ண விரும்பின பரமைகாந்திகளான நம்முடைய பூர்விகர்களுக்கு அர்ச்சாரூபியான ஶரண்யனை யன்றி அவை எவ்வண்ணம் கைகூடும்? இவ்வித கைங்கர்ய கந்தமும் மதாந்தரஸ்தர்கள் கேட்டறியார்கள். அர்ச்சையைத் தவிர்த்து அது ஸம்பவிக்கவும் மாட்டாது.

அர்ச்சை பகவானுக்கு ஶரீரம். அதிலும் மநுஷ்யர் கண்களுக்குத் தெரியாததான ஒரு அப்ராக்ருத ஶரீரவிஶிஷ்டனாக ஶரண்யன் எழுந்தருளி ஸாந்நித்யம் செய்வதை ‘ பிம்பாக்ருதாத்மநா பிம்பே ஸந்நிதாய வதிஷ்டதே ’ என்று ப்ரமாணம் காட்டியது. ஆதலால் ப்ராக்ருத பகவத் ஶரீரம் ப்ராக்ருத குணங்களை அதிக்ரமிக்க மாட்டாது. இதைத் தூஷணமாகச் சொல்பவர்கள், ப்ரபஞ்சத்தின்கண் விளங்காநின்ற ஸமஸ்த சிதசித் பதார்த்தங்களிலும் பகவான் அந்தந்தப் பதார்த்த கதங்களான தோஷகந்தமும் தன்னில் தட்டாதபடியே அந்தர்யாமியாக இருக்கும் உண்மையைச் சிந்திக்கத்தக்கவர்கள். ‘ ஸம்ஸ்த: ஸர்வஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா ’ என்றும், ‘ அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி ’ என்றும், ஸர்வ ஸமயஸ்தர்களாலும் ஒப்புக்கொள்ளக் கூடிய தத்வத்தை யோசித்தால், ப்ராக்ருத வஸ்துக்கள் ஸ்வகுணங்களை அதிக்ரமிக்காமல் இருக்கையிலும், அந்தர்யாமிக்கு யாதொரு குற்றமும் வாராதென விளங்காதோ? அர்ச்சையில் ஸாந்நித்யமானது, தாஸன் ப்ரீதியால் செய்கின்ற பணிவிடைகளை அங்கீகரிப்பதெனும் விஶேஷாகாரத்துடன் கூடியதாயினும், ப்ராக்ருதமான பகவத் ஶரீரமானது ப்ராக்ருத குணங்களை அதிக்ரமிக்க ஹேதுவில்லை. பரர்களுடைய தேவாலயங்கள், தாமாகவும் த்வேஷிகளுடைய க்ரௌர்யங்களாலும் நாஶமடைய வில்லையா? இது நம்முடைய தேவஸ்தாந விஷயங்களிலும் பொருந்தாதோ? தேவாலயங்கள் அழிபடும்போது, எங்காவது ஈஶ்வரன் அவற்றின்



ரக்ஷணார்த்தம் ப்ரவர்த்தித்த துண்டோ? இந்த ரூபமான துன்பங்களை நம்மவர் அதிகமாகப் பட்டார்களென்னில், அது ஆயுத பலங்களிலும் ஸங்கேத பலங்களிலும் தம்மிலும் மற்றோர் மிகுந்திருந்ததால் ஏற்பட்டது. பெரும்படைகள் கூடிய பக்ஷத்தை ஈஶ்வரனும் சார்கின்றானென்று பாஷாந்தரத்தில் ஒரு வசநமுமுண்டு. ஸ்வாலயங்களை ரக்ஷிக்க முயலாத ஈஶ்வரன், ஸ்வார்ச்சா ரக்ஷணத்தில் ப்ரவர்த்திக்காதது தோஷமாமோ? ஆலயங்கட்கும் விக்ரஹங்கட்கும் அவத்யம் நேரிட்டால், அது ஸேவார்த்திகளுடைய துரத்ருஷ்டத்தைச் சேர்ந்தது. ஸேவார்த்திகளை அநுக்ரஹிக்கவேண்டி அவ்விடங்களில் விஶேஷ ஸாந்நித்யத்தை உகந்தருளிய பகவானுக்கு அவ்வித அவத்யங்களால் தோஷம் தட்டமாட்டாது.

தயாநந்த ஸரஸ்வதி யென்னும் ஒரு ஸமாஜகர்த்தா, சிறுவயதில் சிவார்ச்சா நிவேதநத்துக்காக ஸம்பாதிகமான ஹவிஸ்ஸை, நிவேதநத்துக்கு முன்பாக ஒரு எலி பக்ஷிக்கப் பார்த்தாரென்றும், அதுமுதல் அர்ச்சாராதநத்தில் அவர் த்வேஷம் வஹித்தாரென்றும் ஒரு கதை சொல்வார்கள். இக்கதையை அந்த ஸமாஜ கர்த்தாவுக்கு ஒரு அதிஶயத்தை உண்டுபண்ணும்படி சொல்லிக்கொள்வார்கள். நமக்கு அக்கதை அவருடைய அஜ்ஞாநாவிஷ்கரணமாகத் தோற்றுகின்றது. விக்ரஹங்களில் அவர்க்குண்டாயிருந்த த்வேஷத்துக்கு அக்கதையை ஒரு ஹேதுவாகக் கொண்டபோதிலும், அது அஸத்ஹேதுவே. ஒருவன் பக்தியோடு ஸமர்ப்பிக்கும் பத்ர புஷ்ப பலாதிகளைத் திருவுள்ளம் பற்றும் ஈஶ்வரன், ஸமர்ப்பண காலத்துக்குமுன் அவற்றினுடைய ஸம்ரக்ஷணத்தை ஏற்றுக்கொள்கின்றானில்லை. உபஹ்ருதமான ஹவிஸ்ஸை ஆராதகன் நிவேதந பர்யந்தம் ரக்ஷிக்கக்கடவன். அவன் அறியாமல் எலி ஸ்பர்ஶித்த போதிலும், அதை ஶபரி ஸமர்ப்பித்த பலமூலங்களை அவற்றின்கண் ஸம்பாவிதங்களான தோஷபுத்தியை விலக்கி, அவளுடைய ஆதராதிஶயத்தை உகந்து ஸ்வீகரித்த பகவான் பராமர்ஶிக்கமாட்டான் என்றும் சொல்லலாம். மநுஷ்ய புத்தியால் ஏற்பட்ட அஶுசி நியமங்கள் ஸர்வவ்யாபகனான பகவானுக்கில்லை. ஸமர்ப்பிப்பவர்களுடைய பக்தி மாத்ரமே அவனுடைய ஆதராதிஶயத்துக்குக் காரணமாகும்.

பராசர வ்யாஸாதிகள் காலமுதற்கொண்டு, இதுவரையிலும் பல ருஷிச்ரேஷ்டர்களால் பரிக்ரஹிக்கப்பட்டு, இதிஹாஸ புராணங்களில் கொண்டாடப்பட்டு, பகவத் சாஸ்த்ரங்களால் ஸ்தாபிக்கப்பட்டு, ஸர்வ வைதிக ஸம்ப்ரதாயாசார்யர்களால் அநுஷ்டிக்கப்பட்டு, ஆழ்வார்கள், ஆசார்யர்கள் முதலான பரமபாகவதர்களால் விசேஷமாக வழிபடப்பட்ட அர்ச்சாரூபேண அவதரணம் செய்திருக்கின்ற பகவதாராதந க்ரமமானது, பாஹ்ய குத்ருஷ்டிகளுடைய ஸஹவாஸத்தால் தங்கள் மதிபலத்தை யிழந்த சிலரால் பழிக்கப்பட்டதாகில், புத்திமான் அதைப் பராமர்சிப்பனோ? நாம் மோஹநர் காலத்துக்கு முன் பகவான் அர்ச்சையில் ஸாந்நித்பம் செய்தருளுகின்றான் என்று விச்வஸித்த மஹாபக்தர்கள் யாவரும் கெட்டுப்போனார்களோ? அப்படி நூதந ஸமாஜத்தினர் சொல்லத் துணிந்தாரேயாகில் அது அஹங்காரத்தில் அங்குரித்த வீண் அபிநிவேசம் ஆகமாட்டாதோ? ஜந்ம மதத்தை த்யஜிப்பவன்தான் அம்மதஸ்தர்களிடம் பத்த வைரங்கொண்டு அவர்களை ஹிம்ஸிப்பது வழக்கம். ‘[illegible]’ என்று உபநிஷத் வசநத்தையே நூதந ஸமாஜஸ்தர்களைக் குறித்து யாம் ஸம்சயமின்றி ப்ரயோகிப்போம்.

பகவதுபாஸநா ப்ரகாரங்கள் விகல்பிக்கக்கூடும். ஜகத்துக்கும் அதன்கண் இருக்கின்ற யாவத் பதார்த்தங்களுக்கும் அவன் அந்தராத்மாவா யிருக்கின்றபடியால், யாவும் அவனுடைய சரீரங்கள். ஆத்ம ஸ்வரூபியான அவனது ஸாக்ஷாத்காரத்துக்கு அதிகாரிகள் இப்போதில்லை. ஆகலால் எந்த தநுமூலமாயாவது அவன் ஆராதிக்கப்படலாம். ஒரு ப்ரகாரமான ஆராதத்தில் இழிகின்றவன், அந்ய ப்ரகாரங்களைக் கைக்கொள்பவரை நிந்திக்கவும் த்வேஷிக்கவும் அநர்ஹன். அஜ்ஞர்களுக்குப் புத்திபேதத்தை உண்டாக்குபவர், அவர்களையும் கெடுத்துத் தாமும் கெடுகின்றார்கள். தன்னுடைய நிஜபக்தர்களிடம் அபசாரப்படுபவரைப் பகவான் நிக்ரஹிப்பன் என்பதில் ஸந்தேஹமில்லை.

ஸ்ரீ:

# ப்ரேமப்ரவாஹம்.

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.)

உன்னிடம் ஸர்வ பூதங்களையும் ஸர்வ பூதங்களிலும் பரமாத்மாவான உன்னையும் தர்சிப்பதென்று ச்ருதி மொழிந்தது. இல்லாததைக் காண்பதன்று. அது தத்வ ஸாக்ஷாத்காரத்தைச் சொன்னது. நீ ஸர்வாதாரன்; உன்னிடம் ஸர்வ பூதங்களும் ஆதேயங்களாய் இருக்கின்றன. ஸர்வ பூதங்களிலும் நீ அந்தராத்மாவாகவும் நியந்தாவாகவும் இருக்கின்றனை. இந்த ரூபமான தர்சநம் எவனுக்கு ஸ்திரப்படுகின்றதோ, அவன் விசேஷ ஜ்ஞாநவான். அவனுக்குத்தான் பின்னால் ச்ருதி மொழிகின்றவண்ணம், ஸர்வ பூதங்களும் பரமாத்மாவான நீயே ஆகின்றனை என்று சொல்லப்பட்டது. இந்த உண்மைகள் உனக்கும் மற்ற சேதநாசேதந ஸர்வ பதார்த்தங்களுக்கும் உள்ள ஆதாராதேயபாவ நியந்த்ரு நியாம்ய பாவ சரீர சரீரிபாவ பர்யாலோசனையால் அறியக்கூடியவை. உனையன்றி ஒன்றுமில்லவே! யாவத்துக்கும் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் உனைச் சார்ந்தன. உனைவிட்டு ஒன்றை அறிகின்றவனை ஸர்வ வஸ்துக்களும் நிந்திக்குமென்றது ச்ருதி. ஆதலால் இத்தகைய ஸர்வாத்ம பாவம் உண்டானவனுக்குக் கேவல பேததர்சநத்தால் வரும் மோஹமில்லை. இச்சாத்வேஷம் முதலான த்வந்த்வங்களால் அவன் பீடிக்கப்படமாட்டான். அவனுக்கு ஸர்வத்ர தர்சநவிஷயம் ஸர்வத்ர ஸமனாய் நிற்கும் நீயே. உன்னிடம் அவன் கொண்ட பக்தியானது, ஸர்வத்ர அவனுக்கு ஸ்நேஹ மாத்ரதுதல் முடியும். இத்தகைய தர்சநம் அநுபவ பர்யந்தமாக எனக்கு உண்டாகும்படி நீ க்ருபை பண்ணவேண்டும்.

உன்னை ஆநந்தமய னென்று ச்ருதி சொல்லிற்று. உனை மரணாநந்தரம் அடைந்தவன் காமாந்நீயாய்க் காமரூபியாய், இந்த லோகங்களில் ஸஞ்சரிப்பானெனச் சொல்லப்பட்டது; அதாவது, அவனுக்கு இச்சாநுஸாரிகளாக சரீரங்கள் உண்டாகும்; அச்சிதத

படியே போகங்கள் ஸித்திக்கும்; ஜீவதசையில் அவனுக்கு ஶரீரமும் போகங்களும் கர்மாயத்தம்; அந்தத் தசையில் அவன் அகர்மவஶ்யன். உனது ப்ரஸாதத்தால் அவன் இஷ்டங்கள் யாவும் அவனுக்குக் கைகூடும். அப்போது ஶ்ருதி விவரித்தபடியே, உன்னுடன் அபேதத்தைப் பாராட்டி, அவன் ஸர்வவித போகாயதன போக்ய பதார்த்த விஶிஷ்டமான ப்ரபஞ்சத்தைத் தானாகவே நினைப்பான்; போகாநுபவம் செய்கின்ற ஸர்வ ஜீவாத்மாக்களும் தானென நினைப்பான்; ஜீவனுக்கும் ப்ரக்ருதிக்கும் கர்மாநுகுணமாக ஸம்பந்தங்களை ஸங்கல்பிக்கின்ற உன்னுடனும் பரமஸாம்யத்தைப் பாராட்டுவான்; ப்ரபஞ்சோத்பத்தி காலத்தில் முதலில் உண்டான ஹிரண்ய கர்ப்பனும் தானெனவே நினைப்பான்; தேவாதிகளுடைய உத்பத்திக்கு முன்பு ப்ராணிகளுடைய அம்ருதத்வம் தன்னிடம் நிலைத்திருந்ததாகப் பாவிப்பான்; தன்னையும் ஸர்வேஶ்வரனான உன்னையும் ஒன்றாக வெண்ணித் தன்னைப்பற்றிய ஜ்ஞானத்தை யோக்யனான ஶிஷ்யன் பொருட்டு ப்ரதானம் செய்பவனை தன்னை யடையத்தக்கவனென்று சொல்வான். போக்தா போக்யங்களைக் காட்டிலும் தனது வ்யாபகதையை வெளியிடுவான். ஸர்வ ப்ரபஞ்சத்தையும் தான் அதிக்ரமிப்பதா யெண்ணுவான். உனை உபாஸித்தவன் மரணாநந்தரம் உன்னோடு ஸர்வ காமங்களையும் அநுபவிப்பானெனப்பட்டது. காமாந்ந காமரூபங்கள் தாம் ஸர்வகாமங்களோ? தத்க்ரது ந்யாயத்தால், பத்த தசையில் ஸ்தித ப்ரஜ்ஞனாய், உனது பக்தனாய் அவன் உபாஸித்த வஸ்து நீயே யாதலால், உனது உபாஸநமும் ஸமஸ்த கல்யாண குண விஶிஷ்டனாகவே உனது நிரந்தர ஸ்மரணத்தால் ஸித்திக்க வேண்டியபடியால், உனது பக்தனுடைய ஸர்வகாமங்களும் உன்னிடமும் உனது திவ்ய குணங்களிடமும் விஶ்ரமிக்க வேண்டியபடியால், அவைதான் அவனுக்குக் காமாந்நங்கள்; இச்சா விஷய போக்யவஸ்துக்கள். அவனுக்கு இச்சையால் உண்டாகும் ஶரீரங்களும் அத்தகைய போகஸாதந நிமித்தமாகவே என்று யோசிக்கப் பொருந்தும். இவ்வுலகத்தை விட்டு உன்னிடம் சென்று அம்ருதராகின்றனர் என்பதும், அம்ருதத்வத்துக்கு ஈஶ்வரனான உன்னுடைய நிரந்தராநுபவ ஸஹகாரியான மரணமற்ற வாழ்வைச் செல்லுகின்றது. ஸம்ஸார மார்க்கத்துக்கு அக்கரை நீ. உனை அடைதலென்பதே மோக்ஷம். ஶுத்த ஜலத்தில்



கொட்டப்பட்ட ஸாதாரண ஜலம் ஸ்வயம் ஶுத்த ஜலத்தைப்போலாகின்றது; உனையடைந்த உபாஸகனுடைய ஆத்மாவும் உனைப்போல் பரிஶுத்தமாகின்றது. ஆனபடியால் அதனுடைய நிரந்தர காமபோகமெல்லாம் உன்னுடைய அநுபவமே. அவ்வநுபவமே ஶாஶ்வத ஸுகமென்றும் ஶாஶ்வதமான ஶாந்தியென்றும் சொல்லப்பட்டது. ஸுகமென்பது, உனை அநுபவிப்பதால் உண்டாகும் ஆநந்தம்; ஶாந்தியென்பது விஷயேச்சையினின்று உபரதி. ஸுஷும்ந நாடியால் ஶரீரத்தைவிட்டு உடனே அம்ருதத்வத்தை அடைகின்றானென்பதால், விஷயேச்சை உத்க்ராந்திக்கு முன்பே ஶாந்தமாய் விடுமென்று கருத்து. பரப்ரஹ்மமான உனை அடைந்து விரஜனானான், விம்ருத்யுவானான் என்பதும், இவ்வுலகில் வித்யாப்ராப்தி அநந்தரமே ஸர்வபாப ஸர்வாஜ்ஞாந விநிர்முக்தனாய்ப் போந்தானென்று யோசிக்கப்பட்டது. இவை யாவும் கழிந்தபின் உனது ஸாயுஜ்யம் கிடைக்கும். அவன், ஸர்ப்பம் தோலைக் கழிப்பதுபோல் ஸர்வ பாபங்களையும் கழித்து, ஸாம மந்த்ரங்களால் ப்ரஹ்ம லோகத்துக்குக் கொணடுபோகப் படுகின்றான் என்று ஶ்ருதிவாக்யம். ஸர்வ பாபங்களும், 'ஸூர்ய-த்வா-ரேணதே விரஜா: ப்ரயாந்தி' எனப்படுவதால், ஸூர்ய த்வாரத்தை நெருங்குமுன்பே கழிந்துபோகின்றன என்று ஏற்படுகின்றது. அவித்யா க்ரந்தியை இங்கேயே நாசம் செய்கின்றானென்றும் சொல்லப்பட்டது. இங்கே உனது ஸாக்ஷாத்காரம் பிறந்தவன் புண்ய பாபங்களை உதறிவிட்டு நிரஞ்ஜநனாய் உனது பரமஸாம்யத்தை அடைகின்றானெனப்பட்டது. ஶரீராவஸாநே கர்மாயத்த நாமரூபங்களால் விடுபட்டவனாய் உனை யடைகின்றானென்பதும், உனது பரமஸாம்யாபத்தியைத் தான் சொல்லக்கூடும். வ்யாஸரூபத்தை நீ ஸ்வீகரித்து, இந்த ஸாம்யதை போகமாத்ரத்தில் முடியுமென்றும், ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி லயாதிகளில் முக்தனுக்கு அந்வயமில்லை யென்றும் காட்டியருளினாய். அஶ்வம் ரோமத்தை உதறுவதுபோல், பாபங்களை யெல்லாம் உதறிவிட்டு, ராகுவினிடத்தினின்று விடுபட்ட சந்த்ரன்போல் பூர்வ ஶரீரத்தை த்யாகம் செய்து ப்ரஹ்மலோகத்தை அடைவதென்பதும், உனை அடைவதற்கு முன்னமே ஶுத்தரூபம் முக்தனுக்குக் கிடைத்து விடுவதைக் காட்டுகின்றது. புநராவ்ருத்தியின்றி ப்ரஹ்மலோகத்தை யடைகின்றானென்பதால், அப்போது முக்தனு

க்கு உண்டாகின்ற ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவம். ஜீவனுடைய ஶுத்த ஸ்வரூபம், அபஹதபாப்மத்வாதி ரூபம். ப்ரேமார்ணவத்தில் முழுக இச்சிப்பவனுக்கு இந்த யோசனைகள் ஏன் என்று நீ கேட்பாயாகில், எனது மநோபாவங்களை வெளியிடுகிறேன். உன்னிடம் ப்ரேமையானது தற்காலம் என் முழுசித்தத்தையும் கொள்ளவே, நீ அதற்கு லக்ஷ்யமாக இருக்கவேண்டியதை இன்றைக்கும் என்றைக்கும் நான் வேண்டுகின்றேன். உனது ஸ்வரூபத்தில் நானென்பது அற்றுப்போக நான் முழுகவேண்டவில்லை. நானே அற்றுப்போனால் ப்ரேமை யென்பது எனக்கு எங்கிருந்து மிகுதியாகும்? ஜீவனென்னும் பதார்த்த மொன்று ந்யாய மறிந்தவர்களால் நிரூபிக்கத்தக்கதன்றெனச் சில வித்வான்கள் உபநிஷதர்த்தத்தை நிஶ்சயிக்கின்றனர். பரப்ரஹ்மமான நீயே அவித்யையிலகப்பட்டுக்கொண்டு ஜீவனெனச் சொல்லப்படுகின்றா யென்றும், உபநிஷத்தில் சில வாக்யங்களுடைய அர்த்த ஜ்ஞாநம் உனக்குண்டாய், உனக்கு அஜ்ஞாநம் கழிந்து, மறுபடி ப்ரஹ்ம பாவம் ஸ்திரப்படுகின்றதென்றும் அவர்கள் மதம். உபநிஷத்தே உன்னை அபாபவித்த மென்றது; கேவல ஜ்ஞாந ஸ்வரூபி என்று சொல்லிற்று. ஶுத்தம் பரம் நிர்மலம் ஏகரூப மென்று உனது ஸ்வரூபம் வர்ணிக்கப்பட்டது. விரஜன் விம்ருத்யு விஶோக னென்று உன்னை உபநிஷத் சொல்லுகின்றது. உன்னை அஜ்ஞாநம் எவ்வண்ணம் தொடும்? நீ ஸர்வேஶ்வரன்; ஸர்வஜ்ஞன்; நீ அநீஶ்வரனாக மாட்டாய். ஆதலால் நீயும் நானும் ஒன்றென நானெண்ணவில்லை. உனக்குள் யாவும் அடங்கவே, எல்லாவற்றிற்கும் நீ அந்தராத்மாவாக இருக்கவே, யாவும் நீ எனச் சொல்லப்பட்டது. உன்னை விலக்கி வஸ்துத்வம் எங்குமில்லை. ஆதலால் உன்னைப்பற்றிய ஜ்ஞாநம் உண்டானால், ஸர்வமும் அறியப்பட்டதாகு மென்பது வேதாந்த நிஶ்சயம். இவ்வண்ணம் நான் ஆசார்யோபதேசம் பெற்றேன். எனக்குற்ற அறிவைக்கொண்டு உபநிஷத் வாக்யங்களைச் சிந்தித்தேன். நீ இருக்கின்ற இந்த ஶரீரத்திலேயே நானும் இருந்துகொண்டு, உன்னை நினைக்காமல் விஷயேச்சையில் முழுகிப்போய், ஶோகமோஹாதிகளால் பீடிக்கப்படுகின்றேன். என்னைக்காட்டிலும் வேறான எனதீஶன் நீயென ஶ்ருதியே வெளியிட்டது. எனக்குத் தாரகனாய், நியந்தாவாய், ஸ்வாமியாய் இருக்கும் உன்னை எனது நிஜகர்மங்களால் ஆராதித்து த்ருப்தி செய்வது



உன்னை ஸாக்ஷாத்கரித்து, இந்த ப்ரபஞ்சரூபமான உனது மஹிமையை நான் கண்டுகொண்டு, எனது ஶோகமோஹங்களை நான் கடக்கக்கடவேன் என்றும் ஶ்ருதி மொழிந்தது. இந்த விஶ்வாஸத்தால் நானென்பது அறவும் உன்னிடம் மூழ்குவதை நான் வேண்டவில்லை. உனக்கும் எனக்கும் என்றும் பிரிவேயில்லை. இன்னும் நான் காணுமிடமெல்லாம் நீயே இருக்கின்றாய். நான் கேட்கும் விஷயங்களெல்லாம் உன்னிடம் கட்டப்பட்டிருக்கின்றன. எனது ப்ரேமைக்கு முடிவில்லாம லிருக்கவேண்டி, ஶ்ருத்யர்த்தத்தைச் சிந்தித்தேன். இது இப்படி இருக்க, எனக்கு இன்னும் வேண்டியதென் எனக் கேட்பையோ? கர்மமெனும் விலங்கில் நான் சிக்கியிருக்கின்றேன்; கர்மத்தால் ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யடைந்தேன். தேஹம் இந்த்ரியம் மநஸ் புத்தி முதலானவை எனது கர்மாநுகுணமாக ப்ரவ்ருத்திக்கின்றன. நான் பெற்ற ஜ்ஞாநத்தால் அவற்றை நான் என் வஶத்திலே நிறுத்த ஶக்தனல்லேன். அவை என்னை ஆகர்ஷிக்கும்படிகளில் நான் இறங்கி நிற்கின்றேன். அப்படிப்பட்ட நான், எனது மநஸ்ஸில் அவிச்சிந்நமான உனது ஸ்ம்ருதி ஸந்தாநத்தை ஸாதித்து, வித்யாநிஷ்பத்தியை ஸம்பாதித்துக்கொள்ள ஹேதுவில்லை. ஆதலால் உபநிஷத்துக்களில் உபதிஷ்டமான பக்தியோகம் என் அதிகாரத்தை அதிக்ரமித்தது. எனக்கு அதிகாரமேயில்லை. ஸர்வ ப்ரகாரமாயும் நான் அகிஞ்சநன். நான் உனது நித்யதாஸன் என்பதை ஶாஸ்த்ரத்தால் அறிந்துகொண்டேன். ஆனால் அந்த ஶேஷவ்ருத்தியை நான் அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவரவில்லை; கொண்டுவர வேண்டுமென்று அடிக்கடி ப்ரயத்நப்படுகின்றேன். ஆனால் ஒருதரமும் அந்த ப்ரயத்நம் பலிப்பதில்லை. உனது ஶேஷித்வ ஜ்ஞாநத்தை முன்னிட்டுக்கொண்டு, உனது ப்ரதிஜ்ஞையை விஶ்வஸித்துக்கொண்டு, ஸதாசார்யோபதேசத்தால் உன்னிடம் ஸக்ருத் ப்ரபதநம் செய்தேன். உன்னையே ரக்ஷகனாக எண்ணி வரித்தேன். உபாயாந்தர ஸ்தாநத்தில் உன்னை நிவேஶித்தேன். புத்திபூர்வாகங்களை விலக்க வேண்டுமென்று ஸதா எண்ணுகின்றேன். விலக்கினே னென்று சொல்லத் துணியேன். அப்படிப்பட்ட எனக்கு உனது க்ருபார்ணவத்தில் முழுகி நிற்கத் தடையிராதென நிஶ்சயித்திருக்கின்றேன். உனது ஸ்மரணை விச்சித்திதான் நரகம். கர்மவஶ்யத்வம் அத்தகைய நரகத்தை உண்டாக்கியேவிடும். ஆத

லால் ப்ரக்ருதி ஸம்பந்தத்தைக் கேவலம் உனது க்ருபையால் நீக்க வேண்டுகின்றேன். உனது திருவடிகளில் பக்தியானது எனக்கு விடாமல் நிலைக்கும்படி நீ க்ருபை செய்யவேண்டும். அஃதுண்டேல், உனது ஸங்கல்பத்தால் எங்கேனும் எவ்வண்ணமேனும் யானிருக்கப்பெறுவது எனக்குற்ற பேறே.

நிஷாதாதிபதி, ஸுக்ரீவன், ஶபரீ, ஸுதாமா, குப்ஜை, வ்ரஜாங்கனைகள், மாலாகாரன் முதலானோருடைய தாழ்மையும், உனது மஹிமையும், பேதம் தெரியாமல் பரமஸாம்யத்தை அடைந்த கதைகளைக்கேட்டும், சிந்தித்தும், உனது அபாரகாருண்ய ஸௌஶீல்ய வாத்ஸல்யாதி குணங்களை யறிந்துகொண்டும், தங்கள் மனமுருகி, மேலே குறித்தவர்களுக்குக் கிடைத்தபடியே, உனது ஸாக்ஷாத் ஸம்ஶ்லேஷாதி அநுபவங்களை ப்ரார்த்தித்தவர்களாய், அது கிடைக்காதவரையில் தமது ப்ராணன்களைத் தரிக்க மாட்டாதவர்களாய்த் தவித்தவர்கள் பூர்வாசார்யர்களில் பலருளர். அவர்களுடைய அநுபவம் மஹாஸுக்ருத மிருந்தவர்க்குத்தான் கைகூடும். அதைக் கிஞ்சித் தெரிந்துகொள்ள என்போலியர்கள் ஶக்தர்களாயினும், அவ்வநுபவத்தைப் பெறுவதற்கு நாங்கள் அத்யந்தம் அநர்ஹர்கள். நீ எனக்குள் இருக்கின்றா யென்றும், ஸர்வபூதாந்தராத்மா வென்றும் தெரிந்தும், எனது ப்ரவ்ருத்திகள் அவ்வுண்மையை விளங்கச் செய்யவில்லை. ஆழ்வார்களுக்கும் ஆசார்யர்களுக்கும் கிடைத்த அநுபவம் எனக் கெங்ஙனம் கிடைக்கும்? அவர்களுக்கும் அது பாவநாப்ரகர்ஷ ஜந்யம். பாவநா ப்ரகர்ஷத்தால் நேரிட்ட ஸம்ஶ்லேஷாதிகளுக்கு விச்சித்தி வரவொட்டாமல் அந்த மஹாத்மாக்கள் பண்ணின ப்ரயத்நங்களும், அது நேர்ந்த பிறகு அவர்களுடைய விரஹாவஸ்தையும், குருகைப்பிரான் பாசுரங்களில் விஸ்தரேண கண்டு கலங்கிநிற்ப தொழிய, நான் அவற்றை என் அநுபவத்தில் கொண்டுவரும்படி நினைக்கவும் ஶக்தியில்லாமல் நிற்கின்றேன். உன்னிடம் ப்ரேமை யென்பது நீயுகந்த ஆசிரியர் திவ்யஸூக்திகளில் பெருகுகின்றது. அவற்றை இங்குமங்கும் தெளியாமல் கண்டுகொண்டு, நானும் உன்னிடம் ப்ரேமைகொண்டதெனப் பாவித்து, இதுவரையில் சொல்லத் துணிந்தேன். ஒருக்ஷணம் அந்த ப்ரேமையை வேண்டுகின்றேன். பல முஹூர்த்தங்கள் அதைக் கொஞ்சமும் எண்ணாமல் கழிக்கின்றேன்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:.

# ஸம்ஸ்க்ருத பாஷாபிவ்ருத்தியும் ஆலய பரிஷ்காரங்களும். *

அர்ச்சாராதந விரோதிகளான சிலர், அநேக யுக்த்யாபாஸங்களைச் சொல்லி விக்ரஹாராதநங்களைத் தூஷிக்கிறார்கள். அவர் சொல்லும் தூஷணங்களுக் கெல்லாம் ஸமாதாநங்கள் பல வித்வான்களால் ப்ரகடிதமா யிருக்கின்றன. விக்ரஹ ரூபேண இஷ்ட வ்யக்த்யுபாஸநம் ஶிஷ்டாநுஷ்டாநஸித்தமென்பதில் பல உதாஹரணங்கள் உண்டு. ஏகலவ்யன் த்ரோணாசார்யரிடம் வித்யாப்யாஸம் செய்ய ப்ரயத்நித்தான். அதற்கு விரோதம் நேரவே, ம்ருண்மயமாக த்ரோணாசார்ய விக்ரஹம்செய்து, குரு பக்தியோடே விக்ரஹாராதநம்செய்து மந்த்ரஸித்தியை அடைந்தான். ஸாக்ஷாத் த்ரோணாசார்யர் கொடுக்காத பலத்தை மண்மயமான த்ரோணாசார்யர் கொடுத்தார்.

மேலும் விபவாவதாரத்தின் காலவ்யவஹிதியைப் போக்கித் தத்தத் ஜநங்களுக்குப் பகவானுடைய பெருமையை எடுத்துக் காட்டவேண்டியதற்காக அர்ச்சாவதாரங்கள் உபயோகப்படுகின்றன. தேஶ ஸம்ருத்யர்த்தமாய்த் தேவாலயங்களைக் காப்பாற்ற வேண்டியது அவஶ்யமென்று அடியிற்கண்ட மஹாபாரத வசநத்தால் தெரியவருகிறது. 'ஸூர்திஷ்டமஹ ஸீநாநி தெவஹூதாநி ஸவஶ:' (மஹாபாரதம் ஶாந்திபர்வம் 23௬). 'அஸுரர்களுடைய ராஜ்யத்தில் தேவாலயங்களில் ஸ்துதிகள் இல்லை; மங்களஸாதகமான க்ரியைகளும் இல்லை. ஆகையால் நான் அவர்கள் ராஜ்யத்தில் வஸிக்கமாட்டேன்' என்று லக்ஷ்மி இந்த்ரனிடம்

* இது சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.

சொல்லுகிறாள். ஆகையால், நம்முடைய தேசத்தில் லக்ஷ்மி வாஸம்செய்ய வேண்டுமானால், தேவாலயங்களைச் சரிவரக் காப்பாற்றவேண்டியது அத்யவஶ்யமான கார்யமாகும்.

**உபகாரகர்களான ஆழ்வாராசார்யர்களிடத்திலும் ருணமுண்டு.**

கிஞ்ச, 'ஜாயமானம் ஹி புருஷம் யம் பஶ்யேந் மதுஸூதந:' என்று முன் சொன்ன ந்யாயத்தால் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஜநித்த நமக்கு ஆழ்வாராசார்யர்கள் விஷயத்தில் 4-வது கடனையும் ஏற்றுக்கொள்வது யுக்திக்குப் பொருத்தமாயிருக்கும். 'ஆசார்யஸ்ய ப்ரஸாதேந' என்று சொல்லுகிறபடி பக்தியோகத்தில் அதிகாரமில்லாமல் கேவலம் அர்ச்சாவதாரத்தையே நம்பி, மோக்ஷத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நமக்கு, உபகாரார்த்தமாய் தேவாலய ப்ரதிஷ்டைகளைச் செய்வதில் ஶ்ரத்தையைக் காண்பித்த ஆழ்வாராசார்யர்களுக்கு, அவர்களால் ப்ரதிஷ்டிதங்களான தேவாலயங்களை ரக்ஷிக்கவேண்டியதுதான் ருண நிர்மோசநமாய்த்தீரும்.

**இப்போது காணப்படும் தேவாலயக் குறைகள்.**

இப்படி நம்முடைய ஸித்தாந்தமாகிற லதைக்கு ஆலவாலம் போலே ஶோபிக்கிற தேவாலயங்களில் இப்போது தோன்றும் குறைகளாவன:— 'தேவலக ஹாரிஸாக்ஷாத்' என்று கொண்டாடப்படுகிற அர்ச்சகர்கள் விஶேஷ ஜ்ஞாநியாயிருக்க வேண்டும். பகவத்ஸ்வரூபம் தெரியாதவர்கள் பகவதாராதநத்துக்கு அர்ஹர்களல்லர். மந்த்ரார்த்தங்கள் தெரியாதவர்களால் உச்சரிக்கப்படும் மந்த்ரங்கள் ஸப்ரயோஜநமாக மாட்டா. இப்போது தேவாலயங்களிலிருக்கும் அர்ச்சகர்கள் 100-க்கு 75-வீதம் ஸம்ஸ்க்ருத ஜ்ஞாநமே இல்லாதவர்கள். ப்ரதிஷ்டாத்யுபயுக்தங்களான மந்த்ரங்களை ஶாஸ்த்ரோக்த நியமப்படி அத்யயநம் செய்யாதவர்கள். பகவத் ஸந்நிதியில் உபசார ப்ரகாரங்கள் கொஞ்சமேனும் தெரியாதவர்கள். கேவலம் ஜீவநோபாயமென்றே இந்தத் தொழில்களைச் செய்துவருகிறார்கள்.

கீழ்ச்சொன்ன தோஷங்கள் மற்ற கைங்கர்யபரர்களிடத்தில் அதிகமாய்க் காணலாம். தொழிலாளிகளின் பக்திக் குறைவையும்



துராசாரங்களையும் பார்க்க, ஸேவார்த்திகளாய் வரும் மஹாஜநங்களுக்கும் பக்தி குறையுமென்பதில் தடையில்லை. அதனால் ஜநங்களின் வழிபாடுகள் குறையும்; அதனால் தேவஸ்தாநத்தின் விபவம் குன்றிப்போய்விடுகிறது. இக்காலத்தில் பெரும்பாலும் தேவஸ்தாநங்களில் ப்ரத்யுத்ஸவங்களிலும் ஸேவார்த்திகளின் ஸங்க்யையும் வருமானங்களும் வரவர குறைந்து வருகின்றனவென்று திவ்யதேஶவாஸிகளின் கிம்வதந்தீ பரவுகிறது.

**குறைகளைத் தீர்க்க ஸம்ஸ்க்ருத வித்வாந்களின் ஸம்பந்தம் அவஶ்யம்.**

ஆகையால் இப்போது தேவஸ்தாநங்கள் பரிஷ்கரிக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றன. அதாவது, தேவஸ்தாந ஸம்பந்தமான ஒவ்வொரு கார்யங்களை நிர்ணயிக்கும்போது ஸம்ஸ்க்ருத வித்வாந்களுடைய அபிப்ராயங்களையும் எடுத்துக்கொள்ளவேணும். தேவஸ்தாந கார்யங்களை நிர்வஹிக்கிற கைங்கர்ய பரர்களை நியமிக்கும் போது கூடியவரையில் ஸம்ஸ்க்ருத பாஷையில் பரிசயமுள்ளவர்கட்கே அதிக அவகாஶம் கொடுக்கவேணும். திருப்பதி ஸ்ரீரங்கம் முதலான பெரிய தேவஸ்தாநங்களில் ப்ரதாநாதிகாரிகள் தங்கள் கீழே ஒரு பண்டித பரிஷத் ஏற்பாடுசெய்து, அந்தப் பரிஷத்துக்குப் பாஞ்சராத்ர வைகாநஸாத்யாகமங்களில் விஶேஷ பரிசயம் உண்டாகி அவர்களின் அபிப்ராயத்தை அப்போதப்போது அபேக்ஷிப்பது உசிதமாகும்.

இப்படி ஸம்ஸ்க்ருத பண்டிதர்களின் பரிஶோதநை தேவஸ்தாநங்களுக்கு ஏற்படுவதினால் உண்டாகும் நன்மையைச் சொல்லுகிறேன். முதலில் ஸம்ஸ்க்ருத பாஷைக்கு உபயோகஸ்தலம் ஏற்பட்டதனால் பாஷாபிவ்ருத்தி யுண்டாகும். அதனால் கோவில் கைங்கர்ய பரர்களுக்கு ஜ்ஞாந ஸம்பாதநத்தில் ஸௌகர்யமும், ஜ்ஞாந ஸம்பாதநாஶக்தர்களுக்குக்கூட ஸஹவாஸ வஶத்தினால் ஜ்ஞாந ஸம்பாதநத்திற்கு ஸௌகர்யமும் நேரிடும். ஸேவகர்களாய் வரும் பக்தர்களுக்கும் த்வாத்ரிம்ஶதுபசாராதி ப்ரகாரங்களை அறிந்து யதாவிதி பகவத் ஸேவநம் செய்வதற்கு ஸமயம் நேரும். ஒரு தேவாலயத்தைப் பரிஷ்கரிப்பதென்றால், இக்காலத்திய தார்மிகர்கள் உடனே வசூல் செய்வதற்காகப்

புஸ்தகத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். அது அநாவஶ்யம். நித்யநைமித்திகாத்யாராதநங்களில் மந்த்ரலோப க்ரியாலோபாதிகளை யதாஶக்தி பரிஹரித்து யதாவிதியாய் நடக்கத் தொடங்கினால், தானே மஹாஜநங்களுக்கு பக்தி அபிவ்ருத்தியாகி தேவாலயம் செழிக்கும்.

**பண்டிதர்களுக்குக் கார்ய நிர்வாஹ ஸாமர்த்ய முண்டா?**

ஆனால் ஸம்ஸ்க்ருத பண்டிதர்கள் இப்படிப்பட்ட பாரமுள்ள வ்யாபாரத்தை நிர்வஹிக்க ஶக்தர்களோ வென்று சிலர்க்கு ஸந்தேஹம் வரலாம். அம்மாதிரியான ஸந்தேஹத்திற்கு இடமே இல்லை. அதற்கு பரஸ்ஸஹஸ்ரம் உதாஹரணங்கள் பராசீந காலத்திலும் இக்காலத்திலும் எடுத்துக்காட்ட நான் ஸித்தமாயிருப்பேன். ஸ்ரீமத் ராமாயணம் அயோத்யாகாண்டம் 67-வது ஸர்க்கங்களை வாசித்துப் பார்த்தால் வஸிஷ்டர் எந்த நிலைமையில் இருந்தாரென்று தெரியவரும். அதாவது, தஶரதர் ஸ்வர்க்கத்தை யடைந்ததும், நகரவாஸிகளுடைய ஸபை ஒன்று கூடியதாயும், அதில் வஸிஷ்டர் ஸபாநாயகராயிருந்து தீர்மாநங்களைச் செய்ததாயும் தெரியவருகிறது. ராஜ்ய கார்யங்களிலும் தஶரதர் வஸிஷ்டருடைய அபிப்ராயங்களை அபேக்ஷித்து வந்ததாகத் தெரியவருகிறது.

மேலும் மநுஸ்ம்ருதி வ்யவஹார ப்ரகரணத்தில் 'ஸேநாபத்யஞ்ச ராஜ்யஞ்ச தண்டநேத்ருத்வமேவ ச ஸர்வலோகாதிபத்யஞ்ச வேதஶாஸ்த்ரவிதர்ஹதி ॥' இதி வசநாத் - வேதஶாஸ்த்ரஜ்ஞனா ப்ராஹ்மணனுக்கே தண்டாதிகாரமும் ஸேநாபத்யமும்கூட கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

**தேவஸ்தான ஸம்பந்தமான வ்யவஹாரங்கள்.**

மேலும், நம்முடைய ஜநங்கள் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவுசெய்து தேவஸ்தாந ஸம்பந்தமான வ்யவஹாரங்களை மதாந்தரீயஸ்தர்களும், அவர்களுக்குத் அல்பஜ்ஞர்களாயு மிருக்கிற சில ஜட்ஜிகளிடத்தில் கொடுத்து, அவர்களிடத்திலிருந்து நிர்ணயத்தை எதிர்பார்க்கிறார்கள்.



அவர்களுக்குத் தேவாலய ஸ்வரூபம் தெரியாது; மதபேதம் தெரியாது; ஆசாரவைலக்ஷண்யம் தெரியாது. அந்த வ்யவஹார தோரணிகளை நிஷ்பக்ஷபாதிகளான வித்வாங்கள் பார்த்தால் ரொம்பவும் விசித்ரமாயிருக்கும்.

ஸம்ஸ்க்ருத பண்டிதர்களுடைய ஸம்பந்தம் தேவாலயங்களுக்கு ஏற்பட்டால் ஷை துராக்ரஹ ப்ரயுக்தமான வ்யவஹாரங்கள் உண்டாகாமலிருக்கும். அதிகமாய்க் கோர்ட்டுக்குப் போகாமல் அங்கேயே ஶாந்தியை அடைவதற்கும் ஸந்தர்ப்பத்தையும் செய்துகொள்ள ஸௌகர்யமாயிருக்கும்.

**நிகமநம்.**

ஆகையால் இந்த ஸபையை அலங்கரிக்கிற மஹான்கள் அடியேனுடைய ப்ரார்த்தநையை வ்யாஜமாக வைத்துக்கொண்டு, எல்லாத் தேவாலயங்களிலும் ஸம்ஸ்க்ருத வித்வாங்களுக்கு ஸம்பந்தத்தை ஏற்படுத்திக் கொடுத்து, ஷை பாஷைக்கும் தேவாலயங்களுக்கும் தந்மூலமாய் நம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கும் நம் தேஶத்திற்கும் விஶேஷ பரிஷ்காரத்தை உண்டுபண்ணும்படி ஐகமத்யத்தோடே ப்ரயத்நம் செய்யவேணுமாய் ஸவிநயம் ப்ரார்த்திக்கிறேன்.

இதி ஶம் வாதயாமஸி.

முற்றிற்று.

வேங்கடாத்ரி அகரம். தி. ந. ச. அநந்தாசார்யர்.

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ பாகவத தஶஶ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்மாசார்யர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 3. ஸ்ரீ சதுஶ்ஶ்லோகீவிவரணம் ... ... ... ... | 0 | 2 | 0 |

ஸ்ரீ:.

ஸ்ரீமதே வகுளாபரணநிகமாந்த மஹாதேசிகாய நம:.

# திருத்த திருத்தம்.*

அரசரிடம் ஸேவகர்க்குள் ஆயிரத்தில் ஒரு மனிதன் ஆநந்திப்பதைக் கண்டு, தன்னைப் புலியாகப் பாவித்துத் தன் தேஹமெல்லாம் சூடணிந்த சம்புகம்போல் அச்சேவகத்து ஆசையினால் ஸ்வதந்த்ரமாய் அநுபவித்த ஸ்திரமான பூமியைச் சிறிதில்லாமல் போக்கிவிட்டு, கண்டவர்க்குத் தொண்டராய்க் கைகட்டி நிற்பதும், கடுஞ்சொற்கள் கேட்பதும், தேஸமெல்லாம் அலைவதும், தின்னாத தின்பதும், தர்மம் துறப்பதும், தாஸியை பூஜிப்பதும், தாரத்தைத் தவிக்கவிடுவதும், உற்றாரை ஒழிப்பதும், கடன் கொடுக்காததும், காராக்ருஹம் புகுவதும், பசியால் நலிப்பதும், தந்தை தாயைத் துடிக்கவிடுவதும், தைவத்தை வைவதும், சித்தம் சிதைப்பதும், சத்திரத்தில் சாவதும், புத்திரர் பறப்பதுமான உத்யோகத்தில் உள்ள ஆஸ்தையன்றோ ப்ராஹ்மணரைப் பிறரெல்லாம் நிந்திக்க நேர்ந்து விட்டது.

இவ்வம்ஸங்களை விவேசித்த வ்யாஸபகவான் பாரதத்தில் ‘பஞ்சமேऽஹநி ஷஷ்டே வா ஸாகம் பசதி ஸ்வே க்ருஹே। அந்ருணீ சாப்ரவாஸீ ச ஸ வாரிசர மோததே।’ என்று தினந்தோறும் 25-நாழிகைக்காவது அஸ்தமநத்துக்காவது ஆகாரத்துக்கு வழியில்லாமல் கீரையையே புஜித்தாலும், கடனில்லாது பிறரிடம் ஸேவக வ்ருத்தி இல்லாதவனே ஸுகம் அநுபவிக்கிறானென்று சொன்னார்.

ப்ரியமுள்ள பெண்மணியின் ஒரு பேச்சுக்குச் செவிகொடுக்க ஒழியாமல் ஓடும்படியன்றோ உத்யோக ஸுகமிருப்பது!

* இது சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.



பத்து மாதம் சுமந்திருந்து பெற்றெடுத்த தாய் தந்தை பரலோகம் போனாலும் பார்த்துவரக் காலம் கிடைப்பதில்லையே. இவ்வாறு அழகான உத்யோகத்தலையினால் ஆதி முதல் நேர்ந்திருக்கும் அந்ய ஸஹவாஸமும் ஸ்வஜந ஸந்யாஸமும் அன்றோ ஸாங்கர்யத்தை ஸௌகர்யமாகச் சொல்லிக்கொடுப்பது. இச்சகவாச சமுத்திரத்தின் அலைகளில் அகப்பட்டு ஆஸ்திகராயிருக்குமவர் அருமையாகுவதை நினைத்தன்றோ ஆஸ்திகரின் மனமெல்லாம் உருகுகின்றது.

உள்ளபடி நாம் உத்யோகத்தைத் தூஷிக்க யத்நித்ததாக ஒருவரும் நினைக்கக்கூடாது. வயிறு வளர்க்கும் பலவழிகள் பாங்காக நிறைந்திருக்க, மறையோர்கள் முழுவதும் ஒரு வழியே சென்றதினால் அன்றோ மற்றவர்கள் அஸூயைக்கு அந்தணர்கள் ஆளானதை அறிவிக்கிறோம். வ்யாபாரம் செய்யுமவர் வேந்தர்களாகுவதை ப்ராஹ்மணர் பார்க்கவில்லையா? கோகுலத்திருந்தவர்கள் கோக்களைக் காப்பாற்றிக் கோடீஸ்வரராக விளங்கவில்லையா? க்ருஷிகளைத்தாம் செய்து குடும்பத்தி லிருப்போர்க்குப் பரலோகத்து ஆநந்தம் பெரிதாகத் தோன்றுமோ?

‘வம்மின் புலவீர்! நும் மெய்வருந்திக் கைசெய் துய்மினோ’ என்று ஆழ்வார் அருளிச்செய்ததுபோல், ‘ஸேவாம் ச்வவ்ருத்திமாஹுர் ப்ராஹ்மணஸ்ய விகர்ஹிதாம். க்ருஷிவாணிஜ்யம் ஆபத்யபி ந த்யஜேத் த்விஜ:’ என்பது முதலான அநேக ஸ்ம்ருதி வாக்யங்களினால், ப்ராஹ்மணன் ஆபத் காலத்தில் க்ருஷி முதலானவற்றைத் தானே செய்யலாமென்று சொல்லியிருக்கிறதை வைத்யநாதீய வர்ணாஸ்ரம காண்டத்தில் விஸ்தாரமாகச் சொல்லிவிட்டு, ஆபத் காலத்தில் க்ருஷி வ்யாபாரங்களைத் தாமே செய்யலாமென்று மாதவீயத்திலும் இருப்பதாக எழுதியிருக்கிறார். வ்யாபாரம் க்ருஷிகளில் வாராத செல்வங்கள் ஸேவகத்தன்மையினால் சேர்ந்துபோகுமோ?

முற்காலத்தில் நமது தேசத்தின் ஒற்றுமையை உத்தேசித்துப் பரலோகம் பாழாக்காது பங்கிட்டு வைத்ததனால் ஜநங்களை ஒன்

ருக்கி, தவறி நடந்ததனுல் அரசர்கள் ஶிக்ஷையுடன் பரலோக ஶிக்ஷையைப் பெரிதாகவே சொல்லி, பயத்தை உண்டாக்கினதாலன்றோ எல்லா ஜநங்களும் ஈஶ்வரனுக்கு நடுங்கி, பிறருடைய போகத்தில் ஒருநாளும் ஆசையில்லாது, தனக்குள்ள போகத்தால் த்ருப்தியடைந்து இருந்தார்கள்.

நம் மஹர்ஷிகள், ஈஶ்வரனுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட நான்கு ஜாதிகளுக்கும் தனித்தனியே ஜீவநோபாயத்தைச் சொல்லி, அநுலோம ஜாதிக்கும் ப்ரதிலோம ஜாதிக்கும்கூட ஜீவநோபாயங்களைச் சோதிடம் சொல்லவும், ஸாரத்யம் செய்யவும், சில்ப வேலை செய்யவும், பாண்டங்கள் செய்யவும், எண்ணெய் ஆட்டுவதும், இம்மாதிரி அவரவர் ஜீவநத்தில் மற்றொருவர் போகாது பாதுகாத்து வந்ததாலன்றோ சண்டைக்குக் காரணமாம் ஜீவநத்தில் குறையாது ஸுகமாக வாழ்ந்து வந்தனர். இதன் விஸ்தாரத்தை வேண்டுவோர் மநு முதலாம் மஹர்ஷிகள் க்ரந்தத்திலும் காணலாம்.

இக்காலம் நாகரிகம் நிலைபெற்ற நகரங்களில் வேசிகள் வ்ருத்திகளை வநிதைகள் கைக்கொண்டார்கள். நாவிதரின் வ்ருத்தியெல்லாம் நாகரிகர் தாமே செய்யவன்றோ ஆரம்பித்துவிட்டார்கள்! இவ்வாறு அவ்யவஸ்தையை அநுபவித்த ஆசையினுலன்றோ நம் நாகரிகர், பலஜாதி பெண்மணியை மணம்புரிய ப்ரயத்நப்படுகின்றனர். ஆகையினுல் நம் நவீநர் நாகரிகமெல்லாம் ஒற்றுமைக்கு உதவியாகாது. முக்யமாய் இவர்கள் ஒற்றுமைக்கு ஆசைப்பட்டால் ஆஸ்திகர்களாயிருக்கும் அனைவரையும் அடியோடு விலக்கலாகுமோ? தத்கால புத்திமான்கள் தலைகீழாயழுதாலும் ஆத்மாவில் அன்புடையார் இவருடனே சேருவார்களோ? இதை யோசித்தன்றோ, ‘அஹோ பத மஹத் கஷ்டம் விபரீதமிதம் ஜகத்। யேநாபத்ரபதே ஸாது: அஸாதுஸ்தேந துஷ்யதி’ என்று அநாகரிகம் நாகரிகமாய், பாபமெல்லாம் புண்ணியமாய்த் தோன்றுவதைக் குறித்து மஹர்ஷி நிர்வேதமுண்டது.

பக்ஷபாத மறியாத பின்னும் சில ப்ரபுக்கள், நம் பெண்டிரைப் புருடர்க்கே அடிமையாக்கிப் பிறரோடு பேசலாகாதென்றும்; அடுத்த வீடு அணுகலாகாதென்றும், கையில் ஒரு காசுமில்லாது சாகும்வரையிலும் சிறைச்சாலையில் வைக்க விதித்திட்டதாக நம் முன்னோராம் மாமுனிவர் மனமெல்லாம் கல்லாக இருந்ததென்கின்றனர்.

[‘அஸ்வதந்த்ரா: ஸ்த்ரிய: கார்யா: புருஷை: ஸ்வைர்திவாநிஶம்’] ஸ்த்ரீகளை இரவும் பகலும் பராதீநர்களாகவே செய்துவிட வேண்டியதென்றும், [‘பிதா ரக்ஷதி கௌமாரே பர்தா ரக்ஷதி யௌவநே ரக்ஷந்தி ஸ்தவிரே புத்ரா ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யமர்ஹதி॥’] ஸ்த்ரீகள் பால்யத்தில் பிதாவின் கீழிருக்கவும், யௌவநத்தில் பர்த்தாவின் கீழிருக்கவும், வார்த்தகத்தில் புத்ரனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் வேண்டுமாதலால், ஒரு நாளும் ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ர்யம் கிடையாதென்றும், ‘பாநம் துர்ஜநஸம்ஸர்க: பத்யா ச விரஹோ(அ)டநம்। ஸ்வப்நோ(அ)ந்யகேஹவாஸஶ்ச நாரீணாம் தூஷணாநி ஷட்’ என்றும், பாரதத்தில் ‘[illegible]’ என்றும், இவ்விதமான நிர்ப்பந்தத்தைப் புருஷர்களுக்கும் விதித்திடலாகாதோ? இவர்கள் பக்ஷபாதிகள் என்று சொல்லக்கூடாதோ? இப்பக்ஷபாதிகளின் வார்த்தைகளைப் புண்யமென்று ப்ரமித்திட்ட நம் பெரியோரைப் புத்திமான்களெனச் சொல்லலாகுமோ? ஆகையினுல் நம் மடந்தையர்கள் வருந்தாது ஸ்வதந்த்ரராய்ச் சுகமேந்தி மனங்களிக்கச் செய்யவேண்டியதன்றோ நாகரிகத்தில் முக்யமானதென்கிறார்கள்.

நம் நாகரிகர் ஸ்த்ரீகளிடம் அன்புடனே அளித்துவரும் ஸ்வாதந்த்ர்யம் இவ்வளவென்பதை நாம் நன்குக ஆராய வேண்டும். ஸர்வ ஸ்வாதந்த்ர்யம் ஸர்வேஶ்வரனுக்கன்றோ இருப்பது. அவனும் பக்தனுக்குப் பராதீநனுய்த் தூது செல்வதையும் தேரோட்டுவதையும் செய்திட்டானன்றோ? ஸ்வதந்த்ரராய் இருந்தவரும்

புருஷர்கள் எல்லாரும் அரசரின் ஆக்ஞைக்குக் கீழ்ப்படிந்தன்றே இருந்துவருகிறார்கள். பராதீநராய் இருக்கும் பாலர்கள் பெரியோரால் பேரின்பம் அநுபவிக்கப் பார்த்ததில்லையா? ஸ்வதந்த்ரர்க்குத் தான் ஸுகமிருப்பதோ?

இது நிற்க: அவனியெலாம் ஆள்கின்ற அரசர்களுங்கூட, புத்திமான்களான பல மந்த்ரிகளுக்குப் பராதீநமா யிருப்பதைப் பார்த்து வருகிறோம். தன்போன்ற பிறருக்குத் தான் அடிமையாய்நின்று தவித்துச் செய்யும் உத்யோகத்தை நல்லதோர் நாகரிகமெனச் சொல்லும் நவீநர்கள், தாரத்தின் விஷயத்தில் ஸ்வதந்த்ரமா யிருப்பதையே நாகரிகமென நவிலுவார்களோ? '[illegible]' என்றும், '[illegible]' என்கிற படியே சஞ்சல ஸ்வபாவமுள்ள ஸுந்தரியாம் பெண்மணிக்கு ஶாஸ்த்ரத்தில் இல்லாத ஸ்வாதந்த்ரியம் அளிப்பதனால் புத்ரர்கள் வ்ருத்தியாகி தேஶங்கள் தழைத்தாலும், பலவிதமாம் சண்டையினால் பூலோக முழுதும் அழிந்துபோய் சுந்தோப சுந்தர்போல் நிந்தைக்கும் ஆளாகுமே.

பால்யத்தில் போஷித்துப் பணமிழந்த பர்த்தாவைப் பெண்டிர்கள் பேணாது புறம்பாகப் போவதுவும் ஓர் நாகரிகமாகுமோ? முன் வயதில் பார்யையுடன் பாலுண்ட பர்த்தாக்கள் பின்வயதில் பசியினால் நசிப்பதும் ஓர் நாகரிகமோ? கணவனையே காமுறும் கற்புடையார் மதிமுகத்தைக் காமுகர்கள் கண்ணாரக் கண்டு உகப்பதும், கண்மணியின் கைபிடித்துக் கடலோரம் நடப்பதும், கணவன் அதைக் கண்குளிரக் கண்டு உள்ள முகப்பதும் கூர்மதிகள் நாகரிகமோ?

'[illegible]' [என்னுடைய பத்நியை பரபுருடன் ஸ்பர்சித்ததை காட்டிலும் இராஜ்ஜிய மிழந்தும் அறுபதாயிரமாண்டு அருந்தவம் புரிந்து பெற்றெடுத்த பிதாபோனாலும் பெரிதல்ல] வென்று புருடோத்தமன் சொன்னதும், 'பர்துர்பக்திம் புரஸ்க்ருத்ய ராமாதந்யஸ்ய வாநர । நாஹம் ஸ்ப்ரஷ்டும் ஸ்வதோ காத்ரம் இச்சேயம் வாநரோத்தம ॥' [பர்த்தாவைத் தவிர, பரபுருஷன் தேஹத்தைப் பதிவ்ரதையின் தர்மத்தைப் பூஜிக்கும் நான் தொடமாட்டேன்] என்று சொன்ன பதிவ்ரதா ஶிரோமணியின் பெருந்தன்மையும் நம் புதுமதத்துப் புத்திமான்கள் புத்திக்குப் பொருந்தியிருக்குமோ?



நம் பெண்டிருக்குப் பாரதந்த்ர்யம் போக்கிவரும் புத்திமான்கள், புருடரெல்லாம் பலியுண்ட போர்க்களத்தின் முன்னிலையில் போர்வீரர் நின்றதுபோல் பெண்மணியை நிறுத்திவைத்தால் ஒரு வீரர் சாகாது, பல ப்ரஜையின் வ்ருத்தியுடன் பஞ்சசரன் பெரு யுத்தம் நடந்திருக்குமே. அந்தோ! அழிந்துபோன போர் வீரர் அத்ருஷ்டத்தின் குறைவன்றோ அக்காலம் ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ர்யம் கொடுக்காமற்போனது. பதிவ்ரதா தன்மையின் பெருமையினாலன்றோ நம் தேஶத்து ந்யாய ஸ்தலங்களெல்லாம் தம்பதிகள் விவாதத்திற்குப் புறம்பாக இருக்கின்றது. கொடுமையெல்லாம் குடிகொள்ளும் இக்கலியுகத்திலும் "கண்டா ரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானையல்லா லறியாக் குலமக" ளாம் பெண்மணிகள் நம் தேஶத்தில் மாத்ரமன்றோ பரலோகப் பயனைப் பெரிதாகப் பேணுவதை நாம் பார்த்துவருகிறோம்.

இது நிற்க: பெண்டீர்கள் விஷயத்தில் நம் மஹர்ஷிகள் செய்திருக்கும் பக்ஷபாதத்தையும் சற்று கவனிப்போம். மநுஸ்ம்ருதி 3-ம் அத்யாயம்:—'பித்ருபிர் ப்ராத்ருபிஶ்சைதா: பதிபிர் தேவரைஸ்ததா । பூஜ்யா பூஷயிதவ்யாஶ்ச பஹுகல்யாண மீப்ஸுபி: । யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே ரமந்தே தத்ர தேவதா: । யத்ரைதாஸ்து ந பூஜ்யந்தே ஸர்வாஸ்தத்ராபலா: க்ரியா: ॥ ஶோசந்தி ஜாமயோ யத்ர விநஶ்யத்யாஶு தத்குலம் । ந ஶோசந்தி து யத்ரைதா வர்த்ததே தத்தி ஸர்வதா ।

ஜாமயோ யாநி கேஹாநி ஶபந்த்யப்ரதிபூஜிதா: । தாநி க்ருத்யாஹதாநீவ விநஶ்யந்தி ஸமந்தத: ॥ தஸ்மாதேதா: ஸதா பூஜ்யா: பூஷணாச்சாதநாஶநை: । பூதிகாமைர் நரைர் நித்யம் ஸத்காரேஷூத்ஸவேஷு ச ॥ ஸந்துஷ்டோ பார்யயா பர்த்தா பர்த்ரா பார்யா ததைவ ச । யஸ்மிந்நேவ குலே நித்யம் கல்யாணம் தத்ர வை த்ருவம் ॥ யதி ஹி ஸ்த்ரீ ந ரோசேத பமாம்ஸம் ந ப்ரமோதயேத் । அப்ரமோதாத் புந: பும்ஸ: ப்ரஜநம் ந ப்ரவர்த்ததே ॥ ஸ்த்ரியாம் து ரோசமாநாயாம் ஸர்வம் தத்ரோசதே குலம் । தஸ்யாம் த்வரோசமாநாயாம் ஸர்வமேவ ந ரோசதே ॥' என்று 8 - ஶலோகத்தினால் க்ஷேமத்தைக் கோரிநிற்கும் குடும்பிகள், ஸ்த்ரீகளைப் புடவை பூஷணங்களால் பூஜிக்க வேண்டு மென்றும், ஸ்திரீகள் ஸந்தோஷிக்காத வீட்டில் செய்யும் தர்மமெல்லாம் வீணாகிற தென்றும், ஸ்த்ரீகள் துக்கித்தால் குலம் நசித்துவிடு மென்றும், அவர்கள் ஸந்தோஷித்தால் குலம் வ்ருத்தியடையு மென்றும், ஸ்த்ரீகள் வருத்தப்பட்டு வைவதால் அந்த வம்சமே சூன்யம் வைத்த வீடுபோல சூன்யமாய் விடு மென்றும், இவ்வாறு பலபடியும் அவர்களை எப்போதும் ஸந்தோஷிக்கச் செய்வது அவஶ்யமென்று சொல்லி, குலம் கெட்டுப்போகாம லிருப்பதை உத்தேசித்து எப்போதும் பிறர் வீட்டில் வஸிக்கலாகா தென்றும், அயோக்யர்களுடன் பேசக்கூடா தென்றும், சொன்னால் அது பக்ஷபாதமாகுமோ? அப்படியானால் 'அர்த்தஸ்ய ஸங்க்ரஹே சைநாம் வ்யயே சைவ நியோஜயேத் । ஶௌசே தர்மேऽந்நபக்த்யாம் ச பாரிணாஹ்யஸ்ய சேக்ஷணே ॥' என்று வீட்டுக்குட்பட்ட ஸர்வ த்ரவ்யங்களுடைய லாப நஷ்டங்களை ஸ்த்ரீகளைக் கவனிக்கச் சொல்லி 'க்ருஹிணீ' என்று பெயர் கொடுப்பார்களா?

இதமாத்ரமா? 'நாஸ்தி ஜபதபோ ஹோம தீர்த்தயாத்ரா வ்ரதோபவாஸ: । ஸ்த்ரீணாம் பதிவ்ரதாநாம் து பத்யுஶ்ஶுஶ்ரூஷணம் விநா ॥ ஜபஸ்தபஸ்தீர்த்தயாத்ரா ப்ரவ்ரஜ்யா மந்த்ரஸாதநம் । தேவதாராத-



நம் சைவ ஸ்த்ரீஶூத்ர பதநாநி ஷட் ॥' என்று ஒருவித புண்யமும் செய்ய வேண்டா மென்றும், செய்தால் நாகமென்றும் சொன்னார்களே. இதுதவிர 'வாண்யாஸ்யாயா வஹாரிண்யா: ஐதா ஶுஶ்ரூஷயைவ ஹி ॥' என்று பாரெங்கும் தீர்த்தமாடி, பட்டினியாய்க் கஷ்டப்பட்ட புண்ணியத்தில் பாதிகொடுத்து, தன் தேஹத்தின் பாதியெனப் பாதுகாக்கும்படியல்லவோ பர்த்தாவுக்கு விதித்திட்டார்கள். பரபுருஷனை நாடும் பெண்டிரையும் கூட அப்புருடன் பலபடியும் ப்ராயஶ்சித்தம் பண்ணிப் பாதுகாக்க விதித்திட்டார்கள்.

இவ்விதமாய்க் கடுகளவு கவலையில்லாமல் புடவை பூஷணமளித்துப் பூலோக சுகத்துடனே புண்ணியத்தைப் பங்கிட்டுப் பரலோகம் வாழ்விக்கும் பர்த்தாவுக்குப் பணிவிடையைச் செய்து ப்ரியையா யிருக்க விதித்திட்ட மஹர்ஷிகளன்றோ நம் புத்திமான்களுக்குப் பக்ஷபாதியாகிறார்கள்.

இவ்வாறு ஸ்த்ரீகளின் ஸௌகர்யத்தை நினைத்தன்றோ வ்யாஸபகவான், ஸ்த்ரீகளாய்ப் பிறந்தார்கள் ஸுகமாக வாழ்ந்திட்டு வீடு பெறுவதை உத்தேசித்து 'ஸ்த்ரிய ஸாது:' என்று ஸ்த்ரீஜநத்தை ஶ்லாகித்துப் பேசினார்.

(இன்னும் வரும்.)

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசாரியர்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## ஆழ்வார் ஆசார்யர்கள் திருநக்ஷத்ர ப்ரவசந ஸபை.

## த்விதீய வார்ஷிக மஹோத்ஸவம்.

இது, சென்ற விக்ருதிஸூ பங்குனிமீ 30உ ஞாயிற்றுக்கிழமை கோமளேசுவரன்பேட்டையில் நடைபெற்றது. காலை 7-30 மணிக்கு ஸபை கூடினது. ஸபாத்யக்ஷர் அக்ராஸநம் வஹித்தார். விக்ருதிஸூத்திய வருஷாந்த அறிக்கை படிக்கப்பட்டு அங்கத்தினரால் அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு ஸபாத்யக்ஷர் இந்த ஸபையின் நோக்கைப்பற்றியும், திருநக்ஷத்ரங்கள் அவஶ்யம் கொண்டாடப்படவேண்டும் என்னும் விஷயத்தைப்பற்றியும் உபந்யாஸம் செய்தருளினார். பிறகு ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமி, தற்கால மதஸ்திதியைப்பற்றியும் அதைச் சீர்திருத்தவேண்டிய விஷயத்தைப்பற்றியும் உபந்யாஸம் செய்தருளினார். பிறகு ஸ்ரீ. உப. வித்யாநிதி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, நாம் எல்லோரும் ஶாஸ்திரத்தில் விதிக்கப்பட்டபடி நடக்க ப்ரயத்நப்படவேண்டும் என்றும், அப்படி நடக்காததினால் தான் இந்த ஸ்திதி வந்ததென்றும் உபந்யஸித்தருளினார். அக்ராஸநாதிபதிக்கும் உபந்யாஸகர்களுக்கும் வந்தநம் ஸ்ரீ. உப. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யரால் அளிக்கப்பட்டபிறகு 10-45 மணிக்கு ஸபைகலைந்தது.

த்விதீய வார்ஷிக உத்ஸவ விஷயமாக ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய நாடகம் அபிநயிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடியே சித்திரைமீ 6உ ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு ம-ா-ா-ஸ்ரீ-ஸெல்லா குருஸாமி செட்டியாரவர்களின் ஸௌந்தர்யமஹால் கட்டடத்தில் அபிநயிக்கப்பட்டது. 5-மணிக்கே ஹால் முழுவதும் நிறைந்துவிட்டது. கொஞ்சம் காலங்கழித்து வந்த ஸ்வாமிகள் அநேகர் நின்று பார்க்கும்படியாயிற்று. 500-ஸ்வாமிகளுக்குமேல் ஸேவை ஸாதித்தார்கள். ஸுமார் 100-ஸ்திரீகளும் வந்திருந்தார்கள். முதல் தடவையாயிருந்தாலும் நாடகம் நன்றாய் அபிநயிக்கப்பட்டதென்றும், அதில் குரு சிஷ்ய காட்சி, டம்ப தர்ப்ப காட்சி, புருஷன் ஸங்கல்பன் காட்சி மிகவும் நன்றாயிருந்ததென்றும் எல்லோரும் மிகவும் கொண்டாடினார்கள். 9-15 மணிக்கு ஆட்டம் முடிவு பெற்றது. ஸ்ரீ. உப. வீ. வீ. ஸ்ரீநிவாஸய்யங்கார் வரமுடியாததனால் ஸ்ரீ. உப. எஸ். வரதாசார்ய ஸ்வாமி இந்த நாடகத்தை, இப்படி நன்றாய் அபிநயித்ததற்கெல்லாம் ஸபாத்யக்ஷரின் ஞானஸௌலப்யமொன்றே ப்ரதாந காரணமென்று புகழ்ந்து பேசி, கட்டடத்தைக் கொடுத்து உதவி புரிந்த ம-ா-ா-ஸ்ரீ ஸெல்லா குருஸாமி செட்டியாருக்கும் மற்றும் பலவித உபகாரம்செய்த ஸ்ரீ. உப. வீ. வீ. ஸ்ரீநிவாஸய்யங்காருக்கும் வந்தநம் அளித்தார். ஸபாத்யக்ஷரால், வந்திருந்த ஸ்வாமிகளுக்கும் ஸ்ரீ. உப. வரதாசார்யருக்கும் வந்தநமளிக்கப்பட்டு ஸபை கலைந்தது.

காரியதர்ஶி.

161406
... 008.

ஸ்ரீ:

## கண்ணில் "படலம் உரிப்பது."

கண்படலம் (புரை) என்பது வயதாய்க்கொண்டு வருகிறவர்களுடைய கண்களில் மிகவும் ஸாதாரணமாய்க் காணும் ஒரு வியாதி. இந்த வியாதி காணும்போது, கண்ணின் கருவிழியின் உட்புறத்தில் கனத்த மாசு ஒன்று படருகிறது; இதனால், இது காணும் நபருக்குக் கண் தெரிவதில்லை. இந்த மாசை அநேகமாய்ப் பூவென்று சொல்லுகிறதுண்டு. இந்தப் பூ பூர்த்தியாய் விழுந்திருக்கும்போது, கருவிழியானது, அதாவது கண்ணில் உருண்டை வடிவாயுள்ள கறுத்த பாகமானது வெண்ணிறமாகவோ சாம்பல் நிறமாகவோ மாறியிருப்பதைப் பார்க்கலாம்; கண்ணின் மிகுதி பாகமானது நன்றாயிருப்பதாகக் காணப்படுகிறது. இந்த மாசு கருவிழியில் இருக்கிறவரையிலே, இந்த வியாதி கண்ட நபருக்குக் கண் தெரியாது; அதைக் கருவிழியிலிருந்து அப்புறப்படுத்தி அது கண்ட நபருக்குத் தகுதியான மூக்குக்கண்ணாடிகளும் கொடுத்தால், அவர் ஏறக்குறைய முன்போலவே வஸ்துக்களைப் பார்க்கக்கூடும்.

2. இந்த வியாதியை சொஸ்தம் செய்வதற்கு இரண்டு வெவ்வேறு வகையான வைத்தியமுறைகள் அநுசரிக்கப்படுகின்றன. இவைகளில் ஒன்று ஐரோப்பிய வைத்தியத்தில் அப்பியாசமுள்ள டாக்டர்களாலும், மற்றொன்று வைத்தியர்களாலும் ஹக்கீம்களாலும் அநுசரிக்கப்படுகிறது. ஐரோப்பிய வைத்தியமுறைப்படி கண்ணுக்குள் இருக்கும் மாசு அல்லது பூவானது கண்ணிலிருந்து பூர்த்தியாய் வெளியில் எடுத்துவிடப்படுகிறது; வைத்தியர்களும் ஹக்கீம்களும் அநுசரிக்கும் முறைப்படியோ, அது கருவிழியிலிருந்து கண்ணின் இன்னும் ஆழமான பாகத்துக்குப் போய்விடும்படியாய்த் தான் உள்ளே தள்ளப்படுகிறது; அதை இனி பார்க்கமுடியாதிருந்த போதிலுங்கூட, அது அங்கேயிருந்துகொண்டு அதிக கெடுதியை உண்டாக்கக்கூடும்; அப்படி அடிக்கடி கெடுதியையும் உண்டாக்குகிறது. ஆகவே, ஒரு முறையின்படி, வியாதியடைந்த பாகம் பூர்த்தியாய் அப்புறப்படுத்தப்படுகிறது; ஆனால், மற்றொரு முறையின்படியோ அது இன்னும் ஆழமான ஒரு இடத்தில் மறைத்து மாத்திரம் வைக்கப்படுகிறது; அது அவ்விடத்திலிருந்துகொண்டு மற்ற பாகங்களில் வியாதியை உண்டாக்கக்கூடியதாயிருப்பதுமல்லாமல், அநேகமாய்ப் பார்வையை அடியோடு கெடுத்தும் விடுகிறது.

3. கண்படலத்துக்காக வைத்தியர்களாலும் ஹக்கீம்களாலும் வைத்தியம் செய்யப்பட்ட குருடர்களில் எத்தனைபேர் தங்கள் கண்பார்வையை மறுபடியும் அடைகிறார்களென்பதைக் கண்டுபிடிக்கும் பொருட்டு, சென்ற சில வருஷகாலமாக சென்னப்பட்டணம் கவர்ன்மெண்ட் கண்ணாஸ்பத்திரியில்

வெகு ஜாக்கிரதையாக ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வியாதிஸ்தர்களில் எண்ணூற்றுமுப்பத்தாறு பேரைப் பரிசோதித்துப் பார்த்ததில், 176 பேர்தான் பிரயோசனகரமான (6/60-ம் அதற்கு அதிகமானதுமான) பார்வையை அடைந்தார்களென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; அதாவது, அப்படி வைத்தியஞ்செய்யப்பட்டவர்களில் 100 பேருக்கு சுமார் 21 பேர்தான் தெருக்களில் தனியாய் நடந்துபோவதற்கும் தங்கள் அலுவலைப் பார்த்துக்கொண்டிருப்பதற்கும் போதுமானபடி சரியான பார்வையை அடைந்தார்கள். இப்படிக்கல்லாமல், கண்படலம் கண்ட நூறு பேருக்கு சாதாரண திறமையுள்ள ஒரு ஸர்ஜனால் ஐரோப்பிய முறைப்படி வைத்தியம் செய்யப்பட்டால் ஏறக்குறைய 90 பேர் நன்றாய்ப் பார்க்கக்கூடியவர்களாயிருப்பார்கள்; மேலும், பாக்கி பத்துபேரில் அநேகர் இந்த வைத்தியத்தினால் சிறிதளவமட்டில் நன்மையை அடைவார்கள். ஆகையால், வைத்தியர்களாலும் ஹக்கீம்களாலும் வைத்தியம் செய்யப்பட்டிருந்த 836 பேர்களுக்கும் ஐரோப்பிய முறைப்படி வைத்தியஞ் செய்யப்பட்டிருந்தால், 176 பேருக்குத்தான் கிடைத்திருந்தது போலல்லாமல் 752 பேருக்குப் பிரயோசனகரமான பார்வை கிடைத்திருக்கும். மேலும், பார்வையில்லாமல் விடப்பட்டவர்கள் 660 பேராயிராமல் 84 பேராகத்தான் இருப்பார்கள்.

4. மேலே கண்ட சங்கதியைப் படிக்கிறவர்களெல்லாரையும் அதைப் பற்றித் தங்களுடைய சிநேகிதர்களுக்கு அயலார்களுக்கும் சொல்லும்படிக்கும் கண்படலத்திற்காக வைத்தியர்களும் ஹக்கீம்களும் செய்யும் வைத்தியமானது நூற்றுக்கு 79 வீதம் பிரயோசனமில்லாமற்போகிறதுடன், அதனால் பல தடவைகளில் நிலையானதும் நிராகதமான குருட்டுத்தனம் உண்டாகிறதென்றும் ஒவ்வொருவருக்கும் எச்சரிக்கை செய்யும்படிக்கும் கேட்டுக்கொள்ளலாகிறது.

5. அநேகம் பேர் பிரக்ஞை தப்பியிருக்கும்போதாவது அவர்களுக்கும் கடுமையான யாதொரு வியாதி கண்டிருக்கும்போதாவது எரிச்சலை உண்டாக்கும் மருந்துகளை அவர்களுடைய கண்களில் அறிவில்லாதவர்கள் போடுவதனால், அவர்கள் குருடர்களாய்ப் போய் விடுகிறார்களென்றும் சென்னபட்டணத்திலுள்ள ஆஸ்பத்திரியில் அடைந்த அநுபவத்தினால் தெரியவருகிறது. இப்படிச்செய்வது முழுவதும் புத்தியில்லாத்தனம்; ஏனென்றால், இந்த வைத்தியத்தினால் எவ்விதமான பிரயோசனமும் உண்டாகாமலிருப்பதோடு, அந்த வியாதிஸ்தன் பிழைக்கிறபட்சத்திலே, அவனுடைய ஆயுட்கால முழுவதுக்கும் குருடனாயும் விடுவான். பிரக்ஞை தப்பியிருக்கும் மனிதர்களின் கண்களைப் பொங்கக்காய்ச்சியிருக்கும் ஜலத்தினால் கழுவி, அவைகளில் ஆமணக்கெண்ணெயை விடவேண்டும்; ஆனால், வேறே மருந்து போடும்படி திறமையுள்ள வைத்தியரொருவர் சொன்னாலொழிய, அப்படிச் செய்யக்கூடாது.

(பப்ளிஸிடி பீரோ.)

OFFICE OF THE [illegible] OF BOOKS
18 AUG 1920
MADRAS.

ஸ்ரீ.

ஸ்ரீமதே [illegible] நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 10.] ரௌத்ரி௵ ஆனி௴ [ஸஞ்சிகை 9.

“ [illegible] ” [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

டர்க்கி எனும் அதிராஜ்யம் போய்விட்டது. அதனுடைய அதிகபாகங்கள் அந்யர்களால் ஆக்ரமிக்கப்பட்டன. அதற்கு இப்போது மிகுந்து நிற்பது அதனுடைய பூர்வாவஸ்தையை ஸ்மரிப்பிக்கப்போதுமானதல்ல. நடந்த ஐரோப்பிய யுத்தத்தில் டர்க்கி ராஜாங்கத்தார் ஜர்மானியருடன் சேர்ந்து தோல்வியடைந்தனர். அதனுடைய பலமாக அவர்களுக்கு இந்தத் துர்த்தசை நேரிட்டது. இந்தியா தேசத்து ஸேனைகளால் டர்க்கி தோல்வியுற்றது. இந்திய ஸேனைகளில் மஹம்மதியர் ஏராளமாய் இருந்தார்கள். மஹம்மதிய அதிராஜ்யமான டர்க்கிக்கு இந்நிலையுண்டானதற்கு அவர்கள் ஸஹகரித்தார்கள். அதற்காக இப்போது அவர்கள் மிகவும் வருந்துகின்றார்கள். மஹம்மதியர்களுடைய புண்ய ஸ்தலங்கள் பூர்வம் டர்க்கியினுடைய ஆளுகைக்குள் அடங்கின. அதனால் டர்க்கியினுடைய அதிராஜனை மஹம்மதியர்கள் ‘காலிப்’ என்றுசொல்லிக்கொண்டு அவனிடம் குருத்வம் பாராட்டினார்கள். மஹம்மதியர்களுடைய மதக்ரந்தங்கள் அவர்களுடைய புண்ய

AUG 1920
MADRAS



பூமிகள் அந்யர்களுடைய அரசாட்சியின் காரணத்தை நிஷேதிக்கின்றன. அந்த நிஷேதம் இப்போது பலிக்காமற்போயிற்று.

இந்திய மஹம்மதியருடைய மனவருத்தம் புத்தி பூர்வமாயிருக்கின்றது. அவருடன் தல்ய யோகக்ஷேமபாக்களான ஹிந்துக்களும் அதற்காக அநுதபிக்கின்றார்கள். இது ந்யாயமே. வேதாந்த ஸம்ப்ரதாயப்படி, ஸர்வேஶ்வரன், ஸர்வத்ர அந்தராத்மாவாயிருக்கின்றான். ஆதலால், நம்மவர் ஸர்வத்ர அநுகூலபுத்தி பண்ணக்கடவர். தேசாந்தரஸ்தர்களிடமும் மதாந்தரஸ்தர்களிடமும் அநுகூலபுத்தியானது வேதாந்தங்களில் விதிக்கப்பட்டுளது. அஸ்மத் ஸம்ப்ரதாய ஶிஷ்டர்கள், '[illegible] நிஶ்ரயஃ ॥' எனும் ப்ரமாணத்தை முக்யமாக அவலம்பிக்கத்தக்கவர்கள். இந்த யோசனை தேசாந்தர மதாந்தரஸ்தர்களுக்கு இதற்கு முன்னிருந்ததாக நினைக்க ஹேதுவில்லை. இப்போது அது உண்டென்று சொன்னாலும், வ்யவஹாரத்தில் அது பலிக்கக் காணோம். 'யேऽப்யந்யதேவதா பக்தா யஜந்தே ஶ்ரத்தயாந்விதாஃ। தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம் ॥' என்கிறபடியே நமக்குக் கிடைத்த பகவதுபதேசம் அவர்களுக்குக் கிடைத்திலது.

தேசாந்தராக்ரமணம் சரித்ரப்படிப் பலர்க்கு லீலையாயிருந்தது. படையெடுக்கப்பட்ட தேசவாஸிகளுக்கு நேர்ந்த துன்பங்களைப் படையெடுத்தவர்கள் பராமர்ஶித்தார்களில்லை. பார்ஸி தேசத்தார், க்ரீக் தேசத்தார், ரோமதேசத்தார், மஹம்மதியர்கள், ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் முதலான யாவரும் இத்தொழிலில் ரமித்தவர்களே. கஜனி ராஜனான மாமூது என்பவன் இந்தியாவைப் பலதரம் படையெடுத்து, தேசமன்னர்களைத் தோற்கச்செய்து, தேவாலயங்களை இடித்து, பகவத் விக்ரஹங்களை உடைத்து, அங்குள்ள ஸம்பத்துக்கள் யாவையும் சூறையாடிப் போனான். இத்தகைய தொழில் புரிந்த நிமித்தம் அந்த ராஜனை மஹம்மதியர் புகழ்ந்தனர். ஹிந்துக்களுக்கு அவனால் உற்ற துன்பம் மஹம்மதியர் மதத்தை க்லேஶித்திலது. சிங்கத்துக்கு விளையாட்டு சுண்டெலிக்கு ப்ராணஹாநியென்பர். ஹிந்துக்களுக்கு யுத்த முறை



களில் ஸாமர்த்யமில்லாத விஷயமும், அவர்களுக்குள் ஒற்றுமையில்லாமையும் மஹம்மதியர்க்கு விசதமாயிற்று. ஆதலால் மஹம்மத் கோரி எனும் அரசன் பிற்காலங்களில் இந்தியாவைப் பலதரம் படையெடுத்து, ஜனங்களை ஹிம்ஸித்து, அவர்கள் பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றான். முடிவில் ஹிந்துக்கள் அவனால் ஸ்வராஜ்யங்களை இழந்துவிட்டார்கள். அந்த முறையில் அவர்கள் பட்ட கஷ்டம் எழுதமுடியாது. ஸ்ரீராமன் பிறந்த ஸ்தலமும் ஸ்ரீக்ருஷ்ணன் அவதரித்த இடமும் இப்போது எவ்வண்ணம் இருக்கின்றன? காசியில் பூர்வ விஶ்வநாதன் கோவிலும் பிந்துமாதவன் கோவிலும், ப்ரயாகையில த்ரிவேணிஸங்கமும் எந்த ஸ்திதியை அடைந்தன? தென்னிந்தியா வரையில் இந்தியா முழுதும் மஹம்மதியர் நமது தேவாலயங்களைச் சிதைத்த க்ரமங்கள் யார்க்குத்தான் தெரியாது? அவற்றை ஹிந்துக்கள் மறந்தார்கள். '[illegible] யவநாதிபிஃ ஜகதிதம் [illegible]' என்று ஸ்ரீ நிகமாந்தார்யன் வெளியிட்டார். '[illegible] பீஷணாஃ' என்று சொன்னார் கவிவேங்கடாசார்யர்.

ஆனாலும், '[illegible] ॥' என்கிறபடியே, தத்வவித்துக்கள் ஹிம்ஸகர்களும் அஜ்ஞாநத்தால் தம்மை த்வேஷித்து ஹிம்ஸிக்கின்றார்கள் என்று அறிந்து, அவர் விஷயமாக சோகிக்கின்றனர். த்வேஷம் த்வேஷத்தால் ஶமிக்கமாட்டாது. ப்ரியத்தால் ஶமிக்குமென்பதும் முற்றிலும் உண்மையல்ல. தத்வவித்தானவன், மற்றொருவன் தன்னிடம் பாராட்டும் த்வேஷமும், அதன் பலனான ஹிம்ஸையும், பர்யவஸாநத்தில கர்மாத்யக்ஷனுடைய ஸங்கல்பத்தைப் பொறுத்ததென்று பாவித்திருக்கக்கடவன்.

மஹம்மதியர்க்கு உற்ற மனவருத்தம் பாஷாந்தர பயிற்சியுள்ள நம்மவர்களை வாதிப்பது ஸரியெனச் சொல்வோம். நம்மவர், மஹம்மதியர் விரோதங்களை அங்கீகரிக்காமலே, மஹம்மதியர்க்காக வருந்துகின்றனர். இத்தகைய மதிவிசேஷம் அவர்க்கு ஸ்வஜனங்களிடம் உண்டாகாமலிருப்பது என்ன காரணமோ? வர்ணாஶ்ரமிகள் ஸ்வதர்மங்களை அநுஷ்டித்தால, அவர்களிடம், பாஷாந்தர

பரிசய துஷ்டசித்தர்கள் த்வேஷத்தை ஆவிஷ்கரிப்பானேன்? ஶாஸ்த்ரங்களைக்கொண்டு ஈஶ்வராஜ்ஞா கைங்கர்யங்களைப் புத்தி பூர்வகமாய் நிர்ணயித்து ஸ்வதர்மங்களை அநுஷ்டிப்பதைத் தாம் விட்டதுமன்றி, விடாதவர் பக்கல் விரோதம் வைப்பதேன்? உபநிஷத்துக்களில் வேண்டிற்றவைமட்டும் அங்கீகரித்துக்கொண்டு, மற்ற பாகங்களை விட்டகலும் ஸமாஜத்தினர்களில் யாம் சேரோம். உபநிஷத்துக்கள், கீதை, ப்ரஹ்மஸூத்ரம், இவற்றை ப்ரமாணமாகக்கொண்டவர்கள் நித்யகர்மங்களை விட ஶக்தரல்லர்கள். கர்மகாண்டம் கர்மங்கட்காகவே ஏற்பட்டது. இப்படி ஶாஸ்த்ரவஶ்யர்களாய் ஸ்வகர்மாநுஷ்டாநம் பண்ணுமவர்களுடைய விஶ்வாஸமானது, மஹம்மதியர்கள் கொண்ட ஸ்வமத விஶ்வாஸத்தைக்காட்டிலும் கெட்டதோ? மக்காவும் மெதினாவும் இப்போது மஹம்மதியர் ஆளுகைக்குட்பட்டன. இதர மஹம்மதிய ஸ்தலங்கள், அங்ஙனல்லாதபோதும், யதாவஸ்தித ஸ்திதியில்தான் நிற்கின்றன. ஸ்ரீராமன் அவதரித்த இடம் கோரி; மஹம்மதிய ஜனங்கள் அங்கே புதைப்பட்டிருக்கின்றனர். மதுரையும் அப்படியே; காசியும் அப்படியே; ப்ரயாகை முதலான புண்ய பூமிகள் ஸ்வரூபநாசமுற்றுக் கிடக்கின்றன. வர்ணாஶ்ரம தூஷகர்களின் மனஸில் இந்த நிலை கொஞ்சமாகிலும் பற்றுகின்றதோ? துருஷ்கர்களிடம் பண்ணும் ஸ்நேஹத்தை, அவர்கள் பூர்வாசாரத்தை விட்டகலாத ஸ்வஜனங்களிடம் பண்ணினால் எக்கேடு விளையுமோ?

தேசத்தின் ஒற்றுமைக்காக வர்ணங்கள் நசிக்கவும் ஆஶ்ரமங்கள் குலையவும் வேண்டுகின்றோமென்பவர், தேசத்தின் ஒற்றுமைக்காக மஹம்மதியரையும், கிறிஸ்தவர்களையும், பௌத்தர்களையும், இதர மதஸ்தர்களையும் எவ்வண்ணம் ஒன்றுபடுத்தப்போகின்றனர்? அவர்கள் மதப்ரஷ்டர்கள் ஆகலாம். அப்போதும் யாவரும் யாகசம்ஸங்களிலும் ஒருமிக்கமாட்டார்களே! ஆகவே, அவர்கள் ஸ்வயம் பதிதர்களாகி நின்றபோதிலும், பூர்வாசாரங்களை விஶ்வஸிக்கின்ற ஸ்வஜனங்களை த்வேஷிப்பானேன்? தூஷிப்பானேன்? நிந்திப்பானேன்? ஸர்வாம்ஶங்களிலும் ஒற்றுமைகூடாமல் நிற்கும் மஹம்மதியர்களும், கிறிஸ்தவர்களும், ராஜாங்க விஷயத்தில் நம்மவர்களுடன் ஒன்ற இசைவார்களாகில், வேதமார்க்க விஶ்வாஸிகளும் பதிதர்களும் அதே விஷயத்தில் ஒன்ற இசையமாட்டாரோ?



முப்பது நாற்பது ஸம்வத்ஸரங்களுக்கு முன் ஹிந்துக்களெனப்பட்டவர்களுக்குள் விவாதாம்ஶம் ஒன்றும் இல்லை. ஸர்வாம்ஶங்களிலும் ஒற்றுமையே நிலைநின்றது. அவ்வவனுடைய தொழிலை அவ்வவன் தேசநன்மைக்காகச் செய்தானாகில், ஒருவனிடம் மற்றொருவன் பொறாமைகொள்ள இடமில்லை. விவாதாம்ஶங்கள் இல்லாமலிருக்கையில், யாதோ ஒரு உத்தேஶத்தை முன்னிட்டுக்கொண்டு அஜ்ஞர்களை மதிமயக்கி, இல்லாததை உள்ளதுபோல்காட்டி ஜனங்களைப் பிரிக்கவல்லவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு, ஸ்வயம் கெட்டுப் பரர்களைக் கெடுப்போர்களால், ஒற்றுமை நீங்கினதுபோல் ஒரு அவஸ்தையானது தத்காலத்தில் உண்டுபண்ணபபட்டிருக்கின்றது. பல ஸஹஸ்ர ஸம்வத்ஸரங்களாக வர்ணதர்ம குலதர்ம ரக்ஷகங்களாக ஏற்பட்டு, ப்ராஹ்மண்யத்தை நிலைக்கச்செய்த ஆத்மகுணங்களையும் ஸதாசாரங்களையும் துறந்தவர்கள் துறக்காதவரைத் தூஷித்தல் அஸூயாபாவத்தில் அங்குரித்து நிற்கின்றது. ஆஹாரஶுத்தி விலகினால் ஸத்வஶுத்தி ஜநிக்காதென்றும், ஸத்வஶுத்தியின்றி மோக்ஷோபாயமாய் நின்ற நிரந்தர பகவத்த்யானம் ஸ்வப்நத்திலும் நினைக்கக் கூடியதன்றென்றும் உபநிஷத் சொல்லிற்று. கீதாசார்யன், யஜ்ஞதபஸ்ஸுக்களால், தான் ஆராத்யன் என்றுரைத்தான். யஜ்ஞதபஸ்ஸுக்களெனப்பட்ட ஸர்வ தர்மங்களாலும் ஆராத்யனான ப்ரபு அச்யுதனென்றும், அந்தத் தர்மங்கள் ஆசாரமின்றி அநுஷ்டிக்கக்கூடாதவையென்றும் வேதவ்யாஸருடைய நிஶ்சயம். அப்படிப்பட்ட தர்மாநுஷ்டாநம் காம்யதூஷித சித்தங்களுடன்கூடிய ஸாதாரண ஜனங்களுக்குக் கைகூடமாட்டாது. தர்மத்தில் நிஷ்டையானது காம்ய ப்ராப்தியின்பொருட்டு ஸ்வாதந்த்ர்யத்தை அபஹரிக்கின்றது. மந்த்ரத்ரஷ்டாக்களான ருஷிகளுடைய ஸந்ததிகளில ஜநித்தவர், அந்த ருஷிகளுடைய ஸந்மார்க்கத்தை ரக்ஷிக்கக் கடமைப்பட்டவர்கள். அவர்களில் சிலர் ஜந்மாந்தர துர்வாஸனையாலும், ஐஹிக ஸம்ஸர்க்க தோஷங்களாலும ஸ்வரூபநாஶத்தை ஸம்பாதித்துக்கொண்டார்கள். மதாந்தரங்களில தூஷ்யாம்ஶங்கள் பெருகி நின்றாலும், த்ருஷ்டபூர்வ ஶ்ருதர்களான மந்தமதிகளென அம்மதஸ்தர்களை ப்ரயாசிக்கக்கூடுமானாலும், அவர்களுடைய முன்னோர்களால் நமது பூர்விகர்கள் கொடிய துன்பங்களை அநுபவித்தார்களாயினும், ஸமான தேசவாஸமென்னும் காரண

மொன்றையிட்டு, அவர்களுக்குண்டான மனவருத்தத்தைத் தம திடம் ஆரோபித்துக்கொள்கின்ற அஸ்மதீயர்களாய் ஜநித்த ஸநாதந தர்மகாமுகர்கள், தம்முடன் பிறந்து, தம்முடன் ஸர்வாம்சங் களிலும் ஸமாநயோக க்ஷேமபரர்களாயிருக்கும் ஸநாதந தர்ம நிஷ்டர்களுக்கு மனவருத்தம் உண்டாக்காமல் இருக்க ஏன் கூடாதோ?

இதுவும் மாரன்யனுடைய கலிகோலாஹல க்ரீடையோ? இந்த வழிகளிலா லோகத்துக்கும் நமது தேசத்துக்கும் க்ஷேமம் உண்டாகப்போகின்றது? லோகோபகாரத்தில் உத்யுக்தர்களெனப் பெயரிட்டுக்கொண்டு, எவரையாவது எப்போதும் தூஷித்துக் கொண்டு, சில ஜநங்களை இதர ஜநங்கள் மேல் தூக்கிவிட்டுக் கொண்டு, கக்ஷிகளை ஏற்படுத்திக்கொண்டு, மர்யாதைகளைக் குலைத் துக்கொண்டு, லோகோபகாரம் செய்வதாக ப்ரமிக்கின்றவர்கள், தங்களுடைய செயல்களின் ப்ரயோஜநங்களை இப்போதே காணக் கூடும். ஸாதாரண ஜநங்கள் ஊணுக்கும் உடைக்கும் வழியின் றித் திரியப்போகின்றார்கள். ஜநங்களுக்குள் பரஸ்பரஹிதபுத்தி அற்றுப்போய்விடும். யாவரும், பரதயம் பாராட்டிப் பரஹிம் சைகளில் ரமித்துக்கொண்டு, ரஷியா முதலான தேசங்கள் படும் பாட்டை இந்தத் தேசத்துக்கும் உண்டாக்கிவிடுவார்கள்.

கலியின் கொடுமைகள் பரவப்பரவ [Social Conference] ஸோஷல் கான்பரன்ஸ் அத்யக்ஷர் தமது கக்ஷி தழைக்கின்றதென ஸந்தோஷிக்கின்றனர். காபிக்ளப்புகளும், ஆஹாரக் கடைகளும் ஸ்வோத்தேஶ்யத்தை நிறைவேற்றுகின்றனவென்று ஸந்தோஷத் தை அடைகின்றனர். ராஜாங்க சீர்திருத்தமென்ற ஒன்று தலைப் பட்டுப் பலர் ஸமுத்ரயாநம் செய்த முறையை ஸ்லாகிக்கின்றனர். ஸர்வதர்மாநுஷ்டாநங்களும் நீங்கித் தாம் மதமொன்றை மாகலீக வ்யாபாரமாகக்கொண்ட பெருமையை ஆவிஷ்கரித்துத் தம் கக்ஷி யில் சேர்ந்த பலர் மதமற்று வாழ்வதைப்பற்றி ரோகிக்கின்றனர். நாம் மாம்ஸபக்ஷணம் செய்யமாட்டோமாம்; சாராயம் குடிக்க மாட்டோமாம். ஏன்? Rubicon நதியைக் கடந்தால் பூர்வாவஸ் தைக்கு முழுகாமம் சேரியவரையில் பத்மேயற்க இடமுண் டோ? தமமுடைய [Brothers] ப்ராதாக்களான ஸஹோதரமாக மாபஸ பக்ஷண பீலர்களுடன் ஸமாநவஸ்தையை மேலணிபவர் ஒரு



பேதத்தைக் கல்பித்து [Brotherhood] ப்ரதர்ஹுட் என்பதைக் கெடுக்கலாமோ? தடாகத்தின்கரை உடைந்தால் ஸர்வ ஜலமும் பாய்ந்தோடிவிடாதோ? மர்யாதைகள் யாவும் குலையக் குலைய ஒன்றைமட்டும் மர்யாதையைத் ரக்ஷிக்க அமையுமோ? ஆரம் பத்தில் அக்ஷதயோநிகளான விதவைகளுடைய விவாஹம்; அடுத் தபடி ஸர்வவிதவா பரிணயம்; பிறகு ப்ரௌடாவிவாஹம்; பிறகு புருஷனைத் துறந்தவளை மற்றொருவன் கட்டிக்கொள்ளல்; முத லில் ப்ரதாந ஜாதிகளைக் காப்பாற்றிக் கிளைஜாதிகளைக் கூட்டல்; பின்பு ஸர்வஜாதி ஸாங்கர்யம். முதலில் Intercaste marriage; பிறகு அரண்மேல் பரிணயம். முதலில் காபிக்ளப் ப்ரவே சம்; பிறகு கிறிஸ்தவ க்ளப்பில் சோடியும் காபியும்; பின் னால் ரெயில்வே Refreshment Room ப்ரவேசம்; அப்புறம் D'angelis hotel. ஐரோப்ய சாராயம் நாகரிகத்தின் அடையா ளம்; கையில் பணமில்லாமல் கடன் கொடுப்பாரும் சேரிடாவிட் டால் பட்டை சாராயமும் கொள்ளக்கூடும்; கள்ளுக்கும் குறை யில்லை. Social Reform உண்மையில் பாய்ந்தோடும் வழிகளை வர்ணிக்கப்போனால் வளரும்.

ஆதலால், 'கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீஶ்வரம் । நார்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா: ॥' என்று மஹான்கள் சொன்னார்கள். 'ஸர்வ ஏவ மஹாபாகா மஹாந்தோ விஶிஷ்யதி கலௌயுகே ।' என்றது ஸ்ரீவிஷ்ணுபுராணம். 'ஶூத்ர ராஜாந:' என்றும் Social Reform முடிவைப் புராணத்தாம் சொல்லிற்று. இதில் ஸந்தோஷம் சிலர் கொள்ள ஸந்தாபம் கொள்பவர்களும் இன்னும் இருக்கின்றார்கள்.

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதா சார்யருடைய தமிழ் வ்யாக்யானத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ பாகவத தநிஸ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்மா சார்யர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 3. ஸ்ரீ சதுஸ்லோகீவிவரணம் ... ... ... ... | 0 | 2 | 0 |

ஸ்ரீ.

# ப்ரேம ப்ரவாஹம்.

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.)

உனது பரஸ்வரூபம் தேவர்கட்கும் தெரியாதென்றும், அவர்களும் உனது அவதார ரூபங்களை உபாஸிக்கின்றார்களென்றும் சொல்லப்பட்டுள்ளது. உனது பரவ்யூஹ ரூபங்கள் நித்ய முக்தர்களால் ஸாக்ஷாத்கரிக்கப்படுகின்றன. உனது அந்தர்யாமிரூபம் யோகிகளால் த்யானிக்கப்படுகின்றது. மற்றோர் உனை ப்ரபஞ்சசரீரியாகவோ, ப்ரபஞ்சத்தினுடைய ஏகதேச ஶரீரியாகவோ போசித்து த்யானிக்க வொண்ணும். உனை அர்ச்சிக்க வேண்டுமென்றால், மநுஷ்யர் உனது அர்ச்சாவதார ரூபங்களைத்தான் ஆஶ்ரயிக்க வேண்டும். இது ஸத்யம். அந்யதா நினைத்தல் ப்ரமம். அதிலும் இந்த ரூபமான ஆராதநமும் இப்போது கைவிடப்படுகின்றது. ஆராதிப்பதாய்ச் சிலர் வேஷம் போடுகிறார்கள். அவர் உண்மையில் நாஸ்திகர்கள். அன்றேல் அவர்கள் மஹா அபராதிகள்; தாங்களும் கெட்டு உன் திருக்கோயில் காணவரும் பிதஜ்ஞர்களையும் அவர்கள் கெடுக்கின்றார்கள். முன் ஒரு பெரியோர் மொழிந்தவண்ணம், அபிஜாதனெனும் செருக்குடன் ஒருவர் பஹுமானத்தையும் அந்நத்தையும் அபேக்ஷித்து உன் ஸந்நிதிக்குப் போகின்றார்; மற்றொருவர் காசை யாடையால் தன் நிஜரூபத்தை மூடி உன் திருக்கோயிலில் உனது ஸம்பத்துகளை அபஹரிக்கச் செல்கின்றார். இன்னும் சிலர், ஜ்ஞாநத்தின் வாஸனையையுங்காணாதவர்களாய்ப் பத்யங்களின் பொருட்டுச் சண்டையிடக் கோயிலுக்குப்போகின்றார்கள். இன்னும் சிலர், உனது திவ்யமங்கள விக்ரஹ தர்ஶநத்துக்குக்காக மாத்ரம் போய்க்கொண்டிருந்தார்கள். இப்போது ப்ரஸாத பண்யாஹாரங்கள் அற்றுப்போனால், அவர்களும் கோவிலைத் துறக்க ஸித்தமாயிருக்கின்றார்கள். ஏனென்றால் பல ஸந்நிதிகளில், நீ இப்போது ஆரண்யகாண்டாநுபவத்தை உகந்து நிற்கின்றாய். ராஜ்யாத் ப்ரம்ஶம், வநேவாஸம், பத்நீநாஶம், த்விஜமரணம் இத்தகைய விபாகங்களுடைய ஸ்மரணங்களை



ஸந்நிதிகளில் நாம் பெறும்வண்ணம், நீ ஏன் ஸங்கல்பித்து விட்டையோ? இது எமது தௌர்ப்பாக்யமா? இப்படிப்பட்ட சேர்க்கைகளில் எனை இருத்த நீ உகந்தையோ? உன் முன்பாக ஶரணாகதி பண்ணினவர்களுடைய பராபவம் உனக்கு அநுரூபமாகுமோ?

ப்ராணதார்த்திஹர! எனது ஶரீரம் துர்ப்பலப்பட்டது. அதை வ்யாதிகள் பிடிக்கின்றன. இந்தவகையாகக் கர்மம் கழிவதை மஹாத்மாக்கள் ஸங்கோசித்தார்கள். வேறு காரணங்களால், அவர்களுடைய அக்ஷரிந்த்ரியங்கள் ஸ்வஸ்திதியில் நிலைத்துநின்றன. என்விஷயத்தில் அந்நமயம் மநஸ் எனும் ஶ்ருதி வாக்யம் நிஜமாயிருக்கின்றது. எனது ஶரீரத்தினுடைய துர்ப்பலம் மநோ தௌர்ப்பல்யத்தில் முடிந்துவிட்டது. என்னுடைய த்ரிதாதுக்களும் விஷமாவஸ்தையை அடைந்துவிட்டாற்போல் காணப்படுகின்றன. உனது சாதாசித்த ஸ்மரணமும் எனக்கு ஶீக்ரத்தில் அற்றுப்போமென ஶங்கிக்கின்றேன். அப்படிக்கில்லாமலிருக்க, நீ க்ருபைசெய்தருளவேண்டும். அதரார்ப்பித வேணுவுடனும், மயிற்றோகையால் அலங்கரிக்கப்பட்ட மகுடத்துடனும், பசையணங்காழியும் பால்வெண்ஶங்கமும் உனது திருக்கைகளில் விளங்க, ஶ்யாமஸுந்தரனாய், பீதாம்பரதாரியாய், எனது அந்திம ப்ரயாண காலத்தில், நீ எனக்குத் தர்ஶந மளிப்பையோ? அக்காலத்தில் உனது ஸ்மரணமாவது எனக்குத் தப்பாமல் கிடைக்குமோ! இவ்வளவும் எனக்கற்றுப்போனால், நீ சொன்ன சொல்லை நான் நம்புகின்றேன். எனது களேபரம் வ்யாதிக்ரஸ்தமாய், நான் மஹா துர்ப்பலத்தையடைந்து, மோஹத்தில் முழுகிப்போய், எனது ஆவியானது நிலையிற்கலங்கி, ஶரீரத்தினின்று உத்க்ரமிக்கு மளவில், கல்லைப்போல் கட்டையைப்போல் நான் காணப்படவும், நீ என்னை ஸ்மரிப்பாய். எந்த ப்ரகாரத்தாலோ நான் த்வயோச்சாரணம் செய்தவன். ஸம்ஸாரவேகத்தை நன்றாக ஶமிப்பிக்கத்தக்க ஶுபவிக்ஷணத்துடன்கூடிய ஸதாசார்ய கடாக்ஷம் பெற்றேன். இக்காரணங்களைப் போதுமான வ்யாஜமாக நீ அங்கீகரித்து, இந்த ஜந்மத்தால் நான் அடையவேண்டிய பரமபுருஷார்த்தத்தை நீ ஸாதித்துக் கொடுக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றேன். இவ்வண்ணம் நான் வேண்டினதை விவரித்தேன்..

பலாபேக்ஷையின்றி உன்னிடம் பக்திபண்ணுவது முக்தியைக் காட்டிலும் விஶேஷித்தது; உதராக்நியானது உட்கொண்ட

அங்கத்தை ஜீர்ணம் பண்ணுவதுபோல், அந்தப்பக்தியானது கர்மத்தால் உண்டான ஶரீரத்தைத்தானே போக்கிவிடும். உனது பாதஸேவையில் அபிரதர்களாய், ஸர்வேந்த்ரிய வ்யாபாரங்களையும் உன்னிடம் செலுத்துகின்றவர்களாய், ஒருவர்க்கொருவர் உனது கல்யாணகுண ப்ரகாஶகங்களான திவ்ய சேஷ்டிதங்களைச் சொல்லிக்கொண்டு, அதனால் உண்டாகும் ஆநந்தாநுபவம் பண்ணுகின்ற சில பாகவதர்கள் உன்னுடன் ஏகாத்மதையை, அதவா உனது ஸாயுஜ்யத்தை வேண்டமாட்டார்கள். அப்படிப்பட்ட மஹாத்மாக்கள் உனது ஸுந்தரமான ப்ரஸந்ந வதநத்தையும், செந்தாமரைக் கண்களையும், அபிமத ஸர்வார்த்த ப்ரதங்களான திவ்யமங்கள ஶரீரங்களையும் தர்ஶித்து தத்ஸமகாலத்தில், அதிமநோஜ்ஞமான உனது திவ்ய வசநங்களையும் ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்வார்கள். காண்பவர் கண்களைக் களிப்பிக்கின்ற உன்னுடைய திவ்யாவயவங்களாலும், உதாரமான உனது லீலைகளாலும், மந்தஹாஸத்துடன் கூடிய உனது வீக்ஷணத்தாலும், உனது மதுரபாஷணங்களாலும், ஆகர்ஷிக்கப்பட்ட புத்தி மநஸ் இந்த்ரியங்களுடன்கூடிய பாகவத ஶிரோமணிகளுடைய பக்தியானது அவர்கள் அபேக்ஷிக்காவிட்டாலும், அவர்களை ஸூக்ஷ்மமான அர்ச்சிராதி மார்க்கத்தின் மூலமாக உன்னிடம் கொண்டேவிடும். உனது மாயையைக் கடந்த ஸத்யலோக பர்யந்தம் அர்ச்சிராதி கதியில் ப்ராப்தங்களான போகங்களையும், அணிமாத்யஷ்டைஶ்வர்யங்களையும், அவர்களுடைய பக்திக்குத் தக்கபடியே தானே ப்ராப்தமாகும் ஸ்ரீவைகுண்டவாஸத்தையும் அவர்கள் அபேக்ஷிக்கமாட்டார்கள். ஆனபோதிலும், அவர்கள் பரமபுருஷனான உனது நித்யவிபூதியில் உனது நித்ய கைங்கர்யத்தை அடைவார்கள். அவர்களுக்கு நிரதிஶய ப்ரீதி விஷயமாகும் அந்தராத்மா நீ; பெற்ற பிள்ளையினிடம்போல அவர்கள் உன்னிடம் ஸ்நேஹம் செய்கின்றனர்; ஸ்நேஹிதனிடம்போல் உன்னிடம் விஶ்வஸிக்கின்றார்கள்; அவர்கட்கு நீ குருவென ஹிதோபதேசம் செய்கின்றாய்; ஸுஹ்ருத்தைப்போல் ஹிதம் புரிகின்றனை; இஷ்டதைவமாகப் பூஜிக்கப்படுகின்றாய்; இவ்வண்ணம் உன்னுடைய அநுபவபரர்களான பாகவதர்கள் ஸ்ரீவைகுண்டத்தை யடைந்து, உன் அநுபவரூப பரமாநந்தத்தை என்றென்றும் ஶாஶ்வதமாகப் பெற்று நிற்பார்கள்; அவ்வநுபவம் நினது காலசக்ரத்தால் ஈஷத்



தும் குறைவுபடாது. இந்த லோகத்தையும், ஸ்வர்க்கம் முதலான பரலோகங்களையும், இந்த லோகங்களினுடைய போகாநுபவ யோக்யங்களான தேவமநுஷ்யாதி ஶரீரங்களையும், அவற்றின் அநுபந்திகளான புத்ரகளத்ராதிகளையும், க்ருஹக்ஷேத்ர தநாதிகளையும், இன்னுமுள்ள ஸர்வபரிகரங்களையும் முற்றிலும் துறந்து ஸர்வஜ்ஞனை உன்னையே ஸுஹ்ருத் ஸ்நேஹ குரு முதலான பாவங்களால் விஷயாந்தர ஸ்பர்ஶமற்ற பக்தியுடன், ஆராதிப்பவர்களை நீ, ஸம்ஸார மண்டலத்தின் அக்கரைக்குப் புநராவ்ருத்தி ஶங்கையின்றிக் கொண்டுபோகின்றாய். அது உன்னுடைய ஸங்கல்பம்.

இவ்வண்ணம் தேவஹூதிக்கு நீ செய்த உபதேசம், ஸ்ரீபாகவதத்தில் ப்ரபஞ்சிதம். அதை எனக்குக் காட்டி, அஶக்தனாய், குணலேஶமற்றவனாய் இருக்கின்ற நான், யோகிகளுக்குள் பரமஶ்ரேஷ்டர்களாய் இருப்பவர்களாலும் சிந்திக்க வொண்ணாத உனது நித்யகைங்கர்யத்தை எவ்வண்ணம் இச்சித்தேனோ என்று கேட்டால் நானென் சொல்வேன்? மேலே விவரித்த நின் உபதேஶமானது ஏகாந்திகள், ஸாத்வதர்கள், நிஷ்காமகர்மகாரிகள், என்று சொல்லப்பட்ட பாகவதர்களுடைய ஸம்ப்ரதாய க்ரமம். அவர்கள், தமது சித்தங்களையும் இந்த்ரியங்களையும் உன்னிடமே செலுத்தினவர்களாய், உன்னையன்றி ஜீவிக்க அஶக்தர்களாய், ஒவ்வொருவராலும் அநுபவிக்கப்பட்ட உனது கல்யாணகுணங்களை ஒருவர்க்கொருவர் போதித்துக்கொண்டு, உனது கதைகளை ஒருவர்க்கொருவர் இடைவிடாமல் சொல்லிக்கொண்டு, ஆநந்தாநுபவம் பண்ணுகின்றார்கள் என்றும் உனது ஸததயோகத்தை ப்ரார்த்தித்து உன்னைப் பஜிக்கும் அவ்வதிகாரிகளுக்கு அந்த ஸதத யோகாந்தர்க்கதமான புத்தியோகத்தைத் தந்து, தந்மூலமாக உனது ப்ராப்தியையும் கொடுப்பாயென்றும் உன்னுடைய கீதாவசநம். நான் அவ்வதிகாரியன்று; அகிஞ்சநன்; அநந்யகதியில்லாதவன்; நின்னிலங்கு பாதமன்றி மற்றோர் பற்றில்லாதவன்; உன்பாத மூலத்தை ஶரணமாகப்பற்றினவன்; உனது நிரந்தர ஸ்மரணத்தை இச்சித்தும் ஸாதித்துக்கொள்ள ஶக்தியில்லாதவன்; உனது ப்ரதிஜ்ஞையை விஶ்வஸித்து உன்னை ரக்ஷகனாக வரித்தவன். எனது ஸர்வ பாபங்களையும் போக்கி, எனக்கு அபயத்தைக் கொடுக்க வ்ரதம் பூண்டிருக்கின்றாய். ஆதலால் நான் வேண்டினதை விவரித்தேன்.

ப்ரபஞ்சத்தில் என்னைப்போன்ற சேதநர்கள் பலவித கஷ்டங்களைப் பட்டுக்கொண்டு காலங்கழிக்கையில், அவர்களை விட்டுவிட்டு நான் தனியே முக்தியை வேண்டுவது கேவலாத்மார்த்த சிந்தையாகின்றது. உனது ஸர்வாத்ம பாவத்தை அறிந்து, ஸர்வத்ர ஸமதர்சநத்தை ஸாதிக்க இச்சிக்கின்ற நான், எனக்குத் தனிமையில் ஒரு ச்ரேயஸ்ஸை அபேக்ஷிப்பது எனக்கு அநுரூபமன்று என்று சிலர் சொல்லும்வகை நீயும் யோசிக்க இடமில்லை. உலகத்தில் யாவரும் முக்தியடையும் வரையில், தனக்கும் முக்தி வேண்டாமென்பதுபோல் ப்ரஹ்லாத வசநம் ஸ்ரீ பாகவதத்தில் காணப்படுகின்றது. அது இவ்வண்ணம் விஸ்தரிக்கின்றது. "ஸம்ஸார சக்ரத்தில் அகப்பட்டுக்கொண்டு நான் ஒருவன்மாத்ரம் கஷ்டப்படுகின்றேன் அல்லன்; ஸர்வ ஜநங்களும் அவ்வண்ணம் கஷ்டப்படுகின்றன. ஸம்ஸாரமாகின்ற வைதரணீ நதியில் ஸ்வகர்மத்தால் விழுந்து, ஒருவர்க்கொருவர் ஜந்ம மரண வ்யாதிகட்குக் காரணமாய் நின்று, மிகவும் பயந்து, தம்முடைய சரீரங்களிடம் ஸ்நேஹமும் பிறருடைய சரீரங்களில் த்வேஷமும் பாராட்டிக்கொண்டிருக்கும் மூடஜநங்களைக் கடாக்ஷித்து, ஸம்ஸாரத்தின் புறம்பே வர்த்திக்கும் நீ, அவர்கட்காக ஐயோவென்று இரங்கி, அதனின்றும் கரையேற்றி அவர்களைக் காப்பாற்றுவாய். ஸர்வ ப்ரபஞ்ச ஜந்ம ஸ்திதி லயாதிகளுக்குக் காரணமாய் நிற்கும் பராசார்யனும் பகவானே! நான் ப்ரார்த்தித்தபடியே ஸர்வ ஜநங்களுடைய ரக்ஷணம் உனக்கு எவ்வண்ணம் ப்ரயாஸமாகும்? ஆர்த்தர்களுக்கு பந்துவான நீ, மூடர்களிடமன்றோ விசேஷாநுக்ரஹம் பண்ணவேண்டும்? உனது ப்ரியபக்தர்களை அடைந்து ஸேவைசெய்கின்ற என்னுடைய உத்தாரண விஷயத்தில் உனக்கு என்ன ப்ரயாஸம்? உனது வீர்ய சேஷ்டிதங்களைப் பாடுவதே மஹா அம்ருதம்; அதில் மூழ்கிநிற்கின்றது எனது சித்தம். ஆதலால் நான் ஸம்ஸார வைதரணியைப்பற்றிப் பயங்கொள்ளவில்லை. ஆனால் உனது கதாம்ருதமாகும் ரஸத்தில் விமுகமாகும் மநஸ்ஸுடன் கூடி, இந்த்ரியார்த்த ஸம்பந்தத்தால் வருகின்ற மித்யாஸுகத்தின் பொருட்டு, குடும்ப பாரங்களைச் சுமக்கும் மஹாமூடர்களைப்பற்றிச் சோகிக்கின்றேன். ஸம்ஸாரத்தில் விழுந்துழல்கின்ற அவர்களுக்கு, உன்னைவிட்டால் ரக்ஷகரைக் காணேன். அப்படிப்பட்ட க்ருபணர்களை விட்டு, நான் ஒருவன் மோக்ஷம்பெறவும் விரும்புகின்றேனில்லை." இவ்வண்ணம் ப்ரஹ்லாதன் ப்ரார்த்தித்தது ஈடேறாவிடில் ஜகத் இதுவரைக்கும் நிலைத்திராது. கர்மாத்யக்ஷனான நீ ஸம்ஸார தந்த்ரத்தை வஹிக்கின்றபடியால், உனது லீலா விபூதி முடிவுக்கு வராது. ஸர்வமுக்தி ப்ரஸங்கம் நினைக்கத்தக்கதன்று. மஹாபாகவதன் அபேக்ஷித்த விஷயம், நீ லோகஹிதத்தின் பொருட்டு சாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்ததினாலும், ஸ்வயம் அவதரித்தும் மஹர்ஷிகளை அநுப்ரவேசித்தும் முக்த்யுபாயங்களை வெளியிட்டதினாலும் நிறைவேறிவிட்டது. அவற்றில் விமுகராய், ஸம்ஸ்ருதியில் ரமிப்பவர்களைக் காப்பதென்பது எவ்வண்ணம் பொருந்தும்? ஸ்வரக்ஷணத்தில் அசக்தனான நான் பரரக்ஷண விஷயத்தில எப்படி ஸமர்த்தனாவேன்? எனக்குற்ற வழி யாவர்க்கும் உண்டு. இதரர்களுடைய ரக்ஷண விஷயத்தில் உன்னை நிர்ப்பந்திப்பதென்பது எனக்கு அடுக்குமோ? அடுத்து அபேக்ஷித்தவர்களுக்குத் தத்தஹித புருஷார்த்த ஜ்ஞாநத்தை அளித்து, உனது ப்ராப்தி ஸாதநமாகும் உபாயங்களில் அவர்களை அநுஷ்டிக்கச் செய்யத் தகுந்த அதிகாரிகள் இன்னும் இருக்கின்றார்கள். நீ யாவர்க்கும் ஆதாரனாய், நியந்தாவாய், சேஷியாய் இருக்கின்றபடியால் எல்லாச் சேதநர்களும் உன்னோடு ஸமாந ஸம்பந்தமுள்ளவர்கள். ஆனாலும் அநாதிகர்ம வாஸனையால் அவர்களுடைய காமங்களும் பாவ்ருத்தங்களும் படுகின்றன. ஆயிரத்தில் ஒருவன்தான் உனது ப்ராப்தியைக்குறித்து ப்ரயத்நிக்கின்றான் என்றும், அப்படிப்பட்டவர்களுக்குள்ளும் யாரோ ஒருவன்தான் உன்னை உண்மையில் அறிந்துபாவிக்கின்றான் என்றும், பல்வித காமங்களால் மற்ற ஜநங்கள் ஆகர்ஷித சித்தர்களாய் அக்காமங்களை ஸாதித்துக்கொள்ள அந்ய ப்ரயத்ந பரர்களாகின்றார்களென்றும் நீயே சொல்லியிருக்கின்றாய்.



ஆதலால் இனி நான் சொல்லவேண்டியதொன்றுமில்லை. நீ எனக்கு ஸ்வாமி; நான் உனது தாஸன். பார்க்குமிடமெங்கும் நீ நிறைகின்றாய். எனக்குள்ளும் நீயிருக்கின்றாய். உன்னைப் பிரிந்து நானிருத்தலென்பது எப்போதும் இல்லை. உனது க்ருபார்ணவத்தின் மத்யே நான் இருக்கின்றேன். என்போலியரான சேதநர்கள் அசித்துல்யராய் ப்ரளயத்தில் முழுகியிருக்க, நீ கருணைகொண்டு அவர்களைக் கடாக்ஷித்து, அவர்களுக்கு ஸர்வபுருஷார்த்த ஸாதகங்களான சரீரேந்த்ரியாதிகளைக் கொடுத்தாய். அதனிமித்த

மாக உனது நிஜஸ்வரூபத்தை அதிக்ரமித்து ப்ரபஞ்சரூபத்தைத் தரித்தாய்; ப்ரபஞ்சம் முழுதும் நினது மஹிமையெனப்பட்டது. அது உனது கருணாஸமுத்ரம். அதன்கண் நான் நிற்க, உனை நான் பிரிந்திருத்த லென்பது எவ்வண்ணம் பொருந்தும்? லோகத்தில் யாவும் உன்னுடையவை. எனது கரணகளேபரங்களை நீயே யெனக்கென்று அளித்தாய். நானென வழங்கப்பட்ட சேதநன். உனது நித்யதாஸனாயிருக்க வேண்டியவன். உனைவிட்டு விஷயத்ருஷ்ணையில் ஆழ்ந்தவர்கள் உஜ்ஜீவிக்கும்படி நீயே உபாயபூதனாய் நிற்கின்றாய். உன்னுடைய க்ருபைக்கு அவர்கள் லக்ஷ்யமாகும்படி நீயே மார்க்கங்களைக் காட்டியருளினாய். யானுமதன்றி எம்பிரானும் நீயே. ஆயினும் இப்போது நான் கர்மவசியன். எனை ஸம்ஸார சக்ரத்தின் புறம்பே வர்த்திக்கச் செய்வாய். அப்போது எனை அஜ்ஞாநம் லேபியாது; யாவும் உனது சரீரமெனும் ஜ்ஞாநம் அப்போது ஸ்திரமாக நிற்கும். நீ ஸர்வ ஸுஹ்ருத் ஆனபடியால், ஸர்வத்ர உனது வத்ஸலத்வம் விதிதம். எங்கும் நீ அந்தராத்மாவா யிருப்பதால் தான், லோகத்தில் பரஸ்பரம் ப்ரியமென்பதை ஆவிஷ்கரிக்கின்றனர். ஸர்வத்ர ப்ரியகாரணன் நீ; ஆதலால ஸர்வத்ர ப்ரியமானது எனக்குண்டாகட்டும். உன்னிடம் எனக்கு பக்தி ஸ்திரப்படட்டும். அது ஸர்வாபேக்ஷித பலங்களையும் ஸாதித்துக்கொடுக்கும்.

ஏதோ மனம்போனபடியெல்லாம் மஹநீயோக்திகளைக்கொண்டு இவ்வளவுதூரம் ப்ரஸ்தாபித்தேன். என தபராதங்களை நீ க்ஷமித்து என் ப்ரயத்நத்தை அங்கீகரித்தருளுவாய்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# திருத்த திருத்தம்.*

நம் கலிமஹாராஜன் மஹிமையாலன்றோ ஜபம், தபஸ், தீர்த்தயாத்ரை, தாநம், தத்வஜ்ஞாநம் முதலான புருஷ கார்யங்களைப் பெண்டிர் ஸ்வதந்த்ரராக இருந்து செய்வதும், பர்த்தாக்கள் அவர்களுக்குப் பராதீநராகி, 'கண்டாரிகழ்வனவே காதலி தான் செய்திடினும், கொண்டானை யல்லாலறியாக் குலமகள்போல்' என்று பாசுரம் பாடும்படி, ஸர்வவிதத்தாலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுடன், தம்மை ஸ்த்ரீயாகப் பாவித்து ஸர்வ கர்மத்யாகமும் செய்துவருகின்றனர். 'யஸ்யாவீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தேகிலம்' என்னும்படி திருமார்பில் திருவந்தும், திருமாலும் தனியான பரம ஈச்வரனுடன்றோ இருப்பது.

ஸ்த்ரீகள் விஷயத்தில் நம் மஹர்ஷிகள் செய்திருக்கும் உபகாரம் மற்ற மதத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு பர்த்தாவுக்குப் பராதீநமாயிருந்து, ஸர்வவித ஸம்பத்தையும் அநுபவித்து, பர்த்தாவுக்குப் பின்னும் கவலையில்லாது புத்திரருடைய போஷணையில் இருப்பதைக்காட்டிலும், ஸ்வதந்த்ரமாய்த் தாமிருந்து, கண்டவர்க்குப் பெண்டிராகி, கடைசியில் கதியில்லாது காப்பாற்றுவார் யாரென்று கரைந்துருகும் ஸ்வாதந்த்ர்யத்தைப் பெரிதாக நினைப்பதை நினைத்து ஆச்சர்யப்படுகிறோம். இது நிற்க:

இன்னும் சிலர், பால்யத்தில் பர்த்தாவை இழந்திருக்கும் பெண்களைப் பலவிதமாம் கஷ்டத்துக்கு ஆளாக்கியும், சுகலேச

* இது சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.

மறியாது, ஆடையாபரணங்களை அணிந்திடக்கூடாதென்றும், ஆகாரமில்லாது பசியால் வருந்தவும், இவ்வாறு செய்தவரும் நமது மத தெய்வத்தைத் திருவருள் நிறைந்ததெனத் துதிக்க வேணுமோ? என்று சொல்வதுண்டு. நம் மதத்தில் இந்த நிர்ப்பந்தம், ஆயிரத்தில் ஒருத்தனும் அந்தணர் பெண்டிருக்கு ஈசன் விதித்திருப்பது வாஸ்தவமே. ஆனாலும், இப்பொழுது விதவையாக அனுபவிக்கும் ஸ்த்ரீகள், முன் ஜந்மகாலத்தில் பர்த்தாவைப் பலவிதமும் வெறுத்ததன் சிக்ஷையாய்ப் பர்த்தாவைப் பிரிந்திட்டு வருத்தத்தை அடைவதாய் நமது சாஸ்த்ரம் சொல்லுகிறது. குற்றங்கள் செய்தோரைச் சிறைச்சாலையில் வைக்கும் வேந்தரை நிந்தித்தல் ந்யாயமாகுமோ? பிறந்த காலத்திலேயே கண்ணில்லாக் குருடராய், காலில்லா நொண்டியாய், வாயில்லா ஊமையாய்ப் பிறப்பிலேயே பெருவ்யாதி பிடிக்கும் பலவித ஜீவனைப் படைத்திட்ட தேவதை பரதேவதையன்றோ?

பக்ஷபாதம் தெரியா திருவருளின் வடிவமென கூர்மதிகள் கொண்டாடவும், கீழ்ச்சொன்ன கேள்விக்கும் பதில்சொல்ல வழியில்லாமல் திண்டாடும் மஹிமையுடன் துலங்குகின்றது.

புதுஜீவனைப் படைக்கும் புதுமதத்துப் புத்திமான்களுக்கன்றோ பலவிதமாம் கேள்விக்குக் கஷ்டமுள்ளது. ஆசையால் ஸர்வேச்வரன் பால்யமாம் விதவைக்குப் பாபத்தின் பலமாகப் பர்த்தாவின் பிரிவைக் கொடுத்திருந்தாலும், பாலர்களைப் பெற்றெடுக்கும் கஷ்டத்தையும், அச்சிறுவர் பெருநோயால் பிடிப்பதையும் அநுபவிக்காது, கவலையில்லாமலே தெய்வத்தைத் தொழுதேத்தும் காலத்தைப் புண்ணியத்தின் பலமாகக் கொடுத்திருக்கிறானல்லவோ?

ஆகையினால், ப்ரியமுள்ள பர்த்தாவுக்குப் பாரதந்த்ரியாயிருந்து, கடுகளவும் கவலையில்லாமல் போக மநுபவிப்பதே பெண்மணியின் ஸுகமாவது. இப்பாரதந்த்ர ரஸமறிந்த பெரியோர்களன்றோ 'ஹோமோஹம் ஸேவியஸிவாகி வசுமவகிமஸிசு............



ஹஸ்ஸுக்ஷரிஜாநாய தவதாவஸ்ய வஹோமாவஜுஃ' என்றும், 'குற்றகாலம் இறுதிகூடா யெனையூழி, சிறுகா பெருகா அளவிலின்பம் சேர்ந்தாலும், மறுகாலின்றி மாயோ னுனக்கே யாளாகும், சிறு காலத்தை யுறுமோ வந்தோ தெரியிலே!' என்று ஸ்வதந்த்ரராய் அநுபவிக்கும் ஆநந்தத்தை 'ஆவிதிகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம்' எனச்சொல்லி முக்திபெற் றநுபவிக்கும் பாரதந்த்ர ஸுகத்தையே பெரிதாகக் கொண்டாடினர்கள்.

பூர்வ ஜந்ம புண்யத்தால் ப்ராஹ்மணனாய்ப் பிறந்திருந்தும், விதியின் மஹிமையினால் வேதாந்தம் அறிந்திருந்தும், பூலோக பாவிகட்குப் பரலோகவழிகாட்டும் சில புண்ணியர்கள் பசுவேடம்பூண்ட புலிபோல தாம் புதுவழியைப் பேசுவதால் ப்ரஸித்தியை யடையும்பொருட்டு இப்புதுமதத்தைப் போற்றி செய்வதுடன் ஸ்ரீபாஷ்யகாரர் போல்வாரைப் புதுமதத்துக்குப் பரமாசார்யனாக அருளிச்செய்கிறார்கள்.

1. இவர்கள், ஜாதிபேதமிருந்தாலும் 'ஸமோஹம் ஸர்வபூதேஷு' என்றும், 'ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்' என்றும், ஸர்வேச்வரன் யாவரையும் ஸமமாகப் பாவித்ததுபோல், 'சுநி சைவ ச்வபாகே ச பண்டிதாஸ் ஸமதர்சிந:' என்றும், 'ஸாம்யே ஸ்திதம் மந: ஸர்வாவஸ்தேஷு ஸமதர்சிந' என்றும் அறிவுடைய மனிதன் யாவரையும் ஸமமாகப் பார்க்கவேண்டிய தவச்யமன்றோ?

2. 'நயஸ்ய ஜந்மகர்மப்யாம் நவர்ணாச்ரமஜாதிபி: ஸஜ்ஜதே ஸ்மிந்நஹம் பாவோ தேஹே வை ஸ ஹரே: ப்ரிய:' என்று பாகவதத்தில் பிறப்பினாலும் கர்மத்தினாலும் ஜாதியினாலும் ஆச்ரமத்தாலும் அஹங்காரமில்லாதவன் பகவானுக்கு ப்ரியனாகச் சொல்லப்பட்டிருக்கிறதல்லவோ? ஆகையினாலல்லவோ 7-வது ஸ்கந்தத்தில் 'விப்ராத் த்விஷட்குணயுதாதரவிந்தநாபபாதாரவிந்த விமுகாத் ச்வபசம் வரிஷ்டம்' என்று 12-குணமுள்ள ப்ராஹ்மணரிற் காட்டிலும் பஞ்சமனை உயர்ந்தவனாக ப்ரஹ்லாத பகவான் அரு

ளிச்செய்தான். ஜாதிபேதம் பெரிதானுல் பஞ்சமரை உயர்ந்தவ ஞய் எப்படிச் சொல்ல முடியும்?

3. '[illegible]' என்றும் 'நிற்கின்ற தெல்லாம் நெடுமால்' எனக் காணப்படும் ஈஸ்வரன் உடம்பான உலகத்தில், சிலர் அங்கத்துக்கு ஶுத்தியும் சிலர் அங்கத்துக்கு அஶுத்தியும் சொல்வதெல்லாம் பக்ஷபாத மல்லவா?

4. பாவியரும் புண்ணியரும் பொதுவாகக் கங்கையுள் குளிப்பதுபோல, பாவியரைக் கரையேற்றும் பெருமானின் ஆலயத்துள் பஞ்சமர் புகத் தட்டென்ன?

5. பரிசுத்தமான பஞ்சபூதங்கள் ப்ராஹ்மணர்க்கும் பஞ்சமர்க்கும் பொதுவாக இருப்பதை நாம் பார்க்கவில்லையா?

6. தேவதைக்கும் மானிடர்க்கும், குரங்கு காடிகளுக்கும், அறந்தெரியாத அரக்கர்க்கும் பொதுவாயன்றே '[illegible]' என்று அருளிச்செய்தது.

7. இதெல்லாம் உள்ளபடி அறிந்திட்ட ஸ்ரீ ராமாநுஜனன்றே பிள்ளை யுறங்காவில்லி தாஸர் கைத்தலம்பற்றி எழுந்தருளினன்; திருநாராயணபுரத்தில் பஞ்சமரை ஆலயத்துள் புகச்சொன்னுன்; ஆசார்யன் வார்த்தை மீறி, கோபுரத்தின்மேல் நின்று மந்த்ரத்தை மொழிந்திட்டு மண்ணுலகிலுள்ள மனிதரையெல்லாம் விண்ணுலகத்துக்கு அனுப்பினுன்; திருமலைக்கு வழிகாட்டும் தொண்டரைத் தண்டனிட்டான்.

ஆகையினுல், இப்ரமாணங்களுக்கு விருத்தமாக ஒருவரை ஊருக்கு வெளியில் குடிவைப்பதும், ஒருவரைத் தொடலாகாதென்பதும், ஒருவர் கோவிலுள் புகலாகாதென்பதும், பஞ்சமரைப் பார்க்கக்கூடக் கூடாதென்பதும் இவ்வாறு நிர்ப்பந்தம் ந்யாயமாகுமா? ஆகையினுல் ஸர்வரையும் ஸமமாகப் பாவிக்கும் ஸாதுக்கள் இந்த பேதபுத்திகளைப் பக்ஷபாதிகளென்ன என் சொல்லக்கூட்டாதென்கிறுர்கள்.



இப்புத்திமான்கள் '[illegible]' என்று ஆசார்யன் அருளிச்செய்தபடியே, ஸாதுக்களைக் கேட்டு ஸந்தேஹம் தெளியாது, பத்ரிகையைப் பரமாசார்யனுகப் பாவித்தாலன்றே இவர்கள் மதிமயக்கம் தெளிவிக்காது அப்பத்ரிகை மாமுனிவர் மௌனமாக இருந்துவருகிறுர்.

அறமழிக்கும் அரக்கர்க்குப் புண்யரெனப் பெயர்போலவும், கடுகளவு நிழலில்லாத கள்ளியென்னும் முள் செடிக்கு மஹாவ்ருக்ஷமென நாமம்போலவும் நாமரூபமளிக்கும் நாராயணன், புண்ணியத்தின் வேராக்கும் பூஸுரர்க்கு த்ரவ்யத்தின் பெருமையினுல் பாங்கான பிருதங்கள் பலவகையாய் அளித்திருக்கிறுன். இவர்கள் சொல்லும் விஷயங்களை, ப்ரமாணங்கள் நன்குணர்ந்த புத்திமான்கள் கவனிப்பாராக.

ஸர்வரையும் ஸமமாகப் பாவிக்கும் பெருமானும் '[illegible]' என்றும், '[illegible]' என்றும் சொல்லுகிறபடியே, யாவரையும் தம்தம் வர்ணாஶ்ரம தர்மத்தினுலன்றே தன்னைப் பூஜிக்க விதித்திட்டான். அறுபதினுயிரம் தேவிமைகளை மணம்புரிந்த பெருமாயன், ஒரு பூஸுரரின் கந்நிகையைக் கைபிடித்தானு? ஆகையினுல் ஸர்வரையும் ஸமமாகப் பாவிப்பது எப்படியெனில்: ஸர்வபூதகத்துள்ளிருக்கும் ஜீவஸ்வரூபத்தில் பேதமில்லாததனுல் ஆத்மாவெல்லாம் ஸமம் என்று நினைத்திருப்பதுதான். இப்படி யில்லாவிட்டால் '[illegible]' என்பதற்கு விருத்தமாக, பாபிகளைக் கண்டால் பேசாது தூரத்தில் ஒதுங்கியிருக்கவும், புண்ணியருடன் அணுகி அநுஸரித்து ஆதரிக்கவும் சொல்லும் ஶாஸ்த்ரங்கள் எவ்வாறு பொருந்தும்? '[illegible]' என்கிறபடியே வித்யாவாஹன ப்ராஹ்மணனையும் ஶ்வாவையும் ஸமமாக நினைக்க விதித்திருப்பதால், பித்ரு கார்யங்களில் ப்ராஹ்மணருக்குப் பதிலாக நாயை நிமந்த்ரணத்தில் வைத்துப் பூஜிக்க

வேண்டி வருமல்லவா? அதவா, 'நிற்கின்றதெல்லாம் நெடுமால்' என்கின்றபடியே எல்லாம் ஈஸ்வரனது உடம்பு என்று அபிமா நித்திருக்க ப்ராப்தமென்னலாம்.

2. 'நயஸ்யஷ்ஷு வாஜ திவிதெ ஷா தா ... ' என்றும், 'நயஸ்யஜ ... நவண ... ' என்றதும், எல்லாம் ஸர்வேஸ்வரனுடையதாயிருக்க, ஒன்றையும் தன்னுடையதென்று அபிமாநிக்கக்கூடாதென்றும், ஆத்மாவுக்கில்லாத வர்ணாஸ்ரமங்களை ஆத்மாவுக்கு உண்டென்று அபிமாநிப்பது கூடாதென்றும் சொல்லுகிறதேயல்லது பிறருடைய த்ரவ்யம் தாரத்தைப் பொதுவாக பாவிக்கச் சொன்னதல்ல. ப்ராஹ்மணரைக்காட்டிலும் பஞ்சமரை உயர்ந்தவராகச் சொன்னதும், பகவத் ப்ரீதிக்கு பக்தியே காரணம், ப்ராஹ்மண்யம் முதலான ஜாதி காரணமல்ல என்கிறது. இதை, இதற்கு முதல் ஸ்லோகமான '... ' என்பதனாலும், இந்த ஸ்லோகத்தின் உத்தரபாகமான '... ' என்பதனாலும் ஈஸ்வரன், பணம் குலம் அழகு தபஸ் ஸாஸ்த்ரம் முதலானவைகளால் பூஜிக்கப்படுகிறதில்லை; பக்தியினாலன்றோ கஜேந்த்ரனிடம் ஸந்தோஷித்தான் என்பதனால் நிஸ்சயம்.

3. சராசரங்களெல்லாம் ஈஸ்வரன் உடம்பாக இருந்தாலும், சிலவற்றை ஸ்பர்ஸிக்கவும் சிலவற்றைக் கூடாதென்பதும் அவனுடைய ஆஜ்ஞையான ஸாஸ்த்ரஸித்தமாக இருப்பதனாலன்றோ. ஸுத்தமென்றும் அஸுத்தமென்றும் சொல்லவேணுமா ... இதனால் 4, 5 கேள்விகட்கும் பதில் சொல்லப்பட்டது. இவ்விஷயத்தில் சில ப்ரமாணங்களைக் காட்டுகிறோம்.

4. '... ' என்பர ...



ளர்க்கு 36-அடியும், ப்ரஸவித்த ஸ்த்ரீக்கு 27-அடியும், ... கைக்கு 18-அடியும், பதிதனுக்கு 9-அடியும் விலகிவர்த்திக்க விதித்திட்டதாலன்றோ பஞ்சமரிடம் ப்ராஹ்மணர்கள் விலகிடப்பது இல்லாவிட்டால், ப்ரியமான பெண்டிரையும் மாதத்தில் 3-நாள் ப்ராஹ்மணனே வீட்டிற்குள் வரக்கூடாதெனத் தடுப்பார்களோ? இது மாத்ரமோ? அத்தெரிவைக்குத் தூரஸ்த்ரீயெனப் பெயரிட்டு, பேசக்கூடாதென்றும் பார்க்கக்கூடாதென்றும் சொல்லுவார்களோ? இவ்விதமே, '... ' என்று தன் பெண்டிரும் போலி ப்ராஹ்மணரும் வேதம் கேட்கக்கூடாதென விதித்த முநிவரர்களைப் பக்ஷபாதிகளெனச் சொல்லலாகுமோ? புத்தியில ப்ருஹஸ்பதியாய், வேதத்தில் வ்யாஸமுநியாய், ஆசாரத்தில் ஆபஸ்தம்பரானாலும் தீக்ஷையில்லாத் தாணிஸுரர் தெய்வத்தைத் தொடக்கூடாதிதே. '... ' ப்ராஹ்மணரின் பெண்டிரும் பெருமாளைப் பூஜிக்கலாகாதாம். '... ' ப்ரியமான பெண்மணியின் கண்பார்க்கக் கணவனும் அந்நத்தை உண்ணலாகாதாம். '... ' என்றும், '... ' என்றும் விதித்திட்டார்களன்றோ?

இங்கிருக்க, '... ' என்று பசித்துவரும் பஞ்சமர்க்குப் பாலமுது போட்டுவிட்டுப் பொருந்துமொரு பூஜையைச் செய்யாதது பெருங்குற்றமென்றும், '... ' என்று தவம்செய்யும் ப்ராமணர்கள் தாகத்தால் தபித்தாலும்

தண்ணீர் கொடுப்பதையும் கொடுங்குற்றமாய் மொழியும் முநிவர்கள் மறையோர்க்குப் பக்ஷபாதிகளோ?

இது மாத்ரமோ? 'ஶூத்³ராஹ்ருதாந்நபோஜநா ப்³ராஹ்மணா: பதிதா த்³விஜா: । தம் ஶ்ராத்³த⁴ம் ஶூத்³ரபோஜ்யம் ச வர்ஜயேத் ஶூத்³ரஸேவிந: ॥' என்று வேதமில்லா வேதியர்க்குப் பிச்சையிடும் க்ராமத்தைத் தண்டிக்க விதித்திட்ட மாமுநிவர் மறையோர்க்குப் பக்ஷபாதியோ? ஜாதியில் ஸ்ரேஷ்டராம் ப்ராஹ்மணரேயானாலும், ஆஸ்ரமத்தில் உத்தமமாம் ஸந்யாஸியானாலும் அந்யர்க்கு ஒருநாளும் அந்நமிடலாகாதாம். இதுமாத்ரமேயல்ல. அவர் பாத்ரங்கள் பட்டதும் அநுமதி கொடுத்ததும் ஆகாவென மொழிந்திட்டார்களன்றோ? 'பத்ரஸ்ய பதிவாத்ருஶ்யம் பதிநாஸ்தி தம்பச । ஶஸ்த்ரம் நபோக்தவ்யம் ஶூத்³ராபாத்ராயணம்பரே ச'. வையத்தை வாழ்விக்கும் வைத்யர் அந்நமாகாதாம். லோகாந்தரம் உய்விக்கும் உபாத்யாயர் அந்நம் உண்ணலாகாதாம். 'நாஶ்நீயாச் சிகித்ஸகஸ்யாந்நம் ததைவ ஶ்ராத்³த⁴யாஜிந:' அந்தோ! பரமனிவன் புஜித்த சேடம் நிர்மால்யமென்று உண்டால் ப்ராயஶ்சித்தமாம். அவன் பெண்டிருண்ட சேடம் பரிசுத்தமாம். 'நிர்மால்யம் தேவ ப்ரக்ஷேபேச ஸவாநீ ஶாக்தஶிஷ்டம் தாம் ஸம்ஜ்ஞாந: பாணர்வாஸாத் வேச'. தெய்வத்தைத் தொழுமவர்கள் தேவலகர் என்றல்லவோ பாஷிக்கப்படுகிறார்கள்.

ஆகையினால், நம் மஹர்ஷிகளுக்கு ப்ராஹ்மணரிடம் பக்ஷபாதமென்றும், பஞ்சமர்க்கும் பெண்டிர்க்கும் பலவிதமாயும் தாழ்வையே எழுதி வைத்தார்களென்றும் நம் மஹர்ஷிகளின் மனமறிந்தவர் மொழியமாட்டார்கள். இவ்விஷயத்தை முன்பே சொல்லியிருக்கிறோம்.

(இன்னும் வரும்.)

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜ மஹாதேஶிகாய நம:.

ஸ்ரீமதே நிக³மாந்த மஹாதேஶிகாய நம:,

ஸ்ரீதே³வநாத² பரப்³ரஹ்மணே நம:.

# உபயுக்தாம்ச ஸங்க்ரஹம்.

ஸம்ப்ரணம்ய ஹயக்³ரீவம் க்ருஷ்ணம் ராமாநுஜம் ததா ।
உபயுக்தம் விப்ரகீர்ணம் ஸங்க்³ருஹ்ய விலிக்²யதே ॥
பேடிகா ஶதிஸம்ப்ரோக்த ஜ்ஞாநஸம்பாத்³யதே யதா ।
ததா பார நிர்த்³ருஷ்டம் ஶாஸ்த்ராதே³ஶேந நிர்ணீயதே ॥

'விஷ்ணுர்நித்யம் வித்³யயா தாதம்ப்ய: தஸ்மாத் ஜ்ஞாநம் நித்யமேவம் ஸம்பாத்³யம் । ஶ்ராவ்யம்' என்கிற ப்ரமாணத்தால், வித்யையினால் பகவாந் ஸம்ப்ராப்யனாகையால், வித்யை அவஶ்யம் ஸம்பாதநீயமென்று சொல்லப்பட்டது. வித்யையாவது, 'ஸா வித்³யா யா விமுக்தயே' என்று சொல்லப்பட்ட ஜ்ஞாந விஶேஷம். அதாவது, 'ப⁴க்த்யா பரயாவாபி ப்ரபத்த்யா வா மஹாமதே । ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்ய:' என்று சொல்லப்பட்ட பக்தி ப்ரபத்திரூப ஜ்ஞாந விஶேஷம். அந்த ஜ்ஞாந விஶேஷத்தை ஸம்பாதிக்குமிடத்தில், 'பரீக்ஷிதோ வா யஸ்யார்த்²ய: ப்ராப்தா நயாதி ஶோப⁴தே' என்கிற ப்ரமாணத்தால் புஸ்தக நிரீக்ஷணத்தினால் ஸம்பாதித்தால் வ்யர்த்தமாகு மென்றும், அநர்த்த ப்ரதமென்றும் வ்யக்தமாகச் சொல்லப்பட்டது. ஆகையால், 'ஆசார்யாத்³தை⁴வ வித்³யா விதி³தா ஸாதி⁴ஷ்டம் ப்ராபத' 'ஆசார்யவாந் புருஷோ வேத³' இத்யாதி ஶ்ருத்யுக்தமானபடியே, ஆசார்யமூலமாக க்ரஹித்தால்தான் அது கார்யகரமாம். 'ஸத்ஸம்ப்ரதாய ரஹிதமான ஶாஸ்த்ரத்தால் அர்த்தநிர்ணயம் துஷ்கரம். ஸாத

ரங்காநுஜிலும் உபயுக்தமாகாது' என்று ஸ்ரீ ஸம்ப்ரதாய பரிசுத்தியில் ஸத்ஸம்ப்ரதாயத்துக்கே கார்யகரத்வமும், அல்லாத ஜ்ஞாநத்துக்குக் கார்யகரத்வம் கிடையாதென்றும் வ்யக்தமாகச் சொல்லப்பட்டது. அதெப்படியென்றால், 'வ்ரீஹீ நவஹந்தி' என்று வ்ரீஹியை அவஹநநத்தாலேயே துஷவிமோசநம் பண்ணவேணும்; அஸ்ம குட்டநாதிகளால் துஷவிமோசநம் பண்ணினால் தேவதாப்ரஸாதம் வாராதென்று பூர்வ மீமாம்ஸையில் ஸ்தாபித்ததுபோல், இங்கும் ஸத்ஸம்ப்ரதாயாகதமானால் தான் கார்யகரமாம்.

"ஸத்ஸம்ப்ரதாய விதித்வமாவது, தான் ஸத்வோத்தரனாய், ஸம்யக் உபாஸகனாய், ஸாவதாநனாய் இருக்கும் அவஸ்தையிலே க்யாதிலாப பூஜாநிரபேக்ஷனாய் காருண்ய பரதந்த்ரனான ஸதாசார்யன் ஸர்வர்க்கும் பரமாசார்யனான ஸர்வேஸ்வரன் முதலாக உபதேச பரம்பரையாலே வந்த தத்வஹிதங்களை அபேக்ஷித விஸ்தாரமும் அபேக்ஷித ஸங்கோசமுமில்லாதபடி 'ஸமேக்ஷா விவேகாநாம விதாரிதா வசாயவ: । ஸம்ஸ்ஸித்தம் ஸாஸ்த்ரம் ஸாஸ்த்ரஞ்ச ஸாஸ்த்ராஷீஷிணா:' என்கிற கட்டளையிலே உபதேசிக்கப்பெறுகை" என்று ஸ்ரீ விதித்தோபாய சோதநாதிகாரத்தில் வ்யக்தமாகச் சொல்லப்பட்டது.

இன்னும், சிஷ்யாசார்ய லக்ஷணங்கள் 'ஸிஷ்டம் ஸசு ஸம்வத்ஸரம்' இத்யாதி ஸ்லோகத்தாலும்; 'ஸசுவாஸி ஸ்வாயாஸ்வெவீ' இத்யாதிகளாலும் ஸ்ரீ வ்யாஸஸ்ம்ருதியில் பரக்கச் சொல்லப்பட்டன. 'ஸிஷ்டம் ஸசுஸம்வத்ஸரம்' என்கிறதால் ஸர்வேஸ்வரன் தொடங்கி, தன்னளவாக ப்ராப்தமான தத்வஹித புருஷார்த்தமான க்யாதிலாப பூஜா நிரபேக்ஷகாருண்ய பரதந்த்ர ஸதாசார்ய பரம்பரையாலே அவச்சிந்நமாக லப்தமாக இருக்கவேணுமென்பது கருத்து. 'ஸுநவ:' என்பதால் அக்ருத்யங்களான பரதார மமகாரஸ்வாபஹாராதிகளும் க்ருத்யங்களான ஸ்நாந ஸந்த்யோபாஸந பகவதாராதநாத்யகரணங்களும் இல்லாமல் பரிசுத்தனாயிருக்க வேணுமென்பது கருத்து. இப்படி, பரிசுத்தனான ஆசார்யன், 'ஸசுவாஸி ஸ்வாயாஸ்வெவீ' என்று சொல்லப்பட்ட லக்ஷணங்களையுடைய சிஷ்யனுக்கு உபதேசிக்கும்போது, 'ஸயாதி பஸாவாவஸம் தக்ஷாத்தெ உபாதிஸதுதெ: । வ்யூஷஃதெ வாஸஸவா நூவயோதி: விதாஸஹ: ॥ தெதஸ்மாதும் வாசா கஸ்தாய ஸாயஸ் நஷ்டாதடெ - ஸாஸ்ஸதாய தெதெநவ 88 ஸாஸ்ஸதெநவ ॥' இத்யாதி ப்ரமாணங்கள் காட்டின வழி தவறாமல், குருபரம்பராநுஸந்தாந பூர்வகமாகவும்; க்ருதஜ்ஞதாநுஸந்தாந பூர்வகமாகவும் உபதேசிக்க வேணும். அப்படியன்றிக்கே உபதேசிக்கத் தொடங்கினால், உபதேசிக்கும் ஆசார்யனுக்கு லப்தமான ஜ்ஞாநம் வேரில்லாக் கொத்தான்போல் தான் தோன்றியாய், ஸத்ஸம்ப்ரதாய விதித்தமன்றிக்கே புஸ்தக நிரீக்ஷணாதிகளாலே ப்ராப்தமோ வென்று அதிசங்கை உண்டாம். உபதேசம் பண்ணிக்கொள்ளும் சிஷ்யன் 'காவஸ்ஸ்வெஷெ வஸ்தஸ்வாவ:' இத்யாதி நிர்தோக்த க்ரமமாக ஸம்யகுபாஸகனாய், ஸாவதாநனாய், பகவத்பர்யந்த குருபரம்பராநுஸந்தாந பூர்வகமாக தத்வஹித புருஷார்த்த ஜ்ஞாநங்களைப் பெறவேணும். 'ஸாஸ்ஸவ்ருகாஸபெஜீநா ஸ்வஸம்யதெந ஸாவபெக: । ஸவ்ருகாஸ வ்ருகாஸாஸ்யாம் க்ஷீபெதெ ஸம்வதாயாஷ்டீ ॥' என்று குருவை ப்ரகாசிப்பிக்கவேண்டியது ஆவஸ்யகமென்றும், அல்லாதபோது ஜ்ஞாந ஸம்பத்துக்கள் குறைந்துவிடுமென்றும் சாஸ்த்ரம் சொல்லிற்று. 'தான் இந்த ரஹஸ்யங்களை அநுஸந்திக்கும்போதெல்லாம் ஆசார்ய பரம்பரையை அநுஸந்திக்கை விதிபலப்ராப்த' மென்று நம் தேசிகனும் அருளிச்செய்தார். குருபரம்பராநுஸந்தாந க்ரமத்தை 'ஸவாவாயஸம்ஸாஸ்ஜெயொ ஜவதீ-க்ஷவாயண ஸாவஸா விதா ஸமவது:' என்று தத்தத்வ்யக்தி நிர்தேச பூர்வகமாக அநுஸந்திக்க வேணுமென்று ஸ்ருதியே ஸ்பஷ்டமாக மொழிந்தது. மற்றும் ஆசார்ய சிஷ்ய க்ரமங்கள், ஆசார்ய க்ருத்யாதிகார சிஷ்ய க்ருத்யாதிகாரங்களில் பஹுப்ரமாணோபந்யாஸ பூர்வகமாக ஸம்யக்காக ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றன. 'யஸ்வாயஸெண விஸ்ருதெ யஸ்வாயஸெண'

ப்ருச்சதி । தயோரந்யதர: ப்ரைதி வித்வேஷம் வாதிகச்சதி ॥' என்று 'ஶிஷ்யஸ்ஸஹம் ஶாயினோ ஜ்ஞாநம் ஶ்ரவணம்' இத்யாதிகளில் சொல்லப்பட்ட ஶிஷ்ய லக்ஷணத்தோடே கேட்கவேணுமென்றும், 'ஸம்வத்ஸரம் ததர்தம் வா மாஸத்ரய மதாபி வா । பரீக்ஷ்ய விவிதோபாயை: க்ருபயா நிஸ்ப்ருஹோபதிசேத்' என்று ஆசார்யனுக்குச் சொன்ன க்ரமத்தோடே உபதேசிக்க வேணும். அல்லாதபோது ப்ரத்யவாயங்களும், 'அத்ருஷ்டவஜ்ஜாதிம் ஸம்ஸ்காரம் பஞ்சமாஸம் விசயேத் விஷய: । ஸ்வயோபதேஷ்டா ஸகந ஶாஸ்த்ரம் ஸந்தாநார்த்தம் த்ருஷ்ட்வோபதேசேத்' என்று பூஜாலாபாதிகளைக் கணிசித்து உபதேசித்தால் ஸந்மார்க்க ப்ரச்யுதியும் நேரிடுமென்று சொல்லப்பட்டது. 'வ்ருஷ்டோபி நவதேத் ப்ராஜ்ஞ: ஹ்ருஹ்யம்ஸம்விஜ்ஞாநசைவ ।' இத்யாதிகளால் குணமுடைய ஶிஷ்யனுக்கும் கடுக உபதேசிக்கக்கூடாதென்றும் சொல்லப்பட்டது. 'இப்படிக் குணாதிகர்களான ஶிஷ்யர்களுக்கும் அத்யாத்ம விஷயங்களைக் கடுக உபதேசியாதார்க்கு நிந்தைடகுலையாதென்னுமிடம், சைவாதி வ்ருத்தாந்தங்களிலே ப்ரஸித்த' மென்று நம் தேசிகனும் அருளிச்செய்தார்.

இப்படி ப்ரமாண ஸம்ப்ரதாயங்கள் இருக்கச் செய்தேயும், இக்காலத்தில் ஹூணஸ்த்ரீ முதலானவரிடத்தும், ஹூணபாஷா வ்யாக்யாந புஸ்தகங்களாலும், அத்யாத்ம ஜ்ஞாந ஸம்பாதநம் முக்ய கல்பமாக இருக்கிறது. இன்னமும், அத்யாத்ம ஜ்ஞாந ஸம்பாதந க்ரமத்தில் விசேஷமுண்டு. அதாவது: வித்யமாந தசையில் ராஜா ஹூணனாகையால், அவன் தன் பாஷையில் ஸமர்த்தனாய் உபஸர்ஜநமாக ஸம்ஸ்க்ருத பாஷையில் ஜ்ஞாநமுள்ளவனுக்குத் தன்னுடைய ராஜ்யத்தில் தண்டநாதிகாரம் முதலான அதிகாரமும், தத்ப்ரயுக்தமாக விசேஷ த்ரவ்யம் கொடுப்பதாயும், ப்ரஸித்தமாக ப்ரகடநம் பண்ண, அதைக் கேட்ட உத்தம ஜாதீயரான ப்ராஹ்மணர்களும், அதில் விசிஷ்டாத்வைத ஸித்தாந்திகளான நம்தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களும், 'ந ம்லேச்சபாஷா



வந' என்று ஶாஸ்த்ர நிஷித்தமாயிருக்கச் செய்தேயும், வ்ருத்தி கர்சிதர்களாய் ஹூணபாஷாப்யாஸமும் அதற்கு சேஷபூதமாக ஸம்ஸ்க்ருத பாஷாப்யாஸம் பண்ணும்போது, இக்காலத்தில் அத்யேதோபநீயமான ஸித்தாந்தார்த்த ப்ரதிபாதகமான க்ரந்தங்கள் முத்ரணம் பண்ணியிருப்பதால், உள்ள அறிவைக் கொண்டு யதேச்சையாய்ப் பார்க்கத் தொடங்க, அர்த்தமாகாத அம்சத்தை, ஸாதுக்களாய் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தியுடையவர்களைக் கேட்க, அவர், 'ரஹஸ்யதமார்த்தங்களை ஸஹஸா சொல்லக்கூடா' தென்று சொல்ல, 'இப்படி நீங்கள் சொல்லி நம் ஸித்தாந்தம் லுப்தமாய் ப்ரஸித்தமாகாமற் போய்விட்ட' தென்று அவர்களை வெறுத்து, ஸாமாந்ய ஶாஸ்த்ர பரிச்ரமத்தாலாவது ஆசார்ய ஸகாசத்தில் கேட்டாவது ஜ்ஞாநமுடைய த்ருஷ்டர்களிடத்தில் க்ரமமொழிய ரஹஸ்யதமார்த்தங்களைக் கேட்டும், 'வஞ்சிதைகமய்காவஞ்ஞா த்வண்ஷீ ஶிசிவஸ்யம் । அத்தாவஸம் ஸ்வதந்த்ரஸம் ஸ்வதந்த்ரோவகாணீக்ருத: ॥' என்கிற அவஸ்தையையுடைய த்ருஷ்டர்களிடத்தில் ஓர் காலவிசேஷத்தில் ஓர் ஸ்தலவிசேஷத்தில் அநேகம் பேர்கள் திரளாய்த் தத்வஹித புருஷார்த்தங்களை யதேச்சமாய் க்ரமமொழியக்கேட்டும் ஜ்ஞாந ஸம்பாதநம் பண்ணிக்கொள்ளுகிறதும் தவிர, நம் ஸித்தாந்தம் ப்ரஸித்தமாக வேணுமென்றும், அதற்கு ஸித்தாந்த க்ரந்தங்களையெல்லாம் முத்ரணம் பண்ணி ஓர் ஸ்தலவிசேஷத்திலே வைத்து, எல்லாரும் யதேச்சமாய்ப் பார்த்துக்கொள்ளவும், ஸித்தாந்தம் ப்ரஸித்தமாம்படி த்வீபாந்தரங்களுக்குக் கோசங்களை அனுப்பவேணுமென்று நிச்சயம் பண்ணி, அர்த்தார்ஜநத்துக்காக ஓர் ஸபை சேர்த்து, அந்த ஸபையில் அத்யக்ஷராக ஒருவரை ஏற்படுத்தி, அவர் அதிகாரிகளும் அநதிகாரிகளும் வைதிகரும் வேதபாஹ்யரும் சேர்ந்த ஸதஸ்ஸில் எழுந்திருந்து க்ரமமொழிய தத்வஹித புருஷார்த்த ப்ரதிபாதக சில பாகங்களை அம்பலத்தில் அவல்பொரிபோல் உபந்யாஸம் பண்ணுகிறார்.

இவையெல்லாம் பூர்வோக்த ப்ரமாண ஸம்ப்ரதாயங்களுக்கும் ஸர்வேஶ்வரன் முதலாக ஸ்தாசார்ய ஸம்ப்ரதாய ஸுஷமதங்க.

ளாய் ஸிம்ஹி ஸ்தந்யம்போல் விஜாதீயர்க்கு த்ஸங்கெரியாத ரஹஸ்யத்ரயார்த்தங்களை ஸங்க்ரஹேண சேர்த்துத் தாங்கள் அநுஸந்தித்து, '[illegible]



[illegible] ॥ ''

என்று ஸ்ரீ ஸாத்வத பகவத்கீதா வசிஷ்டாதி ஸம்வாத ஶாண்டில்ய ஸ்ம்ருதி ஸாத்வத தந்த்ராதிகளில் சொல்லப்பட்டிருக்கிறபடியே, ஶரண்யன் அநுமதி பண்ணும்படிக் கீடான ஸாத்விக தாஸ்திக்யாதி குணங்களையுடையராய், '[illegible] ॥ ' என்றும், '[illegible]' என்று சொல்லப்பட்ட தைவப்ரக்ருதிகளுக்கு 'ஸம் [illegible]

[illegible] இத்யாதிகளிற் சொன்ன பரீக்ஷாதி மூலகுண நிஶ்சய பூர்வகமாக '[illegible]' என்கிற மவர்ணதையிலே அஷட்கர்ணமாக வெயிட்டு, '[illegible]' என்றும், '[illegible]' என்றும் சொல்லப்பட்ட அஸுரப்ரக்ருதிகளுக்கு மறைத்து, "சிறியதந்தையுடையார் சேமித்து வாழுமாப்போலே சரிகார்த்தராய் வர்த்திப்பார்கள் பூர்வாசார்யர்கள்" என்று ஆசார்ய க்ருத்யாதிகாரத்தில் பஹு ப்ரமாணோபந்யாஸ பூர்வகமாக நிர்த்தாரணம் பண்ணின க்ரமத்துக்கும் விருத்தமாகையாலே ப்ரமாண ஶரணராய் ஸாத்விகாஸ்திக்யாதிகளையுடையவர்களுக்கு ஆதரணீயமாகமாட்டாது. கிஞ்ச - ஜ்ஞாந ஸம்பாதகம் பண்ணி ஸித்தாந்தத்தைப் பரவச்செய்ய வேணுமென்று நினைத்தார்களேயல்லாமல், '[illegible]' இத்யாதி ப்ரகரணங்களில் ப்ரதிபாதித அர்த்தங்களை நெஞ்சில் கொள்ளாமல் '[illegible]' '[illegible]' இத்யாதி ப்ரமாணங்களால் சொல்லப்பட்ட ஸதாசாரங்களில் ஊற்றமும் மந்தமாயிருக்கிறது. அதெங்ஙனேயென்னில், '[illegible]' என்று ஸர்வ கர்மயோக்யதாபாதகமாய் மந்த்ர ப்ரயோக ஸ்நாநத்தை ஶ்ராத்தாதி விஶேஷ காலங்களிலும் ப்ரா



யேண அநுஷ்டிக்கிறதாகக் காணப்படவில்லை. '[illegible]' என்று உபஹதனுக்கு உஷ்ணோதக ஸ்நாநம் நிஷித்தமாயிருக்க, சண்டாலாத்ய ஸ்ப்ருஷ்ட ஸ்பர்ஶாதிகளிலும் அநேக காலம் ஸஞ்சித அழுக்கோடேகூடின பாத்ர விஶேஷத்தில் வைத்த உஷ்ணதீர்த்தத்தாலேயே ப்ராயேண ஸ்நாநம் பண்ணுகிறார்கள். '[illegible]' என்கிற ப்ரமாணங்களால் ஸ்நாநமன்றிக்கே டஜிங்கையும் ப்ரகவத்நிவேதிதத்தைப் புஜிக்கையும் நிஷித்தமாயிருக்க, ஸ்நாநத்பூர்வம் காபிக்கொட்டை என்கிற வஸ்து விஶேஷத்தை அதீரஶர்க்கரா யுக்தமாய்ப் புஜிக்கிறார்கள். '[illegible]' என்று அஹோராத்ர க்ருத்யத்தில் ப்ரதாநமான பகவதாராதநத்தைத் தவிர்த்த ப்ராயேண புஜிக்கிறார்கள். இது திங்மாத்ர ப்ரதர்ஶநம். மற்றும் விபரீதாசாரங்கள் எழுதமுடியாமல் விரமிக்கப்படுகின்றன.

இக்காலத்தில் இன்னமும் ஶாஸ்த்ர ஸம்மதியில்லாத சில ஆசாரங்களுண்டு. அதாவது: ஸ்ரீதேசிகன் உத்ஸவகாலத்தில், ஸ்ரீபாஷ்ய ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாராதி க்ரந்தங்களைப் பரீக்ஷித்து ஸம்மாநம் பண்ணுவதாக ப்ரவித்தம் பண்ணி, ரஹஸ்யார்த்த ஶ்ரவணாதிகாரிகளும் சேர்ந்து ஒரு ஸபை சேர்த்து, அந்த ஸபையில் ப்ராஜ்ஞராயும் ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டராயும் ஸத்ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராயுமிருந்துள்ள ஒருவர் ரஹஸ்யதமார்த்தங்களைத் திரளிலே கேட்க, '[illegible]' என்றும் 'மந்த்ர மந்த்ரார்த்தங்களைச் சில்வான ப்ரயோஜநங்களுக்கு வெளியிடாதே மிகவும் சேமிக்கவும் ப்ராப்தம்' என்றும், ப்ரமாணமும் நம் தேசிகனும் சொல்லியிருக்கச் செய்தேயும், அர்த்த த்ருஷ்ணாவஶம்வதரான பண்டிதர்கள் ரஹஸ்யதமார்த்தங்களை அநதிகாரி

செவியில்பட உபந்யஸிக்க, இவைகளை யெல்லாம் ஶாஸ்த்ர தத்வார்த்தத்தைப் பாராமுகியாமல் குணமாக ஸம்ப்ரதாய நிஷ்ணாதர்கள் ஶ்லாகிக்கவும் இருக்கிற ப்ரகாரங்கள். 'ஶ்ரீமத்ராமாயணம் ஸகலம் உபாதேயம் ஸதாம் விது: |' என்றும் ஶ்ரீவால்மீகி பகவானாலே த்ருஷ்டமாயிருப்பதொரு ஶாஸ்த்ரம் வேதமென்றும் ப்ரமாண ஸம்ப்ரதாயங்களால் ஶ்ரேஷ்டமான ஶ்ரீமத்ராமாயணத்தின் அர்த்தத்தைப் பெரிய திருமலைநம்பி ஸந்நிதியில் ஶ்ரீபாஷ்யகாரர் அர்த்தம் கேட்டதாக ஐதிஹ்யம்; ஶ்ரீபாஷ்யகாரருக்குப் பஞ்சாசார்யரென்று நம் தேசிகன் திருவுள்ளம் பற்றியிருக்கச் செய்தேயும், ஸதாசார்ய கடாக்ஷம் பெற்ற ப்ராஜ்ஞரும் அதிகாரிகளான ஸ்த்ரீ ஶூத்ரர்களுக்கும் 'ஶ்ராவயேச் சதுரோ வர்ணான் க்ருத்வா ப்ராஹ்மணமக்ரத: |' என்றும், ப்ராஹ்மண புரஸ்ஸரமாகச் சொல்லவேண்டியிருக்க, ஶூத்ர க்ருஹத்துக்குப் போய் ஶூத்ரர்களுக்கு ஶ்ரீமத்ராமாயணார்த்தத்தைச் சொல்லுகிறதும், 'ஸஹஸ்ரம் வா ஶதம் வாபி காயத்ரீம் ப்ரஜபேத் த்விஜ: | ஜ்ஞானாஸ்ரமாய் யதிநோ ... ' என்று நீசாக்ஷராதாலே இருந்த ஸமாஜத்திலிருக்கிற அதிகாரிகளுக்குச் செய்யவேண்டியவற்றிலும் தவிர வேண்டியவற்றிலும் ஶாஸ்த்ரமே நைவினக்காகையால் உக்த ப்ரகாரங்களெல்லாம் ஶாஸ்த்ர ஸம்மதங்களல்லாமையால் ப்ராமாணிகரான பண்டிதர்களுக்கு ப்ரஶம்ஸா விஷயமாகமாட்டாத வளவன்றிக்கே அருந்துதமாயிருக்கும். ஆகையாலே தான் இவ்வைபரீத்யங்களையெல்லாம் நினைத்து 'கலௌ ... விபரீத ... ' என்று மஹர்ஷி அருளிச் செய்தான்.

[illegible]

[illegible]

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:.

ஶ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேஶிகாய நம:.

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## (1)

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, திருவாரூர்.

### மூன்றாவது வார்ஷிக மஹோத்ஸவம்.

நாளது ரௌத்ரி ஆடிமீ 9௳ (24-7-20) சனிக்கிழமை மாலை $2\frac{1}{2}$-மணிக்கு மடப்புரம் ஸ்ரீ பெருமாள் ஸந்நிதியில் ஷை ஸபை கூடி, இந்த ஸபையின் மூன்றாவது வார்ஷிக மஹோத்ஸவம் நடைபெறுகின்றது. அப்பொழுது சென்னை ஸ்ரீ. உ. வே. S. வாஸுதேவாசார்ய ஸ்வாமி B. A., L. T., அக்ராஸனம் வகித்து ஸபையை உபக்ரமிப்பதாய் திருவுள்ளம்பற்றியிருக்கிறார். பின் வருமாறு விஷயங்கள் நடைபெறும். ஆஸ்திகர்களாயுள்ள ஸகலரும் அக்காலத்தில் அவ்விடத்திற்கு எழுந்தருளி ஸதஸ்ஸை அலங்கரிக்கவேணுமென்று பிரார்த்திக்கப்படுகிறது. 1. ஸ்ரீ. உ. வே. வேளுக்குடி சேஷாத்ரியய்யங்கார் ஸ்வாமியால் "ஸ்வாகத நிவேதனம்". 2. அக்ராஸனாதிபதியின் உபந்யாஸம். 3. காரப்பங்காடு ஸ்ரீ. உ. வே. இடாம்பி வெங்கடாசார்ய ஸ்வாமியால் "பரதன் முதலானவர்கள் ஸ்ரீராமனை அனுவர்த்தித்த ப்ரகாரம்". உபந்யாஸம். 4 ஸ்ரீ. உ. வே. தில்லையம்பூர் சக்ரவர்த்தியாச்சார்யஸ்வாமியால் "பகவத் விஷயத்தின் ஸ்வரூபம்". உபந்யாஸம். இரவு $8\frac{1}{2}$-மணிக்குமேல் "ஹரி கதை" அல்லது "புராண ப்ரவசனம்".

T. ஸ்ரீநிவாஸய்யங்கார்,
காரியதரிசி.

## (2)

## ஸ்ரீ சரஸ்வதி விலாஸ கல்விக்கழகம்.

### திருவண்ணாமலை.

நமது தமிழ் பாஷையில் நமது முன்னோர்கள் நம்மிடத்தில் பரமகருணையினால் இயற்றியுள்ள ஆதிசங்கநூல்கள், திருக்குறள், நாலாயிர திவ்யப்பிரபந்தம், தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், கம்பராமாயணம், அஷ்டப்ரபந்தங்கள், தேசிகப்பிரபந்தம் முதலான அளவிறந்த அரியபெரிய தமிழ் நூல்களை ஆராய்ச்சிசெய்யவும், அவ்வாராய்ச்சியின் பயனை பிரசங்கமூலமாக ஸம்சோதரர்களுக்கு அக்கிரகாரங்களில் அவரவையுண்டுபண்ணி தத்வாராபக்தியை மூட்டி நற்கதியடையும்படி செய்யவும் ஆகிய இந்த இரண்டு முக்கிய நோக்கங்களுடன் "ஸ்ரீ ஸரஸ்வதிவிலாஸ கல்விக்கழகம்" என்னும் ஓர் தமிழ்க்கழகம் இவ்வூர் ஸ்ரீ சரஸ்வதிவிலாஸத்தில் அமைக்கப்பெற்று சென்ற மூன்றுமாதங்களாக உழைத்துவருகின்றது. இக்கழகத்தில் தற்காலம் 20 பேர்கள் அங்கத்தினர்களாக இருக்கின்றார்கள். பிரதிசனிவாரம் மாலை 4-மணி முதல் 6-மணி வரையில் இவ்வூர் ஸ்ரீ ஸரஸ்வதிவிலாஸத்தில் தற்காலம் ஒருவாரம் பெரியபுராணமும், மற்றொருவாரம் நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தில் ஒரு பகுதியாகிய "பெரியாழ்வார் திருமொழியும்" பிரஸங்க மூலமாக ஆராய்ச்சி செய்யப்பட்டுவருகின்றது. இச்சபையினுதவியில் ஒரு சிறு புஸ்தகாலயமும் ஒரு இலவச வாசகசாலையும் ஸ்ரீ ஸரஸ்வதிவிலாஸத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. புத்தகாலயத்தில் தற்காலம் ஏறக்குறைய நூறு தமிழிலக்கியங்களிருக்கின்றன. வாசகசாலையில் "நியூ இந்தியா" "ஜஸ்டிஸ்" "சுதேசமித்திரன்" "தேசபக்தன்" "செந்தமிழ்" "வேதாந்த

தீபிகை" "சித்தாந்தம்" முதலிய தமிழ் ஆங்கிலப்பத்திரிகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஸமயம் வாய்க்கும்பொழுது வெளியூர் வித்வான்களை வரவழைத்துப் பிரஸங்கங்கள் வைக்கத்தக்க நன் முயற்சி நடந்துகொண்டிருக்கின்றது. இவ்வூரிலுள்ள பலகன தனவான்கள் "ஸ்ரீ சரஸ்வதிவிலாஸ் கல்விக்கழகம்" என்னும் இக்குழந்தையை ஆதரித்து மேன்மேலும் விருத்திக்கு கொண்டுவருமாறு பிரார்த்திக்கின்றனன்.

நாட்டு பார்த்தசாரதி அய்யங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:.

## அரசாங்க சீர்திருத்தம்.

(பப்ளிஸிடி பீரோவிலிருந்து.)

மாட்சிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியார் இந்தியாவின் அரசாட்சி சம்பந்தமாக சில புதிய ஏற்பாடுகளை அங்கீகரித்தாரென்பதும் அப்புதிய ஏற்பாடுகள் இன்னும் சில மாதங்களுக்குள் நடவடிக்கைக்கு வருமென்பதும் யாவருக்கும் இப்பொழுது தெரிந்த விஷயம்.

இப்புதிய ஏற்பாட்டுக்கும் பழைய ஏற்பாட்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? புதிதாக எவ்விதமான அதிகாரங்களும் உரிமைகளும் சென்னை மாகாணவாசிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன?

தற்கால ஏற்பாட்டின்படி கனம்பொருந்திய கவர்னரும் அவரது நிர்வாக சபையும் இராஜதானியின் நிர்வாகங்களை நடத்திவருகிறார்கள். இவ்வாளுகை இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் திருப்தியுண்டாகுமாறு சென்னை கவர்னர் நன்றாக நடத்தவேண்டும்.

மேலும், தற்கால ஏற்பாட்டின்படி சட்ட நிருபண சபை, உத்தியோக முறையில் அங்கத்தினராக இருப்பவர்களையும் சேர்த்து மொத்தம் 46 அங்கத்தினர்களோடு கூடியது ஆகும். அவர்களில்:—

| | |
|---|---|
| உத்தியோகஸ்தர்கள் ... ... ... ... | 12 |
| கவர்னரால் தெரிந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரல்லாதவர்கள் ... ... ... ... ... | 13 |
| குடிகளால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் ... ... | 21 |
| ஆக மொத்தம் ... | 46 |

இவ்வாறு குடிகளால் தெரிந்தெடுக்கப்படும் 21 அங்கத்தினரில் இருவர் மகம்மதியராலும், மற்றவர்கள் ஜமீன்தார்களாலும், பெரிய மிராசுதாரர்களாலும், வியாபாரிகளாலும், தோட்டக்காரர்கள் (Planters) ஆலும், ஜில்லா தாலூக்கா போர்டுகளின் மெம்பர்களாலும் முனிஸிபல் கவுன்ஸிலர்களாலும், சென்னை சர்வகலா சபையாராலும், சென்னை கார்பொரேஷன் கவுன்ஸிலர்களாலும் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

இந்த சபைக்கு அனேக அதிகாரங்கள் உண்டு இதன் அனுமதியின்றி யாதொரு புதிய சட்டமும் ஏற்படுத்த முடியாது. இதின் அங்கத்தினர்



கேள்விகள் மூலமாய் துரைத்தனத்தின் நோக்கங்களை அறிந்துகொள்ளலாம். அன்றியும் இவர்கள் பொதுஜனங்கள் விருப்பங்களை சபையில் பேசி அவற்றை தீர்மானங்களாக சபையினர் அங்கீகரிக்குமாறுசெய்து ஜனங்களின் அபிப்பிராயத்தை துரைத்தனத்தாருக்குத் தெரிவிக்கவுங்கூடும். ஆனால் இப்புதிய ஏற்பாடு செய்ய தீர்மானித்ததற்கு இரண்டு காரணங்கள் உள. முதலாவது, துரைத்தனத்தார் இச்சட்டசபையின் தீர்மானங்களின்படியே நடக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இந்தியா துரைத்தனத்தாரின் நோக்கமும், இச்சட்டநிருபண சபையாரின் நோக்கமும் ஏதாவதொரு விஷயத்தில் ஒத்திராவிட்டால், மாகாண துரைத்தனத்தார் இந்தியா துரைத்தனத்தாரின் சொற்படியே நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவது, இச்சட்டசபையின் அங்கத்தினரில் பாதிக்குமேல் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாகவும் அல்லது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். அன்றியும் மற்றவர்களோ, 7,000 செல்வாக்குள்ள பணக்காரர்குடிகளால் மாத்திரம் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். ஆதலால் குடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களை அதிகப்படுத்தவேண்டுமென்றும் எலக்ஷனில் இன்னும் அநேக ஜனங்களுக்கு செல்வாக்கு இருக்கவேண்டுமென்றும் எல்லோரும் நிர்பந்தித்திருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

முதலாவது:—சட்டசபையின் அங்கத்தினரில் பெரும்பான்மையோர் குடிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். புதுச்சபையின் அங்கத்தினர் 127 பேர்கள். இவர்களில் குடிகளால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் 98. அன்றியும் முன்போல பணக்காரர்களும் பட்டாதாரர்கள் மட்டும் தான் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றிருக்கவில்லை. அநேக சிறு குடிகளும் சொற்ப சொத்துள்ள ஏழைகளும் கூட 'வோட்' கொடுக்கும் அதிகாரம் பெறுவார்கள். ஆகவே புதுச்சபையின் அங்கத்தினர் முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகமான இவ்விராஜதானியின் ஜனங்களின் மனோபாவத்தைச் சட்டசபையில் எடுத்துப்பேசக்கூடியவர்கள் ஆவர்.

இரண்டாவது:—முக்கிய அம்சம் என்னவென்றால், இனி சில இலாகா ஸம்மந்தப்பட்டவரையில் இந்தியா கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயப்படியேதான் மாகாண துரைத்தனத்தார் நடக்கவேண்டுமென்பது இல்லாது இனி ஏற்படும் சட்டசபைக்கு இஷ்டப்படி நடக்கவேண்டு மென்பதேயாம். இவ்விதம் விடப்பட்ட இலாகாக்களுக்கு 'மாற்றப்பட்ட இலாகாக்கள்' என்று பெயர். அவை கல்வி, விவசாயம், ஜில்லா தாலூக்கா போர்டுகள், முனிஸிபாலிடிபோன்ற மற்றும் சில முக்கியமானவைகள். இனிமேல் இவ்விலாகாக்கள ஸம்பந்தப்பட்டவரையில் மாகாண துரைத்தனத்தார், சட்டசபையைத் திருப்திசெய்யவேண்டுமே யல்லாது இந்தியா கவர்ன்மெண்டை திருப்திசெய்ய வேண்டியதில்லை.

இதற்காக, இனிமேல், அடியில் குறித்த ஏற்பாடுகள் செய்யப்படும். கனம்பொருந்திய கவர்னர் புதுச்சபையில் அங்கத்தினரிலிருந்து இரண்டு மூன்று மந்திரிகளை நியமிப்பார். இப்பொழுது கவர்னரும் நிர்வாக சபையிலுள்ள மெம்பர்களைப்போல மந்திரிகள் கல்வி, விவசாயம் முதலிய பிரித்துக்கொடுத்த இலாகாக்களின் வேலைகளை நடத்திவருவார்கள். இவ்விலாகாக்களின் வேலைகளைச் சபையோர்களுக்குத் திருப்தியாகவும் விவேகத்தோடும் மந்திரிகள் நடத்திவரவேண்டும். அவ்விதம் அவர்கள் நடந்துகொள்ளா

விட்டால், அவர்கள் இலாகாச் செலவுக்குத் தேவையான பணத்தைக் கொடுக்க இச்சபை மறுத்துவிடலாம்.

இப்புதிய ஏற்பாட்டினால் மேலே எடுத்துக்காட்டிய சுதந்தரங்களைத் தவிர இன்னும் அநேக விஷயங்களில் புதிய அதிகாரங்களும் விருத்தி செய்யத்தக்க சமயங்களும் இம்மாகாண வாசிகளுக்கு வாய்க்கும். ஆனால் முக்கியமானவை மேலே கூறிய இரண்டு அம்சங்களேயாம். மந்திரிகளின் ஆதீனத்தில் எந்தெந்த இலாகாக்கள் விடப்படும் என்பதையும், யார் யார் 'வோட்' கொடுக்கலாம் என்பதையும், இன்னும் மற்ற விவரங்களையும் மற்றொரு வியாசத்தில் வெளியிடுவோம். ஆனால் இப்பொழுது அடியிற்கண்ட ஒரு விஷயத்தை மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நலம். நடப்பு வியாசத்தை வாசிப்போரில் ஏறக்குறைய எல்லோரும் புதுச்சட்ட சபையின் அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கும் நிமித்தம் 'வோட்' கொடுக்க அருகர்களாகவே யிருப்பீர்கள். நீங்கள் தெரிந்தெடுக்கும் அங்கத்தினரிலிருந்தேதான், கவர்னர் தன் மந்திரிகளை நியமிப்பார். இப்புதிய மந்திரிகள் வியவசாயம், கல்வி, ஜில்லா தாலூகா போர்டுகள், பஞ்சாயத்துகள், முனிஸிபாலிடி முதலிய விஷயங்களையும் மற்றும் இதர முக்கியமான விஷயங்களையும் கவனித்து நடத்தவேண்டியவர்கள்.

அவர்கள் வியவசாயத்தை அபிவிருத்திசெய்ய என்ன முயற்சிகள் செய்யவேண்டும், புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த முடியுமா, பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு கட்டாயம் அனுப்ப வேண்டியது அவசியமா பள்ளிக்கூடத்தில் என்ன என்ன பாடங்கள் சொல்லிக்கொடுக்கவேண்டும், ஜில்லா போர்டுகள், கிராமங்களில் புதிய பாதைகளைப் போடவேண்டுமா, அதற்காக புதிய வரி வசூல் செய்யவேண்டுமா என்பவைகளை தீர்மானிக்கவேண்டியவர்கள் ஆவார்கள். மேற்சொல்லிய விஷயங்களையும், இன்னும் இதுபோன்ற முக்கியமான இதரவிஷயங்களையும் இம்மந்திரிகளே யோசித்து சட்டசபையின் மற்ற அங்கத்தினருடன் கலந்துபேசி முடிவுசெய்து அவர்கள் சம்மதத்தையும் பெறவேண்டும். மந்திரிகள் மதியோடு தீர்மானிக்காவிட்டாலும் சரி, அல்லது அவர்கள் சரியாகத் தீர்மானித்ததை சட்டசபையின் இதர அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் இராஜாங்க காரியமும் கெட்டு, ஜனங்களும் கஷ்டப்படுவார்கள். ஆகையால் சட்டசபையின் அங்கத்தினரைத் தெரிந்தெடுக்க உங்களுக்கு 'வோட்' உரிமையிருந்தால், எவன் ஒருவன் தானும் விவேகத்தோடு இம்மாதிரி விஷயங்களில் முடிவுக்கு வரக்கூடியவனோ அன்றோடு சரியான ஆலோசனை செய்யக்கூடியவனோ அத்தகைய சரியான ஆலோசனை செய்யும் மந்திரிகளோடு கூடி உழைப்பவனோ அவனை நீங்கள் பொறுக்கி யெடுக்கவேண்டும்.

மற்றொரு விஷயத்தையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது நமது மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியார் இப்புதிய ஏற்பாட்டின் மூலமாக இந்தியா தேசத்து ஜனங்களுக்கு, புதிய அதிகாரங்களையும் உரிமைகளையும் அளித்தபோது நாம் இப்பொழுது கொடுத்த புதிய அதிகாரத்தைச் சரிவரச்செலுத்தி பொறுப்பைச் சரியா வகித்துவரும்பக்ஷத்தில் மேன்மேலும் அதிக அதிகாரங்களையும் உரிமைகளையும் நமக்கு வழங்கப்போவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்பதே.

(இன்னும் வரும்).

ஸ்ரீ:.

[illegible]

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசாரியர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 10.] ரௌத்ரி ஆடி [ஸஞ்சிகை 10.

“[illegible] ।” [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

“நமது தேசத்தில் ஸ்வார்த்தமாக ஜனங்கள் மோக்ஷாந்வேஷணம் செய்துவந்தனர். இத்தகைய ப்ரவ்ருத்தியானது பல நூற்றாண்டுகளாக மிகவும் பரவியிருக்கிறது. அதற்கு ஒருமதியவிடக் காலம் வாய்த்தது. க்ருஹஸ்த தர்மங்களை அவதானத்தோடும் ஸ்ரத்தையோடும் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்து, ஸாஸ்த்ரங்களுடைய நிஜமான தாத்பர்ய விருத்தமாக இப்போது பாவியிருக்கப்பட்ட த்யாக ஸ்வரூபத்தினுடைய அபார்த்தங்களை நிரஸிப்பது அவஸ்யமாயிருக்கின்றது.” என்றிவ்வண்ணம் டாக்டர் ஸுப்ரமண்ய அய்யரவர்கள் அபிப்ராயப்பட்டனர். அவ்வபிப்ராயம் தோஷயுக்தம். தோஷம் நியாஸபி ஜனங்களுடைய ஸம்ஸர்க்க ஜந்யம்.

க்ருஹஸ்த தர்மங்கள் மோக்ஷோபாயங்களாகுமென்று, மேலே விவரித்த அபிப்ராயம் காட்டவில்லை. அவை மோக்ஷோபாய

நிஷ்டனுக்கு நிர்யாண பர்யந்தம் பகவத்ப்ரீதியின் பொருட்டும், உபாயத்வ ஶங்கையின்றியும் பண்ணத்தக்கவை யென்று வேதாந்த நிஸ்சயம். மேலெழுதிய அபிப்ராயத்தில் ஸாவதாந ஶ்ரத்தா ஶப்தங்கள் வேதாந்த நிஸ்சயத்தை ப்ரகாசிப்பிக்கமாட்டா. ப்ரகாஶிப்பதாக எண்ணியபோதிலும், ஶ்ருதி விஹிதங்களானபடியாலும், உபாய ஸஹகாரிகளாய் ஸர்வாஶ்ரம கர்மங்கள் அநுஷ்டிக்கத்தக்கவை யென்று வேதாந்த நிர்ணய மிருக்கின்றபடியாலும் அவற்றின் கேவலாநுஷ்டானம் மோக்ஷோபாயமாகமாட்டாது. மோக்ஷமும் தேவையில்லை. ததர்த்தம் ஒரு உபாயத்தில் அந்வயமும் வேண்டாமென்று டாக்டர் ஸுப்ரமண்யருக்கு உபதேசம் பிறந்ததோ?

மோக்ஷமென்பது யாரோ ஒருவர்க்கு ஶரீராவஸாநத்தில் ப்ராப்தமாகுமென்று யோசிக்கத்தக்கது. மோக்ஷத்தின் பொருட்டோ, ஶரீராந்தர ப்ராப்தியின் பொருட்டோ, ஶரீரத்தினின்று விடுபட்ட ஜீவன் தனிமையிலதான் ப்ரயாணிக்க வேண்டியவன். அப்போது அந்யரைப்பற்றிச் சிந்திக்க அவனுக்கு அவகாஶம் உண்டோ? ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் யாஜ்ஞவல்க்ய ஜநக ஸம்வாதாந்தத்திலே, ஶரீரத்தினின்று உத்க்ரமிக்கும் ஜீவவிஷயமாக, "ஸவிஜ்ஞாநோ பவதி, ஸவிஜ்ஞாநமேவாந்வவக்ராமதி। தம் வித்யாகர்மணீ ஸமந்வாரபேதே, பூர்வப்ரஜ்ஞா ச।" என்னும் வாக்யங்கள் காணப்படுகின்றன. இவற்றின் தாத்பர்யத்தை விவரிப்பதில், ஸ்ரீ ஶங்கராசார்யர், ததா ஸ ஏஷ ஆத்மா ஸ்வப்ந இவ விஶேஷ விஜ்ஞாநவாந் பவதி கர்மவஶாத், ந ஸ்வதந்த்ர:। ஸவிஜ்ஞாநமேவ கந்தவ்யம் அந்வவக்ராமதி। தஸ்மாத், தத்காலே ஸ்வாதந்த்ர்யார்த்தம் யோக தர்மாநுஸேவநம் பரலோகஸம்வ்யவஹார ப்ரஜ்ஞாஸம்ஸ்காராப்யாஸஶ்ச விஶேஷத: புண்யோபசயஶ்ச ஶ்ரத்ததாநை: கர்தவ்ய இதி, ஸர்வஶாஸ்த்ராணாம் யத்நத: விதேயோऽர்த்த:। துஷ்க்ருதாச்சோபரமணம்। ந ஹி தத்காலே ஶக்யதே கிஞ்சித் ஸம்பாதயிதும்। கர்மணா நீயமாநஸ்ய ஸ்வாதந்த்ர்யாபாவாத்। தம் பரலோகாய கச்சந்தம் ஆத்மாநம் வித்யா ச, கர்ம ச, பூர்வப்ரஜ்ஞா - அதீத கர்ம



ஃலாநுபவவாஸநா ச, அந்வாரபதே। ந ஹி தயா வாஸநயா விநா கேந கேஷாஞ்சித் கர்ம கர்த்தும் ஶக்யதே। பூர்வாநுபவவாஸநா ப்ரவ்ருத்தாநாம் ஹீந்த்ரியாணாம் அப்யாஸ கௌஶலம் உபபத்யதே। * * * தஸ்மாத் வித்யா கர்மணீ ஶுபே ஏவ ஸமாசரேத்।" என்கிறபடி யோசிக்கின்றார். அந்திம ப்ரயாண காலத்தில், ஜீவன், தனக்குப் பின்னால் ஸம்பவிக்கப் போகின்ற ஜந்ம ப்ரயுக்த ஜ்ஞாநவானாய், அதை அநுஸரித்து ப்ரயாணிக்கின்றான். தன்னால் ஸம்பாதிதங்களான வித்யை கர்மம் பூர்வ வாஸனைகளோடு அவன் ப்ரயாணிக்கின்றான் என்கிறபடியே ஶ்ருத்யர்த்தம். ஶங்கரபாஷ்யார்த்தம் இவ்வண்ணம் இருக்கின்றது:- "உத்க்ரமண காலத்தில் ஜீவாத்மாவானவன் ஸ்வப்ந தசையில் போல் கர்மவஶத்தால் விஶேஷ விஜ்ஞாநவானாகின்றான்; அப்போது அவன் ஸ்வதந்த்ரனல்லன்; ஆதலால் வரப்போகின்ற ஜந்மவிஷய ஜ்ஞாநத்தோடு அதை அநுஸரித்துச் செல்கின்றான்: ஆகையால், அக்காலம் ஸ்வாதந்த்ரியத்தை ஸம்பாதிக்கும்படியாக ஶ்ரத்தையுடன் கூடிப் பரலோகத்தை ப்ரார்த்திக்கின்றவர்களால், ஸாவதாநத்துடன் யோகாநுஷ்டானமும், புண்யகர்மங்களும் செய்யப்படவேண்டுமென்று ஸர்வஶாஸ்த்ரங்களும் விதிக்கின்றன; துஷ்கர்மங்களினின்று நிவர்த்தியையும் வேண்டுகின்றன. மரணகாலத்தில் யாதொன்றும் ஸம்பாதிக்க ஜீவன் ஶக்தனல்லன்; கர்மத்தால் கொண்டு போகப்பட்டவனுக்கு ஸ்வாதந்த்ரியம் இல்லை; லோகாந்தரத்தின் பொருட்டுப் போகின்ற ஆத்மாவை அவன் ஸம்பாதித்த வித்யையும், கர்மமும், முன் கர்மாநுபவத்தால் உண்டான வாஸனையும் தொடர்கின்றன; அப்படிப்பட்ட பூர்வ வாஸனை யில்லாவிட்டால் ஒருவனால் ஒருவன் பொருட்டு ஒரு கர்மம் செய்ய அமையாது; பூர்வ வாஸநா ப்ரவ்ருத்தங்களான இந்த்ரியங்களுக்கு அப்யாஸமின்றியே ஸாமர்த்யம் உண்டு; ஆதலால் ஶுபங்களான வித்யாகர்மங்களை மநுஷ்யன் அநுஷ்டிக்கக்கடவன்." இவ்வர்த்தங்கள் ஸர்வ ஸம்ப்ரதாயஸ்தர்களாலும் ஒப்புக்கொள்ளத்தக்கவை. நம்முடைய ஸம்ப்ரதாய ஆசார்யர்களும், "தஸ்யாம் தஶாயாம், பஶ்ய

ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே கலேவரம், தம் தமேவைதி''
இத்யாதி ந்யாயேந, ப்ராப்யப்ராப்தி விஷயகஸ்ம்ருதி ர்ஹேதுர்
பவதி, தஜ்ஜ்ஞாநம் கர்மாயத்தம், ந புருஷ ப்ரயத்ந ஸாத்யம்,
யம் யோகிந: ப்ராணவியோக காலே யத்நேந சித்தே விநிவேச
யந்தி । இதி யோகிநாமேவ ஹி அந்த்யஜ்ஞாநம் யத்நஸாத்யம் * *
ஸமார்ஜித ஜ்ஞாநகர்மணீ பூர்வவாஸநா சாநுவர்தந்தே''
என்று ஶ்ருத்யர்த்தத்தை நிர்ணயித்தார்கள். "மநுஷ்யன் மரண காலத்தில் எந்தெந்த வஸ்துவை ஸ்மரித்துக்கொண்டு ஶரீரத்தை விடுகின்றானோ, அந்தந்த வஸ்துவையே அடைகின்றான் என்கிற ந்யாயத்தால், அந்தத் தசையில் வரப்போகின்ற ஜந்ம ஸம்பந்தமான ஸ்மரணத்தைப் பொருந்துகின்றான். அந்த ஜ்ஞாநம் அவனுடைய கர்மாதீநம்; அவனுடைய தாத்காலிக ப்ரயத்ந ஸாத்ய மன்று. யாதொரு பகவானைப் ப்ராணவியோக காலத்தில் யோகிகள் தம்முடைய யத்நத்தால் சித்தத்தில் வைக்கின்றார்களோ என்கிறபடியே, யோகிகளுக்கு மாத்ரம் அந்திம ஸ்மரணம் யத்நஸாத்யம். இறக்கின்றவனை அவன் ஸம்பாதித்த ஜ்ஞாநமும் கர்மமும் பூர்வ வாஸனைகளும் அநுஸரித்துச் செல்கின்றன'' என்கிறபடி அவர்கள் நிர்ணய மிருக்கின்றது.

இவ்வண்ணம் மரணாநந்தரம் ஏகாகியாக ப்ரயாணிக்கவேண்டிய ஜீவன், ஶரீர ஸம்பந்தத்தைத் தானடைந்திருந்த காலத்தினுடைய அல்பத்வத்தையும், நித்யனான தனக்குப் பின்னால் வரப்போகின்ற காலத்தினுடைய ஆநந்த்யத்தையும் எண்ணி, 'அநித்ய மஸுகம் லோகமிமம் ப்ராப்ய பஜஸ்வமாம்' என்கிற ஶாஸ்த்ரவாக்யத்தில் ஶ்ரத்தையுடையவனாக, ஶாஶ்வதமா யிருக்கின்ற ஶ்ரேயஸ்ஸைத் தனக்கு ஸாதிக்க முயலவேண்டும். இதை மறுக்கின்றவன், வாயினால் அவன் எதைச் சொன்னபோதிலும் நாஸ்திகனே. ஆமுஷ்மிகம் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்துக்கும் அநுமாநத்திற்கும் விஷயமன்று. ஶப்தமொன்றே அவ்விஷயத்தில் ப்ரமாணம். ஶப்தம் என்று லோகத்தில் வழங்குமவற்றுள், வேதஶாஸ்த்ரத்துக்கு



மேல்பட்ட தொன்றுமில்லை. க்ருஹஸ்த தர்மங்கள் மோக்ஷோபாயங்களாகமாட்டா. 'புண்ய: புண்யேந கர்மணா பவதி பாப: பாபேந' என்கிற ஶ்ருதியின்படியே புண்ய கர்மங்கள் புண்யலோக ப்ராப்தியை உண்டாக்கும். 'நாஸ்த்யக்ருத: க்ருதேந' என்கிற கணக்கிலே, அக்ருதமான பரமஶாந்தியானது கர்ம ஸாத்ய மன்று. அது ஜ்ஞாநவிஶேஷ ஸாத்யம்.

மோக்ஷாந்வேஷண மென்பது ஸ்வார்த்தமாகத்தான் முடியும். பாஷாந்தரத்தில் Selfishness எனும் ஶப்தத்தை ஶரீர ஸம்பந்தமாக ப்ரயோகிக்கின்றார்கள். இதை நம்மவர்கள் அஹங்கார மமகாரங்களெனச் சொல்வார்கள். அநாத்மாவான ஶரீரத்தில் ஆத்மத்வ ப்ரமமும், ஶரீரஸம்பந்திகளிடம் மமதா ப்ரமமும் ஸ்வார்த்த ப்ரவ்ருத்திக்குக் காரணங்களாகும். இவை நஶித்த பிறகுதான் ஆத்ம ஸ்வரூப நிஶ்சயமும், ஸ்வரூப ப்ராப்தி ஸாதகமான பகவது பாஸநத்தில் ப்ரவ்ருத்தியும் கைகூடும். இதை ஸ்வார்த்த ப்ரவ்ருத்தி யென்று த்யஜிப்பவர்கள் ஸம்ஸாரத்தில் நிலைகொள்வார்கள் என்பது நிஶ்சயம்.

ஜ்ஞாநோபதேசத்துக்கு அதிகார வரம்புகள் கூடாவென்பான் ஒருவன். பாஷாந்தர பரிசயத்தில் சிக்கிய மனமாகும் பேய்க் குரங்கின் ஆட்டங்கள் பகுவிசித்ரம். ஶரண்யன் அர்ஜுநனைப் பார்த்து, 'கர்மண்யேவாதிகாரஸ்தே' என்று சொன்னது தப்பென்று ஒருவன் சொல்வான். அநதிகாரிகளுக்கு ஜ்ஞாநோபதேசம் செய்வது, நல்முத்துகளைப் பன்றிகள் முன்னால் இறைப்பதை யொக்குமென்றார் கிறிஸ்து. இங்கிலீஷ் படித்த மாத்ரத்தால் அதுவும் தப்பென்று சொல்லத் துணிந்துவிடலாம்.

இப்படிப்பட்ட கஷ்டகாலத்தில், வேதம் துச்சிக்க, வேதோபப்ருஹ்மணங்களெனப்பட்ட ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களுக்கு நித்யாவமாநம் நேரிட, வர்ணஸாங்கர்யம் தலையெடுக்க, கேவல ஶரீரபோஷணையில் உத்யுக்தர்களான ஜநங்கள் பரஸ்பர திரஸ்காரங்களில் ரமிக்க, ஜநங்கள் அந்யோந்ய ஜந்ம ரோகாதி பீதிஹீநர்க

ளாகவும், ஸ்வாஸ விருஹ வைராக்யர்களாகவும் பரிணமிக்க, வேதமார்க்கத்தில் ஶ்ரத்தையுள்ளவர்கள் ஸ்வரக்ஷணார்த்தம் கூடி, உசிதமான உபாயங்களால், ஸநாதந தர்மத்தை ரக்ஷிக்க ப்ரயத்நப்படுவது யுக்தமே. ஸநாதந தர்ம ரக்ஷகமாக ஒரு ஸங்கம் ஸமீப காலத்தில் திருநெல்வேலியில் கூடிற்று. இந்த ரூபமான ப்ரயத்நமானது ந்யூநதையை அடையாமல், ஸம்வத்ஸரம் தோறும், பல தரம், பல ப்ரதேசங்களில் ப்ரகாசிக்குமென்று விஶ்வஸிக்கின்றோம். ஆர்ய ஜநங்கள் யாவத் ஶக்தி ஸ்வமதத்தையும், வித்யையையும், கர்மங்களையும், ஆசாரங்களையும் ரக்ஷிக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். இவ்வித யோசனையை முற்றிலும் துறந்து, ஸ்வதர்மங்களை இழந்ததுடன், அவற்றை விஶ்வஸிப்பவரிடம் த்வேஷம் கொள்கின்ற ப்ரஷ்டர்களுடைய நிந்தையை ஆஸ்திகர்கள் அநாதரிக்கவேண்டும். அந்யார்த்தாந்வேஷண பரர்கள் தத்தீர்த்தோந்முகர்களாய் ஸபைகூடும் காலத்திலே, அவர்கள் கூடிய தேசந்தன்னில் ஸநாதந தர்மாபிமாநிகளும் கூடினார்கள். தேசாந்தர வித்யா பாரங்கதர்களில் பலர் அந்த ப்ரயத்நத்தில் அந்வயித்தார்கள். ஆதலால், அந்த வித்யாப்யாஸமானது நியமேந ஸநாதந தர்ம விரோதத்தில் பர்யவஸிக்க மாட்டாதென்று யோசிக்க இடமுண்டு. ஆபத் காலத்தில் உதரபோஷணார்த்தம் அந்ய வித்யாப்யாஸமும், அந்ய தர்மாநுஸரணமும் ஶாஸ்த்ராபிமதங்கள். ஆகையால், அந்ய வித்யா கர்மங்கள் ஸ்வதர்மங்களுக்கு ஸ்வரூப த்யாக பர்யந்தமாக அப்யஸிக்கப்படவேண்டியதில்லை.

மேலே விவரித்த ஸத்ப்ரயத்நத்தை உகந்து வானமாமலை, திருக்குறுங்குடி, கும்பகோணம் முதலான ஸ்தலங்களை அலங்கரிக்கும் மடாதிபதிகள் அநுக்ரஹ பத்ரிகைகள் அனுப்பினார்களென்று கேள்வியுற்றோம். ஸ்ரீமதஹோபிலாஸ்தாந நிர்வாஹகராயெழுந்தருளியிருக்கின்ற ஸ்வாமி அவ்வண்ணம் செய்தாரில்லை. அந்த ஸ்வாமி, மூன்று ஸம்வத்ஸரத்துக்கு மேல்பட்டு, கத்தவால் ஸமஸ்தாநாதிபதியினுடைய பூஜையில் த்ருப்தராய் தத்வ்யதிரிக்த விஷயங்களில் விஸ்மரணஶீலராய் எழுந்தருளியிருக்கின்



றார்போல் தோன்றுகின்றது. அந்த ஸ்வாமியினுடைய ஆளுகைக்குட்பட்ட திருவெவ்வுளூர் என்கிற திவ்யதேசத்தில் வேதமார்க்கமொன்றுண்டென்று யோசிக்கவும் அவகாஶமில்லை; அஸ்மத் ஸம்ப்ரதாய ஸ்வரூபம் முற்றும் மறைந்து நிற்கின்றது; 'ஶ்ரௌத்ராதி நிலய:' என்கிற விஷயமும் பொய்போல் தோற்றுகின்றது. ஸம்ப்ரதாய பரித்ராணம் எவர்க்கு முக்ய ப்ரவ்ருத்தியோ அவர் அதை மறந்துவிட்டால், ஏனையோர் ப்ரயத்நம் எவ்வண்ணம் பலிக்கப்போகின்றதென்று கலங்குகின்றோம். பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாராதி அநேகாபசார ஹேதுபூதப்ராப்த கர்மங்கள், தத்துல்ய பாபாரம்பகங்களாக, ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியில் பெருகிவளர, அவற்றினுடைய நிவ்ருத்தியை அந்த ஸ்வாமி எந்த ப்ரதேஶத்தில் ஜபிப்பிக்கின்றனரோ என்பதை யாமறியோம்.

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரு. | அ. | ப. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ பாகவத தஶஶ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 3. ஸ்ரீ சதுஶ்ஶ்லோகீவிவரணம் ... ... ... ... | 0 | 2 | 0 |

ஸ்ரீ:

[illegible]

# திருத்த திருத்தம்.*

6. ஸர்வ ப்ராணிகளுக்கும் ஸம்ரக்ஷகனை ஸர்வேஶ்வரனும், ஒவ்வொரு வஸ்துவையும், நிலைமைக்கு அநுகுணமாகவன்றோ உபயோகம் செய்திருப்பது.

7. ஸ்ரீராமாநுஜன் செய்ததாகச் சொல்லும் சில கார்யங்களை அவர் ஶிஷ்யர்களான இருவகையார்க்குள் ஒருவகையான வடகலை வைஷ்ணவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. அவர்கள் எழுதிவைத்திருக்கும் குருபரம்பரா க்ரந்தத்திலும் மேற்படி விஷயங்களைக் காணேம். ஏனென்றால், ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த ஸ்ரீபாஷ்ய க்ரந்தத்தில் ஸ்ம்ருத்யதிகரணத்தில் மநுஸ்ம்ருதி முதலான ஸ்ம்ருதிகளுக்கு முக்யமான ப்ராமாண்யத்தை அவர் அங்கீகரித்துவிட்டு, பாஞ்சராத்ராதிகரணத்தில் பாஞ்சராத்ரங்களுக்குப் பரிபூர்ணப்ராமாண்யத்தையும் அங்கீகரித்து, அதற்கு விருத்தமான அநுஷ்டானங்களைச் செய்திருக்க மாட்டாரென்கிறார்கள். உதாஹரணமாகச் சிலவற்றை இங்கு விவரிப்போம்.

[illegible] - 18 - ம் அத்யாயம் :— ‘[illegible] ॥’ என்று சண்டாளர் கோவிலுள் புகுந்தால் ப்ராயஶ்சித்தம் சொல்லியிருப்பதை யொப்புக்கொண்ட ராமாநுஜர் திருநாராயணபுரத்தில் சண்டாளரைக் கோ

* இது சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.



விலுக்குள் புகும்படி சொல்லுவாரா? தவிரவும், இராமாநுஜன் பஞ்சமரைத் திருநாராயணபுரத்தில் கோவிலுக்குள் புகச்சொன்னதாகத் தென்னாசார்ய குருபரம்பரையிலும் வடவாசார்ய குருபரம்பரையிலும் இல்லை.

தத்காலத்துத் திருநாராயணபுரத்து அநுஷ்டானமும், மநுநிகத்தில் ப்ராயஶ்சித்தம் செய்யப்படுவதால், பிசகென்றே நாம் நிஶ்சயிக்கிறோம். அக்கோவிலுள் புகும் பஞ்சமரும் த்வஜஸ்தம்பத்திற்கு வெளியேதான் ஏன் நிற்கவேணும்? அதாவது, ஶாஸ்த்ரீயமானுல் வருஷத்துக்கு ஒருதடவைதான் பஞ்சமர்கள் புகவேணுமோ? அல்லது மற்றைத் திவ்ய தேஶங்களிலும் புகலாகாதோ?

இஃதிருக்க, மநுஸ்ம்ருதி 3 - அ:— ‘[illegible] ॥’ என்று சண்டாளன் பார்த்த தேவதாராதநம் முதலானவை வீணாகின்றனவென்று மநுமொழிந்திருக்க, இதற்கு விருத்தமாக ஸ்ரீ பாஷ்யகாரர் அவர்களை ஆலயத்துள் புகச்சொல்லுவரோ? யாஜ்ஞவல்க்ய:- ‘[illegible] ।’ என்றும், ‘[illegible] ॥’’ என்று, சண்டாளன் ஊருக்கு வெளியில் வஸிக்கவேண்டியவனென்றும், ஶூத்ரர்களும் அவனைத் தொடக்கூடாதென்றும், அவன் அந்நம் புஜிக்கலாகா தென்றும் சொல்லியிருப்பதை ஸ்ரீ பாஷ்யகாரர் அறியாரோ? இதுபோலவே ஸ்ரீமத் ராமாநுஜன் கோபுரத்தின் மேலேறி த்வயத்தை யாவருக்கும் அறிவித்ததாக ஒரு குருபரம்பரையிலும் தெரியவில்லை. ஆகையினால், உள்ள முறைசெயலில் ஒற்றுமை யில்லாதவர் உலகத்துக்கெல்லாம் குருவாக ஆஶ்ரயிக்கப்படுவரோ? இவ்வநுஷ்டானங்கள் அவருக்கு இஷ்டமாயிருந்தால் அவர் அருளிச்செய்த ஒன்பது க்ரந்தத்தின் ஓலைப்புறத்தில் ஒரு வரி எழுதியிருக்கமாட்டாரா? என்று சொல்லுகிறார்கள்.

ஸ்ரீ ராமாநுஜனது மற்றொரு ஶிஷ்யர்களாகிய தென்னாசார்யர்கள், கீழ்ச்சொன்ன சில கார்யங்களை ஸ்ரீ ராமாநுஜன் செய்ததாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். இக்காலத்து ஸ்ரீ ராமாநுஜன் போன்ற அவதார புருஷனும், கச்சி நம்பி, வடுக நம்பி, உறங்காவில்லி தாஸர் போன்ற மஹாத்மாக்களு மிருந்தால் அவ்வாறு அநுஷ்டானங்களை நாமும் செய்யலாம்.

ப்ரஹ்லாதன் போன்ற பகவத் பக்தர்களுக்குப் பழைய ஜாதி தொலைந்து, ப்ராஹ்மண்யம் வந்துவிடுவதாகத் தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தரின் ஸித்தாந்த மாகையினால், உறங்காவில்லி தாஸரின் கைத்தலம் பற்றினதும் வடுக நம்பி பால் காய்ச்சினதும் இவை முதலான காரியங்களில் விரோதமில்லை.

நம் திருத்தக்காரர் சொல்வதுபோல், ஜாதியே அடியோடு கிடையாது என்பதும், இக்காலத்து எல்லாப் பஞ்சமரும் எல்லா தேவாலயங்களுள்ளும் புகுவதும் ஸ்ரீராமாநுஜனுக்குத் திருவுள்ளமாயிருக்கும் என்றுவது, நாமும் எல்லா வர்ணத்தவருடன் ஒன்றாக உண்ணலா மென்றுவது, யாரும் செய்த பக்வாந்நத்தை உண்ணலா மென்றுவது தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களும் சொல்லவேயில்லை.

ஆகையினாலன்றோ, ஸ்ரீராமாநுஜன் காலத்துக்குப் பின்பு ஒரே ஜந்மத்தில் ப்ராஹ்மண்ய ஜாதியை அடையக்கூடிய மஹாபுருஷன் அவதரிக்காததனால், இக்காலம்வரையில் தென்னாசார்ய ஆசார்ய புருஷர்கள் ஒருவருக்கும் ஒரு ஶூத்ரன் கைத்தலம் பற்றினதாகவாவது, பால் காய்ச்சுவது முதலான கைங்கர்யத்தில் அந்வயித்ததாகவாவது ப்ரஸித்தமாகக்காணோம்.

அந்தோ! ப்ராஹ்மணரிலும் ஸ்ரீ வைஷ்ணவராய், அதிலும் ஒரே ஸம்ப்ரதாயஸ்தராய், அதிலும் உபயவேதாந்தம் அத்யயநம் பண்ணியிருக்குமவரையும், ஒருவர் ஆசார்ய புருஷர் என்றும், மற்றொருவர் மடத்து ஶிஷ்யரென்றும் தனித்தனியே பூஜைக்கு ப்ரதாந பாத்ரமாயிருக்கும் ஸ்ரீ ராமாநுஜ ஸம்ப்ரதாயஸ்தர் இன்னு



ரென்று அறியாத நம் சீர்திருத்தக்காரர்கள் சொந்தம் கொண்டாடுவதும் ஓர் ஆஶ்சர்யமே.

இவ்விஷயத்தில் நாம் ஆஸ்திகருக்குத் தெரிவிப்பது ஒன்றுண்டு. கௌதம: – 'த்ருஷ்டோ தர்மவ்யதிக்ரம: ஸாஹஸம் ச மஹதாம்', ஆபஸ்தம்ப:—'த்ருஷ்டோ தர்மவ்யதிக்ரம: – ஸாஹஸம் ச பூர்வேஷாம்' என்று முன்னோர்களும் மஹான்களும் தர்மம் தவறி நடந்ததைப் பார்க்கிறோம். 'தேஷாம் தேஜோவிஶேஷேண ப்ரத்யவாயோ ந வித்யதே । ததந்வீக்ஷ்ய ப்ரயுஞ்ஜாந: ஸீதத்யவர:' என்று அம்மஹான்களுக்குத் தபஸ்ஸின் மஹிமையினால் அக்கார்யம் குற்றமாகாது. அதைப் பார்த்து, அம்மஹிமையை யறியவும் ஶக்தியில்லாத நாம் அக்கார்யங்களைச் செய்வது கூடாதென்று ஆபஸ்தம்பர் சொல்வதுபோல், ஸ்ரீ ராமாநுஜன், தாம் செய்த சில கார்யங்களை நாம் த்ருஷ்டாந்தமாக்கலாகாது; நாம் செய்தால் நரகத்துக்கு ஆளாவது திண்ணம். ஆகையினாலன்றோ நம் முன்னோர்கள் அவ்வழியை அநுஸரித்துப்போகவில்லை.

ஸ்ரீ பாஷ்யகாரர் ஶேஷரூபியாயிருந்து வாதியரை வென்றது போன்ற அதிமாநுஷகார்யங்களை நாம் செய்ய ஆசைப்பட முடியுமா?

இவ்விஷயத்தைப் பரீக்ஷித்தானவர் 'கண்ணன் கோபஸ்த்ரீகளை ஆதரித்தது அநுசிதமன்றோ?' என்று கேட்டதற்கு, ஸ்ரீஶுகர் பகவான் அநேகம் ஸமாதாநத்துடன், 'தேஜீயஸாம் ந தோஷாய வஹ்நேஸ்ஸர்வபுஜோ யதா' என்று சொல்லிவிட்டு, 'ஈஶ்வராணாம் வச: ஸத்யம் ததைவாசரிதம் க்வசித் । தேஷாம் யத் ஸ்வவசோயுக்தம் புத்திமாம்ஸ்தத் ஸமாசரேத் ॥ நைதத் ஸமாசரேஜ்ஜாது மநஸாபி ஹ்யநீஶ்வர: । விநஶ்யத்யாசரந் மௌட்யாத் யதாऽருத்ரோऽப்திஜம் விஷம் ॥' என்று மஹாத்மாக்களின் வார்த்தையை நாம் முழுவதும் நம்பவேண்டியதென்றும், அவர்கள் அநுஷ்டானத்தை அவர்கள் ஸ்ரீஸூக்திக்கு விரோதமில்லாதிருந்ததை மட்

டும் செய்யவடுக்குமென்றும், அவர்கள்செய்த அகார்யம்போன்றவைகளை நாம் மனத்தினாலும் நினைக்கலாகாதென்றும், அப்படிச் செய்தால் ஶிவனைத் தவிர மற்றவன் காலகூட விஷத்தைச் சாப்பிடயத்நம் செய்வதுபோல் அது உடனே நாஶத்தை விளைவிக்குமென்றும் அருளிச்செய்தான்.

இதை, 'யாந்யநவத்யாநி கர்மாணி, தாநி ஸேவிதவ்யாநி, நோ இதராணி' என்கிற தைத்திரீய வாக்யமும், ஆசார்யன் செய்த நல்ல கார்யத்தை ஶிஷ்யன் செய்யலாமென்றும், மற்றதைச் செய்யலாகாதென்றும், 'ஸே-' 'இதர' என்னும் பதங்களினால் நன்றாகச் சொல்லுகிறது. ஆகையினால் ஸ்ரீபாஷ்யகாரர் செய்ததாகச் சொல்லும் சில அநுஷ்டானங்கள் வாஸ்தவமே யானாலும், அது அவருக்குத் தகுமேயல்லது நாம் செய்யத்தகுந்ததல்லவென்பது திண்ணம்.

மற்றும் அவர் ஆதிஶேஷரூபத்துடன் வாதியரை வென்றது போன்ற ஆஶ்சர்ய கார்யத்தை நம் நாகரிகர் செய்யலாகாதோ? நம் அரசர்கள் போர்புரிந்து அநேகர்களை அழிப்பதுபோல் நாம் சிலரைக் கொல்வதும் குற்றமாகாததோ? ஆகையினால் 'நாவகாரியம் சொல்லிலாத' நம் நாகரிக தநவான்கள் நம் முன்னோர்களைத் தூஷிக்காது, புதுமதத்தைப் பிறருக்குப் போதிக்காது ஒற்றுமையின் உபாயத்தை ஒன்றுசேர்ந்து ஆலோசிப்பதுடன், '[illegible]' என்கிறபடியே தர்மத்தைத் தொலைக்காத அர்த்தகாமங்களுக்கு ஆசைப்படுவோரானால், பூலோகம் ஒருமதியாய்ப் பெருவாழ்வுடன் வாழ்ந்து நிற்குமே. ஆனால் நாம் பஞ்சமர் விஷயத்திலும், பழையவழி பிடிக்காத ப்ராஹ்மணரிடத்திலும், செய்யவேண்டிய அவஶ்யமானதோர் கார்யம் உண்டென்றே சொல்லுகிறோம். அதாவது: ஆகமஜ்ஞானமில்லாத ஆதித்ராவிடர்களும் ஆக்ஜாதியில் பிறந்தவரும் அல்ப ப்ரயோஜநத்தின் ஆசையினால் அந்யமதம்போகாது, அவர்கள் இருப்பிடம் போயிருந்து, ஸாமாந்ய தர்மத்தைத் தெரிவித்துத் தெளிமதியோராக்குவது தத்கால ஹிம்ஸைக்குப் பரிஹாரமாகும்.



அத்துடன் பணம் மிகுந்த ப்ரபுமணிகள் பிச்சைபுகும் ப்ராஹ்மணர்க்கும் ஆகாரத்துக்காகவே அந்யமதம்போகும் பஞ்சமர்க்கும் ஜீவநோபாயத்தை ஆலோசித்துக் கல்பிக்கவேண்டியது அவஶ்யம்.

பஞ்சமர் ஜாதியில் தானா ஏழைகள் இருக்கிறார்கள். ப்ராஹ்மணரின் ஜநத்தொகையில் பாதியாம் மனிதர்கள் பூலோகம் முழுதும் பரிசாரகம்செய்வதை நாம் பார்க்கவில்லையா? ஆகையினால் தயையுடைய தநவான்கள் தரித்ரர் யாவரையும் காப்பாற்றும்வழி தேடுவது அவஶ்யமாயிருக்க, ப்ராஹ்மணரை அழித்துவிட்டுப் பஞ்சமரையும் பெண்டிரையும் பாதுகாக்க ப்ரயத்நப்படுவது புத்திமான்கள் கார்யமாகாது. அப்படியே செய்தாலும் வர்ணாஶ்ரமமென்னும் வரம்பெல்லாம் அழித்திட்டு உண்டாகும் ஒற்றுமையைக்காட்டிலும், நாம் பிறமதமே புகுந்திட்டால் பாரெல்லாம் ஒன்றாகி, பூபதிகளுடன்சேர்ந்து பேரின்பம் பெறலாகுமே.

ஆகையினால், வர்ணாஶ்ரம பேதங்கள் விதம் விதமாயிருந்தாலும், இவ்வுலகின் வாழ்வுக்கு வேண்டியதான வயிற்றை நிரப்புவதும் விஷய மநுபவிப்பதும் யாவர்க்கும் வேண்டியிருப்பதனால், இதற்குவேண்டிய வ்யாபாரங்களில் ஒற்றுமைக்கு ஒருநாளும் புத்திமான்களுக்குக் குறைவுண்டாகாதென்பதை நம் நாகரிகர் நிஶ்சயிக்கவேண்டியது அவஶ்யம்.

சண்டை நேரிடுமென்று சாதிகளை அழித்திடுவது ந்யாயமாகுமா? தைலமிட்டு வளர்த்திட்ட தாரத்தின் தலைகூந்தல் பேன்பிடித்தால், பேன் போக்கும்வழி பார்க்காது தலைமொட்டையடித்துவிடும் தன் கணவன், தாரத்தின் தலையழகை எவ்விதம் காண்பான்? கண்மூடியன்றோ அதைக் காணவேண்டிவரும். இதுவரையில் எவ்வளவோ ஜாதபேதமுடன் ஒற்றுமையாயிருந்ததைக் கெடுத்தவர் யாரென்று கவனிக்கவேண்டியதன்றோ கூர்மதியோர்

டும் செய்யலடுக்குமென்றும், அவர்கள்செய்த அகார்யம்போன்றவைகளை நாம் மனத்தினாலும் நினைக்கலாகாதென்றும், அப்படிச் செய்தால் ஸிவனைத் தவிர மற்றவன் காலகூட விஷத்தைச் சாப்பிடயத்நம் செய்வதுபோல் அது உடனே நாஸத்தை விளைவிக்குமென்றும் அருளிச்செய்தான்.

இதை, 'யாந்யஸ்மாகம் ஸுசரிதாநி, தாநி த்வயோபாஸ்யாநி, நோ இதராணி' என்கிற தைத்திரீய வாக்யமும், ஆசார்யன் செய்த நல்ல கார்யத்தை ஸிஷ்யன் செய்யலாமென்றும், மற்றதைச் செய்யலாகாதென்றும், 'ஸு' 'இதர' என்னும் பதங்களினால் நன்றாகச் சொல்லுகிறது. ஆகையினால் ஸ்ரீபாஷ்யகாரர் செய்ததாகச் சொல்லும் சில அநுஷ்டானங்கள் வாஸ்தவமே யானாலும், அது அவருக்குத் தகுமேயல்லது நாம் செய்யத்தகுந்த தல்லவென்பது திண்ணம்.

மற்றும் அவர் ஆதிஸேஷரூபத்துடன் வாதியரை வென்றது போன்ற ஆஸ்சர்ய கார்யத்தை நம் நாகரிகர் செய்யலாகாதோ? நம் அரசர்கள் போர்புரிந்து அநேகர்களை அழிப்பதுபோல் நாம் சிலரைக் கொல்வதும் குற்றமாகாததோ? ஆகையினால் 'காவகாரியம் சொல்லிலாத' நம் நாகரிக தநவான்கள் நம் முன்னோர்களைத் தூஷிக்காது, புதுமதத்தைப் பிறருக்குப் போதிக்காது ஒற்றுமையின் உபாயத்தை ஒன்றுசேர்ந்து ஆலோசிப்பதுடன், 'வஸிஷ்ட ஜ்யேஷ்டகாலே யதாஸ்த்ராதாம் யஜேவஜீததா' என்கிறபடியே தர்மத்தைத் தொலைக்காத அர்த்தகாமங்களுக்கு ஆசைப்படுவோரானால், பூலோகம் ஒருமதியாய்ப் பெருவாழ்வுடன் வாழ்ந்து நிற்குமே. ஆனால் நாம் பஞ்சமர் விஷயத்திலும், பழையவழி பிடிக்காத ப்ராஹ்மணரிடத்திலும், செய்யவேண்டிய அவஸ்யமானதோர் கார்யம் உண்டென்றே சொல்லுகிறோம். அதாவது: ஆகமஜ்ஞானமில்லாத ஆதித்ராவிடர்களும் ஆக்ஜாதியில் பிறந்தவரும் அல்பப்ரயோஜநத்தின் ஆசையினால் அந்யமதம்போகாது, அவர்கள் இருப்பிடம் போயிருந்து, ஸாமாந்ய தர்மத்தைத் தெரிவித்



துத் தெளிமதியோராக்குவது தக்கால ஹிம்ஸைக்குப் பரிஹாரமாகும்.

அத்துடன் பணம் மிகுந்த ப்ரபுமணிகள் பிச்சைபுகும் ப்ராஹ்மணர்க்கும் ஆகாரத்துக்காகவே அந்யமதம்போகும் பஞ்சமர்க்கும் ஜீவனோபாயத்தை ஆலோசித்துக் கல்பிக்கவேண்டியது அவஸ்யம்.

பஞ்சமர் ஜாதியில் தானா ஏழைகள் இருக்கிறார்கள். ப்ராஹ்மணரின் ஜநத்தொகையில் பாதியாம் மனிதர்கள் பூலோகம் முழுதும் பரிசாரகம்செய்வதை நாம் பார்க்கவில்லையா? ஆகையினால் தயையுடைய தநவான்கள் தரித்ரர் யாவரையும் காப்பாற்றும்வழி தேடுவது அவஸ்யமாயிருக்க, ப்ராஹ்மணரை அழித்துவிட்டுப் பஞ்சமரையும் பெண்டிரையும் பாதுகாக்க ப்ரயத்நப்படுவது புத்திமான்கள் கார்யமாகாது. அப்படியே செய்தாலும் வர்ணாஸ்ரமமென்னும் வரம்பெல்லாம் அழித்திட்டு உண்டாகும் ஒற்றுமையைக்காட்டிலும், நாம் பிறமதமே புகுந்திட்டால் பாரெல்லாம் ஒன்றாகி, பூபதிகளுடன்சேர்ந்து பேரின்பம் பெறலாகுமே.

ஆகையினால், வர்ணாஸ்ரம பேதங்கள் விதம் விதமாயிருந்தாலும், இவ்வுலகின் வாழ்வுக்கு வேண்டியதான வயிற்றை நிரப்புவதும் விஷய மநுபவிப்பதும் யாவர்க்கும் வேண்டியிருப்பதனால், இதற்குவேண்டிய வ்யாபாரங்களில் ஒற்றுமைக்கு ஒருநாளும் புத்திமான்களுக்குக் குறைவுண்டாகாதென்பதை நம் நாகரிகர் நிஸ்சயிக்கவேண்டியது அவஸ்யம்.

சண்டை நேரிடுமென்று சாதிகளை அழித்திடுவது ந்யாயமாகுமா? தைலமிட்டு வளர்த்திட்ட தாரத்தின் தலைகூந்தல் பேன் பிடித்தால், பேன் போக்கும்வழி பார்க்காது தலைமொட்டையடித்துவிடும் தன் கணவன், தாரத்தின் தலையழகை எவ்விதம் காண்பான்? கண்மூடியன்றோ அதைக் காணவேண்டிவரும். இதுவரையில் எவ்வளவோ ஜாதபேதமுடன் ஒற்றுமையாயிருந்ததைக் கெடுத்தவர் யாரென்று கவனிக்கவேண்டியதன்றோ கூர்மதியோர்

க்ருத்யமாகும். நம் ஒற்றுமைக்கு அடையாளமாய் இக்காலத்திலும் ப்ராஹ்மணரைப் பலபடியும் பூஜித்துப் பிச்சையிடும் புண்ணியராம் பாதத்தில் பிறந்தவரைப் பார்த்து வருகிறோமே.

அடிவைக்க இடமில்லாது அந்நியரிடம் தொண்டுசெய்யும் அந்தணர்மேல் அந்நியர்கள் அஸூயை கொண்டாடுவதும், பாரெங்கும் ஆண்டுவரும் பாதத்தில் பிறந்தவன் பசித்துறங்கும் ப்ராஹ்மணர்கள் பொல்லாங்கு பயிலுவதும், பலபடியும் வளராத பூலோக ஸுகமுடனே பரலோகம் வாழ்விக்கும் பழையமதம் உலகமெல்லாம் பரவும்படி போதித்தல் பரலோகத் தாசையினால் பார்முழுதும் ஒற்றுமையாய்ப் பலஜாதி ஜீவர்களும் குன்றாது கூடிநிற்குமே. தாம் கல்பித்த கொடும்வழியில் அடிவைக்க ஆள்தேடும் தெளிமதியோர் தொல்வழியைத் துலக்கிவைத்தால், நாரணனார் மனம் நண்ணும் அந்நல்வழியே நாடெல்லாம் நாடி ஓடுமே. இவ்வழி காட்டும் வேதியரை வையகமும் விண்ணுலகும் வாழ்பாடுமே. அருந்துயரால் மறைந்துவரும் தர்மலதை தாரணியில் தழைத்தோங்குமே.

பாரெங்கும் புகழ்பெற்ற பஞ்சமராம் பாண்பெருமாள் பாதத்தை ப்ராஹ்மணர்கள் போற்றவில்லையா? வையமெல்லாம் விளங்கிவரும் வள்ளுவரின் திருவாக்கை வேதியர்கள் வேதம்போல் வாழ்த்தவில்லையா? ஆலயத்துள் அறைதோறும் அக்காலமிருந்தழிந்த ஆழ்வாருடையவும் அறுபத்து மூவருடையவும் ப்ரதிமைகளை ப்ராஹ்மணர்கள் ப்ரதிதினமும் பூஜித்துப் புகழ்களைப் பாடவில்லையா? இது மாத்ரமா? அப்ரதிமைகளைப் பிறர் பூஜிக்கக் கூடாதென ப்ரமாணங்களும் காட்டுகிறார்களே. ஆகையால், மறைமுறையை அறிந்திருக்கும் மாசில்லா மனதுடைய மனிதர்க்கு உலகெல்லாம் உறவினராய்த் தோன்றுமென்பது திண்ணம். இவ்வாறு பஞ்சமரும் பூஸுரரும் பேதமில்லாப் புத்தியுடன் பேரின்ப மநுபவிக்கும் புராணவழி யறியாது, பிறந்தநாள் முதலாகப் பரமதத்தோர் பழக்கத்தால் பணத்தாசை மேலிட்டுப் பலவழியும் புகுந்திருக்கும் புதுமதத்துத் திலகமாய் தந்தை



யைத் தர்மசாலையிலும், க்ராமத்தைக் குடியானவரிடமும் பாதுகாக்கவிட்டுவிட்டு, பாபங்கள் பலசெய்து, பதினைந்து ரூபாய்க்குப் பரதேசியாய் நிற்கும் ப்ராம்ஹண ப்ரபுக்களன்றோ, பிறந்தவிடமே யிருந்து பார் முழுதும் பயிர்செய்து, பாபத்தைப் பண்ணாது பாலமுதும் பழமும் உண்டு, பார்யையுடன் பிரியாமல் பேரின்ப மநுபவிக்கும் பஞ்சமரைக் கரையேற்றப் பாடுபடுவது.

அந்தோ! இதுமாத்ரமா? பரதேசியாகாது பயிருண்டுபண்ணுவதும் பசுக்களைப் போஷிப்பதும் பாலமுது உண்பதும் பசியாதிருப்பதும் பாங்காயுறங்குவதும் பாரெங்கு மாள்வதும் பூஸுரரைப் பூஜிப்பதும் பிச்சையிட்டுண்பதும் செல்வம் சேமிப்பதும் தொல்வழியே செல்வதும் தர்மம் தரிப்பதும் துயரம் துறப்பதும் தெளிமதியோராவதும் திருமாலைத் தொழுவதும் தேவேந்த்ரனுவதுமாய் இப்பெருங் கஷ்டங்களைப் படும் க்ராமவாஸிகளான குடியானவர்களை நம் நாகரிக காருணிகர் அக்கஷ்டத்தினின்றும் கரையேற்றி, தாம் அநுபவிக்கும் தாஸ்யமாம் துயரமெனும் அமுதூட்டத் தூங்காமல் அலைகிறார்களே!

‘குற்றமின்றிக் குணம்பெருக்கிக் குருக்களுக் கநுகூலராய்’ இருப்பதினால் கண்ணபிரான் கருணைக்கு எல்லை நிலமாம் க்ராமவாஸிகளான குடியான கூர்மதிகள் நாகரிகர் நிலைமைகளை நன்றாக ஆராய்ந்து நரகத்திற்கேகாது, தொல்வழியாம் நல்வழியை நாடுவாரென்றே நாம் நம்புகிறோம்.

‘[illegible] ।’ என்று மஹர்ஷியின் திருவாக்கை அநுஸரித்து, தர்மதேவதையுடைய ஓரடியைக் கீழ்வைக்க, திருவடியில் உண்டானவரன்றோ இடங்கொடுத்திருப்பது. திருமுகத்தின் ஸ்ருஷ்டியன்றோ இதைத் தாஷித்துப் போருவது. அடியை ஆச்ரயித் திருப்போர்க்கு அபாயமில்லை யாகையினால், இத்தர்மம் துலங்கும் வழிதேடுவோர் எப்போதும் துலங்கவே வேண்டுமென ப்ரார்த்திக்கிறோம்.

நம் முன்னோர்கள் அநுஷ்டித்த தர்மத்தைத் தூஷிக்கும் தத்கால புத்திமான்களுக்குத் தந்தைவழி யநுஸரிக்கும் புத்ரர்கள் பிறந்திடவே, திருமாலைத் தொழுவதுவும் நல்லதாகுமே. அப்புத்திரர்கள், தந்தை மதம் தூஷித்துப் புதியமதம் புகுருவதாம். தன் பிதாவழியைப் பின்சென்றால் தொல்வழிகள் துலங்கிநிற்குமே.

ஆகையினால், தேசத்தின் துயரத்தைத் தீர்த்துவிட த்வரித்து வரும் தார்மிகர்கள் தொல்வழியை அழிக்காது எல்லோரும் மறைவழியை அறிந்து கொள்ளும்படி செய்தால், தனித்தனியே யாவரும் தலைதோள்கள் தொடைதாள்கள் தேஹமொன்றாய் வாழ்வதுபோல், பல ஜாதி மனிதர்களும் ஒரு மனதாய்ப் பிரியாது மறைபோன வழிசென்று, மாநிலத்தார் நந்தமுடன் மாதவரோடுடன்கூடிப் பேரின்பம் பெறலாகுமே.

இவ்வாறு தொல்வழியாம் நல்வழியில் மோஹமெனும் இருள் விலக்கி, விளக்கொளிபோல் வழிகாட்டும் வைஷ்ணவ அன்பை வையமெலாம் வெய்யோன்போல் விளங்கிவர, தேவேசருடன் துலங்கும் தேசிகரை ப்ரார்த்திக்கிறோம்.

பயிர்வளர்க்கும் வேலியதே பைங்கூழை அழிப்பதுபோல், 'സഹിമിനായ മൃഗവണഃ' என்றும், 'ലോകസംരക്ഷണായ ച' என்றும், 'ലോകാനാം തു വിവൃദ്ധ്യർഥം' என்றும், 'സർവസ്യാസ്യ ഭൂതയേ' என்றும் நம் மஹர்ஷிகள் மொழிந்தபடியே, வேதவழி யழியாது விளம்பிக்க அவதரித்த வேதியரே, மறைமுறையை மாற்றுவதா லுண்டாகும் அருதயரால் பெருகினதோர் சிறுவார்த்தை பெரியோர்கள் பொறுத்தருள ப்ரார்த்திக்கிறோம்.

முற்றிற்று.

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:.

ശ്രീമതേ ലക്ഷ്മീനൃസിംഹ പരബ്രഹ്മണേ നമഃ.

# இக்காலத்திய நிலைமையும் நமது தர்மமும். *

"കല്കീ ഭവിഷ്യന്നിഗൃഹ്യ ദുഷ്ടാൻ
ധർമ്മാനശേഷാൻ ഭഗവന്നിധാസ്യസി ।
സ വർത്തതേ തസ്യാവസര സ്സാമ്പ്രതഃ
ഭൂയാദി ലക്ഷ്മീശ ! സകൃദേവ നഃ ॥"

'ஹே பகவந்! கல்க்யவதாரத்தை இப்பொழுதே செய்து தர்மத்தைத் தூஷிக்கும் துஷ்டர்களை யதோசிதம் தேவரீர் நிக்ரஹிக்காவிடில் ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்கே ஆத்யந்திக நாசம் ஸம்பவிக்கும் போல் இருக்கின்றதே' என்று ஸ்ரீ கூரேசன் சற்றேறக்குறைய 700 - வருஷத்திற்கு முன்னதாக பகவானை ப்ரார்த்தித்ததாக நாம் அறிகிறோம். உண்மையாகவே, அக்காலத்தில் சேர்ந்திருந்த தர்மப்ரம்சம் அவரை அவ்வளவு பயப்படும்படி செய்தது. இந்த 700 வர்ஷத்துக்குள் கல்கி பகவானும் அவதாரம் செய்துவிட வில்லை; ஸாதுக்களால் எதிர்பார்க்கப்படும் க்ருதயுகமும் வந்துவிடவில்லை. ஆத்ம விஷயகமான அஜ்ஞானம் அப்பொழுதுக்கு இப்பொழுது மேலிட்டிருக்கிறதே தவிர குறையக் காணோம். 'தைவம் என்று ஒன்று உண்டு, அதன் அடிமையாயுள்ள ஆத்மா வென்று ஒன்று உண்டு' என்னும் நினைவே வர வர லோபத்தை அடைந்து வருகிறது. ஹிம்ஸை ஸ்தேயம் அஸத்யம் முதலிய ஸாமாந்யங்களான அதர்மங்களும் பலமாக ஓங்கி வருகின்றன. ஆனால், அதீந்த்ரியமான ஆத்ம வஸ்துவில் எவ்வளவு அச்ரத்தையும் அவிச்வாஸமும் ஜனித்திருக்கின்றனவோ அவ்

* இது நாளது ஆடி மாஸத்தில் திருவாலூரில் நடந்த அவ்விடத்திய ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் வார்ஷிக ஸங்கத்தில் ஸ்ரீ. உ.ப. வாஸுதேவாசார்ய ஸ்வாமியாற் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

ளவு அநீதத்தையும் அவிஶ்வாஸமும் ஸாமாந்ய தர்மங்களில் ஜயிக்கவில்லையென்று சொல்லலாம். முதலில் அங்கீகரித்ததை பிறகு மறுதளிக்கும் சில துஷ்டர்கள் சிற்சில விடங்களில் காணப்பட்டாலும், அந்தநிராகரணத்திற்கு பயந்து தமது நடவடிக்கைகளை ஒழுங்காக நடத்திவரும் பல ஸாதுக்கள் இன்னமும் இம்மேதினியில் தென்படுகிறார்கள். பஹிரங்கமாகவும் எவ்வித லஜ்ஜையின்றிக்கும் அநீதிகள் இன்னும் எல்லாராலும் அநுஷ்டிக்கப்படவில்லை. அநீதிகளில் ப்ரவ்ருத்திக்குமவர்கள் ப்ராயேண ராத்ரிஞ்சரர்களாகவும் திவாபீதர்களாகவுமே இருக்கிறார்கள். ராஜாங்கத்தாரும், ஆமுஷ்மிக ஶ்ரேயஸ்ஸை ஶ்ரேயஸ்ஸாக நினைக்காவிட்டாலும், தர்மாநுஷ்டானாவஶ்யகதையை ஶ்ருதி சோதிதமென்று அங்கீகரிக்காவிட்டாலும், ஸாமாந்யமாக அதர்மம் செய்பவர்களைத் தண்டிப்பதிலும் ஸாதுக்களை ரக்ஷிப்பதிலும் ப்ரவ்ருத்தர்களாகவே காணப்படுகிறார்கள். இந்த ஸ்திதி இருக்கும்வரையில், நாம், ஸ்ரீகூரேஶன் ஶோகித்ததுபோல ஶோகிக்கக் காரணமில்லை. இனி ஸம்பவிக்கும் போல காணப்படும் ஸ்திதியை ஆலோசிக்கும் பொழுது தான் நமது மனஸ் நடுங்குகிறது. ‘அதி பயங்கரங்களான ஆதங்கங்கள் ஸமீப காலத்திலேயே ஸம்பவிக்கும் போல தோன்றுகின்றனவே! அவைகளை ஸம்பவியாமல் தடுத்து ஸ்ரீபகவான் ஜகத்தை ஸம்ரக்ஷிக்கவேணும்’ என்பதுதான் நமது ப்ரார்த்தனை.

இப்பொழுது இந்தப் பூலோகத்தில் சில விடங்களில் மஹத்தான தர்மப்ரமாதம் ஏற்பட்டிருக்கிறதென்று பத்ரிகைகளிலிருந்து தெரியவருகிறது. ‘பால்ஷெவிஸ்ட்’ என்று சில துஷ்டர்கள் புதிதாக ஒரு கூட்டமாகச் சேர்ந்திருக்கிறதாகவும், அஸத்தமங்களான க்ருத்யங்களை ஸஹஸ்ரஶ: எவ்வித கூச்சமுமின்றிக்கே ஸர்வஜந ப்ரத்யக்ஷமாகச் செய்துகொண்டு வருகிறதாகவும், அந்த க்ருத்யங்கள்தாம் எல்லாராலும் அநுஷ்டேயங்கள் என்று ஸகலருக்கும் போதிப்பித்துக்கொண்டு அந்தப் போதகத்திற்கு மற்றவர்களையும் நிர்பந்தத்துடன் உட்படுத்துகிறதாகவும் நாம் கேள்விப்படுகிறோம். அவர்களுக்கு ஸ்வஸ்வம் பரஸ்வம் என்னும் விஶேஷமில்லையாம். பலிஷ்டர்கள் துர்பலர்களின் சொத்தை அபஹரித்துக்கொண்டும், சௌர்யம் கொலை முதலியவற்றைக் கணக்கில்லாமற் செய்துகொண்டும், மீன்கள் போலவே வர்த்தித்து வருகிறார்களாம். ஆஸ்திக்யமே அவர்களால் முக்கியமாக த்வேஷிக்கப்



படுகிறதாம். அந்தத் தேஶத்தில் க்றிஸ்துமதமே இருப்பதால் அந்த மதத்தை நாஶம் செய்வதிலும் அந்த மதப்படி அநுஷ்டிக்கிறவர்களை ஹிம்ஸிப்பதிலுமே அவர்கள் பத்தகங்கணர்களாக இருக்கிறார்களாம். அவ்விடத்தில் பாடஶாலை கடை ந்யாயஸ்தலம் கைத்தொழிற் சாலை இவைகளுள் ஒன்றுமே இல்லையாம். ஒருவன் மற்றொருவனைப் பார்த்து ஶங்கிப்பதும், ஶங்கித்த மாத்ரத்தில் ஒருவனை ஒருவன் வெட்டிக்கொள்வதும் சுடுவதும், சில ஸமயங்களில க்ராமம் முழுவதையும் தஹிப்பதும், இவை முதலியனவே அவர்கள் இருக்குமிடத்தில் ஸார்வகாலிக வ்யாபாரமாக இருக்கிறதாம். மாம்ஸார்த்திகளாக இருக்கும் காட்டு மிருகங்கள் முதலில் மாம்ஸாந்வேஷணம் செய்து அதைப் புஜித்து பிறகு மாம்ஸம் துர்லபமாகும் பொழுது எப்படி பரஸ்பரம் ஹிம்ஸித்துக்கொள்ளுமோ, அந்த ரீதியாகவே இவர்களும் முதலில் ஒன்று சேர்ந்து மற்றவர்களை ஹிம்ஸிக்கிறதும் பிறகு பரஸ்பரம் அடித்துக்கொள்வதுமாகவே இருக்கிறார்களாம். சற்றேறக்குறைய இரண்டு மூன்று வர்ஷ காலமாக இந்த ஸ்திதி அவ்விடத்தில் காணப்பட்டு வருகின்றது. அவ்விடத்திலிருந்து மற்றவிடங்களுக்கும் பரவி வருகின்றது. இங்கிலாந்துக்கும் வந்துவிடுமோவென்று அந்தத் தேஶவாஸிகளுட் பலர் பயப்படுகிறார்கள். நமது தேஶத்திலும் ஆக்ரமித்து இருப்பதாக சிலர் சொல்லுகிறார்கள். இம்மாதிரியான நடவடிக்கைகள் சில துஷ்டர்களுக்குள் மாத்திரம் நடந்து வந்தால் அவைகளைப் பற்றிப் பெரிதாகப் பேசி அவைகளை ஜகத்தின் க்ஷோபத்திற்கு ஒரு பெரிய ஹேதுவாக ஶங்கிக்க இடம் இராது. அப்படிக்கில்லாமல் பெரியதொரு ஜநஸமவாயத்தின் பஹிரங்க அநுஷ்டானங்களாக அவை காணப்படுகிறபடியால் தான் அவைகளைப்பற்றி நாம் அஞ்சும்படியாக ஸம்பவிக்கிறது. தவிரவும், இம்மாதிரியான அதர்மத்தில் ப்ரவ்ருத்திப்பவர்களை அடக்கவாவது விலக்கவாவது ராஜாங்கத்தாராலும் ஸாத்யப்படவில்லையாம். அதுவே பெருத்த பீதியை ஜநிப்பிக்கின்றது.

ஸ்ரீ மஹாபாரதத்தில், கலியுகத்தில் நடக்கப்போகும் பவிஷ்யல் லோக வ்ருத்தாந்தத்தை ஸ்ரீ மார்க்கண்டேயர் யுதிஷ்டிரருக்கு வர்ணித்து வரும் பொழுது, மநுஷ்யர்களெல்லாரும் ஶாஸ்த்ரமொன்றுக்கும் கட்டுப்படாமல் மநம்போன போக்கெல்லாம் ப்ரவ்ருத்தித்து அதர்மத்தையே நோக்கி நடப்பார்களென்றும், வித்

யாவிஹீநர்களாயும் காமக்ரோத பரர்களாயும் கொண்டு பரஸ்
பரம் வதம்செய்து கொள்வார்களென்றும், வர்ண வ்யத்யாஸமே
இல்லாமல் இந்த்ரியங்களுக்கு விஶ்ருங்கலமான ப்ரவ்ருத்தியைக்
கொடுத்து ருசிக்குமவை யெல்லாவற்றையும் வரம்பில்லாமல் புஜி
த்தும் அநுபவித்தும் தாம் செய்யும் கார்யங்களில் எவ்வித லஜ்
ஜையு மின்றிக்கே அவைகள் தாம் உசிதங்களென்று ஹேது
வாதங்களைச் செய்து கொண்டும் பரஸ்வ பரதாராதி விஷயங்க
ளில் விசேஷ மொன்றையும் பாராட்டாமல் ம்ருக ப்ராயராகவே
வர்த்தித்து வருவார்களென்றும், எவ்விடத்திலாவது சில ஸாத்வி
கர்கள் தென்பட்டால் அவர்கள் மற்றவர்களால் ஹிம்ஸிக்கப்
பட்டு வருந்துவார்களென்றும், ஸகல கட்டுப்பாடுகளும் குலைந்து
ஸர்வமும் அதரோத்தரமாகி விடுமென்றும் சொல்லி இருக்கிறார்.
இதைப் படிக்கும் பொழுது, இப்பொழுது பால்ஷெவிஸம் பரவி
இருக்குமிடத்தில் நடைபெறும் நடவடிக்கைகளை ஸாக்ஷாத்
கரித்தே மஹர்ஷி எழுதினாரோ என்னும் ஶங்கை தோன்றுகின்
றது.

அதிபயங்கரங்களான இந்த நடவடிக்கைகள் இவ்வளவு ப்ர
பலமாக இப்பொழுது நடமாடுவதற்குக் காரணமென்ன வென்று
நாம் ஆலோசிக்க ப்ராப்தம். லோகத்தில் நாஸ்திகவாதமும் நாஸ்
திக அநுஷ்டாநமும் பலப்பட்டதே இதன் காரண மென்று உறு
தியாகச் சொல்லலாம். ஐரோப்பாவில் வால்டேர் ரூஸோ ப்ரப்ரு
திகளால் உபக்ரமிக்கப்பட்டு, பஶ்சாத் தத்துல்யாதிகாரிகளால்
பரவச் செய்யப்பட்டு, நாஸ்திக்யம், இப்பொழுது பலமாக வேரூ
ன்றிவிட்டது. வித்வாங்களென்று வ்யவஹரிக்கப்படும் பாஶ்சாத்
யர்களுட் பலர், ப்ராக்ருத பதார்த்தங்களின் பரிஶீலநத்திலேயே
ப்ராயேண ப்ரவ்ருத்தித்திருக்கிறார்களே தவிர அதீந்த்ரிய வஸ்
துக்களின் விசாரத்தில அவ்வளவாகச் செல்லவில்லை. ஹிம்ஸை
ஸ்தேயம் அஸத்யம் முதலிய அதர்மங்களிலிருந்து பயந்து நடக்க
வேண்டியது அவஶ்யமென்று அவர்கள் ஒத்துக்கொண்டிருந்த
போதிலும், அப்படி நடக்க வேண்டியதை ஈஶ்வராஜ்ஞை என்று
எண்ணாமல் லோகத்தின் ஸாதுவான ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்கு
அப்படி நடப்பது தான் அநுரூப மென்று மாத்திரம் நினைத்து
அவர்கள் இம்மாதிரியான ஸாமாந்ய தர்மத்திற்குக் கட்டுப்பட்டு
வருவதாகத் தெரியவருகிறது. லோகத்தின் ஸ்திதியையும் அபி



வ்ருத்தியையும் மாத்திரம் தர்மாநுஷ்டாநத்திற்கும் அதர்மத்தி
லிருந்து ஒழிவதற்கும் காரணமாகக் கொள்வது ஸத் தர்க்க
மன்று என்பதைச் சற்று விசேஷ பராமர்ஶம் செய்பவர்களெல்லா
ரும் உணரக்கூடும். அப்படி அவைகளுக்குப் பரஸ்பரம் காரண
கார்யபாவம் ஒருகால் இருந்த போதிலும், லோகத்தில் மிதஜ்ஞர்
களே பஹுவாக இருக்கிறபடியால், அந்தக் காரணகார்யபாவத்தை
அவர்களும் அறிந்துகொண்டு அதற்குத்தகுந்ததுபோல அவர்க
ளும் நடப்பார்கள் என்று நாம் எவ்விதத்தில் ப்ரதீக்ஷிக்கக்கூடும்?
'தர்மாநுஷ்டாநமானது நமது ஸ்வாமியின் ஆஜ்ஞை; அது அவ
னுக்கு முகோல்லாஸகரம்; அதன் அதிலங்கநம் அவனுடைய
நிக்ரஹத்திற்கு ஹேதுவாகும்' என்னும் உறுதியே தர்மாநுஷ்
டாநத்தில் ஜநங்களின் புத்தியை நிலைநிறுத்துமே தவிர மற்றை
எதுவும் தர்ம ஸம்ஸ்தாபநத்திற்கு ஹேதுவாகாது என்பது
திண்ணம்.

இப்படி தேஶாந்தரங்களில் பரவிவரும் நாஸ்திக்யோபதே
ஶம், நமது தேஶத்தவர்களுக்கும் அநேகமாக ஸம்பவித்திருக்கின்
றது. ஸ்ரீ பகவானொருவன் ஸகலத்திற்கும் ஆதிகர்த்தாவாகவும்
ஸகலருக்கும் பலப்ரதனாகவும் இருக்கிறான் என்பதையும், அவ
னால் கொடுக்கப்பட்ட கரண களேபராதிகளைக்கொண்டு ஜீவகோ
டிகள் இந்த ப்ரபஞ்சத்தில் ஸம்ஸரித்து வருகின்றன என்பதை
யும், ப்ரத்யக்ஷமாகத் தென்படும் ஶரீரம் நாஶமடைந்த பிறகும்
ஆத்ம தத்வமென்று ஒன்று சேஷித்து நிற்கிறது என்பதையும்,
அந்த ஆத்மோஜ்ஜீவநத்திற்கு முக்கியோபாயமானது அந்த ஈஶ்வர
னால் கிருபையுடன் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஶாஸ்த்ரத்தை
அநுஸரித்து நாம் அநுஷ்டாநம் செய்வதே என்பதையும் அவர்கள்
ஶுத்தமாக மறந்து விட்டார்கள். த்ருஷ்டமான பலமொன்றே
நம்மால் தேடக்கூடியதென்று சொல்லிக்கொண்டு, அவர்கள் அர்
த்தகாம பரர்களாய் வர்த்தித்து வருவதை நாம் ஆயிரக்கணக்காகப்
பார்க்கலாம். மநஸ்ஸுக்குத் தோன்றினபடி யெல்லாம் நடக்கவும்
பாஹ்யேந்த்ரியங்களுக்கு அஸங்குசித த்ருப்தியைக் கொடுக்க
வும் நாம் ஒரு தடவை ப்ரவ்ருத்தித்தால், அந்த ப்ரவ்ருத்தி எவ்
விடம் போய் நிற்குமென்று யாரால் நிர்ணயிக்கக்கூடும்? நமது
இந்த்ரியங்களை த்ருடமான ஒரு கட்டுக்கு உள்ளடக்கிக் கொண்டு
நாம் வந்தாலொழிய அவை நம்மைக் கவிழ்த்துவிடு மென்பது

நிஸ்சயம். இம்மாதிரியான ஒரு கட்டின் ஆவஸ்யகதையை நாஸ்திக வாதம் செய்பவர்களும் ஒருவாறு ஒத்துக்கொண்டிருந்த போதிலும், ஶாஸ்த்ரமென்னும் ஒரு கட்டுப்பாட்டை அவர்கள் அங்கீகரிக்கவில்லையாதலால், அந்தக் கட்டின் நிலையில் நமக்கு விஶ்வாஸம் ஜநிக்கவில்லை. இப்பொழுது நாஸ்திகர்களாக இருக்குமவர்களுள் அநேகர் அதர்மத்தில் ப்ரவ்ருத்தியாமல் லோகஹிதகரங்களான பல கார்யங்களில் ப்ரவ்ருத்தியிருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால், இந்த ஸாது ப்ரவ்ருத்தியை, பூர்வகாலத்தில் அவர்களால் அப்யுபகதமாயிருந்த ஶாஸ்த்ர பந்தங்களின் பலமாகவும், இப்பொழுது இன்னும் ஶாஸ்த்ர பந்தம் பரவியிருக்கும் ப்ரதேஶங்களில் அவர்களின் ஸ்திதி ப்ரவ்ருத்தி இருக்கிறபடியால் அதன் ஸம்ஸ்கார விஶேஷமாகவும் நாம் எண்ணுகிறோம். நாஸ்திக்யம் நாலுபக்கங்களிலும் பரவி ஆஸ்திக்ய கந்தமே அற்றுப் போய்விட்டால், நாஸ்திக்ய புத்தியின் உண்மையான பரிணாமம் நன்றாக விளங்கும். அப்படிப்பட்ட காலம் ஸம்பவித்து விடும் போல் இருக்கிறதே என்று தான் நாம் பயப்படுகிறோம்.

இப்பொழுது நமது தேஶத்து ஜநங்கள் இருக்கும் இருப்பையும் அவர்கள் நடந்துகொள்ளும் மாதிரியையும் சற்று ஆலோசித்துப் பார்த்தால் அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொண்டிருப்பது வஸ்து ஸ்திதியே என்பது விளங்கும். 'விளையும் பயிர் முளையிலே' என்னும் ந்யாயப்படி, வரப்போகும் ஜகத்தின் ஸ்திதியை இப்பொழுது பாலர்களாக இருக்கும் நமது சிறுவர்களின் நடவடிக்கைகளைக் கொண்டே ஊஹிக்கலாம். பெரியோர்கள் சிறியோர்கள் என்னும் வரம்பு இல்லாமலும், தமது புத்தியில் தோன்றுமவைகளையே ந்யாயங்களென்று ஆக்ரஹத்துடன் பிடித்துக்கொண்டும், பூர்வகாலத்து ஜநங்களையும் பூர்வகாலத்து பரிபாடிகளையும் இகழ்ந்து பேசிக்கொண்டும், மநோவாக்காயங்களுக்கு விஶ்ருங்கலமான ஸ்வாதந்த்ரியத்தைக் கொடுத்துக்கொண்டும் இருப்பவர்களாகவே நமது சிறுவர்கள் பெரும்பாலும் காணப்படுகிறார்கள். நமது தேஶத்திற்கும் நமது நாகரிகத்திற்கும் அநுரூபமாயிருக்கும் நடை உடை பாவனைகளெல்லாம் அவர்களுக்கு லஜ்ஜாகரங்களாக இருக்கின்றன. இதர தேஶத்திய பந்தாக்களும் அந்தத் தேஶவாஸிகளான ஜநங்களின் நோக்கங்களுமே ஆதரத்திற்கு ஆஸ்பதமாக இருக்கின்றன. த்ருஷ்ட பல



மொன்றே பெரியதாகத் தோன்றுகிறது; அத்ருஷ்டத்தில் விஶ்வாஸமில்லை. விநயத்தை அப்யஸிக்கும் காலத்தில் அவிநயமே கற்கப்படுகின்றது. வித்யா ஸம்பாதநார்ஹ வயஸ்ஸில் வித்யா ஸம்பாதநத்திற்கு விருத்தமான ஆஹாராதிகளே ஸேவிக்கப்படுகின்றன. இக்காலத்திய பாடஶாலைகளுக்கு அங்கமாக இருக்கும் அப்யவஹார ஸ்தலங்களில் வஸித்துக்கொண்டு அவரவர்களின் சொத்துக்கும் அதிகாரத்திற்கும் அத்யந்தம் அநநுரூபமான அநுபவமே பரிசயம் செய்யப்பட்டு வருகின்றது. இம்மாதிரி, அத்ருஷ்டத்தில் விஶ்வாஸமில்லாமலும் த்ருஷ்டத்தையே பெரிதாக நினைத்தும், நியமங்களுக்கு உட்படாமலும், ஸ்வதேஶத்திய பரிபாடியில் ஜுகுப்ஸிதர்களாகவும், புதிது புதிதாகக் காணப்படும் நாகரிகத்திலேயே ஆஸக்தியுள்ளவர்களாகவும், இந்த்ரியங்களைக் கட்டுப்படுத்தாமலும், தமக்கு அநநுரூபமான அநுபவங்களிலேயே ஈடுபட்டும் நமது பாலர்கள் பால்யத்தில் வளர்ந்து வந்தால், வயது வந்தபிறகு லோகத்தில் வெளிப்புறப்படும் காலத்தில், தம்மால் பூர்வம் அநுபவிக்கப்பட்ட ஸ்வாதந்த்ரியத்தையும் இந்த்ரிய ஸுகத்தையும் அடையாதவர்களாய் தாம் ஶ்ரமப்படுவதுமின்றி அந்யர்களையும் க்லேஶத்துக்குப் பாத்ரமாக்காமல் எப்படி இருக்கமுடியும்? இது சிறுவர்களின் ஸ்திதி. வயதில் முதிர்ந்தவர்களின் ஸ்திதியும் இதைவிடச் சிறந்ததாகக் காணப்படவில்லை. ஸத்ஸங்கத்தையும் ஸதாசார்ய கடாக்ஷத்தையும் அடைந்து அதனால் ஶிக்ஷை அடைந்திருக்கும் புத்தியை உடைய சில பெரியோர்களை விலக்கிவிட்டால், மற்றவர்களுடைய ஸ்திதி நமக்கு அவ்வளவாக தைரியத்தை ஜநிப்பிக்கவில்லை. அதைப்பற்றி அதிகமாக அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொள்வது அநுசிதமாக இருக்குமாதலால் அதலிருந்து விரதனாகிறேன். ஸாக்ஷாந்தரத்தில தேர்ச்சியை அடைந்து பெரியோர்களென்று நம்மால் ஆதரிக்கக்கூடிய ஸ்திதியிலுள்ள சில மஹான்களிடத்திற்கூட பாபத்திலிருந்து பயமும் தைவத்தினிடம் விஶ்வாஸமும் ஆஸ்திக்யமும் த்ருப்திகரங்களாகக் காணப்படவில்லையென்று மாத்ரம் சொல்லலாம். உண்மையான செழிப்பு என்பது ஆஸ்திக்யத்தையே சார்ந்ததன்றோ? ஆஸ்திக்யம் அஸ்தமித்தால் செழிப்பும் சிதறாதோ? ஜகத்தை ஸந்மார்க்கத்தில் ப்ரவ்ருத்திப்பிக்கும் யோக்யதையுள்ள வ்யாஸ ப்ரப்ருதிகளை அவமதித்து தமது

யுக்திகளையே ஆதாரமாகக்கொண்டு தர்மோபதேசம் செய்ய ப்ரவ்ருத்திக்கும் இந்தப் பெரியோர்களிருக்குமிடத்தில் ஆஸ்திக்யம் இருக்கிறது என்று எவ்விதத்தில் சொல்லக்கூடும்? ஆஸ்திக்யக் குறைவினால் ஹீநஸ்திதியை அடையும் இதரதேசங்களைப் பார்த்தாவது இவர்கள் நல்ல புத்தியைப் பெறக்கூடாதா? வயதுவந்தவர்களாயும் புத்திசாலிகளாகவும் இருப்பதால் இவர்கள் தமக்குத் தென்படும் நிதர்சனங்களைக் கொண்டு பயன் பெறலாமென்று நினைக்க ப்ராப்தமாகிறது. இது வரையில் தவறிப் போயிருந்தாலும் இனியாவது இவர்கள் நல்வழிக்குவந்தால், இவர்களுடைய ஸஹாயத்தை அவலம்பித்து சிறுவர்களைச் சீர்திருத்தி ஜநதைக்கு ச்ரேயஸ்ஸை ஸம்பாதித்துக்கொள்ளலா மென்னும் ப்ரத்யாசையை நாம் கொள்ளக்கூடும். அப்படி வருவதாகக் காணப்படவில்லையே யென்று தான் நாம் சோகிக்கிறோம்.

'[illegible]'

என்னும் ஸ்வபாவமுள்ளவர்களாகவே அவர்கள் காணப்படுகிறார்கள். ஜந்மாந்தர கர்ம க்ருதமான ஆந்த்யம் அவர்களைச் சரிவர வஸ்து ஸ்திதியைப் பராமர்சிக்க வொட்டவில்லையே! தாம் கெட்டுப்போவதுமல்லாமல் மற்றவர்களையும் கெடுத்துவிடுகிறார்களே! இதற்கு ப்ரதீகாரம் ஏதாவது உண்டோ?

'[illegible]
[illegible]'

என்கிறபடி, நம்முடைய புத்திக்கும் சக்திக்கும் இயன்ற மட்டும் அநிஷ்டங்களை நிவாரணம் செய்துகொள்ள நாம் ப்ரயத்நப்பட வேண்டியது அவச்யமன்றோ? ஆகையால், நம்மை இப்பொழுது அர்த்தாம்சம் ஆக்ரமித்திருக்கும் பயங்கரமான இந்த இருளை எவ்விதத்தில் நிரஸநம் செய்யலாம் என்பதை நாம் சற்று ஆலோசிப்போம்.

(இன்னும் வரும்).

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.



ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# இவ்வர்ஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம்.

இவ்வர்ஷத்திய ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கத்தை ஸ்ரீ ராஜமன்னார் ஸந்நிதியில் நடத்துவதாக ஸ்ரீ. உப. கோட்டேர். எஸ். ராஜகோபாலாசார்ய ஸ்வாமி ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பது நமது தீபிகாபிமாநிகளுக்கும் திருவஹீந்த்ரபுரத்தில் நடைபெற்ற சென்ற ஸ்ரீ வைஷ்ணவ ஸங்கத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தவர்களுக்கும் விதிதமாக இருக்கலாம். பூர்வம் உத்ஸாஹ ஸம்பந்நராக இருக்கும்பொழுது ப்ரதிஜ்ஞையைச் செய்வதும் பச்சாத் ஸ்வல்பகாலம் க்ரமித்த பிறகு ஔதாஸீந்யத்தை வஹிப்பதும் ஜநஸாமாந்யத்தின் ஸ்வபாவமாக இருந்தாலும், இந்த ஸ்வாமி விஷயத்தில் அப்படிக்கில்லாமல் ச்ரத்தையும் உத்ஸாஹமும் காலம் செல்லச்செல்ல அதிகரித்துக்கொண்டே வருவதைப் பார்க்க நமக்கு மிக்க ஸந்தோஷம் ஜநிக்கின்றது. இம்மாதிரியான சக்தியுக்த உத்ஸாஹிகள் பத்து இடங்களில் பத்துப்பெயர் தென்படுவரேயாகில், நமது ஸித்தாந்த ப்ரசார ஸம்பந்தமான விசாரம் நிவ்ருத்தமாகிவிடுமென்பது நிச்சயம்.

சென்ற மாஸத்தில், இவ்வர்ஷத்திய மஹாஸங்கத்தின் விசேஷாம்சங்களைப்பற்றி நமது ஸபையின் நிர்வாஹக கமிடி அங்கத்திநர் ஒரு கூட்டம்கூடி ஆலோசித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ. உப. கோட்டேர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமியும் ஸந்நிஹிதராக இருந்தார். மஹாஸங்கத்தை வருகிற மார்கழி மாஸம் 12,13,14, 15-ம் தேதிகளில் நடத்துகிறதென்று நிர்ணயம் செய்யப்பட்டது. ஸ்ரீ. உப. பகவத்விஷயம் சேட்லூர் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியை ஸங்கத்தின் அக்ராஸநாதிபத்யத்தை வஹிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவரும் க்ருபையுடன் அதை அங்கீகரித்தார். யதா

பூர்வம் உபந்யாஸங்களும் வித்வத்ஸதஸ்ஸும் நடைபெறும் ஸ்ரீ பாஷ்யத்தில் பரீக்ஷை நடப்பதுடன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் பரீக்ஷை நடத்தப்படும். இந்த உபந்யாஸங்களுடையவும் பரீக்ஷைகளுடையவுமான விசேஷித்த அம்சங்கள் அடுத்த ஸஞ்சிகையில் ப்ரகுரம் செய்யப்படும். ஸ்ரீ வைஷ்ணவ பாகவதோத்தமர்களெல்லாரும் அக்காலத்தில் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாயிருந்து இந்த ஸங்கத்தை பகவத்ப்ரீதிகோல்லாஸகரமாக நடத்தி வைக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ ராஜகோபாலனால் உகந்தருளப்பட்டும் அநேக பாகவதோத்தமர்களால் அலங்கரிக்கப்பட்டும் இருக்கும் ஸ்ரீ ராஜமன்னார் ஸந்நிதியில் மஹாஸங்கம் நடைபெறப்போகின்றது என்பது நமக்கு மிக்க ஆநந்தத்தை ஜநிப்பிக்கின்றது. ஸ்ரீ ராஜகோபாலனுடைய கடாக்ஷவிசேஷமடியாக அவ்விடத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தி பெருகி இருப்பதுடன், இம்மாதிரியான வைதிக உத்ஸவங்களில் மிகுந்த ஶ்ரத்தையுடன் கூடிய ஆஸ்திகர்களும் அவ்விடத்தில் பஹுவாக காணப்படுகிறார்கள். ஸ்ரீ. உப. ராஜகோபாலாசார்ய ஸ்வாமியின் மநோரதத்தைப் பூர்ணமாக ஸாதித்து வைக்கக்கூடிய பக்தர்களும் அவ்விடத்தில் பலருண்டு. த்ரவ்யம் ஸம்பந்தப்பட்டவரையில் அந்த ஸ்வாமி மற்றவர்களுடைய ஸஹாயத்தை அவ்வளவாக ப்ரதீக்ஷிக்கவில்லை. ஆனாலும், இதர மநுஷ்யர்களுடைய தேஹப்ரயாஸரூபமான ஸஹாயமின்றிக்கு இவ்விதமான கார்யம் நிறைவேறாதலால், அம்மாதிரியான ஸஹாயத்தைச் செய்யக்கூடிய மஹான்கள் அவ்விடத்தில் பலருண்டு என்பது தான் நமக்கு தைரியத்தைக் கொடுக்கின்றது. பத்தநத்திற்குப் பத்தநமாயும் கிராமத்திற்கு கிராமமாயும் இருக்கும் அந்த ஸ்தல ஸந்நிவேசமும் அதீவ ரமணீயமே. ஸங்கத்தின் பெருமையை அநுபவிக்கவேணுமென்று உத்தேசித்து அவ்விடம் எழுந்தருளும் ஸ்வாமிகளெல்லாரும் ஸர்வ ப்ரகாரங்களிலும் பூர்ணத்ருப்தர்களாகவே இருப்பார்களென்பது நமது நம்பிக்கை. ஸ்ரீ ராஜகோபாலன், தனது தாஸர்களால் உபக்ராந்தமாயுள்ள இந்த ப்ரவ்ருத்தியை குளிர்ந்த கடாக்ஷங்களால் கடாக்ஷித்து யதோசிதம் திருவுள்ளம் பற்றவேணுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ. வாஸுதேவாசாரியன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# கடிதங்கள்.

(1)

## உபயுக்தாம்ச ஸங்க்ரஹம்.

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ வேங்கட தாதாசார்யர் என்னும் ஒரு ஸ்வாமி உபயுக்தாம்ச ஸங்க்ரஹமென்னும் பெயருடைய ஒரு விஷயத்தைப் பற்றி எழுதி இருப்பதை எல்லாரும் பார்த்திருக்கலாம். அதன் முடிவில் காணப்படும் அநுஷ்டுப் ஶ்லோகத்திலிருந்து, அது, சில துராசாரங்களை நிரஸநம் செய்யும் பொருட்டே எழுதப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. நமது ஸபை ஸம்பந்தமாகவும் அதற்கு வெளிப்பட்டும் சென்ற 10-வருஷ காலமாக பற்பல விடங்களில் வைதிக வித்வான்கள் நமது ஸித்தாந்த விஷயங்களைப்பற்றி உபந்யாஸம் செய்து வருகிறார்கள்; தீபிகை முதலிய பத்ரிகைகளில் ஸித்தாந்த ஸம்பந்தமான விஷய விசாரமும் செய்து வருகிறார்கள். இப்படி அவர்கள் செய்வது ஶாஸ்த்ர விருத்த மென்றும், ஆகையால் அது துராசாரமாகிறதென்றும் அவர் வாதிக்கிறாரென்று நாம் அறிகிறோம். இதற்கு நாம் பதில் சொல்லவேண்டியது ஸ்வல்பமே. 'நமது ஶாஸ்த்ரங்களில் எது செய்யப்படக்கூடாது என்று நிஷேதிக்கப்பட்டிருக்கிறதோ அது நம்மால் செய்யப்படவில்லை; ஆகையால் அந்தத் துராசாரம் நம்மிடத்தில் இல்லை' என்பதுதான் அந்தப் பதில். இந்தப் பத்து வருஷ காலமாக நடைபெற்றுவரும் ஸங்கங்களுள் ஒன்றிலாவது மந்த்ரங்கள் கோபநம் செய்யப்படாமல் விவரிக்கப்பட்டதை நாம் அறியோம்; குஹ்யமாக ஸம்ரக்ஷிக்கப்படவேண்டிய ஸூக்ஷ்மார்த்தங்கள் ப்ரகடநம் செய்யப்பட்டதையும் நாம் காணோம். ஆனால், 'வ்யாயஶ: வ்ரஹஸாம' என்கிறபடி ஸ்தூலமான அம்சங்கள் விசாரிக்கப்பட்டும், ஸூக்ஷ்மங்களான அம்சங்களை அறிந்து கொள்வதில் ஒருவித ஆஸக்தியையும் ஶ்ரத்தையையும் ஆஸ்திக ஸாதுக்களுக்கு ஜநிப்பிப்பதற்கு உபயுக்தமாயுள்ள சர்ச்சைகள் செய்யப்பட்டும், எம்பெருமானுடைய கல்யாணகுணங்கள், திவ்யாவதார சேஷ்டிதங்கள், இவைகளின் அநுபவத்தில் ஏற்கெனவே ருசி இல்லாதவர்களுக்கு ருசி ஜநிப்பிக்கப்பட்டும் ஸ்வல்ப ருசியுள்ளவர்களுக்கு ருசி அபிவ்ருத்தம் செய்யப்பட்டும், இன்னும் வைதாத்ருஶமான ப்ரயோஜநங்கள் பல

வாக நடத்தப்பட்டும் வருகின்றன. இப்படிச் செய்வதை அஶாஸ்த்ரீயமென்று ஒருவரும் சொல்லத் துணியார். ஸ்ரீ வேங்கட தாதாசார்ய ஸ்வாமி இன்னும் கொஞ்சம் பரிஶ்ரமம் எடுத்துக்கொண்டு என்ன விதமான அநுஷ்டானங்கள் இவ்விடத்தில் நடத்தப்பட்டு வருகின்றன என்பதை நன்றாக விசாரித்திருந்தால் இப்பொழுது அவர் எழுதி இருக்கிறது போல எழுதி இருக்கமாட்டாரென்றே நாம் நினைக்கிறோம்.

தவிரவும், இந்தக் காலத்தின் துரவஸ்தையையும் நாம் சற்றுக் கவனிக்க வேண்டும். பாஶ்சாத்யர்களுடைய ஸம்ஸர்க்கத்தாலும் கலியின் கொடுமையினாலும் அர்த்த காமங்களிலேயே ஜநங்கள் ப்ராயேண ப்ரவ்ருத்தர்களாக இருக்கிறார்கள். தர்ம சிந்தையும் மோக்ஷ விசாரமும் அதிமாத்ரம் ஹ்ராஸத்தை அடைந்திருக்கின்றன. இப்படி தமது ஶ்ரேயஸ்ஸில் அத்யந்தம் அந்தர்களாய் அஶ்ரேயஸ்ஸையே நோக்கிச் செல்லும் ப்ராணிகள் விஷயத்தில் நாம் ஔதாஸீந்யத்தை வஹிப்பது உசிதமாகுமா? ஸ்வயம் ஶ்ரேயஸ்ஸைத் தேட அஶக்தர்களாயுள்ளவர்களுக்கு நம்மால் இயன்ற வரையில் நாமே கொஞ்சம் உபகரிப்பதும் ஶாஸ்த்ர நிஷித்தமாகுமோ? அஜ்ஞர்களாக இருக்குமவர்களுக்கு ஸஹாயம் செய்ய ப்ரயத்னப்படுவது பாதகமாகுமே தவிர, இரண்டு கோடியிலும் சேராமல் கேவலம் ஸம்ஶயர்களாய் மத்யத்தில் நிற்குமவர்களுக்குக் கைகொடுக்க ப்ரயத்னப்படுவது ஒருகாலும் பாதகமாகாதன்றோ? 'ஔநதாநு விஹாய ஶ்ரவணாநு விசிகித்ஸு ஜநகஃ' என்று பக்தோத்தமன் கதறினது நமக்கு அநுஷ்டேயமில்லாமலும் போகுமோ?

மேலும், முக்கியமான தர்மங்களெல்லாம் அத்யந்தம் லோபத்தை அடையும் இக்காலில், இது தானா நிரஸநார்ஹமாக ஸ்ரீ வேங்கட தாதாசார்யருக்குத் தோன்றிற்று? 'ஸத்யம் வத' 'தர்மம் சர', 'அஹரஹஃ ஸந்த்யாமுபாஸீத' இவை போன்ற விதிகளெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டனவே! ஆர்ஜவமென்பதே ஶப்தமாத்ராவஶிஷ்டமாகிவிட்டதே! அத்யந்தம் ஜுகுப்ஸிதமும் நிஷித்தமுமான கர்மங்களெல்லாம் பஹிரங்கமாக அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றனவே! இவைகளெல்லாம் நிரஸநார்ஹங்களாகக் காணப்படாமல் ப்ரக்ருத விஷயம் மாத்ரம் நிரஸநத்திற்கு யோக்யமாக அந்த ஸ்வாமிக்குத் தோன்றினது அதிமாத்ரம் ஆஶ்சர்யகரமாக இருக்கிறது. நமது ஸித்தாந்த ஸம்பந்தமான ஶ்ரௌதம் இப்பொழுது ஔஷதிபோல சிற்சில விடங்களில் காணப்படும் சில ஸ்வாமிகளுடன் அப்படியே ஜீர்ணமாகிவிடவேணுமென்பது அந்த ஸ்வாமியின் திருவுள்ளமாக இருக்குமோ? இவையெல்லாவற்றையும் அந்த ஸ்வாமி கொஞ்சம் ஆலோசிக்க வேண்டுமென்பதே நான் செய்யும் ப்ரார்த்தனை.



இது ஸம்பந்தமாக இன்னும் இரண்டொரு விஷயங்களைப்பற்றியும் அந்த ஸ்வாமி ப்ரஸ்தாவித்திருக்கிறார். அவை யதார்த்த வ்யாஹ்ருதி இல்லாமல் ஶுத்தமாக மித்யையாக இருப்பதால் அவைகளைப்பற்றி நாம் கவனிக்கவில்லை. அவைகளின் யாதார்த்யத்தை ஆலோசியாமல் உண்மை போலவே அவைகளைப்பற்றி எழுதத்துணிவது ஸர்வத்ர ஸந்மார்க்க ப்ரவ்ருத்தியைப் போதிப்பிக்கும் அந்த ஸ்வாமிக்கு ஸர்வதா அநநுரூபமே.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.

## (2)

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபை, திருவாரூர்.

இந்த ஸபையின் மூன்றாவது வார்ஷிக மஹோத்ஸவம் இவ்வருஷம் ஜூலைமீ 24வ சனிக்கிழமை யன்று திருவாரூர் மடப்புறம் ஸ்ரீ பெருமாள் கோவிலில், சென்னை வெஸ்லிகாலேஜ் ஸ்ரீமான் எஸ். வாஸுதேவாசாரியர் ஸ்வாமி அவர்களின் அக்ராஸநத்தின் கீழ்நடைபெற்றது. அக்ராஸநாதிபதியையும் ஸபையிலுள்ள ஏனையோரையும் ஸ்ரீமாந் வேளுக்குடி சேஷாத்ரி அய்யங்கார் ஸ்வாமி நல்வரவுகொண்டு அழைத்தார்.

பிறகு அக்ராஸநாதிபதி தமது உபந்யாஸத்தைத் திருவாய்மலர்ந்தருள ஆரம்பித்து, தற்காலத்தில் ஆங்கில பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் தங்களுடைய மதவாஸனை அற்றிருக்கிறார்கள் என்பதைப்பற்றி ஸபையில் உள்ளோர் மனது உருகும்படி சொல்லி அத்யந்தம் சோகித்தார். இப்போது கலாசாலைகளில் பயிலும் நேரம்தவிர, வேறு ஒழிவு காலம் பிள்ளைகளுக்கு இருந்தபோதிலும், இப்போது ஆங்கிலபாஷையில் தேர்ந்திருக்கும் பெரியோர்கள், அவர்களுக்கு மதஸம்பந்தமான விஷயங்களைப் போதிக்க முயலவில்லை யென்று வ்யஸநமுற்றார். சென்ற ஒரு நூற்றாண்டாகத்தான் இவ்வித நாஸ்திகம் மததிற்கு வந்திருக்கிறதென்று காண்பித்து, நம்முடைய தேசத்தையும் ஐரோப்பிய நாடுகளையும் கவனித்துப் பார்க்குங்கால் மேல்நாடுகளில் நாஸ்திக்யம் தலையெடுத்து அசைக்க முடியாதவளவு வேர் ஊன்றிவிட்டதென்றும், நம்முடைய தேசம் இன்னும் கொஞ்சநாளில் நாம் தகுந்தமுயற்சி எடுக்காவிட்டால் அவ்வித நாஸ்திக்யத்துக்குச் சரியான வாஸஸ்தானம் ஆய்விடும் என்றும், பிறகு செய்யும் நம் ப்ரயத்நங்கள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீருக்கு ஒப்பாகும் என்றும் உரைத்தார்.

தற்காலத்தில் ஆங்கில பாடசாலைகளை அடுத்திருக்கும் ஹாஸ்டல்கள் மதநெறி தவறி இருப்பதால் இவ்வித நாஸ்திக்யம் ஓங்க இடமாகிறது. மேலும் தங்களுக்குச் சுகமாயும் தங்கள் மதத்துக்கு விரோதமில்லாமலும்

இருக்கும் பழக்க வழக்கங்களை விட்டு, இக்காலத்து மாணவர்கள் அந்நிய நாட்டாரின் நடை உடை பாவனைகளை அதிகமாய்க் கையாடுகிறார்கள். நாஸ்திக்யம் நசித்து ஆஸ்திக்யம் தலையெடுக்கவேண்டுமானால், இந்தியர்களே வித்யாவிஷயங்களை மேல்பார்த்து, மதசம்பந்தமான போதனைகளை வித்தியாசாலைகளிலேயே போதிக்க முயலவேண்டும் என்று வற்புறுத்தினர். நமது இராஜபாஷையில் தேர்ந்த வித்வான்களும் தம்மிடத்தில் இருக்கும் மத விஷயமான குறைகளை நன்றாய் உணர்ந்து ஸத்ஸங்கத்தாலும் பகவத் ப்ரார்த்தனையாலும் அவைகளை நீக்க முயன்று சிறுவர்களையும் நல்வழிப்படுத்த ஸ்ரமப்படவேண்டும் என்று மொழிந்து அக்ராஸநாதிபதி தமது உபந்யாஸத்தை உபஸம்ஹரித்தார்.

இதன் பின்பு மன்னார்குடி நேஷனல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி திருப்பாணாழ்வார் அருளிச்செய்த ஒரு பாசுரத்தின் விஷயத்தைக் கேட்போர் ஆனந்திக்க விளக்கினர். ஸ்ரீமான் காடந்தேத்தி கோபாலாச்சாரியர் ஸ்வாமியும் 'பாகவத மாகாத்ம்யம்' என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு பாகவதர்களுடைய குணவிசேஷங்களை விஸ்தாரமாய் அருளினர்.

முடிவில் ஸபையின் ப்ரஸிடெண்டும் திருவாரூர் டிஸ்ட்ரிக்ட் முனிஸிப்பும் ஆகிய ஸ்ரீமான் K. K. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி M.A., M.L., ஸபையின் வரலாற்றையும் அபிவிருத்தியையும் எடுத்துக்காட்டி அக்ராஸநாதிபதிக்கும் உபந்யாஸகர்களுக்கும் வந்தனம் அளித்து மஹோத்ஸவத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

காரியதரிசி.

## சீர்திருத்தங்கள்.

(தொடர்ச்சி.)

### புதிய சட்ட நிருபணசபை அங்கத்தினர்களை பொறுக்கியெடுப்பது யார்.

(பப்ளிஸிடி பிரோவிலிருந்து.)

—⁂—

ஏற்கெனவே ஒரு பிரசுரத்தில் புதிய சட்டநிருபண சபையில் 127 மெம்பர்கள் (அங்கத்தினர்கள்) இருப்பார்களென்று, சொன்னோம். இவர்களை பொறுக்குவது யார்? இந்த சபையில் 4 பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு இடமுண்டு. மற்றும், 25 பெயர்களை, மேன்மைபொருந்திய கவர்னர் துரையவர்கள், தெரிந்தெடுப்பார். இவர்களில், 5 பேர் பஞ்சமர்கள் முதலான கீழ்ஜாதியார்களுக்காக தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

மற்றுமுள்ள 98 மெம்பர்களில் 5 பேர்களை இவ்விராஜதானியிலுள்ள பெரிய வியாபாரிகள் பொறுக்குவார்கள். பெரிய தோட்டக்காரர்கள்



(Planters) ஒரு மெம்பரை தெரிந்தெடுப்பார்கள். ஜமீன்தார்களாலும் ஜன்மிகளாலும் 6 பேரும், ஐரோப்பியர்களால் ஒருவரும், ஆங்கில இந்தியர்களால் ஒருவரும், இந்திய கிருஸ்தவர்களால் ஐவரும், சென்னை ஸர்வகலாசாலை (university) பட்டதாரிகளில் பழயவர்களால் ஒருவரும், முகமதியர்களால் 13 பேரும் தெரிந்தெடுக்கப்படுவார்கள். சென்னை நகரவாசி இந்துக்களால் 4 பேரும், ஸ்ரீரங்கம் உள்பட்ட திருச்சிறுப்பள்ளி பட்டணத்து இந்துக்களால் ஒருவரும், பாளையங்கோட்டை உள்பட்ட திருநெல்வேலி பட்டணத்திலிருக்கிற இந்துக்களால் ஒருவரும், மதுரை, காக்கிநாடா, விசாகப்பட்டணம் ஆன பட்டணங்களிலிருக்கும் இந்துக்களால், ஒவ்வொரு பட்டணத்திற்கு ஒவ்வொருவரும் தெரிந்தெடுக்கப்படுவார்கள். மற்றுமுள்ள 56 மெம்பர்களை, வெவ்வேறு ஜில்லாக்களிலுள்ள இந்துக்கள் தெரிந்தெடுப்பார்கள்.

இதற்கென்ன ஏற்பாடுகள் செய்யப்படும்? ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும், 2 அல்லது 3 பேர்களை சபைக்கு மெமபர்களாக தெரிந்தெடுத்தனுப்ப வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலிருந்து எத்தனைபேர்களை தெரிந்தெடுத்தனுப்பவேண்டுமென்பதைப்பற்றி கீழே காட்டியிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| அனந்தபுரம் ... ... | 2 | செங்கல்பட்டு ... ... | 2 |
| வடார்க்காடு ... ... | 3 | சித்தூர் ... ... | 2 |
| தென்னார்க்காடு ... ... | 3 | கோயம்புத்தூர் ... ... | 3 |
| பல்லாரி ... ... | 2 | கடப்பை ... ... | 2 |
| கஞ்சம் ... ... | 3 | நீலகிரி ... ... | 1 |
| கோதாவரி ... ... | 2 | ராமநாதபுரம் ... ... | 2 |
| குண்டூர் ... ... | 3 | சேலம் ... ... | 2 |
| தென்கன்னடம் ... ... | 2 | தஞ்சாவூர் ... ... | 3 |
| கிருஷ்ணா கிழக்கு ... | 2 | திருநெல்வேலி ... ... | 2 |
| ஷை மேற்கு ... ... | 2 | திருச்சிறுப்பள்ளி ... ... | 2 |
| கர்னூல் ... ... | 2 | விசாகபட்டணம் ... ... | 2 |
| மதுரை ... ... | 3 | | |
| மலையாளம் ... ... | 2 | | 56 |
| நெல்லூர் ... ... | 2 | | |

ஜனங்கள், எவ்விதம், மெம்பர்களைத் தெரிந்தெடுப்பார்கள்? சட்டநிருபணசபைக்கு யார்யார் மெம்பர்களைத் தெரிந்தெடுக்க அதிகாரம் பெற்றவர்களோ, அவர்களின் ஜாப்தா ஒன்றை கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள், ஒவ்வொரு ஜில்லாவிலும் தயார்செய்வார்கள்.

இந்த ஜாபிதாவில் எவர்களை சேர்க்கவேண்டுமென்பதைப்பற்றி பின்பு விளக்கிக்காட்டுவோம். அந்த ஜாபிதா தயாரானபிற்பாடு, சட்டநிருபண சபைக்கு மெம்பர்களாக இஷ்டமுள்ளவர்கள், தங்களுடைய இஷ்டத்தை வெளியிடுவார்கள். அவர்கள் அந்த ஜாபிதாவிலுள்ள நபர்களுக்கு, நோட்டீசுகளனுப்பி, அவர்களை ஒன்றுகூட்டி அவர்களுடன் கலந்து பேசுவார்கள்.

சட்ட நிரூபண சபைக்கு மெம்பர்களை தெரிந்தெடுப்பதற்காக ஒருதினம் குறிப்பிடப்படும். சில பெரிய கிராமங்களிலுள்ள கச்சேரிகள் மெம்பர்களை தெரிந்தெடுக்கு மிடங்களாகக் குறிப்பிடப்படும். அவ்விடங்களுக்கு, அத்தினத்தில் மெம்பர்களை தெரிந்தெடுக்க இஷ்டமுள்ளவர்களெல்லாம் வரும்படி சொல்லப்படும். அப்பொழுது அக்கச்சேரிகளுக்கு "போலிங் ஸ்டேஷன்ஸ் (Polling stations) என்ற பெயர் வழங்கும். (ஜாபிதா பெயர்களை கூப்பிடும் இடம் போலிங் ஸடேஷன்) அவ்விடத்தில் சட்டநிரூபண சபைக்கு மெம்பர்களாக வர இஷ்டப்பட்டு, தங்கள் இஷ்டத்தை வெளியிட்டவர்களுடைய பெயர்களடங்கிய துண்டுகடிதம் ஒன்று ஒரு உத்யோகஸ்தர்கொடுப்பார். அவர் சட்ட நிரூபண சபைக்கு மெம்பர்களை தெரிந்தெடுப்பதில், உங்களுக்கு இஷ்டமானவர்கள் பெயருக்குமுன் அக்கடிதத்தில் எவ்விதமான குறிபோடவேண்டுமென்று விளக்கிக்காட்டுவார். இம்மாதிரி செய்வதற்கு "ஓட்டு கொடுப்பது" என்று பெயர் வழங்கிவருகிறது. யாருக்கு அதிக "ஓட்டுகள்" கிடைக்கின்றனவோ அவர்களே மெம்பர்களாக தெரிந்தெடுக்கப்பட்டவர்களென்று வெளியிடப்படும்.

நீங்கள், வேறொருவரும் அறியாமல் குறியைப்போடுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும். அப்பொழுது நீங்கள் இன்னாருக்கு ஓட்டு கொடுத்தீர்களென்பதை ஒருவராலும் கண்டுபிடிக்கமுடியாது. ஆகையினால் நீங்கள் உங்களைக்கேட்டுக்கொண்டவர்களுக்கு ஓட்டுகொடுக்கவில்லையே அவர்கள் கோபித்துக்கொள்வார்கள் என்று பயப்படவேண்டியதேயில்லை. நீங்கள், சொன்னால் ஒழிய ஒருவரால் நீங்கள் இன்னாருக்கு "ஓட்டு" கொடுத்தீர்களென்பதைக் கண்டுபிடிக்கமுடியாது.

உங்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாமலிருந்தபோதிலும்கூட, உங்களுக்கு இஷ்டமானவர்களுக்கு நீங்கள் ஓட்டுகொடுக்கவேண்டிய விதத்தை அங்கிருக்கும் உத்தியோகஸ்தர் உங்களுக்குச் சொல்லிக்கொடுப்பார். அதற்காக அந்த உத்தியோகஸ்தரிடம், நீங்கள் யாருக்கு ஓட்டுகொடுக்கப் போகிறீர்களென்று சொல்லவேண்டியதில்லை.

ஜாபிதாவில் குறித்தவர்கள் "ஓட்டு" கொடுக்கலாம் என்று மேலே சொன்னோம். எவர்கள் பெயர் ஜாபிதாவில் சேர்க்கவேண்டும்? இப்பொழுது சொல்வோம்.

பொதுவாய் சொல்லுமிடத்து அடங்கலில்கண்ட 10 ரூபாய்க்குக் குறையாது, தீர்வைசெலுத்தும் குடியானவர்கள் அல்லது இனாம்தார்கள் பெயர்களெல்லாம், ஜாபிதாவில் சேர்க்கப்படும். 10 ரூபாய் குறையாது தீர்வை செலுத்தும், ஜமீன் கிராமங்களின் குடிகள் பெயர்களும் ஜாபிதாவில் சேர்க்கப்படும்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரவரமுநயே நம:

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 10.] ரௌத்ரி ஞு ஆவணி மீ [ஸஞ்சிகை 11.

"த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகெ ரதிரஸ்து மேऽநவத்யா." [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

பாலகங்காதரதிலக: 'என்று ப்ரஸித்திபெற்ற தேசாபிமாநி ப்ராண வியோகமடைந்தார். அதனிமித்தமாக தேசாபிமானத்தை உட்கொண்ட இந்திய ஜனங்கள் யாவரும் வருந்துகின்றார்கள்; தேசத்தோடொத்து யாமும் அந்த மஹானுடைய மரணத்தின் பொருட்டுத் துக்கிக்கின்றோம்.

உசிதாநுசித பராமர்ஶவிஷயத்தில்,

'ஸக்ருத்விகநாவிஹாநி: பாவகீநாம் பாதி ராஸபே த்ராக்ஷாம் |
ஜநிதமநுவிததிதி சிவா ஹாஹாஹாஹேதி விஷ்வஹேதுஸ்யம் ||'

என்றொரு ஶ்லோகம் கேட்டிருக்கின்றோம். [உதாஸீநனாயிருக்கின்றவொருவன், அயலானுடைய த்ராக்ஷைக் கொடியைக் கழுதையொன்று மேய்வதைப் பார்த்தான்; அதனால் அவனுக்கு நேரிட்ட குறையொன்றுமில்லை; ஆனாலும் அது உசிதமல்லவென்று எண்ணி அவன் மநஸ் ஹாஹா வென்று துடித்தது.] இந்த வசநத்தின்

உட்பொருள் என்னெனில்; த்ராக்ஷைக் கொடிபோன்ற ஒரு யுவ
திணை அவளுடைய பர்த்தாவல்லாத ஒரு புருஷாதமன் அநுபவித்
தானாகில், மூன்றும் மநுஷ்யனுக்கும் அது அநுசிதமெனத் தோ
ன்றுவதும், அவன் அதற்காக வருந்துவதும் லோகஸ்வபாவம்;
பர்த்தாவுக்கு அந்த விஷயத்தில் அநுசிதத்வ ஸங்கை ஸ்பஷ்
டம்.

உசிதாநுசித விவேசநம் ஸ்வார்த்த ப்ரவ்ருத்திகளில் இறங்கு
வோர்க்கில்லை. ஸமீபகாலத்தில் பாஷாந்தர வித்யாப்ராசாரராய்,
தக்ஷிணார்த்திகளுக்குப் பகு காலம் வித்யாப்யாஸம் செய்தவைத்
தக் கீர்த்திபெற்றவரான ஒருவர், மஹம்மதியர்களால் லோகத்
தக்கு உண்டான நன்மைகளைப்பற்றி ஒரு உபந்யாஸம் செய்தார்.
மஹம்மதியர்களால் லோகத்துக்குத் தீமையுண்டானதில்லையோ?
அதைப்பற்றி அவர் சிந்தித்தார் இல்லையோ? மஹம்மதியர்
க்கு, மகாப்ரயுக்தமான ஸங்கேதபலம், ஸேநாபலம், ஆயுதபலம்
இவை மேற்பட்டிருந்தமையால், அரேபியா தேசத்தில் ஓரிடத்
தில் உத்பந்நமான மதத்தை வழிபட்ட சில அராபியர்கள் அரே
பியா முழுதும் தமது மதத்துடன் தாமும் பரவினதன்றி, இப்
போது டர்க்கி என்று சொல்லப்படுகிற நாடுகள் அனைத்தையும்,
ஆபிரிக்கா கண்டத்தில் உத்தரபாகத்தையும், ஸ்பெயின் போர்ச்சு
கல் தேசங்களையும், பெர்ஷியா ஆப்கானிஸ்தானம், பெலூசிஸ்தா
னம், டார்டரி, இந்தியா முதலான பல தேசங்களையும், மஹம்மதிய
மதாநுப்ரவிஷ்டர்கள் தம் வசப்படுத்திக்கொண்டார்கள். அவர்க
ளால் தேசஸ்தர்களான பூர்வ ஜநங்கட்கு உண்டான துன்பங்கள்
எண்ணிமுடியாது. இது உசிதமா, ந்யாயமா, என்பதையார் யோ
சிக்கின்றார்கள்?

யூதஜாதியர், தங்கட்குச்சொந்தமல்லாத ஒரு நாட்டைக் கவர்ந்
தார்கள். அவ்வண்ணம் செய்கையில், அந்நாட்டில் பூர்வம் வஸித்
தவர்களை முற்றிலும் அழித்துவிட்டார்கள். பிறகு அந்நாட்டின்
நாற்புறமும் வஸித்த ஜநங்களையும் அவ்வண்ணமே அழித்தனர்.
அவர்கள் மதத்தினின்று, மஹம்மதிய கிறிஸ்தவ மதங்கள் ஜநித்
தன. இம்மதஸ்தர்களும் யூதர் தொழிலைக் கைக்கொண்டார்கள்.
தேசாந்தரங்களை ஆக்ரமிப்பதே அவர் தொழில். இது உசிதமோ?

கிறிஸ்து யூதஜாதியில் பிறந்ததாகச் சொல்வார்கள். அவ
ருடைய உக்திகளால் அவர் அந்யமார்க்கத்தை யூதநாட்டுக்குக்



கொண்டுவந்ததாக எண்ணலாம். அதற்காக அவரை யூதர் கொன்றனர். யூதர் அவர் சரீரத்தைச் சிலுவையில் தொங்கவிட்டார்கள். கிறிஸ்தவர் என்பவர்கள் அவருடைய ஆத்மாவை அநவரதம் சிலுவையில் அறைகின்றனர். ஐரோப்ய கிறிஸ்தவர்கள் அவருடைய உபதேசங்களை ஸ்வயம் அநாதரித்துப் பரர்க்குப் போதிக்கின்றனர். அவர்கள் இந்தப் பூமியை முற்றிலும் ஆக்ரமித்துவிட்டார்கள். ஆதலால் இதர ஜநங்கள் தத்காலம் ப்ராயேண பராதீநதையை அடைந்து விட்டார்கள்.

ஒரு பாஷாந்தரகவி, "தான் வஸிக்கும் தேசத்தைத் தனது ஜந்மபூமியென்றும், அது தனக்கே ஸொந்தமானதென்றும் எண்ணாது, அவ்வளவு ஆத்ம ஸத்வதயற்றவனாய் உயிர்த்திருக்கும் மநுஷ்யன் ஒருவன் உண்டோ?" என்று எழுதியிருக்கின்றான். இவ்வண்ணம் ஐரோப்பர்கள் எண்ணமுடியும்; இந்தியர்கள் எண்ண முடியாது. இந்தியர்களுடைய ஜந்மபூமியானது அவர்களுக்குச் சொந்தமன்று. அவர்கள் ஜநித்த ப்ரதேசத்திலேயே அவர்களுக்குப் பராதீநதை ப்ராப்தமாயிருக்கின்றது.

மஹம்மதியர் சில நூற்றாண்டுகள் வரையில் பரதேச ஆக்ரமணம் பண்ணி ப்ரகாசித்துக்கொண்டு வந்தனர். பிறகு அவர்கள் பலம் குன்றிப்போனார்கள். ஸர்வத்ர அவர்கள் ஸ்வாதந்த்ரியத்தை இப்போது இழந்தார்கள். ஒற்றுமையிலும், ஸேநாபலத்திலும், அஸ்த்ரபலத்திலும் அவர்கள் குறையவும், அவ்வம்ஸங்களில் ஐரோப்யர் அதிகரிக்கவும், மஹம்மதியர்க்குள் ஸ்வதந்த்ர ராஜ்யமே இல்லையென்று சொல்லும்படியான நிலைமை உண்டாய் விட்டது.

இந்தியாவில் மஹம்மதியர் 17-ம் நூற்றாண்டின் முடிவில் தமது பெருமையை இழந்தார்கள். காரணம் விசாரித்தால் நிஷ்ப்ரயோஜநம். அந்த ஸமயம், மஹாராஷ்ட்ர தேசவாஸிகள் ஸ்வாராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். அவர்களுடைய ராஜ்யம் இந்தியா தேசத்தினுடைய பெருபாகங்களில் பரவியது. அதற்கு முன்பு வர்த்தக நிமித்தமாக இந்தியாவுக்குப் பல ஐரோப்ய ஜாதியர் வந்தார்கள். அவர்கள் இந்தியா தேசத்தில், ஒற்றுமை, ஸேநாபலம், அஸ்த்ரபலம், முதலான அம்ஸங்கள் குறைவுபட்டிருக்கக் கண்டார்கள். அவர்களுள் இங்கிலாந்து தேசத்தினர், அந்த

அம்சங்களில் மிக்கவராய் நின்று, தந்த்ரத்தாலும் ஸாமர்த்யத்தாலும் இந்தத் தேசத்தைத் தம் வசமாக்கிக்கொண்டார்கள். ஸ்வார்த்த மொன்றையே ப்ரதானமாகக் கருதி இந்தத் தேசத்தை அவர்கள் ஆக்ரமித்தார்க ளாதலால், அவ்வண்ணம் செய்த விஷயத்தில், யுக்தாயுக்த விசாரமும் தர்மாதர்ம விசாரமும் அவர்கள் பண்ணினார்களில்லை.

இதற்குமுன் வரையில், தமது ஸ்வாதந்த்ரியத்தை ரக்ஷிக்கத் திறனற்ற ஜனங்களை, அதைப் போக்க சக்தியுள்ளவர்கள் ஆக்ரமிப்பதென்பது லோக முறையாக நின்றது. இப்போது லோகத்தில் ஒரு தேசத்தார் தேசாந்தரஸ்தர்களைக் கேவலம் தமது பலத்தைக்கொண்டே அடக்கியாள்வது உசிதமன்று தர்மமுமன்று என்கிற வழக்கொன்று உண்டாயிருக்கிறது. இந்த வழக்கை ப்ரிடிஷ் ராஜ்யத்திலும் பலர் ஆதரிக்கின்றனர். ஆனால், லோகம் தங்கட்கே உண்டாயதென்றும, அதில் ஜாத்யந்தரர்கள் தம்முடைய அநுமதியில ஜீவிக்கவேண்டு மென்றும் சொல்கின்றயூரோபபியர்களும் இங்கிலாந்தில் உளர். ஆகஸ்டு மாஸம் 18 தேதி (New India) ந்யூ இந்தியா பத்ரிகையைப் பார்க்குமிடம், "இந்த விஷயத்தைத் தர்மரீதியில் சிந்திக்கும் பக்ஷத்தில், நான் ஒரு இங்கிலீஷ்க்காரனாகவும் குடியரசில விஸ்வாஸமுள்ளவனாகவும் இருக்கிறபடியால, ஒரு தேசத்தார் அவர்களைக் காட்டிலும ஜாதியிலும் மதத்திலும் வேறுபட்டிருக்கும் 31,50,00000 மநுஷ்யர்களை அடக்கியாள்வதெனும் யோசனை எனது இஷ்டத்துக்குப்பொருந்தவில்லை யென்றுதான் சொல்லவேண்டும். நாம் இந்தியாதேசத்து ஜனங்களை நடத்தும் ப்ரகாரமானது ஸ்வாதீநமென்றும், புருஷத்தன்மை யென்றும் நான் எண்ணுகின்ற அம்சங்களுடன் ஒத்திருக்கமாட்டாது; இன்னும், இது ஸரியாகத் தெரியும் பக்ஷத்தில, பரிடிஷ் ஜனங்களில் பெரும்பான்மையோர்க்கு இது அங்கீகாரார்ஹமாய் இராது." என்றிவ்விதமாக 'Sunday Chronicle, எனும் பத்ரிகையில Mr. Robert Blatchford என்றொரு இங்கிலீஷ்காரர் எழுதியிருக்கிறதாகத் தெரியவருகின்றது. இவ்வண்ணம் எழுதிவிட்டு, ப்ரிடிஷ் அதிராஜ்யத்தின் ஏற்றத்தைக் காப்பாற்ற, இந்தியா அதற்கு வேண்டியது போலவும், ப்ரிடிஷ் ராஜாங்கத்தார் இந்தியாவை விட்டுவிட்டால், இந்தியர்கள் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு, மாய்ந்துபோவர்கள் என்றும் நாங்கள் விட்ட மாத்ரத்தில் பலிஷ்டர்களான அந்ய தேசத்தார்



இந்தியாவை ஆக்ரமித்து விடுவர்களென்றும், இவ்விதமாக இந்தியாவை யதாஸ்திதியில் வைத்துக்கொள்ளக் காரணங்களும் அவர் தேடுகின்றார். காரணங்களில் தர்மாம்சம் காணப்படவில்லை. அநர்ஹனை அந்யன் லாவண்யவதியான பரஸ்த்ரீயைத்தான் விட்டமாத்ரத்தில் கைக்கொள்வானென்றும், அவளைப் பலர் அபேக்ஷித்து ஒருவர்க்கொருவர் சண்டையிடுவதோடு அவளுக்கும் துன்பம் விளைவிப்பர் என்றும், காரணங்கள் தேடி ஸ்வவ்யபிசாரத்தை ஒருவன் நிலைக்கச்செய்வது தர்மமாமோ? இந்தியாவைத் தத்காலஸ்திதிக்குக் கொண்டுவந்தவர்கள் தர்மத்தை யோசித்தால், பரர்களுடைய ஆக்ரமத்தை நிவர்த்திக்கத்தக்க நிலையை அதற்கு உண்டாக்கி, அதை ஸ்வாராஜ்யத்தில் ஸ்தாபிக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த விஷயத்தைப் பயமின்றிப் பராமர்சிக்கக் காலம் நம் தேசத்தவர்க்கு இப்போதுதான் வாய்த்தது. நாம் பரதந்த்ரரா கையாலும், நமது ராஜாங்கத்தார் கேவலதர்மத்தைக் கருதியே நமக்கு ஸ்வாராஜ்யம அளிக்க விருத்தமாய் இருக்கின்றார்களில்லையாதலாலும், அவர்களுள் நம்மிடம் கிஞ்சித் ஆதாரம் வஹிப்பவர்கள் இட்ட எல்லைக்குள் ஸ்வாராஜ்ய ப்ரயத்நம் ஸாது என்று நினைப்பவர் நமக்குள் உண்டு. விஷயத்தின் ஸ்வரூபத்தைத் தத்வஸ்திதியில் சோதித்து, இங்கிலீஷ் காரருடைய அதிராஜ்ய ஸம்பந்தத்தை ஒப்புக்கொண்டு, ஸ்வதேச க்ஷேமாவஹமான ப்ரவர்த்தனங்களில் நம் தேசத்தார்க்கு நிரங்குச ஸ்வாதந்த்ரியம் வேண்டுமென்பவர்கள் நமக்குள் வருத்தியடைகின்றனர். இவர்க்குள் டிலக் என்பவர் ப்ரதாநயதையை வஹித்துநின்றார். அவருடைய உக்திகள் ராஜபக்தியைக் காட்டாமல, ராஜாங்கத்தாரிடம் த்வேஷம் ஜநிக்கும் நிலைமையைக் கொண்டனவென்று கருதிச் சில ஜட்ஜிமார்கள் அவர்க்குக் காராக்ருஹ ப்ராப்தியையும் உண்டாக்கினார்கள்.

டிலக், பாஷாந்தரத்திலும் ஸம்ஸ்க்ருதத்திலும் விசேஷபாண்டித்யத்தை ஸம்பாதித்து நின்றார். ப்ரதம காராக்ருஹவாஸ காலத்தில வேதங்களினுடைய ப்ரகாசகாலத்தின் ஆத்மதத்வத்தைப் பற்றி யொரு க்ரந்தம எழுதினர். அதாவது ருக்வேத ஸம்ஹிதைகள் இதற்குமுன் 6,000 வருஷங்கள முதல 8,000 வருஷங்களுக்குள் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டன வென்றும், யஜுர்வேதம் 4,500

வருஷங்கட்கு முன்பட்டே ஆவிர்பவித்ததென்றும் அக்ரந்த தாத்பர்யம். இரண்டாவது காராக்ருஹவாஸ காலத்தில், டிலக், வேத மதம் நமது முன்னோர்களால் த்ருவப்ரதேசங்களில் அநுஸரிக்கப்பட்டதென்றும், அது ப்ரளயகாலத்துக்குப் பூர்வமே இருந்ததென்றும், ப்ரளயகாலாநந்தரம், ஹிமபஸ்சாத்கால மென்னப்பட்ட காலத்தில், நமது பூர்விகர்கள் த்ருவப்ரதேசத்தை விட்டுத் தென்புறமாக ப்ரயாணித்தார்களென்றும், அவர்கள் இந்தியாதேசத்தை நெருங்கின ஸமயத்தில் பூர்வ ஸ்மரண ஸஹிதமாக வேத மந்த்ரங்களை ஸாக்ஷாத்கரித்தார்களென்றும், நிர்ணயங்கள் அடங்கிய நமது முன்னோர்களுடைய த்ருவதேசவாஸமெனப்பட்ட ஒரு க்ரந்த மெழுதினார். மிக்க நீடித்ததான மூன்றாவது காராக்ருஹவாஸகாலத்தில், டிலக், கீதாரஹஸ்ய மென்னொரு க்ரந்தத்தைச் செய்தார். அதனுடைய தாத்பர்ய விசாரம் செய்வதற்கு இது இடமல்ல. இவ்வண்ணம் இவர் தமது ஜ்ஞானத்தை ப்ரகாசிப்பிக்கும்படி ராஜாங்கத்தார் ஸஹாயித்த விஷயத்தில் நாம் க்ருதஜ்ஞர்களாய் இருக்கவேண்டியதே. நமது பூர்வ க்ரந்தங்களை பரிசோதித்து, நமது பூர்வ சரித்ரங்களைத் தெளியச்செய்து, அவற்றின் தாத்பர்ய நிர்ணயங்களை வெளியிடும் வழிகளில் டிலக் நின்றிருந்தாரால், அவர்க்கு ராஜாங்கத்தாரால் உற்ற துன்பங்கள் நேர்ந்திரா. நமது தேசத்துக்கும் அப்படியாகில் ஹிதம் பெருகியிருக்கும். அப்படியிலும் அவருடைய தேசாபிமானம் ப்ரகாசித்திருக்கும். இந்த வழியில் அவரைப்போல் அதிகாரிகள் உண்டாவது அரிது. ராஜதந்த்ரங்களில் இழிந்து, ஜனஹித விஷயங்களில் தேசத்தார்க்கு ஹிதம் செய்வதற்கு முயன்ற ப்ரயத்நத்தில், அதிகாரம் வஹித்தவர்கள் பலர். அவர்க்குள் டிலக் ஒரு ப்ராதாந்யத்தை வஹித்தனர். ஸர்வஜனங்களுக்கும் ஹிதத்தை உத்தேசித்துப் பண்ணப்பட்ட ப்ரயத்நங்களும், ஜனஹிதருமான சேவிக்கத்தகுப்ரீதி விஷயங்களாயுள்ளன. அந்த யோசனையால் டிலக் அவருடைய மரணம் இந்தியர்கள் யாவர்க்கும் துக்கஹேதுவாய் நிற்கின்றது.

பலபெயர் தனவந்தர்கள் நமது நாட்டின்கண் இருக்கின்றனர்கள். அவர்க்குள் கலவல கண்ணன் செட்டியார் எனப்பட்ட மஹானுடைய தனஸஞ்சயமானது லோகோபகாரத்தின் பொருட்டாயது. அந்த விஷயத்தில் கண்ணன் செட்டியார் பெற்ற பாவித்தி மற்றெவரும் நமது நாட்டில் தற்காலத்தில் பெற்றாரில்லை.



அவர் ஜீவதசையில் இருந்தபோது, பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் உபயோகமான பல பாடசாலைகளையும், ஒரு ஸம்ஸ்க்ருத வித்யாசாலையையும், பல வைத்யசாலைகளையும் சொந்தமாக நடத்திவந்தார். இன்னும் குழந்தைகட்குப் பசுவின்பால் இனமாக உதவப்பெற்ற ஒரு ஏற்பாட்டையும் திருவல்லிக்கேணியில் நடத்திவந்தார். இவை யாவும் சாஸ்வதமாக நடக்கத்தக்கபடி மூலதனத்தைத் தனியாக ஸ்தாபித்து அந்தக் கர்மங்கள் ஸரிவர நடக்கச் சில அத்யக்ஷர்களையும் நியமித்திருக்கின்றார். இப்படிப்பட்ட மஹான் அகால மரணமடைந்த விஷயத்தில் நாம் வ்யஸநப்படுகிறோம்.

அர்த்தகாமங்களைத் தர்மவிரோதமின்றி ஆர்ஜிப்பதும் ஆர்ஜித த்ரவ்யத்தை த்யாகத்தால் அநுபவிப்பதும் ஸத்தர்களுடைய லக்ஷணம். இவ்விடம் அர்த்தமென்றும் த்ரவ்யமென்றும் சொன்னது, தநம், தாந்யம் முதலான பொருள்களோடு முடிவாகவில்லை. தநதாந்ய ஸம்ருத்திக்கு ஹேதுவாய் நிற்கும், வித்யை, கர்மம், பக்தி முதலிய அம்சங்களும் அர்த்தமென்பதில் அந்தர்கதங்கள். தநதாந்ய ஸம்பாதநத்துக்கு உபயோகமாயுள்ள நமது வித்யாஸங்கங்களைப் பரோபகார நிமித்தமாக டிலக் த்யாகம் செய்தார். ஆர்ஜித த்ரவ்யத்தைக் கண்ணன் செட்டியார் பரோபகாரத்தில் விநியோகித்தார். பரோபகாரம் ஸ்வஜனங்களுடைய கஷ்ட நிவாரண நிமித்தமாகவும் துக்கநிவாரண நிமித்தமாகவும் செய்யப்பட்டதாகில், அது பரமமான தர்மம். நம்முடைய தேசஜனங்களுக்குத் துக்கம் பலவிதமாக ஏற்பட்டு நிற்கின்றது. க்ஷுத்பாதை பகுஜனங்களைப் பீடிக்கின்றது. க்ஷாமங்களாலும், பரிஹரிக்கக்கூடிய வ்யாதிகளாலும் பல ஜனங்கள் மாண்டுபோகின்றனர். தேசத்தில் உத்பந்நமாகும் த்ரவ்யங்கள் தேசஸ்தர்கள் பொருட்டே உதவவில்லை. ஜனங்கள் யாவரும் ந்யஸ்தகண்டர்கள்; ஸ்வரக்ஷணத்திலும் அஸக்தர்கள். வித்யாவிஷயத்திலும் ஜனங்கள் தமது இஷ்டங்களை நிறைவேற்ற ஸக்தரல்லர். இப்படிப்பட்ட காலத்தில், பாதகங்களை ஸஹிக்காமல் தந்நிவாரணார்த்தமாக முயற்சி செய்கின்றவர்கள், மஹான்களே. அப்படிப்பட்ட மஹான்கள் வ்ருத்தியடைய வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கின்றோம். ஜந்மாந்தர வாஸனையால் பரோபகார ப்ரவ்ருத்திகள் ஸஹஜமாகச் சில புருஷர்க்கு ஏற்படுகின்றன. இத்தகைய ப்ரவ்ருத்திகளுக்கு 'ஆந்ருஸம்ஸ்யம்' எனப்பட்ட குணவிசேஷம் காரணமாகும்.

'ஆந்ருஶம்ஸ்யம் பரோ தர்ம: த்வத்த ஏவ மயா ஶ்ருத:' என்று, பிராட்டி ஸ்ரீராமனுக்குச் சொல்லியனுப்பினள். "தேவரீர்க்கு மிகவும் அபிமதமான தர்மம் யாது? என்று அடியேன் தேவரீரை வினவ, அயலார் துக்கப்படக் கண்டால் அதை ஸஹியாமையே பரமமான தர்மமென்று அடியேனுக்கு உபதேசித்தருளினீர். இன்னும் அது தேவரீருடைய ஸ்வபாவமென்றும் ரஹஸ்யத்தில் தெளிவித்தீர்" என்கிறபடியே, அவ்வசன தாத்பர்யமிருக்கின்றது. ஆதலால் ஸர்வலோக ஶரண்யாபிமதமான பரதுக்காஸஹிஷ்ணுத்வமென்கிற பரமதர்மம் எங்கப் புருஷர்களிடம் ப்ரகாசிக்கின்றதோ, அவர்கள் புருஷஶ்ரேஷ்டர்களோ.

'நிராஶீ: கர்மகாரிணம்' என்கிறபடியே, தாங்கள் செய்கின்ற ஸாதுகர்மங்களை க்யாதிலாப பூஜைகளில் அபேக்ஷையற்று, 'ஸஹைவமதிஷ்டாம்' என்கிறபடியே ஶரண்யாந்தர ப்ரயோஜனாந்தர விமுகராய், அக்கர்மங்களுக்குப் பகவத்ப்ரீதியைத் தவிர்த்து, வேறொரு உத்தேஶமின்றியே, அவனுடைய ப்ரீணனமே ப்ரயோஜனமாகக் கருதிச் செய்பவர்கள் உத்தமாதிகாரிகள். இருபிக்குமிடம், ஆழ்வார் அருளிச்செய்தபடியே "நானென்பது மில்லை, எனதென்பதுமில்லை" என்கிறதோடு, நானென்பதும் எனதென்பதும்யாவும்ஶரண்யனுடையவை எனும் அத்யவஸாயம் நிலைத்துப் பரோபகாரம் நடையாடிற்றாகில், அத்தகைய அதிகாரிகள் நம்முடைய நாட்டுக்கு நிகரற்ற கீர்த்தியை உண்டுபண்ணுவார்கள். ஶரீரேந்த்ரியாதிகளையும், யாவராலும் ப்ரார்த்திக்கப்படுகின்றவையாய் அவற்றால்வரும் ஸுகபோகங்களையும், இன்னும் ஆத்மாவையும், மற்றெல்லா வஸ்துக்களையும், பகவத் கைங்கர்யானுபயுக்தங்களாயிருக்குமளவில், மஹநீயர்கள் வேண்டார்கள்; பிறர் தனங்களையும் வேண்டார்கள்; தாமும் பொருள்தேடார்கள்; பிதாமஹார்ஜிதமான என்று மழியாத பொருள் தமக்கு ஹஸ்திஶைலத்தின்மீது இருக்கின்றதென்று ஶாந்தராய் நிற்பர். இவர் ஸர்வோத்க்ருஷ்டாதிகாரிகள்.

"அரியேறே! யென் னம்பொற் சுடரே! செங்கட் கருமுகிலே!
எரியேய் பவளக் குன்றே! நாற்றோ ளெந்தாய்! உனதருளே
பிரியா வடிமை யென்னைக் கொண்டாய் குடந்தைத் திருமாலே!
தரியே னினியுன் சரணந் தந்தென் சன்மங் களையாயே."



"களைவாய் துன்பங் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்
வளைவாய் நேமிப் படையாய்! குடந்தைக் கிடந்த மாமாயே!
தளரா வுடல மெனதாவி சரிந்து போம்போது
இளையா துனதா ளொருங்கப் பிடித்துப் போத விசைநீயே."

என்கிறபடியே, ஜனார்த்தனன் விஷயமாகக் காதல்வளர்ந்து, அப்ரேமாதிக்யத்தால் அந்யாஸக்திகளை முற்றிலும் விட்ட மஹாத்மாக்கள் இக்காலம் தழைக்க விரகில்லை. ஆனாலும், அவர்களை ஸ்மரித்தும், அவர்களுடைய பகவதநுபவ ப்ரகாரங்களைக் கேட்டுமுகந்தும், ஸர்வசராசரங்களுக்கும் அந்தராத்மாவான ஸர்வேஶ்வரனுடைய ப்ரியத்தை நாடி, மித்ராமித்ரகதைகளை மறந்து, துக்கிப்பவர்களுடைய துக்கநிவ்ருத்தியில் உத்யோகிப்பவர்கள் யாரேனுமுளரேல், நம்முடைய ஸத்ஸம்ப்ரதாயமானது தத்வத்தில் இன்னும் நடையாடுகின்றதென்று நாம் எண்ணக்கூடும்.

நானென்பதும் எனது என்பதும் இப்போது உலகவழக்காய் விட்டது. இதைத் தெரியாதவர்க்கும் கற்றுக்கொடுக்க மநுஷ்யர்கள் கிளம்பிவிட்டார்கள். பாத்யம் கொண்டாடும் க்ரமங்கள் புஷ்பிக்கின்றன. தாம் அபேக்ஷித்த பொருள் அந்யரிடம் இருந்தால் அதைக் கைகொள்ளும் முறைகள் அந்யருடைய மரண பர்யந்தம் வளர்கின்றன. எங்கே பார்த்தாலும் கக்ஷிகளும், கக்ஷிப்ராயுக்தமாக த்வேஷங்களும் வ்ருத்தியாகின்றன. விஷயத்யாகம் விஷயகாமத்திலும், கிடைக்காதவற்றின் காமம், பொருளுடையவனிடம் த்வேஷத்திலும் பர்யவஸிக்கின்றன. ஸர்வ மர்யாதைகளும் அழிபடுகின்றன. கூட்டபலமோ, அஸ்த்ரபலமோ உடையவன்தான் தத்காலம் பலிஷ்டன். அப்படிப்பட்ட காலத்தில், தத்த்வத்ரயங்களுடை ஸ்வரூப ஸம்பந்த விசாரமும், ஸர்வேஶ்வரன் ஸர்வஶரீரி எனும் ஜ்ஞானமும், ஸர்வப்ரபஞ்சமும் அவனுக்கு ஶேஷபூதமெனும் அத்யவஸாயமும், ஒவ்வொருவனுக்கும் ஶரீரப்ராப்தியானது ஸர்வபுருஷார்த்த ஸாதகமாயிருக்கும்போதும் முக்யமாய்நிற்கும் பரமபுருஷார்த்த ப்ராப்தியில் ஶரீரமிருக்கையில் த்வரையும், இப்படிப்பட்ட ஜ்ஞாநாநுஷ்டாநம் பொருந்தினவனுக்கு மித்ராமித்ரகதையில்லாமையும் ஸர்வத்ர ஸமத்வ தர்ஶநமும் நிலைக்க வேண்டியமுறையறிதலும், அவனை த்வேஷிப்பவர்களும் யோஹஸ்யாப்தர்களாய் த்வேஷிகின்றார் ஆகலால் கர்மாத்யக்ஷன் நிக்ரஹத்துக்கு விஷயமாகின்றனர்களென்று அவர்களிடம் அபாரகருணையைப் பாராட்ட வேண்டு மெனும யோசனையும், ஸங்கராஜ நடையாடும் வரையிலும், அத்தகைய மஹாபுருஷனிடம் ஸாதாரண ஜநங்களுக்கு விரோதம் ஜநிக்காதவரையிலும், தர்மம் ஒரு காலிலாவது நிற்கும் என்று யோசிக்கின்றோம்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

# அநுபயுக்தார்த்த திக்காரம்.

ஸத்த்வஸ்தாய ஸதைவ ஸத்குண நிதி:

ஸத்வ்ருத்த ஸக்ஷண்ணதரஸ் ஸிஷ்யநு ।

யஸ்யோக்தி: கருணாபராஹ்ய விதாநம்

தம் ஸ்ரீந்ருஸிம்ஹ குருவரம் ஶரணம் ப்ரபத்யே ॥

சென்ற ஆனிமீ தீபிகையில், 'உபயுக்தார்த்த ஸங்க்ரஹம்' என்கிற பெயருடன் வெளிவந்த வ்யாஸத்தில் நம்முடைய ஸித்தாந்த ப்ரவசநமாகிற விஷயத்தில் தத்காலத்தில் நாம் நடத்தும் முறைகளைத் தூஷித்து ஒருவர் எழுதியிருக்கிறார்.

முதலில், 'விஷ்ணுசித்தம்' என்னும் ஸ்லோகத்தில் ஆரம்பித்து, 'இப்படிப் பரிஶுத்தனை ஆசார்யன் 'ஸதாசார:' இத்யாதி ப்ரமாணங்கள் காட்டின ...................... உபதேசிக்கவேணும்' என்று முடித்து, தான் தூஷிக்கும் உபந்யாஸம் செய்யும் க்ரமத்துக்கு விரோதமாயிருப்பதனால் மேலுள்ள 'ஜ்ஞாநம் ப்ராஹ்மணாஸ் க்ஷத்ரியாஶ்ச வைஶ்யா ஶூத்ரா ஶ்சவிநீதாஸ்ஸ்வதர்மம்' என்பதை மறைத்திருப்பதனாலும், 'ஶ்ராவ்யம் ஜ்ஞாநம்' என்று ஆரம்பிக்கும் வசநத்தில் சொல்லப்படும் ஜ்ஞாநம் வித்யாமந்த்ராதிகளைத் தவிர மற்றதைப்பற்றியது என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரத்தில் நிஷ்கர்ஷிக்கப்பட்டதற்கு முற்றிலும் விரோதமாய், 'வித்யையாவது ...................... பக்தி ப்ரபத்திரூப ஜ்ஞாநவிஶேஷம்' என்று அர்த்தம் தானுப் கல்பித்திருப்பதனாலும், பக்தியோகம் கர்மயோகாதி பரம்பரையாலும், ப்ரபத்தி 'ஶரணாகதி' என்கிற திருமுகப் பாசுரத்து



லும் ஸித்திக்கவேண்டுமென்று ப்ரமாண புரஸ்ஸரமாய் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்க, அதற்கு விரோதமாய் ஆசார்ய முகமாய் இந்த ஜ்ஞாநத்தை க்ரஹிக்கவேண்டு மென்று எழுதியிருப்பதனாலும், ஆசார்ய லக்ஷணம் சொல்லுகிற ஸ்லோகத்தில் 'ஶாந்த:' எனும் ஶப்தத்துக்கு 'ஜிதவிஷயஶணம்', 'ஸாயம் வ்ருத்த் ப்ராஸநேதம்' இத்யாதிகளுடன் புநருக்தி வரும்படி, 'அக்ருத்யங்களான பரதார கமந பரஸ்வாபஹாராதிகளும்' இத்யாதி வ்யாக்யாநம் செய்திருப்பதனாலும், புதிதாகத் தானுப் ஸம்ஸ்க்ருத பதங்களுக்கும் த்ராவிட பதங்களுக்கும் ஸமாஸம் முதலியன கல்பித்திருப்பதனாலும், இப்படிப்பட்ட அநேக தோஷதுஷ்டமாயிருப்பதனாலும், பண்டிதர்கள் இதை உபேக்ஷிப்பார்களென்பது ஸித்தமாகிலும், ஸாதாரணமான ஜநங்களுக்கு இவரால் தன் பக்ஷிக்கு ஸாதகமென்று ப்ரமித்து உதாஹரிக்கப்படும் ப்ரமாண பரம்பரைகளைக் கண்டு, இதில் சொல்லப்படும் விஷயங்கள் ஒருகால் உண்மையோவென்று ஸந்தேகம் உண்டாகி, அதனால் ஸித்தாந்த ப்ரவசநத்தில் தத்காலத்தில் லௌகிகர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு வித ஶ்ரத்தைக்கு ந்யூநதை வரலாமாகையினால் அதைத் தடுப்பதற்காக இந்த வ்யாஸத்தில் தூஷிக்கப்படும் ப்ரதாநாம்ஶங்களை எடுத்து, அவைகட்கு ஶாஸ்த்ரஸம்மதமான நிலையை நிரூபிக்கிறோம்.

## 1. மதவிஷயமாக ஸபைசேர்த்து உபந்யாஸாதிகள் செய்தல்.

இந்த வ்யாஸ கர்த்தாவுக்கு அருந்துதமாயிருப்பது ஏதென்னில், (தீபிகை-333-ம் பக்கம்) 'ஸ்ரீதேசிகன் உத்ஸவகாலத்தில் ஸ்ரீபாஷ்ய ..............................ப்ரகாரங்கள் அருந்துதமாயிருக்கும்' என்று எழுதியிருப்பதனால தெரிவிக்கப்படுகிறது. மற்றோரிடத்தில், 'அதிகாரிகளும் அநதிகாரிகளும் வைதிகரும் வேதபாஹ்யரும் சேர்ந்த ஸபையில எழுந்திருந்து க்ரமமொழிய தத்வஹித புருஷார்த்த ப்ரதிபாதக சில பாகங்களை ............................ உபந்யாஸம் பண்ணுகிறார்' என்று எழுதியிருக்கிறார். இது விஷயத்தில் இவர் ஆக்ஷேபிக்கும் விஷயம் இன்னதென்று புரியவில்லை. இவர் தூஷிக்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸபைகளில் நடக்கும்

க்ரமமென்ன வென்பதைக் கொஞ்சமேனும் தெரிந்துகொள்ளாமல், தம்முடைய மனம்போன போக்கின்படி நடப்பதாக எண்ணிக்கொண்டு எழுதுகிறார். இவர் தாமே ஆரம்பத்தில், 'வித்யையாவது பக்தி ப்ரபத்திரூப ஜ்ஞாநவிஶேஷம்' என்றும், இவைகளை ஆசார்ய ஸகாஶாத் அறிந்துகொள்ளவேண்டு மென்றும் எழுதியிருக்கிறார். இவரது அபிப்ராயம் என்னவோ? வித்யா மந்த்ராதிகளை மாத்ரம் ஆசார்யனிடமிருந்து க்ரஹிக்கவேண்டுமென்பதா? ஸகலஶாஸ்த்ரமும் ஆசார்யனிடம் க்ரஹிக்கவேண்டுமென்பதா? முதல் பக்ஷத்தில் நமக்கு ஆக்ஷேபணையில்லை. நம்முடைய ஸபைகளில் மந்த்ராதிகளையாவது, பக்திப்ரபத்திகளின் கரண மந்த்ர அங்காங்க ஸ்வரூபாதிகளையாவது பற்றித் திரளில இதுவரையில் உபந்யஸித்ததாகக் காணோம். நமது ஸித்தாந்தத்தின் மஹிமையையும் பரமாத்மாவின் குணவிஶேஷங்களையும் ஆசார்யாதிகளின் ப்ரபாவங்களையும் மற்றும் இப்படிப்பட்ட பொதுவிஷயங்களைப்பற்றியே உபந்யாஸங்கள் நடந்துவருகின்றன. இதை ஆக்ஷேபிக்க இடமில்லை. ப்ரமாணஸித்தமானதையினாலும், பூர்வாசார்யாநுஷ்டாந ஸித்தமாகையினாலும், 'ஞாவ்யஜ்ஞாநம்' என்கிற ஶ்லோகத்தில், கீழ் ஸங்க்ரஹமாகச் சொல்லப்பட்டபடியே இப்படிப்பட்ட ஜ்ஞாநம் பூர்வபூர்வாலாபத்தில் ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ர நீவாதிகளில் யாரிடம் இருந்தாலும் ஸம்பாதநீயமென்று நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்க, ஸதாசாரநிஷ்டர்களாய் ஸத்ஸம்ப்ரதாயமத தத்வார்த்த வேதிகளான பண்டிதோத்தமர்கள் இவைகளைப்பற்றி உபந்யாஸம் செய்யவும் எல்லோரும் கேட்கவும் இவருக்கு என் அருந்துதமாய்த் தோன்றுகிறதோ தெரியவில்லை. வித்யாமந்த்ராதிகளைத் தவிர மற்றவைகள் எவரிடமிருந்தேனும் க்ரஹிக்கலாமெனும் அர்த்தம், நம் பரமாசார்யனுகிய ஸ்ரீதேஶிகனால் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் உபோத்காதாதிகாரத்தில், "இவ்வாத்மாவிற்குச் சில தார்மிகர் பித்ராதிமுகேந கொடுக்கு" என்று ஆரம்பித்து, "ஹேயோபாதேய க்ஷமனுமாக்கி நிறுத்தினவளவிலே" என்னுமளவான வாக்யங்களால் ஸாத்விகஸம்பாஷணபலத்தை அருளிச்செய்து, மேல், 'இவனுடைய' என்று ஆரம்



பித்து ஆசார்யப்ராப்தியை அருளிச்செய்திருப்பதனால் ஸுவ்யக்தமாகிறது. நடுவில் ஜீவாத்மபரமாத்ம ஸ்வரூபங்களைப்பற்றி அறியும்ப்ரகாரத்தையும், "வாசூறெ வொநநரொந வஶா நலேவ வாஃவஃ । ஶரீராக்ருதிஹெஷாஷூா ஊஒெவெதெ கஃல வொநயஃ' என்கிறபடியே உருவியந்த இந்நிலைமையை உணர்த்தி அதற்கு அநுரூபமான புருஷார்த்த தது பாயங்களிலே அந்வயிக்கலாம்படி விரகு செய்து" இத்யாதியினால் நிரூபித்தருளினார். இப்படி முதலில் பொதுவான ஜ்ஞாநம் உண்டாகாவிடில், விஶேஷ ஜ்ஞாநத்தில் ஆசை ஒருவருக்குமே உண்டாகாதாகையினால் மதமே கூடிய சீக்ரத்தில் மறைந்துபோகவேண்டி வரும். 'ஸாமாந்ய ஜ்ஞாநம் விநா விஶேஷஜ்ஞாநாநுதயாத்' என்கிற லோகஸித்த ந்யாயத்திற்கும் இவர் அபிப்ராயம் விரோதமாயிருக்கிறது. ஸபையில் பண்டிதர்கள் எல்லா விஷயத்தையும் உபந்யஸிக்கவில்லையென்பதைத் 'தத்வஹித புருஷார்த்தப்ரதிபாதக சில பாகங்களை' என்று எழுதியிருப்பதனால் இவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். ஸதஸ்யர்களை 'அதிகாரிகளும் அநதிகாரிகளும் வேதபாஹ்யரும்' என்று கூறுகிறார். நம் ஸித்தாந்தவிஷயமாகக் கூடிய ஸபைகளில் குலங்களாய ஈரிரண்டில் உள்ளவர்கள் தவிர வேறொருவரும் அந்வயிக்கவில்லை. பௌத்தர் முதலிய புறச்சமயிகளும் வரக்கண்டிலோம். இவர் வேதபாஹ்யர் என்றது யாரையோ? இவர், அநதிகாரிகள் என்பது யாரையோ? தெரியவில்லை. ஸ்த்ரீ ஶூத்ராதிகளையா? அல்லது ஸதஸ்யர்களில் பெரும்பான்மையான லௌகிகர்களையா? அதிகாரியென்பவன் யாவன் என்பதை விசாரித்தால் அநதிகாரிகள் லக்ஷணம் ஏற்படும். மேற்கூறப்பட்டவர்கள் அநதிகாரிகளாவார்களா வென்று பராமர்ஶிப்போம். 'அதிகாரியாவான் ஒரு கார்யத்தினால் உண்டாகும் ப்ரயோஜநத்தில ஆசையையும், அதைச் செய்யும ஶக்தியையும் உடையவன்' என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாராதிகளில் நிர்ணீதம். தூரதேஶங்களிலிருந்தும் தேஹஶ்ரமம், பணச்செலவு, முதலியவற்றைக் கணிக்காமல் ஸித்தாந்தத்தில் அபிமாநத்தினாலும், அதை அறிந்துகொள்ளவேண்டுமென்கிற ஆசையினாலும், எழுந்தருளும் ஸ்வாமிகளுக்கு

ஸித்தாந்த ப்ரவசநபலத்தில் ஆசையில்லை யென்னவோ! பகவான் அநுக்ரஹித்த இந்த்ரிய பாடவத்தையுடைய இவர்களை அசக்தர்களென்னவோ! இவர்கள் எவ்விதத்தில் அநதிகாரிகளோ நாம் அறிகிலோம். ஸ்த்ரீஶூத்ரர்களும் அநதிகாரிகளல்லர். அவர்களுக்கு மந்த்ரம் மந்த்ரார்த்தோபதேசத்திலும் அதிகாரமுண்டென்பது திருக்கச்சி நம்பி உறங்காவில்லிதாஸர் முதலியவர்களுக்கு உபதேசித்த ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய பூர்வாசார்யர்களின் அநுஷ்டாந பரம்பரையால் ஏற்படுகிறது. பெரிய கும்பலில் உபந்யாஸம் செய்யக்கூடாதென்று இவருக்குத் திருவுள்ளமோ? அதுவும் யுக்தமல்ல. ஸூதர் நைமிசாரண்யவாஸிகளுக்கும், சுகர் பரீக்ஷித் மஹாராஜர் ஸபையிலும் உபந்யஸித்திருப்பதினாலும், நம் பூர்வாசார்யர்களுடைய ஸித்தாந்த ப்ரவசந க்ரமத்தினாலும் அநேகம் பேர்களுக்கு ஏககாலத்தில் உபந்யஸிப்பது யுக்தமேயாகும். மந்த்ரத்தையன்றோ அஷ்டகர்ணமாக உபதேசிக்கும்படி சாஸ்த்ரம் நியமித்தது! ஆகையினால், இவர் எழுதியிருக்கிறபடி ஸபைகூடி ஸித்தாந்த விஷயமாய் உபந்யாஸம் செய்வதில் யாதொரு ப்ரமாண விரோதத்தையும் கண்டிலோமாகையாலும், அதுவே ஸித்தாந்த ப்ரவசநத்துக்கு ப்ரதாநோபாயமாகையாலும், நாம் இதை இன்னும் விசேஷாபிவ்ருத்திக்குக் கொண்டுவந்து, வருஷத்துக்கு ஒரு முறையென்பதை விட்டு, அநேகம் ஸ்தலங்களில் அநேகம் தடவை கூடும்படியான ஏற்பாடுகளைச் செய்வதே நம் கடமையாகும்.

## 2. ரஹஸ்யார்த்தங்களின் ஶ்ரவண க்ரமம்.

தீபிகை-329-ம் பக்கத்தில் 'ஹூணபாஷா பரிசயம் பண்ணினவர்கள் த்ருஷ்டர்களான பண்டிதர்களை நிர்ப்பந்தித்து க்ரமமொழிய ஸித்தாந்தார்த்தங்களைக் கேட்பதும்' என்று எழுதப்பட்டிருக்கிறது. இவர் அபிப்ராயத்தில் கொண்டிருக்கும் காலக்ஷேபங்கள் நடந்துவரும் க்ரமத்தை நேரில் கண்டறியாமல் கேவலம் தூஷிக்க வேண்டும் என்னும் எண்ணத்தினால் மாத்ரம் தூஷிக்கும் இவர் போன்றவர்களே த்ருஷ்டர்கள். சாஸ்த்ரக்ரம மொழிந்து நாம்



அறிந்தவரையில் பண்டிதர்கள் ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்ததாகக் காணோம். இவருக்கு, ஹூணபாஷா பரிசயம் செய்தவர்களுக்கு உபதேசம் செய்யவே கூடாதென்று திருவுள்ளமா? அப்படித் திருவுள்ளம் கொள்வது ப்ரமாணயுக்தமல்ல. பரமாசார்யனும் ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தில், 'ஹோராஶாஸ்த்ரம் [illegible]' என்றும், 'ஸஹஸ்ர ஶேஷபாஷாவேதீ' என்றும் அருளிச் செய்திருப்பதனால் ருஷிப்ரோக்த வ்யாகரண மல்லாத அபப்ரம்ச பாஷைகளை அப்யஸிப்பது தோஷமல்ல என்றேற்படுகிறது. ஆனால், அபப்ரம்ச பாஷையைப் பேசக்கூடாதென்பதற்குத் தாத்பர்யம் என்னவெனில், யாகாதி வைதிகக்ரியா காலங்களிலும், அத்தால் ப்ரயோஜநமல்லாத காலங்களிலும் உபயோகிக்கக்கூடாதென்பதே யொழிய ஹூணபாஷா பரிசயமே தோஷமன்று. கால வைபரீத்யத்தினால் '[illegible]வ்ருத்தி:' என்கிற ப்ரமாணத்தின்படி ப்ராஹ்மணரும் ஸேவக வ்ருத்தியில் அமர்ந்ததனால் தம்முடைய மதத்தை ஆசார்ய ஸகாசாத் கேட்க அநதிகாரிகளாகமாட்டார்கள். அநுஷ்டாந பரம்பரையிலும் ஆண்டவன் கோசாண்டபட்டி ஸ்வாமி நாவல்பாக்கம் ஸ்வாமி முதலிய ஜகத் ப்ரஸித்த ஆசார்யர்கள் ஸந்நிதியில் ஹூணபாஷா பரிசயம் செய்தவர்களும் ஸேவக வ்ருத்தியிலிருந்தவர்களும் காலக்ஷேபாதிகள் செய்யவும், பஞ்ச ஸம்ஸ்கார உபாயாநுஷ்டாநாதிகள் நடத்திக்கொள்ளவும் காணுகின்றோம். ஆகையினால், மந்த்ரோபதேசத்திற்கு சாஸ்த்ர விஹிதமான க்ரமத்தை அநுஸரித்து, காலக்ஷேபாதிகள் செய்யப்பட வேண்டும் என்பதே ஏற்படும்.

சாஸ்த்ர க்ரமத்தைப் பராமர்சிப்போம்:—முதலில் 'ஸம்வத்ஸரம் ததர்த்தம் வா' என்கிற ஶ்லோகத்தில் ஒரு வர்ஷமோ ஆறு மாஸமோ மூன்று மாதங்களோ சுஶ்ரூஷை செய்யச் சொல்லிப் பரீக்ஷித்துப் பிறகு சிஷ்யனுக்கு உபதேசம் செய்யவேண்டுமென்றிருக்கிறது. சாந்தோக்யத்தில் 4-வது ப்ரபாடகத்தில் ஜாநஶ்ருதி

வ்ருத்தார்த்தம் சொல்லுமிடத்தில், ஈஶோபநிஷத் பாஷ்யம் ஸ்வாமியால் பாஷ்யத்தில் 'ஶிஷ்யாணாமேவாம் விநா கஷ்டேநாத்ய ஶுஶ்ரூஷணமஸ்ய கஸ்ய யாவச்சக்தி ப்ரதாநேந விநா ப்ரஹ்ம வித்யா ப்ரதிஷ்டிதா ந பவதீதி ஸூசநார்த்தம்' என்று அருளிச்செய்யப்பட்டு இருக்கிறது. ஆசார்யக்ருத்யாதிகாரத்தில் ஸ்ரீ ஸாராஸ்வாதிநீ உபோத்காதத்தில் 'ஶுஶ்ரூஷாபி வித்யா வாஞ்சயைந யதோநவா' என்கிற வசநம் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வசநங்களின் கருத்து:—ஶுஶ்ரூஷை செய்ய ஶக்தனல்லாவிடிலும் ஶக்திக்குத் தகுந்தபடி த்ரவ்யத்தை ஸமர்ப்பிப்பதனால் உபதேஶ யோக்யனாவன் என்பது. ஆகையினால், இப்பொழுது லௌகிகர்கள் காலக்ஷேபம் செய்யுமிடத்துத் தங்கள் ஶக்திக்கியன்ற த்ரவ்யம் ஸமர்ப்பித்து மந்த்ரார்த்த உபதேஶங்கள் செய்துகொள்ளலாமாகையினாலும், அவர்களும் அப்படியே செய்கிறபடியினாலும், க்ரமமொழிந்து உபதேஶம் செய்பவர்களைக் காணோம். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் 'பரீக்ஷாதி' என்று 'ஆதி' ஶப்தத்தினால் பரீக்ஷை தவிர மற்ற க்ரமமும் உண்டு என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. மேலும் 'அர்த்த த்ருஷ்ணா வஶம்வதர்களான பண்டிதர்கள்' என்று தீபிகை-33?-ம் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. வேதாந்தார்த்த உபதேஶத்தைப் பணம் ஸம்பாதிப்பதற்கு உபாயமாய் வைத்துக்கொள்வது ஶாஸ்த்ர விருத்தமாகுமேயன்றி, ஶிஷ்யர்கள் கீழ்க்குறிப்பிட்டபடி ஶுஶ்ரூஷைக்கு ப்ரதிநிதியாக ஸமர்ப்பிக்கும் த்ரவ்யத்தை அங்கீகரிப்பது தோஷமாகாது; கேவலம் த்ரவ்யார்ஜநமாக வைத்துக்கொண்டு ஶிஷ்யர்களிடமிருந்து பலாத்காரமாகப் பணம் ஸம்பாதித்து மெத்தைவீடுகள் கட்டின பண்டிதர்களை நம் ஸம்ப்ரதாயஸ்தர்களில் காணோம்; ப்ராயேண - அவர்கள் பகவதாராதநத்துக்குக் கண்டும் காணாததுமாகவே யிருக்கிறது. ஆசார்யனுடைய தேஹயாத்ரை ஶிஷ்யாதீநை யாகையால், அந்தத்தேஹயாத்ரை நடப்பதற்கு அநுகுணமான த்ரவ்யத்தை ஶிஷ்யன் ஸமர்ப்பிக்கக் கடமைப்பட்டவனே யாவான். பரமாசார்யனை



ஸ்ரீதேஶிகனுடைய நிக்ஷேபரக்ஷையிலும் 'ஶிஷ்யோ தேவாதாநவ ஸௌர நரேந்த்ர: ஸபோஷ்டம் ஶக்த்யா ஶாஸ்யதே। தேநைவ வஶம்வதேந யஶோதிதேந த்ரவ்யேண தீவ்ர த்ராஷ்டாவ்ய ஸ்வகம்॥' என்று ஸ்ரீநைநாராசார்யரால் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இவர் தம்மாலேயே உதாஹரிக்கப்பட்டிருக்கும் 'யத்ருச்சயோ பலப்தாநாம் தேஶாந்தர நிவாஸிநாம்। உபேக்ஷாவஶே: கர்தவ்ய: நாராயண பராத்மநாம்॥' என்கிற வசநத்திற்கு, 'கர்தவ்யே ஶேஷ ஏஹ - யத்ருச்சயா' இதி। தேஶாந்தர நிவாஸிநாம் நாராயணே ஸௌகர்யம் ஜாதம் யத்ருச்சயோபலப்தாநாம் ஶிஷ்யபரீக்ஷாம் விநாபி உபேக்ஷாவஶே: கர்தவ்ய:।' என்று ஸ்ரீ ஸாராஸ்வாதிநியில வ்யாக்யாதமாகையினால், தேஶாந்தர வாஸிகளாயும் பகவானிடத்தில் ஏகாந்தபக்தியுடையவர்களாயும், ஜ்ஞாநோபதேஶத்தையே நாடிவந்தவர்களாயுமிருக்கும் ஶிஷ்யர்களுக்கு அதிக காலபரீக்ஷையில்லாமல், அவர்கள் உத்தேஶித்துவந்த அர்த்தங்களை உபதேஶிக்கலாமென்று ஏற்படுகிறபடியினாலும், இந்த ஸ்வாமி வினுப் வருந்துவதற்கு இடமில்லாமல் காலக்ஷேபம் செய்ய அவகாஶம் ஏற்படுமென்பதைத் தடஸ்தர்கள் அறிவார்கள்.

(இன்னும் வரும்)

கோமளேசுரன்பேட்டை

கோமடம். ஸ்ரீநிவாஸாசார்யர்.

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) .... .... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ பாகவத தஸஶ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்மாசார்யர்) ... ... ... ... ... .... | 0 | 4 | 0 |
| 3. ஸ்ரீ சதுஶ்லோகீவிவரணம் .... .... .... .... | 0 | 2 | 0 |

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# இக்காலத்திய நிலைமையும் நமது தர்மமும்.

(தொடர்ச்சி.)

சென்ற நூறு வருஷ காலமாய் நம்மிற் சிலர் தாரித்ர்ய பீடிதர்களாயும் சிலர் அர்த்தபரர்களாயும் நமது பாலர்களை வித்யா ஸம்பாதநத்திற்காக நாஸ்திகர்களிடமும் நாஸ்திக ப்ராயர்களிடமும் ஒப்புவித்து, ஜந்மவாஸனையினால் நைஸர்க்கிகமாயுள்ள அவர்களுடைய ஆஸ்திக்ய கந்தத்தையெல்லாம் போக்கி, அது வழியாக பெருத்த நஷ்டத்தை ஸம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு நமது தேசம் இம்மாதிரியான வித்யாபரிசயத்தால் ஐஹிக ஸ்ரேயஸ்ஸில் வ்ருத்தியாய் இருப்பதாக நமக்குத் தோன்றுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஆமுஷ்மிக விஷயமாக நமது தேசம் ஹ்ராஸத்தை அடைந்திருக்கிறது. ஐஹிக ஸ்ரேயஸ்ஸைக் காட்டிலும் வேறுபட்டதான ஆத்ம ஸ்ரேயஸ் என்று ஒன்று உண்டு என்னும் நினைவே இல்லாமல் கணக்கற்ற மநுஷ்யர்கள் இந்தத் தேசத்தில் உதித்து விட்டார்கள். நீடித்த காலமாக நமது தேசத்துக்கு மஹாப்ரஸித்தியுடன் வழங்கி வந்த ஆத்ம விஷயகமான நல்ல பெயரானது ப்ராயேண அஸ்தமிதமாகி விட்டது. இதர பாமர தேசங்களிற்போல நமது தேசத்திலும் ஜனங்கள் அர்த்த காம போக பரர்களாயும், அந்த அர்த்த காமங்களை ஸம்பாதித்துக்கொள்வதிலேயே ஆஸக்த சித்தர்களாயும் திவாநிஸம் க்லேஸப்படுவதை நாம் ஆயிரக்கணக்காக பார்க்கிறோம். புத்தி கௌஸலம் முழுவதும் மேன்மேல் அபிவ்ருத்தம் செய்யப்பட்டு ததர்த்தமே உபயோகிக்கப்படுகின்றது. இவ்விதமாக விஷயஸங்கங்களை நோக்கி ப்ரவ்ருத்திக்கும் ஜனங்களை அடியேன் நிந்திக்க வரவில்லை.

“ நாஹம் நிந்தே ந ச ஸ்தௌமி ஸ்வபாவவிஷமம் ஜநம் ”



ஆனால், நமக்கு அநர்க்கங்களான ரத்நங்களாகப் பரிணமிக்க வேண்டுமவர்களெல்லாரும் இப்படி நாஸ்திக்ய பரவஸராகிவிட்டாரே என்று மாத்திரம் அடியேன் தபிக்கிறேன். இது நமது தேசத்துக்குப் பெருத்த நஷ்டமன்றோ? இதைவிடப் பெரிய நஷ்டம் நமக்கு ஸம்பவிக்குமென்று அடியேனுக்குத் தோன்றவில்லை. ஐஹிகஸ்ரேயஸ்ஸுக்காக ப்ரவ்ருத்தியையே செய்யக்கூடாது என்றாவது அந்த ஸ்ரேயஸ்ஸுக்கு அபேக்ஷிதங்களான உபாயங்களனைத்தையும் எல்லாரும் த்யஜித்து விடவேண்டுமென்றாவது அடியேன் கருத்துக்கொள்ளவில்லை. அவைகளை த்யஜிக்கும் அதிகாரிகள் இருந்தால் அவர்கள் அவ்விதம் செய்யலாம். அப்படிப்பட்ட அதிகாரிகள் பலர் இருக்கிறார்களென்று சொல்ல முடியாது. நாமோ ஸாமாந்ய அதிகாரிகளே; ஸர்வத்தையும் த்யஜிக்க அநர்ஹர்களே. நாம் பசிதாஹங்களினால் வருந்தாமல் இருக்கும்பொருட்டு த்ரவ்ய ஸம்பாதநம் செய்யவேண்டியது அவஸ்யமே. அந்த த்ரவ்ய ஸம்பாதநத்திற்கு உபயுக்தமாயுள்ள ஸ்வரூப யோக்யதையையும் ஸம்பாதித்துக் கொள்ள வேண்டியதுதான் இது கால தேஸஸ்திதியை அநுஸரித்து நாம் நடக்க வேண்டியபடி. ஆனால், இப்படி லௌகிக ப்ரவ்ருத்தியைச் செய்யும்பொழுதும் அதற்கு உபயுக்தமான யோக்யதையை ஸம்பாதித்துக் கொள்ளும்பொழுதும், நாம் நாஸ்திக்யத்துக்கு உட்படாமலும் நாஸ்திக ஸம்ஸர்க்கத்துக்குள் அகப்படாமலும் ஜந்மஸித்தமான நமது ஆஸ்திக்யத்தைப் பாதுகாத்து வரக் கூடாதா என்று மாத்ரம் நினைக்கிறேன். நமது ஸாஸ்த்ரங்களில் விஸ்வாஸத்தை இழந்து, அவைகளிற் சொல்லப்பட்டுள்ள விதிகளெல்லாவற்றையும் ஆத்யந்திகமாக த்யஜித்தால் தான் லௌகிக ப்ராவீண்யமும் அது வழியாக த்ரவ்ய ஸம்பாதநார்ஹதையும் ஸித்திக்குமென்று ஒரு நியமும் இருப்பதாக்காணோம். ஸந்த்யாவந்தநாதிகளைக் கைவிட்டு அநாசாராதிகளை ஏராளமாகக் கைக்கொண்டால்தான் த்ரவ்யம் சேர்கின்றது என்றும் பாஷாந்தர பரிசயம் ஸித்திக்கிறதென்றும் நினைத்த வ்யக்திகள் இருந்தார்கள். அப்படி நினைப்பது அஸத் என்பது இப்பொழுது அநுபவஸித்தம். விருத்த ஆசாரங்களைப் பலவாறாகச் செய்துகொண்டும் மனம்போனபோக்கெல்லாம் வர்த்தித்துக் கொண்டும் வரும் அநேகர் தாரித்ர்யோபஹதர்களாய் எவ்வித லௌகிக தேஜஸ்ஸையும் அடையாமல் உபயதா ப்ரஷ்டர்களாய்த்

தபிப்பதை எல்லாரும் பார்க்கலாம். ஆத்ம விஷயகமான ப்ரம்ஸம் மாத்ரம் நிச்சிதம்; லௌகிக ச்ரேயஸ்ஸின் லாபம் அநிச்சிதமே.

இந்த துஸ்திதிக்கு ப்ரதீகாரம் உண்டோ? த்ருப்திகரமான எவ்வித ப்ரதீகாரமும் இல்லையென்றே தோன்றுகிறது. 'காலோ ஹி து³ரதிக்ரம:' ஆனாலும், நமது தர்மத்தை நாம் செய்ய வேண்டுமன்றோ? அது உடனே ஸித்தியைக் கொடுக்காவிட்டாலும் காலக்ரமேண சில ப்ரகாரங்களிலாவது ஸபலமாகலாம். அந்த தர்மம் என்னவென்றால், முதலில் நமது பாலர்களை நாம் நாஸ்திக்யத்திலிருந்து ஸம்ரக்ஷிக்க முயலுவதே. 'ஸம்ஸர்க³ஜா தோ³ஷகு³ணா ப⁴வந்தி' என்பது அவர்கள் விஷயத்தில் விசேஷமாக அந்வயிக்கின்றது. க்ருஹ ஶகுந்திகையை ஸௌனிகரிடம் போல நமது பாலர்களை நாம் அவைதிகரிடம் காட்டிக்கொடுத்ததனால் தான் இந்தத்தீங்கு நமக்கு ஸம்பவித்திருக்கின்றது. வைதிகவிச்வாஸமுள்ள பாடயிதாக்களிடம் அவர்களை ஒப்புவித்து அப்பாடயிதாக்கள் வழியாக லௌகிகபோக்யதையின் ஸம்பாதனத்தை ஏற்படுத்த இப்பொழுதாவது நாம் முயன்றால், இந்த துஸ்திதி ஒரு ப்ரகாரத்தில் நிவாரிதமாகலாம். வயதும் முதிர்ந்து புத்தியும் அந்ருஜுவான மார்க்கத்தில் சென்று நிற்கும் பெரியோர்கள் விஷயத்திலன்றோ நாம் ஸத்ஸங்கத்தைச் சேர்ப்பிக்கவும் அதனால் அவர்களை மீட்கவும் ப்ரயத்னப்படுவது வ்யர்த்தமாகும்? பிறரால் செய்யப்படும் போதனத்திற்கு இணங்கி நிற்கும் புத்தியை உடைய பாலர்கள் விஷயத்தில் அந்தப்ரயத்னம் வீணாகுமோ? கலிபுருஷர்களாக நமது வைதிக ஸ்ரீயை ஆக்ரமிக்க வந்த நமது சத்ருக்கள், நமது விரலைக்கொண்டே நமது கண்ணைத் தாக்குவது போல, நமது பாலர்களைக்கைப்பற்றியே நமக்கு பலமான தீங்கை விளைவித்திருக்கிறார்களே! அச்சிறுவர்களையே நாம் அவலம்பித்து அவர்களை ஸன்மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்க முயன்றாலன்றோ, இப்பொழுதே இல்லாவிட்டாலும் ஸ்வல்பகாலம் சென்ற பிறகாவது இந்த நாஸ்திக்யத்தின் ஓங்குதல் கொஞ்சம் தடைபடும்.

அப்படி, நமது சிறுவர்களை நாம் கைப்பற்றவாவது, அவர்களுக்கு வைதிகரைக்கொண்டு த்ரவ்யஸம்பாதன யோக்யதையைப் பெறச்செய்யவாவது இப்பொழுது ஸாத்யமா என்பதை ஆலோ-



சிக்கவேண்டும். இப்பொழுது பாலர்களின் ப்ரவசனம் முழுவதும் தேசாந்தரீய ஹூணர்களுடைய ஹஸ்தகதமாக இருக்கின்றது. பாடசாலைகளில் நமது தேசத்தவர்கள் பாடயிதாக்களாக இருந்தாலும், நியந்தாக்கள் நமது நன்மை தீமைகளை நன்கு அறியாத தேசாந்தரீயர்களே. அவர்கள் வைதிக லௌகிக பரிபாடிகளின் வாசியை அறியாதவர்களானதால் அவர்களிடம் அந்த வித்யாநியமனம் இருக்கும் வரையில நம்மால் உத்தேசிக்கப்படும் ச்ரேயஸ் நமக்குக் கிடைப்பது அரிதேயாகும். புதிய ராஜாங்கசீர்திருத்த ப்ரகாரம் ப்ரவசனத்தின் அதிகாரம் முழுவதும் இந்தத் தேசத்தவர்களின் ஸ்வாதீனத்தில் வருகிறது என்பது உண்மையே. அது ஒருகால் நமக்கு அநுகூலமாக பரிணமிக்குமோ என்பதைச் சற்று ஆலோசித்துப் பார்த்தால், பூர்வஸ்திதியே மேலானது என்று தோன்றும். அத்ருஷ்ட விஷயத்தில அவிச்வாஸிகளாயிருப்பதுடன் வர்ணாச்ரம தர்ம விஷயத்தில அத்யந்தம் த்வேஷிகளாயுமுள்ளவர்களே பெரும்பாலும நமக்கு அதிகாரிகளாகப் புதியச் சீர்திருத்தப்படிக்கு ஏற்படுவார்களாதலால், நமது கொள்கைகளில கேவலம் ஔதாஸீன்யத்தை வஹிக்கும் தேசாந்தரீயர்களே சிறந்த அதிகாரிகளாவார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. இவ்வாறு நமது பாலர்களின் ப்ரவசனம் முழுவதும் அவைதிகர்களிடமே எந்தத் தசையிலும் நிற்கப்போகிறதாதலால், அதை வைதிக ஸ்வாதீனம் செய்வது என்பது மொட்டவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதையே ஒக்கும். ஆகையால், ப்ரவசனத்தை வைதிக வசமாக்கி ஸித்திபெறலாமென்பது நடவாத காரியம். ஆனால், நாம்செய்யக்கூடியது ஒன்று உண்டு. அதாவது-அதிகாரிகளால் நிர்த்திஷ்டமாயுள்ள ப்ரவசன காலம் தவிர்த்து மற்றைகாலங்களில் நமது பாலர்கள் நம்முடைய ஸ்வாதீனத்தில் இருக்கலாமாதலால், அப்பொழுது அவர்களுக்கு நாம் வைதிக ஸம்ஸ்காரத்தை ஏற்படுத்தவும் ஸத்ஸம்ஸர்க்கத்தைக் கொடுத்து அதனால் ஆஸ்திக்யத்தை த்ருடப்படுத்தவும் முயலலாமென்பது தான். இதையும் செய்யக்கூடாது என்று தடுக்கும் காலம் இன்னும் வரவில்லை. ஸர்வ ப்ரகாரத்தாலும் ஆத்ம பாதகங்களான அப்யவஹார ஸ்தலங்களுக்கு நமது பாலர்களை நாம் அனுப்பாமலும், அஸத்தமங்களான நோக்கங்களை ஜநிப்பிக்கக்கூடிய உபதேசங்களை அவர்கள் மனஸ்ஸில் பதியவொட்டாமலும், ஸாமாந்ய வித்யையின் க்ரஹணத்திற்காக எவ்வளவு காலத்தை அதிகாரிகளின் நியமங்கள் அபேக்ஷிக்கின்றன

வோ அவ்வளவு காலம் மாத்திரம் அவர்களை அவ்விடம் போக விட்டு மற்றைகாலங்களில் அவர்களை நாம் பாது காத்தும் நாம் ஏன் வரக்கூடாது என்பது அடியேனுக்கு புலப்படவில்லை. உபதேசாந்தரத்தின் ஸம்பாவனை இருக்கிறதாதலால், நமது உபதேசம் எளிதில் உள்ளத்தில் பதியாது என்பது உண்மையே. ஆனால், நிரூபணத்தை எடுத்துக் காட்டும் பக்ஷத்தில், பாலர்களின் புத்தி ஸுலபமாகவே ஆவர்ஜ்ஜிதமாகும்.

'பெரிய பத்தநாதிகளிலேயே லௌகிக வித்யாக்ரஹண ஸௌகர்யங்கள் ஏராளமாக இருக்கின்றன; எல்லாரும் அப்படிப்பட்ட பத்தநாதிகளில் வஸிக்க முடியாதாதலால் பாலர்களை அந்தந்தப் பாடசாலாதிகாரிகள் வசமே அந்த வித்யாக்ரஹண காலத்தில் விடும்படி ஸம்பவிக்கின்றது; அப்பொழுது நாம் பாது காப்பது என்பதற்கே ப்ரஸக்தி இல்லை' என்று ஒரு ஆக்ஷேபம் செய்யக்கூடும். இந்த ஆக்ஷேபம் விமர்சாஸஹமே. ஏனென்றால், அப்படிப்பட்ட காலங்களில், நமது வைதிக விச்வாஸிகளெல்லாரும் ஒன்று சேர்ந்து அப்படிப்பட்ட பத்தநங்களில் வித்யார்த்திகளின் ஸௌகர்யத்திற்காக ஒருவைதிக அப்யவஹார ஸ்தலம் ஏற்படுத்தி, அதில் நமது பாலர்களை வஸிக்கும்படி செய்து வைதிக கர்மாநுஷ்டானங்களையும் நமக்குச் சொந்தமாயுள்ள ஸம்ஸ்காரங்களையும், லௌகிக படிப்புக்கு அநுரூபமாக இருக்குமளவு தகுந்த வைதிகர்களைக் கொண்டு அவர்களுக்கு ஏன் போதிப்பித்து வரக்கூடாது? தமோ பூயிஷ்டங்களான லௌகிக ஹாஸ்டல்களில் நமது பிறவர்களை நாமே கொண்டு போய் விடுவதை விட வேறு மௌட்யமும் உண்டோ? நமது பாலர்களை நாம் பாதுகாப்பது என்பது நமது தர்மமன்றோ? அதை முழுவதிலும் அந்யர்களிடம் ஒப்புவித்து நாம் வ்யாபாராந்தரத்தில் ப்ரவ்ருத்திக்கிறது என்பது புத்திமான்களின் க்ருத்யமாகுமோ? இதை அறிந்தும் நாம் எல்லாரும் அப்படியே செய்துவருகிறோமே! இனியாவது அப்படிச் செய்யாமல் நமது தர்மத்தை நாமே அநுஷ்டித்துவர முயலவேண்டும். இதில் அஸாத்



யமான அம்சம் ஒன்றுமில்லை; பரிஹாராஸர்ஹமானதும் ஏதுவும் தென்படவில்லை. ச்ரத்தையும் விச்வாஸமும் ஹார்த்தமாக இருந்தால் இது ஸுஸாத்யமே. இதைத்தவிர்த்து வேறு உஜ்ஜீவநோபாயம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே நாம் நமது உயர்ந்த பதவியிலிருந்து வெகு தூரம் விழுந்துவிட்டோம். இனி விழாமல் ஸம்ரக்ஷித்துக்கொள்ள ஏதாவது ஒரு உபாயத்தை நாம் கைப்பற்றவேண்டியது தான்.

இன்னும் நம்மால் அநுஷ்டிக்கப்பட வேண்டிய தர்மமொன்று உண்டு. மநுஷ்யர்களுக்கு ஸம்பவிக்கும் ஏற்றம் முழுவதும் குணத்தினாலேயே தவிர மற்றை எதனாலும் இல்லை. அந்தக் குணத்தை நழுவாது நாம் ஸம்ரக்ஷிக்க வேண்டியது தான் நமது மற்றொரு தர்மமாகும்.

“ അഹിംസാ സത്യമസ്തേയം ശൌചമിന്ദ്രിയനിഗ്രഹഃ ।
ദാനം ദയാ ദമഃ ക്ഷാന്തിഃ സർവേഷാം ധർമസാധനം ॥ ”

என்கிறபடி ஒருபொழுதும் ப்ராணி பீடையைச் செய்யாமலும், ஆபத்காலத்திலும் யதார்த்த வசநத்தையே கைப்பற்றியும், பரஸ்வாபஹாரம் பாஹ்யசுத்தி ஆந்தரசுத்தி இவைகளை ஸர்வதா த்யஜித்தும், இந்த்ரியங்களை நியதங்களான விஷயங்களில் அடக்கிக்கொண்டும், அந்நம் தீர்த்தம் இவை முதலியவைகளை ப்ராணிகளுக்கு யதாசக்தி கொடுத்து அவைகளின் ஆர்த்தியைப் பரிஹரித்துக்கொண்டும், தமம் தயை இவைகளுடன் கூடியும், தனக்கு அபகாரம் செய்கிறவனிடத்திலும் சித்தவிகாரம் அடையாமலும் ஒருவன் வர்த்தித்து வந்தால் அவன் எந்த ஜாதியைச்சேர்ந்தவனானாலும், தர்மத்தை ஸாதித்துக்கொண்டவனாவான். இவைகளைக் கேவலம் பரோபதேசத்தில் மாத்திரம் வைத்துக்கொள்ளாமல் ஸ்வாநுஷ்டானத்திலும் கொண்டுவர நாம் முயலவேண்டும். மிக்க ஜாக்ரதையுடன் நாம் வர்த்தித்து வந்தாலும், சிற்சில பாகங்களிலாவது சிற்சில காலங்களில் நம்மிடத்தில் பிழைகள் ஸம்பவிக்கின்றன. அப்படி நாம் ப்ரம்சம் அடைவது, சற்று ஊன்றிப்பார்த்தால், நமக்கே புலப்படும். அஸத்ய வச

த்திலும் ப்ராணி ஹிம்ஸையிலும் கோபம் முதலிய கெட்ட மனோ பாவங்களுக்கு ஆளாவதிலும் இன்னும் இவைபோன்ற மற்றை அதர்மங்களிலும் புத்தி பூர்வகமாகவோ தவறுதலாகவோ நாம் சிற்சில காலங்களில் பதந மடைகின்றோம். அப்படி அவைகளில் விழாமல் நம்மை ரக்ஷித்துக்கொள்வதில் நாம் உறுதியான முயற்சியைச் செய்து, ஒவ்வொரு தர்மத்தையும் ஒவ்வொரு வ்ரதம்போல ஏற்றுக்கொண்டு, அந்த வ்ரதத்திற்கு எவ்வித பங்கமும் வராமல் பகவானே காப்பாற்ற வேண்டுமென்று அவ்வளவு ஆஸக்தியுடன் அதில் நாம் இழிந்து பாபத்திலிருந்து பயத்துடன் நடந்து வந்தால், நமக்கு பரம்பரையாகக் கிடைத்திருக்கும் ஏற்றத்திற்கு நாம் அர்ஹர்களாக இருப்போம். இல்லாவிட்டால் அந்த ஏற்றம் நமக்கு அநர்த்தரூபமே. குணக்ருதமான இந்த ஏற்றத்தைக் கைநழுவவிட்டு கேவலம் ஜந்ம க்ருதமான ஏற்றத்தைப் பாராட்டுவதனால்தான் அந்யர்களுடைய அஸூயையும் ஸ்பர்த்தையும் நமக்கு இப்பொழுது ஸம்பவித்திருக்கின்றன. தவிரவும், பகவந் முகோல்லாஸமும் இந்தக் குணதிக்யத்தைச் சார்ந்ததே.

"யஸ்யைதே சத்வாரிம்ஶத் ஸம்ஸ்காரா ந சாஷ்டாவாத்மகுணா:,
ந ஸ ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸாலோக்யம் ச கச்சதி"

என்னும் ஸூத்ரத்தினால், கர்ப்பாதாநாதி நாற்பது ஸம்ஸ்காரங்கள் பூர்ணங்களாக இருந்தாலும், ஒருவனுக்கு ஆத்ம குணங்கள் இல்லாமற்போனால் அவனுக்கு ப்ரஹ்ம ப்ராப்தி கிடைக்காது என்று கௌதம மஹர்ஷி வெளியிட்டிருக்கிறார். 'இப்படி ஆத்ம குணவ்ருத்தியினால் நமக்கு யதார்த்தமான ஏற்றமும் பகவன் முகோல்லாஸமும் ஸம்பவித்தால் ஜகத்திற்கு என்ன உபகாரம் ஆயிற்று?' என்று ஶங்கிக்கலாம். இந்த ஆத்ம குணங்களால் நிறைந்துள்ள வ்யக்தி எங்கேயாவது ஒருவன் இருந்தால் கேவலம் அவன் இருப்பே ஜகத்திற்குப் பெரியதொரு ஆதாரமாகும் என்பதை நாம் மறக்கக்கூடாது. அவனைச் சுற்றி இருப்பவர்களுக்கு அவனுடைய ப்ரயத்நமின்றிக்கே ஒருவித ஸந்மார்க்க



பரிசயம் ஸம்பவிக்கும். ஸாதுக்களின் முன்னிலையில் அஸாது க்ருத்யத்தைச் செய்யவும், ஶுசியாக இருப்பவர்களின் முன்னிலையில் அஶுசியாக இருக்கவும் ப்ராயேண ஜநங்கள் ஸங்கோசமடைகிறார்கள். ஶாந்தர்களின் ஸாந்நித்யமே சுற்றி இருப்பவர்களுக்கு ஒருவித ஶாந்தியை ஏற்படுத்து மென்பதை எல்லாரும் அங்கீகரித்திருக்கிறார்கள். ஆகையால், நமது ஆத்யந்திக ஶ்ரேயஸ்ஸை உத்தேஶித்தே நாம் குணப் பயிற்சியைச் செய்தாலும், அது அந்த ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுப்பதுடன் ஜகத்திற்கு உபகாரகமாகவும் பரிணமிக்கும் என்பது திண்ணம். ப்ரக்ருத துஸ்திதியை நிவாரணம் செய்ய உத்யோகிக்கும் நாம் எல்லாரும் ஸுகரமாகவும் நிராபாதமாகவும் தமக்கே அவஶ்யம் கரணீயமாகவுமுள்ள இந்த உபாயத்தை உறுதியுடன் கைப்பற்ற வேணுமென்று மாத்ரம் அடியேன் ப்ரார்த்திக்கிறேன். உண்மையாகவே, நமது ருஷிகளால் நம்முடைய ஶ்ரேயஸ்ஸுக்கென்றே உபதேஶிக்கப்பட்டுள்ள மார்க்கத்தை உறுதியுடன் அவலம்பித்து, அவைகளை ஈஶ்வரனுடைய ஆஜ்ஞையென்று நாம் ஸம்பந்தப் பட்டவரையில் லோகத்தாற் செய்யப்படும் நிந்தா ஸ்துதிகளால் அவிக்ருத சித்தர்களாய் யாவச்சக்தி லோபமில்லாமலும் அகபடமாயும் அநுஷ்டித்துக்கொண்டு எம்பெருமானுடைய த்ருப்தியினாலேயே ஸ்வயம் த்ருப்தர்களாய் நடந்து வந்தால் அதைவிட ஶ்லாக்யதரமான வேறுமார்க்கமும் உண்டோ?

"ஸோऽஸாவதுஷ்க்ருத்கர்மா ஸமவாப்ய விவேக-
ஜைர்கதிதைர் யஶாம்ஸ்யுபசின்வன் விஜஹார்ஹம்।
உபஜாய விஸ்ம்ருதிஜாய ச யோ விஷாதம்
ஶ்ரேயோ நிராஸ்யதயதா த்ருஷ்ட: ப்ராண:॥"

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே [illegible] நம:

# கடிதங்கள்.

## (1)

### ஸ்ரீ வைஷ்ணவ மத யாதார்த்யம்.

[illegible]

[illegible] ( ? ) [illegible]

[illegible] ஸ்ரீவைஷ்ணவ [illegible] ( ? ) [illegible] ........................ [illegible]

[illegible] - தனிசரமத்திலே - "ஆகையால், இவை ஸ்வரூப [illegible] யாஜ்யமாக மாட்டா" என்று, முமுக்ஷுப்படியிலும் 'கர்மம் கைங்கர்யத்திலே புகும்' என்றும் । [illegible] - 'உரங்குவான் கைப் பிண்டம் போலே' இதி । [illegible] ......... [illegible] ॥

திருமழிசை கோயில் கந்தாடை

திருவல்லிக்கேணி, 20—8—20. அப்பனையன் ராமாநுஜாசார்யர்.

## (2)

### ஆழ்வார் ஆசார்யர்கள் திருநக்ஷத்ர ப்ரவசநமஹோத்ஸவ ஸபா [illegible].

சென்ற வார்ஷிக மஹோத்ஸவத்தில் திருவஹீந்த்ரபுரத்தில் சேர்ந்த விஸ்தாரம் செய்தபடி ஸ்ரீமத் [illegible] இந்த [illegible]

ராஜமன்னார் கோவிலில் நடக்கும் ஸபையில் கீழ்க்குறிக்கப்படும் நிபந்தனைகள் ப்ரகாரம் நடத்தப்படும்.

## நிபந்தனைகள்.

(1) நாளது ரௌத்ரி௵ மார்கழி௴ நடக்கும் ஸபையில் த்விதீய தினம் காலையில் லிகிதாம்சம் நடத்தப்படும்.

(2) மூன்றாவது நாள் ஸபை மத்யாஹ்நத்தில் வாசிகாம்சம் ஸபையின் முன்பாக நடத்தப்படும்.

(3) ஆ. ஆ. தி. ஸபையின் அத்யக்ஷர் (1) ஷை ஸபை கார்யதரிசி (2) ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதரிசி (3) ஆ. ஆ. தி. ஸபையின் அத்யக்ஷரால் ப்ரார்த்திக்கப்படும் ஸபைக்கு வந்திருக்கும் மற்ற ஸ்வாமிகளில் இருவர், ஆக ஐவரும் லிகிதாம்சத்தில் பரீக்ஷகர்களாயிருப்பார்கள். வாசிகாம்சத்தில் ஆ. ஆ. தி. ஸபாத்யக்ஷரும் மற்று மொருவரும் பரீக்ஷகர்களாயிருப்பார்கள்.

(4) பரீக்ஷகர்களால் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூவருக்கு முறையே ரூ. 25, ரூ. 15, ரூ. 10 ஸம்மானமும் மற்றவர்களுக்கு ஸவ்யாக்யாநம் ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரம் ஸ்ரீகோசம் ஒன்றும் அளிக்கப்படும்.

## விளம்பரம்.

### ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ஸம்மாநம்.

| | | |
|---|---|---|
| ப்ரதம ஸம்மானம் | ... | ரூ. 25. |
| த்விதீய ஸம்மானம் | ... | ரூ. 15. |
| த்ருதீய ஸம்மானம் | ... | ரூ. 10. |

மற்றவர்களுக்கு ஸவ்யாக்யானம் ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரம் ஸ்ரீகோசம் ப்ரதி ஒன்று.

இப்பரீக்ஷைக்கு ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் ஸமக்ரம் விஷயமாயிருக்கும். வாசிகாம்சத்தில் ஸபையோர்க்கு முன்னிலையில் அதிகார ஸங்க்ரஹம் ஶ்லோகங்களில் ஒன்றைக்கோ, அதிகார ஸங்க்ரஹப்பாட்டு ஒன்றைக்கோ ஒரு அதிகாரத்தின் விஷயத்தைப்பற்றியோ விவரிக்கும்படி இருக்கும்.

இந்த க்ரந்தமானது நமது பரமாசார்யனான ஸ்ரீதேசிகனால் ஸகல வேதாந்தார்த்த தாத்பர்ய ஸங்க்ரஹமாய் ஸகலோபஜீவ்யமாகும்படி எழுதப்பட்டது. இது காலஸ்திதியினால் துர்தசை அடைந்து வருவதை நிவ்ருத்தித்து இதைப் பரவச்செய்யும் நோக்கத்துடன் இந்த ஸம்மானம் ஏற்படுத்



தப்பட்டிருக்கிறது. இதில் பரீக்ஷகர்களாய் அத்யயிக்க இஷ்டமுடையவர்களும், மற்றும் இது விஷயமான ஸமாசாரங்கள் அறிய இஷ்டமுடையவர்களும் சென்னை, மவுண்டுரோடு, கோமளேசுவரன்பேட்டை, ஸந்நிதி வீதி, 16 - நெம்பர் வீட்டிலிருக்கும் கோமடம் ஸ்ரீநிவாஸய்யங்கார் என்கிற விலாஸத்திற்கு எழுதும்படி ப்ரார்த்திக்கப் படுகிறார்கள்.

குறிப்பு:—இவ்வளவுகாலம் முன்பாக இந்த விளம்பரத்தை ப்ரசுரம் செய்வதின்கருத்து - இதுவரையில் இக்ரந்தத்தை யோக்யதை இருந்தும், அதிகரியாதவர்களும் குறித்த காலத்துக்குள் க்ரமமாய் அதிகரித்துப் பரீக்ஷையில் அத்யயிக்க ஸித்தர்களாகலாம் என்பதே.

பரீக்ஷையில் அத்யயிக்க இஷ்டமுள்ளவர்கள் மார்கழி௴ முதல் தேதிக்குள் மேல் குறிப்பிட்டிருக்கும் விலாஸதாரருக்கு தெரிவிக்கவும்.

சேட்லூர். நரஸிம்மாசார்யர்,

ஆழ்வாராசார்யர்கள் திருநக்ஷத்திர ப்ரவசன ஸபையின் அத்யக்ஷர்.

## புதிய சீர்திருத்தங்கள்.

(தொடர்ச்சி.)

(பப்ளிஸிடி பீரோவிலிருந்து.)

பிராமணரல்லாதவர்களில் சிலர் தங்களுக்கு சட்டசபையில் மெம்பர்களாயிருக்க அதிகமானவும் போதுமானவுமான ஸ்தானங்கள் அடையமுடியாதென்று அதைரியப்படுகிறார்கள். அதை நீக்க சட்டநிருபண சபைக்கு தெரிந்தெடுக்கும் மெம்பர்களில், இத்தனை நபர்கள், பிராமணரல்லாதவர்களாயிருக்கவேண்டுமென்று ஒரு சட்டம் ஏற்படுத்தவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது.

எவ்வளவு நபர்கள் பிராமணரல்லாதவர்களாயிருக்கவேண்டு மென்பதைப்பற்றி, பிராமணர்களையும் பிராமணரல்லாதவர்களையும் ஒன்றுகூடி தீர்மானிக்கச் சொல்லப்பட்டது. ஆனால் அவர்கள் ஒருவிதமான முடிவுக்கும் வரவில்லை.

இதன் பிறகு மெஸ்டன் பிரபுவை மத்தியஸ்தம் செய்யச்சொல்லி அவர் இரண்டுகக்ஷி பிரதிநிதிகளையும் விசாரித்துக்கொண்டு ஒவ்வொரு ஜில்லாவிலிருந்து இத்தனை, பிராமணரல்லாதவர்களை யனுப்பவேண்டுமென்று அவர்

ஒருவாறு தீர்மானம் செய்தார் பிராமணரல்லாதவர்கள் இவ்வளவு நபர்களிருக்கவேண்டுமென்று பிரத்தியேகமாய் குறிப்பிடப்பட்ட போதிலும், ஜனங்கள் இஷ்டப்பட்டால் இதரஸ்தானங்களுக்கும் கூட பிராமணரல்லாதவர்களையே தெரிந்தெடுக்கலாம். மெஸ்டன் பிரபுவின் தீர்மானமானது, பிரிட்டிஷ் பார்லிமெண்ட் மகாசபைக்குமுன்பாகவைக்கப்படும். அதற்குமேல் முடிவான அவர்கள் அதைப்பற்றி தீர்மானம் செய்வார்கள்.

நீங்கள் சட்ட நிருபண சபைக்கு நியமித்தனுப்பும் மெம்பர்களிலிருந்து, மேன்மைபொருந்திய கவர்னர் துரையவர்கள், மந்திரி உத்தியோகத்திற்கு வேண்டியவர்களை தெரிந்தெடுப்பார். மேலும், மேன்மை பொருந்திய கவர்னர் துரையவர்கள் இந்த மந்திரிகளுடன் பலவிதமான காரியங்களை ஷை சபையின் மெம்பர்களுடைய இஷ்டங்களை அநுசரித்து நடத்துவார். இம்மந்திரிகள், என்னென்ன காரியங்களை நடத்துவார்கள்? அவர்கள் நடத்தும் காரியங்களில் முக்கியமான சிலவற்றை கீழே காண்க:—

ஜில்லா போர்டுகள் (District Board), தாலூகா போர்டுகள் யூனியன்கள், முனிஸிபாலிடிகள், ஆகிய இவைகள் ஸர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட, சில பொதுவான சட்டங்களுக்குக் கீழ்படிந்து தங்களுடைய காரியங்களை நடத்திக்கொண்டு வருகின்றன. அவைகள் அடிக்கடி கவர்ன்மெண்டாருடைய உதவியைக் கோருகின்றன. மந்திரிகள் இவ்விஷயங்களை கவனிக்கவேண்டியது. ஷை ஜில்லா தாலூகா போர்டுகள் யூனியன்கள், முனிஸிபாலிடிகள், இவைகளுக்கு, அம்மந்திரிகள், அபிவிருத்திக்குரிய வழிகளைக் காண்பிப்பதோடு, தக்க உதவி புரியவேண்டும்.

பிறகு ஒரு மந்திரி, வைத்தியசாலைகளையும், மருந்துகள் கொடுக்கும் இடங்களையும், பொதுவாக சுகாதார அபிவிருத்தி விஷயங்களையும் வியாதிகளை தடுக்கும் விஷயங்களையும் கவனிக்கவேண்டும்.

அம்மந்திரி, பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் கல்வி கற்பிக்கும் விஷயங்களைப்பற்றி கவனிக்கவேண்டும்.

அம்மந்திரி, பப்ளிக் ஒர்க்ஸ் (Public Works) இலாகாவாருக்கு, கட்டடங்களையும், ரோட்டுகளையும்பற்றி தகுந்த உத்திரவுகள் செய்யவேண்டும். (கட்டளையிடவேண்டும்).

விவசாய இலாகா, வெட்டிரினெரி (மிருக சிகித்ஸை) இலாகா, மீன் இலாகா, ஆகிய இந்த இலாகாக்கள் ஷை மந்திரியினுடைய அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டிருக்கும்.



கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ரார் (ஐக்ய சங்கங்கள் மேலதிகாரி) கூட ஷை மந்திரியினுடைய கட்டளைகளுக்குக் கீழ்படிந்துதான் வேலைசெய்வார்.

ரிஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்ட் (பத்திரம் முதலியவைகள் ரிஜிஸ்தர் செய்யும் (இலாகா) ஒரு மந்திரியின் கட்டளைக்குட்பட்டிருக்கும். மத சம்பந்தமான அல்லது தர்ம சம்பந்தமான தான சொத்துகள் விஷயங்களில் ஷை மந்திரிதான் தீர்மானம் செய்வார்.

மேலும், தொழில் அபிவிருத்தி இலாகா (Industries Department) அவருடைய கட்டளைக்குட்பட்டுத்தானிருக்கும். பஞ்சிலிருந்து நூலெடுப்பது, துணிகள், செய்வது, தோலை பதனிடுகிறது, சாயம் போடுவது, மணிலாக்கொட்டை முதலியவைகளிலிருந்து, எண்ணெயும், பிண்ணாக்கும் எடுப்பது, ஆகிய இத்தொழில்களெல்லாம் அபிவிருத்தியடையவேண்டிய விஷயத்திற்கு ஷை மந்திரி, முயற்சி எடுத்துக்கொள்வார்.

கடைசியாக, ஆப்காரி இலாகாவின் காரியத்தை ஷை மந்திரிதான் நடத்துவார். சாராயமும், கள்ளும், இப்பொழுது இருக்கி, விற்கும் அளவே அல்லது இம்மாதிரியே இருக்கலாமா இல்லாவிட்டால் இவ்விஷயங்களில் ஏதேனும் மாறுதல்கள் செய்யவேண்டுமா, என்பதையும் ஷை மந்திரியார்தான் கவனிக்கவேண்டும்.

இவைகள்தான் மேன்மை பொருந்திய கவர்னர் துரையவர்கள் தன் மந்திரிகளுடன் கவனிக்கப்போகிற விஷயங்களில் முக்கியமானவை. ஜனங்களால் தெரிந்தெடுத்தனுப்பப்படும் சட்ட நிருபண சபை மெம்பர்களுடைய எண்ணத்திற்கு மாறாக இம்மந்திரிகளால் நடக்கமுடியாது. இம்மந்திரிகள், தங்களுடைய காரியங்களை தாங்கள் விவேகமுடன் நடத்திவருவதாக மெம்பர்கள் அபிப்பிராயம் கொள்ளுமாறு செய்யவேண்டும்.

மந்திரிகள் இம்மாதிரி கவனிக்கவேண்டிய காரியங்கள் மிகவும் முக்கியமானவைகள் என்பது உங்களுக்கு எளிதில் புலப்படும். பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதும், விவசாயத்தை அபிவிருத்தி செய்வதும்போல் முக்கியமான விஷயங்கள் வேறு என்ன இருக்கின்றன? இனிமேல் மந்திரிகள் இவ்விஷயங்களுக்கு ஜவாப்தாரிகளாயிருப்பார்கள். கல்வி இலாகாவும், அவர்கள் உத்திரவு பிரகாரம் நடக்கும்.

ஷை கல்வியும் விவசாயமும் தவிர்த்து, மற்றவைகளை, ஷை மந்திரிகள் கவனிக்கவேண்டிய இதர விஷயங்கள்கூட மிகவும் முக்கியமானவைகள்தான். அவர்கள் ஜனங்களுடைய சுகாதாரத்தைப் பாதுகாக்க தக்க ஏற்பாடுகள்

செய்யவேண்டியதாயிருக்கிறது. அவர்கள் கோவாபரேடிவ் சொஸைடீஸ் அதாவது ஐக்ய சங்கங்கள் உண்டாவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டியதாயிருக்கிறது. அயல் நாடுகளிலிருந்து இப்பொழுது வந்துகொண்டிருக்கிற அநேக பண்டங்களை நமது தேசத்திலேயே உண்டாக்குமாறு, அநேக தொழில்களையும் தொழில் சாலைகளையும் ஏற்படுத்த நமது தொழில் இலாகாவார் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இது நிறைவேறினால் நமது தேசத்தில் செல்வமதிகரிக்கும். கூலியாளர்களுக்கு சுலபமாய் நல்ல சம்பளம் (கூலி) கிடைக்கும். இந்த இலாகாவினுடைய மேல்பார்வை ஒரு மந்திரி வசம் ஒப்புவிக்கப்படும். அவர்தான் மேடீ எண்ணங்கள் நிறைவேறுவதற்குத் தகுந்த வழியை நிர்மாணித்து பின்பற்றவேண்டும்.

பிறகு ஆப்காரி இலாகாவை கவனிப்போம். அநேக வருஷங்களாக ஜனங்கள், கூலியாளர்கள், சாராயம், கள் முதலியவைகளினுடைய பானத்தைத் தவிர்க்கவேண்டும் அல்லது மிதப்படுத்தவேண்டுமென்று, சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில், என்னசெய்யக்கூடும் என்கிற தைப்பற்றி அம்மந்திரி ஆலோசிப்பார்.

இந்த முக்கியமான காரியங்களி (விஷயங்களி) லெல்லாம் மேன்மை பொருந்திய கவர்னர் துரையவர்களும், மந்திரிகளும் சட்ட நிரூபண சபையாருடைய இஷ்டத்தை அனுசரித்து நடக்கவேண்டும். நீங்கள்தான், சட்ட நிரூபண சபை மெம்பர்களில் பெரும்பாலரை தெரிந்தெடுக்கப்போகிறீர்கள்.

ஆகையினால், நீங்கள் சட்ட நிரூபண சபைக்கு மெம்பர்களை தெரிந்தெடுக்கையில், தகுந்தவர்களைத்தான் தெரிந்தெடுக்கவேண்டும். அவர்களுக்கு உங்களுடைய இஷ்ட கஷ்டங்கள் தெரிந்திருக்க வேண்டும் உங்களுக்குத் தேவையாயிருக்கும் விஷயங்களைப்பற்றி, மந்திரிகளிடம், அவர்கள், ஸவிஸ்தாரமாய் எடுத்துச் சொல்லக்கூடிய சக்தியையுடையவர்களாயிருக்க வேண்டும். உங்களுடைய நன்மைக்காக அநேக கார்யங்களியற்றும் மந்திரிக்கு அவர்கள் பக்க பலமாய் (துணையாய்) இருக்கவேண்டும். முட்டாள் தனமாய் நடந்துகொள்ளும் மந்திரியை அவர்கள் எதிர்க்கவேண்டும். நீங்கள் தகுந்த மனிதரை மேடீ சபைக்கனுப்ப பிரயாசை யெடுத்துக்கொள்ளா விட்டால், மந்திரிகளால் அவர்களுடைய காரியங்களை சரிவர நிறைவேற்ற முடியாது. காரியங்கள் கெட்டுப்போய்விடும். அதினால்வரும் கஷ்ட நஷ்டங்கள் ஜனங்களைத்தான் சேரும்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 10.] ரௌத்ரி௵ புரட்டாசிமீ [ஸஞ்சிகை 12.

“த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥” [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

வைகாசி மாஸம் குறிப்புக்களில் பகவானுடைய அர்ச்சாவதார ஸ்வரூபத்தைப்பற்றிக் கிஞ்சித் விசாரித்தோம். அந்த விசாரம் உத்தர க்ருத்யாதிகாரத்தை அநுஸரித்துப் பண்ணப்பட்டது. நம்முடைய ஆழ்வார்களும் ஆசார்யர்களும் மற்றுமுள்ள நமக்குப் பூர்விகர்களான ப்ரஹ்மவித்துக்களும் மிகவும் ப்ரீதியுடன் அர்ச்சாரூபதானான எம்பெருமானை அநுபவித்தார்கள். தத்காலோசிதமாக அந்த விஷயம் மீண்டும் சிந்திக்கத்தென்று கருதி இவ்வண்ணம் எழுத முயல்கின்றோம்.

‘தஞ்சமாகிய தந்தைதாயொடு தானுமாயவை யல்லனாய்
எஞ்சலில்அமரர்குலமுதல் மூவர்தம்முளு மாதியை
அஞ்சிநீருலகத்துள்ளீர்களவனிவனென்று கூழன்மின்
நெஞ்சினாற்நினைப் பானெவனவ னாகுநீள்கடல் வண்ணனே.

இப்பாசுரார்த்தத்தைச் சுருங்கச் சொல்கின்றோம். ரக்ஷகரான தாய் தந்தையரைப்போல் தானும் ரக்ஷகனாய் நின்று ஆஸ்ரிதர்க்கு ஹிதமும் ப்ரியமும் செய்பவனாய், அதுவுமன்றி நமக்கு

ஸர்வவித பந்துவுமாய் இருக்கின்ற பகவான் ஜ்ஞாநஸங்கோசமில்லாத நித்யஸூரிகளுடைய நாதனாயும் ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளால் த்யாநிக்கப்பட்ட ஸர்வகாரண காரணனாயுமிருக்கின்றானென்று லோகவாஸிகளான ஜநங்கள் அவனது மஹிமையை மாத்ரம் நினைத்துப் பயம்கொள்ள வேண்டாம்; ஸ்ரீவைகுண்டத்தில் யாதொரு ரூபவிஶிஷ்டனாக அவன் எழுந்தருளியிருக்கின்றானோ, அந்த அப்ராக்ருதரூபம் நமது இந்த்ரியங்களுக்கும் புத்திக்கும் எட்டாதபடியால், இங்கே நமக்கு ஸுலபனாய் அர்ச்சாரூபியாயெழுந்தருளியிருக்கின்றவன் அவன்தானோவென்று ஸம்ஶயமும் கொள்ளவேண்டாம்; நீள்கடல் வண்ணனான எம்பெருமான், ஜநங்கள் யாதொன்றை அவனுக்கு ரூபமாக நினைக்கின்றார்களோ, அதையே தனது திவ்யரூபமாகக் கொண்டருளும். அவனே அர்ச்சாரூபதரன்; அவன் பக்தர்களுடைய மநஸ்ஸிலே பாவித்தபடியே ப்ரகாஶிக்கின்றான் என்பது திண்ணம்.

இந்தத் திருவாய்மொழியினுடைய தாத்பர்யத்தை, '[illegible] ஸத்யம் [illegible]' என்கிறபடியே, ஸ்ரீவேதாந்த தேசிகன் ஸங்க்ரஹித்தருளினார். 'செய்யதாமரைக் கண்ணனாய்' என்கிறபடியே, அப்போதலர்ந்த செந்தாமரை யொத்த திருக்கண்களையுடையவனாய், 'பாவநாசனை' என்கிறபடியே தர்ஶநமாத்ரத்தாலே பாபங்களையெல்லாம் போக்கவல்லனாய், 'மணிவண்ணனை' என்கிறபடியே நிகரற்ற நீலமணிபொத்த காந்தியுடையவனாய், 'வானவர் தம்மையாளுமவன்' என்றபடி ஸர்வதேவதைகளாலும் சிந்திக்கப்படுகிற திருவடிகளையுடையவனாய் 'சுரியும் பல்கருங் குஞ்சியெங்கள் சுடர்முடி யண்ணல்' என்றபடி அழகிய திருக்குழலின் ஶோபையோடே சேர்ந்த திருவபிஷேகத்தையுடையவனாய், 'சீற்றத்தோ டருள்பெற்று அவனடிக்கீழ்ப் புகநின்ற செங்கண்மால்' எனச்சொன்னபடி, ஹிரண்யன் பக்கல் சீற்றம் செய்யாநிற்கப் பக்தனான ப்ரஹ்லாதன் வந்து கிட்டலாம்படியான திருவடிகளையுடையவனாய், 'விழுமிய அமரர்



முனிவர் விழுங்கும் கன்னற்கனியினை' என்கிறபடி நித்யஸூரிகளாலும் முனிவராலும் கன்னல்போலும் கனிபோலும் அநுபவிக்கத்தக்கவனாய், 'நமன்தமர்க்கரு நஞ்சினை' என்கிறபடி யமபடர்கள் கிட்டவஞ்சும்படி அவர்களுக்கு நஞ்சுமாய், 'நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும்' எனும்படி ஆஶ்ரிதர்கள் பாவித்தபடியே விக்ரஹ விஶிஷ்டமாகுமவனாய், 'கடல்வண்ணன்' என்கிறபடி நித்யஸூரிபோக்யனாய்த் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளியும், துர்யோதநாதிகள் ஸேனையோடு நசிக்கும்படி அர்ஜுநரதத்தை நடத்தியும், இவ்வண்ணம் நீசோச்சங்களான யதேஷ்ட வ்யாபாரமுடைய திருமேனியனாய், அர்ச்சாவதார ஸுலபனான எம்பெருமானை ஆழ்வார் தெளிய வருளிச்செய்தார். பகவத்ப்ரேமை யென்பதற்கு அந்யத்ர காணவரிதாய்நின்ற ஓரவதாரத்தை யோசிக்கப்புக்கால் குருகைநாதனுக்கு ஸமமாக ஒருவ்யக்தியைச் சிந்திப்பது அரிது. அத்தகைய மஹாத்மாவினுடைய அபிப்ராயத்தை நிராகரிக்க எத்தகைய பண்டிதனும் கூசவேண்டும். பகவான் ஆஶ்ரிதர்க்கு ஸுலபன் ஆதலாலும், 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்' என்று நிர்தேஶிக்கப்பட்டதான அவனுடைய திவ்யாத்மஸ்வரூபம் அவனடியார்க்கு அநுபவயோக்யம் ஆகமாட்டாதபடியாலும், அவர்கள் உகந்தபடியே அவன் திவ்யமங்கள விக்ரஹஸ்வரூபத்தை ஸ்வீகரிக்க யாதொரு குறையுமில்லை. முதலாழ்வாரும், 'தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம்தானே, தமருகந்த தெப்பேர்மற்றப்பேர், தமருகந்த, தெவ்வண்ணம் சிந்தித்தமை யாதிருப்பரேல், அவ்வண்ணமாழியானும்' என்றருளிச்செய்தார். ரூபம், ஆகாரம், நாமம், அஸ்த்ரபூஷணங்கள், குறிப்பிட்ட வாஸஸ்தானம் முதலானவற்றுள் ஒன்றுமில்லாத ஸர்வேஶ்வரன், தன்னடியார் உகந்தபடியே ரூபமும் ஶரீரமும் ஸ்வீகரிக்கின்றான். அவர்தனக்கிட்ட பெயரைத் தரிக்கின்றான்; அவர் வேண்டியவிடத்தில் அவர் நினைத்தவண்ணம் அஸ்த்ரபூஷணாதிகளால் அலங்கரிக்கப்பட்டு ஸேவை தருகின்றான். ஆஶ்ரிதரிட்ட வழக்காம்படி அத்யந்த ஸுலபனாயிருக்கு மெம்பெருமானுடைய அர்ச்சாவதார வைபவத்தை நம்மாழ்வார் மேற்குறித்த திருவாய்மொழியில் அருளிச்செய்தார்.

த்வயாதிகாரத்தில் ஸ்ரீதேசிகன் அர்ச்சாவதார வைபவத்தை மறுபடியும் யோசித்தார். எங்ஙனென்றால், த்வயத்தில் 'சரணௌ' (திருவடிகள்) என்கிற ஶப்தம் நிதயமான திவ்யமங்கள விக்ரஹத்

துக்கு உபலக்ஷணமாய் நின்றது. முமுக்ஷுவுக்கு ப்ரதாநமாக அறியவேண்டியவை பகவானுடைய ஸர்வஸ்மாத் (யாவரிலும்) பரத்வமும், அவன் நித்ய விக்ரஹயுக்தன் எனும் உண்மையும் என்று ஸாதித்தருளி, அதற்கு ப்ரமாணமாக, 'நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர । யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத்' எனும் ஶ்லோகத்தை உதாஹரித்தார். நித்ய ஸித்தமான ஆகாரமென்பதால், பகவான் முக்தர்களுக்கு ஸ்வ கைங்கர்யாநுபவத்தைக் கொடுத்தருளும்படி, நித்யமாக ஏற்பட்ட திவ்யமங்கள விக்ரஹ விஶிஷ்டனாய் எழுந்தருளியிருக்கின்றான் என்பது கருத்து. 'பரத்வம்' என்றால், 'தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்' என்றும், 'தம் தேவதாநாம் பரமம் ச தைவதம்' என்றும், ஶ்ருதி சொன்னபடி, ஈஶ்வரரென்றும், தேவதைகளென்றும், வ்யவஹரிக்கப்படுபவர்க்கெல்லாம் பகவான் பரன் என்று கருத்து. 'பஶூநாஸ்வாம் நாபராஸ்திகிஞ்சித், திவி திஷ்டத்யேக:' என்கிற ஶ்ருதி வாக்யங்களும், பகவானுடைய ஸர்வஸ்மாத்பரத்வத்தையும், அவனுடைய நித்யவிக்ரஹயோகத்தையும் ஸ்திரப்படுத்துவதாக யோசிக்கப்பொருந்தும்.

த்வயத்தில், 'நாராயண' என்கிற இடத்தில் ஸௌலப்ய விஶிஷ்டமான பரத்வமும், 'சரணௌ' எனும் ஶப்தத்தில் நித்யவிக்ரஹ யோகமும் முமுக்ஷுக்களால் அநுஸந்தேயமெனக் காட்டப்பட்டது. 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்கிறபடியே, ஶ்ருதி நிர்திஷ்டமான திவ்யாத்ம ஸ்வரூபத்திலும், நாராயணஶப்த விவரணத்தால் ஏற்பட்ட வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்ய ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ ஸத்யஸங்கல்பத்வ பரமகாருணிகத்வ க்ருதஜ்ஞத்வ ஸ்திரத்வ பரிபூர்ணத்வ பரமோதாரத்வாதி கல்யாணகுணங்களிலும் தெளிவில்லாதார்க்குத் திவ்யமங்கள விக்ரஹமே இலக்காம் என்று காட்டப்பட்டது. திவ்யமங்களவிக்ரஹம் அப்ராக்ருதமான ஶுத்தஸத்வமயம். தத்விஶிஷ்டனான ஶரண்யனுடைய ஸ்வரூபகுண விஷயங்களில் ஸமுதாய ஜ்ஞாநமும், அவனடியார்க்கு ஜ்ஞாநஸங்கோச நிவர்த்தகமாம். ஶரணாகதனுக்கு அபீஷ்டப்ரதாநாதிகளால், அப்படிப்பட்ட ஸர்வேஶ்வ



ரனுடைய பரத்வம் ப்ரகாசிக்கின்றது. அவ்வண்ணம் அவன் நம்முடைய கண்களுக்கு இலக்காவதால் அவனுடைய ஸௌலப்யம் காட்டப்படுகின்றது.

திவ்யாத்ம ஸ்வரூபத்தில் தெளிவையுடையர்களாய் இருக்கையிலும், ஆழ்வார்களும் நம் பூர்வாசார்யர்களும் தம் மநோகோசரமாகநின்ற திவ்யமங்கள விக்ரஹ ஶரீரியான எம்பெருமானுடைய அநுபவத்தையே தமது உஜ்ஜீவந நிமித்தமாகக் கருதினர்கள். அத்தகைய அநுபவத்தில் ஊற்றத்தாலே திருமங்கை யாழ்வார் தம்மை ஈஶ்வரவிஷயத்தில் தேஹாத்மவாதிகளாய் ஒப்புக்கொண்டதாகத் தேசிகன் ஸாதித்தருளினர். ஸ்வபக்தர்க்கு ப்ரியமான திருமேனி விஷயத்தில் ஈஶ்வரனும் பக்ஷபாதத்தை வஹிக்கின்றானெனப்பட்டது. 'இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:' என்கிற வசநத்துக்கு அத்யத்புதமாய், 'மூர்த்தம் ப்ரஹ்ம' எனப்படும் திவ்யவிக்ரஹமானது, 'ஸத்யம் ஜ்ஞாநமநந்த'மென வர்ணிக்கப்பட்ட திவ்யாத்ம ஸ்வரூபத்திற்காட்டிலும் பகவானுக்கு அத்யந்தம் ப்ரியமாகின்றதென்று கருத்து.

"பாபம் ஹரதி யத் பும்ஸாம் ஸ்ம்ருதம் ஸங்கல்பநாமயம் । தத்புண்டரீகநயநம் விஷ்ணோர்த்ருஶ்யா ந்ருஹம் ததம் ॥ ஶ்ரீவத்ஸ வக்ஷஸோ ஸாக்ஷாத் ஹ்ருஷீகேஶ ஹாரிணம்" இந்த ஶ்லோகங்களுடைய தாத்பர்யத்தை விவரிக்கின்றோம். பகவான் அவதார ஶரீரங்களைக் கேவலம் தன்னுடைய இச்சையால் க்ரஹிக்கின்றான். அப்படிப்பட்ட செந்தாமரைக் கண்ணனுடைய ரூபஸ்மரணமானது மநுஷ்யர்களுடைய ஸர்வபாபங்களையும் போக்கடிக்கின்றது. ஆகையால் அவனுடைய அவதரண காலங்களில் இருந்தவர்கள், 'பஶ்யந்தி பாலகம் தே' என்று பூர்வமே சொன்ன க்ரமத்தில் அவன் திருமுகத்தினுடைய தர்ஶநத்தில் குதூஹலித்தார்கள். அவனுடைய அழியா அழகுடன்கூடிய ரூபம் பார்ப்பவர் கண்களை அபஹரிக்க, அவனுடைய அசிந்த்ய கல்யாணகுணங்கள் அவர்களுடைய சித்தங்களைக் கவர்ந்தனவென்றால், இந்த லோகவாஸிகளுக்கு அவனுடைய ரூபதர்ஶந ஸ்மரணத்தைப் பார்க்கிலும்

பாக்யமொன்றில்லை யென ஸித்திக்கின்றது. இந்த ரீதியில் அவனுடைய திவ்யமங்கள விக்ரஹங்களில், அவனடியார்கள் உகந்த காரணத்தால், பரமகாருணிகனான ஈஸ்வரனுடைய உகப்பைப் பற்றி ஸங்கிப்பார் உளரேல் அவரே மந்தபாக்யர்.

இவ்வண்ணம் ரூபகுணாதிகளால் அலங்க்ருதமான பகவானுடைய திவ்யவிக்ரஹமே, 'ஸுபாஸ்ரயஸ்ஸ சித்தஸ்ய' என்கிறபடியே, சிந்திப்பவர் மநஸ்ஸுக்கு ஸுபமான ஆஸ்ரயமாக நிற்கின்றது. யோகிகளுக்கு த்யாநகாலத்தில் லக்ஷ்யமாகின்ற ரூபம், முமுக்ஷுக்களான நம் போன்றவர்க்குத் திவ்ய விக்ரஹரூபமாய் சித்தாஸ்ரயமாகின்றது. தர்ஸநத்தாலும் ஸ்மரணத்தாலும் பாபஹரமாகின்றபடியால், அது ஸுபமான ஆஸ்ரயமெனப்பட்டது. நிஷ்பாத்ம ஸ்வரூபத்துக்கு ஸுபத்வம் உண்டேயாகிலும் ரூபமில்லாதபடியால் ஆஸ்ரயத்வமில்லை. இவ்வர்த்தங்களை, 'ஸாவ ஸுவஸாஹ்யம் ஶுபபோய வூஸாவகம் । ஸ்ரீவாஜ ஸ்வாநி நோ ஶுபம் உவாஶெய தசேவிஷா ॥' என்று தேசிகன் ஸங்க்ரஹித்தார். பகவானுடைய திவ்யவிக்ரஹ ரூபமானது, பரர்களான ப்ரஹ்மாதிகளாலும், அவரர்களான மநுஷ்யர்களாலும் ஸுகமாகக் கண்களால் தர்ஸிக்கக்கூடியது; தர்ஸந ஜநிதமான பக்திவிஸேஷத்தால் பகவத்விஷய ஜ்ஞாநத்தை உண்டுபண்ணத் தக்கது; இப்படி ஆஸ்ரயிக்கக்கூடினதாய் ஸுபமாயிருக்கின்ற திவ்ய விக்ரஹரூபமானது ஸ்வாமியினுடைய நிஷ்பாத்ம ஸ்வரூபத்தைக்காட்டிலும் உபாதேயதமம் என்று பெரியோர் அறிந்தார்கள் என்று தாத்பர்யம். சரமஸ்லோகத்திலும், 'மாமேகம் ஶரணம் வ்ரஜ' என்று விக்ரஹவிஸிஷ்டன் இலக்காய்த் தோற்றினான்.

பக்தி யோகாதிகள்போல் துஷ்கரமான மோக்ஷோபாயங்களில் அந்வயிக்க அஸக்தர்களாயும், ஸக்தியுண்டேயாகிலும், அவ்வுபாயாநுஷ்டாநத்தால் நேரிடும் விளம்பத்தை ஸஹியாதவர்களாயுமிருக்கப்பட்ட முமுக்ஷுக்களுக்குத் திவ்யமங்கள விக்ரஹமே உபயுக்தமான ஸுபத்வமும் ஆஸ்ரயத்வமும் உள்ளது. 'ரூபேண வாஸி நிகிலாம் விஶேஷேண உவஜீவ்யதா:' என்கிறபடியே, ரூபாதி ஸூக்ஷ்மமான பகவத் ஸ்வரூபம் அவர்களுடைய சித்தத்துக்கு ஆஸ்ரயமாகமாட்டாது. நம் போலியர்கருப் பகவானைப்



பூஜித்த லென்றால், அப்பூஜையில் த்ரிகரணங்களும் ஸமகாலத்தில் அந்வயிப்பது ஆவஸ்யகம். அந்தப் பூஜையானது, 'ஶ்ரவணம் கீர்த்தநம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவநம் । அர்ச்சநம் வந்தநம் தாஸ்யம் ஸக்யமாத்மநிவேதநம் ॥' என்று ஒன்பது ப்ரகாரமாக விவரிக்கப்பட்டது. ஸ்ரவணமென்றால் பகவானுடைய ஸ்வரூபகுண விபூதிகளையும், அவனுடைய அவதார சேஷ்டிதங்களையும் பற்றிக் கேட்டல்; ஸ்மரணமென்றால், அவற்றைப்பற்றி நினைத்தல்; கீர்த்தநமென்றால் அவனுடைய நாமஸங்கீர்த்தநம்; பாதஸேவநம் அவன் திருவடிகளை ஆஸ்ரயித்தது; அர்ச்சநமும் வந்தநமும் அர்ச்சையெனப்பட்ட அவனுடைய திவ்யமங்களவிக்ரஹ மின்றி நடவா; அவனுடைய பர வ்யூஹ விபவ அந்தர்யாமி ரூபங்கள் நம்முடைய இந்த்ரியங்களுக்கும் சித்தத்துக்கும் ஸாக்ஷாத்தாக எட்டாமையால் பாதஸேவநாதிகள் திவ்ய விக்ரஹங்களை அபேக்ஷிக்கின்றன; தாஸ்யம் என்றால் ஸ்வாமிக்குத் தாஸன் பண்ணக்கூடிய ஸர்வவித கைங்கர்யங்கள்; ஸக்யம் எனில் ஸகாவினிடம்போல் பகவானிடம் விஸ்வாஸம். ஆத்மநிவேதநம் என்றால் ஸரீரத்தையும் ஸரீர ஸம்பந்திகளையும் பகவானுக்கே என்று ஸமர்ப்பித்தல்; அல்லது தன்னுடைய ஸேஷத்வாநுஸந்தாந பூர்வமாகத் தனது ஆத்மாவை அவனிடம் ஸமர்ப்பித்தல். இந்த விதமாகப் பகவானிடம் தனக்குள்ள பக்தியை ஆவிஷ்கரித்து, அந்த க்ரியைகளை அவற்றின் பலன்களுடன் பகவானிடம் ஸமர்ப்பித்தலை ஸாஸ்த்ரம் வேண்டுகின்றது. இன்னும் 'நமஸ்ஸ்துதிகர்மார்ப்பணாநி கர்மஸு ஶுஶ்ரூஷணபாத ஶ்ரவணம் ஜபாயா:' என்கிறபடியே, பகவானை வணங்கியும், ஸ்துதித்தும், நிஜகர்மங்களை அர்ப்பணம் செய்தும், பரிசர்யை முதலான கைங்கர்யங்கள் பண்ணியும், திருவடிகளை ஸ்மரித்தும், பகவத்கதைகளைக் கேட்டும், இவ்விதமாக ஆறு அங்கங்களுடன்கூடிய ஸம்யக் ஸேவையின்றி மோக்ஷத்துக்கு உபாயமாய் நின்ற பகவத்பக்தி ஜநங்கட்கு ஆவிர்பவிக்க மாட்டாதென்றும் சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட ஸேவையானது திவ்யமங்கள விக்ரஹமின்றி அமையமாட்டாது.

வாயினால் மாத்ரம் ஈஸ்வரன் உளன் என்று சொன்னாலும், அவனை இன்னானென்றும், அவன் இத்தகையன் என்றுசொல்லவும்

நினைக்கவும் ஒண்ணாது. 'ஶக்யதே தவத்ராணம் ப்ரஷ்டாவஸ்த்தீ கேவல:' என்கிறபடி அவன் இருக்கின்றானென மாத்ரம் சொல்லவொண்ணும். மதாந்தரஸ்தர் பகவானை வேண்டுகின்றதாக ஒரு தொழில் செய்வதுண்டு. வேண்டுதற்கு முன்பாக வேண்டப்பட்ட வஸ்து ப்ரதீதி வேண்டும். ஸூக்ஷ்மன் என்றும், அநந்தன் என்றும், ஸர்வ ஶக்தன் ஸர்வஜ்ஞன் என்றும் சொல்பவர்கள் அல்பஜ்ஞர்களாய் அல்பசக்தியுடன் கூடினவர்கள், எல்லையுள்ள ஸ்தூல பதார்த்த க்ராஹிகளாய் விதியின்றி நிற்கின்றார்கள்; ஆகையால் அவர்கள் ஆநந்த்யம் ஸர்வஜ்ஞத்வம், ஸர்வஶக்தித்வம், ஸூக்ஷ்மத்வம் முதலான குணங்களைத் தாமறிந்த குணங்களுக்கு ப்ரதியோகிகளாய் மட்டும் யோசிக்க வல்லவர்கள். மேலும் அக்குணங்களுக்கும், இன்னும் அசிந்த்யங்களான அநந்த கல்யாண குணங்களுக்கும் ஆஶ்ரயமாய் நின்று, நம்முடைய வாங்மநஸ்ஸுக்களுக்கு விஷயமாகாதவனை இந்த்ரியங்கட்கோ மநஸ்ஸுக்கோ லக்ஷ்யமாக்கி ப்ரார்த்திப்பதென்பது எம்மட்டிலும் கூடமாட்டாது.

மேலும் பகவானை ப்ரார்த்திப்ப தென்பது என்ன? இன்றைக்கு எமக்கு ஆகாரம் தரவேண்டு மென்று ஸர்வேஶ்வரனை வேண்டுதல் ஹேய ப்ரவ்ருத்தி. நம்முடைய மதம் 'தத்வாதி ஜ்ஞாநம் ஹரிபக்திஶ்ச ஸதா வந்த்ய | ந யாசேத் அந்யத்ஸர்வம் விஷம் |' என்று முமுக்ஷுக்களுக்கு உபதேசிக்கின்றது. அதாவது – பகவானைப்பற்றிய ஜ்ஞானம், அவன் திருவடிகளில் பக்தி, இவற்றைமட்டும் அவனிடம் வேண்டலாம்; இதர க்ஷுத்ரபலங்களை வேண்டுதல் கூடாது. க்ஷுத்ர பலன்களை வேண்டுபவர்களும், துக்க நிவ்ருத்தியைத் தேடுகின்றவர்களும் தேவதாந்தரங்களைத் தவிர்த்து, அவற்றின் நிமித்தமாக ஸர்வேஶ்வரனைப் பஜித்தார்களாகில், அவர்களையும் ஸுக்ருதிகளென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால், அல்பாஸ்திரங்களான ப்ரயோஜநங்களையிட்டுப் பரமாத்மாவைப் பஜிப்பவர்கள், காலக்ரமத்தில் அவற்றின் ஸ்வரூபத்தை அறிந்துகொண்டு ஶாஶ்வதமான பகவதநுபவத்தைப் பெற முயல்வார்கள். 'ஸம்ஸாரநாஶகம் ஸம்ஸாரஸ்ய விஶாரத:', அதாவது ஸம்ஸாரத்தைப் போக்குபவனிடம் ஸம்ஸாரத்தை யாசித்தேனென்று த்ருவனுக்கு அநுதாபம் உண்டாயது. ஸுதாமாவுக்கு ஸ்ரீ க்ருஷ்ணனிடம் சென்றும் தநம் கிடைத்ததில்லை. 'அதநோऽயம் தநம்



ப்ராப்ய மாத்யந்நுச்சைர்ந மாம் ஸ்மரேத் | இதி காருணிகோ நூநம் தநம் மேऽபூரி நாததாத் ||' அதாவது 'இவன் தரித்ரன். பொருள் கிடைத்தால் என்னை நன்றாக ஸ்மரிக்கமாட்டான்' என்று மஹாகருணையுடன் கூடின பகவான் எனக்குச் சிறிதும் தநம் தந்தாரில்லை என்று ஸுதாமா எண்ணினர். தான் அபேக்ஷிக்காதிருக்கப் பத்நியினால் ஏவப்பட்டு வித்தார்த்தியாய் ஸுதாமா த்வாரகைக்குச் சென்றார். ஸர்வேஶ்வரனும், முதலில் அபேக்ஷித்தவனுக்கு ஸம்பத்தைக் கொடுத்து, ஸுதாமாவுக்கு ஸ்வாநுபவமட்டும் தந்து வெறுங்கையுடன் அனுப்பிவிட்டார். ஸுதாமாவும் ஸ்வக்ராமத்தைக் கிட்டி தமக்கு சேர்ந்த ஸம்பத்தைக் கண்டு ஸந்தோஷித்திலர். ஸ்வபக்தர்களின் பொருட்டுப் பகவான் ஸம்பத்து ராஜ்யம், களத்ரபுத்ராதி ஸுகம் முதலியவைகளைக் கொடுக்கமாட்டான் என்று அவர் கண்டுகொண்டு, பத்நியின் சொல்லைக்கேட்டு ஸம்பத்தை மநஸ்ஸால் ப்ரார்த்தித்த தன்னை அதீர்க்க போதன் என்றும், அவிவேகி யென்றும் அத்யவஸித்தார். கிடைத்த பொருள்களை 'த்யக்தேந புஞ்ஜீதா:' என்கிறபடியே த்யாகத்தால் அநுபவித்தார் என்று சொல்லப்பட்டது. ப்ரஹ்லாதனும் விஷயகாமங்கள் தனது மநத்தின்கண் உதிக்காமலிருக்கவும், அவிவேகிகளுக்கு விஷயங்களிடம் உண்டாகும் ப்ரீதியானது தனக்குப் பகவானுடைய நிரந்தர ஸ்மரணத்தால் பகவானிடம் மட்டுமே நிலைத்திருக்கவும் ப்ரார்த்தித்தான். 'நாதநம்விரஷு நதயஃ தவஶாய பாதே பெகவா ஹவாவ்ய விமோக்ஷண த்ருஷ்டஹேதா: | ஸர்வம் தி கஷுகதாம்' என்கிறபடியே, பகவான் ஸர்வ புருஷார்த்த ப்ரதனாயிருந்தாலும், ஜந்ம மரணாதி துக்க மிஶ்ரமான ஸம்ஸார மோக்ஷஹேதுவாய் நிற்கின்ற அவனை விஷய காமங்களின் பொருட்டுப் பஜிக்கின்றவர்கள், அவனுடைய மாயா ஸம்பந்தத்தால் வஞ்சிதசித்தர்களென்று நிஶ்சயிக்கவேண்டும் என த்ருவஸ்தோத்ரத்தில் சொல்லப்பட்டது. ஆதலால் ஸர்வப்ரகாரமாயும் உத்க்ருஷ்டமான நமது ஸம்ப்ரதாய நிஷ்டர்கள், பகவானுடைய திவ்ய சரணாரவிந்த ஸ்மரணம் எப்போதும் தங்களுக்குண்டாயிருக்கும் பக்ஷத்தில், தாங்கள் பூமியில் இருந்தாலும், ஸ்வர்க்கவாஸம் பண்ணினாலும், நரகத்தில் அடைபட்டாலும், தங்கட்கு வாசியில்லை என்று அத்யவஸித்தார்கள். ஸர்வேஶ்வரனை ப்ரியமிம் ப்ராயங்களில் ஸர்வ ஸுலபமாயிருக்கின்றதும், பகவச்சரணாரவிந்தங்களில் தீவ்ரமான பக்தியை உண்டு பண்ணுவதுமான ஆர்ச்சாவதார ஸேவையைத் தீர்க்க யோசனையின்றித் தூஷிக்கின்றவர்களுடைய மந்தமதியைப்பற்றி ஶோகித்து இவ்வளவுதூரம் எழுதினோம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# இயற்பா.

—∘∘✻∘∘—

பொய்கையாழ்வார் அருளிச்செய்த

# முதல் திருவந்தாதி.

## தனியன்.

நூலுக்குப் புறம்பே தனியே நிற்பதுபற்றி, புறவுரையைத் தனியனென்று வழங்குவது ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயம். "தன்னாசிரியன் தன்னொடு கற்றோன், தன்மாணாக்கன் தகுமுரை காரனென்று, இன்னோர் பாயிர மியம்புதல் கடனே" என்ற நூல்வழக்குப்பற்றி, இக்கால்வரில் ஒருவரல்லவோ சிறப்புப்பாயிரங் கூறவேண்டும்; இங்கு அவ்வாறு யாவராற் கூறப்பட்டதென்னில்?—தமது சிஷ்யர்களுக்கு இந்நூலை ப்ரவசனஞ் செய்த ஸ்ரீ முதலியாண்டான் என்பவர் இதனை அருளிச்செய்தாரென்பது கர்ணபரம்பரையாய்த் தெரிதலால், உரைகாரர் செய்த சிறப்புப்பாயிரத்தின் பாற்படுமென்க.

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு—வையத்து
அடியவர்கள் வாழ வருந்தமி ழந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து.

(இதன் பொருள்.) கைதை - தாழை, சேர் - மிகுதியாகப் பொருந்தியுள்ள, பூம்பொழில் - அழகிய சோலைகள், சூழ் - சூழப்பெற்ற, கச்சிநகர் - காஞ்சிபுரத்திலே, வந்து உதித்த - வந்து பிறந்த, கவிஞர் போர் ஏறு - கவிகளுக்குள்ளே சிறந்தவரான, பொய்கைபிரான் - பொய்கை யாழ்வார், வையத்து - இந்தப் பூமியிலே, அடியவர்கள் - (திருமாலினிடத்து) அடிமை பூண்ட ஸ்ரீவைஷ்ணவர்கள், வாழ - வாழ்ச்சி பெறும்படி, அருந்தமிழ் - (பொருளுணர்தற்கு) அரியதமிழினாலியன்ற, அந்தாதி - அந்தாதித்தொடையோடுகூடிய பிரபந்தத்தை, படிவிளங்க - இப்பூமியில் (இருள்நீங்கி) ஞானவொளி பிரகாசிக்கும்படி, பரிந்து - அன்புகொண்டு, செய்தான் - அருளிச்செய்தார்; (என்றவாறு)

இதனால், காஞ்சீபுரியில் ஒரு பொய்கையில் தாமரைப்பூவிலே திருவோண நட்சத்திரத்திலே திருவவதரித்த இவ்வாழ்வார் தமது திவ்யபிர



பந்தமாகிற தீபத்தினால் இவ்வுலகத்தில் மன்னிய பேரிருளைமாய்த்து வாழ்வித்தபடியை அபியுக்தர் அருளிச்செய்கின்றாரென்க. விஷ்ணுவின் முதாவதாரங்கள்போலே ப்ரக்ருதிதோஷம் தம்மிடத்துத் தட்டாதவாறு தோன்றியவரென்பார் 'உதித்த பொய்கைப்பிரான்' என்றார். பொய்கையில் திருவவதரித்ததனால், இவர்க்குப் பொய்கையாழ்வாரென்று திருநாமம். இனி, மருகாந்தாரத்திற் பொய்கைபோலே இவ்வுலகத்தார்க்கு உபகாரகராயிருக்கையாலே, 'பொய்கைப்பிரான்' என்று அருளிச்செய்தாருமாம். 'செஞ்சொற்கவிகாள்', 'செந்தமிழ்பாடுவார்' என்று வேறு ஆழ்வார்களும் கொண்டாடுகின்ற முதலாழ்வார்களில் முதல்வராயிருக்கையாலே, இவரை 'கவிஞர்போரேறு' என்றது. 'அருந்தமிழ் நூற்றந்தாதி' என்ற பாடம் வெண்டளைக்குப் பொருந்தாதாகையால் உபேக்ஷிக்கத்தக்கது. 'வையந்தகளியா' என்று தொடங்கி 'ஓரடியுஞ்சாடுதைத்த' என்பது இறுதியாகவுள்ள திவ்ய பிரபந்த தீபத்தாலே பூமி முழுவதும் ப்ரகாசமாகும்படி செய்தாரென்பது, 'படிவிளங்கச்செய்தான்' என்பதன் பொருள்; 'வருத்தும் புறவிருள் மாற்ற எம்பொய்கைப்பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையுங்கூட்டி, ஒன்றத்திரித்தன்றெரித்த திருவிளக்கு' என்றார் அமுதனாரும். படி - பூமியிலே, விளங்க - விளங்கும்படி எனினுமாம். அன்றி, படி உபமானமெனக்கொண்டு, திராவிட பிரபந்தத்துக்கெல்லாம் உபமானமாக விளங்கும்படி இதனை யருளிச்செய்தாரென்றும், படி திருமேனி எனக்கொண்டு, 'திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்' என்று பேயாழ்வார் அநுஸந்திக்குமாறு எம்பெருமானது திருமேனி விளங்கும்படி விளக்கேற்றிய பாமாலையை அருளிச்செய்தாரென்றும் கூறினுமாம். பரிவு - எம்பெருமான் விஷயமான ஸ்நேஹம். 'பொய்கைப்பிரான்' என்றதனால் நூலாசிரியர் பெயரும், அதன்மூலமாக வக்தாவின் வைலக்ஷண்யமும், 'வையத்தடியவர்கள் வாழ' என்பதனால் இந்நூலைக் கற்றற்கு உரிய அதிகாரிகளும், அவர்கள் பெறும்பயனும், 'சுடராழியா னடிக்கே சூட்டினேன்' என்பதனால் இந்நூலிற் கூறப்படும் பொருளும், 'படிவிளங்க' என்பதனால் இந்நூலின்றேற்றமும், 'பரிந்து' என்பதனால், இந்நூலை இவ்வாழ்வார் அருளிச்செய்யக் காரணம் கேவலம் பகவத் பக்தியே யென்பதும் முதலியன இந்தத் தனியனில் ஸ்பஷ்டமாக அருளிச்செய்யப்பட்டிருத்தல் காண்க.

கைதை - கேதகம் என்பதன் திரிபு. கச்சி - காஞ்சீ: பிரமனால் திருமால் பூஜிக்கப்பட்ட தலம் என்று காரணப்பொருள்படும்.

## நூல்.

1. வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று,

(இதன் பொருள்) வையம்-பூமியானது, தகளி ஆக - (செய்க்கும் திரிக்கும் ஆதாரமாயிருக்கிற) அகலாகவும், வார் கடலே - (அந்தப் பூமியைச்) சூழ்ந்துள்ள சமுத்திரமே, நெய் ஆக-நெய்யாகவும், வெய்ய கதிரோன்- (அந்தச் சமுத்திரஜலத்தைத் தனது கிரணத்தாலே இழுக்கும்படி) வெப்பமுள்ள (ஆயிரங்) கிரணங்களையுடைய சூரியன், விளக்கு ஆக - விளக்காகவும், செய்ய சுடர் ஆழியான்-சிவந்த ஒளியையுடைய (சுதரிசனமென்னுஞ்) சக்கராயுதத்தையேந்திய திருமாலினது, அடிக்கே - திருவடிகளில், 'இடர் ஆழி நீங்குக' என்று - '(அவ்வெம்பெருமானுக்கு எப்போதும் அடிமை செய்யாமையாலனை) அன்பக்கடல் நீங்கவேணும்' என்று, சொல் மாலை - (அந்த எம்பெருமானது திவ்விய குணங்களையும் சேஷ்டிதங்களையும் தம்முள்ளே கொண்ட) சொற்றொடர்களினாலாகிய பாமாலையை, சூட்டினேன் - சமர்ப்பித்தேன்; (எ-று.)

சர அசரரூபமான இத்தஉலகமுழுவதையும் ஸ்ருஷ்டித்து நடத்திக்கொண்டு போகின்ற விசித்ர ஶக்தியையுடைய ஸர்வேஶ்வரனொருவன் உண்டு என்பதை, ஒரு சிறிதும் தவறாமல் உதிப்பதும் அஸ்தமிப்பதுமாகவுள்ள சூரியன் நன்கு நமக்கு விளக்குகின்றான்; அவ்வாறு அந்தச் சூரியன் பரமேஶ்வரனது உண்மையை விளக்கிக்காட்டுவதைக் கடலும் வையகமும் உறுதிப்படுத்துகின்றன; இப்படி உறுதியாக விசுவசிக்கும்படி ஒரு நாதன் ஏற்படும்போது அவனுக்கு அடிமை செய்யவேண்டுவது அவசியம்; அவனை இது வரையில் யான் பாடாதிருந்ததனால் தோன்றிய எனது துயரம் நீங்கும்படி அவ்வெம்பெருமானது திருவடிகளில் மெல்லிய சொற்றொடை கொண்டு தொடுத்த பாமாலையை இப்போது சூட்டலாயினேனென்பதாம். இனி, பிறவித்துயரத்தால் வருந்திய உலகத்தாரும், யான் சூட்டும் பாமாலையைக் கற்று உய்யுமாறு, யான் எம்பெருமானது திருவடிகளில் பாமாலை சூட்டினேனென்று கூறலுமாம். சூரியன் ஒரு கணமும் தவறாமல் உதிப்பதும் அஸ்தமிப்பதுமா யிருக்கையாலும், சமுத்திரம் தன்னிடத்துப் பல நதிப்பெருக்குகளும் வந்து விழுகின்றது பற்றி நிறைந்துவழிதலும அங்ஙனம் ஆற்றுவெள்ளங்கள் மிகுதிபாகத் தன்னிடத்து வந்து விழாதகாலத்துத் தான் வற்றிக்குறைவு மில்லாது எப்போதும் தனது எல்லையினின்று மீறாது அடங்கியிருத்தலாலும், பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணையாய்க் கடினையாய் ஸாவயவமாயிருக்கையாலே கார்யமான இந்தப் பூமி பெரிய வெள்ளத்தில் ஒரு சுரைக்காய் மிதப்பதுபோல மஹார்ணவ ஜலத்தில் மிதக்கையாலும், விசித்ர தன்மையமைந்த இவற்றைப் படைத்த விசித்ரஶக்தியையுடைய கர்த்தா ஒருவன் உண்டென்று வேதங்கள் முறையிடுவது நமக்குத் தெற்றெனப் புலப்படு மென்பது, முன்னிரண்டு அடிகளின் கருத்து. உத்தர மீமாம்ஸையில் 'ஶாஸ்த்ரயோநித்வாத்' என்று தொடங்கும் அதிகரணத்தில், அநுமானத்தால் எம்பெருமான் உளனென்பதை ஸ்தாபிப்பதை நிரஸித்து வேதப்ரமாணத்தால்தான் அவ்வெம்பெருமானது உண்மையை உணரவேணு



மென்று நிலைநிறுத்தியிருக்க, இவ்வாழ்வார் அநுமானத்தால் எம்பெருமானுளனென்பதை உறுதிப்படுத்துவது என்னெனில்? அங்கு வேதத்துக்கு விரோதமாக அநுமானத்தைக் கொண்டு ஸ்தாபிப்பதை ஸ்ரீவேதவ்யாஸபகவான் மறுத்தனரேயன்றி, வேதத்துக்கு மாறுபாடில்லாத அநுமானங்கொள்வதை அவர் மறுக்கவில்லை யென்க. 'ந்யாயாநுக்ருஹீதஸ்ய வாக்யஸ்ய அர்த்தநிஶ்சாயகத்வாத்' [தர்க்கத்துக்கு ஒத்துள்ள வாக்யம்; (உணரவேண்டிய) பொருளை உறுதியாகப் புலப்படுத்துமாதலால்] என்ற ஸ்ரீபாஷ்யமும், 'வேதஶாஸ்த்ராவிரோதிநா । யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர:' [எவன் வேதத்துக்கு மாறுபடாத தர்க்கத்தை மேற்கொண்டு பொருளை யாராய்கின்றானோ, அவன்தான் தருமத்தை உணர்வன்; மற்றையோன் உணரான்], என்ற வசநமும் இங்கு உணரற்பாலன.

வையம் கடினபதார்த்தமாயிருத்தலால் அதனைத் தகளியாகவும், கடல் நீர்வடிவாயிருத்தலால் அதனை நெய்யாகவும், சூரியன் ஒளிவடிவமாயிருத்தலால் அதனை விளக்காகவும் உருவகஞ் செய்தனர். பஞ்சபூதங்களின் காரியங்களான இம்மூன்றும், மற்றை வாயு ஆகாச பதார்த்தங்கட்கும் உபலக்ஷணம். அடியவன் அடையவேண்டிய இடம் திருவடிகளே யாதலால் 'அடிக்கே சூட்டினேன்' என்றார். வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதவனென்று வேதபுருஷனும் பின்வாங்கின எம்பெருமானது திருவடிகளில் என்ற பொருளைக் காட்டுதலால் 'அடிக்கே' என்ற ஏகாரம் சிறப்புப் பொருளைக் காட்டும். திருவடியைச் சொன்னது அவ்வெம்பெருமானது திருமேனிக்கும், வையம் முதலியவற்றைக் கூறியது லீலாவிபூதிக்கும் திருவாழியைக் கூறியது நித்யவிபூதிக்கும் உபலக்ஷணமாகி, இவ்வாழ்வார் தாம் பாமாலை சூட்டுகின்ற முதற்கடவுள், விசித்ர பிரபஞ்சத்தை நிர்மாணஞ் செய்வதற்கு ஏற்ற ஜ்ஞாநசக்தி தொடக்கமான குணகணங்களோடு கூடிய திவ்யமங்கள விக்ரஹமுடையவனென்றும், உபயவிபூதி நாதனென்றும் கூறினாராயிற்று. இப்படித்தமது பக்ஷத்தை கூறவே, 'சூனியமே தத்துவம்' என்றும் 'குணம் இன்றிச்சின்மாத்ரமான வஸ்துவே தத்துவம்' என்றும் இவ்வாறெல்லாம் கூறுகிற பக்ஷங்கள், அநாதரணீயங்களென்பது பெறப்படும். (க)

2. என்று கடல்கடைந்த தெவ்வுலகம் நீரேற்ற
தொன்று மதனை யுணரேன்நான்—அன்ற
தடைத்துடைத்துக் கண்படுத்த வாழியிதுநீ
படைத்திடந் துண்டுமிழ்ந்த பார்.

(இ - ள்.) கடல் - சமுத்திரத்தை, கடைந்தது—, என்று - எந்த நாள்? நீர் ஏற்றது - நீர் வார்த்துத் தத்தஞ் செய்து கொடுக்க அளந்து கொண்டது, எ உலகம் - எந்த உலகத்தைப் பெறுதற்காக? அதனை - அவற்றை,

ஒன்றும் - ஒருசிறிதும், நான் உணரேன் - நான் அறியமாட்டேன்; அது - அந்தச் சமுத்திரமானது, அன்று - அக்காலத்தில் [இராமாவதார காலத்தில்]. (மலைகளைக்கொண்டு), அடைத்து - தூர்த்து (த்திருவணைகட்டி), (இலங்கைக்கு வானரசேனையுடன் போய் இராவணவதஞ் செய்து பிறகு அங்கு நின்று மீள்கையில்), உடைத்து - (அந்தத் திருவணையை) உடைத்து, கண்படுத்த - (எப்போதும்) பள்ளிகொண்டிருக்கின்ற, ஆழி - சமுத்திரமாகும்; இது - (நீரேற்ற) இந்த உலகமானது, நீ - (திருமாலாகிய) நீ, படைத்து - (ஆதிகாலத்தில்) ஸ்ருஷ்டித்தும், இடந்து - (இரணியாக்ஷனால் அவாந்தர பிரளயம் சேரிட்டபோது அந்தப் பிரளய சமுத்திரத்தினின்று) குத்தியெடுத்தும், உண்டு - (பிரளயகாலத்தில்) வயிற்றில் வைத்தும் (போக்கு), உமிழ்ந்த - (பிரளயம் நீங்கினபின்பு வெளியே) உமிழ்ந்த, பார் - பூமியாகும்; (எ - று.)

கீழ்ப் பாசுரத்தில் வையம் முதலிய காரியவர்க்கங்களைக்கொண்டு பரம்பொருளான எம்பெருமானை அநுமானித்த ஆழ்வார் இந்தப் பாசுரத்தில், அப்பரமனை வருந்தி அநுமானத்தினால் உணரவேண்டுமோ? கழனிகளைப் படைத்தவன் அவற்றிற்குத் தக்க க்ருஷிகளைச் செய்வதுபோல, இவ்வுலகத்தின் பொருட்டும் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ப்ராணிகளின் பொருட்டும் அந்த எம்பெருமான் செய்துள்ள அதிமாநுஷசேஷ்டிதங்களில் ஒவ்வொன்றும் அவனுடைய உண்மையை சாதிக்குமென்கிறார். இந்தப் பிரபஞ்சத்தைக் கடல் கடைந்தும் நீரேற்றும் சோக்குகையாலே ஸ்ரீமந்நாராயணனுக்கு அன்றி மற்றையோர்க்கு ஈஸ்வரத்வமில்லை யென்பதும் இங்குப் பெறப்படும். 'என்று?' என்ற வினா, அப்போழ்து தோன்றிய திரையும் நுரையும் மாறாது இன்று நிகழ்ந்தது போலத் தோன்றுகின்றதென்னும் பொருளையும், 'எவ்வுலகம்?' என்ற வினா, அவன் அப்பொழுது வைத்த அடிச்சுவடு மாறாது, "வாமனன் மண்ணிது" என்னுமாறு இங்குத் தோன்றுகின்றதென்னும் பொருளையும் தெரிவிக்கும். கடல் கடைந்ததும் நீரேற்றதும் முன்னமே நிகழ்ந்திருக்கவும் இவ்வாழ்வாரது ஞானக்கண்ணுக்குத் தெற்றெனப் புலப்படுதலால், அச்செயல்களை அப்பொழுதுதான் நிகழ்ந்தனபோல அருளிச்செய்கிறார். கீழ், தாம் அநுமானத்தினாற் சாதித்ததை வெறுப்பார் 'ஒன்றுமதனையுணரேன்' என்கிறார். இனி, அவ்வெம்பெருமானது அதிமாநுஷ சேஷ்டிதங்களை அநுஸந்திததனால், "எத்திறம்!" என்று மோஹித்துக் கிடந்த நம்மாழ்வாரைப் போலே மோஹித்து இவ்வாறு அருளிச்செய்கிறா ரென்னலுமாம். (உ)

3\. பாரளவு மோரடிவைத் தோரடியும் பாருடுத்த
நீரளவும் செல்ல நிமிர்ந்ததே—சூருருவிற்
பேயளவு கண்ட பெருமான்! அறிகிலேன்
நீயளவு கண்ட நெறி.

[இ-ள்] (உனது) ஓர் அடி - ஒப்பற்ற (பேரழகையுடைய) ஒரு திருவடியை, பார் அளவும்-பூமிப்பரப்பு வரையிலும்(சரியாயிருக்கும்படி) வைத்து-



வைக்க, ஓர் அடியும் - (உனது) மற்றொரு திருவடியும், பார் உடுத்த - இந்த அண்ட கடாகத்தைச் சூழ்ந்துகொண்டுள்ள, நீர் அளவும்-ஆவரண ஜலத்தளவும், செல்ல - போம்படி, நிமிர்ந்தது - ஓங்கிற்று; சூர் உருவின்பேய் - (தன் வடிவத்தை மறைத்துத் தெய்வ நங்கை என்னுமாறு தோன்றியவளான யசோதையின் வடிவுகொண்டு வந்த) பேய்மகளான பூதனையை, அளவு கண்ட - முடித்த, பெருமான் - பெருமையையுடையவனே!, நீ அளவு கண்ட - நீ அளந்து செய்த, நெறி - (அந்தச்) செயலையும், அறிகிலேன் - (அளவிட்டுக் காணுதற்கு ஏற்ற) உணர்வுடையேனல்லேன்; (எ - று)

கீழ்ப் பாசுரத்தில் "எவ்வுலகம் நீரேற்றது" என்று திருவுலகளந்தருளின செய்கையை அநுஸந்தித்த ஆழ்வார், இங்கு, அதிலே தமது மனஞ்செல்லப்பெற்று அதனையுகந்து அநுபவிக்கத்தொடங்கி நிலைகொள்ளமாட்டாது கிடக்கிறாரென்க. ஓரடியும் - (இந்தப் பூமியளவாக வைத்த) அந்த ஒரு திருவடியும், பார் உடுத்த நீர் அளவும் - இந்தப் பூமியைச் சூழ்ந்துகொண்டிருந்த ஜலம் வரையிலும், செல்ல நிமிர்ந்தது என்று பொருள் கூறினுமாம். சூர் - தெய்வப்பெண்; "தெய்வநங்கையசோதை" என்னுமாறு இருத்தலால், யசோதையின் உருவைக்கொண்ட பூதனையை "சூருருவின் பேய்" என்றார். இனி, பதினெண் தேவகணத்திற் பேயும் ஒன்றாதலால், இத்தொடர்க்கு - தெய்வப் பெண்ணுருவாகிய பேய் என்று பொருள் கொள்ளினுமாம். ஸ்ரீகிருஷ்ணன், தாயாய்வந்த பூதனையை ஸ்தந்யபானஞ் செய்யும்போது, அந்தத் தாயான உருவம் மாறிப் பேயாக முடியும்படி ஸம்ஹரித்ததனால் "சூருருவின் பேயளவு கண்ட" என்றாருமாம். அளவு காணுதல் - (ஆயுளின்) அளவைக் கண்டுவிடுதல்; எனவே கொல்லுதலை யுணர்த்தும். தமது வல்லமையால் எம்பெருமானை அளவிட்டுக் காணவேணுமென்று நினைப்பவர் பூதனைபட்டது படுவர் என்பது மூன்றாமடியில் தோன்றும். உனது திருவடி கொண்டு ஓரடிவைத்தற்கும் இந்தப் பூமி பற்றாதலால் நீ மூவடி அளந்துகொண்டது எவ்வாறோ? யான் அறியேன் என்றாவது, மகாபலி கவர்ந்த இந்தப் பூமியை அளந்து உன் திருவடிகளிலே இட்டுக்கொண்டாற் போல, என்னையும் உன் திருவடிகளிலே இட்டுக்கொண்டு பூதனையைப் போக்கினாற் போலே எனது விரோதிகளையும் போக்கி என்னை நீ அங்கீகரித்த வகையை யான் அறிகின்றிலேனென்றாவது இந்தப் பாசுரத்திற்குக் கருத்துக் கொள்க. பூதனையினால் தனக்கு ஒரு தீங்கும் சேராதவாறு தன்னைக் காத்து உலகத்துக்குத் தந்தவனென்பார் 'பெருமான்' என்றார். (௩)

4\. நெறிவாசல் தானேயாய் நின்றானை யைந்து
பொறிவாசற் போர்கதவம் சார்த்தி - அறிவானாம்
ஆலமரநீழ லறம் நால்வர்க் கன்றுரைத்த
ஆலமமர் கண்டத் தரன்.

[இ - ள்] ஆலமரம் நீழல் - கல்லாலமரத்தின் நிழலிலேயிருந்து, அறம் - (எம்பெருமானைக் கிட்டுவதாகிய) தருமத்தை, நால்வர்க்கு - (அகஸ்தியர் புலஸ்

தியர் தக்ஷர் மார்க்கண்டேயர் என்ற) நான்கு சிஷ்யர்களுக்கு, அன்று - (தான் பகவத்விஷயத்திலே இழிந்த) அந்த நாளில், உரைத்த - (பகவத்விஷயத்தைச் செவ்வனே) சொன்ன, ஆலம் - (திருப்பாற்கடலைக் கடைகையில் அதனின்றும் தோன்றிய) விஷத்தை, அமர் - (ஸ்ரீமந் நாராயணனுடைய கட்டளையாலே) அடக்கிய, கண்டத்து - (காளகண்டனென்று பேர் பெறும்படி கறுத்த) கழுத்தையுடைய, அரன் - (சங்கரிக்கும் ஆற்றல் படைத்துள்ளவனைத் தன்னை மதித்திருக்கிற) உருத்திரன், ஐந்து பொறிவாசல் - பஞ்சேந்திரியங்கள் செல்லும் வழியில், போர் கதவம் - (அடைக்கத் தொடங்குகிறவர்களின் முகத்திலே) அறைகிற கதவை, சார்த்தி - வருத்தத்தோடே அடைத்து, நெறி வாசல் தானே ஆய் - ஸ்வரூபத்துக்கு ஏற்ற உபாயம் தானே ஆகி, நின்றானை - இருக்கின்ற முதற்கடவுளான ஸ்ரீமந் நாராயணனை, அறிவான் ஆம் - அறிந்து விடுவானும்; (எ-று)

கீழ்ப் பாசுரத்தில் எம்பெருமானது எந்த ஒரு செயலும் தம்மால் அறியப்போகாது என்று அறுதியிட்டுக் கூறிய இவ்வாழ்வார், "நீ அறியமாட்டா விடினும் 'ஈஶ்வராத் ஜ்ஞாநமந்விச்சேத்' [ஈசுவரனென்று பெயரையுடைய சங்கரனிடத்தினின்று ஜ்ஞாநத்தைப்பெற விரும்பக்கடவன்] என்னுமாறு பிரசித்தி பெற்ற ஈசுவரன் அறியானோ?" என்று ஒரு சங்கையுண்டாக, 'எம்பெருமானது அருளாலே உணர்வைப் பெற்ற நான் தடுமாறுகிற்க, தவத்தின் வலிமையால் அறிவைப் பெற்ற அவனால் எம்பெருமானது தன்மை உணர்ந்து உபதேசிக்க முடியுமோ? அவன் ஆசார்யகஞ் செய்ய ஆசைப்பட்டு, உபதேசிப்பவனாய் விட்டானே' என்று அந்த ஈஶ்வரனைப் பழித்துப் பேசுகிறாரென்க. 'நெறிவாசல் தானேயாய் நின்றான்' என்பதனால் அவ்வெம்பெருமான் தன்னைக்காட்ட அவனைக்காணுவதல்லது மெது முயற்சியால் அக்கடவுளைக் காணமுடியாதென்பதும், 'ஐந்து பொறிவாசல்' என்றதனால் ஒருவாயிலை அடக்கத் தொடங்கினால் மற்றொரு வாயில்கதவு திறக்குமென்பதும், 'சார்த்தி' என்றதனால் சார்த்துவது அருமையென்பதும், 'ஆலமமர் கண்டத்தரன்' என்றதனால் அவன் தனது தமோகுணத்துக்குத் தக்க செயலைச் செய்யவல்லவனுவதன்றிச் சாத்துவிகர் செயல் அவனாற் செய்யப் போகாதென்பதும் பெறப்படும். 'அறிவானும்' என்ற தொடரில், காசிராஜனுப் பிரமஞானம் படைத்த அஜாதஶத்ரு வென்பவனுக்குப் பிரமஞானமில்லாத கார்க்கியனான பாலாகியென்பவன் பிரமஞானத்தை உபதேசிக்கத் தொடங்கியதோ டொக்கும் என்ற பழிப்புத் தோன்றும். (பாலாகி அஜாதஶத்ரு சரித்திரத்தைப் பிருஹதாரண்யகோபநிஷத்தில் சதுர்த்தாத்யாயத்திலும், கௌஷீதக்யுபநிஷத்தில் த்ருதீயாத்யாயத்திலும் காணலாம்.) 'நெறிவாசல்' என்பதற்கு - உபாயமும் உபேயமும் என்னவுமாம். போர் கதவம் - வினைத்தொகை; 'போர்க்கதவம்' என்று பாடமாயின் போர்த்தலையுடைய கதவமென்று வேற்றுமைத் தொகையாக விரிக்கத் இப்பொருளில் போர் முதனிலைத் தொழிற்பெயர்

(ச)



5\. அரன்நா ரணன்நாமம் ஆன்விடை புள்ளூர்தி
உரைநூல் மறையுறையும் கோயில் - வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையது வேல் நேமி
உருவமெரி கார்மேனி யொன்று.

[இ-ள்] நாமம் - (ஒருவனுக்குப்) பெயர், அரன் - (கண்டதெல்லாவற்றையும் அழிப்பதே தொழிலென்பதைத் தெரிவிக்கிற) ஹரனென்பது; (மற்றொருவனுக்குப் பெயரோ) நாரணன் - (எல்லாப் பொருளிலும் இருந்து பாதுகாப்பதைத் தெரிவிக்கிற) நாராயணனென்பது; ஊர்தி - (ஒருவனுக்கு) வாகனம், ஆன்விடை - (அறிவு கேட்குத் திருஷ்டாந்தமாகச் சொல்லப்படுகிற) விருஷபமாகும்; (மற்றொருவனுக்கு வாகனமோ), புள் - (வேத ஸ்வரூபியான) கருடனாகும்; உரை - (ஒருவனைப்பற்றிச்) சொல்லும் பிரமாணமோ, நூல் - (வேத விருத்தமான பொருள்களைச் சொல்லுகிற) பௌருஷேயமான ஆகமம்; (மற்றவனைப் பற்றிச் சொல்லும் பிரமாணமோ), மறை - (அபௌருஷேயமாய்க் குற்றமற்று உண்மையையே சொல்லுகின்ற) வேதம்; உறையும் கோயில் - (ஒருவனுக்கு) வாழுமிடமோ, வரை - (அவனுடைய தன்மைக்கு ஏற்றபடி வன்மையுள்ள) கைலாய பர்வதம்; (மற்றொருவன் வாழுமிடமோ), நீர் - (அவனது இன்னருளுக்குத் தக்கபடியுள்ள) திருப்பாற்கடல்; கருமம் - (ஒருவன் செய்யுந்) தொழிலோ, அழிப்பு - (தயையற்று எல்லாவற்றையும்) அழித்தலாகும்; (மற்றொருவன் செய்யும் தொழிலோ), அளிப்பு - (எல்லாப் பொருளையும் கருணைகொண்டு) பாதுகாப்பதாகும்; கையது - (ஒருவன்) கையிற்பூண்டுள்ள ஆயுதம், வேல் - (கொலைத்தொழிலுக்கு ஏற்ற) முத்தலைச் சூலமாகும்; (மற்றொருவன்கையிற்பூண்டுள்ள ஆயுதமோ), நேமி - (உலகத்தையெல்லாம் பாதுகாக்குமாறுள்ள) சக்கரமாகும்; உருவம் - (ஒருவனது) வடிவமோ, எரி - (கண்ணெடுத்துப் பார்க்கமுடியாதபடி) காலாக்கினி போலேயிருக்கும்; (மற்றொருவனுடையவடிவமோ), கார் - (கண்டவர்கண் குளிரும்படியான) காளமேகம் போலேயிருக்கும்; (இப்படி ஒன்றுக்கொன்று மாறுபட்டுக் கிடக்கிற இரண்டு பொருள்களில்,) ஒன்று—, மேனி - சரீரமாயிருக்கும்; (மற்றொன்று சரீரியாயிருக்கும்); (எ-று).

"நாட்டிற் பலர் உருத்திரமூர்த்தியே பரமேசுவரனென்று நிச்சயித்து அவனை வணங்கிப்போற்றிப் புகழாநிற்க, 'அறிவானும்' என்று அவனைப் பழித்துச் சொல்லலாமோ?" என்று ஒரு ஆசங்கை உண்டாக, அந்த உருத்திரன் அநீசுவரனென்பதும், எம்பெருமானே பரமேசனென்பதும், அவரவருடைய பெயர் வாசகம்முதலியவற்றைக்கொண்டே நாம் தெரிந்துகொள்ளலாமென்று அவற்றைக் கூறுகின்றாரென்க. அரன் - ஹரன்; ஹரித்தல் - அழித்தல். நாரணன் - நாராயணன்; நாரம் - நித்தியமாயுள்ள உலகத்துப் பொருள்களெல்லாவற்றையும், அயநம் - (அவற்றினுள் வியாபித்திருந்து) இருப்பிடமாகக் கொண்டவன். இங்கு உருத்திரனுக்கும் எம்பெருமானுக்கும் வாசகமாக ஏற்

பட்ட திருநாமங்களும் அவற்றிற்கு ஏற்பவே கொண்டுள்ள செயல்களுமே இவர்களில் இன்னார் ஈசுவரனென்பதை விளக்குமென்க. ஈசுவரனென்பவன் மேற்கொள்ளவேண்டிய தொழில்- அழிப்பதோ? அளிப்பதோ? மற்றும் இவ்விருவருடைய வாகனம் முதலியவைகளும் இவர்களின் தன்மைக்கு ஏற்பவே அமைந்திருக்கின்றனவென்பதாம். "நாரணனே நீயென்னையன்றியிலை" என்றவாறு நாராயணன் என்ற சொல், தன்னடியாரையன்றித்தான் உளனாகாதவனென்ற பொருளைக் குறிப்பிக்கும். நேமி - "அறமுயலாழி"; நீதிநெறி தவறாத ஆட்சியைச் சக்கரமென்று கூறுவது காண்க. இவன் ஸர்வாத்மாவென்றால் எல்லாம் இவனுக்குச் சரீரமென்பது தானே பெறப்படுதல் போல ஒன்று சரீரமென்றால் மற்றொன்று சரீரியென்பது தன்னடைவே விளங்குமாதலால், அதனைக் கூறாதுவிட்டனர். அந்தர்யாமி ப்ராமணத்தில் நாராயணனே சரீரியென்பதும், மற்றை யாவும் இவனுக்குச் சரீரமென்பதும் தெற்றெனக் கூறப்பட்டுள்ளன. சரீரம் தலைமையானதோ? சரீரி தலைமையானதோ? ஆகவே, தலைமை பெற்ற சரீரியான ஸ்ரீமந்நாராயணனே பரமேசுவரனென்று கூறியபடியாம். 'உருவமெரி கார்மேனி யொன்று' என்பதற்கு - இவர்களின் உருவத்தைப் பார்த்தால் (ஒன்று) எரிமேனி: (மற்றொன்று) கார்மேனி என்று பொருளுரைத்தலுமாம். (ரு)

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யன்.

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரு. | அ. | ப. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யானத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |
| 3. ஸ்ரீ பாகவத தசஸ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்மாசாரியர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 4. ஸ்ரீ சதுஸ்லோகீவிவரணம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 5. ஸ்ரீராமாயணத்தில் விசேஷார்த்தங்கள் ஸ்ரீ. உ.வ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 6. ஆர்யாப்யுதயம் ஸ்ரீ. உ.வ. டி. இ. சடகோபாசாரியர் ... ... ... | 0 | 2 | 0 |

ஸ்ரீ:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

# அநுபயுக்தார்த்த திக்காரம்.

(தொடர்ச்சி.)

## 3. ஸம்ப்ரதாய க்ரந்தங்களை அச்சிட்டு வெளிப்படுத்துதல்.

தீபிகை 329-ம் பக்கத்தில், 'நம் ஸித்தாந்தம்............முத்ரணம் பண்ணி ஓர் ஸ்தல விஶேஷத்திலே வைத்து எல்லாரும் யதேச்சமாய்ப் பார்த்துக்கொள்ளவும்' என்று எழுதியிருக்கிறார். இதில் இவருக்கு அருசிதமா யிருப்பது எது? ஸித்தாந்த ப்ரவசநம் செய்வதா? க்ரந்தமுத்ரணம் செய்வதா? ஓர் ஸ்தல விஶேஷத்தில் வைப்பதா? முதல்பக்ஷம் ஸ்ரீ பாஷ்யகாராதிகள் திருவுள்ளத்துக்கு முற்றிலும் விரோதமாகையினால் அநாதரணீயம். இரண்டாவது பக்ஷத்தில் முத்ரணம் செய்வது உசிதமல்லவென்பதனாலோ? இதற்கு முன் எல்லாம் உபதேஶபரம்பரையில் வந்தது; புஸ்தகங்களில்லையென்று சொல்லவொண்ணாது. ஸ்ரீ பாஷ்யகாரப்ரப்ருதிகளும் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களை எழுதி ஸித்தாந்த ப்ரவசநம் செய்யும்படி பலரிடம் கொடுத்திருக்கின்றனர்; முத்ரணம் செய்வது தோஷமாகாது. தத்காலத்தில் சிதாள ஏட்டு ப்ரதி படிப்பது, அஸௌகர்யமா யிருப்பதனாலும், அது அதிக விலையாயிருப்பதனாலும், ஸுலபமாயும் நன்றாகவும் வாசிக்கக்கூடியதான புஸ்தகரூபம் உபஜீவ்யமேயாகும். பூர்வாசார்யர்களும் க்ரந்தமுத்ரணத்தை அங்கீகரித்திருக்கிறார்கள். முத்ரணம் பண்ணுவதில் தோஷமுண்டென்று இவர் சொல்லவும் முடியாது. தமக்குத் தோன்றினவாறு ஆசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கு விரோதமாகவே க்ரந்த நிர்மாணங்கள் செய்து, இதன் ப்ரவசநம் தர்மம் என்று சொல்லிப் பிறரிடமிருந்து யாசகஞ் செய்து இவரே அச்சிட்டுப் புத்தகம் வெளிப் படுத்தி யிருப்பதனால், ஒரு ஸ்தல விஶேஷத்

தில் வைப்பது தோஷமென்னென்னில்? இந்தப் பக்ஷத்தைப் பராமர்சிப்போம். ஸ்ரீ பாஷ்யகாரர் வ்ருத்திக்ரந்தத்தைக் காசியில் ஸரஸ்வதி பண்டாரத்திலிருந்து க்ரஹித்து வந்திருப்பதனால், ஸம்ப்ரதாய க்ரந்தங்களைச் சேர்த்து ஒரு இடத்தில் வைத்திருப்பது புராதந வழக்கம் என்று ஏற்படுகிறது. யதேச்சையாய்ப் பார்த்துக்கொள்ளும் விஷயத்தில் ஆக்ஷேபனையோ வென்னில்: இதுவும் அநுபபந்நம். எல்லா க்ரந்தங்களையும் ஆசார்ய ஸகாசாத் க்ரஹிக்கவேண்டு மென்கிற நிர்ப்பந்தமில்லை யென்று கீழ் நிரூபித்தோம். ஆசார்ய ஸகாசாத் கேட்கவேண்டியவைகளை அசாஸ்த்ரீயமாய்ப் பார்ப்பதனால் வரும் தோஷம் அப்படிப் பார்ப்பவர்க்கே வரும். குளம் ஸகலருக்கும் ஸ்நான பாநீயத்திற்காக வெட்டப்பட்டிருக்க, ஒருவன் அதில் விழுந்து தற்கொலை புரிந்துகொண்டால் குளம் வெட்டினவரைப் பாபம் பிடித்துக்கொள்ளுமோ? ஆகையால், இவ்விஷயத்திலும் ஆக்ஷேபனை சொல்ல இடமில்லை. மேலும் இவருடைய பக்ஷத்துக்கு பாதகம் சொல்லுகிறோம். ஸ்ரீ பாஷ்யகாரர் நியமித்த உத்தர கைங்கர்யத்தில் க்ரந்த ப்ரவசநத்தை ப்ரதாந கைங்கர்யமாக நிரூபித்தார். ப்ரவசநம் என்பது, இவர் சொல்லுகிறபடியாகில் ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களை மூடிச் செல்லுப் பூச்சிக்கு இரை கொடுப்பதேயாகும். 'ப்ரவர்த்ய ஸம்ரக்ஷேத் ஸ்வத்வம் வா ஸ்வாத்யாதிகேஷு' என்கிற சிஷ்யக்ருத்யாதிகார ஸ்லோகத்தின் வ்யாக்யாநத்தில், 'ஆதி' பதம் ஸ்ரீகோசபரம் என்று வ்யாக்யாதம். ஸ்ரீகோசங்களை ஸம்மாநம் செய்வது, க்ருஹாதிகளைப் பஹுமாநம் செய்வது, இவர் அபிப்ராயப்படி மூடிப் பிறர் தொட்டவொண்ணாதபடி செய்வதாகில் திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீ தேசிகன் திருமாளிகையை அப்போதைக் கப்போது கட்டிப் பாதுகாத்துவந்த நம்பூர்வாசார்யர்களும், தத்காலத்தில் அதை சாஸ்வதமான கல்மண்டபமாகக் கட்டி வைத்த ஸ்வாமிகளும் இவருக்குத் தூஷ்யராவர். ஆனால் தம் ஆசார்யராய், ஜகத்ப்ரஸித்தராய், ஜ்ஞாந வைராக்யாநுஷ்டாந சேவதியாய் எழுந்தருளியிருந்து அநுஷ்டித்து வந்த ஸ்ரீ ஜயந்தி ச்ரவண த்வாதசீ முதலிய வ்ரதாநுஷ்டாநங்களுக்கும் ஆசார்ய



நிஷ்டாரூப ப்ரபத்தியை உபதேசித்து அநுஷ்டித்து வந்ததற்கும், பகவத் ஸந்நிதியில் தீர்த்த ப்ரஸாதங்கள் பரிக்ரஹித்து வந்ததற்கும், இப்படி மற்றும் அவர் திருவுள்ளங்கொண்ட உத்தரீய தாரணாதிகளின் க்ரமத்திற்கும் முற்றிலும் விரோதமாய் அநுஷ்டாநங்களை நடத்துகிறவர்களுக்கும், சிரகால ஆசார்ய சுச்ரூஷாதிகளில்லாமையினால் 'ஸ்ப்ருஹயாலவ:' என்கிற கடாக்ஷ விசேஷத்துக்குப் பாத்ரராகாமையாலும் 'ஸசு்ஶ்ரூஷுர் வியதவாந்' என்கிற சிஷ்ய குண பூர்த்தியில்லாமையாலும் ஆசார்யபக்தி லேசமும் இல்லாததனாலும் தத்வார்த்தங்கள் ப்ரகாசிக்காமல் கேவலம் தான்தோன்றியாய்ப் புஸ்தக நிரீக்ஷணாதிகளைக்கொண்டு தமக்குத் தத்வார்த்தம் பிறந்ததாகக்கொண்டு அதையே சிஷ்யர்களுக்கு உபதேசித்து அதில் ந்யாயவிசாரம் செய்யக்கூடாதென்று கட்டுப்படுத்துகிறவர்களுக்கும் பூர்வாசார்ய பரம்பரா க்ருஹீத க்ரந்த முத்ரண ஸித்தாந்த ப்ரவசநாதி கைங்கர்யங்கள் அருந்துதமாய்த் தோன்றுவது மிகவும் ஸஹஜமே. ஆசார்யனிடத்தில் மிகுந்த பக்தியுடையவனுக்கன்றோ உபதிஷ்ட தத்வார்த்தங்கள் ப்ரகாசமாகு மென்று ப்ரமாணங்கள் முறையிடுகின்றன. ஆகையினால், விவேகிகளுக்கு இந்த க்ரந்த முத்ரணமும், ஒரு ஸ்தல விசேஷத்தில் சேர்த்துவைப்பதும், 'பொங்குபுகழ் சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ' என்று ஆசார்யன் நியமித்த கைங்கர்ய பரம்பரை யாகையினால் இதுவே நமக்கு அவஸ்யம் கர்த்தவ்யமாகும்.

### 4. உஷ்ணோதக ஸ்நாநம்.

இவ்விஷயத்தில் இவருக்கு அநுசிதமாகப்பட்டது யாதோ? இவருக்கு ஸாதகமான ப்ரமாணத்தை மாத்ரம் 'உபஹத:' இத்யாதி எடுத்திருக்கிறார். இவர், வென்னீரில் ஸ்நாநம் செய்வதே தப்பு என்று அபிப்ராயப்படுகிறாரா? உபஹதன் (தீட்டுப்பட்டவன்) வென்னீரில் ஸ்நாநம் செய்யக்கூடாதென்கிறாரா? 'ரோகிணோஷ்ணீ ஶிர:ஸ்நாயாத்' இத்யாதி ப்ரமாணங்கள் இருக்கிறபடியால் ரோகத்தால் பீடிக்கப்பட்டவன் குளிர்ந்த நீரில் ஸ்நாநம் செய்யக்கூடாதென்று தர்ம சாஸ்த்ரங்கள் விதிக்கின்றன;

ஆகையினால் இரண்டாவது பக்ஷத்தை நாம் அங்கீகரிக்கிறோம். ஆகிலும் அவன் வ்யாதிதனாகில் வென்னீரில் ஸ்நானம் செய்ய வேண்டியதுதான். அதிகாரிக்குத் தக்கபடியன்றோ 7-விதமாக ஸ்நானம் விதிக்கப்பட்டிருக்கிறது. வாஸ்தவத்தில் ஸுலபமாய்க் கிடைக்கக்கூடியதன்றிக்கே அயலாருடைய அபேக்ஷையோ அல்லது தன்னுடைய தேஹச்ரமத்தையோ அபேக்ஷிக்கிற உஷ்ணோதகத்தைத் தனக்குச் சில ரோகாதிபீடனம் இல்லாமல் ஒருவனும் அபேக்ஷிக்கமாட்டான். ரோகம் என்பது பலருக்குப் பல விதமாயிருக்கும். அநேகருக்கு இது நீடித்து ஆயுள்பர்யந்தமும் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களை, மாதா பிதாக்களைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு வத்ஸலதரமான சாஸ்த்ரம், குளிர்ந்த நீரிலேயே ஸ்நானம் செய்யவேண்டுமென்று கட்டுப்படுத்துகிறதென்றால் ப்ரமாணஜ்ஞர்கள் நம்பமாட்டார்கள். இவர் ஸ்வப்நம் கண்டபடியோ அல்லது ஏதாவது க்ருஹத்திலிருந்தபடியே கொண்டு எல்லா க்ருஹத்திலும் 'சண்டாலாத்ய ஸ்ப்ருஷ்ட ஸ்பர்சாதிகளிலும்' இத்யாதி எழுதியிருப்பது இவருடைய விஷயமறியாமையை ப்ரகாசம் செய்திருக்கிறது. ப்ராயேண, ஸ்த்ரீகள் தாங்கள் ஸ்நானம் செய்து வென்னீர் பாத்ரத்தை ப்ரதிதினம் சோதித்துத் தங்கள் பர்த்தாதிகளுக்கு வென்னீர் போடுவதைக் காணுகின்றோம். ஆகையால் ச்ரமத்தைக் கொடுக்கும் வென்னீரை அருக்ணன் அபேக்ஷியானாகையாலும், அசக்தனுக்கு உஷ்ணோதக ஸ்நானம் சாஸ்த்ர ஸம்மதமாகையினாலும் இவ்விஷயத்தில் இவர் எழுதியிருப்பதெல்லாம் மிகவும் அநுபயுக்தமே.

## 5. காபிக்கோட்டை உபயோகித்தல்.

'காபிக்கொட்டை என்கிற வஸ்து விசேஷத்தை க்ஷீரசர்க்கரா யுக்தமாகப் புஜிக்கிறார்கள்' என்று எழுதியிருக்கிறார். இதில் காபிக்கொட்டை நிஷித்தமா? சர்க்கரை நிஷித்தமா? க்ஷீரம் நிஷித்தமா? இரண்டும் மூன்றுமிருக்க அவகாசமில்லை; ப்ரத்யக்ஷாநுஷ்டானத்துக்கு விரோதமாகையால். காபிக்கொட்டை நிஷித்தமென்பதற்கு ப்ரமாணம் யாதோ? இதனால் இவர், 'ஆஹார நியம'ப் ப்ரகாரங்களை ஒரு தரமாவது ஸேவித்ததில்லை என்று ஏற்படுகிறது.



ஆஹார நியமத்தைப் பரிஷ்கரிக்கக் கோலி, உபாதேய வர்க்கங்கள் அதிகமாகையினால் அவற்றை ஸங்க்ரஹிப்பது அஸாத்யமென்று கொண்டு வர்ஜநீயங்களை ஸங்க்ரஹித்திருக்கிறார்; அவற்றில் இதை எடுக்கவில்லை. பொதுவில் எதனுடைய உத்பத்தியானது நமக்கு ஸரிவரத் தெரியவில்லையோ, அதை வர்ஜிக்க வேண்டுமென்று அருளிச்செய்தார். அப்படி இதை வர்ஜநீய கோடியில் சேர்க்க இடத்தைக் காணோம். நமது தேசத்திலேயே விருத்தமான ஆஹாரங்கள் இல்லாதபடி வளர்கிறபடியால் இதில் தள்ளவேண்டிய அம்சம் இல்லை. அப்படியே முந்திரிப்பருப்பு முதலியவை பூர்வாசார்யர்களால் அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கிறது. காபிபானம் அசாஸ்த்ரீயமானதல்லவென்பதை மாத்ரம் இங்கு நிரூபிக்க வந்தோமேயன்றி, இது அவச்யம் செய்யப்பட வேண்டுமென்பதைக் கக்ஷி சொல்ல வந்தோமல்லோம். தங்கள் தேஹ ஸௌகர்யாதிகளுக்காகப் பருகுமவர்களை இது அசாஸ்த்ரீயமென்று நாம் கண்டிக்க விரகில்லை.

## 6. சூத்ரர்கட்கு ராமாயணம் சொல்லுதல்.

இவ்விஷயமாய் வேறொருவர் தனியாய் ஸமாதானம் எழுதியிருப்பதாகத் தெரியவருகிறது; அதனால் இவ்விஷயம் இங்கு பராமர்சிக்கப்படவில்லை. அவச்யமிருந்தால் அடுத்த ஸஞ்சிகையில் மறுபடியும் இதைப்பற்றி மாத்ரம் பராமர்சிப்போம்.

## நிகமனம்.

இப்படிக் கீழே இவர் சொல்லியிருக்குமவற்றுள் ஒன்றாவது சாஸ்த்ர ஸம்மதமல்லவென்று நிரூபித்தோம். மேலும் அநாவச்யமாக இல்லாத அம்சங்களை இவர்தாமே ப்ரமித்து, 'த்வீபாந்தரங்களுக்கு ஸம்ப்ரதாயார்த்தமாக ஸ்ரீகோசம் அனுப்ப ஸபை கூட்டி' என்றும், 'பகவதாராதநத்தைத் தவிர்த்தே ப்ராயேண புஜிக்கிறார்' என்றும் எழுதியிருப்பதற்குப் பதில் கூறுவது அநாவச்யமென்று நிறுத்தினோம். பகவதாராதநம் பண்ணாமல் புஜிப்பதை ஒருவரும் அங்கீகரியார்கள். ஆகிலும் அதிலும் சக்தாசக்த விபாகாநுகுணமாகக் கேவலம் தளிகை ஸமர்ப்பிப்பது

முதல் விரோதாந்த ப்ரயோகம் வரையிலும், மாநஸாத்யாதார பேதங்களும் ஶாஸ்த்ர ஸம்மத மாகையினால் அதில் ஏதாவது ஒரு ப்ரகாரமின்றி யிருப்பது ப்ராயேண அஸம்பாவித மாகையினால், இது விஷயத்தில் விவரிக்கவில்லை. இப்படி இவ்விஷயங்களில் கேவலம் கோடி காண்பித்து ஸமாதாநம் எழுதினோம். இவற்றை இன்னும் நன்றாய் அறிய விருப்பமுள்ளோர் பண்டிதர்களை நாடி அறிந்து கொள்ளக்கடவர்.

இப்படி, கல்பிதங்களான தோஷங்களை நிரபராதரான பாகவதோத்தமர் திறத்தில் ஆரோபணம் செய்ய ப்ரயத்நம் செய்ததனால் உத்தர க்ருத்யாதிகாரத்தில் பரிஹரணீய வர்க்கங்களில் ப்ரதாநாம்ஶமாக நிஷ்கர்ஷிக்கப்பட்ட ப்ருஹ்மவிதபசாரத்துக்குப் பாத்ரரானோ யென்று இவர் திறத்தில் '[illegible]' என்கிறபடியே பரிபவாதிகளாலே தன் பாபத்தை வாங்கிக்கொள்ளுகிற மதிகேடரைப்பற்ற, '[illegible] ॥' [illegible] ॥' என்கிறபடியே கரைபுரண்ட க்ருபை ஸ்வநிஷ்டாஜ்ஞாநமுள்ள நமக்கு உண்டாகிறது.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

கோமளேசுரன்பேட்டை

கோமடம். ஸ்ரீநிவாஸாசார்யர்.



ஸ்ரீ:

# தர்மதுர்த்தசை.

'ஸர்வஸ்ய ஶரணம் ஸுஹ்ருத்' என்று ச்ருதிகளிலும், 'ஸர்வலோக ஶரண்யாய' என்று இதிஹாஸத்திலும், 'ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்' என்று ஸ்ரீ கீதையிலும், 'அநாலோசித விஶேஷாஶேஷலோக ஶரண்ய' என்று ஆசார்ய ஸ்ரீஸூக்திகளிலும் ஸகல சேதநரிடமும் பரம க்ருபாநிதியாகச் சொல்லப்படும் ஸர்வேஶ்வரன், ஸ்ரீ கீதையில், 'யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத। அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்॥' என்கிற ஶ்லோகத்தினால், தாரணியாம் உத்யாநத்தில் தாம் வளர்த்த தர்மமெனும் கல்பலதை 'விரோதிகளால் வெய்யோ'னால் வாடிநிற்குங்காலத்து கண்ணன்போன்ற காளமேகமாக இவ்வுலகத் தவதரித்துக் கருணை மழைபொழிவதனால், தர்மலதை தாரணியில் மிகத் தழைத்துவளரச் செய்வதாய் அருளிச்செய்தான்.

அந்தோ! இந்த ஸமயத்தில் அக்கல்பலதையின் ஸ்திதியைக் கவனிக்கும் கூர்மதிகள் முழுமனதும் உருகுகின்றதே! அக்கல்பலதைக்கு ஆணாக அமைந்திருந்த அரசரெனும் பெருவேலி அழிந்து போகவும், பக்கத்தில் படர்ந்திருந்த பூஸுராம் பெரும்மரத்தை பணத்தாசை மதயானை பிடுங்கிப்போடவும், ஆங்காங்கு வந்திருந்த அந்யமதக் கொடியாடு அக்கொடியின் தளிரெல்லாம் தின்று சொல்லவும்; கொடுமையுடன் காத்திருந்த கிறிஸ்துமதக் கறையான்கள் கீழ்நுழைந்து வேரறுக்கவும், அறநிறமும் அருகிருந்து அபிவிருத்தி பண்ணிவந்த ஆஸ்தாநத் ததிபதிகள் அடியோடே அநாதரிக்கவும், நீரில்லா நிறங்குன்றி நிலையில்லாத் தன்மையுடன் வேரில்லாவாடி ஆவாரார் துணையென்று தாரணியின் மேல் விழுந்து தவிக்குங்கால், ஆதாரப் பெருமரத்தில் அவதரித்த தார் பூச்சி அடிக்கொடியில் குடைவதுபோல், அந்நியர்தள்

கடிவரும் தர்மலதை நாசத்தில் பண்டிதராம் வைதிகரும் பங்கெட்டுக் கொள்வதன்றோ பெரிய ஆஶ்சர்யத்தை உண்டுபண்ணுகிறது.

முற்காலத்தில் ஸர்வேஶனது ராமக்ருஷ்ணாதி ஸாக்ஷாதவதாரம்போல், 'க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் । கோ ஹ்யந்ய: புண்டரீகாக்ஷாந் மஹாபாரதக்ருத் பவேத் ॥' என்றும் ஸ்ரீ விஷ்ணுபுராணத்தின்படியே வேதபுராண ப்ரவசநாதிகளினால் இவ்வுலகத்தில் தர்மலதையைத் தழைக்கச் செய்த வ்யாஸ பராஶராத்யநுப்ரவேஶாவதாரங்களும் ஜகதுஜ்ஜீவநார்த்தமென்பதை ப்ராமாணிகர்கள் அங்கீகரிப்பர்.

இதுபோல் '[illegible]' என்கிறபடியே தர்மலதை தவிக்கும் இக்கலியுகத்திலும், ஆஹார நித்ராதிகளை அநாதரித்துச் சிர்குலைந்த சேதநரின் க்ஷேமத்தையே சிந்தித்த நம் தேஶிகர்கள் 'கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா: ।' என்கிறபடியே அவதரித்துத் தேஶமெல்லாம் திருவடியால் நடந்தலைந்து செய்துவந்த தர்மோபதேஶத்தினால் த்ராவிடதேஶத்தில் ஆங்காங்கு தர்மலதை ஆணிவேரூன்றியிருந்தது.

இத்தர்மலதை தழைத்தோங்கக் கருதியன்றோ கூர்மதிகளான கருணாவான்கள் கணக்கில்லா க்ரந்தங்களைக் கஷ்டப்பட்டு எழுதிவைத்து ஜகதுஜ்ஜீவநத்தையே தங்களுக்குப் பரமப்ரயோஜநமாகக் கருதி, அக்ரந்தங்களைக் காப்பாற்றி வைத்தார்கள்.

நம் காருணிகர்கள் செய்துவந்த தர்மோபதேஶம் ஸாமாந்ய தர்மோபதேஶமென்றும் விஶேஷ தர்மோபதேஶமென்றும் இரண்டுவிதமாயிருக்கிறது. இவற்றுள், ஸாமாந்ய தர்மோபதேஶமானது, நம் சிறுவர்களுக்கு அஸத் ஸஹவாஸாதிகளால் உண்டாகும் நாஸ்திக்ய நிராகரணத்துடன் ஆஸ்திக்யத்தை அபிவ்ருத்தி செய்வதை உத்தேஶித்துச் செய்யப்படும் ஸத்யவசநம் அஹிம்ஸா அஸ்தேயம். ஆத்மகுணா: (8) முதலானவைகளின் உபதேஶமாகும்.

ஶ்ரோதாக்கள் எல்லாரும் ப்ரணிபாதம் பரிப்ரஶ்நம் முதலான ஶிஷ்யலக்ஷண யுக்தரில்லாமலிருக்க, புராண ப்ரவசநாதிகள்



அநஸூயா ஶ்ரத்தா யுக்தர்களுக்கும் அநாதி காலமாக நடந்துவருவனபோல, இந்த ஸாமாந்ய தர்மோபதேஶத்திலும் ப்ராஸங்கிகமான தத்வஹிதோபதேஶங்கள் ஸ்தூலமாக சேர்ந்தால், அது, உபதேஶகர்களுக்கு ப்ரத்யவாயத்தை உண்டாக்காது.

இதுநிற்க: இக்காலத்து ஸ்வாத்மாநுபவமாத்ர த்ருப்தர்களான சில ஸாத்விக வித்வான்கள் கலிமஹா ராஜன் ராஜ்யத்தில் வஸிக்கும் நாம் அக்கலி புருஷன் ஆஜ்ஞைக்கு விபரீதமான ஆஸ்திக்யத்தையும் தர்ம ப்ரவ்ருத்தியையும் உலகத்துக்கு உண்டுபண்ணக்கூடிய இந்த ஸாமாந்ய உபதேஶத்தை செய்தால் ராஜத்ரோஹிகளாகி நரகம் புகவேண்டி வருமென்கிற பயத்தினால், தாம் இவ்வுபதேஶ வைதேஶிகராய், ஏகாந்தத்தில் வித்யா விரக்திகளை அநுபவித்து த்ருப்தரா யிருப்பதோடு, இந்த ஸாமாந்ய தர்மத்தை ஜகதுஜ்ஜீவநார்த்தமாய் உபதேஶித்து ஆஸ்திக்யம் உண்டுபண்ணுமவர்களையும் பலமுகமாய் நிந்திப்பதுடன் தமது கலிராஜ விஶ்வாஸத்தை பத்ரிகைகளிலும் பரக்கவரைந்து வருவதை நாம் பார்த்துவருகிறோம்.

இது விஷயத்தில் 'நித்யாநுஷ்டாந ஸம்பந்நா [illegible] ஜ்ஞாந [illegible] । வ்யாஜேந [illegible] வைஷ்ணவ்யம் [illegible] ॥' என்கிறபடியே ஸகல ஶாஸ்த்ர பரிசயம் செய்யாத ஆஸ்திகர்களின் ஸந்தேஹத்தை நிவ்ருத்தி செய்வதும் தர்ம ப்ரவ்ருத்தியில் சேர்ந்ததாகையினால், இதைச் சற்று விசாரிக்க வேண்டியது வித்வான்களுக்கு அவஶ்யமாகிறது.

தத்கால வித்வான்கள் ஸாமாந்ய தர்ம உபதேஶ ரூபமான தர்ம ப்ரவர்த்தநத்தைத் தூஷிப்பதன் காரணம் என்ன? இந்த ஸாமாந்ய தர்மோபதேஶம் ஶ்ருதி ஸ்ம்ருதி நிஷித்தமா? அல்லது இதற்குப் பூர்வாசார்ய ஸம்ப்ரதாய மில்லையா? த்ருஷ்டா த்ருஷ்ட ப்ரயோஜந மில்லாமையா? உபதேஶகர்கள் அதிகாரிகளல்லவா? கேட்பவர்கள் அநதிகாரிகளா? தேஶகால வைகுண்யமா? லோக நிந்தையா? வைராக்யத்தின் அதிஶயமா? தங்கட்குத் திருவுள்ளம் உகக்காமையா? ஏதாவது அநிஷ்டம் விளைகிறதா?

தத்காலம் நமது தேசத்தில் அத்யயநம் செய்யப்படும் வேதத்தில் ஸாமாந்ய தர்மத்தைப் பொதுவாக உபதேசிக்கக் கூடாதென்கிற வாக்யம் இருப்பதாகத் தெரியவில்லை; பூர்வாசார்யர்கள் இருப்பதாகச் சொல்லவுமில்லை. மநுஸ்ம்ருதி 2-வது அத்யாயத்தில் 'நாப்ருஷ்ட: கஸ்யசித் ப்ரூயாந் ந சாந்யாயேந ப்ருச்சத:' என்று, கேட்காதவர்களுக்கும் முறை தவறிக் கேட்பவர்களுக்கும் உபதேசிக்கக் கூடாதென்கிற நிஷேதம் வேதவிஷய மென்பது முன்பின் ஶ்லோகங்களைப் பார்ப்பவர்களுக்கும் குல்லூக பட்டீயம் முதலான வ்யாக்யாநங்களைப் பார்ப்பவர்களுக்கும் தெரியவரும். முன்பின் ப்ரகரணங்களை அநுஸரித்து வாக்யங்களுக்கு அர்த்தம் செய்யாத பக்ஷத்தில், 'வித்யா ப்ராஹ்மணமேத்யாஹ ஶேவதிஸ்தே' என்னும் வாக்யத்தினால் கேட்டாலும் தர்மத்தைச் சொல்லக்கூடாதென்று நிஷேதித்திருப்பதால் ஸச்சிஷ்யர்களுக்கு ஸதாசார்யர்களும் அநாதி காலமாகச் செய்துவரும் விசேஷதர்மோபதேசமும் தவிர வேண்டிவரும். இதனால், 'இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந' என்றும், '[illegible]' என்பதும் வித்யாவிசேஷ மந்த்ர விசேஷங்களை அஸூயாதி துர்க்குணமுள்ளவனுக்கு உபதேசிக்கலாகாதென்று சொல்லப்படுகிறது. ஆகையினால், இவ்வுபதேச நிஷேதத்துக்கு ப்ரமாணமில்லை. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் உபோத்காதாதிகாரத்தில் ஸம்ஸாரி சேதந விஷயமாகக் காட்டப்பட்டிருக்கும் ராஜகுமார த்ருஷ்டாந்தத்தில் 'அப்ரார்த்திதனாகவும் சில விஷயத்தை உபதேசிக்கலா மென்பதை சில தார்மிகர்' என்று ஆரம்பித்து ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்திருக்கிறார். இந்த அர்த்தத்தை ஷட்க்ரந்தத்தின் வ்யாக்யாநமான ஸாராஸ்வாதிநியில், 'இத்தால் [illegible] உபதேசிக்கக் காண்கையால், இவ்வாத்மாவுக்கும் சில தார்மிகர்கள் உபதேசிக்கக் கூடுமென்ற தாத்பர்யம்' என்று ஸ்புடமாக எழுதப்பட்டிருக்கிறது.

(இன்னும்வரும்.)

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபர்களுக்கு திருநெல்வேலியில் ஸமீபத்தில் நடந்த சென்னை மாகாண வர்ணாஸ்ரமதர்ம மஹா ஸங்கத்தில் கார்யதரிசி ஆர். கிருஷ்ணசாமி அய்யர் நமஸ்கரித்து விஞ்ஞாபனம் செய்து கொள்வதென்ன வென்றால்.

தங்கள் பத்ரிகையின் ஆடிமீ ஸஞ்சிகை, 10-வது ஸம்புடத்தில் 311-ம் பக்கத்தில் இதனடியில் கண்ட வாக்யங்களிருக்கக்கண்டேன்:

"மேலே விவரித்த ஸத்ஸம்ப்ரதாயத்தை உகந்து வானமாமலை, திருக்குறுங்குடி, கும்பகோணம் முதலான ஸ்தலங்களை அலங்கரிக்கும் மடாதிபதிகள் அநுக்ரஹபத்ரிகைகள் அனுப்பினர்களென்று கேள்வியுற்றோம். ஸ்ரீ மதஹோபிலஸ்தான நிர்வாஹகராயெழுந்தருளியிருக்கின்ற ஸ்வாமி அவ்வண்ணம் செய்தாரில்லை."

இவ்விதம் தாங்கள் எழுதியிருப்பதிலிருந்து மஹாஸங்கம் விஷயமாக ஸ்ரீமத் அஹோபிலம் மடம் ஸ்வாமிகளவர்கள் உபேக்ஷையாயிருந்தார்களென்று தாங்கள் அபிப்ராயப்படுவதாய்த்தெரிகிறது. தாங்கள் பத்ரிகையை வாசிப்போர்களும் அவ்விதமே நினைக்க நேரிடும். அது சரியல்லவென்று தெரியப்படுத்துவதற்காக இக்கடிதம் எழுதுகிறேன்.

இவ்விடத்தில் வர்ணாஸ்ரமதர்ம மஹாசங்கம் நடத்த வேண்டுமென்று தீர்மானித்த தினத்திற்கும் மஹாஸங்கம் நடக்கவேண்டியதாயிருந்த தினத்திற்கும் இடையில் அதிக நாள்களில்லாமல் போய்விட்டபடியால் அநேகம் கனவான்களுக்கு அழைப்புப்பத்ரிகை அனுப்ப அவகாசமின்றியில் போய்விட்டது. பிரகிருதத்தில், ஸ்வாமிகளவர்கள் வடக்கே ஹைதராபாத்பக்கம் யாத்திரையாய்ப் போயிருக்கிற விபரம் மாத்திரம் எனக்குத் தெரியுமேயொழிய அவர்கள் இருப்பிடம் இந்தவால் என்று எனக்கு தாமதித்துத்தான் தெரியவந்தது. தெரிந்தவுடன் நான் ஸ்வாமிகளவர்களுக்கு மஹாஸங்கம் விஷயமாக எழுத்து மூலமாக தெரிவித்திருந்தால் என்கடிதம் அவர்களுக்கு

மஹாஸங்கம் கூடுவதற்குமுன் கிடைக்க முடியாதென்று தெரிந்து கொண்டேன். அந்த ஸமயத்தில் இவ்விருந்து என் நண்பர் வக்கில் வித்வான் ஸ்ரீ உ. வே. டி. கே. வெங்கடாசார்யாரவர்கள் ஸ்வாமிகளவர்களை தர்சிக்க கத்தவாலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஸ்வாமிகளவர்களிடம் மஹாஸங்கம் நடப்பதை தெரியப்படுத்துவதுடன் காலத்தில் ஸ்வாமிகளவர்களுக்கு தெரிவிக்க இடமன்னியில் போனதற்கு நாங்கள் மிகவும் வருந்துகிறோமென்றும் ஆனால் இந்த ஸத்கார்யத்தில் ஸ்வாமிகளவர்களின் பரிபூர்ண அனுக்கிரஹமிருக்குமென்று நம்பியேதான் நாங்கள் பிரவிருத்திக்கிறோமென்றும் அவர்களிடம் தெரியப்படுத்த வேண்டுமென்று என் நண்பரைக் கேட்டுக் கொண்டேன். அவ்விதமே அவர்களும் கத்தவால் போய்ச் சேர்ந்தவுடன் தெரியப்படுத்தினதாக தெரிந்து கொண்டேன். அவர்கள் கத்தவால் போய்ச்சேரும் ஸமயத்தில் இவ்விடத்தில் மஹா ஸங்கம் ஆரம்பமாய் விட்டது. இந்தஸ்திதியில் ஸ்வாமிகளவர்கள் மஹா ஸங்கவிஷயத்தில் உபேக்ஷையாயிருந்தார்களென்று நினைக்க யாதொரு காரணமுமில்லை. காலத்தில் தெரியப்படுத்தாத தோஷம் என்னுடையதே.

திருநெல்வேலி }
1—9—1920 }

தங்கள் விதேயன்.
ஆர். கிருஷ்ணஸ்வாமி,

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை.

ஸம்புடம் - 10

1919-1920

(ஸித்தார்த்தி - ரௌத்ரி ஆ.)

பத்ராதிபர்:—திவான்பகதூர் தி. த. ரங்காசார்யர் பி. ஏ. பி. எல்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபையின்

கார்யதர்ஸியால் ப்ரதிமாஸம்

ப்ரசுரம் செய்யப்பட்டது.

சென்னை:

கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

1920.

Copy-right Reserved.

... 600 003.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பராங்குஶ முநயே நம:.

# அட்டவணை.

(அகராதி.)


| | பக்கங்கள். |
|---|---|
| அநுபயுக்தார்த்தநிக்காரம் ... ... | 380,421 |
| இக்காலத்து நிலைமையும் நமது தர்மமும் ... | 355,388 |
| இயற்பா ... ... | 412 |
| இவ்வர்ஷத்திய ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கம். | 363 |
| உபயுக்தாம்ஶ ஸங்க்ரஹம் ... ... | 325 |
| ஒன்பதாவது ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கம் ... | 36,75,106 143,227,268 |
| ஒருவிஜ்ஞாபநம் ... | 1 |
| கடிதங்கள் ... ... | 30,221, 223,225,300, 335,365,367, 396,397,431 |
| தர்மதர்த்தமை ... | 427 |
| திருத்ததிருத்தம் ... | 181,246, 292,317,346 |
| திருவேங்கடத்தான் பதிகம் ... ... | 94 |
| நித்ரா ஸ்துதி ... | 15 |
| ப்ரேம ப்ரவாஹம் ... | 45,83,115 154,196,240, 281,310 |
| பகவத் ப்ரார்த்தனை ... | 71 |
| பத்ராதிபரின் குறிப்புகள் ... ... | 4,37,77, 109,149,189, 233,271,303, 339,371,403 |
| பப்ளிஸிடிபிரோ:— அறிக்கைகள் ... | 32 |

| | பக்கங்கள். |
|---|---|
| அரசாங்க சீர்திருத்தம் ... ... | 336,368, 399 |
| இன்புளுயென்ஸா ... | 31 |
| கண்ணில் படலம் உரிப்பது ... ... | 301 |
| புஸ்தக விமர்ஶம் ... | 231 |
| பேருளாளன் பஞ்சாத்தினம் ... ... | 18,65 |
| வேதாந்தஸங்க்ரஹம் ... | 51,100,262 |
| ஸ்ரீகஜேந்த்ரன் விஷயத்தில் ஆழ்வார்களின் அநுபவம் ... ... | 173,211 |
| ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார ஸங்க்ரஹம் ... | 90,127,258 |
| ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 1918-19-ம் வருஷத்திய வர்ஷாந்த அறிக்கை ... ... | 139 |
| ஸ்ரீவைஷ்ணவமதயாதார்த்யம்—[8-வது ஸஞ்சிகையிலிருந்து ஸப்ளிமென்டாகத் தொடர்கிறது.] | |
| ஸ்ரீஸ்ருத ப்ரகாஶிகா ஸஹித ஸ்ரீபாஷ்ய ப்ரஶ்நா: ... ... | 137 |
| ஸ்வாகத நிவேதந பத்ரிகை ... ... | 121,160 |
| ஸநாதந தர்ம ரக்ஷணம். | 23,59 |
| ஸம்ஸ்க்ருத பாஷாபிவ்ருத்தியும் ஆலய பரிஷ்காரங்களும் | ...201,253,287 |




॥ श्रीः ॥

# ஸ்ரீவைஷ்ணவ மத யாதார்த்யம்.*

गुरुभ्यस्तद्गुरुभ्यश्च नमोवाकमधीमहे
वृणीमहे च तत्राद्यौ दंपती जगतांपती ॥
वेदान्तदेशिकपदांबुजमेव नित्यं
मद्दैवतं किमपि वांछित सर्वदायि ।
यद्वैभवस्य लवलेशविचिन्तनेन
बुद्धिः प्रसीदति विभूति युगावलंबा ॥

'नानातन्त्र विलोभितेन मनसा निर्णीत दुर्नीतिभिः कष्टं कुत्सित दृष्टिभिर्यतिपतेरादेश वैदेशिकैः । व्यासो हासपदीकृतः परिहृतः प्राचेतसश्चेतसः क्लृप्तः केळिशुकः शुकः सच मुधाबाधाय बोधायनः ॥' என்கிறபடியே 'பலவித வேதபாஹ்ய வேதவிருத்த நாஸ்திகாதி மதங்களாலே கலங்கி, விபரீத தர்க்கங்களை ஆதரித்து, ச்ரீரதி பதியின் அநுக்ரஹத்துக்கும் உபதேசத்துக்கும் பாத்திரர்களல்லாமல் புலம்புகின்ற மந்தமதிகள், பரதத்வ, பரமஹித, பரமபுருஷார்த்தங்களை ந்யாய சாஸ்திர ரூபமாயும் இதிஹாஸ ரூபமாயும் சுருங்கவும் விரியவும் பல முகங்களாலும் வெளியிட்டு வேதோபப்ருமஹணம் செய்த ஸ்ரீவேதவ்யாஸரை, அவர் க்ரந்தங்களுக்குப் பரிஹஸிக்கும்படியான துரர்த்தங்கள் செய்து அவமதித்தார்கள்; ச்ரிய:பதியாய் ஸர்வேச்வரனை சரண்யனுடைய அவதாரரஹஸ்யத்தையும், பிறர்க்கறியவரிதான சரணாகதரக்ஷண தர்மத்தையும், அங்கஸ்வரூபாதிகளடங்க அந்தணர் முதல் அந்தியர் வரையில் உலகத்தார் ஸந்தேஹம் மாறாட்டம் முதலியவை இல்லாதபடி அறிந்து கடைத்தேறும்படியாக. நாலுவேதங்

* இது சென்ற வருஷத்தில் திருவஹீந்திரபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஒன்பதாவது வார்ஷிக மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உ.ப. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

களும் ஒரு தட்டிலும் தானொரு தட்டிலுமாக நிற்கிறதும் ஸ்ரீவால்மீகி பகவான் தன் கருணையாலே தொடங்கி யருளிச்செய்ததுமான ஸ்ரீராமாயணத்தின் உட்கருத்தைப் பரிகொடுத்தார்கள்; ஞானம், பக்தி, வைராக்யம் இவைகள் தாம் உருவெடுத்தனவோ என்றும், 'यंप्रव्रजन्तमनपेतकृत्यं' என்னும்படியும் பிறவியிலேயே தூவியாயிருந்த ஸ்ரீசுகமுனிவருடைய அமுதம்பெருகும் இனிய மொழிகளால் ப்ரவஹித்த பக்தி ரஸம் பூரித்த ஸ்ரீபாகவதத்தை விளையாட்டுக் கிளியின் பாடங்களைப்போல் பேசினார்கள்; ஸ்ரீவேதவ்யாஸரிடத்திலேயே அவரருளிச்செய்த ப்ரும்ம ஸூத்ரார்த்தங்களை சிக்ஷித்து அவைகளை உலகத்தார் நன்மைக்காக விஸ்தாரமாக ப்ரதிபாதிக்கக் கருதி ஸ்ரீபோதாயன பகவான் நிர்மாணஞ்செய்த விருத்திக்ரந்தத்தை வீண் சுமையென்றிகழ்ந்தார்கள்; என்ன கஷ்டம்' என்று க்ருபா பரவசராய் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் 650-வருஷங்களுக்கு முன்னமே அக்காலத்திய நிலைமையைப்பற்றி வருந்தினார். ஸ்ரீவ்யாஸரும் வேதாந்த விரோதிகளான ஸாங்க்யம், யோகம், பாசுபதம், சமணம், சாக்கியம், முதலிய மதங்களால் இளநெஞ்சர் கலங்காதபடி அவைகளைக் கண்டித்துத் தன்மதத்தை நிலைநிறுத்தவேண்டியிருந்தது. ஸ்ரீகீதாசார்யனும் தான் அப்போது அர்ஜுனனுக்கு உபதேசித்த அவ்யயமான ஆத்மதத்வாதிகள் தன்னால் முற்காலத்தில் விவஸ்வானுக்கு உபதேசிக்கப்பட்டுப் பரவிப் பின்னரவை மஹத்தான காலாதிக்ரமத்தினால் நஷ்டமாயிற்றென்றார். உபநிஷத்துக்கூட கர்மப்ரவணர்கள் தன்னர்த்தத்தை உணராமை கண்டு, யஜ்ஞாதி கர்மங்களாலே ஸம்பாதிக்கப் பெற்ற பேறுகள் அல்பங்கள், அஸ்திரங்கள் என்றும், தன் பலமேகொண்டு பரமபுருஷார்த்தத்தைக்காணக் கருதுவது மதியீனமென்றும், ஆய்ந்துதெளிந்து புத்திமான் வைராக்யமடையக் கடவன் என்று நியமித்தது.

எனவே நாஸ்திக்யம் குதர்க்கம் முதலியவை தொன்றுதொட்டு மனிதர் இயற்கையிலுளதாதலால் பலவித வ்யாமோஹங்களுக்கும் விபரீதருசிகளுக்கும், அதற்கனுகுண



மான ஸம்ஸர்க்கங்களுக்கும் ஸாதனங்களுக்கும் ஆஸ்பதமாயிருக்கும் இக்காலத்தில் அநாதியான வைதிகமதத்துக்கும், அதைக் காலதேசவர்த்தமானங்களை அநுஸரித்து அவ்வோஸமயங்களில் பரமாபத்துகளுக்கும் தப்பும்படி பாதுகாத்து ப்ரவர்த்திப்பித்து வந்திருக்கும் நம்மாசார்யர்களின் ப்ரபாவங்களுக்கும் ப்ரகாசம் குறைந்து, அவை முழுவதும் மறையும்படியான தசைக்கு வந்து கொண்டிருக்கின்றனவென்பதும் ஓர் வியப்பாகுமோ? சிறுபிராயம் முதற்கொண்டே, 'உன் தகப்பன் மூடன், உன் தெய்வம் வெறும் பொம்மை, உன் முன்னோர் நடவடிக்கைகள் மதியீனர் சேப்புமவை' என்றிப்படிகளிலே வளர்க்கும் கல்வியில் தேருவதால், நம்மதத்தினுடையவும், பூர்வருடையவும் அருமை, பெருமைகளை யறியாமல், பெற்றதாயிருக்க மனை நீராட்டுவதோடொக்க அருவருப்பான ஆசாரங்களிலும் விஷயங்களிலும் போக்யபுத்தியும், அதை உபதேசிப்பவர் திறத்தில் ஆதரவும் உண்டாவது ஆச்சர்யமாகாது. ஒரு ஸுக்ருத விசேஷத்தாலே ஆஸ்திகராய் நமது என்னும் அபிமானத்துடன் நம்மதத்தையும், நம்பூர்வர்களருளிச்செய்த க்ரந்தங்களையும் அறிய முயலுமவர்களும் வெகுவாய் பாஷாந்தரத்திலும் மதாந்தரங்களிலும் ஊறி அந்த ஸம்ஸ்காரங்களாலே நிரம்பினவர்களிடத்திலும் அவர்கள் ப்ரசுரங்களைக் கொண்டும் தம்மனப்போக்கின்படி வேதாந்தார்த்த நிர்ணயம் பண்ணுகிறார்களேயொழிய அநாதியாய் விச்சேதமில்லாமல் பரம்பரையாய் ப்ரவர்த்திக்கப்பட்டு வந்திருக்கும் சாஸ்திரார்த்தங்களை அவைகளை. அப்படிகளிலேயே அறிந்த பெரியோரிடம் கற்க ப்ரியப்படுவதில்லை. இதன் பலனாய் நவீன ஆஸ்திகர்களுடைய கொள்கைகளும் அநுஷ்டானங்களும் பஹுமானங்களும் ப்ரவசனங்களும் விசித்ர ரூபங்களை அடைந்து வருகின்றன. பூர்வீகமான நமது ஜாதி ஸம்ப்ரதாயங்கள் நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகளென்றும் அவைகளை யொழிப்பதே கருமம் கண்டீர் என்றும் நம் பிரமுகர்களும் மற்றவரும் ஓய்வின்றி ப்ரஸங்கம் செய்கிறார்கள். ஸமீபத்தில், சென்னை, லாகாலேஜில் தாம் செய்த உபந்யாஸத்தில் ஸ்ரீமான் கனம் ஜஸ்டிஸ்

சேஷகிரி அய்யர் அவர்கள் இவ்வளவில் நில்லாமல் நாம்
கொண்டிருக்கும் வைஷ்ணவமதம் இன்னும் பெரிய முட்டுக்
கட்டையென்றும் அதற்கு வேதோபநிஷத்துக்களில்
யாதொரு ஆதாரவுமில்லை யென்றும் கூறினர். மற்றொரு
பெரியவர் வேறொரு இடத்தில் செய்த ப்ரஸங்கத்தில் வைஷ்
ணவர் விரும்பும்மோக்ஷம் சோம்பேறி மடத்துக்கு ஸமான
மாகுமென்றாராம். ஸ்ரீவைஷ்ணவராய் ஸ்ரீதேசிக ஸம்ப்ரதா
யத்தில் பிறந்த பலரும், ஸ்ரீராமானுஜ முனிவர் அபார
கருணையால் எல்லாரையும் ஒன்றாக்க விசைந்து ஒழித்த ஜாதி
ஆசாரம் முதலியவைகளைப் பின்வந்த ஸ்ரீதேசிகன் மீண்டும்
கொண்டு வைஷ்ணவ மதத்தை வீண் நிர்ப்பந்தத்துக்கு உள்
ளாக்கி விட்டார் என்றும், அதுதான் நமது பரிபவத்துக்கும்,
பிற்பாட்டுக்கும் காரணமென்றும் உருகுகிறார்கள். இத்
தகையவர் தங்கள் கூற்றுக்களைத் தகுந்த ஆதாரங்களுடன்
நிரூபிக்கவேண்டிய கடமையை கவனிக்கிறதில்லை. ஆயினும்
உயர்ந்த பதவியையும், செல்வாக்கையும் வஹிப்பவர் ஒன்றை
உரைப்பதன்முன் அதைப் பதின்மடங்காக ஆலோசித்துப்
பொறுப்புடன் சொல்லவேண்டுமென்றே யாவரும் எதிர்
பார்ப்பர்களென்பதை வற்புறுத்தவும் வேண்டுமோ?

இந் நிலைமையில் மேல் நாட்டுக்கல்வியினால் நம்மவர்க்
குண்டாகும் மத உணர்ச்சியையும், நம் நாட்டு மதங்களையும்,
விசேஷித்து ஸ்ரீபகவத்ராமானுஜ ஸித்தாந்தத்தையும், அதில்
ஸ்ரீதேசிகன் செய்தருளியிருப்பதையும் ஒரு நேரில் வைத்துப்
பார்த்து ஸாராஸார விவேகம் பண்ணுவது மிகவும் உசித
மாகும். இச்சமயத்தை அனுஸரித்து அதை இங்கே
சுருங்கவே சொல்லவேண்டியதும் உசிதம் என்பதையும்
மறவோம்.

ப்ராயேண ஐரோப்பியக் கல்வியில் ப்ரும்ம விசாரமும்
(Religion), தத்வவிசாரமும் (Philosophy) ஒன்றோ
டொன்று சேராமல் தனித்தனியே நடக்கும். அதாவது,
'ஈசுவரன் ஒருவன் உண்டு, அவன் உலகத்தையும் உலகத்தா
ரையும் படைத்தவன்; ஸத்யம், தர்மம், தயை, பரஹிதம்,



அஹிம்ஸை, முதலியவை புண்யகர்மங்கள், அதினால், ஈச
வரன் ப்ரீதியடைவான், இக்கர்மங்களைத் தவிர்ந்தவர் பாபிகள்,
அவர்கள் ஈச்வர நிக்ரஹத்துக்குள்ளாவார்கள்' என்றிப்படி
ஸமுதாயமான ஜ்ஞானமும், அதையடிபோத்திச்செய்யும்
ஈச்வரகுணம் முதலியவைகளின் விசாரமும் ப்ரும்ம
விசாரம். இது அதிக விஸ்தாரமாயிராது. ஆனால் சேத
னர் ஒருவர்க்கொருவர் நடந்து கொள்ளவேண்டிய முறை
களைப்பற்றிய உபதேசங்கள் விசேஷமாய்க் காணப்படும்.
இதுதான் மதம் (Religion) என்று சொல்லப்படும். தத்வ
விசாரம் என்பது மிகவும் விரிவானது. அதற்கு ஆதாரமாக
பூதசாஸ்திரம், ரஸாயநம், ஜ்யோதிஸ்சாஸ்திரம், முதலிய
எல்லா சாஸ்திரங்களையும் கொள்வார்கள். இவைகளின் உதவி
யைக்கொண்டு அனுமானத்தாலே ஸர்வத்துக்கும் முதற்கா
ரணமென்ன, எது பரமார்த்தமான தத்வம், என்பது முதலிய
வைகளை நிர்ணயிப்பார்கள். இதற்கு ஸர்வஜ்ஞத்வ ஸர்வ
சக்தித்வாதிகளையுடைய ஸர்வேச்வரன் ஒருவன் இன்றியமை
யாதவனல்ல. ப்ரத்யக்ஷ அனுமானங்களாலே அப்படி ஒருவன்
ஸித்தித்தால் அவனை அங்கீகரிக்கக் குறையில்லை. ஆனால்
அவன் திறத்தில் ப்ரத்யக்ஷாதிகளுக்கு விரோதமாகக் காணக்
கூடிய அமானுஷ சேஷ்டிதம் முதலியவைகள் தத்வவாதிக்கு
உபாதேயங்களல்ல. இவனுஸ்திகனாகும்போது ஈசுவரனில்லை
யென்று ஸாதிக்கமட்டும் துணியான். அவனுளனுமிடத்தில்
ஐஹிகத்தில் தன்னுடையவும் பிறர்களுடையவும் நல்வாழ்க்
கையைக்கருதித் தத்வவாதி ஈச்வரனை ஆதரிப்பான். இவ்
விடத்தில் முன் சொல்லிய மதவிசாரம் பண்ணுமவன் ஈச்
வரன் ஒரு புருஷவிசேஷம் (Personal God) என்பதை
அங்கீகரிப்பான். தத்வவிசாரிக்கு ப்ரும்மம் என்பது ஒரு
ஜ்ஞானம் (Intelligence) அல்லது சக்தி விசேஷம் (Force)
என்பது தான் அனுபவத்துக்கும் யுக்திக்கும் பொருந்தியிருக்
கும். சப்தம் அல்லது வேதம் என்பது இவனுக்கு நிராபேக்ஷப
மானப்ரமாணமல்ல. 'सिद्धान्तः प्रामाणिक इत्यभ्युपगतोऽर्थः(ஸித்தாந்
தம் அல்லது மதம் என்பது ப்ரமாண பலத்தாலே ஏற்பட்ட
தென்று பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட அர்த்தம்)'

என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தது இவன் திறத்தில்
ப்ரத்யக்ஷாநுமானங்களை மாத்திரம் குறிக்கும். மதவிசாரம்
செய்பவன் தான் வேதமென்று நம்பியதை ஒருவாறு ப்ரமாண
மாகக் கொள்வதுண்டு. அவ்வேதம் ஸத்வோத்தரர்களான
பக்தர்களால் பகவத்ப்ரஸாத பலத்தால் உண்டாக்கப்பட்
டது. எனவே அதில் எல்லா அம்சங்களும் உபாதேயங்
களாகவேண்டிய நிர்ப்பந்தமில்லை. இவ்விரு வாதிகளும்
ஜன்மாந்திரம் என்பதை ஒப்புவதில்லை. ஏனென்றால் அது
புத்திக்கும் யுக்திக்கும் பொருந்தவில்லை. வேறு ஸாக்ஷியமும்
கிடையாது. மதவிசாரி மாத்திரம் இந்தச் சரீரவாழ்க்கைக்
குப் பிறகு நாம் செய்யும் புண்ய பாபங்களுக்கு ஈடாக சாச்
வதமான மோக்ஷத்தையும் நரகத்தையும் அடைவோம் என்று
கொள்வான் இது தவிர முன்னும் பின்னும் ஜன்மாந்திர
மென்பதை மறுப்பான். தத்வவாதிக்கு இதிலும் நம்பிக்கை
யில்லை. என்றாலும் ஸ்வஹிதத்தையும் லோகஹிதத்தையும்
கணிசித்துத் தீவினையகற்றி நன்மை கடைபிடிக்கவேண்டு
மென்பது இவன் அங்கீகரித்த விஷயம்.

இவ்வித விசாரங்களில் பயின்றவர் மதம் என்பதை
விசேஷ ஜ்ஞானமுள்ள ஒரு சேதனன் லோகோபகாரமாக
ப்ரவர்த்திப்பிக்கும் தர்ம விசேஷமென்றும், ஈச்வரனை ரூபத்
தையுடைய புருஷவிசேஷமாகக் கொள்வது ஸாமான்ய
புத்தியென்றும், ஜ்ஞானசக்திகள் மாத்திரமே ப்ரும்மத்தின்
ஸ்வரூபமென்றறிவது உத்தமமான மதம் என்றும் நினைப்
பார்கள்; எனவே ஜாதி, ஆசார பேதங்கள், ஓரோர் காலங்
களில் கட்டுப்பாடாக ஏற்பட்டவை; அவைகளைக்கொண்டு
உயர்வு தாழ்ச்சிகளைக் கொள்ளக்கூடாது; எக்குடி பிறப்
பினும் யாவரேயாயினும் அவர் திறத்தில் பிறவியினால் எவ்
வித விசேஷமுமுண்டாகாது என்றிவர்கள் துணிவு. ஈச்
வரனைப் பூஜிப்பதும் கீழ்ச்சொல்லியதை யனுஸரித்திருக்கும்.
அதாவது, ஸர்வேச்வரன் ஒருவனே யென்றறிந்து அவனை
த்யானிப்பதும் ஸ்தோத்திரம் பண்ணுவதுமே (prayer)
உத்தமதேவபூஜை. விக்ரஹாராதநாதிகள் மூடபக்தியின் கார்
யங்கள். இப்படியே பகவான் பல அவதாரங்களைச்செய்து



அதிமானுஷ க்ருத்யங்களைச் செய்தார் என்பதும் இவர்கள்
நினைவில் அஸம்பாவிதம். 'சுவாமி ஒருவருக்கும் பிறக்க
வில்லை, சுவாமிக்கும் ஒருவரும் பிறக்கவில்லை' என்பது
மஹம்மதியர்களின் ஓர் முக்கிய கொள்கை.

பின்னும் சேதனர்களடங்கிய இவ்வுலகம் சுமார் 4000
வருஷங்களுக்கு முன் உண்டாயிருக்கவேண்டும். அதிலும்
2000 வருஷத்துக்கு முன்வரையில் அதிக நாகரீகங்களும்,
ஜ்ஞான வ்ருத்தியும் இல்லை. மூடபக்தி குடிகொண்டு இடி,
மின்னல், நெருப்பு, பாம்பு, மழை, முதலியவைகளினால்
உண்டாகும் பயம், ஆச்சரியம், சுகம், இவைகளினால் பல
தெய்வங்களை வணங்கி வழிபட்டு வந்தார்கள். பிறகு நாளடை
வில் விவேகமும் அநுபவமும் முற்றி ஈச்வர பக்தியும் ஆஸ்
திக்யமும் திருத்தமடைந்து உத்க்ருஷ்டமான பதவியை
யடைந்து வந்திருக்கின்றன இது எல்லாத் தேசங்களுக்கும்
துல்யம். நம்தேசத்தில் இவ்வேற்றம் மற்ற தேசங்களைவிட
முற்பட்ட காலத்திலேயே உண்டாயிருப்பினும் புராணாதி
களிலும் மற்றும் நாம் கொள்ளும் கால நியமங்கள் அங்கீ
கரிக்கத்தக்கவையல்ல.. உதாஹரணமாய் நம்மாழ்வார் கலியு
காரம்பத்தில் அவதரித்தார் என்பது அவரை உயர்த்திச்
சொல்வதற்குமே யொழிய ஸம்பாவிதமாகுமோ? உலகத்தை
யடக்கியாளும் ஐரோப்பியரின் முன்னேற்றத்துக்குக் காரண
மான க்ருஸ்துமதம் சுமார் 1920 வருஷங்களுக்கு முன்னில்லை
யென்பது சரித்திரங்களால் விளங்குகிறது. தடஸ்தமான
புத்தியுடன் பலதேச சரித்திரங்களையும் கொள்கைகளையும்
நம்முடையவைகளுடன் சேர்த்துப் படித்துத் தெளிவது உசி
தம விருத்திரூபமான பரிணாமம் (Evolution) என்பது
சேதனர் பக்கலிலும் கொள்ளவேண்டும். பூதசாஸ்திரம்
ஜந்து சாஸ்திரம் (Physical and Biological Sciences)
முதலியவைகளின் ஆராய்ச்சியினால் இந்நிரூபணம் ஸித்திக்
கும். மூலப்ரக்ருதியே இந்திரியங்கள் முதலியவைகளாக
காலக்ரமத்தில் மாறுவதுபோல் சேதனனும் தன் ஸ்வரூபாதி
களில் க்ரமேண அதிசயத்தை அடைந்து வருகிறான். பா

மோத்க்ருஷ்டமான தசையை (perfect state) யடைவது தான் மோக்ஷம். ப்ரும்மப்ராப்தியென்பதும் அதுவே. இதற்கு உதவியானவை புண்ய கர்மங்கள். மற்றவை பாபகர்மங்கள்.

இவை போன்ற இன்னும் பலவித நம்பிக்கைகளை உண்டாக்கும் கல்வியிலே அடியிலிருந்து வளர்ந்து வருவதால் த்ருடபூர்வச்ருதராய் ச்ருதி ஸ்ம்ருதிகளை விமர்சிக்கின்றார்கள். அவ்விமர்சமிருக்கும்படி :— வேதவேதாந்தங்களினால் சொல்லப்படும் மதங்கள் பல. அவை பல காலங்களில் பலரால் உபதேசிக்கப்பட்டவை. ஆதியில் க்ருஷியையே ஜீவாதாரமாகப் பாதுகாத்து வந்த நம்முன்னோர் அதற்குபயுக்தங்களான வெயில், மழை முதலியவைகளைத் தெய்வங்களாகப் பாவித்து ஸூர்யன், இந்திரன், என்று கொண்டாடித் தொழுதார்கள். இது தான் ரிக்வேத மதம். அதில் விஷ்ணு இந்திரனுக்கு உதவியாயிருந்த சில்லரைத் தேவதையொன்று. இம்மதத்தில் ஜாதி நியமாதிகளுக்கு இடமில்லை, சொல்லப்படவுமில்லை. பின்னர் யஜுர் வேதாதிகள் உண்டானபோது தான் அந்த தெய்வங்களுக்கு ப்ரீதியாகப் பசுக்களைக்கொன்று யாகஞ் செய்வதென்று ஏற்பட்டது. யாகங்களுக்கு ஸ்வரூபங்களையும் அங்கங்களையும் ஸஹகாரிகளையும் விஸ்தாரமாய் விசாரித்தார்கள். பிறகு காலம் செல்லச் செல்ல ஞானமுற்றி யாகாதிகள் நிஷ்பலமாய் ஜீவஹிம்ஸைக்கு மாத்திரம் காரணங்களாகின்றனவென்றும், இந்திரன் முதலிய தெய்வங்களைக் கொண்டாடுவது விவேகக்குறைவென்றும் கண்டு ரிஷிகள் என்னும் கூர்மதிகள் தத்வவிசாரம் செய்து ஸர்வகாரணமான ப்ரும்மத்தின் ஸ்வரூபத்தை நிர்ணயித்தார்கள். இந்நிர்ணயங்கள் தான் உபநிஷத்துக்கள். உபநிஷத்து மதங்களும் அனேகம். ஒன்றென்பது ஆகாத்தியம். இவைகளில் அறிவை முக்யமாக ப்ரதிபாதித்து அதனால் ப்ரும்மப்ராப்தி ஓதப்படும். இங்கேயும் வர்ணாச்ரமாதிகளுக்காவது விக்ரஹாராதனாதிகளுக்காவது இடமில்லை. அவை பிற்பட்ட புராணாதிகள் தலையெடுத்த காலங்களில் உண்டாயின. இவை நிற்க. ஒரு



பக்கத்தில் பக்தியென்னும் யஜ்ஞோபாஸம், தலைபூத்து அதற்கு ப்ரதிஸம்பந்தியான ஆகாரவிசேஷங்களோடு கூடிய பரமாத்மாவைச் சொல்லி ஆஸ்திகனுக்குச் சித்தஸமாதான வ்ருத்தியைப் பண்ணின ஸாத்வதம் முதலிய மதங்களும் தலையெடுத்தன. இவையெல்லாம் கலந்து இப்போது காணப்படும் மதமாகப் பரிணமித்ததை ஸர் ராமக்ருஷ்ண கோபால பாண்டார்கார் என்னும் பம்பாய் ஸமஸ்க்ருத நிபுணர் ஸங்க்ரஹித்து ஸ்ரீவைஷ்ணவமதத்தைக் குறித்து இப்படிக் கூறுகிறார். அதாவது,—'இவைகளின் உண்மை யாதென்று புலப்படுவதென்றால் ஸாத்வதர் என்னும் வகுப்பினர் வாஸுதேவனைப் பரதேவதையாகப் பாவித்து அவனை ஆராதித்து வந்தார்கள். இவ்வாஸுதேவன் ப்ரவர்த்திப்பித்த ஸாத்வதமதம் க்ரமேண தேசத்தில் பரவிய விவரம் மஹாபாரதத்தில் ஒருவாறு விளங்குகிறது. பிறகு புராணங்கள் உண்டான காலத்தில் இதன் ப்ரசாரவேகம் தணிந்து தத்வவிசாரம் மூன்று தாரைகளில் நடந்தது. ஒன்று வேதத்தில் சொன்ன விஷ்ணுவென்னும் தேவதையைப்பற்றி வந்தது. மற்றொன்று சுத்த தத்வ விசாரபரமாய் ஜகத்காரணமென்று பொருள்படும் நாராயண சப்தவாச்யமான ப்ரும்மத்தை ப்ரதிபாதித்தது. மூன்றாவது கீழ்ச்சொல்லியபடி சரித்திர விமர்சத்தால் விளங்கிய வாஸுதேவமதம். இவை மூன்றும் பிணைந்து பிற்பட்ட வைஷ்ணவமதம் உண்டானது'—என்று.

ஸத்ஸம்ப்ரதாயங்களை ஆதரியாமல் அர்த்த நிர்ணயம் பண்ணத்தொடங்கியபடியால் இத்தகைய விமர்சங்கள் நாம் விச்வஸிக்கத் தகுந்தவையல்ல. உதாஹரணமாய் 'नारायणाय विद्महे वासुदेवाय धीमहि तन्नोविष्णुः प्रचोदयात्' என்று உபநிஷத்தில் ஒரே வாக்யத்தில் ஒரே விஷயத்தைக் குறித்துப் படித்திருக்கும் நாராயண வாஸுதேவ விஷ்ணு சப்தங்களையும் அவைகளின் நிர்வசனங்களையும் கவனித்தால் ஸர் பாண்டார்காரின் அநுமானம் எப்படி ஸித்திக்கும்? மற்றும் இப்படியுள்ள அம்சங்களை விவரிக்க இங்கு அவகாசமில்லாததால் தொடங்கவில்லை.

இனி நம் மதமிருக்கும்படியை விசாரிப்போம். நம் மதக்ரந்தங்கள் வேதந்தொடங்கி நாளது வரையிலுள்ளவை கணக்கற்றவை. 1000 வருஷங்களுக்குமுன் கஜனிமஹம்மத் என்ற துருஷ்க அரசன் ஆதரவில் இத்தேசத்துக் கலைகளை ஆராய்ந்த ஆல்பிருனி என்ற மஹம்மதிய நிபுணர், இவை ஸம்பந்தமான க்ரந்தங்களுக்கு அளவே இல்லை யென்றும், அவைகளைத் தன்னறிவைக்கொண்டு நிரூபிக்கத்தான் வல்லனன்று என்றும் விஸ்மிதரானார். 'एकं यदि भवेच्छास्त्रं ज्ञानं निस्संशयं भवेत्। बहुत्वादिह शास्त्राणां ज्ञानतत्त्वं सुदुर्लभं॥ (சாஸ்திரம் ஒன்றாயிருக்குமாகில் தத்வஜ்ஞானத்தில் ஸம்சய முண்டாகாது, அவை பலவாகையால் உண்மையான ஜ்ஞானம் மிகவும் துர்லபமாயிற்று)' என்று ஸ்ரீவ்யாஸாதிகளும் எச்சரித்திருக்கிறார்கள். இதைக் கவனித்து ஸரியான வழியில் சாஸ்திரங்களைக் கற்போமாகில் வேதம், உபநிஷத்து, ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணம், ஆகமம், திவ்ய ப்ரபந்தங்கள் முதலியவெல்லாம் ஒரே மதத்தைப் பல முகமாக உபதேசிக்கின்றனவென்பதும் அவற்றில் ப்ரதிபாதிக்கப்படும் பரப்ருஹ்மமும் ஒன்றுதான் என்பதும் நன்கு புலப்படும். இதை ஸ்ரீதேசிகன் ஸ்ரீகுருபரம்பராஸாரத்தில் விசதமாயருளிச்செய்திருக்கிறார். மேலும் 'यथाधिकरणं प्रभुर्यजनदानहोमार्चना भरन्यसन भावना प्रभृतिभिस्समाराधितः। पदं दिशति देहिनां इति हि संप्रदायस्थितिः श्रुतिस्मृतिगुरूक्तिभिर्नयवतीभिराभाति नः॥ (தன்னதிகாரத்தை யறிந்து சாஸ்திர விஹிதமான யஜ்ஞம், தானம், ஹோமம், அர்ச்சனை, பரந்யாஸம், பக்தியோகம், முதலியவைகளினால் ப்ரபுவாகிய பகவானை ஆராதித்தால் அவன் தன் பதத்தைக் கொடுப்பான் என்பதல்லவோ ச்ருதி ஸ்ம்ருதி இவைகளை ந்யாய விஸ்தாரத்தோடு விளக்கும் ஆசார்ய ஸ்ரீஸூக்திகள் முதலியவையெல்லாம் ஒரே மாதிரியாய்க் காட்டும் ஸம்ப்ரதாயஸ்திதி' என்று ஸ்ரீதேசிகனால் ஸங்க்ரஹிக்கப்பட்டது.

அப்படியே இந்த ஜகத் ஸ்ருஷ்டியும் ஜ்ஞானமும் மிகவும் புராதனமென்றும், அநாதியென்றும் நமது கொள்கை. சாஸ்திரங்களின் பஹுத்வமே அதற்குத் தகுந்த நிதர்சனம். அவ்



வோ கால தேசங்களை யனுஸரித்து பகவான் ஜ்ஞானப்ரவர்த்தனம் பண்ணுவதால் அதில் முகபேதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே நமது அத்யாத்ம ஸம்ப்ரதாயம் அநாதியென்றேற்படுமே ஒழிய மேல்நாட்டார் சொல்லும்போல் ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்து வந்ததல்ல என்னக் குறையில்லை.

வேதாந்த ஸம்ப்ரதாயங்களில் ப்ருஹ்மவிசாரமும் தத்வவிசாரமும் ஒன்று சேர்ந்தே நடக்கும். ஸகல சேதநாசேதனங்களுடையவும் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்குக் காரணமெது வென்றும், அவைகளுக்கு பரஸ்பரம் யாது ஸம்பந்தம் என்றும் ஆராய்வது தத்வவிசாரம். அக்காரணத்தை ப்ருஹ்மமென்று நிச்சயித்து அதோடு இவைகளின் வாசியைத் தெளிவது ப்ருஹ்மவிசாரம். எல்லா மதங்களும் ஜீவன், ஈச்வரன், அசேதனம் என்னும் விஷயங்களை ஒருவிதமாய்ப் பேசவேண்டியதவச்யம். எனினும் வேதாந்தமதமொன்றுமே தத்வத்ரயசிந்தனையை முன்னிட்டுப் பரமபுருஷார்த்தத்தையும் அதை யடையும் உபாயங்களையும் விவரித்தது. 'தத்வஜ்ஞான பூர்வகமாக மோக்ஷோபாயானுஷ்டானம் வேண்டும்' என்பது முசிதம். அதில்லையாயின் சரீரமே ஆத்மா என்கிற கலக்கமும், தான் எவ்விதத்திலும் ஸ்வதந்திரன் என்கிற மயக்கமும் மாளாது. அவை மாளாவிடின் "अपसर्पेदसौ मोक्षकथाप्रस्तावगन्धतः" என்னும்படி மோக்ஷசாஸ்திரத்தை ஒருவனும் நாடான். இதன் விசேஷத்தைச் சில வருஷங்களுக்குமுன் வேதாந்த மதத்தை ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ப்ரகாசம் செய்த விவேகாநந்தர் என்னும் வங்காளி ப்ரமுகர் "கிறிஸ்துமதம் முதலியவைகளின் பெருமை அவற்றை ப்ரவர்த்திப்பித்த மஹான்களாகிய இயேசுக்றிஸ்து முதலியவர்களின் பெருமையை அநுஸரித்தன. ஸ்ரீக்ருஷ்ணபகவானின் ஏற்றம் அவர் க்ருஷ்ணனென்பதாலல்ல, வேதாந்தமதத்தை உபதேசித்தார் என்பதே அவர் மஹிமை' என்று கூறினார். அநுபவத்திலும், மற்ற மதங்கள் தந்தம் ப்ரவர்த்தகர்களின் செல்வாக்குக்கு அநுகுணமாய்ச் செழித்தும் மங்கியும் வந்தன. வேதாந்தமதம் தன் பெய

சால் வழங்கும் சமயங்களுக்கெல்லாம் இடம் கொடுத்தும் தன் ஸ்வரூபத்துக்குக் கொஞ்சமும் கொத்தை வாராதபடி விளங்கி எவ்வித உபரோதங்களுக்கும் பின் வாங்காமல் நிற்கின்றது.

இப்படி ஈச்வரன், ஜீவன், அசேதனம், என்னும் தத்வங்களை அறிவதில் ஸம்சயம், விபரீத புத்தி முதலியவை மாறி ஸர்வகாலத்திலும் உண்மை யென்னும்படியான வேதாந்த மதம் ஸித்திக்கும் என்பதை ஸ்ரீதேசிகன் ‘आचार्योद्गापितस्युः कतिकति कवधीचित्रवृत्तत्तदर्थेष्वनन्त्यादास्तिनास्त्योरनवधिकुहनायुक्तिकान्ताः कृतान्ताः । तत्त्वालोकस्तु लोन्तु प्रभवति सहसा निरस्तमस्तान् समस्तान् पुंस्त्वे तत्त्वेन दृष्टे पुनरपि न खलु प्राणिता स्थाणुतादिः ॥’ என்றருளிச் செய்தார். இதன் பொருள் :— மூன்று தத்வங்களின் இயற்கையான குணங்களில் சிலவற்றைத் தள்ளியும், ஒரு தத்வத்துக்குரிய சிலவற்றை மற்றொன்றுக்குச் சேர்த்தும், விபரீத யுக்திகளைக்கொண்டும் கவிகளின் மனோதர்மம்போல அநந்தங்களான விசித்ரமதங்கள் உண்டாவது ஸஹஜமே. ஆயினும் ஒருவன் நிற்கும் நிலையில் அது புருஷனோ, மரமோ என்று ஸந்தேஹம் உண்டானால் அதில் கைகால் முதலிய அவயவங்களின் அமைப்புகளையும் சேஷ்டிதங்களையும் கண்டு அது புருஷன் தான் மரமல்லவென்று தெளிவதுபோல் தனக்கொப்பில்லாத ப்ரபாவத்தையுடைய இத்தத்வக்கண்ணாடியின் உதவியினால் அவைகளை எளிதில் கண்டு அகற்றலாம்—என்பதே. கீழ்ச்சொன்ன ஆல்பிருனி என்னும் மஹாமதியரும் தத்வ விசார பூர்வமான நமது மதத்தின் பெருமையை ஸ்ரீவ்யாஸபகவான் ‘இவ்விருபத்தைந்து தத்வங்களையும் (இருபத்து நாலு ப்ரக்ருதி தத்வமும், ஆத்மதத்வமும்) உள்ளபடி யறிந்தவன் எந்த மதத்தைத் தழுவியவனாகிலும் மோக்ஷம் பெறுவான் என்பது திண்ணம்’ என்றருளிச்செய்ததாக வரைந்திருக்கிறார்.

இந்தத் தத்வ நிரூபணத்துக்கு ப்ரத்யக்ஷாநுமானங்கள் மட்டும் ஸாதனங்களாகா வென்பதை ஸர்வஸித்தாந்திகளும் ஒப்புக்கொள்ளவேண்டும். ‘அத்யந்த அதீந்த்ரிய விஷயத்



தில் சாஸ்த்ர மூலமில்லாத ஸம்ப்ரதாயம் துஷ்கரம்’ என்றும், ‘உபயுக்தமாகாது’ என்றும் ஸ்ரீதேசிகன் நியமித்தார். அநந்த ஆச்சர்ய நாநாவித விசித்ர ரூபங்களோடு கூடிய ஜகத்து ஸர்வஜ்ஞதை ஸர்வசக்தி முதலிய குணங்களையுடைய ஒரு மஹா புருஷனால் ஒரு காலத்தில் ஸ்ருஷ்டிக்கப்பட்டது என்றிவைபோன்ற பக்ஷங்களை கேவலம் யுக்தியினால் ஸாதிக்கப் பார்க்கில் இது ஒரு நிலையில் நில்லாது. ஒரு காலத்தில் மஹா மேதாவியாயிருந்தவர் யுக்திகளை மற்றொரு காலத்தில் அவரினும் கூர்மையான புத்தியையுடைய மற்றொருவர் நிராகரிக்க நேரிடும். மேலும் யுக்தியினால் ஒரே ஈச்வரன் தான் உண்டென்றாவது, அவன் வேறு உதவியில்லாமல் ஸ்ருஷ்ட்யாதிகளைச் செய்கிறான் என்றாவது இவைபோன்ற மற்றெவ்வித விஷயங்களையாவது ருஜுப்படுத்த முடியாது. ஆகையால் வேதாந்த விசாரத்துக்கு சாஸ்திரமே ப்ரமாணமென்று ஸ்ரீ வேதவ்யாஸ பகவான் “शास्त्रयोनित्वात्” என்கிற ஸூத்திரத்தில் நிபந்தித்தார். ஸ்ரீதேசிகனும் ‘தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்க வல்லராயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய் போருகிறது’ என்று ஸாதித்தருளினார்.

பிரதேசத்து மதங்களும் பைபில், கோரான், என்று சாஸ்திரங்களை மூலமாகக்கொண்டிருக்கின்றன. அவைகள் சில காலங்களில் சில ப்ரமுகர்களாலியற்றப்பட்டன. வேதங்கள் அபௌருஷேயங்கள் என்றும் அநாதியென்றும் நமது கொள்கை. இதெல்லாம் அவ்வோ மதாபிமானிகள் அபிஸந்தியைப் பொறுத்ததென்று கொண்டாலும் வேதமும் வேதாந்தமதமும் மற்றவைகளுக்கெல்லாம் முற்பட்டதென்பதை எல்லோரும் ஒருவாறு அங்கீகரிக்கிறார்கள். ஆஸ்திகனுக்கு அபேக்ஷிதமான அர்த்தங்களும் வேதாந்தத்தில் போல் வேறெங்கும் காணப்படுவதில்லை யென்பதும் ஸர்வ ஸம்மதம்.

இவ்வேத வேதாந்தங்களும் அவைகளை விளக்கும் ஸூத்ரம், புராணம், பாஷ்யம் முதலியவையும் நடையாட்டத்தில்

ப்ரதிவஸ்துக்களிலும் உள்ளும் புறம்பும் வியாபித்துப் பூர்ணனாயிருக்கும். ஜீவனோ அணுஸ்வரூபன், இவன் ஸ்வரூபாதிகளெல்லாம் ஈச்வராயத்தமாயிருக்கும். இவன் அதிஸூக்ஷ்மமாய் எள்ளில் எண்ணெயைப் போலவும் அரணியில் நெருப்புப்போலவும் ஸர்வ அசேதனங்களிலும் ப்ரவேசிக்க வல்லனாய்த்தன் ரூபத்தில் மாறுதலையடையத் தகாதவனாயுமிருப்பன். இந்திரிய வ்யாபாரங்களுக்கு உதவிகளான மூன்று குணங்களாவது தேவன் மனுஷ்யன் பசு என்னும் ரூபபேதங்களாவது இவனுடைய சுத்த ஸ்வரூபத்தில் கிடையாது, ஜ்ஞான ஸ்வரூபனாய் நித்யனான இவனுக்குப் பிறப்பு இறப்பு என்பதில்லை, அவை சரீரத்தின் ஸ்வபாவங்கள்.

இவனுக்கு போகஸ்தானமாகிற அசேதன தத்வத்தை 'अचेतना परार्था च नित्या सततविक्रिया। त्रिगुणा कर्मिणां क्षेत्रं प्रकृते रूपमुच्यते' (ப்ரக்ருதியானது சைதன்யமும் தனக்குத்தான் தோன்றுகையுமில்லாத நித்யவஸ்து. பிறர் ப்ரயோஜனத்துக்காகவே இருப்பது. அடிக்கடி மாறுபாடடையுமியற்கையுடையது. முக்குணங்களுக்கு இருப்பிடம். ஜீவர்கள் தங்கள் தங்கள் கர்மங்களுக்கீடாக தேஹாதிகளைப்பெற்றுச் சுகதுக்கங்களை யனுபவிக்கும் க்ஷேத்ரமாயிருக்கும்) என்று சொன்னார்கள். ப்ரக்ருதி ஸம்பந்தமானது ஜீவர்களுக்கு விளைக்கும் கொடுமைகளை நினைத்து அதை 'भगवत्स्वरूपतिरोधानकरीं विपरीतज्ञान जननीं स्वविषयायाश्च भोग्य बुद्धे र्जननीं (பகவத் ஸ்வரூபத்தை மறைப்பதத்வங்களை உள்ளபடி அறியவொட்டாமல் விபரீதஜ்ஞானத்தை உண்டாக்குவதும் தன் திறத்திற் கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலு மைங்கருவி கண்ட இன்பத்தில் போக்ய புத்தியை விளைவித்துத் தன்னுருக் கொடுத்து வேற்றுருக்கொள்ளும்படி பண்ணுவதும்)' என்று ஸ்ரீபாஷ்யகாரர் சுருங்கவருளிச்செய்தார்.

ஆகவே ஜீவனுக்கு ப்ராக்ருத ஸம்பந்தமும் அதடியாக வரும் ஸுகதுக்கங்களும் அவன் ஸ்வரூபத்துக்கு அனுரூபமல்ல, பகவத் ஸம்பந்தமும் அவனனுபவமுமே அனுரூபங்கள் என்பது ஸித்தம்.



இத்தத்வ விவேகத்துக்கு ப்ரயோஜனம், தான் ஈச்வரனைப் போலவே அவனிச்சையாலே ஜ்ஞானாநந்த ஸ்வரூபனாய், பசி, பிணி, மூப்பு முதலிய துன்பங்களற்றவனாய், அவனோடொக்க எழிற்பதத்திலே ஆநந்தானுபவம் பண்ணிக்கொண்டு தன்னுகப்பாய் தன் ஸ்வரூபத்துக்குரியதான வழுவிலாவடிமையை அவன் திறத்தில் ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னிச்செய்து மீட்சியில்லா வாழ்ச்சியைத் தன் கூறாகப்பெறவேண்டியிருக்க, பீஜாங்குர ந்யாயத்தாலே அநாதியாகத்தான் செய்து வந்த கர்மங்களுக்கீடாக ப்ரக்ருதியாகிற சிறையாலே ஸத்வாதி குணங்களாகிற முப்பிரிக் கயிற்றாலே கட்டுண்டு மீள விரகில்லாமலிருக்கும் நிலைமையைத் தெளிந்து, விபரீதங்களில் ஆசை நீங்கி, அடையவேண்டியவற்றில் அபேக்ஷையும் பிறந்து, அவற்றைப் பெறுவதற்குத் தகுந்த உபாயத்தைத் தேடுவதேயாம். இது தான் மோக்ஷமென்பது. அதாவது தன் குற்றத்தாலே நீண்ட காலமாய் இழந்த தன் பேற்றை மீளப்பெறுவது.

இப்பேறானது "जक्षत्, क्रीडन्, रममाणः" என்கிறபடிகளிலே அப்ராக்ருத போகங்களை ஈச்வரனோடு ஸமமாய் ஒருவயதுச் சிநேகிதனைப்போல் அநுபவிப்பது ஒருபடியிருக்க பகவானை நித்யவிபூதியில் ஸேவித்து அவனுக்கு ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்களையும் ப்ரீதியாலே செய்து ஆனந்திப்பதாயிருக்கும். இக்கைங்கரியம், லோகானுக்ரஹமாக பகவான் அவதரிக்கும் ஸமயங்களில் தானும் அவன் பரிஜனமாக வந்து பிறப்பதும், அவன் ப்ரவ்ருத்திகளில் ஸஹகாரியாயிருப்பதும், பகவந்நியமனத்தாலே ஜ்ஞான ப்ரவர்த்தனாதிகளைப்பண்ண தான் மாத்திரம் மீண்டு வருவதும், இப்படிப் பலவிதமாயிருக்கும். ப்ரபன்னன் இங்கிருந்த காலம், முக்த தசையை யனுஸரித்துச் சாஸ்திரம் சொன்ன நிலைகளிலிருக்கவேண்டியவனாகையால், இங்கும் மேல்சொன்னபடிகளில் கைங்கரியத்தையே பரமபுருஷார்த்தமாக நாடவேண்டும். அது பரிபூர்ண பரமோதாரனான ஸ்வதந்

த்வயங்களின் ஸ்வரூப ஸம்பந்தங்கள் மாயை நீங்கிய பாமார்த்ததசையில் இல்லையாதலின் பகவத்பக்தி பகவதாராதனம் முதலியவைகளுக்கு உபாதேயத்வமில்லையாகின்றது. ஆகையால் அவை பாதராயணரின் பரிணாமவாதத்தை அங்கீகரித்து ஈச்வரஜீவ அசேதனங்களுடைய பரஸ்பர பேதத்தை, கீழே சொன்ன ஸூத்ரகாரர் பரிஹரித்த சங்கைக்கு இடமில்லாமல் ஒருவாறு ஸமர்த்தனம் செய்தன. ஸ்ரீராமனுஜர் சேதனுசேதனங்கள் ஸூக்ஷ்மமாய் பகவத் சரீரபூதங்களாயிருந்து ஸ்ருஷ்டியில் ஸ்தூலமான ரூபங்களை யடைந்து, போக்யம், போக்தா ப்ரேரிதா என்னும் பிரிவுகளை வெளிப்படையாகவடைந்தன என்று நிரூபிக்கிறார்"— என்று.

இது தான் ஸ்ரீபாஷ்யகாரர் பிரவர்த்திப்பித்த ஸ்ரீவிசிஷ்டாத்வைத மதம். சேதனு சேதனங்களை, ஸ்ருஷ்டிக்குமுன் தனித்தொரு பெயரிடவொண்ணுத ஸூக்ஷ்மதசையிலும், தன் ஸங்கல்பத்தினுல் தொடங்கிய ஸ்ருஷ்டியில் ஸ்தூலதசையிலும், தன் சரீரமாக உடைய பிரும்மம் ஒன்றுமே ஸத்யம் என்று சொல்லும் மதம் என்பது. பரமஸத்யமாகும் வஸ்து (ultimate t r u t h) ஏகமாகவே இருக்கவேண்டுமென்பது ஐரோப்பிய தத்வவாதிகளின் முடிவு. ஆனுல் அதுஈச்வரனுக வேண்டுமென்பது அவர்களுக்கு அவசியமில்லை யென்பதை முன்பே சொன்னேம். வேதாந்த மதத்தின் விசேஷம், இப்படி தத்வ ஆராய்ச்சியால் அபேக்ஷிக்கும் ஏகஸத்யத்தை, "सदेव सोम्येदमग्र आसीत्" என்றிவைகளாலே ஸர்வஜ்ஞமாய் ஸர்வசக்தியாய் பரமகாருணிகனுய் ஜகத்காரணமாய் ஜகத்ரக்ஷகனுயிருக்கும் பரம்ப்ரஹ்ம புருஷோத்தமன் என்று போதிப்பதேயாகும். 'பொருளொன்றென நின்ற பூமகள் நாதன்' என்று ஸ்ரீதேசிகனும் அருளிச் செய்தார்.

சேதனுசேதனங்களுக்கும் இவற்றுக்குமுண்டான ஸம்பந்தத்தை உபநிஷத்தில் "यः पृथिव्यां तिष्ठन् पृथिव्या अन्तरो यं पृथिवी न वेद। यस्य पृथिवी शरीरं यः पृथिवीमन्तरो यमयति। एष आत्मा अन्तर्याम्यमृतः" 'யாதொருவன் பூமிக்குள்ளிருந்தும் பூமியைவிட வேறுனவனே, யாவனை பூமி அறியவில்லையோ, யாதொருவன் பூமிக்



குள்ளிருந்து அதை நியமிக்கிருனே அவன்தான் பரமாத்மா' என்று தொடங்கிச் சொல்லும் வாக்கியங்களைக்கொண்டு பூர்வாசார்யர்கள் நிரூபித்தார்கள். இவ்வுபநிஷதர்த்தத்தை நம்மாழ்வார்,

'திடவிசும் பெரிவளி நீர்நிலமிவை மிசை,
படர்பொருள் முழுவதுமாயவையவைதொறும்,
உடன்மிசை உயிரெனக்கரந்தெங்கும் பரந்துளன்
சுடர் மிகு சுருதியுளிவையுண்டசுரனே'.

என்று வ்யாக்யானம் செய்தார். இப்படி ஜீவனும் ஈச்வரனும் உடலுமுயிருமாய் நிற்கிறநிலையினுல் தான், பரப்ரும்மத்தைக் குறித்து பிரவருத்தமான சாஸ்திரத்துக்கு சாரீரக சாஸ்திரமென்று பெரியோர் பெயரிட்டார்கள். "अत एव हि परं ब्रह्माधिकृत्य प्रवृत्तं शास्त्रं शारीरकमिति अभियुक्तैरभिधीयते" என்று ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்தார்.

இந்த ஸம்பந்தமடியாகத்தான் சேதனன் சரண்யனைக் குறித்து 'पिता त्वं माता त्वं दयित तनयस्त्वं प्रियसुहृत् त्वमेव त्वदीयस्त्वं भृत्यः तव परिजनः त्वद्गतिरहं प्रपन्नश्चैवं सत्यमहमपि तवैवास्मि हि भरः ॥' என்று ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தபடியே அவனைத் தஞ்சமாகிய தந்தைதாயென்றும், குருவென்றும், கதியென்றும், தயிதனயன் என்றும், ஸுஹ்ருத் என்றும் ப்ரார்த்தித்து ஸந்தோஷிக்கவும், தன்னை சாஸ்திரங்கள் சொல்லுகிறபடியில் அவனுக்கு ஹ்ருதயங்கமனென்றும், புத்ரனென்றும், ப்ரேஷ்யன் என்றும் உகக்கும்படி ஸமர்ப்பிக்கவும் ப்ராப்தமாகிறது.

இப்படி ஸம்பந்தங்கொள்ளாவிடில் உபநிஷத்துக்களில் மேல்பார்வைக்குப் பரஸ்பர விருத்தங்களாகக் காணப்படும் வாக்யங்களுக்கு ஸரியாய் ஐககண்ட்யம் பண்ணமுடியாது. ஆனதுபற்றியே ஸ்ரீசங்கராசாரியர் ஜீவ ஈச்வர பேதஞ்சொல்லும் ச்ருதிகள் பரமாப்தமானப் பிரமாணங்களல்லவென்றார். ஸ்ரீமத்வாசாரியர் ஜீவஈசுவரபேதத்தைக்கொண்டு, அவற்றுக்கு எவ்வித ஸம்பந்தத்தையும் கொள்வது அஸங்கதமென்று அபேத வாக்யங்களைத் தள்ளிவிட்டார். எல்லாவற்றையும் இணைத்து அபேத வாக்யங்களைத் தள்ளிவிட்டார். எல்லா வாக்கியங்களுக்கும் ஸமான கௌரவங்கொடுத்து அர்த்த நிர்ணயம் பண்ணுவதுதான் ஸமீசீன ந்யாயம் என்பது யாவ

ரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயம். உதாரணமாய், ஒரு சட்டத்தில் சில பிரிவுகள் (செக்ஷன்கள்) பரஸ்பர விருத்தங்களாகத் தோற்றினால், ஸாத்தியமானவரையில் அவைகளுக்கு ஒன்று சேர்த்துப் பொருள் கொள்ளவேண்டியது முதற் கடமையென்பது சட்ட நிபுணர்களறிந்த விஷயம். அது எவ்விதத்திலும் முடியாவிட்டால்தான், முன் பிரிவுகளை யனுசரித்துப் பிந்தியவைகளை ஒப்பவேண்டுமென்பதும். வேதாந்த வாக்கியங்களெல்லாம் பிரமாணங்களாகையாலே இங்கு இது மிகவும் ஆப்தமான ந்யாயமாகும். இதைக் கொண்டு விமர்சிக்கும்போது ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தமொன்றே உபநிஷதர்த்தங்களைச் சரியாக வெளியிட்டதென்னத் தடையில்லை. இப்படியே இச்சம்பந்தத்தைத் தெளிந்தவனுக்கு தேவதாராதன ரூபமான யஜ்ஞாதிகளை விவரிக்கும் பூர்வபாகமான வேதமும் வேதாந்தமும் ஒரே சாஸ்திரம் என்பதும் புலப்படும். அக்னி இந்திரன் முதலிய தேவதைகள் பகவானுக்குச் சரீரபூதர்களென்றும் அவர்களை ஆராதிப்பதினால் அவர்களுக்கந்தர்யாமியான பரப்ருஹ்மசப்தவாச்யனான ஸ்ரீமந்நாராயணனே ஆராதிக்கப்படுகின்றான், அவர்களிடத்தில் அபேக்ஷிக்கும் பலன்களை உண்மையில் பகவானே கொடுக்கிறான் என்றும், 'यो यो यां' இத்யாதிகளிலே ஸ்ரீகீதாசார்யனருளிச் செய்தான்.

'அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவரிறையவரெனவடியடைவர்கள்
அவரவரிறையவர் குறைவிலரிறையவர்
அவரவரவர் விதி வழியடைய நின்றனரே'

என்று நம்மாழ்வார் பாசுரம். கனைகடல் போலொரு நீரும் சூத்திரம் யென்றறியாமல், மீமாம்சகர்கள் வேதத்தின் உடலை மாத்திரம் கண்டு கேவல கர்மங்களே மோக்ஷங்கொடுப்பவையென்று எண்ணினார்கள்; மாயாவாதிகள் வேதத்தின் சிரத்தை மாத்திரம் கண்டு கலங்கியதால் பரமார்த்த தசையில், அவர்கள் கொண்ட நிர்க்குணப்பிரும்மத்துக்கு, ஆராதனப் பிரதிபாதகமான பூர்வகாண்டம் காரியகரமாயிற்றில்லை. நவீன விமர்சகரோவென்றால் வேதத்தின் இரண்டு பாகங்களி



னும் கணக்கற்ற மதங்களைக் கண்டு பிடித்திருக்கும் விவரத்தை இதன் ஆரம்பத்திலேயே சொன்னோம்!

நமது ஸித்தாந்தத்துக்கு மற்றுமொரு விசேஷமுண்டு. வேண்டும் பெரும்பயன் வீடென்று தெளிந்தவருக்கு விதிக்கப்பட்ட (மோக்ஷ) உபாயங்கள் பொதுவாய் உபாஸநமென்றும் ந்யாஸம் அல்லது ப்ரபத்தி என்றும் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஜீவ ஈச்வரர்களுக்குள்ள ஸம்பந்தத்தைப்பார்த்தால் "यमेवैषवृणुते तेन लभ्यः तस्यैष आ॥ विवृणुते तनूं स्वां (யாதொருவனையே பரமாத்மா வரிக்கிறானோ அவன் தான் பரமாத்மாவை யடையக்கூடும், அவனுக்குத்தான் இவன் தன் ரூபத்தைக் காட்டுகிறான்)" என்று ச்ருதி சொன்ன கணக்கிலே, பரமபுருஷன் நம்மை விரும்பும் வழியை நாடவேண்டும். அவ்வழிதான் அவனிடத்தில் ஏகாந்த பக்தி செய்வது என்று சரண்யன் தானே பலகாலும் பேசினான். பக்தியென்பது அன்பு அல்லது ஒரு ப்ரீதி விசேஷம். சாஸ்திர விஹிதங்களான கர்மானுஷ்டானங்களாலே இந்திரியஜயம் பெற்று, அவ்விந்திரியங்களை வெளி விஷயங்களிலிருந்து திருப்பி பரமாஸமான பரிசுத்த ஆத்மஸ்வரூபானுபவத்தில் செலுத்தி அவ்வளவில் திருப்தியடையாமல் அதன் மூலமாய் தனக்கு அந்தர்யாமியான பகவானை ஸாக்ஷாத் கரித்து அதனால் உண்டாகும் ப்ரீதி கரை புரண்டு, அஸ்ஸாக்ஷாத் காரத்தை விச்சேதமில்லாமல் அனுபவித்துச் சரண்யன் ப்ரீதியை சம்பாதித்தல் உபாஸநம் என்னப்படும். இது பக்தியோகம் என்று பெயருள்ளது. இப்படிப்பட்ட த்யானத்துக்கு அவலம்பனமாக உபதேசிக்கப்பட்ட பகவத் ஸ்வரூபாதிகளை யனுசரித்து, உபாசனத்தில் பல உட்பிரிவுகளுண்டு. ஆனால் இவைகளெல்லாம் கர்மானுஷ்டானங்களையும் அத்யயனாதிகளையும் அபேக்ஷிப்பதால், இம்முக்திமார்க்கத்தை அனுஷ்டிப்பதற்கு த்ரைவர்ணிகர் மாத்திரம் அதிகாரிகளாவர். சூத்ராதிகள் அனுஷ்டிக்க விரகில்லை. ந்யாஸமென்னும் மற்றொரு உபாயம் ஸர்வாதிகாரமாக விதிக்கப்பட்டது. தன்னை ரக்ஷித்துக்கொள்ளத் தன்னிடத்தில்

ஒரு கைம்முதலுமில்லை யென்றும், ஸர்வேச்வரன் தவிரத் தானும் பிறரும் தனக்கு ரக்ஷகராக மாட்டார்கள் என்றும் தெரிந்து நொந்தவரே இதற்கு அதிகாரிகள். அஹிம்ஸை, ஸத்யவசனம் முதலியவைகளை எல்லா ஜாதியாருக்கும் பொதுவாக விதித்ததைப்போல், ந்யாஸம் என்னும் சரணாகதியையும் வேதமே ஸர்வ வர்ண ஸாமாந்யமாக விதித்தது. சரண்யனுடைய "सुहृदं सर्वभूतानां" என்னும் படியான கல்யாண குணங்களிலீடுபட்டு, அபேக்ஷித்தால் ரக்ஷிக்குமென்னும் திருட விச்வாஸத்துடன் நம்மாத்மாவை அவன் பரமாக ஸமர்ப்பிப்பது தான் சரணாகதி. இதுவும் பக்தி ரூபம் தான். ஸர்வோபஜீவ்யமான இம்மோக்ஷோபாயத்தை இதரவித்தாந்திகள் அறியவில்லை. நானே ப்ரும்மம் என்னும் ஜ்ஞானமே மோக்ஷம் என்னும் அத்வைதமதத்துக்கு ந்யாஸவித்யை பொருந்தவும் பொருந்தாது. எனவே சூத்ராதிகளுக்கு அம்மதத்தில் மோக்ஷோபாயங்களில் அந்வயமில்லை என்று ஸித்திக்கும். "सर्वस्य शरणं सुहृत्" என்று ச்ருதி சொன்னதும் ஈச்வரன் திறத்தில் பொய்யாய்விடும் "विश्रा-यन्द्रिरूपर्युपर्यपि दिवानक्तं वहिर्दर्शने रसदेशिक संप्रदायरहितैरद्यापिनालक्षितः। स्वप्राप्तेस्स्वयमेव साधनतया जोघुष्यमाणश्श्रुतौ सत्वस्थेषु भजेत सन्निधिमसौ शान्तावधिश्शेवधिः॥ (வேதாந்த ஸித்தமாய் ஸ்ரீபாஷ்யகாரரால் பிரவர்த்திக்கப்பட்ட பூர்வாசார்ய சம்பிரதாயத்தில் ஈடுபடாதவர்கள் மற்ற தர்சனங்களில் நிஷ்டையுடையராய் இரவும் பகலுமாக பகவத்கதா பரிசயம் பண்ணிக்கொண்டிருந்தபோதிலும் பகவத் ப்ராப்திக்கு பகவானே ஸாதனம் என்று வேதங்களில் உத்கோஷிக்கப்படுகிற இம்மஹாநிதியை நாளது வரையில் கண்டதில்லை. அது ஸத்வ நிஷ்டர்களுக்கு மாத்திரமே புலப்படும்)" என்று ஸ்ரீதேசிகன் நம் ஸம்பிரதாயத்தின் பெருமையை வெளியிட்டார். இதுவே நம்மாழ்வார் திருவாய்மொழி முழுவதிலும் உபதேசித்த அர்த்தம் என்பதை "देवःश्रीमान् स्वसिद्धेः करणमिति वदन्नेकमर्थं सहस्रे" என்றும் இவரே அருளிச்செய்தார்.

வேதாந்தார்த்தங்களை உள்ளபடி யறிவதற்கு ஆழ்வார்களின் திவ்யஸூக்திகள் இன்றியமையாத ஸாதனங்கள்



என்பதை ஸ்ரீதேசிகன் 'இவர்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ் மாலைகளுந்தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே' என்று அருளிச்செய்தார். இவைகளின் பெருமையை யறியத்திற மில்லாமல் இகழ்ந்தவர்களைக் குறித்து ஸ்ரீமணவாள மாமுனிகள் 'ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையும் தாழ்வாய் நினைப்பவர்கள் தாம், நரகில் வீழ்வார்கள்' என்று நிர்தேசித்தருளினர். திவ்யப் பிரபந்தங்களையும் உபநிஷத்துக்களையும் சேர்த்து ஓதுவோமானால், இவைகளின் உபகாரத்தைப் பெருமையாலேயிறே மதாந்திரங்கள், கீழ் விவரித்தபடி, வேதாந்த வாக்கியங்களை ஏககண்டமாக வ்யாக்யானம் செய்யக்கூடவில்லையென்று உறுதியாகச்சொல்லாம். ப்ரஹ்ம சூத்திரங்களுக்கு இப்போது காணப்படும் பாஷ்யங்களெல்லாம் திவ்யப்பிரபந்தங்களுக்குப் பிற்காலத்திலேயே உண்டாயினவென்பது நிச்சயம். ஸ்ரீபாஷ்யம் ஒன்று மட்டுமே ஸ்ரீபாதராயண சிஷ்யரான போதாயன பகவான் நிர்மாணம் செய்த விருத்தியையும் அதை யொட்டி ஓரான் வழியாக உபயவேதாந்தங்களையும் ஒத்து ஆசார்ய பாரம்பரையில் சேமித்து உபதேசித்து வந்த வர்த்தங்களையும் கொண்டு, "तन्मतानुसारेण सूत्राक्षराणि व्याख्यास्यन्ते" என்று ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீசங்கராசார்யரோவென்றால், 'பிரபஞ்சம் மித்யை, ஸம்ஸாரம் முதலியவைகளும் அப்படியே, அஜ்ஞானத்தால் இவைகளை உண்மையென்று பிரமிப்பதைப்போக்கி, ஆத்ம ஐக்கியத்தை வேதாந்தங்கள் உபதேசிக்கின்றன" என்று தன் மதத்தைச் சொல்லி, இவ்வர்த்தத்தை சாரீரக ஸூத்ரங்களில் காட்டுகிறோம், "यथाचायमर्थः सर्वेषां वेदान्तानां तथा वयमस्यां शारीरकमीमांसायां प्रदर्शयिष्यामः" என்று பிரதிஜ்ஞை பண்ணினர். இதனையும் ஸர் பாண்டார்கர் சொன்ன அபிப்பிராயத்தை ஒருவாறு ஆமோதிக்கக்குறையில்லை.

இங்கு ஆதுநிக விமர்சகர்கள் இப்பிரபந்தங்களைப்பற்றியும், அவைகளில் காணப்படும் பரதேவதா விஷயமாயும் கூறும் அவற்றுக்குச் சமாதானம் சொல்லவேண்டுவது உசிதமேயாகிலும், பிரகிருதத்தை அனுசரித்து அதைத் தொடங்க

யதில் ஒரு வித ஏற்றமும் தெரியவில்லை. அநுபவத்திலும், வாஸ்தவமான நியமத்துடன் இருக்கும் பிராம்மணச் சிரேஷ்டர்கள்பக்கலில் ஒருவரும் இன்றும் ஆதரவு குறைவதில்லை. பிராம்மணவேஷத்துடன் அதிக்கிரமங்களைச் செய்துகொண்டிருப்பவர் திறத்திலும், இராஜாங்கம் உத்தியோகம் முதலியவைகளில் விசேஷப்பதவிகளையடைய வேணுமென்பதை யிட்டுமே பிராம்மண இதரர் பாராட்டும் த்வேஷாதிகள் என்பதற்கையமில்லை.

கீழ்குறித்த லாகாலேஜ் பிரசங்கத்தில் அக்கிராசனாதிபதியாக விருந்த ஸ்ரீமான் கனம் ஜஸ்டிஸ் சதா சிவ்வய்யரவர்கள் தம்மைப்போன்ற இக்காலத்திய பிராம்மணர் ஸ்வயம் ப்ரயோஜனமாக அத்யயநாத்தியாபநாதிகளைச் செய்து வாராமல் திரவ்யார்ஜ்ஜனாதிகளி லிறங்கியிருப்பதால் வைசியர்களே யாவர் என்று மொழிந்தார். இப்படியே பலரும் வர்ணாசிரம தர்மாதிகளை யனுஷ்டிப்பதால் ஐஹிக வ்யாபாரங்களுக்கிடையூராகுமென்று நினைத்து, அது பிராம்மணருக்குச் செல்வாக்கிருந்த காலத்துக்குப் பொருந்தியிருந்த போதிலும் இக்காலத்துக்குச் சரிப்படாதென்கிறார்கள். இதுவும் அதிவாதம். யுகஸ்வபாவத்தாலும் காலதேச வைகுண்யத்தாலும் பிராம்மணர் ஸ்வவ்ருத்திகளைக் கொள்வது சாஸ்திரசம்மதமேயாகும். ஆஸ்திகன் சரீரஸமரக்ஷணம் பண்ணுவதும் குடும்ப பரணம் பண்ணுவதும் பகவதாராதன உபயுக்தமாகையாலே, அவைபிராம்மணனுக்கு விரோதமல்ல. ஸ்ரீகீதையில் 'यत्करोषि यदश्नासि' என்பதற்கு ஸ்ரீபாஷ்யகாரர் "यद्देहयात्रोपभूतं लौकिकं कर्मकरोषि, यच्चदेहधारणायाश्नासि (தேகயாத்திரைக் கவசியமாகச் செய்யும் லௌகிக கர்மங்களையும், சரீரத்தை தாங்குவதற்காக போஜனாதிகளைச் செய்வதையும்)" என்று வ்யாக்கியானம் செய்து, அவைகளையும் பகவதர்ப்பணமாகச் செய்யவேண்டுமென்று சேர்த்தார். கீழும் "शरीरयात्रापि च ते न प्रसिद्ध्येदकर्मणः" என்னுமிடத்தில் 'यावत्साधनसमाप्ति शरीरधारणं चावश्यंकार्यं, न्यायार्जितेन धनेन महायज्ञादिकं कृत्वा तच्छिष्टाशनेनैव शरीरधारणं कार्यं' என்று ஜ்ஞாநநிஷ்டரும் கூட உபாய பூர்த்தியாகும் வரையில் ந்யாயமான மார்க்கத்தில் ஸம்பாதிக்கப்பட்ட திரவியங்களைக்கொண்டு விஹிதமான ஆராதனாதிகளைச் செய்து சேஷமான அன்னத்தை புஜித்து தேஹதாரணம் பண்ணவேண்டுமென்றார். ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷையில் 'उपादान' என்னும் இரண்டாவது காலதர்மத்தை விவக்ஷிக்குமிடத்தில் "उपेयादीश्वरं चापि योगक्षेमार्थ सिद्धये। साधयेधविविधानर्थान् कुटुम्बार्थं ततो द्विजः॥" பகவதாராதன உபயுக்தமாக விப்ரன் அர்த்தங்களை ஸம்பாதிக்கவேண்டுமென்பதற்கு இது சால்திர சம்மதமென்று காட்ட, "अत्रापि 'कुटुम्बार्थं' इति वचने केवलतादर्थमविवक्षितं तद्वद्देस्सर्वत्रप्रतिषेधात्—गीयते च स्वयमेव भगवता— 'यज्ञार्थात्' ** कर्मणोऽन्यत्र लोकोयं कर्मबंधनः। तदर्थं कर्मकौन्तेय मुक्तसंग समाचर" इति. अतो भगवदाराधनरूप यज्ञशिष्टेन कुटुम्बभरणमपि भगवदाज्ञानुपालनरूपमेवेति तद्विवक्षया महर्षिणा कुटुम्बार्थमित्युक्तं (குடும்பார்த்தமாக' என்பதற்கு கேவலம் அதற்காக என்றர்த்தமல்ல, அது கூடாதென்று ஸ்ரீகீதையில் பகவான், ஆராதனரூபமில்லாத கர்மங்களெல்லாம் பந்தஹேதுக்களென்று அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். ஆகையால் இங்கு மஹர்ஷி சொல்வது பகவதாராதனரூபயஜ்ஞசேஷத்தைக்கொண்டு குடும்ப பாலனாதிகளைப் பண்ணுவதும் பகவதாஜ்ஞாநுபாலனமேயாகும் என்பது),' என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தார். இப்படிப் பிரமாணங்கள் பல வுளவாகையால், காலதேசாதிகளுக்கிணங்கப் பிராம்மணன் த்ரவ்யார்ஜனமும் செய்து யதாசக்தி தன் வர்ணாச்ரமதர்மங்களையும் அநுஷ்டிக்கக் குறையில்லை.

"चराचराणि भूतानि सर्वाणि भगवद्वपुः। अतस्तदानुकूल्यं मे कार्यमित्येव निश्चयः॥ (சராசரங்களான சகல பூதங்களும் பகவத் சரீரபூதர்களாகையாலே அவர்கள் திறத்தில் அநுகூலனாக நடப்பேன் என்று ஸங்கல்பித்தே பிரபத்தி சரணமே பண்ணக்கடவேன் என்று ஸங்கல்பித்தே பிரபத்தி செய்யவேண்டு)' மென்று ஸ்ரீதேசிகன் சிக்ஷித்தார். ஆகையால் பிரபந்நரான பிராம்மணரும் கீழ்ஜாதியாரின் மேம்பாடுகளுக்காக உழைக்கப் பிராப்தரன்றோ? அவர்களுக்குக் கல்விக்கு வசதி செய்துகொடுக்கவோ, ஸுகமாக வாழப்பிழைப்பேற்படுத்தவோ, ராஜரீகஸ்வதந்திரங்களில் அவரோடுசேர்ந்து உழைக்கவோ, வர்ணாசிரமதர்மங்கள் எவ்விதத்தில் பிரதிபந்தகங்களாகும்? Social Service என்னும் ஸஹாய உபயுக்த

மான கார்யங்களை வர்ணாச்ரமதர்ம நிஷ்டன் செய்தால் அவற்றை ஜனங்கள் அங்கீகரியார்களோ? இப்படித் தீர விசாரித்தால், ஜாதி அழியவேண்டும், வர்ணாச்ரமதர்மங்கள் ஒழிந்தாலன்றி நாம் கடைத்தேறுவதில்லை, என்றிவ்விதமாய்ப் பிரமுகர்கள் சிறுவர்களுக்கு உபதேசிப்பது ஒரு விதத்தாலும் உபபந்நமல்லவென்பதேற்படும். பல நூற்றாண்டுகளாக பல உபரோகங்களாலே பீடிக்கப்பட்ட இந்நாட்டில் நாமும் நம்மதமும் இதுவரையில் ஸ்வரூப நாசமில்லாமலிருப்பதற்கு இவ் வர்ணாச்ரமதர்மங்களே காரணம் என்பதை ஞாபகத்தில் எப்பொழுதும் வைக்கவேண்டும். வழிதவறினவர்களை வழியில் சேர்ப்பதற்கு முயற்சி செய்வது உசிதமேயன்றி அதோகதியாக்குவது உசிதமாகாது. ஆகையால் யதாகாலம் யதாசக்தி இவ்வருமையான ஸநாதன தர்மங்களைக் காப்பாற்றிப் பின்னோர்களுக்குக் கொடுப்பதே ஸத்வஸ்தர்களுடைய கடமையாகும்.

இப்படிக் கர்த்தவ்யாம்சங்களை நிஷ்கர்ஷித்து அனுஷ்டிக்கும்போது, ‘நாம் இவ்வநுஷ்டானாதிகளையுடையோம் என்னும் பாவனையடியாக ஸ்வோத்கர்ஷ பரநிகர்ஷாநுஸந்தானங்களாகிற படுகுழிகளைத் தப்பும்படி முன்னடி பார்த்து நடக்கவேண்டு’மென்று ஸ்ரீதேசிகன் நியமித்ததைப் பிரதிக்ஷணமும் நினைக்கவேண்டும். ப்ரபந்நன் பாகவதாபசாரத்தை எவ்விதத்திலும் பரிஹரிக்கக்கடவனென்னுமிடத்திலிவர், ‘ஜாத்யாத்யுபாதிகளாலே பாகவதர் திறத்தில், “अनुज्ञापरिहारौ देहसम्बन्धात् ज्योतिरादिवत्” என்கிறபடியாலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி விசேஷங்களுக்கு நியமமுண்டானாலும் “साधुरेव स मन्तव्यः” என்றும், “स्मृतसम्भाषितोपि वा” என்றும், ‘यश्शूद्रं भगवद्भक्तं चण्डालं श्वपचं तथा। वीक्षते जातिसामान्यात् स याति नरकं नरः॥ (பகவத்பக்தனை சூத்ரனென்றும் சண்டாளனென்றும் நாய் மாம்சம் உண்பவனென்றும், பிறந்த ஜாதியைக் கொண்டு பாவிப்பவன் நரகம் புகுவான்)’ என்றும் அறிந்து ப்ரதிபத்தியில் குறைவற்றிருக்கவும், இப்பிரதிபத்தி மாத்திரத்தாலும் “तस्येदमितिधीहेतुरप्युपकारी” என்கிறபடி பரிபூர்ண விஷயத்தில் சேஷிக்கோசித கிஞ்சித்காரமான கைங்கர்யம்



ஸித்தமென்றிருக்கவும், இன்னிலைகளிலொன்று கோணின போது ............ ம்ருத்யுவின் கடைவாயிலகப்பட்டாற் போலே நடுங்கி ............ மஹாராஜருடையவும் இளைய பெருமாளுடையவும் அயோக்யப் ப்ரஸாதனப் பிரகாரஞ் சொல்லுகிற ச்லோகங்களைப் பராமர்சித்து அப்படியே ஈரத்தவாய் தெரியாமல் வஜ்ரலேப கடிதமானாற்போலே பொருந்திப் போரவும் ப்ராப்தம்” என்றருளிச் செய்தார். பின்னும் பிரபாவ வ்யவஸ்தாதிகாரத்தில் ‘சரீர குண விசேஷமடியாக வ்யவஸ்திதங்களான சரீரஜாதி விசேஷங்கள் உத்பத்தி ஸித்தங்களாய் மரணாந்தமாக ஸ்திரங்களாக இருக்கும். மாநஸமான ஸத்வாதி குணோன்மேஷமடியாகச் சொல்லுகிற ப்ராம்மண்யாதிகள் ஸர்வ ஜாதிகளுக்கும் ஸம்பாவிதங்களாய் ப்ரஹ்லாதாதிகளுக்கு ஜன்மஸித்தங்களாய் நீக்கியுள்ளார்க்கு ஆசார்ய சம்பந்தாதி ஹேதுக்களாலே ஆகந்துகங்களாயிருக்கும். இதில் சரீர ஜாதி விசேஷங்களையிட்டு சில சாஸ்திரங்கள் நியதங்களாம். மாநஸமான ப்ராம்மண்யாதிகளையிட்டு புருஷார்த்த ததுபாயங்களும் ப்ரசம்ஸாதிகளும் ஸர்வஜாதியிலும் ஸம்பாவிதங்களாம். இதில் ப்ராம்மணாதிகள் பக்கலிலே மாநஸமான விபரீத ஆகாரங்கள் வந்தால் சமதமாதி யோக்யமாக சாஸ்த்ரஸித்தமான ஜன்மத்திலே பிறந்து தப்பினானென்று நிந்தை நடக்கும். ஜாத்யந்தரங்களிலே பிறந்து குணோத்தரனாய்ப் போந்தானாகில்............ப்ரசம்ஸை மிகவும் நடக்கும். இவற்றில் சாரீரமாயும் மானஸமாயும் வருமுத்கர்ஷம் கர்வஹேதுவாமாகில் அநர்த்தகரமாம். இவ்விரண்டு வழியாலும் வருமபகர்ஷம்.........தான் நின்ற நிலைதெளிந்து கார்ப்பண்யத்தை விளைத்து உபாயவிசேஷத்தில் மூட்டுமாகில் புருஷார்த்த காரணமாகையாலே ஸ்லாக்யமாம். இப்படி ஜாதி வ்யவஸ்தையும் ஜாத்யநுரூபமான வ்ருத்த வ்யவஸ்தையுமுண்டானாலும் ஸர்வருக்கும் பாகவதத்வ நிபந்தனமாக முன்பு சமர்த்தித்த உத்தேச்யத்வ ப்ரதிபத்திக்கு விரோதமில்லை’ என்று தெரிவித்தார். இவ்வித பராமர்சங்களைத் தன் க்ரந்தங்களில் பல விடங்களில் செய்தருளுகிறார். ஸ்ரீமத்தாத்பர்ய சந்திரி

கையில், ஸ்ரீகீதையின "परिचर्यात्मकं कर्म शूद्रस्यापि स्वभावजं" என்னும் ச்லோகத்துக்கு ஸ்ரீபாஷ்யகாரருள்பட வ்யாக்யாதாக்களெல்லாம் சப்தார்த்தத்தோடு நின்றுவிட்டதைக் கவனித்து, ஸ்ரீதேசிகன் சூத்ரர்களுக்கு த்ரைவர்ணிக சுச்ரூஷைவிஹிதமேயாகிலும், பகவதாராதநம், பாகவத நிஷ்டை, உபாயாநுஷ்டானம் முதலியவைகளிலுள்ள அதிகாரத்தை விஸ்தாரமாகப் பிரமாண புரஸ்ஸரமாகப் பிரதிபாதித்தருளுகிறார். பின்னும் ஸ்மிருதி முதலியவைகளில் சொல்லியிருக்கும் சூத்ரதர்மங்களையும் பராமர்சித்து, 'परिचर्येव (பரிசர்யையே)' என்னாமல் 'परिचर्यात्मकं (பரிசர்யை யடங்கிய)' என்றதின் ப்ரயோசனத்தையும் சொல்லுகிறார். "यद्यपिविहितव्यतिरिक्ते विषयास्सर्वनिषेधाः विशिष्टसंस्कारगुणविशेषादि-मतां शूद्राणामपि धर्मविशेषाः विहिताः तथापि ते सर्वे वर्णत्रय परिचर्याल्य प्रधानधर्माविरोधेन तन्नियुक्तैश्शूद्रैः तत्परिचर्याभावनयैव अनुष्टेयाः (சூத்ரன் செய்யக்கூடாதென்று சில கர்மங்களை நிஷேதித்ததும், இவர் செய்ய வேண்டியவைகளைத் தவிர வேறனவை. உயர்ந்த ஸம்ஸ்காரங்களையும் குணங்களையுமுடைய சூத்ரர்களுக்கும் செய்யவேண்டியதாக சில தர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை யனுஷ்டிக்கும்போது மேல்வர்ணத்தாரி னனுமதியுடன் செய்வதால், அவர் சுச்ரூஷை இது என்னும் பாவனையுடன் அவைகளைச் செய்யலாம் என்று ரஹஸ்யாம்நாயத்தில் சூத்ரர்களுக்கும் த்ரைவர்ணிகளைப்போல் ஜ்ஞானம் சம்பாதிப்பதையும், சுச்ரூஷையோடு சேர்த்துப் படித்திருப்பதையும் 'शनैः स्थानकर्मा शूद्रः (கலியுகத்திலும் சூத்ரன் மேலானவன்)' (शूद्रस्साधुःकलिस्साधुः) என்றிவை முதலிய ஸ்ரீவிஷ்ணுபுராண வசனத்தையும் தன்னபிப்ராயத்துக்கு ஆதாரமாக வெடுத்தார்.

இப்படி ஸ்ரீதேசிகன் க்ரந்தங்களையும் உபதேசங்களையும் சரியாய்ப் பன்த்தோமானல் இவர் திறத்தில் நம்மவர்கள் கூறும் குறைகளெல்லாம் நிராதாரங்களாய் அபசாரங்களாகவே முடியும் என்பது சித்தம். பிறவியில் தாழ்ந்த ஜாதியாரென்று கருதப்படுவோர் திறத்தில் பகவத்விபூதிகளென்றும் பாகவதர்களென்றும் ஸமபுத்திபண்ணிப் பரிந்தவாசாரியரி



வர் போன்றவரைக் காண்டலரிது. ஸ்ரீமந் நாதமுனிகள் துடங்கி ஆசார்யர்கள் ஸர்வோபஜீவ்யமான இவ்வைஷ்ணவமதப்பிரவர்த்தகர்களே யாகிலும், நாட்டில் அநுநிசங்கேதத்தாலேயோ, வேறெந்தக் காரணத்தாலோ மறைந்துகிடந்த சரணநெறியையும், அதில் மூண்டவர்களின் பெருமையவர் பிறந்தகுலத்தை நாடாமலிருக்கிறபடியையும் வெளியிட்டுப் பூர்வர்கள் மனோரதத்தைத் தலைக்கட்டினவர் நம் தேசிகரே. இவர் மறையுரைக்கும் பொருளெல்லாம் மெய்யென்றோர் வார் ஆயினும், சிறைவளர்க்கும் சில மாத்ஸர்யசங்கேதத்தாற் சிதையாத திண்மதியர். ஆதலின் வேதாந்த சம்பிரதாயத்தை யுகத்துக்கும் காலதேசாதிகளுக்கும் ஒத்து ஒரு படியில் நமது ஸ்வரூபங் குலையாமலிருக்கவும், ஒருபடியில் தேசயாத்திரையின் கிருஷிகள் ஆஸ்திக்யத்துக்கு விரோதமில்லாதிருக்கவும், இதில் ஸர்வ ஜன ஸௌஹார்த்தம் பெருகும்படிக்கும், தெளிவாக விஸ்தரித்தார். வேதத்தையும் பிராம்மண்யத்தையும் ஒப்பாதவர்கள் இவரை விசேஷித்து நிந்திக்கக் காரணமில்லை. ஒப்பினவர்கள் உண்மையைத் தெரிந்தால் தோஷஞ் சொல்ல விரகில்லை. க்ருதஜ்ஞதையையே செலுத்த நேரிடும்.

இன்னுமிவர் விஷயத்தில் சொல்வதை யெல்லாம் நிராகரிப்பது மிகவும் எளிது. ஆயினும் ஒன்றை மாத்திரம் குறிப்பிட்டு இவ்விஷயத்தை முடிப்போம். அதாவது, இவர் தமிழ் பிரபந்தங்களை விசேஷமாக ஆதரிக்கவில்லையென்பதும் அதினால்தான் இவர் ஸம்பிரதாயஸ்தருக்கு வடகலையாரென்று பெயருமென்பது. இதற்கு கீழேயே ஒருவாறு சமாதானம் சொல்லியாயிற்று. ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் பிரபந்தாநுஸந்தானத்தை நிலைநாட்டினவர் இவரென்பதும், அதன் பிரசாதமாக ஸ்ரீரங்கநாதனுஜ்ஞையாலே உபயவேதாந்தாசரியர் என்கிற அஸாதாரணமான திருநாமம் பெற்றவரென்பதும் புரச்சமயிகளின் வாதங்களை ஜயித்து, வேதாந்தார்த்தவை சத்ய ஹேதுவாகையாலே தமிழ் பாஷை உபஜீவ்யமென்பதையும், நம்மாழ்வார் முதலானோர் தாழ்ந்த வர்ணங்களில் அவதரித்தாலும், அவர்கள் விசேஷ வ்யக்திகளாயிருப்பது ஒருபடி நிற்க, 'ग्राह्यं ज्ञानं ब्राह्मणात् क्षत्रियाद्वा वैश्याच्छूद्रादपि नीचाद्

மிதி (அபேக்ஷிதஜ்ஞானத்தை ப்ராம்மணன், க்ஷத்ரியன் வைசியன், சூத்ரன், நீசன் இவர்களெவரிடத்திலுமாயினும் சம்பாதிக்கவேண்டும்)' என்கிறபடியே 'மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினான்' என்னும் வைபவத்தையுடைய ஜ்ஞானப்ரவர்த்தகர்களுக்கு ஜாதி நியமமில்லையென்பதையும் ஸ்தாபித்தவரிவரென்பதும், அச்சமாதானத்தைத் தாங்கி நிற்கிறது.

ஆஸ்திகர்களுக்கு மற்றும் வரும் சில கலக்கங்களுக்குச் சமாதானங்கள் வேதாந்தத்தை யொட்டிய சகல மதங்களுக்கும் பொதுவாயிருக்கும். இதில் ஒன்று ஜீவன் பலபிறப்பும் பிறப்பது என்பதைப்பற்றியது. சரீரத்தைக் காட்டிலும் ஜீவன் வேறென்று தெளிந்தால், கர்மம் அவித்யை இவைகளின் விசித்ர ப்ரவாஹத்தாலே சரீரவிசேஷங்களும் புத்தி விசேஷங்களும் மாறிமாறி வருவது ஸஹஜமென்றுதெரியும். இப்படித் தெளியாத மதங்கள் ஜன்மாந்தராதிகளில்லையென்று சொல்லுகின்றன. அவற்றில் ஒருவன் தனிகனும் ஒருவன் ஏழையாயும், ஒருவன் புத்திமானும் ஒருவன் மூடனும், ஒருவன் ஸாத்விகனும் மற்றவன் மூர்க்கனும், ஒருவன் தீர்க்காயுசாயும் மற்றவன் அல்பாயுசாயும், இப்படிப்பலவித ஏற்றக்குறைவுகளுக்குச் சரியான சமாதானஞ் சொல்ல முடியாது. சொல்லாவிடில் ஈச்வரனுக்குப் பக்ஷபாதத்தையும் நிர்தயத்வத்தையும் கல்பிக்கவேண்டிவரும். நாஸ்திகர், பௌத்தர் முதலியவர்களும் தேசாந்தர மதங்களும் இவ்விஷயத்தை சரியாக விசாரித்ததில்லை. தேஹாத்மப்ரமம் நீங்காத இவர்களுக்கு உத்தரம் சொல்லவும் விரகில்லை. கிறிஸ்து மஹம்மதிய மதங்களில் ஜீவர்கள் நித்யர்கள் என்னும் அம்சமும் பராமர்சிக்கப்படவில்லை. மரணானந்தரம் மோக்ஷம் நரகம் என்றிவையுண்டென்பதை மாத்திரம் அம்மதஸ்தர் ஒப்புகிறார்கள். அதற்கு மேல்கேட்டால் ஈச்வர ரஹஸ்யங்களைப் பரிசீலனம் பண்ண நாம அதிகாரிகளல்லவென்று முடித்து விடுகிறார்கள். 'Evolution' என்னும் விருத்தரூபபரிணாமத்தை அங்கீகரித்தவர்களும் கர்மபரிபாகத்தை அங்கீகரித்தாலல்லது பரிபாகவைஷம்யங்களுக்குச் சமாதானம் சொல்ல



முடியாது. இதையெல்லாம் நினைத்து ஸ்ரீதேசிகன் 'कर्माविद्यादि चक्रे प्रतिपुरुषमिहानादि चित्रप्रवाहे तत्तत्काले विपाकि भवति हि विविधा सर्वसिद्धान्त सिद्धा (கர்மம் அவித்யை இவைகளின் விசித்ர சக்ரப்ரவாஹத்தின் பலனாக அவ்வோகாலங்களில் பரிபாகங்கள் உண்டாகின்றன என்பது எல்லா சித்தாந்தங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது)' என்று ஸங்க்ரஹித்தார்.

மதாந்தரங்களிலும், யுக்தியிலும் சேதனன் ஸ்வதந்திரன் என்று ஏற்படுகிறது. அந்த மதத்திலோ இவன் பராதீனன்; எல்லாம் விதிப்படி நடக்கின்றன; தெய்வம் ஆட்டிவைக்கும்படி ஆடவேண்டியதுதான் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இவன் புண்ய பாபங்களுக்கு எப்படி உத்தரவாதியாவான்? விதிநிஷேதரூபசாஸ்திரங்களும், ததனுகுணமான அனுக்ரஹ நிக்ரஹங்களும், அதையனுசரித்து உலகத்தில் ஹேயோபாதேய விவேகம் பண்ணுவதும், இம்மதத்துக்குப் பொருந்துமோ? என்றும் சொல்வார்கள். இதற்கும் வேதாந்தத்தில் சொல்லும் ஸமாதானத்தை ஸ்ரீதேசிகன் ஸங்க்ரஹிக்கும்படி:—

'ஜீவனுக்கு கர்த்ருத்வமில்லை என்றில் ஸாங்க்யாதி மதமாம்; இது ஸ்வாதீனமென்றில் நிரீச்வரவாதமாம்; ஈச்வராதீனமான ஜ்ஞாத்ருத்வ மாத்ரமே உள்ளதென்றில், புருஷார்த்தருசி தவிரும்; ஜ்ஞான இச்சைகளையே கொள்ளில் ஸர்வ உபாய ப்ரவ்ருத்திகளுமில்லையாம். ஆகையால் ஜ்ஞானமும் இதன் அவஸ்தா விசேஷங்களான சிகீர்ஷாப்ரயத்னங்களும் ஜீவனுக்குண்டு ........................... ஸம்ஸாரதசையிலுள்ள கர்த்ருத்வாதிகள் பூர்வகர்மானுரூபமான ஈச்வர இச்சாவேஷத்தாலே ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களை உபாதியாகக் கொண்டுவரும். இதில் ரஜஸ்தமஸ்ஸுக்களாலும் க்ஷுத்ரஸுக ஸங்கஹேதுவான ஸத்வத்தாலும் வரும் கர்த்ருத்வம் பந்தகம். பகவத்ப்ராப்திஹேதுவான ஸத்வமடியாக வரும் கர்த்ருத்வம் மோக்ஷகாரணம்' என்றும், 'இவன் பாரதந்த்ர்யம் சாஸ்திரவச்யதைக் கனுகூலம் .................... ஏதேனுமொரு ஜாத்யாத்யுபாதிகளோடே கூடி உபதேச நிரபேக்ஷமாக அறிய விரகறிக்கே, உபதேசத்தில் அறியுமோக்

யனுயாயிருக்குமவன் சாஸ்திர வச்யன். இவன் சாஸ்திரார்த்த மனுஷ்டிக்கும்போது சித்சக்தியையும் ப்ரவிருத்தி சக்தியையும் ஈச்வரன் கொடுத்துவைக்கையாலே அனுஷ்டான உபயுக்த ஸ்வாதந்திரியமுண்டு. அசித்துக்களுக்கும் வ்யாபார ஆச்ரயத்வமுண்டேயாகிலும் ஈச்வரன் இவற்றுக்கு புத்தியைக்கொடுத்து வ்யாபரிப்பியாமையாலே சாஸ்திரவச்யத்வாதிகளில்லையாயிற்று. ஜீவனுக்கு இச்சக்தியினுடைய ஸத்பாவத்திலும், அச்சக்தியுண்டானாலும் அபேக்ஷிதம் அறியும்போதும், அதின் பலானுபவம் பண்ணும்போதும் ததுசிதங்களான ஈச்வராபிப்ராயங்கள் வேண்டுகையாலே இவன் பரதந்திரன், அவ்வளவையிட்டு 'सूत्रप्रोता दारुमयीवयोषा (கயிற்றில் கட்டி ஆட்டப்படும் மர பொம்மை போல)' என்கிறது. அநந்யபரங்களான வேதாந்த வாக்யங்களும், ஜீவனுக்கு ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களைப் பிரியக்கண்டோக்தி பண்ணிற்றத்தனை'—என்றும். ஆகையால்நம்மதத்தின்படி நாம்ஆரம்பிக்கும் காரியங்களுக்கு நாமே உத்தரவாதிகள். ஸர்வேச்வரன் ஸங்கல்பித்தாலல்லது அக்கர்மங்களின் பலன்களை அனுபவிக்கவே வேண்டும் என்று தெளிந்து, 'பொய்நின்ற ஞானமும், பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு மின்னின்ற நீர்மை இனியாமுறாமை' யென்று ஆழ்வார் அருளிச்செய்தபடி அநிஷ்டநிவிருத்தியைப் ப்ரார்த்திக்கக் குறையில்லை.

பகவதவதாரங்களின் உண்மையைப்பற்றிவரும் கலக்கங்களுக்கு பகவானே ஸ்ரீகீதையில் சமாதானம் சொன்னார். இவ்வவதாரங்கள் கேவலக்ருபாகார்யங்கள், இவைகள் ஸத்யம், இவ்வவதாரங்களில் ஈச்வரனுக்கு ஜ்ஞானம் முதலியவைகளில் சுருக்கமில்லையென்றும், சுத்தஸத்வமயமான விக்ரஹத்துடன் பகவான் தன்னிச்சை மாத்திரத்தாலே தர்மரக்ஷணம் பண்ணவேண்டுங் காலங்களிலெல்லாம் அவதரித்து ஸாதுக்களை ரக்ஷிக்கிறான் என்றும், அதற்காக துஷ்ப்ரக்ருதிகளைக் கடிகிறான் என்றும் சுருங்க வருளிச்செய்தான். இப்படி ரக்ஷணம் பண்ணுவதையே தன் பிரயோஜனமாகக்கொண்ட சரண்யனை நம்மாழ்வார் 'என்னென்ன யோனியுமாய்ப் பிறந்தாயிமை



யோர் தலைவா' என்று புகழ்ந்தார். 'நாட்டிலிற்பிறந்து மனிசர்க்காய்ப் படாதன பட்டு' என்று கரைந்தார். 'நடந்த கால்கள் நொந்தவோ' என்று பள்ளிகொண்ட பெருமாளைப் பார்த்துத் திருமழிசைப்பிரான் உருகினார். "अवजानन्ति मां मूढाः मानुषीं तनुमाश्रितं । परं भावमजानन्तः मम भूतमहेश्वरं (மனிதருபத்தையடைந்த என் திறத்தில் என் பரப்ருக்ருதியை அறியாமல் மூடர் என்னை அவமதிக்கிறார்கள்)' என்று அவன் உரைத்ததை, ஸ்ரீகிருஷ்ணன்தான் பரதேவதையென்று நிலைநிறுத்த வெகுப்பிரயாசப்பட்டாரென்று ஸர் பாண்டார்க்கார் விமர்சத்தில்காணப்படுகிறது. அக்னிமுதலியவைகளைத் தேவதைகளாகக் கொண்டாடினதுபோல் முனிதர்களையும் அவதாரங்களென்று நாட்டார் சொல்லத்தொடங்கினாராம். ஸீதாநாத் தத்வபூஷணர் என்னும் பிரம்மஸமாஜப்ரவர்த்தகர், 'விடனுப் கொலைபுரிவதையே லீலையாயுடைய' கோகுலத்து கிருஷ்ணன் பகவத்கீதை யுபதேசித்த கிருஷ்ணனல்லவென்று நிரூபித்து, இவர் ஒரு ரிஷிப்ராயரென்றும், இவரை அவதாரமென்பதற்குக் காரணம், வாமதேவரைப்போல் இவரும் பக்திபாரவச்யத்தால் தன்னுள்ளிருக்கும் பிரும்மத்தையே நினைத்தவராய்த் தன்னைமறந்து 'अहं सर्वस्य प्रभवः मत्तः सर्वं प्रवर्तते (நான் எல்லாவற்றிற்கும் காரணம், என்னிடமிருந்து எல்லாம் உண்டாகின்றன)' என்று சொல்லத்தொடங்கினர்' என்று அவதாரத்தின் அர்த்தத்தை நிரூபித்தார். ஸ்ரீபாஷ்யகாரரருளிச்செய்தபடியே ஸர்வகாரணமாய், ஸத்யஸங்கல்பனாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வசக்தியாய், பரமகாருணிகனாயிருந்துள்ள ஸ்ரீமந்நாராயணனைச்சார்ந்த நம்மதத்துக்கு இந்தக் கல்பனைகளொன்றுமன்றிக்கே ஸகலமும் ஸித்திக்கும் என்பது திண்ணம்.

'प्रतिमास्वप्रबुद्धानां' என்பதற்கு விக்ரஹாராதனம் பாமரர்களுக்கு பகவத்பக்தி உண்டாக்குவதற்காக ஏற்பட்டதென்று அனுகூல உக்தியாகச் சொல்வது வழக்கம். மனிதன் தன் கைகளினால் செய்துவைத்த பிம்பத்தைத் தெய்வமென்று கொண்டாடுவது புத்திஹீனமல்லவா என்று மஹம்மதிய ஸ்நேகிதர் ஒருவர் கேட்டார். நம் கண்ணுக்குப் புலப்படாத தெய்வமொன்றுண்டென்று நம்புவதைவிட மூடத்தன

முண்டாவென்று பதிலுரைத்தேன். ஒருவாறு அந்தரங்கத்தில் நான் நாஸ்திகனென்றும் அவர் எண்ணியிருப்பர். ஸம்பிரதாயத்தில் பிரவேசமில்லாத ஆஸ்திகர்களும் மேல் நாட்டு விமர்சகர்களின் உக்தியைக்கொண்டு, விக்ரஹாராதனத்துக்கு ச்ருத்யாதிகளில் பிரமாணமில்லையென்றும், ஆனால் அது பகவத்சின்னமாக சித்தாலம்பனத்துக்கு உபயுக்தமென்றும் நினைப்பார்கள். ரிக்வேதம் முதல் இதற்கு ஆதாரமிருக்கும்படியை ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷையில் ஸ்ரீதேசிகன் ஸங்க்ரஹித்ததையும் மற்றும் பிரமாணபூர்வமாக அர்ச்சாவதாரத்தின் வைபவாதிகளையும், அதின் தத்வத்தில் ஸர்வவித புருஷார்த்தங்களையும் அனுபவித்து ஆழ்வார்கள் ஈடுபட்டிருக்கும் படிகளையும், ஆசார்யர்கள் அனுசந்தித்த விதங்களையும் தெரிந்தவர் பக்கலில் கேட்டால், இவ்வர்ச்சாவதாரமும் 'ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम्' என்று சரண்யன், வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத அபாரகாருண்யத்தால் ஆச்ரித பாதந்திரனாய் அவரவருக்கும் உருவங்களைத் தானுகந்து, 'सर्वातिशायिषाड्गुण्यं संश्रितं मन्त्रविग्रहः' என்றபடி ஆச்ரிதர் மந்திரங்கொண்டு பிரதிஷ்டை செய்த பிம்பத்தில் அவர்கள் பிரார்த்தனைக்கிணங்கி தன் ஸர்வோத்க்ருஷ்டமான ஜ்ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ்ஸுக்களென்கிற ஆறு குணங்களில் ஒன்றாலும் குறைவில்லாமல் பிரவேசித்து நிற்கிறபடியை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறியலாம். இதை விவரிக்கவேறு அவகாசம் வேண்டும். தற்காலத்தில் தேவாலயங்களில் சீர்திருத்தவேண்டிய அம்சங்கள் அநேகங்களிருப்பதால், இவ்வர்ச்சாவதாரத்தில் பிரதிபத்திக் குறைவு நேரிடுகிறதென்பதை மறுக்கமுடியாது. எனினும் லௌகிகர்களும் வைதிகர்களும் ஒரு மனதாய் உழைத்து ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டியது நம்மதத்துக்கு இன்றியமையாதது.

ஸ்ரீதேசிகன் 'आपावोद्वापतः' என்று காட்டின விமர்சஸாதனத்தைக்கொண்டு பார்த்தால் நமது மதத்தின் நிலை நன்குவிளங்கும். மூன்று தத்வங்களில், பௌத்தர் முதலிய நாஸ்திகர்கள் ஈச்வரனையில்லையென்றார்கள். பௌத்தர்



உண்மையெல்லாம் சூன்யமென்றார்கள். பரதேசத்தவையாகிற கிறிஸ்துவ மகம்மதிய மதங்கள் தேஹாதிரிக்த ஜீவனையாவது, ஜீவன் நித்யனென்பதையாவது ஜீவ ஈச்வர ஸம்பந்த விசேஷங்களையாவது ஆராய்ந்திலர். இந்தேசத்திலுண்டான மீமாம்ஸக, ஸாங்கிய, யோக, பாசுபதாதி மதங்களைப் பராமர்சித்து, அவை ஈச்வரதத்வத்தைக் கேவல நிமித்த காரணமாக்கி, மற்றதத்வங்களுக்கும் ஈச்வரனுக்குமுள்ள துவக்கை மறுத்ததை வேதாந்தம் நிராகரித்திருக்கும்படியை ஸ்ரீபாஷ்யாதிகளிலறியப் பிராப்தம். வேதாந்த மதங்களென்று பெயருள்ளவை பல. அவைகளில், அத்வைதம் வ்யாவஹாரிக தசையென்று சொல்லுமிடத்தில் நம்மதத்தை ஒத்திருக்கும். இத்தசையில் ஸ்ரீ சங்கராசாரியர் தம் பாஷ்யங்களில் ஸ்ரீமந் நாராயணனே பரதேவதையென்று நிரூபித்திருக்கும் இடங்களைப் பார்த்தால் ஸ்ரீவைஷ்ணவர்களும் சிரக்கம்பம் செய்யநேரிடும். பாரமார்த்திகதசையில் ஜீவ, அசேதனதத்வங்கள் இவர் மதத்தில் கழிந்து ப்ராந்தி ஸித்தங்களாம். அப்போது ச்ருதிவிரோதம் வருவதைக் கீழே கண்டோம். பிரத்யக்ஷாதி விரோதங்களும் தெரிகின்றன. மற்ற மதங்களை ஸர் பாண்டார்கார் விமர்சித்துள்ளபடியாவது—"நிம்பார்க்கர் 'ஜீவ அசேதனங்கள் பகவச் சரீர பூதங்களல்லவென்றும், ஆனால் அவனதீனங்களென்றும், ஸூக்ஷ்மதசையில் அவன் சக்தி விசேஷமாயிருந்து ஸ்ருஷ்டியில் சேதனாசேதனங்களாகப் பரிணமிக்கின்றன' என்றார். விஷ்ணுஸ்வாமியும் அவர் சிஷ்யரான வல்லபரும், 'பிரும்மமே ஈச்வரன் சேதனன் அசேதனமென்று பரிணமிக்கிறது; தன் மாயாசக்தியினால் தன் ஜ்ஞானாநந்தங்களை மறைக்கும்போது அசேதனங்களுண்டாகின்றன; ஆனந்தத்தை மாத்திரம் மறைக்கும்போது ஜீவனுண்டாகிறான்; சச்சிதானந்தங்கள் மூன்றும் பிரகாசிக்கும்போது ஸர்வநியந்தாவான ஈச்வரனாகிறான்' என்றும் சொல்லுகிறார்கள். ஸ்ரீமத்வாசாரியர் ஈச்வரன் பிரபஞ்சத்துக்கு உபாதான காரணமுமாவான் என்பதை மறுத்துவிட்டார். பிராசீன சைவமதங்களில் பாசுபதமானது ஸாங்கியர்களைப்போல பிரக்ருதியும் அதின் பரிணாமங்களுமே ஜகதுபாதான காரண

மென்றும், பசுபதி நிமித்தகாரணம் மாத்திரமென்றுங்கொண்டது. ஸ்ரீகண்டசிவாசாரியர் ச்வேதாச்வதர உபநிஷத்தில் 'முதலில் சிவன் ஒருவனுமே இருந்தான்' என்பதற்கு, 'சக்திரூபமான சேதனாசேதனங்களுடன் சிவன் ஒருவனுமே இருந்தான்' என்று வியாக்யானம் பண்ணி சேதனாசேதனங்கள் சிவனுக்குச்சரீரபூதர்களென்று ஸ்ரீராமானுஜஸித்தாந்தத்தின் தேஹாத்ம ஸம்பந்தத்தையும் அனுசரித்தார். லிங்காயத்தரும் ஸ்ரீகண்டசிவாசாரியரைப்போல் சிவனே பிரபஞ்சத்தின் நிமித்த உபதான காரணபூதன் என்றார்கள். காச்மீர சைவமோவென்றால் ஈச்வரன் தன் ஸங்கல்பமாத்திரத்தால் ஒரு வஸ்த்வந்தரமுமில்லாமல் ஸ்ருஷ்டித்தார், அதாவது தன்னிடத்தில் பிரகாசிப்பித்தார் என்று ஸாதிக்கிறது"—என்று. கிறிஸ்துமதமும் ஈசுவரன் அபாவத்திலிருந்து ஸ்ருஷ்டி செய்ததாகக் கூறுகிறது.

இத்தகைய விசாரம் வெகுவாயிருப்பதில் இச்சமயம் இங்கே நிறுத்துவது உபயுக்தமாகும். "आपादचूडमनपायिनि दर्शनेस्मिन्" என்கிறபடியே குறைவொன்றுமில்லாத நம்மதத்தைப் பெரியோரிடம் கிரமமாய்ச் சிக்ஷித்துத் தெளியவேண்டியது நமது கடமை. நம் நாட்டுக்கிருக்குமேற்றம் மதமும் ஆசாரமுமே. ஆஹார விவாஹாதிகளில் நியமம் தவிரும் ஆவலானது சற்று ஆலோசிக்குமளவில் தானே போய்விடும். அவை யிக்காலத்துக்கின்றியமையாதன வென்பதின் புன்மையும் விளங்கும். யதாசக்தி கர்மானுஷ்டானங்களும் நமது ப்ரவ்ருத்திகளுக்கு விரோதமில்லை. சித்த ஸமாதானகரங்களாகையால் ச்ராத்தம் ஸந்தியாவந்தனம் இவைகளைக்கொள்ள வேணுமென்று ஸமீபத்தில் ஓர் உபந்யாசத்தில் சென்னை ஆசாரத்திருத்த (Social Reform Association) சபையின் பிரதானராகிய கனம் S. ஸ்ரீநிவாஸய்யங்காரே உபந்யசித்தார். (Modern Review) என்பது முதலிய பத்ரிகைகளில் நம்மதத்தில் சொல்லப்பட்ட ஸம்ஸ்கார விசேஷங்களை வியந்துவரைந்திருக்கும் வ்யாஸங்களைப் பலர் வாசித்திருக்கலாம். இப்படித் தத்வ ஹித புருஷார்த்தங்களடங்கிய நம்மதமாகிய அருமையான தனத்தை 'दायत्वेनदयाधनाः स्वयमदुः' என்று இதுவரை



யில் தயாநிதிகளான நம்பூர்வர்கள் சேமித்துக்கொடுத்ததை நம்மடுத்த வார்சுகளுக்குப் பொருளழியாமல் ஒப்படைப்பது நம்முடைய கடனன்றோ?

வைதிகசிகாமணிகளுக்கும் ஓர் விஜ்ஞாபநம் உண்டு. சிறுவர்களுக்கு நமது மதமின்னதென்று கூடத்தெரியவிரகில்லாமல் நினைவுதெரிந்தமுதலே விதேச ஆசாரத்திலும் படிப்பிலும் பயிலுவது எவ்வித அனர்த்தத்தைத்தான் விளைவிக்காது? சிஷ்யன் ஆத்மபாத்திரை ஆசார்ய க்ருத்யமென்பதைத்தெளிந்து தங்கள் புத்திரர்கள் விஷயத்திலாவது க்ருஷிபண்ணவேண்டாமோ? 'अहं मे' என்று திமிறுகிறவனை வசீகரிக்கச் சபதபர்யந்தமாக ஸர்வேச்வரன் துணியவில்லையோ? மதாந்தரங்களினாலும் விஷமஸம்ஸர்க்கங்களினாலும் கலங்கினவர்களைச் செயல் நன்றாகத்திருத்திப் பணிகொள்ள வேண்டுவதை யறியீர்களோ? 'रसोप्यस्य परंदृष्ट्वा निवर्तते' என்ற கணக்கிலே நம்மதம் ஸர்வோத்க்ருஷ்டமென்பதை யறிந்தாலொழிய, இக்காலத்தில் பரவ்யாகாதங்களுக்குத் தப்ப முடியாதென்பதைக் கணிசித்து புறச்சமயங்களிற் படித்தவர் சுணையடங்க உபதேசிக்கவேண்டும். ஆஸ்திகராய் உஜ்ஜீவிக்க வேண்டுமென்று அபேக்ஷிக்கிறவர்களுக்கு அவ்வபேக்ஷை தவறுமுன் நியமாதிகளைக்கொஞ்சம் தளர்த்தியாவது கடுகச்சொல்லவேண்டியதும் உசிதமன்றோ? 'आलोड्य सर्वशास्त्राणि' என்பதைப் பரதேச மதங்கள் பர்யந்தமாக்கி, அப்படி விசதபராமர்சத்தில் நிஷ்பன்னமாகாத மதம் ஸுநிஷ்பன்னமாகாது. அவ்விஷயத்தில் நம்மதத்தைக் குறித்து ஒரு ஸந்தேகமுமில்லை. ஆயினும் 'रामानुजार्य दिव्याज्ञा प्रतिवासरमुज्वला । दिगन्तव्यापिनी भूयात् साहिलोक हितैषिणी ॥' என்றபடியே ஸர்வவித க்ஷோபத்தையும் ஸஹித்து ஸுநிஷ்பந்நமாய் ஸர்வ தேச தசா காலங்களிலும் நம்மிராமானுஜமதம் செழித்தோங்கும்படி ஸ்ரீதேவநாதனைப் பிரார்த்திப்போமாக.

कवितार्किक सिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते वेंकटेशाय वेदान्तगुरवे नमः ॥

Printed by Srinivasa Varadachari & Co, Mount Road, Madras.

161406.
R... No. 10